உ

கடவுள் துணை.

சனகாபுரம்

பவணந்திமுனிவர்செய்த

நன்னூல்மூலமும்

திருநெல்வேலிச்

சங்கரநமச்சிவாயப்புலவரால்

செய்யப்பட்டுத்

திருவாவடுதுறையாதீனச்

சிவஞானசுவாமிகளாற்றிருத்தப்பட்ட

விருத்தியுரையும்

இப்பற்றமிழாசிரியராகிய

திருத்தணிகை,

விசாகப்பெருமாளையரவர்களால்

செய்யப்பட்டபதவுரையும்,

அஷ்டாவதான

வீராசாமிசெட்டியாரவர்கள்முன்னிலையில்

தில்லையம்பூர்ச்

சந்திரசேகரகவிராஜபண்டிதரால்

பார்வையிடப்பட்டு

வல்லபுரம்

இராமசாமிமுதலியாரால்

முத்தமிழ்விளக்கஅச்சுக்கூடத்தில்

பதிப்பிக்கப்பட்டன.

 இராக்ஷசவூ — கார்த்திகைமூ

இதன்விலை-ரூ-உ.

நன்னூற்சூத்திரவகராதி.

சூத்திரம்.	பக்கம்.
அஆஈற்ற	௨௯௧
அஆஉஊ	௫௭
அஆஎஒவ்	௫௭
அஇஉம்மு	௩௮
அஐமுதலி	௬௬
அகமுனர்	௱௩௯
அசைநிலை	௨௯௮
அடிநாவ	௪௫
அடைசினை	௩௱௪
அடைமொழி	௩௱௩
அண்ணநுனிநாநனி	௪௫
அண்ணநுனிநாவருட	௪௫
அண்பல்லடி	௪௪
அண்பன்முத	௪௫
அண்மையினி	௨௱௨௪
அதுமுன்வ	௱௰௫
அதுவே, இயற்	௱௮௰
அத்திணைகர	௱௫௮
அந்திலாங்	௩௨௯
அம்மவுரா	௩௨௯
அம்மாமென்	௨௬௩
அம்முதலீரா	௩௮
அம்முனிகரம்	௬௭
அரிதிற்பெயக்	௨௫
அர்ஆர்பவ்	௨௩௯
அல்வழிஇஐ	௱௰௨
அல்வழியாமா	௱௰
அவற்றுண், முதலின	௨௫௩
அவற்றுண், முயற்சி	௬௩
அவற்றுள், அஇஉஎ	௩௮
அவற்றுள், எழுவா	௨௱௫
அவற்றுள், எழாமு	௮௯
அவற்றுள், ஒன்றே	௱௯௪
அவற்றுள், கிளையெ	௱௮௭
அவற்றுள், வினையினீ	௰
அவைதாம், முற்றும்	௨௩௫
அவ்வழி, ஆவியிடை	௪௩
அவ்வினையாள	௨௮
அழலினீங்கா	௨௯
அளக்கலாகா	௨௩
அள்ளாளிறுமொ	௨௩௯
அறம்பொருளி	௰௨
அறிவருளாசை	௩௩௫
அறிவறியாமை	௨௯௧
அன்ஆன்அள்	௮௰
அன்றியின்றி	௱௰௧
அன்னமாவே	௨௬
அன்னுனிறு	௨௩௮
அன்னுனின்ன	௱௫௩
ஆஈஊஏ	௩௮
ஆக்கவினைக்	௨௫௬
ஆக்கியோன்	௨௯
ஆசானுரைத்	௨௮
ஆண்பெண்பல	௱௭௫
ஆண்மைபெண்மை	௱௯௩
ஆநின்றுகின்று	௮௩
ஆமாகோனவ்	௱௫௬
ஆமுன்பகர	௱௰௩
ஆயிரமுகத்தா	௩௨
ஆய்தக்கிட	௪௫
ஆவினுணநம	௫௮
ஆவியரழ	௱௧
ஆவியுமொற்	௫௬
ஆறனுருபு	௨௱௪
ஆறனொரு	௨௱௰௩
ஆற்றொழுக்	௰௮
இஈஎஏ	௪௪
இஈஐவழி	௱௨
இஉஊவோ	௨௱௰௯
இசைகெடின்	௬௭

சூத்திரம்.	பக்கம்.
இடுகுறிகாரணப்	௩௭
இடுகுறிகாரணமர	௱௮௫
இடைச்சொல்	௱௨௭
இடைத்தொட	௱௰௬
இடைநிலை	௩௱௰௪
இடையினம்	௩௯
இடையினுன்	௮௮
இடையுரி	௱௪௮
இணைந்தியல்	௯௧
இதற்கிதுசா	௱௫௮
இதற்கிதுமுடி	௱௬௩
இம்முப்பெயர்	௨௱௨௰
இடல்பினும்	௱௫
இயல்பின்வி	௱௬௰
இயல்பெழு	௫௯
இயற்கைப்	௩௱௫
இரட்டைக்கிள	௨௯௯
இரண்டாவத	௨௱௮
இரண்டுமுதலா	௨௭௧
இரண்டுமுன்	௱௨௬
இருதிணையாண்	௨௬௧
இருவர்நூற்கு	௰௧
இர்ஈரீற்ற	௨௪௬
இலக்கணமுடை	௱௭௪
இலக்கியங்கண்	௮௨
இல்லெனின்மை	௱௪௫
இறப்பெதிர்	௨௮௯
இனைத்தென்	௩௱௧
இன்னதின்னு	௩௩௯
ஈதலியல்	௨௫
ஈதாகொடு	௩௱௭
ஈமுங்கம்மு	௱௪௰
ஈறும்போத	௭௬
ஈற்றியா	௱
உஊஒஓஔ	௪௪
உஊஒஓவல	௫௭
உடன்மேலுயிர்	௱௩௰
உணர்வியலா	௩௩௫
உயர்திணைதொ	௨௮௪
உயர்திணையும்	௨௭௯
உயிருமுடம்பு	௩௫
உயிருயிரல்	௩௩௨
உயிர்மவிலா	௭௰
உயிர்மெய்யா	௩௫
உயிர்மெய்யிர	௩௬
உயிர்வரினு	௱௪
உரத்தின்	௨௨
உரிவரினுழி	௱௰௧
உருபின்முடி	௱௪௮
உருபுபலவடு	௨௬௩
உருபுமுற்றீ	௨௬௪
உருபும்வினை	௨௬௨
உருவகவுவமை	௩௱௯
உவப்பினு	௨௮௬
உவமவுருபில	௨௭௫
எகரவினமுச்	௱௩
எச்சப்பெயர்	௨௬௫
எடுத்தல்	௪௬
எட்டனுடம்	௱௨௧
எட்டனுருபே	௨௱௰௮
எண்ணுமலடு	௨௭௬
எண்ணிறை	௱௰௯
எண்பெயர்	௩௪
எண்மூவெழுத்	௯௮
எதிர்மறை	௩௨௩
எப்பொரு	௨௯௩
ஏயாமுதலு	௩௯
எல்லாமென்ப	௱௫௩
எல்லாருமெ	௱௫௪
எல்லையின்னு	௨௨௯
எவனென்	௨௫௮
எழுத்தியற்றிரி	௨௯௫

சூத்திரம்.	பக்கம்.
எழுத்தே	௬௯
எழுவகை	௰௨
எழுவாயிறு	௫௱௰௪
என்றுமென	௫௨௫
எழனுருப்	௨௱௰௫
எற்குமெய்	௨௱௨
எற்புழியெடுத்	௫௱௰௬
எற்றபொரு	௫௱௰௨
ஐஔஇஉச்	௫௯
ஐகான்யவ்வ	௬௬
ஐந்தனொற்	௱௨௧
ஐந்தாவதனு	௨௱௰௨
ஐந்தொகை	௨௭௭
ஐயந்திணை	௨௮௫
ஐயந்திரப்	௨௫
ஐயாயிகரவீற்	௨௪௫
ஐயால்குச்செய்	௨௨௯
ஐயிறுபொதுப்	௨௨௰
ஐயீற்றுடைக்	௱௰௮
ஒடுவுந்தெய்ய	௫௨௯
ஒருகுறிகேட்போ	௨௮
ஒருசார்னவிலி	௨௨௧
ஒருநெறியின்	௰௭
ஒருபஃதாகு	௱௨௪
ஒருபுணர்க்	௯௮
ஒருபொருட்பல்	௨௯௯
ஒருபொருட்பன்	௫௱
ஒருபொருண்	௨௯௬
ஒருபொருள்குறித்த	௱௮௨
ஒருமையிற்ப	௨௮௭
ஒருமொழிதொ	௱௬௬
ஒருமொழிமுவ	௯௭
ஒருமொழியொரு	௱௬௭
ஒருமொழியொழி	௨௬௬
ஒருவனொன்பது	௱௯௮
ஒருவனொருத்திபல	௱௫௰
ஒருவனொருத்திபெ	௱௯௮
ஒருவன்முதலே	௨௫௭
ஒழியிசைவினுச்	௫௨௧
ஒற்றுமை	௫௫௫
ஒற்றுயிர்	௱௫௧
ஒன்பதொழித்த	௱௨௬
ஒன்பானொடு	௱௨௨
ஒன்றன்புள்ளி	௱௨௰
ஒன்றுமுதலீரா	௱௨௫
ஒன்றுமுதலெட்	௱௫௬
ஒன்றேபலவெ	௱௭௰
ஒன்றொழிபொது	௱௭௭
கஙவுஞ்சஞவும்	௪௪
கசதபவொழித்த	௬௰
கடியென்கிளவி	௫௫௭
கண்கால்கடை	௨௱௰௭
கயவொடுரவ்	௨௪௭
கருத்துப்பதப்	௨௰
களிமடிமானி	௨௬
காரணமுதலா	௫௱௬
காலங்கரந்த	௨௭௨
காலங்களனே	௫௰
கிளந்தகிளை	௱௮௯
கிளைமுதலாகக்	௱௮௯
கீழின்முன்வன்மை	௱௪௧
குடுதுறுவென்	௨௪௨
குயினூன்வேற்	௱௫௬
குலன்ருடெய்வங்	௨௨
குறியதன்கீழா	௱௰
குறியதன்முன்ன	௭
குறிலணைவில்லா	௱௫௫
குறில்செறியா	௱௪௨
குறில்வழிலள	௱௪௨
குற்றுயிரளபி	௫௯
குன்றக்கூறன்	௰௫
கேட்குநபோ	௫௱௮

சூத்திரம்.	பக்கம்.
கொல்லையைய்	௩௨௯
கோடன்மரபே...	௨௭
ஙஞணநமன...	௪௯
ஙம்முன்கவ்வாம்...	௬௨
சாதிகுழூஉப்,...	௱௩௩
சாலவுறுதவ......	௩௩௭
சாவவென்மொழி	௱௮
சிதலெறும்பாதி...	௩௩௩
சில்வகையெழு...	௰௮
சிறப்பினுமின	௪௰
சினைவினைசினை	௨௫௫
சுட்டியாவெகர...	௫௮
சுட்டின்முன்	௱௫௭
சுட்டுமறைநே...	௨௯௨
சுட்டுவகரமூ	௱௪௭
சுருங்கச்சொல்......... ...	௰௪
சுவைப்புளி...	௱௰௨
சூத்திரத்துட்	௨௧
செந்தமிழாகி	௱௮௨
செந்தமிழ்நிலஞ்... ...	௱௮௩
செம்மைசிறுமை...	௭௫
செயப்படுபொரு.... ...	௩௱௨
செப்பெனொரு...... ...	௨௪௪
செய்தசெய்கின்ற... ...	௨௪௯
செய்துசெய்பு...... ...	௨௫௨
செய்பவன்கரு...	௨௱௩௧
செய்யியவெ......	௱௬
செய்யுமெனெச்ச	௨௫௧
செய்யுளிறுதி...... ...	௩௱௰௫
செய்யென்வினை	௭௯
செவ்வெணீற்ற...	௩௨௪
சொற்றிரியினும்	௨௫௬
சொற்றொறுமிற்	௩௱௪௰
ஞணநமலவளன	௱௩௧
ஞநமுன்றம்மினம்... ...	௬௨
டறமுன்கசப...	௬௨
ணனமுன்னின...	௬௨
ணனமுன்னும்.....	௫௪
ணனவல்லின்...........	௱௩௰௨
தடறவொற்றின்	௮௨
தத்தம்பகாப்...	௭௪
தமிழவ்வுறவும்...	௱௪௧
தம்பாலில்ல...	௩௱௬
தம்பெயர்மொ......... ...	௬௪
தரல்வரல்.........	௨௮௮
தற்சுட்டளபொ...........	௫௩
தனிக்குறின்	௱௩௰
தன்மகனுசான்......... ...	௨௬
தன்மைமுன்னிலைப......	௱௭௪
தன்மைமுன்னிலைவி...	௨௱௪௧
தன்மையானன்...... ...	௱௯௬
தன்னுசிரியன்...............	௯௧
தன்னென்னெ	௱௩௭
தன்னொழி.........	௱௩௰
தானமுயற்சி	௪௰
தானேதரக்...	௨௪
தான்யானனீ...	௱௯௭
தான்றுநாமுதல்	௱௫௫
திசையொடுதிசை... ..	௱௰௮
திணைநிலஞ்சாதி	௨௯௬
திணைபால்பொ	௨௮௫
திணையேபாலிடம்......	௨௮௨
தும்பிவண்டாதி	௩௩௪
துய்த்தறுஞ்ச	௩௩௬
துறுடுக்குற்றி...	௨௪௰
தெங்குநீண்டீற்	௱௰௯
தெரிநிலைதேற்ற	௩௨௰
தெரிவரும்பெரு	௨௨
தெவ்வென்மொழி... ...	௱௪௪
தேன்மொழி...	௱௩௫
தொகுத்தல்விரி	௩௰
தொக்குழிமயங்குந	௨௮௰

சூத்திரம்.	பக்கம்.
தொலைவடிவின	௫௪
தொழிலுங்கால	௨௫௨
தோன்றறிரிதல்	௯௬
தோன்றன்மறை	௫௫௬
தோன்றுதோற்றி	௫௧
நடவாமடிசீ	௭௭
நவ்விறுதொழிற்	௱௫௨
நான்கன்மெய்யே	௱௨௧
நான்காவதற்குரு	௨௱௰௧
நிறையுயிர்முயற்	௪௫
நின்றநெறியே	௯௰
நீயிர்நீவிர்நா	௨௱௫
நுதலிப்புகுத	௰௪
நுந்தம், எம் நம்	௱௫௯
நுவ்வொடுவினா	௨௨௫
நூலினியல்பே	௯
நூலேநுவல்வோ	௮
நூல்பயிலியல்பே	௨௭
நூற்பொருள்வழக்	௰௬
நெடிலோடாய்த	௫௧
நெடிலோடுயிர்த்	௱௰௬
நெல்லுஞ்செல்லுங்	௱௪௫
நேரினமணியை	௰௭
பகாப்பதமேழும்	௭௧
பகுதிவிகுதியிடை	௭௪
பகுப்பாற்பயனற்	௭௨
பஞ்சிதன்சொல்	௨௧
படர்க்கைமுப்	௨௯௭
படர்க்கைவினைமுற்	௱௭௧
பண்பைவிளக்கு	௨௭௫
பதமுன்விகுதி	௱௫௨
பலசிலவெனுமிவை	௱௮
பல்லோர்படர்க்கை	௨௫௭
பல்வகைத்தாதுவி	௱௭௬
பல்வகைப்பண்பும்	௫௫௨
பல்வகையுதவி	௨௫
பல்வகைவடிவிரு	௫௫௬
பவ்வமூவிடத்தைம்	௮௫
பவ்வீநீமீமுன்னரல்	௱௰௫
பழையனகழிதலும்	௫௪௧
பனைமுன்கொடி	௱௨௮
பன்னீருயிருங்	௫௭
பாடங்கருத்தே	௨௰
பாயிரம்பொதுச்	௮
பால்பகாவஃறிணை	௱௯௨
பிண்டந்தொகை	௰௮
பிரிநிலைவினாவெண்	௫௨௧
புள்ளியுமுயிரு	௱௬௨
புள்ளிவிட்டவ்	௪௬
புள்ளும்வள்ளுந்	௱௪௬
புன்மரமுதலவுந்	௫௫௫
பூப்பெயர்முன்	௱௨௭
பூமலியசோகின்	௫௪
பெண்மைவிட்	௱௭௰
பெயரும்வினையு	௫௱௰௫
பெயரோஜயால்	௨௱௪
பெயரொடுபெய	௨௭௰
பெயர்ச்செவ்வெ	௫௨௪
பெயர்வழித்தம்	௱௫௰
பெயர்வினையிடத்	௨௬௧
பெயர்வினையும்	௨௬௭
பெய்தமுறையன்றிப்	௨௪
பொதுப்பெயருயர்	௯௯
பொதுப்பெயர்வி	௨௬௬
பொதுவியல்பாறை	௨௫௭
பொதுவெழுத்தா	௱௮௪
பொருண்முதலாறு	௫௱௨
பொருண்முதலாறினு	௨௫௫
பொருண்முதலாறோ	௱௯௬
பொருளிடங்காலஞ்	௭௨
போலப்புனாய	௨௭௫
மகரவிறுதியஃறிணை	௬௫

சூத்திரம். பக்கம்.

மக்கட்டேவர்நரகரு ... ௱௬௯
மங்கலமாகியின்றி ௨௩
மம்முன்பயவ ௬௩
மரப்பெயர்முன்ன... ...௱௬
மரமல்லெகின் ௱௩௬
மலர்தலையுலகின் ௧
மவ்வீறொற்றழிந் ... ௱௩௮
மற்றையதென்பது ... ௩௨௮
மற்றையநோக்கா ... ௩௱௰௧
மன்னுடைமன்ற ௩௧
மன்னேயசைநிலை ௩௨௭
மாடக்குச்சித்திர ௩௨
மாவென்கிளவி ௩௩௰
மாற்றநுவற்சி... ... ...௩௩௮
மியாயிகமோ ௩௩௰
மின்பின்பன்கனீ ௱௩௬
மீகீழிதமுறப்ப ௯௪
மீன்றவ்வொடு ௱௩௫
முகவுரைபதிக ௮
முக்காலத்தினு ௨௯௰
முக்காற்கட் ௨௮
முச்சகநிழற்று ௱௬௫
முதலிருநான்கா ௱௨௩
முதலிவைசினை. ௨௨௬
முதலையையுறிற் ௨௨௫
முதல்வழிசார் ... ... ௰
முதற்பெயர்நான்கும் ௱௯௨
முதனூல்கருத்த... ... ...௩௰
முரணந்தாதிநா ௩௩௩
முழுக்கிரட்டொலி ... ௩௩௯
முற்றீரெச்சமெழு ... ௨௮௧
முற்றும்மையொ ௩௭௪
முன்மொழியின் ௨௭௭
முன்னத்தினுணருங்... ௩௱௮
முன்னரவ்வொடு ௱௯௧
முன்னிலைகூடிய ௨௪௫

சூத்திரம். பக்கம்.

முன்னிலைமுன்ன ௨௪௬
முன்னோர்நூலின்... ... ...௰
முன்னோர்மொழி ௰௧
மூன்றனுறுப்ப ௱௨௧
மூன்றுவதனுரு ௨௱௯
மூன்றுறுருபெண் ... ௱௰௫
மூன்றுயிரளபிர ௫௫
மெய்களகரமு... ... ௬௮
மெய்ந்நாலுக்கு ௩௩௩
மெய்யுயிர்முதலீ ௯௨
மெல்லினங்... ... ... ௩௯
மென்றொடர்... ... ...௱௰௭
மேற்பல்விதமுற ௪௫
மொழிகுணமின் ௨௪
மொழிமுதற் ௩௪
மொழியாய்த்... ... ... ௬௮
யகரம்வரக்குற ௫௰
யரழமுன்னர்க்கச... ...௱௪௰
யரழமுன்னர்மொ ௬௩
யரழவொற்றின்... ... ...௬௩
யாகாபிறபிறக் ... .௩௩௰
யாதனுருபிற்... ... ...௨௨௭
யாப்படிபலவினுங் ...௩௱௰௫
யாரென்வினாவினை......௨௫௮
யாற்றுநீர்மொழி... ... ௩௱௰
ரவ்விற்கம்முதலா ௯௰
ரவ்வீற்றுயர் ௨௨௨
ரழவல்லனதம்முற் ௬௩
லகாரவீற்றுயர்...... ...௨௨௩
லளமுன்கசபவய ௬௩
லளமெய்திரிந்த ௬௪
லளவிறுதொழிற் ௱௪௩
லளவீற்றஃறிணை ௨௨௪
லளவீற்றியைபி ... ... .௫௪
லளவேற்றுமை ௱௪௨
வலித்தன்மெலி... ... ...௯௩

சூத்திரம்.	பக்கம்.
வல்லினங்கசட	௫௯
வல்லேதொழிற்	௱௪௬
வல்லொற்றுவரி	௨௭௯
வவ்விறுசுட்டி	௱௫௭
வன்றொடரல்லன	௱௰௬
வாழியவென்பத	௱௮
வானவர்மக்க	௫௫௬
விகாரமனை	௯௫
விகுதிபதஞ்சா	௱௫௯
விளாவினுமிக	௨௯௰
விழைமேவ்வால	௫௨௭
விளம்பியப்குதி	௮௰
வினாச்சுட்டுட	௱௯௰
வினாவினுஞ்செப்	௨௯௫
வினைசார்பின	௨௯௬
வினைபெயர்கு	௫௨௨
வினைமாற்ற	௫௨௭
வினைமுற்றே	௨௫௯
வினையின்பெ	௱௯௭
வினையொடுவரி	௫௨௬
வேறில்லையுண்	௨௪௮
வேறுவினைப்பல்	௨௯௬
வேற்றுமைமப்	௱௫௮
வேற்றுமையா	௱௨௮
வேற்றுமையைம்	௯௫
வேற்றுமைவினைசா ...	௫௱௰௮
வேற்றுமைவினைபண் ...	௨௭௧
ளஃகானுயர்	௨௨௨
றவ்வொடுகர	௮௬
றனழஎஒவ்	௯௧
னஃகான்கிளை	௱௫௬
னலமுன்றனவும்	௱௪௭
னவ்வீற்றுயர்	௨௨[illegible]

நன்னூற்சூத்திரவகராதி

முற்றிற்று.

பிழைதிருத்தல்.

புக்கம்.	வரி.	பிழை.	திருத்தல்.
௫	௰	கெள்வி	கேள்வி
௰௩	௩௭	சொல்லட்ட	சொல்லப்பட்ட
௪௭	௨௪	கலாத்து	காலத்து
௫௯	௮	எஉ-ஒ	உ-எ-ஒ
௬௮	௨	ம்ாற்றாற்	மாற்றாற்
௯௮	௨௯	பெய.	பெயர்
௱௪	௰௬	குத்திரத்தா	சூத்திரத்தா
௱௩௮	௫	ன்மிகடு.	மின்கடு
௱௪௪	௨	உவ்வரு	உவ்வுரு
௱௪௯	௯	இயாவர்க்கும்	யாவர்க்கும்
௸	௨௫	ீசாழநாடு.	சோழனாடு
௸	௨௬	பாண்டியநாடு	பாண்டியனாடு
௸	௸	மலையமாநாடு	மலையமானாடு
௱௬௰	௬	னீங்கிறான்	னீங்கினான்
௱௭௩	௪	வருமோழியோடுப	வருமொழியோடுபு
௱௮௬	௨௮	தொன்றுதொடு	தொன்றுதொட்டு
௨௨௫	௰௭	கூனமை	கூறினமை
௸	௰௮	மிறிாண்டும்	மீறிரண்டும்
௸	௨௫	இன்ன	இன்னன
௨௨௭	௩	எதுக்கூறினாராயிற்று	எதுகூறினாராயிற்று

உ

குருவாழ்க.

நன்னூல்விருத்தியுரை.

சிறப்புப்பாயிரம்.

மலர்தலையுலகின் மல்கிருளகல-விலகொளிபரப்பி யாவையும்
விளக்கும்-பரிதியி னொருதா னாகிமுதலீ-றொப்பளவாசை முனி
விகந்துயர்ந்த-வற்புதமூர்த்திதன் னலர்தருதன்மையின்-மனவி
ருளிரிய மாண்பொருண்முழுவது - முனிவறவருளிய மூவறு
மொழியுளுங்-குணகடல்குமரி குடகம்வேங்கட-மெனுநான்கெ
ல்லையி னிருந்தமிழ்க்கடலு-ளரும்பொருளைந்தையும் யாவருமு
ணரத்-தொகைவகை விரியிற் றருகெனத்துன்னா-ரிகலறநூறி யி
ருநிலமுழுவதுந் - தனதெனக்கோலித் தன்மதவாரணந் - திசை
தொறுநிறுவிய திறலுறுதொல்சீர்க்- கருங்கழல் வெண்குடைக்
கார்நிகர்வண்கைத்- திருந்தியசெங்கோற் சீயகங்க - னருங்கலைவி
னோத னமராபரணன்-மொழிந்தனனாக முன்னோர்நூலின்-வழி
யேநன்னூற் பெயரின்வகுத்தனன் - பொன்மதிற்சனகைச் சன்
மதிமுனியருள்-பன்னருஞ்சிறப்பிற் பவணந்தி-யென்னுநாமத்
திருந்தவத்தோனே. *

என்பது பாயிரம். மலர்தலையுலகிற் பலநூலாய்ந்து-செய்வது
ந்தவிர்வதும் பெறுவதுமுறுவது-மூய்வதுமறியே னொருபொ
ருளாக-நன்னெறிபிறழா நற்றவத்தோர்பெறுந்-தன்னடித்தாம
ரை தந்தெனையாண்ட- திருவாவடுதுறைத் தேசிகனாகிய-கருணை
யங்கடலையென் கண்ணைவிட்டகலாச்-சுவாமிநாத குரவனையனு
தின-மனமொழிமெய்களிற் றொழுதவனருளாற்-பொன்மலையெ
னவிப் புவிபுகழ்பெருமை - மன்னியவூற்று மலைமருதப்பன்-
முத்தமிழ்ப்புலமையு முறையரசுரிமையு-மித்தலத்தெய்திய வி
றைமகனாதலி-னன்னூற்குரை நீ நவையறச்செய்து- பன்னூற்பு
லவர்முன் பகர்தியென்றியம்பலி - னன்னுவலர்முக நகைநாணு
மே-யென்னலியன்றவை யியற்றுமிந்நூலுள், இப்பாயிரமென்
னுதலிற்றோவெனின், “வலம்புரிமுத்திற் குலம்புரிபிறப்பும்-வா
ன்யாறன்ன தூய்மையும் வான்யாறு-நிலம்படர்ந்தன்ன நலம்ப
டரொழுக்கமுந் - திங்களன்ன கல்வியுந்திங்களொடு - ஞாயிறன்
ன வாய்மையும் யாவது - மஃகாவன்பும் வெஃகாவுள்ளமுந் - து
லைநாவன்ன சமநிலையுளப்பட - வெண்வகையுறுப்பின ராகித்தி

ண்ணிறின் - வேளாண்வாழ்க்கையுந் தாளாண்மையு - முலகிய
லறிதலு நிலைஇய தோற்றமும்-பொறையு நிறையும் பொச்சாப்
பின்மையு-மறிவு முருவு மாற்றலும் புகழுஞ் - சொற்பொருளு
ணர்த்துஞ் சொல்வன்மையுங் - கற்போர்நெஞ்சங் காமுறப்படு
தலு - மின்னோரன்ன தொன்னெறிமரபினர் - பன்னருஞ்சிறப்
பி னல்லாசிரிய - ரறனேபொருட்பய னின்பெனுமூன்றின்-றி
றனறிபனுவல் செப்புங்காலை - முன்னர்க்கூறிய வெண்வகையு
றுப்பினு-ளேற்பனவுடைய ராகிப்பாற்படச்- சொல்லிய பொ
ருண்மை சொல்லியாங்குணர்தலுஞ் - சொல்லியபொருளொடு
சூழ்ந்துநன்குணர்தலுந் - தன்னோ ரன்னோர்க்குத் தான் பயப்
படுதலுஞ்-செய்ந்நன்றியறிதலுந் தீச்சார்பின்மையு -மடிதடுமா
ற்ற மானம்பொச்சாப்புக் - கடுநோய்சீற்றங் களவேகாம- மெ
ன்றிவையின்மையுஞ் சென்றுவழிபடுதலு - மறந்துறை,வழா
மையுங் குறிப்பறிந்தொழுகலுங்- கேட்டவைநினைத்தலும் பாட
ம்போற்றலு- மீட்டவை வினவலும் விடுத்தலுமுரைத்தலு- மு
டையராகி நடையறிந்தியலுநர் - நன்மாணாக்கரென்ப மண்மி
சைத் - தொன்னூற் புலமைத் துணிபுணர்வோரே.,, என ஆத்தி
ரையன் பேராசிரியன்கூறிய பொதுப்பாயிரத்தானே பன்னரு
ஞ் சிறப்பினல்லாசிரியனை புணர்ந்து வழிபட்டொருநூல்கேட்
பான்புகுந்தநன்மாணாக்கர்க் கந்நூலானுவலப்படும் பொருளு
ம் அந்நூல் கேட்டலாற் பெறப்படும் பயனுங் கேட்டற்குரிய
அதிகாரிகளாவா ரிவரென்பதுஉ மின்னதுமுற்றியபின்னரிந்நூ
ல் கேட்கற்பாற்றென்னு மியைபு முணர்ந்தன்றி நூல்கேட்டற்
கண் மனவூக்கஞ் செல்லாமையி னின்றியமையாச் சிறப்பினவா
ய விந்நான்குமொருதலையாகமுன்னருணர்த்தல் வேண்டும்; இந்
நான்கு முணர்ந்தவழியுங் கற்றுவல்லசான்றோரல்லோராற்செய்
யப்பட்டநூலாயிற் கூறியதுகூறன்முதலாய குற்றமுடைத்தா
மன்றேயெனவும், கற்றுவல்ல சான்றோருமற்றோர் கோட்பாடு
பற்றிச் செய்யின் முன்னவனூலொடு முரணுமன்றே யெனவும்
ஐயுற்றூக்கஞ் செல்லாமையின், அவ்வைய நீக்குதற்பொருட்டு
ஆக்கியோன்பெருமையும் நூற்பெருமையும் அந்நூல்வழங்குநி
லனும் அதன்முதனூலு மிவையென்பது தோன்ற, ஆக்கியோ
ன் பெயரும் வழியும்எல்லையும் நூற்பெயரு முணர்த்தல்வேண்
டு மாகலின் இவ்வெட்டு மிவ்வெட்டுடனே காலங்களன் காரண
மென்னு மின் றுங்கூட்டிப்பதினொன்றுந் தெரிப்பதேசிறப்பு
ப்பாயிரத்தி னிலக்கணமென மேல்வகுக்கப்படும் ஆக்கியோன்
பெயர்முதலியன உணர்த்துதனுதலிற்று.

(இதன்பொருள்.) மலர்தலையுலகின்- பரந்த விடத்தை யுடைய

வுலகத்தின்கண்ணே—மல்கிருளகல-நிறைந்தகண்ணிருள்கெட—
இலகொளிபரப்பி- விளங்குங்கதிரைவிரித்து— யாவையும்விளக்
கும்- கட்பொறிக்குவிடயமாகியவுருவமனைத்தினையுங்காட்டும்—
பரிதியின்-சூரியனைப்போல—ஒருதானாகி- உலகுக்கெல்லாந்தா
னொருமுதலேயாகி—முதலீ றொப்பளவாசை முனிவிகந் துய
ர்ந்த-தோற்றமுமொடுக்கமு முவமையு மளவும் விருப்பும் வெ
றுப்புமாகிய் வவற்றை யியல்பாகவே நீங்கிநிற்றலாற் றலைவனாகி
ய—அற்புதமூர்த்தி-ஞானமே திருமேனியாகவுடையான்—தன்
னலர்தரு தன்மையின் - தனதுவிரிந்த தன்மையாகிய கருணையி
னாலே—மனவிருளிரிய -உயிர்களின் மனத்திருளாகிய வவித்தை
கெட— மாண்பொருண் முழுவதும்-மாட்சிமைப்பட்ட அறம்
பொருளின்பம் வீடென்னுநான்குபொருளையும்— முனிவறவ
ருளிய - விருப்புடனருளிச்செய்த—மூவறுமொழியுளும் - பதி
னெண்ணிலத்து மொழிகளுள்ளும் —குணகடல்குமரி குடகம்
வேங்கட மென்னு நான்கெல்லையி னிருந்தமிழ்க்கடவுள்- இந்நான்
கெல்லையினையுடைய நிலத்துமொழியாகி யியலிசை நாடகமெ
ன்றுபெயர்பெற்ற பெரியதமிழென்னுங்கடவுள்—அரும்பொ
ருளைந்தையும் - அவ்வறமுதற் பொருணன்கையு முணர்தற்குக்
கருவியாய் அருமையவாகியவியற்றமிழின்பாகுபாடான வெழு
த்துச் சொற் பொருள் யாப் பணியென்னுமைந்துபொருளையு
ம்—யாவருமுணர - அவ்வியற்றமிழுணர்தற்கு முன்னரோ யுயர்
ந்தோர்செய்யுளிடத்தாராய்ச்சியுடையரா யவ்வாராய்ச்சியான்வ
லியோரேயன்றி யெளியோருமுணர —தொகைவகைவிரியிற்ற
ருகென - வழியினெறியாகிய நால்வகையுட் டொகுத்தும் வகுத்
தும் விரித்தும் ஆக்கப்படும் யாப்பினுற்பாடித் தருகவென—
துன்னரிகலற நூறி-பகைவரது பகைமைகெட வவரைத்துணித்
து—இருநில முழுவதுந் தனதெனக்கோலி -பெரியபூமியனைத்
தினையுந்தன்னுடையதாகப் பற்றிக்கொண்டு—தன்மதவாரணந்
திசைதொறுநிறுவியதிறலுறுதொல்சீர் - தன் மதயானைகளையெ
ட்டுத்திக்கினுந் திசைக்களிறுகள்போல நிறுத்திய வெற்றிமிகுந்
து தன்னளவேயன்றித்தன்முதாதையுந்தாதைமுதலியோரைத்தொ
ட்டு வருங்கீர்த்தியினையும் — கருங்கழல் - பெருமைபொருந்தி
ய வீரகழலினையும் —வெண்குடை-வெண் கொற்றக் குடையி
னையும்—கார்நிகர்வண்மை-மேகம்போலக் கைம்மாறு கருதாது
கொடுக்குங் கையினையும்—திருந்திய செங்கோல் - கோடாத செ
ங்கோலினையு முடைய—சீயகங்கன் - சிங்கம்போன்ற கங்கன்—
அருங்கலை விநோதன் - அரிய நூல்களை யாராய்தலே பொழுது
போக்கும் விளையாட்டாகவுடையான்—அமராபரணன்-தன்னக

த்து விழுப்புண்பட அமர்செய்தலையே ஆபரண மாகவுடையா
ன்—மொழிந்தனனாக - கொன்றனாக — முன்னோர் நூலின்வழி
யே - தொல்லாசிரியர் நூலின் வழியே—நன்னூற் பெயரின் வ
குத்தனன் - நன்னூ லென்னும் பெயரினாற் செய்தனன்—பொ
ன்மதிற்சனகை - பொன்மதில்சூழ்ந்த சனகாபுரத்து ளிருக்கும்
—சன்மதி முனியருள் - சன்மதிமுனிவன்பெற்ற—பன்னருஞ்
சிறப்பிற்பவணந்தியென்னுநாமத்து - சொல்லுதற்கரிய ஞான
வொழுக்கச் சிறப்பினையும் பவணந்தியென்னும் பெயரினையுமு
டைய—இருந்தவத்தோன் - பெரியதவத்தினை யுடையோன். —
என்றவாறு.

இதனுட்பவணந்தியெனவே- ஆக்கியோன்பெயரும், முன்னோ
ர்நூலின் வழியெனவே - வழியும், நான்கெல்லையெனவே-யெல்
லையும், நன்னூலெனவே- நூற்பெயரும், அரும்பொருளைந்தென
வே-நுதலியபொருளும், அவற்றையாவருமுணரவெனவே-முன்
னர்நிகண்டுகற்றுச் செய்யுளாராய்ச்சி யுடையார்க்கே அவற்றை
யாராய்வுழி யவற்றின்க ணுளவாகிய செய்கை வேறுபாடுகளுஞ்
சொன்முடிவுபொருண்முடிவு வேறுபாடுகளுமின்னவென்றுது
ணியப்படாமையின் அவற்றைத் துணிந்தறியவேண்டியிவ்வியற்ற
மிழ்நூல்கேட்டறிதலின்கண்ணே யூக்கஞ்செலுமாகலின் அவை
யாராய்ந்தபின்ன ரிவைகேட்கற்பாற்றென்னும்யாப்பும், அவை
யாராய்ந்தோ ரிவைகேட்டற்குரியாரென்னுங் கேட்போரும், அ
வர் அப்பொருளைந்தினையுமுணர்ந்து மொழித்திறத்தின்முட்ட
றுத்தலின் மொழித்திறத்தின்முட்டறுத்தலென்னும் பயனும், சீ
யகங்கன் மொழிந்தனனாக நன்னூற்பெயரின் வகுத்தனனென
வே-அவன் காலத்துப்பாடப்பட்டு, அவனதவைக்களத் தரங்கேற்
றியதெனக் காலமுங் களனும், சீயகங்கன் மொழிந்தமையானு
ம் யாவரிடத்துமிரக்க முடைமையானும் வகுத்தமையாற் கார
ணமும் பெறப்பட்டன.

இனி யிவற்றுட் காலமுதலியமூன்றும் நூல்செய்தார்காலத்
துநிகழ்ந்தன. ஆக்கியோன்பெயர் முதலிய வெட்டும் நூல்செ
ய்தார்காலத்து நூல்வழங்குங்காலத்துமொப்ப நிகழ்வன. இவ்வி
தம்முள்வேற்றுமை. கழிந்தவற்றை யுணர்தலாற் பெரும் பய
னின்மையின் அவைவொருசாராராற் கொள்ளப்பட்டன. ஆக்கி
யோன்பெயர் முதலியன வொருதலையா னுணர வேண்டுதலின்
அவையெல்லாவாசிரியரானுங் கொள்ளப்பட்டன. வடநூலார்யா
ப்பை ஆனந்தரியமென்றும் நுதலியபொருளை விடயமென்
றுங் கேட்போரை யதிகாரிகளென்றும் பயனைப்பிரயோசனமெ
ன்றுங் கூறுப. அவருளொருசாரார் ஆனந்தரியப் பொருள்

நூலைப்பயப்பித்தற்குக் காரணமாய்க்கேட்போரை விசேடித்து நிற்றலின் வேறுகூறவேண்டாவென்னுங்கருத்தால் ஆனந்தரியநீக்கிச் சம்பந்தமொன்று கூட்டிநான்கென்பாராயினர். சம்பந்தமென்பதும் யாப்பென்னும் பொதுச்சொல்லாற் கொள்ளப்படும். அது நன்னூற்பெயரின் வகுத்தனனெனவே நூற்கும் நூனுதலிய பொருட்கும் வகுப்பதூஉம் வகுக்கப்படுவதூஉமாகிய சம்பந்தமென்பது பெறப்பட்டது. யாப்பு இயைபு தொடர்ச்சி என்பனவொருபொருட்கிளவி. ஈண்டுக்கேட்டல்பாடங்கேட்டல். அது "கேள்வி விமரிசம் பாவனை" என்பதனானும் "கேட்டவை நினைத்தலும் பாடம்போற்றலும்" என்பதனானும் "ஒருகுறி கேட்போ னிருகாற்கேட்பின்" என்பதனானுமுணர்க. இவ்வெட்டுமுணர்ந்ததற்குப்பயன் நூல் பயிலுதற்கணூக்கமுண்டாதல் ஊக்கமுள்ளக்கிளர்ச்சி. இனிவாய்ப்பக்காட்ட லென்பதனானேயித்துணைச்சிறப்பிலவா யவ்வவற்றிற்கினமாய்க் காட்டப்படுவனவுமுளவென்பதுபெற்றாம். அவையாக்கியோன்பெயரேயன்றியாக்குவித்தோன்பெயர்கூறுதலும் வழியேயன்றி யதன்வகையாகிய தொகுத்தன் முதலிய நான்கினு ளொன்றுமாறு கூறுதலும் தன்முதனூற்கு வழிகூறுதலும் அதுவந்தமரபுவழிகூறுதலும் பொதுவெல்லைகூறுதலேயன்றிச் செந்தமிழ் முதலியவற்றின் சிறப்பெல்லைகூறுதலும நூற்பெயரேயன்றிப் படலப்பெயரோத்தின்பெயர்கூறுதலும் நூற்கியைபுகூறுதலேயன்றி நூலினுட்படல முதலியவற்றிற்கியைபுகூறுதலும் சம்பந்தங்காட்டுவார் மதத்தினூற்குநுதலிய பொருட்குங் கிழமைகூறுதலேயன்றி நூனுதலியபொருட்கும்பயனுக்குங்கிழமைகூறுதலும் நூற்குநூல்செய்தோனுக்குங்கிழமைகூறுதலும் நூனுதலியபொருளே யன்றிப் படலநுதலியதூஉமோத்துநுதலியதூஉஞ் சூத்திரநுதலியதூஉங் கூறுதலும் கேட்போரேயன்றிக் கேட்பிப்போரைக்கூறுதலும் பயனேயன்றிப்பயனுக்குப் பயன் கூறுதலுமாம். இவ்வெட்டனுட் சீபகங்கனெனவே யாக்குவித்தோன் பெயரும் தொகைவகை விரியெனவேவழியின்வகையும் மாண்பொருண்முழுவதுமெனவேபயனுக்குப்பயனும்பெறப்பட்டன. ஏனையவிந் நூலுள் வந்துழிவந்துழிக்காண்க. பயனுக்குப் பயனுவது, வெண்பா- "எழுத்தறியத் தீருமிழிதகைமை தீர்ந்தான்- மொழித்திறத்தின் முட்டறுப்பானாகு- மொழித்திறத்தின்- முட்டறுத்த நல்லோன் முதனூற் பொருளுணர்ந்து- கட்டறுத்து வீடுபெறும்.." என்பதனாற்காண்க. எனவே முதனூற்பொருளுணர்தற்கு முறையானேயிதுக்கருவிநூலென்பதுபெறப்பட்டது. முதனூலென்றது அறமுதலிய நான்கினை

யுமுணர்த்து நூலையெனவறிக. எழுத்தென்ற தியற்றமிழை. அது
"எண்ணென்பவேனையெழுத்தென்ப" என்பதனானுமுணர்க. இ
சைத்தமிழு நாடகத்தமிழு மிவ்வியற்றமிழ்போலமுதனூற்பொ
ருளுணர்தற்குக் கருவியன்மையினியற்றமி ழொன்றுமே கூறினா
ர். ஆயினியற்றமிழை யரும்பொருளைந்தெனக்கூறினமையி னி
ந்நூலுட்கூறிய பொருள்யாப்பணிகளென்னுமூன்றதிகாரங்களு
மக்காலத்துள்ளனபோலும். ஈண்டுக்கேட்பிப்போரியற்றமிழ்வல்
லவாசிரியர். படலநுதலிய திவ்வதிகாரமென் னுதலிற்றோ வெனி
னென்பது. ஒத்து நுதலிய திவ்வோத் தென்னுதலிற்றோவெனி
னென்பது. சூத்திர நுதலிய திச்சூத்திரமென் னுதலிற்றோ வெ
னி னென்பது. படலத்திற் கியைபுமேலையதிகாரத்தோ டியை
புடைத்தாயிற்றென்பது. ஒத்திற் கியைபு மேலை யோத்தினோ
டியை புடைத்தாயிற் றென்பது. சூத்திரத்திற் கியைபு மேலைச்
சூத்திரத் தோடியை புடைத்தாயிற் றென்பது இவை நான்மு
கத்துக் காட்டப்படுதலே யன்றிப் படல முகத்து மோத்துமுக
த்துஞ் சூத்திர முகத்துங் காட்டப்படும். இவையெல்லாம்பா
யிரமே யாம். பிறவுமிவ்வாறே கண்டுகொள்க. அற்றேற்கேட்
போர் மாணாக்கருங் கேட்பிப்போர் ஆசிரியரு மாதலா னிவ்வி
ரண்டும் பொதுப்பாயிரத்தாற் பெறப்படுமாலோவெனின், அ
ற்றன்று. பொதுவகையான் ஆசிரியர்க்கும் மாணாக்கர்க்கு மிலக்
கணம் பெறப்பட்டன வல்ல திந்நூற்கின்னா ரென்னுஞ்சிறப்புவ
கை யாண்டுப் பெறப்படாமையின் இஃதீண்டுக் காட்டப்படும்.
இதுகாட்டாக்காற் சிற்றறிவோர் பெருநூலும் பேரறிவோர் சி
றுநூலு முத்தமிழுமொருநூற்குரியா ரேனை யிரண்டுநூலும் அ
றம் பொரு ளின்பம் வீடென்னுநான்கனு ளொன்றற்குரியா ரே
னை மூன்றுநூலுங் கேட்பான்புக்கிடர்ப்பட்டு மயங்குப வாகலி
னிஃதொருதலையாற் காட்டல்வேண்டுமென்பது. இதுபற்றி யன்
றே பொதுமெனவுஞ் சிறப்பெனவும் பாயிர மிருபகுதிப்பட்ட
தூஉமென்க. இக்கருத்தறியாத வுரையாசிரியரை யுள்ளிட்டோ
ரெல்லோரு நூலரங்கேறு மவைக்களத்துக்கேட்டாரைக்கேட்போ
ரென்றுந் தொகுத்தன்முதலிய வழியின் வகையினை யாப்பென்
றுங்கூறினார். ஆக்கியோன்பெயர் நுதலியபொரு ளென்பன
போல இறந்தகாலத்தாற் கூறாது கேட்போரென வெதிர்காலத்
தாற் கூறியதேயஃதுணராயன்மைத்துச் சான்றுமாகலானுங் காலஞ்
சுளத்துளடங்குதலின் வேறுகூறவேண்டாமையானும் ஆக்கியோ
ன்பெயர் முதலியனபோல நூல்வழங்குங் காலத்து நிகழ்வதன்
றாகலின் அவற்றோடொருங்குவைத்தெண்ணல்பொருந்தாமையா
னுங் கேட்டற்குரியவதிகாரிகளாவாரை யொருதலையாக வுணர்த்தல்

வேண்டு மாகலானுந் தொகுத்தன் முதலியன வழியு ளடங்குதலானு மிணையுமொருதலையா னுணர்த்தற்பால தாகலானும் யாங்கூறியதே வட நூலார்க்கு முடன்பாடாகலானும் அவ்வுரை போலியுரையென்க. வழியின் வகையாகிய நால்வகை யாப்பினுட் டொகைவிரியாப்பெனவொன்று போந்ததன்றித் தொகை வகை விரியெனப் போந்ததில்லையாலோவெனின், நடுநின்ற வகை பின்னின்ற விரியை நோக்கிற் றொகையாகவு முன்னின்ற தொகையை நோக்கின் விரியாகவுமடங்குதலி னதுதொகைவிரி யாப்பென்றதன்பாற்படுமென்க. எனவேதொகை விரியென விரண்டாய் வரினு மரத்தினது பராரையினின்றுங் கவடுகோடுகொம்புவளார்பலவா யொன்றோ டொன்று தொடர்பட்டெழுந்து நிற்றல் போற்றொகையினின்று மொன்றோடொன்று தொடர்படப்பகுக்கப்பட்டுப் பலவாய்வரினுந் தொகைவிரியாப்பேயாமென்க. இப்பாயிரமொருநூற்குரித்தாகலிற் சிறப்புப்பாயிரமாமென்க.

சிறப்புப்பாயிரம் முற்றிற்று.

நன்னூலுட் கருத்துலகோ ரறியவுரை செய்கவென் நரேந்திரசிங்
கந்,தென்னூற்றுமலைமருதப் பன்புகலப் பொருள்விளங்கச் செ
ய்தான்பாரி, லெந்நூற்குமெழுத்தொடுசொற் பொருளறிசங் கர
நமச்சி வாயனென்னும், பன்னூற்செந் தமிழ்ப்புலவன் சைவசி
கா மணிநெல்லைப் பதியினனே. *

அகத்தியந்தொல் காப்பியமே முதலியமுன்னூல்கள்பல வாய்ந்
துமுப்பால், பகுத்ததிரு வள்ளுவமோ முதன்ஞான நூல்களெல்லா
ம்பகல்செய்வான்போ, லிகத்திலுரை செயவலசங் கரநமச்சி வா
யனெனு மியற்பேர்பெற்ற, தகைப்புலவ னன்னூலுக் குரைவ
குத்த தொருவியப்போ தமிழ்வல்லோரே. *

முன்னூற்கு மலையமுனி தன்னூற்கும் புவியிடத்து முதியோராற்
சொ, லெந்நூற்குந் தமிழ்க்கடலு ளினிதியற்று நூற்கும் வகை
யிதனாற்காட்டி,நன்னூற்கு விரித்துரைசெய் தான்றிகழ்ந் தத்தள
வு நடாத்துங்கீர்த்தித்,தென்னூற்று மலைமருதப் பன்சொலச்சங்
கரநமசி வாயன்றானே. *

இம்மூன்று முரைப்பாயிரம்.

பொதுப்பாயிரம்.

(க) முகவுரை பதிக மணிந்துரை நூன்முகம் - புறவுரை
தந்துரை புனைந்துரை பாயிரம். *

(எ-ன்.) பாயிரத்திற்கு வருஉங் காரணக் குறிகளுணர்-ற்று. (இ-ள்.) பாயிரத்தினிலக்கணங்களை முன்னுணர்ந்தல்லது நூல்களைச் செய்தலு மவற்றை யோதலுமேற்றலு முடியாமை கருதி முன்னுரைத்தலின் முகவுரையென்றும் "பதிகக்கிளவி பல்வகைப் பொருளைத்-தொகுதியாகச் சொல்லுதருமேன.,, என்பவாகலின் மேல் வகுக்குமைந்து பொதுவும் பதினொரு சிறப்புமாகிய பல்வகைப் பொருளையுந் தொகுத்துச்சொல்லுதலிற் பதிகமென்றும் நூலினது பெருமை முதலிய விளங்க வணிந்துரைத்தலின் அணிந்துரையென்றும் முகவுரையென்றாற்போல நூன்முகமென்றும் நூனுதலியபொருளல்லனவற்றை யுரைத்தலிற் புறவுரையென்றும் நூற்குள்ள நுதலிய பொருளல்லன வற்றை அதற்குத் தந்துரைத்தலிற் றந்துரையென்றும் அணிந்துரை யென்றாற்போலப் புனைந்துரையென்றும் பாயிரத்திற்குப் பெயராம். எ-று. ❁ பாயிரமென்பதுவரலாறு. பாயிரங்கூறப்புகுந்தார் நிகண்டு போலவதன்பெயர் விகற்பங்களைக் கூறியதென்னையெனின், இப்பாயிரம்பதிகமாகிய புறவுரையாய்த் தந்துரைக்கப்படுவதேனு நூற்கின்றியமையாத வணியாய்முன்னுரைக்கப்படுவதென்ப திக்காரணக்குறிகளான் விளங்குதலினென்க. (க)

(உ) பாயிரம்பொதுச்சிறப் பெனவிருபாற்றே. *

(எ-ன்.) மேற்பாயிரமென்றதனை வகுத்துணர்-ற்று. (பதவுரை.) பாயிரம் - பாயிரமானது, பொது - பொதுப்பாயிரமும், சிறப்பு-சிறப்புப்பாயிரமும், எனவிருபாற்று - எனவிரண்டுபிரிவையுடைத்தாகும். எ-று. ஏகாரம்-ஈற்றசை.

(பொழிப்புரை.) மேற்பாயிர மென்றது- பொதுப்பாயிரமுஞ் சிறப்புப்பாயிரமுமென விருவகையினையுடைத்து. எ-று. (உ)

(௩) நூலேநுவல்வோ னுவலுந்திறனே - கொள்வோன்கோட்
கூற்றுமைந்து-மெல்லா நூற்கு மிவைபொதுப்பாயிரம். *

(எ-ன்.) இருவகைப்பாயிரத்துட் பொதுப்பாயிரத்தை விரித்துணர்-ற்று. (ப-ரை.) நூற்(றிறன்) - நூலினதுவரலாறும், நுவல்வோன்(றிறன்)- பாடஞ்சொல்லும் ஆசிரியனதுவரலாறும், நுவலுந்திறன்-பாடஞ்சொல்லுதலினதுவரலாறும், கொள்வோன்(றிறன்)- பாடங்கேட்கு மாணாக்கனதுவரலாறும், கோடற்கூற்று-பாடங்கேட்கையினதுவரலாறும், எல்லா நூற்கும் - எல்லா நூலுக்கும்,

ஆய் - ஆகும் ஆதலால், இவை - இவ்வைந்துவரலாற்றையும்விளங்க
க்காட்டுவது, பொதுப்பாயிரம் - பொதுப்பாயிரமாகும். எ-று.
(பொ-ரை.) நூலினதுவரலாறும் ஆசிரியன்துவரலாறும் அவ்வா
சிரியனூலைமாணாக்கர்க்குச் சொல்லுதலின் வரலாறும் மாணாக்கன
துவரலாறும் அவன்கேட்டலின் வரலாறுமென்னுமைந்து மெல்
லா நூற்குமாமாதலி னிவ்வைந்து வரலாற்றையும் விளங்க வுணர்த்
துவது பொதுப்பாயிரமாம். எ-று. ❁ திறன்கூற்றென்றது வ
ரலாற்றையாதலி னதனை யேனையவற்றுள்ளும் பிரித்துரைத்தாம்.
ஆமென்பதனை யெல்லா நூற்கு மாமெனக்கூட்டுக. "ஈவோன்ற
ன்மை யீதலியற்கை - கொள்வோன்றன்மை கோடன்மரபென -
வீரிரண்டென்ப பொதுவின்றொகையே.,, என்பாருமுளராலோ
வெனின், பாயிரங்கூறுதனூல்கட்கன்றிப்பிறவற்றிற்கன்மை அங்ங
னமாதலினூல்களின்வரலாறொன்றுமேகூறவேண்டும்அதனோடா
சிரியன்வரலாறுமுதலிய நான்கினையுமுடன்கூறுதல்வரலாற்றுமு
றைமையின்வாராதார் நூல்களைக்கற்பிக்கவுங்கற்கவும்புகின் "பொ
ய்படுமொன்றோ புனைபூணுங்கையறியாப்-பேதைவினைமேற்கொ
ளின்.,, என்றவாறேயாய் நூல்களருமையும் பெருமையுங் கெட்டு
ப் பயன்படாவாமென்பது கருதியென்க. அங்ஙனமாயி னூன்மு
கத்துரைக்கப்படும் பாயிரவுறுப்பினு ணூலைக்கூறுவது பொருந்
தாதென்னில் இவ்விலக்கணத்தானமைபவன் ஆசிரியனென்றாற்
போல இவ்விலக்கணத்தனமைவது நூலென்றதன்றிப் பாயிர
த்து ணூலைக்கூறிய தன்றாமாதலின் ஆசிரியர் தொல்காப்பியர் நூ
லினிபல்லை ஒத்துறுப்பாகிய மரபியலுட் கூறினாற்போல இவ்
வாசிரியர் பாயிரவுறுப்பினுட்கூறினரென்க. (௫)

(௬) நூலினியல்பே நுவலினோரிரு- பாயிரந்தோற்றி மும்
மையினொன்றாய் - நாற்பொருட்பயத்தோ டெழுமதந்தழுவி-
யையிருகுற்றமு மகற்றியம் மாட்சியோ - டெண்ணான் குத்தியி
னோத்துப்படல- மென்னுமுறுப்பினிற் சூத்திரங்காண்டிகை- வி
ருத்தியாகும் விகற்பநடைபெறுமே. *

(எ-ன்.) மேற்கூறியவைந்தனு ணூலினதுவரலாறுணர்-த்-று. (ப
-ரை.) நூலினியல்பு - நூலினதுவரலாற்றை, நுவலின் - சொன்னு
ல், ஓரிருபாயிரந்தோற்றி - பொதுவுஞ்சிறப்புமாகிய விருவகைப்
பாயிரத்தையுமுன்னுடைத்தாகி, மும்மையினொன்றாய் - முதனூ
ன்முதலாகியமூன்றனுள் ஒன்றாகி, நாற்பொருட்பயத்தோடு-அ
றமுதலாகிய் நான்குபொருட்பிரயோசனத்துடனே, எழுமதந்த
ழுவி - உடன்படன்முதலாகிய எழுவகைமதத்தையுந்தழுவி, ஐயி
ருகுற்றமுமகற்றி - குன்றக்கூறன்முதலாகிய பத்துக்குற்றத்தையு

மொழித்து, அம்மாட்சியோடு - சுருங்கச்சொல்லல் முதலாகியப த்தழகுடனே, எண்ணன்குத்தியின் - நுதலிப்புகுதல் முதலாகிய முப்பத்திரண்டு உத்தியைக்கொண்டு, ஒத்துப்படலமென்னு மு றுப்பினில் - இயல் அதிகாரமென்னும் அவ்வுறுப்புகளுடனே, சூத் திரம் - சூத்திரமும், காண்டிகை - காண்டிகையுரையும், விருத்தி- விருத்தியுரையும், ஆகும் - ஆகின்ற, விகற்பநடை - பதின்மூன் று வேறுபாட்டு நடையையும், பெறும் - பெற்றுவரும். எ-று. (பொ-ரை.) மேற்கூறியவைந்தனு ணூலினதுவரலாற்றைச் சொ ல்லினிருவகைப் பாயிரத்தையு முன்னுடைத்தாதல் முதலாக இங் ஙனம் விகற்பித்த பதின்மூன்று விகற்ப நடைகளைப் பெற்றுவரு ம். எ-று. (௪)

(௫) முதல்வழிசார்பென நூன்மூன்றாகும். *

(எ-ன்.) நூலினதுவரலாற்றைத் தொகுத்துக்கூறினார் அவற்று ளொரிருபாயிரத்திற்கு வகைபோந்து கிடந்தமையி னதனையொ ழித்தேனையவற்றை வகுத்துக்கூறுவான் றொடங்கி முதன்மையினொ ன்றாமென்றதனை வகுத்துணர்-ற்று. (ப-ரை.) முதல் - முதனூல், வழி - வழிநூல், சார்பு - சார்புநூல், என - என்று, நூல்- நூலா னது, மூன்றாகும்-மூன்றுபிரிவையுடைத்தாகும். எ-று. (பொ-ரை.) முதனூல் வழிநூல் சார்புநூலென மூன்றுகூற்றதா நூல். எ-று.

(௬) அவற்றுள், வினையினீங்கி விளங்கியவறிவின்- முனைவன் கண்டது முதனூலாகும். *

(எ-ன்.) நூன்மூன்றனுண் முதனூலாமாறுணர்-ற்று. (ப-ரை.) வினையினீங்கி - வினையினின்று நீங்கி, விளங்கிய - பிரகாசித்த, அ றிவின் - அறிவினையுடைய, முனைவன் - கடவுள், கண்டது-உயி ர்களுக்கு ஆதிகாலத்திலே செய்தது, முதனூலாகும் - முதனூலா கும். எ-று.(பொ-ரை.) வினையினீக்கிவிளக்கப்படும் அறிவினையு டையவுயிர்கட்கு வினையினீங்கிவிளங்கியவறிவினையுடையமுதல்வ னாதிக்கண்ணேசெய்தறியாததுமுதனூலாம். எ-று. (௬)

(௭) முன்னோர்நூலின் முடிபொருங்கொத்துப் - பின்னோன் வேண்டும் விகற்பங்கூறி - யழியாமரபினது வழிநூலாகும். *

(எ-ன்.) வழிநூலாமாறுணர்-ற்று. (ப-ரை) முன்னோர்- கடவு ளும் அவனருள்வழிப்பட்டோருஞ்செய்த, நூலின் - நூல்களினு டைய, முடிபு - பொருண்முடிபுகள், ஒருங்கு - முழுவதையும், ஒத்து- நிகர்த்து, பின்னோன் - வழிநூல்செய்வோன், வேண்டும்- முதனூலிருக்கவுந் தான்வழிநூல்வேறேசெய்தற்குக் காரணமாக வேண்டிய, விகற்பம்-வேறுபாடுகளையும், கூறி - உடன்சொல்லி, அழியா - அழியாமலுலகத்திலே நிலைபெற்றுவிளங்காநின்ற, மர பினது-குணத்தையுடையது, வழிநூலாகும்-வழிநூலாகும். எ-று.

(பொ-ரை) தொல்லாசிரியர் நூல்களின் பொருண்முடிபு முழுவது
மொத்து வழிநூல்செய்வோன் முதனூலுளதாகவுந் தான்வழி
நூல்செய்தற்குக் காரணமாகவேண்டிய விகற்பங்களையுமுடன்கூ
றியவ்விகற்பங்க ளுணர்வுடையோர்பலர்க்கு மொப்பமுடிந்த
மையினழியா துலகத்துநின்று நிலவுமரபினையுடையது வழிநூலா
ம். எ-று. ❁ பின்னோன்வேண்டும் விகற்பங்கூறலாவது பழைய
னகழிதலும் புதியனபுகுதலும் வழுவல வென்றவற்றை யிறந்த
துவிலக்கலெதிரதுபோற்றலென்னுமுத்திகளான் விளக்கியும்போ
ற்றியுங் கூறுதன்முதலியன. முனைவன் கண்டது முதனூலாகுமெ
ன வொருமையாற்கூறினு ரீண்டுமுன்னோர் நூலெனப்பன்மை
யாற்கூறிய திறைவனூலையு மவனருள்வழிப்பட்டுத் தத்தமரபின்
வருங்குரவர்பலர் நூலையுந் தழீஇக்கோடற்கென்க. எனவேமுத
னூன்மாத்திரையாய்நிற்ப திறைவனூலும் வழிநூன் மாத்திரையா
ய்நிற்பதிறுதிநூலுமன்றியிடைநிற்கு நூல்களெல்லா மொருவற்கு
மைந்தனாயினான் மற்றொருவற்குத் தந்தையாயினாற்போல முத
னூலாயும் வழிநூலாயு நிற்குமென்பதுபெற்றாம். (௭)

(அ) இருவர் நூற்கு மொருசிறைதொடங்கித் - திரிபுவேறுடை
யது புடைநூலாகும். ✻

(எ-ன்.) சார்புநூலாமாறுணர்-ற்று. (ப-ரை.) இருவர்நூற்கு
ம்-முதனூல் வழிநூல் என்னுமிருவகைநூல்களுக்கும், ஒருசிறை-
ஒருபுடை, தொடங்கி-பொருண்முடிபொத்து, வேறு- மற்றவை
களெல்லாம், திரிபு- ஒவ்வாமையை, உடையது -உடைத்தாகியது, பு
டைநூலாகும் - சார்புநூலாகும். எ-று. (பொ-ரை.) முதனூல்
வழிநூலென்னு மிருதிறத்து நூல்கட்கும் பொருண்முடிபொ
ருபுடையொத்தொழிந்தன வெல்லாமொவ்வாமையையுடையது
சார்புநூலாம். எ-று. ❁ எனவே முதனூற்குவழிநூலுஞ் சார்பு
நூலு மொருவற்கு மைந்தனு மருமானும்போலுமென்க. ஒரு
நூறனக்கு வழிநூலைநோக்கின் முதனூலாகவு முதனூலைநோக்கி
ன் வழிநூலாகவும் அயனூலைநோக்கிற் சார்புநூலாகவு நிற்குமா
யினு, மிம்முத்திறத்தினு ளொருதிறத்தின்கண் மற்றொருதிறமி
ன்மையின் மும்மையினென்றாயினார். (அ)

(௯) முன்னோர்மொழிபொருளே யன்றியவர்மொழியும், பொ
ன்னேபோற் போற்றுவமென்பதற்கு- முன்னோரின்- வேறுநூல்
செய்துமெனு மேற்கோளிலென்பதற்கும் - கூறுபழஞ்சூத்திரத்
தின்கோள். ✻

(எ-ன்.) வழிநூற்குஞ் சார்புநூற்கு மெய்தியதன்மேற்சிறப்பு
விதியுணர்-ற்று. முன்னோர்நூலின் பொருண்முடிபு முழுவது
மொப்பவு மொருபுடையொப்பவுங் கூறுவதன்றியு மந்நூற்சூத்

திரங்களையு மோரோவழியெடுத்துக் கூறுகவென்றலின். (ப-ரை.) முன்னோர்- முதனூலோர், மொழி-சொன்ன, பொருளேயன்றி- பொருளைமாத்திரமல்லாமல், அவர்- அவரது, மொழியும்-சொல்லையும், பொன்னேபோல் - பொன்னைப்போலவே, போற்றுவமென்பதற்கும் - காப்பாற்றிக்கொள்வோமென்பதற்கு அடையாளமாகவும், முன்னோரின் - முன்னோர் நூலையே சொல்லாமல் அந்நூலினின்றும்,வேறுநூல்- வழிநூல் சார்புநூல்களை, செய்துமெனும் - செய்தோமாயினும், மேற்கோள்- ஆசிரியவசனமானது, இல்லென்பதற்கும் - இந்தநூலினிடத்தில்லையென்று சொல்லுங்குற்றமொழிதற்காகவும், பழஞ்சூத்திரத்தின்கோள் - முன்னோர்சொல்லியபொருளையல்லாமதும் அவர்சூத்திரத்தையும், கூறு- ஓரோவிடத்திலேசொல்லு. எ-று. (பொ-ரை.) முன்னோர் மொழிந்தபொருளேயன்றியவர்மொழியினையும் பொன்போலப்போற்றிக்கொள்வமென்பதற் கிலச்சினையாகவு முன்னோர் நூலேயகூற தந்நூலினின்றும் வழிநூல்சார்புநூல் செய்தோமாயினு மாசிரியவசனங்களை யொரோவழி யெடுத்துடன்கூறுதல் வழிநூற்குஞ்சார்புநூற்குமிலக்கணமாதலினிந் நூலகத்தாசிரியவசன மில்லையெனக்குற்றங்கூறுவ ராதலினக்குற்றமொழிதற்காகவும்பழஞ்சூத்திரத்தின்கோளைக் கூறு.எ-று. ❁ ஆசிரியவசன மெனினுமேற்கோளெனினும் பழஞ்சூத்திரத்தின்கோளெனினுமொக்கும். முன்போற்றுவஞ்செய்துமெனவுளப்பாட்டுத் தன்மைப்பன்மைமுற்றாகவும்பின்னர்க்கூறெனமுன்னிலையேவலொருமையாகவுங்கூறினமையின் வழிநூலுஞ் சார்புநூலுஞ்செய்வோர்புலர்குழீஇயொருவர்க்கொருவர்கூறுங் கூற்றாகவிச்சூத்திரஞ் செய்யப்பட்டதென்க. (௯)

(௰) அறம்பொருளின்பம்வீ டடைதனூற்பயனே. *

(எ-ன்.) நாற்பொருட் பயனென்றதனை வகுத்துணர்-ற்று. (ப-ரை.) அறம் - தருமமும், பொருள் - அர்த்தமும், இன்பம்-காமமும், வீடடைதல் - மோட்சமடைதலும், நூல் - நூலிற்சொல்லப்படும், பயன் - பிரயோசனமாம். எ-று. (பொ-ரை.) அறமும்பொருளுமின்பமும்வீடடைதலுமாகிய விந்நான்கும் நூலாலெய்தும் பயனும். எ-று. ❁ வீடென வாளாகூறாது வீடடைதலென்றார் வீடென்பதுபேரின்பமாகிய சாத்தியமாதலின். நான்குமென்னுஞ்செவ்வெண்ணின் றொகையோடு உம்மை விகாரத்தாற்றொக்கன. (௰)

(௰௧) எழுவகைமதமே யுடன்படன்மறுத்தல் - பிறர்தம்மதமேற் கொண்டுகளைவே - தாஅனாட்டித் தனாது நிறுப்பே- யிருவர்மாறுகோ ளொருதலை துணிவே - பிறர்நூற்குற்றங் காட்டலேனைப் - பிறிதொடுபடாஅன் றன்மதங்கொளலே. *

(எ-ன்.) எழுவகைமதமென்றதனைவகுத்துணர்-ற்று. (ப-ரை.) எழுவகைமதம்-எழுவகைமதமாவன, உடன்படல்-பிறர்மதத்திற்குஉடன்படலும், மறுத்தல்-பிறர்மதத்தைமறுத்தலும், பிறர்தம்மதமேற்கொண்டுகளைவு-பிறர்மதத்திற்கு உடன்பட்டுப்பின்பு மறுத்தலும், தாஅநாட்டித்தனாஅநிறுப்பு - தானொருபொருளை எடுத்துநாட்டி அதனைவருமிடந்தோறும் நிறுத்துதலும், இருவர் மாறுகோளொருதலை துணிவு - இருவர் ஒன்றற்கொன்று விரோதமாகக்கொண்ட விரண்டனுள் ஒன்றனிடத்துத் துணிதலும், பிறர்நூற்குற்றங்காட்டல்-பிறர் நூல்களிலிருக்கின்ற குற்றத்தைக்காட்டுதலும், பிறிதொடுபடாஅன்றன்மதங்கொளல் - பிறர் மதத்திற்கு உடன்படானாகித் தன்மதத்தையேகொள்ளுதலுமாம். எ-று. (பொ-ரை.) மேலெழுவகைமதமென்று சொல்லப்பட்டன இங்ஙனம்பிறர்மதத்தையுடன்படன் முலியவாகவிதந்தனவாம். எ-று. ❋ நூறழுவியமதங்கள் பலவாயினுந் தலைமைபற்றி மதமேழென்பது நூல்வழக்காமென்க. குற்றம்பத்து அழகுபத்து உத்தி முப்பத்திரண்டு என்பனவுமன்ன. இவ்வெழுவகைமதங்கட்கும் உதாரணம்விளங்க இந்நூலுள்வந்துழிவந்துழிக்காட்டுதுமாங்காங்குணர்க. (௰௧)

(௰௨) குன்றக்கூறன் மிகைபடக்கூறல்- கூறியதுகூறன் மாறுகொளக்கூறல்- வழூஉச்சொற்புணர்த்தன் மயங்கவைத்தல்-வெற்றெனத்தொடுத்தன் மற்றொன்றுவிரித்தல்- சென்றுதேய்ந்திறுதனின்றுபயனின்மை-யென்றிவையீரைங் குற்றநூற்கே. *

(எ-ன்.) பத்துக்குற்றமென்றதனை வகுத்துணர்-ற்று. (ப-ரை.) குன்றக்கூறல் - குறித்தபொருளைக் காட்டுதற்குரியசொற்களிற்குறைவுபடச்சொல்லுதலும், மிகைபடக்கூறல் - அதிகப்படச்சொல்லுதலும், கூறியதுகூறல் - முன்சொன்ன ஒருபொருளையே பின்னுஞ்சொல்லுதலும், மாறுகொளக்கூறல் - முன்சொன்னபொருளோடு பின்சொல்லும்பொருள் விரோதங்கொள்ளச் சொல்லுதலும், வழூஉச்சொற்புணர்த்தல் - குற்றமானசொற்களைச்சேர்த்தலும், மயங்கவைத்தல் - ஒன்றைமற்றொன்றாக மயங்கவைத்தலும், வெற்றெனத்தொடுத்தல் - பொருள்வெளிப்படையாகத்தோன்றச்சூத்திரித்தலும், மற்றொன்றுவிரித்தல் - சொல்லத்தொடங்கியதைவிட்டு மற்றொருபொருளைவிரித்தலும், சென்றுதேய்ந்திறுதல் - சொல்லின் முடிபும் பொருளின்முடிபும் முன்சிறப்பாகநடந்து அந்நடைபின்னே தேய்ந்துமுடிதலும், நின்றுபயனின்மை - சொற்களிருந்தும் ஒருபிரயோசனமுமில்லாமற் போதலும், என்றிவை - என்றுசொல்லட்ட விவை, நூற்கு - நூலுக்கு, ஈரைங்குற்றம் - பத்துக்குற்றங்களாகும். எ-று. (பொ-ரை.) நூற்

குப்பத்துக்குற்றங்களாவன குன்றக்கூறன் முதலிய விவைகளாம். எ-று. ❁ நூல்கள் இக்குற்றங்கள் சாராதுவருதல்காண்க. (௰௨)

(௰௩) சுருங்கச்சொல்லல் விளங்கவைத்த - னவின்றோர்க்கினிமை நன்மொழிபுணர்த்த- லோசையுடைமை யாழமுடைத்தாதன் - முறையின்வைப்பே யுலகமலையாமை- விழுமியதுபயத்தல் விளங்குதாரணத்த - தாகுதனூலிற் கழகெனும்பத்தே. *

(எ-ன்.) பத்தழகென்றதனை வகுத்துணர்-ற்று. (ப-ரை.) சுருங்கச்சொல்லல் - சொல்லுகள்வீணாகவிரியாமற் சுருங்கிநிற்கச்சொல்லுதலும், விளங்கவைத்தல்-பொருளைச்சந்தேகத்திற்கு இடமாகாமல் விளங்கவைத்தலும், நவின்றோர்க்கினிமை - வாசித்தவருக்கு இன்பத்தைத்தருதலும், நன்மொழிபுணர்த்தல்- நல்லசொற்களைச்சேர்த்தலும், ஓசையுடைமை - சந்தவின்பமுடைத்தாதலும், ஆழமுடைத்தாதல் - ஆழ்ந்தகருத்தை யுடைத்தாதலும், முறையின்வைப்பு - அதிகாரமுதலானவைகளைக் காரணகாரியமுறையாகவைத்தலும், உலகமலையாமை - உயர்ந்தோர் வழக்கத்தோடு மாறுகொள்ளாமையும், விழுமியதுபயத்தல் - சிறப்பாகியபொருளைத் தருதலும், விளங்குதாரணத்ததாகுதல் - விளங்கிய உதாரணத்தையுடையதாதலும், நூலிற்கு - நூலினுக்கு, அழகெனும்- அழகென்றுசொல்லப்படும், பத்து-பத்தாம்.எ-று (பொ-ரை.) நூலிற்கழகென்றுசொல்லப்படும்பத்தாவனசுருங்கச்சொல்லன்முதலியவாம்.எ-று. ❁ நூல்கள் இப்பத்தழகோடுங் கூடிவருதல்காண்க. (௰௩)

(௰௪) நுதலிப்புகுத லோத்துமுறைவைப்பே - தொகுத்துச்சுட்டல் வகுத்துக்காட்டன்- முடித்துக்காட்டன் முடிவிடங்கூறறுனெடுத்துமொழிதல் பிறன்கோட்கூறல் - சொற்பொருள்விரித்த றொடர்சொற்புணர்த்த - லிரட்டுறமொழித லேதுவின்முடித்த - லொப்பின்முடித்தன் மாட்டெறிந்தொழுக - லிறந்ததுவிலக்க லெதிரதுபோற்றன்- முன்மொழிந்துகோடல் பின்னதுநிறுத்தல் - விகற்பத்தின்முடித்தன் முடிந்ததுமுடித்த - லுரைத்துமென்ற லுரைத்தாமென்ற - லொருதலைதுணித லெடுத்துக்காட்ட - லெடுத்தமொழியி னெய்தவைத்த - லின்னதல்ல திதுவெனமொழித -. லெஞ்சியசொல்லி னெய்தக்கூறல் - பிறநூன்முடிந்தது தானுடன்படுத - றன்குறிவழக்க மிகவெடுத்துரைத்தல் - சொல்லின்முடிவி லப்பொருண்முடித்த - லொன்றினமுடித்த றன்னினமுடித்த - லுய்த்துணரவைப்பென வுத்தியெண்ணான்கே. *

(எ-ன்.) முப்பத்திரண்டு உத்தியென்றதனை வகுத்துணர்-ற்று. (ப-ரை.) நுதலிப்புகுதல்-இதனைச்சொல்லுவேனென்று சொல்லிப்புகுதலும், ஓத்துமுறைவைப்பு- இயல்களைக் காரணகாரிய முறை

யால்வைத்தலும்- தொகுத்துச்சுட்டல்- பலவுந்தொகுத்துக்காட்ட
லும், வகுத்துக்காட்டல்- அப்படித்தொகுத்துக் காட்டியவைகளை
வேறுவேறுவிரித்துக்காட்டுதலும், முடித்துக்காட்டல்- தான்மே
லோர் முடித்தவாறுமுடித்துக்காட்டுதலும், முடிவிடங்கூறல்- தா
ன் சொல்லும் இலக்கணத்திற்கு இலக்கியந்தோன்று மிடத்தைச்
சொல்லுதலும், தானெடுத்து மொழிதல்- தான்பழைய சூத்திரத்
தை யெடுத்துச்சொல்லுதலும், பிறன்கோட்கூறல்-தன்னூலிற் பி
றனதுகோட்பாட்டைச்சொல்லுதலும், சொற்பொருள் விரித்தல்-
சொல்லினதுபொருள்விளங்குதற்கு உருபுமுதலானவைகளை விரி
த்துச்சொல்லுதலும், தொடர்சொற்புணர்த்தல்-ஒன்றற்கொன்று
சம்பந்தமுடைய சொல்லுகளைச் சேர்த்து வைத்தலும், இரட்டுற
மொழிதல்- ஒருவாக்கியத்தில் இரண்டுபொருள் படச் சொல்லுத
லும், ஏதுவின்முடித்தல்- முன்காரணம் விளங்காத்தாகச்சொல்ல
ப்பட்ட ஒன்றற்குப்பின்காரணம் விளங்கக் காட்டி முடிவு செய்த
லும், ஒப்பின்முடித்தல்- ஒன்றற்குச் சொல்லப் பட்ட இலக்கணம்
வேறொன்றற்கும்ஒத்துவருமாயின் அதற்கும் அதுவே இலக்கணமா
கமுடிவுசெய்தலும், மாட்டெறிந்தொழுகல்-ஒன்றற்குச்சொல்லப்
பட்ட இலக்கணத்தைஅதனைப்பெறுதற்குரிய மற்றொன்றற்குமா
ட்டிச்சொல்லி நடத்தலும், இறந்ததுவிலக்கல்- முற்காலத்துவழங்
கிய இலக்கணங்களுள்ளே பிற்காலத்து வழங்காமற் போனதைநீக்
குதலும், எதிரதுபோற்றல்- முற்காலத்து வழங்காமற் பிற்காலத்
து வழங்கி வருகின்ற இலக்கணத்தைத் தழுவிக்கொள்ளுதலும், மு
ன்மொழிந்துகோடல்- முன்னே ஒன்றனைச் சொல்லிப்பின்பு அத
னைவேண்டுமிடந்தோறும் எடுத்துக்கொள்ளுதலும், பின்னதுநிறு
த்தல்- ஒருபொருளுக்குக் கருவியாகமுன்வைத்தற்குரியது அங்கே
வைத்தற்கு இடம்பெறாதாயின் அப்பொருளின் பின்னே அதனை
வைத்தலும், விகற்பத்தின்முடித்தல்- விளங்குதற் பொருட்டுப்பல
வேறுபாடுகளின் சிறப்புவாய்பாட்டான் முடித்தலும், முடிந்தது
முடித்தல்-சிறப்புவாய்பாட்டான்முடிந்ததைப்பொதுவாய்பாட்
டான்முடித்தலும், உரைத்து மென்றல்- பின்னே சொல்லப் படுவ
தை முன்னே ஒருநிமித்தத்தினாலே சொல்லவேண்டின் இதனைப்பி
ன்னே சொல்லுவோமென்பதுதோன்ற அங்கேசுருக்கிச்சொல்லு
தலும், உரைத்தா மென்றல்- முன்னே ஒரு நிமித்தத்தினாலே சொ
ல்லப்பட்டதைப் பின்னேசொல்லவேண்டியவிடத்து இதனைமுன்
னேதானே சொல்லினோமென்பதுதோன்றச்சொல்லாதுவிடுதலு
ம், ஒருதலைதுணிதல்- ஒன்றற்கொன்று மாறுபாடாகக்கொண்ட வி
ரண்டுபட்சத்துள் ஒருபட்சந்துணிதலும், எடுத்துக்காட்டல்-தான்
சொல்லும்இலக்கணத்திற்குத்தானே இலக்கியத்தை எடுத்துக்காட்

டுதலும், எடுத்தமொழியினெய்தவைத்தல்-தான்சொல்லும் இலக்கணத்தைத்தானெடுத்துக்காட்டிய இலக்கியத்தில் இருக்கவைத்தலும், இன்னதல்லதிதுவெனமொழிதல்- சந்தேகிக்க நின்ற விடத்து இப்படிப்பட்ட தல்லாதது இதுவெனச் சொல்லுதலும், எஞ்சிய சொல்லி னெய்தக்கூறல் - சொல்லாது விடப் பட்டவற்றிற்குஞ் சொல்லப்பட்டதனால் இலக்கணம்பொருந்தச்சொல்லுதலும், பிறநூன்முடிந்தது தானுடன்படுதல் - பிறநூலிலேமுடிந்தமுடிபைத்தான் அங்கீகரித்தலும், தன்குறிவழக்கமிகவெடுத்துரைத்தல்- நூதனமாகத்தான்குறித்து வழங்கும்வழக்கத்தையே பலவிடங்களிலுமெடுத்துச்சொல்லுதலும், சொல்லின்முடிவினப்பொருண்முடித்தல்- சொல்லின்முடிவிலே அதன்பொருளையுமுடித்தலும், ஒன்றினமுடித்தல்- ஒன்றைச் சொல்லுமிடத்தில் அதற்கு இனமாகிய மற்றொன்றையும் விரியாதிருக்கவேண்டி அதனுடன்முடித்தலும். தன்னின முடித்த லென்பதற்கும் - பொருளதுவே, உய்த் துணர வைப்பு- சிலசூத்திரவிதிகளைக்கொண்டு ஆராய்ந்தறிய ஒருபொருளைவைத்தலும், எனவுத்தி- எனத்தந்திரவுத்திகள் எண்ணான்கு- முப்பத்திரண்டாம். எ-று.(பொ-ரை). முப்பத்திரண்டு உத்தியாவன நுதலிப்புகுதன் முதலியவாம். எ-று. ❊ இவற்றுள் ஒன்றின முடித்தறன்னினமுடித்தலென்பதோருத்தி. உய்த்துணரவைப்பென்பதனையுத்திக்கடையாக்கி யுய்த்துணரவைப்பெனு முத்தியெண்ணான்கே யெனப்பாடமோதி யதனையிரண் டுத்தியாக்கினுமமையும். இவ்வுத்திகட்கு உதாரணம்விளங்க இந்நூலுள்வந்துழிவந்துழிக்காட்டுதுமாங்காங்குணர்க. மதத்தினுள்ளும் அழகினுள்ளும் வருவன சிலவற்றை உத்தியுள்ளுங்கூறிய தென்னையெனிற் கொள்கைவகையான் மதமென்றும் சிறப்புவகையான் அழகென்றும் இம்மதமழகு முதலியவெல்லாம் புத்திநுட்பத்தமையும்வகையானுத்தியென்றுங் கூறப்படுமென்க. அங்ஙனமாயின் மதமழகெல்லாவற்றையும் உத்தியின்பாற்படுத்துக்கூறாது சிலவற்றைக் கூறியதென்னையெனின் வரம்பின்றிவருமுத்தியுட் டலைமைபற்றிக்கூறுமுப்பத்திரண்டின்வந்தனகூறினரென்க. (௰௪)

(௰௫) நூற்பொருள்வழக்கொடு வாய்ப்பக்காட்டி - யேற்புழியறிந்திதற் கிவ்வகையாமெனத் - தகும்வகைசெலுத்துத றந்திரவுத்தி.

(எ-ன்.) மேற்றொகுத்தும் வகுத்துங் கூறியவுத்திக் கிலக்கணமுணர்-ற்று. (ப-ரை.) நூல் - ஓரிலக்கணநூலா லறிவிக்கப்படுகின்ற, பொருள்- பொருளை, வழக்கொடு -உலகவழக்கோடுஞ்செய்யுள்வழக்கோடும், வாய்ப்ப - பொருந்த, காட்டி- காண்பித்து, ஏற்புழி - ஏற்குமிடத்தை, அறிந்து மற்றோரிலக்கிய நூலிலுமறிந்து,

இதற்கு-இவ்விடத்திற்கு, இவ்வகையாமென- இவ்வகையாகுமென் றுநினைத்து, தகும்வகை- தக்கவகையாக, செலுத்துதல்- நடத்துவு து, தந்திரவுத்தி- தந்திரவுத்தியாம். எ-று. (பொ-ள.) ஓரிலக்கண நூலானுணர்த்தப்படும் பொருளை நூல்வழக்கோடு முலகவழக் கோடும் பொருந்தவுணர்த்தி யப்பொருளைமற்றோரிலக்கிய நூற் கண்ணு மேற்குமிடமறிந்திவ்விடத்திற்கிஃ தாமெனக்கருதித்தக்க வகையாகச்செலுத்துவது தந்திரவுத்தியாம். எ-று. ❁ தந்திரமெ ன்பது நூல். உத்தியானமைக்கும்பொருளை யுத்தி யென்றதாகு பெயர். (௰௫)

(௰௬)நேரினமணியை நிரல்படவைத்தாங்- கோரினப்பொருளை யொருவழிவைப்ப- தோத்தெனமொழிப வுயர்மொழிப்புலவர். *

(எ-ன்.) இருவகையுறுப்பினு ளோத்துறுப்பாமாறுணர்-ற்று. (ப-ரை.) நேரின- ஒருசாதியாயுள்ள, மணியை- மணிகளை, நிரல்ப ட- வரிசையாக, வைத்தாங்கு- பதித்ததுபோல, ஓரினம்- ஒருசாதி யாயுள்ள, பொருளை- பொருள்களை, ஒருவழி- ஒருவழிப்பட, வை ப்பது- சொல்லுவது, ஓத்தென-இயலுறுப்பென்று, மொழிப- சொல்லுவார், உயர்மொழி-உயிர்க்குறுதியைத்தருகின்ற உண்மை ச்சொல்லுகளையுடைய, புலவர்- வித்துவான்கள். எ-று. (பொ-ள) ஒருசாதியாயுள்ளமணிகளை முறையே பதித்தாற்போல வொருசா தியாயுள்ள பொருள்களை யொருவழிப்படக் கூறுவ தோத்துறுப் பா மெனச்சொல்லுவ ருயிர்க்குறுதிபயக்கு மெய்ம்மொழிகளை யுடையபுலவர். எ-று. ❁ நேர்தல் ஒன்றுபடுதல். இவ்வாறு வருத லிந்நூலுறுப்பினுட்காண்க. (௰௬)

(௰௭.) ஒருநெறியின்றி விரவியபொருளாற் - பொதுமொழி தொடரி னதுபடலமாகும். *

(எ-ன்.) படலவுறுப்பாமாறுணர்-ற்று. (ப-ரை.) ஒருநெறியின் றி-ஒருவழிப்படாமல், விரவியபொருளால்-கலந்தபொருள்களோ டுபொருந்தி, பொதுமொழி- பலபொருள்களைத் தரும் பொதுச் சொல்லுகள், தொடரின்-ஓரோவிடத்தன்றித்தொடர்ந்துவந்தால், அது- அது, படலமாகும்- படலவுறுப்பாகும்; எ-று. (பொ-ரை.) ஒருவழிப்படாது விராய பொருளோடு பொருந்திப் பலபொரு ளையுணர்த்தும் பொதுச்சொற்க ளோரோவழியன்றித் தொடர்ந் துவரி னதுபடலவுறுப்பாம். எ-று. ❁ படலவுறுப் பினையுடைய காப்பியங்களுட் பாட்டுடைத்தலைவன்து சரிதையேயன்றி மலைகட லுமுதலிய பலபொருட்டிறங்களும் விரவி வருதலும் பலபொ ருளையுணர்த்தும் பொதுச்சொற்க ளோரோவழியன்றித் தொட ர்ந்துவருதலுங்காண்க. (௰௭)

(௰அ) சில்வகையெழுத்திற் பல்வகைப்பொருளைச் - செவ்வ னாடியிற் செறித்தினி துவிளக்கித் - திட்பநுட்பஞ் சிறந்தனசூத் திரம். *

(எ-ன்.) சூத்திரமாமாறுணர்-ற்று. (ப-ரை.) ஆடியின் - பெரி யசரீரமுதலானவைகளின் சாயையைத் தனக்குள்ளே செவ்வையா கவடக்கி இனிதாகக்காட்டுகின்ற கண்ணாடியைப்போல, சில்வகை யெழுத்தில் - சிலவகையெழுத்துகளாலாகியசொல்லுகளில், பல்வ கைப்பொருளை - பலவகைப்பட்டபொருள்களை, செவ்வன் - செ வ்வையாக, செறித்து - அடக்கி, இனிது - இனிதாக, விளக்கி - கா ட்டி, திட்பம் - பலபொருளினுடையதிண்மையும், நுட்பம் அ வற்றினுடையநுண்மையும், சிறந்தன - சிறந்துவருவன, சூத்திர ம் - சூத்திரங்களாகும். எ-று. (பொ-ரை.) சிறியகண்ணாடியிற்பெ ரிய சரீரமுதலியவற்றின்சாயை செவ்வாகச்செறிந்தினிதாகவிளங் கினாற்போலச் செவ்வாகச்செறிந்தினிதாகவிளங்கச்சில்வகையெழுத் துகளானியன்ற யாப்பின்கட் பல்வகைப்பட்டபொருள்களைச் செ வ்வாகச்செறித்தினிதாகவிளக்கி யப்பலபொருட்டிண்மையு நுண் மையுஞ்சிறந்துவருவன சூத்திரங்களாம். எ-று. ※ திட்பங்குற்ற மின்மையினலைவ்றநிற்றல். இவ்வாறுவருதல் இச்சூத்திரத்துள்ளுங் காண்க. (௰அ)

(௰௯) ஆற்றொழுக்கரிமா நோக்கந்தவளைப் - பாய்த்துப்பரு ந்தின்வீழ் வன்னசூத்திர நிலை. *

(எ-ன்.) இதுவுமது. (ப-ரை.) ஆற்றொழுக்கு - நடுவில்விடா துசெல்லுகின்ற ஆற்றுவெள்ளத்தினது செல்லுகையையும், அரி மாநோக்கம் - முன்னும்பின்னும் பார்க்கின்ற சிங்கத்தினது பார் வையையும், தவளைப்பாய்த்து - நடுவேயிடம்விட்டுக்குதிக்கின்ற த வளையினது குதித்தலையும், பருந்தின்வீழ்வு - நெடுந்தூரத்திலிரு ந்து ஒன்றை வௌவிப்போதற்கு வீழ்கின்றபருந்தினது வீழ்ச் சியையும், அன்ன - போலும், சூத்திரம் - முன்சொன்ன சூத்திர ங்கள், நிலை - ஒன்றோடொன்று தொடர்ந்துநிற்குநிலைகள். எ-று. (பொ-ரை.) மேற்கூறிய சூத்திரங்களொன்றோடொன்றுதொடர் ந்து நிற்குநிலைக ளாற்றொழுக்குமுதலியநான்கினையும்போலும். எ-று. ※ இவ்வாறுநிற்றல் இந்நூலுள்வந்துழிவந்துழிக்காட்டுது மாங்காங்குணர்க. (௰௯)

(௨௰) பிண்டந்தொகைவகை குறியேசெய்கை - கொண்டியல் புறனலடக் கூற்றன சூத்திரம். *

(எ-ன்.) இதுவுமது. (ப-ரை.) பிண்டம் - பலதிறப்பொருள் களுக்கும்பொதுவாகப்பிண்டமாக்கிச்சொல்லும்பிண்டசூத்திரமு ம், தொகை - அப்பலதிறப்பொருள்களையும் வேறுவேறாகத் தொ

குத்துச்சொல்லுந் தொகைச்சூத்திரமும், வகை - அத்தொகுத்து
ச்சொல்லப்பட்டவைகளை வகுத்துச்சொல்லும் வகைச்சூத்திரமு
ம், குறி - இவையுயிர்- இவைமெய்யெனவறியவருங் குறிச்சூத்திர
மும், செய்கை - புணர்ச்சிவிதியறிந்து புணர்த்தலையும் முடிபு
விதியறிந்துமுடித்தலையும் செய்யுஞ் செய்கைச்சூத்திரமும், கொ
ண்டியல்புறனடை - இவைகளை அலைவறக்கொண்டு இவைகளி
ன்புறத்து அடையாகவருகின்ற புறனடைச்சூத்திரமுமாகிய, கூ
ற்றன- ஆறுபிரிவை யுடையன, சூத்திரம் - சூத்திரங்கள். எ-று.
(பொ-ரை.) பிண்டமெனவுந் தொகையெனவும்வகையெனவுங்கு
றியெனவுஞ் செய்கையெனவும் இவற்றை யலைவறக்கொண்டிவற்
றின் புறத்தடையாய்வரும் புறனடையெனவுங் கூறுங்கூற்றினை யு
டையவா மேற்கூறிய சூத்திரங்கள். எ-று. ※ இவற்றுட் பிண்ட
மாவன பன்னிருபாற்றதுவே யென்றற்றொடக்கத்துத் தொகை
போலாது நன்கியம்புவனெழுத்தே யென்றற்றொடக்கத்துப்
பொதுப்படவருவன. தொகையும்வகையும்புறனடையும் வந்து
ழிவந்துழிக்காட்டுதுமாங்காங்குணர்க. விரி வகையின்பாற்படுத
லிற் கூறாராயினர். குறியாவன இவை யுயி ரிவையொற்றிவைபெ
ய ரிவைவினையென்றற்றொடக்கத் தறிதன்மாத்திரை யாய்வருவன.
குறியென்பதறிதலை யுணர்த்தியமுதனிலைத் தொழிற்பெயர். செ
ய்கையாவன பதமுன்விகுதியும் பதமுமுருபும் புணரும்புணர்ச்
சிவிதியறிந்து அங்ஙன மறிதன்மாத்திரையாய்நில்லா தவ்வாறுவே
ண்டுழிப் புணர்த்தலைச்செய்தலும் பெயர்வினைமுதலியகொள்ளு
முடிபுவிதியறிந்து அங்ஙன மறிதன்மாத்திரையாய்நில்லா தவ்வா
றுவேண்டுழி முடித்தலைச் செய்தலுமு தலியன. இப்பிண்டமுத
லியவாறு பெயரு மப்பொருளை யுணர்த்துஞ் சூத்திரங்கட்கு ஆ
குபெயராய்வந்தன. எல்லாச்சூத்திரங்களும் பிண்டந் தொகை வ
கைபுறனடையென்னு நான்கனுளடங்குமன்றே அங்ஙனமாகக் கு
றியினையுஞ் செய்கையினையும் வேறோதிய தெல்லா நூலுள்ளுஞ்
சொல்லப்படுவன வறிவதுஞ் செய்வது மன்றி வேறின்மையிற் பி
ண்டமர்க்கியுந் தொகுத்தும் வகுத்தும் புறத்தடை கொடுத்துங்கூ
றப்படுவன குறியுஞ்செய்கையும்ம் மென்பது தோன்றற்கென்க.
இங்ஙனங்கூறவே யெல்லா நூலுள்ளும் வருமெல்லாச் சூத்திரங்க
ளுங் குறிச்சூத்திரஞ் செய்கைச்சூத்திரமென விரண்டாயடங்கு
மென்பது பெற்றாம். இவ்வாறன்றிக் குறியென்பதற்குப் பெ
யர்களை யுணர்த்துஞ் சூத்திரமென்றுஞ் செய்கையென்பதற்கெ
ழுத்துப்புணர்ச்சியை யுணர்த்துஞ் சூத்திரமென்றும் பொருள்
கூறுவாருமுளர். அங்ஙனங்கூறி னேனையிலக்கணங்களைக்கூறுஞ்
சூத்திரங்களையும் விதந்துகூறவேண்டு மவையின்மையானும்பெ

யரும் புணர்ச்சியும் இவ்விலக்கண நூற் கன்றிப் பொதுப்பாயிர
மாமெல்லா நூற்கும் பொருந்தாமையானு மது பொருளன்றெ
ன்க. (உ௰)

(உக) பாடங்கருத்தே சொல்வகைசொற்பொரு-டொகுத்து
ரையுதாரணம் வினாவிடைவிசேடம் - விரிவதிகாரந் துணிவுபய
னோ-டாசிரியவசனமென் றீரேழுரையே. *

(எ-ன்.) மேற்காண்டிகையுரை விருத்தியுரை யென்றார்
அவற்றை யுணர்த்துவான் றொடங்கி யுரையினது பொது விலக்
கணமுணர்-ற்று. (ப-ரை.) பாடம் - பாடமும், கருத்து - கருத்
துரையும், சொல்வகை - சொற்களை வகுத்துரைத்தலும், சொ
ற்பொருள்-பதப்பொருளும், தொகுத்துரை- தொகுத்துரைத்த
லும், உதாரணம்- உதாரணமும், வினா - வினாவும், விடை - உ
த்தரமும்,விசேடம்-வேண்டியவைகளைத்தந் துரைத்தலும், விரிவு-
வேற்றுமைத்தொகை முதலானவைகளை விரித்துரைத்தலும், அ
திகாரம்-அதிகாரத்தோடுபொருந்தவுரைத்தலும், துணிவு-இதற்கு
இதுவேபொருளெனவுரைத்தலும், பயன் - பயனையுரைத்தலும்,
ஆசிரியவசனம் - ஆசிரியவசனங்காட்டுதலும்,என்று- என்றுசொ
ல்லப்பட்ட, ஈரேழ்- பதினான்குவகையாலு முரைக்கப்படும், உ
ரை- நூலுக்கு உரை. எ-று .(பொ-ரை.) இப்பதினான்குவகையா
னுரைக்கப்படு நூற்குரை. எ-று. ❋ இவற்றுள் விசேடமாவது
சூத்திரத்துட்பொரு ளன்றியாண்டைக்கு வேண்டுவன தந் துரை
த்தல். விரிவாவது வேற்றுமைமுதலிய தொக்குநின்றவற்றை வி
ரிக்கவேண்டுழிவிரித்துரைத்தல். அதிகாரமாவதெடுத்துக்கொண்ட
வதிகார மிதுவாதலி னிச்சூத்திரத் ததிகரித்த பொருளிதுவென
அவ்வதிகாரத்தோடு பொருந்தவுரைக்கவேண்டுழியுரைத்தல். துணி
வாவதையுறக்கிடந்துழி யிதற்கிதுவே பொருளெனவுரைத்தல். ஏ
னையபொருள்விளங்கிக்கிடந்தன. இப்பதினான்குமிவ்வுரையுள் வ
ந்துழிவந்துழிக்காட்டுது மாங்காங்குணர்க. (உக)

(உஉ) கருத்துப்பதப்பொருள் காட்டுமூன்றினு - மவற்றொடு
வினாவிடை யாக்கலானுஞ் - சூத்திரத்துட்பொரு டோற்றுவகாண்
டிகை. *

(எ-ன்.)காண்டிகையுரையாமாறுணர்-ற்று. (ப-ரை.) கருத்து-க
ருத்துரையும், பதப்பொருள் - பதவுரையும், காட்டு - உதாரணமு
ம், மூன்றினும்- ஆகியமூன்றனையுஞ்சொல்லுதலானும், அவற்றொ
டு- அம்மூன்றனோடு, வினா- வினாவும்- விடை- உத்தரமும், ஆக்க
லானும்- ஆகிய விரண்டனையுங்கூட்டிச்சொல்லுதலானும், சூத்தி
ரத்துள்- சூத்திரத்துளிருக்கின்ற, பொருள் - பொருளை, தோற்
றுவ - காட்டுவன, காண்டிகை - காண்டிகையுரைகளாம். எ-று.

(பொ-ரை.) மேற்கூறிய பதினான்கினுட் கருத்துரையும், பதப்
பொருளும் உதாரணமுமாகிய மூன்றனையு முரைத்தலானும் அ
ம்மூன்றனோடு வினாவிடையென்னு மிரண்டனையுங் கூட்டியுரை
த்தலானுஞ் சூத்திரத்துட்பொருளை விளக்குவன காண்டிகையுரை
களாம். எ-று. (உஉ)

(உங) சூத்திரத்துட்பொரு ளன்றியுமாண்டைக் - கின்றியமை
யா தியாவையும்விளங்கத்- தன்னுரையானும் பிறநூலானு- மை
யமகலவைங் காண்டிகையுறுப்பொடு- மெய்யினையெஞ்சா திசை
ப்பதுவிருத்தி. *

(எ-ன்.) விருத்தியுரையாமாறுணர்-ற்று (ப-ரை.) சூத்திரத்து
ள் - சூத்திரத்துள்ள, பொருளன்றியும் - பொருளையல்லாமலும்,
ஆண்டைக்கு-அவ்விடங்களுக்கு, இன்றியமையாதியாவையும் - இ
ல்லாது நிறையாத வெல்லாப்பொருள்களும், விளங்க - விளங்கும்
படியாக, தன்னுரையானும் - தானுரைக்குமுரையாலும், பிறநூ
லானும் - ஆசிரியவசனங்களாலும், ஐங்காண்டிகையுறுப்பொடு-
முன்சொன்ன காண்டிகை யுரையின் அவயவமாகிய ஐந்தனாலும்,
ஐயமகல - சந்தேகந்தீர, மெய்யினை - மெய்ம்மைப்பொருளை, எ
ஞ்சாது - குறையாமல், இசைப்பது - விரித்துரைப்பது, விருத்
தி- விருத்தியுரையாகும். எ-று. (பொ-ரை.) காண்டிகையுரைபோ
ற் சூத்திரத்துட் பொருள் விளக்குதன் மாத்திரையினில்லாது அ
வ்விடங்கட் கின்றியமையாத பொருள்கள் யாவையும்விளங்கத் தா
னுரைக்குமுரையானும் ஆசிரியவசனங்களானுமேற்கூறிய காண்
டிகையுறுப்பைந்தனானும் ஐயந்தீரச் சுருங்காது மெய்ம்மைப்
பொருளை விரித்துரைப்பது விருத்தியுரையாம். எ-று. ❁ சூத்
திரத்துட் பொருளன்றியுமென்றமையான்மேற்கூறியபதினான்கு
உறுப்புங்கொண்டது விருத்தியுரை யென்பதுபெற்றாம். (உங)

(உச) பஞ்சிதன்சொல்லாப் பனுவலிழையாகச் - செஞ்சொ
ற்புலவனே சேயிழையா - வெஞ்சாத - கையேவாயாகக் கதிரோம
தியாக - மையிலா நூன்முடியு மாறு. *

(எ-ன்.) நூலென்னும்பெயர் வருமாறுணர்-ற்று. (ப-ரை.) இ
தன்சொல்- இதனதுசொல், பஞ்சா- பஞ்சாகவும், பனுவல்-செ
ய்யுள், இழையாக - இழையாகவும், செஞ்சொற்புலவன் - செவ்
வையாகிய சொற்களையறிந்தபுலவன், சேயிழையா- நூற்கின்ற
பெண்ணாகவும், எஞ்சாத- குறையாத, வாய் - வாய், கையாக- கை
யாகவும், மதி - அறிவு, கதிராக - கதிராகவும், மையிலா- குற்றமில்
லாத, நூல்- இந்நூலானது, முடியுமாறு - முடியும்வழி இதுவா
கும். எ-று. (பொ-ரை.) இந்த நூன்முடியுமா றிதுவாதலினா,

லென்றது உவமையாகுபெயராம். எ-று. (உச)

(உரு) உரத்தின்வளம்பெருக்கி யுள்ளியதீமைப்- புரத்தின்வள முருக்கிப் பொல்லா- மரத்தின்-கனக்கோட்டந்தீர்க்குநூ லஃதே போன்மாந்தர் - மனக்கோட்டந்தீர்க்குநூன் மாண்பு. *

(எ-ன்.) இதுவுமது. (ப-ரை.) புரத்தின்-உடம்பினுளிருக்கின்ற, உரத்தின்வளம்- அறிவின்வளத்தை, பெருக்கி-வளர்வித்து, உள்ளிய- நினைக்கப்பட்ட, தீமைவளம்- அறியாமையின்வளத்தை, முருக்கி- கெடுத்து, பொல்லாமரத்தின் - பொல்லாதமரத்தினது, கனக்கோட்டம்- கனம்பொருந்தியகோணலை, நூல் - எற்றுநூலானது, தீர்க்கும்- நீக்கும், அஃதேபோல் - அதுபோலவே, நூல் - கல்விநூலானது, மாந்தர் - மனிதரது, மனக்கோட்டம் - மனத்தினது கோணலை, தீர்க்கும்- நீக்கும், மாண்பு - அந்நூல்போலச் செப்பஞ்செய்யு மிம்மாட்சிமையாலும் நூலென்றது உவமவாகுபெயராம். எ-று. (பொ-ரை) அந்நூல்போற் செப்பஞ்செய்தலானு நூலென்றது உவமையாகுபெயராம். எ-று. ❁ புரத்தினதுரத்தின்வளம் பெருக்கியுள்ளியதீமை வளமுருக்கியெனக்கூட்டுக. புரம்-உடம்பு. உரம்-நெஞ்சு. பின்பு தீமைவளமென்றமையான் முன்பு நல்வளமெனத்தந்துரைக்க. நல்வளம் - அறிவு. தீமைவளம்- அறியாமை. (உரு)

(உசா) குலனருடெய்வங் கொள்கைமேன்மை - கலைபயிறெளிவு கட்டுரைவன்மை-நிலமலைநிறைகோன் மலர்நிகர்மாட்சியு - முலகியலறிவோ டுயர்குணமினையவு - மமைபவனூலுரை யாசிரியன்னே. *

(எ-ன்.) நிறுத்தமுறையானே ஆசிரியனதுவரலாறுணர்-ற்று. (ப-ரை.) குலன்-நல்லசாதியும், அருள்- கருணையும், தெய்வங்கொள்கை- கடவுள்வழிபாடும், மேன்மை - மேம்பாடும், கலைபயிறெளிவு- நூல்களிலேபழகியதெளிவும், கட்டுரைவன்மை-தொடுத்துச்சொல்லுகின்ற உரைவலிமையும், நிலமலைநிறைகோன்மலர்நிகர் - நிலத்தையும் மலையையுந் துலாக்கோலையும் மலரையும்நிகர்க்கின்ற, மாட்சியும் - குணங்களும், உலகியல்- உலகநடையை, அறிவு- அறியுமறிவும், உயர்குணம்- உயர்வாகியகுணங்கள், இனையவும்- இவைபோல்வனபிறவும், அமைபவன் - நிறைந்திருப்பவன், நூலுரையாசிரியன்- நூல்கற்பிக்கும் ஆசிரியனாவான். எ-று. (பொ-ரை.) இவ்வியல்பினை யுடையார்கற்பிக்கும் ஆசிரியராவார். எ-று. (உசா)

(உஎ) தெரிவரும்பெருமையுந் திண்மையும்பொறையும்- பருவமுயற்சி யளவிற்பயத்தலு- மருவியநன்னில மாண்பாகும்மே. *

(எ-ன்.) மேற்கூறியவுவமையை விரித்துணர்-ற்று. (ப-ரை.) தெரிவரும்பெருமையும்- பிறராலறியப்படாத உருவத்தின்பெருமை

யும், திண்மையும்-பெரியபாரஞ்செய்துதன்மேலேநெருங்கினவைகளாற்கலங்காதவலிமையும், பொறையும்-தன்னையடுத்தமனிதர்தோண்டுதலாதியாகிய குற்றங்களைச்செய்யினும் பொறுக்கின்ற பொறுமையும், பருவமுயற்சி யளவிற்பயத்தலும்- பருவத்திலேஉழவர்செய்கிறமுயர்ச்சியளவிற்குத்தக அவருக்குப்பயனைத்தருதலும், நன்னிலம்- நல்லநிலத்தினிடத்து, மருவிய-பொருந்திய, மாண்பாகும் குணங்களாகும். எ-று. (பொ-ள்.) நிலத்தினது மாட்சிமையிதுவாதலினிஃது உவமையாயிற்று. எ-று. (உஎ)

(உஅ) அளக்கலாகா வளவும்பொருளுந் - துளக்கலாகா நிலையுந் தோற்றமும்- வறப்பினும்வள ந்தரும் வண்மையுமலைக்கே. *

(எ-ன்.) இதுவுமது (ப-ள) அளக்கலாகாவளவும்-அளவுசெய்யப்படாததன்வடிவத்தினளவும், (அளக்கலாகாப்) பொருளும்- அளவுசெய்யப்படாதபலவகைப்பொருளும், துளக்கலாகா நிலையும்-எப்படிப்பட்டவலிமையுடையவராலும் அசைக்கப்படாத உருவத்தினிலையும், தோற்றமும்-நெடுந்தூரத்திலுள்ளாராலுங் காணப்படும் உயர்ச்சியும், வறப்பினும்வளந்தரும்வண்மையும் - மழைபெய்யாமல் வறந்த காலத்திலுந் தன்னைச்சேர்ந்த உயிர்களுக்குக் குளிர்ச்சியைக்கொடுக்கிற கொடையும், மலைக்கு- மலைக்குள்ள குணங்களாகும். எ-று. (பொ-ள.) மலையினதுமாட்சிமையிதுவாதலினிஃது உவமையாயிற்று. எ-று. (உஅ)

(உகூ) ஐயந்தீரப் பொருளையுணர்த்தலு - மெய்ந்நடுநிலையு மிகுநிறை கோற்கே. *

(எ-ன்.) இதுவுமது (ப-ள) ஐயந்தீரப் பொருளையுணர்த்தலும்-சந்தேகந்தீர நிறுக்கப்பட்டபண்டத்தினளவைக்காட்டலும், மெய்ந்நடுநிலையும்- உண்மை பெறத்தான் இரண்டு தட்டுகளுக்கும் நடுவேநிற்கையும், நிறைகோற்கு- தராசுகோலின்கண், மிகும்- குணங்களாகமிகும். எ-று. (பொ-ள) நிறைகோலினது மாட்சிமையிதுவாதலினிஃது உவமையாயிற்று. எ-று. (உகூ)

(௩ய) மங்கலமாகி யின்றியமையா - தியாவருமகிழ்ந்து மேற்கொளமெல்கிப்-பொழுதின்முகமலர் வுடையதுபூவே. *

(எ-ன்) இதுவுமது (ப-ள) மங்கலமாகி - சுபச்செய்கைக்குரியதாகி, இன்றியமையாது - யாதொருசெயலும் அலங்கரிக்குந்தானில்லாதுமுடியாததாக, யாவருமகிழ்ந்துமேற்கொள - கண்டோர் யாவருங்களித்துமேலாகத்தன்னைச் சூடிக்கொள்ள, மெல்கி - மெல்லியகுணமுடையதாகி, பொழுதின்முகமலர்வுடையது - மலர்தற்குரிய காலத்திலேமுகம் விரிதலையுடையது, பூ- பூவாகும். எ-று. (பொ-ள) மலரினதுமாட்சிமையிதுவாதலினிஃது உவமையாயிற்று. எ-று. ※ இவ்வுவமைகளினது மாட்சிமைபோலப் பொரு

ளினுந் மாட்சிமையும் விரித்துரைத்துக்கொள்க. (௫௰)

(௫௧) மொழிகுணமின்மையு மிழிகுணவியல்பு - மழுக்காறவா வஞ்ச மச்சமாடலுங் - கழற்குடமடற்பனை பருத்திக்குண்டிகை - முடத்தெங்கொப்பென முரண்கொள்சிந்தையு - முடையோரிலரா சிரியராகுதலே. *

(எ-ன்) ஆசிரியராகாரிவரெனவுணர்-ற்று. (ப-ரை) மொழிகுணமின்மையும்- பாடஞ்சொல்லுங் குணமில்லாமையையும், இழிகுணவியல்பும்- இழிகுணமாகியசுபாவத்தையும், அழுக்காறு- பிறருக்குவருங்கல்வியைக்குறித்துக்கொள்ளும் பொறாமையையும், அவா - பொருளின்மேலதிகமாகவைக்குமாசையையும், வஞ்சம்- மெய்ப்பொருளைமறைத்துப் பொய்ப்பொருளைக்காட்டி வஞ்சித்தலையும், அச்சமாடலும்- கேட்போர்க்கு அச்சமுண்டாகப் பேசுதலையும், கழற்குட மடற்பனை பருத்திக்குண்டிகை முடத்தெங்கு - கழற்குடமும் மடற்பனையும் பருத்திக்குண்டிகையும் முடத்தெங்கும் ஆகியநான்கனையும், ஒப்பென- ஒப்பென்றுசொல்ல, முரண்கொள்சிந்தையும்- மாறுபாடுகொண்டகருத்தையும், உடையோர்- தம்மிடத்திலுடையவர், ஆசிரியராகுதல்-கற்பிக்குமாசிரியராகுதல், இலர்-இலராவர். எ-று. (பொ-ரை) இக்குற்றங்களையுடையோர் கற்பிக்கும் ஆசிரியராகார். எ-று. (௫௧)

(௫௨) பெய்தமுறையன்றிப் பிறழவுடன்றருஞ் - செய்திகழற் பெய் குடத்தின்சீரே. *

(எ-ன்) மேற்கூறிய வுவமையை விரித்துணர்-ற்று. (ப-ரை) பெய்தமுறையன்றி - தன்னுள்ளேபோட்டமுறையினாலல்லாமல், பிறழ-முன்போடப்பட்டவையும் பின்போடப்பட்டவையும் அம்முறைபிறழ்ந்துபோக, உடன்றரும்- விரைவிலே தன்னுள்ளே கொண்ட கழற்காய்களைக் கொடுக்கின்ற, செய்தி - செய்கையானது, கழற்பெய்குடத்தின்சீர்- கழற்காய்போட்ட குடத்தினது குற்றமாம், எ-று. (பொ-ரை) கழற்பெய்தகுடத்தின் குற்றமிதுவாதலினிஃது உவமையாயிற்று. எ-று. (௫௨)

(௫௩) தானேதரக்கொளி னன்றித்தன்பால் - மேவிக்கொளக் கொடா விடத்ததுமடற்பனை. *

(எ-ன்) இதுவுமது (ப-ரை) தானேதர - தானேதன்னிடத்துள்ளபழங்களைத்தர, கொளினன்றி- கொண்டாற்கொள்ளலாமேயல்லாமல், தன்பான்மேவிக்கொள- ஒருவர்தன்னிடத்து நெருங்கிவந்துபறித்துக்கொள்ள, கொடாவிடத்தது - அப்பழங்களைக் கொடாதவிடத்தையுடையது, மடற்பனை- தன்வடிவமுழுதுமடல்விரிந்தபனை, எ-று. (பொ-ரை) மடற்பனையின் குற்றமிதுவாதலினிஃது உவமையாயிற்று. எ-று. (௫௩)

(ருச) அரிதிற்பெயக்கொண் டப்பொருடான்பிறர்க் - கெளிதீ
வில்லது பருத்திக்குண்டிகை. *

(எ-ன்) இதுவுமது. (ப-ரை) அரிதிற்பெயக்கொண்டு- பஞ்சை
க்கொண்டபோதும் வருத்தத்தோடுசிறிதுசிறிதாக அடைப்பத் த
ன்னுள்ளேகொண்டு, அப்பொருடான்பிறர்க்கெளிதீவில்லது- கொ
டுக்கும்போதும் அப்பஞ்சைத் தான்பிறர்க்கு எளிதிற்கொடாத
குற்றமுடையது, பருத்திக்குண்டிகை - பஞ்சுபோட்ட குடுக்கை
யாகும்.எ-று. (பொ-ரை) பருத்திபெய்தகுண்டிகையின் குற்றமி
துவாதலினிஃது உவமையாயிற்று. எ-று. (ருச)

(ருரு) பல்வகையுதவி வழிபடுபண்பி - னல்லோர்க்களிக்கு ம
துமுடத்தெங்கே. *

(எ-ன்) இதுவுமது. (ப-ரை) பல்வகையுதவி- நீர்விடுகை முத
லாகிய பலவகையுபகாரங்களையுஞ்செய்து, வழிபடுபண்பின்- தன
க்குவழிபாடுசெய்யுங்குணத்தினின்றும், அல்லோர்க்கு- அல்லாதபி
றருக்கு, அளிக்குமது - தன்னிடத்துள்ளகாய்களைத் தருங்குற்றமு
டையது, முடத்தெங்கு- வேலிக்கப்புறம்வளைந்ததென்னமரமாம்
எ-று. (பொ-ரை) மூடத்தெங்கினது குற்றமிதுவாதலினிஃது உ
வமையாயிற்று.எ-று. ❁ இவ்வுவமைகளின்குற்றம்போலப் பொ
ருளின் குற்றமும்விரித்துரைத்துக்கொள்க. (ருரு)

(ருசா) ஈதலியல்பே யியம்புங்காலைக் - காலமுமிடனும் வாலி
தினோக்கிச்- சிறந்துழியிருந்துதன் றெய்வம்வாழ்த்தி- யுரைக்கப்
படும்பொரு ளுள்ளத்தமைத்து - விரையான்வெகுளான் விரும்
பிமுகமலர்ந்து - கொள்வோன்கொள்வகை யறிந்தவனுளங்கொள
க்- கோட்டமின்மனத்தினூல் கொடுத்தலென்ப. *

(எ-ன்) நிறுத்தமுறையானே ஆசிரியன்கற்பிக்குமாறுணர்-ற்று
(ப-ரை) ஈதல்- பாடஞ்சொல்லுதலினது, இயல்பு-வரலாற்றை,இ
யம்புங்காலை- சொல்லும்போது, காலமும்-உரியகாலத்தையும், இ
டனும்- உரிய இடத்தையும், வாலிதின்- தூயனவாக,நோக்கி-பார்
த்து, சிறந்துழியிருந்து- சிறந்தவிடத்திருந்து, தன்றெய்வம்-தா
ன்வழிபடுகடவுளை, வாழ்த்தி- வாழ்த்துதல்செய்து,உரைக்கப்படும்
பொருள்-பாடஞ்சொல்லப்படும்பொருளை,உள்ளத்து-தன்கருத்தி
ன்கண், அமைத்து- நிறைத்து, விரையான்-விரையானாகியும், வெ
குளான்-கோபஞ்செய்யானாகியும், விரும்பி - இச்சித்து, முகமலர்
ந்து - முகமலர்ச்சியையடைந்து, கொள்வோன் - கேட்பவனது,
கொள்வகை- கேட்குமறிவின்வகையை, அறிந்து-உணர்ந்து, அவ
னுளம்- அவனதுமனம், கொள-ஏற்றுக்கொள்ள, கோட்டமில்-மா
றுபாடில்லாத, மனத்தின்- மனத்துடனே,நூல்- நூலை,கொடுத்தல்-

கொடுத்தலாகும், என்ப- என்றுசொல்லுவர்புலவர். எ-று. (பொ-ரை) கற்பிக்குமாறிவ்வாறெனச் சொல்லுவர்புலவர், எ-று. (௫௬)

(௫௭) தன்மகனாசான் மகனேமன்மகன்- பொருணனிகொடுப் போன் வழிபடுவோனே- யுரைகோளாளற் குரைப்பது நூலே.*

(எ-ன்) நிறுத்தமுறையானே மாணாக்கனதுவரலாறுணர்-ற்று. (ப-ரை) தன்மகன்-தன்புதல்வனுக்கும், ஆசான்மகன் - தன்னாசிரியன்புதல்வனுக்கும்,மன்மகன்- அரசன்புதல்வனுக்கும், பொருணனிகொடுப்போன் - பொருளைமிகுதியாகக்கொடுப்போனுக்கும், வழிபடுவோன் - வழிபாடுசெய்வோனுக்கும், உரைகோளாளற்கு - தன்னாற்சொல்லப்பட்ட உரையை விரைவிலேகற்கும் அறிவுடையோனுக்கும்,உரைப்பது-சொல்லப்படுவது,நூல்-நூலாகும். எ-று. (பொ-ரை) இவ்வறுவர்க்குஞ்சொல்லப்படுவதுநூல். எ-று,

(௫௮) அன்னமாவே மண்ணொடுகிளியே- யில்லிக்குடமா டெருமைநெய்யரி - யன்னர்தலையிடை- கடைமாணாக்கர். *

(எ-ன்) இதுவுமது. (ப-ரை) அன்னம்- அன்னத்தையும், ஆ- பசுவையும், (அன்னர்) - போல்வார், தலை (மாணாக்கர்) - முதன்மாணாக்கர், மண் - மண்ணையும், கிளி - கிளியையும், (அன்னர்) - போல்வார், இடை (மாணாக்கர்) - நடுமாணாக்கர், இல்லிக்குடம் பொள்ளற்குடத்தையும், ஆடு - ஆட்டையும், எருமை - எருமையையும், நெய்யரி - பன்னாடையையும், (அன்னர்) - போல்வார், கடைமாணாக்கர் - கடைமாணாக்கர். எ-று. (பொ-ரை) மேற்கூறிய வறுவருளன்னமும் பசுவும்போல்வார் தலைமாணாக்கர் மண்ணுங்கிளியும்போல்வார் இடைமாணாக்கர் இல்லிக்குடமும் ஆடும் எருமையும் நெய்யரியும்போல்வார் கடைமாணாக்கர். எ-று. ❊ இவ்வுவமைத்திறமும் பொருட்டிறமும் விரித்துரைத்துக்கொள்க. (௫௮)

(௫௯) களிமடிமானி காமிகள்வன் - பிணியனேழை பிணக்கன் சினத்தன் - றுயில்வோன்மந்தன் றொன்னூற்கஞ்சித் - தடுமாறுளத்தன் றறுகணன்பாவி- படிறனின்னோர்க்குப் பகரார்நூலே*

(எ-ன்) மாணாக்கராகாரிவரெனவுணர்-ற்று. (ப-ரை) களி- கட்குடியனும், மடி - சோம்பேறியும், மானி- அபிமானமுடையவனும், காமி- காமமுடையவனும், கள்வன் - திருடனும், பிணியன்-நோயாளியும்,ஏழை ஏழைமையுடையவனும், பிணக்கன்-பிணக்குடையவனும், சினத்தன்- கோபமுடையவனும்,துயில்வோன்- மிகத்தூங்குவோனும், மந்தன்- புத்திநுட்பமில்லாதவனும், தொன்னூற்கஞ்சித்தடுமாறுளத்தன் - பழையநூல்களைக்கண்டு அஞ்சித்தடுமாறுமுள்ளத்தையுடையவனும், தறுகணன்-அஞ்சத்தக்கவைகளை அஞ்சாதவனும், பாவி - பாவஞ்செய்வோனும், படிறன்-பொய்பேசுகிறவனும், இன்னோர்க்கு- ஆகிய இப்படிப்பட்டகுற்

றத்தையுடையவருக்கு, நூல் - நூலை, பகரார் - சொல்லார், எ-று. (பொ-ரை) இக்குற்றங்களையுடையார்க்கு நூலைச்சொல்லார் ஆசிரியர். எ-று. (௩௯)

(௪௰) கோடன்மரபே கூறுங்காலைப் - பொழுதொடுசென்று
வழிபடன்முனியான் - குணத்தொடுபழகி யவன்குறிப்பிற்சார்ந்-
திருவெனவிருந்து சொல்லெனச்சொல்லிப்-பருகுவனன்ன வா
ர்வத்தனாகிச்- சித்திரப்பாவையி னத்தகவடங்கிச் - செவிவாயாக
நெஞ்சுகளனாகக்- கேட்டவைகேட்டவை விடாதுளத்தமைத்துப்-
போவெனப்போத லென்மனார்புலவர். *

(எ-ன்) நிறுத்தமுறையானே மாணாக்கனூலைக்கற்குமாறுணர்-த்று. (ப-ரை) கோடன்மரபு- பாடங்கேட்கையினது வரலாற்றை, கூறுங்காலை- சொல்லும்பொழுது, பொழுதொடு - தகுங்காலத்தில், சென்று- போய், வழிபடல் - வழிபாடுசெய்தலில், முனியான்- வெறுப்பில்லாதவனாகி, குணத்தொடு- ஆசிரியன்குணத்தோடுபொருந்த, பழகி- பயின்று, அவன்குறிப்பின் - அவன்குறிப்பின்வழியிலே, சார்ந்து- சேர்ந்து, இருவென- இருவென்றுசொன்னபின், இருந்து- இருந்து, சொல்லென- படியென்றுசொன்னபின், சொல்லி- படித்து, பருகுவனன்ன-பசித்துண்பவனைப்போல, ஆர்வத்தனாகி - மிக்கவிருப்பத்தை யுடையவனாகி, சித்திரப்பாவையின்- சிததிரப்பாவையைப்போல, அத்தகவடங்கி - அவ்வசைவறுகுணத்தினோடடங்கி, செவி- காதானது, வாயாக - வாயாகவும், நெஞ்சு- மனமானது, களனாக- கொள்ளுமிடமாகவும், கேட்டவை - முன்கேட்கப்பட்டவற்றை, கேட்டு - திரும்பிக்கேட்டு, அவை - அப்பொருள்களை, விடாது- மறந்துவிடாமல், உளத்து - உளத்தின்கண், அமைத்து- நிறைத்துக்கொண்டு, போவென - போவென்றபின், போதல் - போகுதலாகும், என்மனார் - என்றுசொன்னார், புலவர் - புலவரானவர். எ-று. (பொ-ரை.) கற்குமாறிவ்வாறெனச்சொல்லுவர்புலவர். எ-று. (௪௰)

(௪௧) நூல்பயிலியல்பே நுவலின்வழக்கறிதல்-பாடம்போற்
றல் கேட்டவைநினைத்த - லாசாற்சார்ந்தவை யமைவரக்கேட்ட
லம்மாண்புடையோர் தம்மொடுபயிறல் - வினாதல்வினாயவை வி
டுத்தலென்றிவை,கடனாக்கொளினே மடநனிபிகக்கும். *

(எ-ன்) இதுவுமது. (ப-ரை) நூல்பயிலியல்பு - நூலைக்கற்றலினியல்பை - நுவலின்- சொல்லினால், வழக்கு- உலகவழக்குஞ்செய்யுள்வழக்குமாகிய இருவகைநடையையும், அறிதல் - ஆராய்ந்தறிதலும், பாடம்- கேட்டபாடத்தை, போற்றல் - பலகாற்சிந்தித்தலும், கேட்டவை- தான்கேட்டபொருள்களை, நினைத்தல் - எண்ணுதலும், ஆசான்- ஆசிரியனை, சார்ந்து- அடுத்து, அவை - அவற்றை.

அமைவர-குறைவுதீர, கேட்டல்- கேட்டலும், அம்மாண்பு-அக்கல்விமாட்சிமையை, உடையோர்தம்மொடு- உடையவரோடு, பயிறல்- பழகுதலும், வினாதல் - தான் ஐயுற்றபொருளை வினவுதலும், வினாயவைவிடுத்தல்- அவர்வினவியவைகளுக்கு உத்தரங்கொடுத்தலும், என்று- என்றுசொல்லப்பட்ட, இவை- இச்செயல்களை, கடனா- முறையாக, கொளின்- மாணாக்கன்கொண்டால், மடம்- அறியாமையானது, நனி - மிகவும், இகக்கும் - அவனைவிட்டு நீங்கும். எ-று. (பொ-ரை) இவ்வாறு நூலைப்பயின்றவர்க்கறியாமைமிகுதியும்போம். எ-று. (௬௧)

(௬௨) ஒருகுறிகேட்போ னிருகாற்கேட்பிற் - பெருகநூலிற் பிழைபாடிலனே. *

(எ-ன்) இதுவுமது. (ப-ரை) ஒருகுறி - ஒருதரம், கேட்போன்- ஒருநூலைப்பாடங்கேட்பவன், இருகால் - இரண்டுதரம், கேட்பின்- கேட்டானாயின், பிழைபாடு- அந்நூலிற்பிழைப்படுதல், பெருக- மிகுதியும், இலன்-இலனாவன். எ-று. (பொ-ரை) ஒருகாற்கேட்டு துணையானே யமையாது இருகாற்கேட்பானாகில் அந்நூலின்கட்பிழைபாடுமிகுதியுமிலன். எ-று. (௬௨)

(௬௩) முக்காற்கேட்பின் முறையறிந்துரைக்கும். *

(எ-ன்) இதுவுமது. (ப-ரை) முக்கால்-மூன்றுதரம், கேட்பின்- கேட்டானாயின், முறை - ஆசிரியன்கற்பித்த முறையை, அறிந்து- உணர்ந்து, உரைக்கும் - சொல்லுவான். எ-று. (பொ-ரை) முக்காற்கேட்டானாகில் ஆசிரியன்கற்பித்தமுறையறிந்துரைப்பன். எ-று.

(௬௪) ஆசானுரைத்த தமைவரக்கொளினுங் - காற்கூறல்லது பற்றலனாகும். *

(எ-ன்.) இதுவுமது. (ப-ரை) ஆசான்- ஆசிரியன், உரைத்தது- கற்பித்தபொருளை, அமைவர - தன்னறிவினிடத்துநிறைய, கொளினும்- கற்றானாயினும், காற்கூறல்லது- புலமைத்திறத்திற்காற்பங்கல்லது, பற்றலனாகும்-அதற்கதிகமாகப்பெறுதவனாவன். எ-று. (பொ-ரை) ஆசிரியன்கற்பித்தனவற்றைத் தன்னறிவின்கண் அமையக்கற்றானாகிலும் புலமைத்திறத்திற் காற்கூறல்லது பற்றான். எ-று. (௬௪)

(௬௫) அவ்வினையாளரொடு பயில்வகையொருகாற் - செவ்விதினுரைப்ப வவ்விருகாலு- மையறுபுலமை மாண்புடைத்தாகும் *

(எ-ன்.) இதுவுமது (ப-ரை) அவ்வினையாளரொடு - தன்போலியரோடு, பயில்வகை - பழகும்வகையால், ஒருகால் காற்கூறும், செவ்விதினுரைப்ப - தன்மாணாக்கருக்குஞ் சபையாருக்கும் உணரவிரித்துரைத்தலால், அவ்விருகாலும் - அரைக்கூறுமாக, மையறு - குற்றமற்ற, புலமை- புலமையானது, மாண்புடைத்

தாரும்-நிரம்புதலுடைத்தாகும். எ-று. (பொ-ரை) தன்போலிய ரோடுபயிலும்வகையாற் காற்கூறு மக்கல்வியைத் தன்மாணாக்கர்க்கும் அவைக்களத்தோர்க்கு முணரவிரித்துரைத்தலா னலாககூறு மாகக் குற்றமற்றபுலமை நிரம்பும். எ-று. (௪௫)

(௪௬) அழலினீங்கா னணுகானஞ்சி - நிழலினீங்கா னிறைந்த நெஞ்சமோ - டெத்திறத்தாசா னுவக்குமத்திற - மறத்திற்றிரியாப் படர்ச்சிவழிபாடே. *

(எ-ன்) இதுவுமது. (ப-ரை) அழலின்- குளிர்காய்வோன்விட்டுநீங்காமலும் நெருங்காமலும் இருக்கின்ற நெருப்பைப்போல ஆசிரியனைநினைத்து, அஞ்சி- அச்சமுற்று, நீங்கான் - விட்டுநீங்கானாகியும், அணுகான்- நெருங்கானாகியுமிருந்து, நிழலின்-விடாது பின்செல்லுநிழலைப்போல, நீங்கான்- தொடர்ந்துசென்று, நிறைந்தநெஞ்சமோடு - நிறைந்தகருத்துடனே, எத்திறத்து - எத்தன்மையினாலே, ஆசான் - ஆசிரியனானவன், உவக்கும் - மகிழ்வான், அத்திறம் - அத்தன்மையோடுபொருந்தி, அறத்தின் - அறத்தினின்றும், திரியா- வேறுபடாத, படர்ச்சி- நடத்தலானது, வழிபாடு - மாணாக்கன்செய்யும் வழிபாடாகும். எ-று. (பொ-ரை) இவ்வாறொழுகுதல் வழிபாடாம். எ-று. (௪௬)

(௪௭) ஆக்கியோன்பெயரே வழியேயெல்லை - நூற்பெயர்யாப்பே நுதலியபொருளே - கேட்போர்பயனோ டாயெண்பொருளும்- வாய்ப்பக்காட்டல் பாயிரத்தியல்பே. *

(எ-ன்) பாயிரம் பொதுச்சிறப்பென மேனிறுத்த முறையானே மலர்தலையுலகி னென்றற்றொடக்கத்தனவாயெல்லா நூற்கண்ணும்வருஞ் சிறப்புப்பாயிரங்களினது பொதுவிலக்கண முணர்-ற்று. இதனையும் பொதுப்பாயிரத்துட்கூறினார் பொது வைந்தனு ணான்முகத்தின திலக்கணமாதலி னென்க. (ப-ரை) ஆக்கியோன்பெயர்- நூல்செய்தோன்பெயரும், வழி- நூல்வந்தவழியும், எல்லை-நூல்வழங்குநிலமும், நூற்பெயர்- நூலினது பெயரும், யாப்பு இந்நூல்முடிந்தபின்பு இந்நூல்கேட்கத் தகுமென்னு மியைபும், நுதலியபொருள்- நூலிற்சொல்லப்பட்டபொருளும், கேட்போர் - இந்நூல்கேட்டற்குரிய வதிகாரிகளிவரென்பதும், பயன் - நூல்கேட்கையாற் பெறப்படும்பயனும், ஆயெண்பொருளும்- ஆகியவெட்டுப்பொருளையும், வாய்ப்பக்காட்டல்- விளங்கவுணர்த்துதல், பாயிரத்து - சிறப்புப்பாயிரத்தினது, இயல்பு - இலக்கணமாம். எ-று. (பொ-ரை) இவ்வெட்டுப் பொருளையும் விளங்கவுணர்த்துவது சிறப்புப்பாயிரத்திலக்கணமாம். எ-று. ❁ ஆக்கியோன்பெயரே யென்றற்றொடக்கத்தனவற்றுட் சிறப்பென்பது

தோன்றினமையிற் பாயிரமென வாளாகூறினரெங்க. (௪௭)

(௪௮) காலங்களனே காரணமென்றிம் - மூவகையேற்றி மொழிநருமுளரே. *

(எ-ன்) இதுவுமது. (ப-ரை) காலம் - நூல்செய்தார்காலமும், களன் - நூலரங்கேற்றியசபையும், காரணம் - நூல்செய்தற்குக்காரணமும், என்று - என்று, இம்மூவகை - இம்மூன்றனையும், ஏற்றி - அவ்வெட்டனோடுகூட்டி, மொழிநரும் - பதினொன்றாகச்சொல்லுவாரும், உளர் - சிலருளர். எ-று. (பொ-ரை) அவ்வெட்டனோடு இம்மூன்றனையுங்கூட்டிப் பதினொன்றாகக் கூறுவாருமுளர். எ-று.

(௪௯) முதனூல்கருத்த னளவுமிகுதி - பொருள்செய்வித்தோன் றன்மைமுதனிமித்தினு - மிடுகுறியானு நூற் கெய்தும்பெயரே. *

(எ-ன்) மேற்கூறிய பதினொன்றனு ணூற்பெயர்க்குச் சிறப்புவிதியுணர்-ற்று. (ப-ரை) முதனூல் - முதனூலும், கருத்தன் - செய்தவனும், அளவு - அளவும், மிகுதி - மிகுதியும், பொருள் - பொருளும், செய்வித்தோன் - செய்வித்தவனும், தன்மை - குணமும், முதல் - முதலாகிய, நிமித்தினும் - காரணங்களாலும், இடுகுறியானும் - இடுகுறியாலும், நூற்கு - நூலுக்கு, பெயர் - பெயரானது, எய்தும் - வரும். எ-று. (பொ-ரை) முதனூன்முதற்றன்மையீறாகக்கூறியவேழும் பிறவுமாகிய காரணங்களானும் இடுகுறியானு நூற்குப்பெயர்வரும். எ-று. (வரலாறு.) முதனூலாற் பெயர்பெற்றன ஆரியப்படலம் பாரதமுதலாயின. கருத்தனாற் பெயர்பெற்றன அகத்தியந்தொல்காப்பியமுதலாயின. அளவினாற் பெயர்பெற்றன பன்னிருபடலம் நாலடிநானூறுமுதலாயின. மிகுதியாற் பெயர்பெற்றன களவியன் முதலாயின. பொருளாற் பெயர்பெற்றன அகப்பொருண் முதலாயின. செய்வித்தோனாற் பெயர்பெற்றன சாதவாகன முதலாயின. தன்மையாற் பெயர்பெற்றன சிந்தாமணி நன்னூன்முதலாயின. இடுகுறியாற் பெயர்பெற்றன நிகண்டு கலைக்கோட்டுத்தண்டு முதலாயின. பிறவுமன்ன. (௪௯)

(௫௰) தொகுத்தல்விரித்த றொகைவிரி மொழிபெயர்ப் - பெனத்தகுநூல்யாப் பீரிரண்டென்ப. *

(எ-ன்) வழியின்வகையாகிய நூல்யாப்பினுக்குச் சிறப்புவிதியுணர்-ற்று. (ப-ரை) தொகுத்தல் - விரிந்துகிடக்கின்றவைகளைத் தொகுத்துச்சொல்லுதலும், விரித்தல் - சுருங்கிக்கிடக்கின்றவைகளைவிரித்துச்சொல்லுதலும், தொகைவிரி - தொகுத்தும் விரித்துஞ்சொல்லுதலும், மொழிபெயர்ப்பு - பதினெண்மொழியுளொன்றனுளிருக்கின்றபொருளை மற்றொன்றுள்ளே திருப்பிச்சொல்லுதலும், எனத்தகும் - என்றுசொல்லத்தகும், ஈரிரண்டு - நான்குபி

ரிணவயுடைத்தாகும், நூல்யாப்பு- நூல்யாப்பானது, எண்ப- என்றுசொல்லுவர்புலவர். எ-று. (பொ-ரை) நூல்யாப்பு, இந்நான்குகூற்றதாமென்றுசொல்லுவர்புலவர். எ-று. ❀ வெண்பாமுதலியயாப்பினோடு இவற்றிற்குவேற்றுமைதோன்ற நூல்யாப்பென்றார். ()

(௫௧) தன்னாசிரியன் றன்னொடுகற்றோன் - றன்மாணாக்கன் றகுமுரைகாரனென்- றின்னோர்பாயிர மியம்புதல்கடனே. *

(எ-ன்) இவ்விலக்கணங்களையுடைய சிறப்புப்பாயிரங் கூறுதற்குரியா ரிவரெனவுணர்-ற்று. (ப-ரை) தன்னாசிரியன்- தன்னுடைய ஆசிரியனும், தன்னொடுகற்றோன்- தன்னோடுபாடங்கேட்டவனும், தன்மாணாக்கன்- தன்னுடையமாணாக்கனும், தகுமுரைகாரன்- தன்னூலுக்குத் தகுமுரையைச்செய்தவனும், என்று- என்றுசொல்லப்பட்ட, இன்னோர்- இந்நால்வருளொருவர், பாயிரம்- சிறப்புப்பாயிரத்தை, இயம்புதல்- சொல்லுதல், கடன்- முறைமையாகும். எ-று. (பொ-ரை) ஒருவன்கூறிய நூற்கு இந்நால்வரு ளொருவர் சிறப்புப்பாயிரங் கூறுதன்முறைமையாம். எ-று. (௫௧)

(௫௨) தோன்றாதோற்றித் துறைபலமுடிப்பினுந்- தான்றற்புகழ்தல் றகுதியன்றே. *

(எ-ன்) சிறப்புப்பாயிரம் பிறர்கூறுதற்குக் காரணமுணர்-ற்று. (ப-ரை) தோன்றா- தோன்றாத நுட்பங்களெல்லாம், தோற்றி- காட்டி, துறைபல- பலதுறைப்பட்டு விரிந்தநூலை, முடிப்பினும்- செய்துமுடித்தாலும், தான்- தானே, தற்புகழ்தல்- தன்னைப்புகழ்ந்துகொள்ளுதல், தகுதியன்று- தகுதியன்றாம். எ-று. (பொ-ரை) தோன்றாத நுட்பங்களையெல்லாந் தோற்றிப் பலதுறைப்பட்டுவிரிந்தநூலைச்செய்து முடித்தானாயினுந் தன்னைத்தான்புகழ்த றகுதியன்றாமாதலி னூல்செய்தானதுபுகழாகிய சிறப்புப்பாயிரத்தைப்பிறர்கூறவேண்டும். எ-று. (௫௨)

(௫௩) மன்னுடைமன்றத் தோலைத்தூக்கினுந்- தன்னுடையாற்ற லுணரா ரிடையினு- மன்னியவவையிடை வெல்லுறுபொழுதினுந்- தன்னைமறுதலை பழித்தகாலையுந்- தன்னைப்புகழ்தலுந் தகும்புலவோர்க்கே. *

(எ-ன்) தற்புகழ்ச்சியு மொரோவழிக்குற்ற மன்றென்பதுணர்-ற்று. (ப-ரை) மன்னுடைமன்றத்து- அரசனது சபைக்கெழுதும், ஓலைத்தூக்கினும்- சீட்டுக்கவியிலும், தன்னுடையாற்றலுணராரிடையினும்- தனதுவலிமையை யறியாதாரிடத்திலும், மன்னியவவையிடை வெல்லுறுபொழுதினும்- பெரியசபையில் வாதஞ்செய்துவெல்லும்பொழுதும், தன்னைமறுதலை பழித்தகாலையும்- தன்னையெதிரிபழித்தகாலத்திலும், தன்னைப்புகழ்தலும்- தன்னைத்தான்புகழ்ந்து கொள்ளலும், புலவோர்க்கு- புலவனுக்கு, தகும்-

தரும். எ-று. (பொ-ரை) இவ்விடங்களாயிற் றன்னைப்புகழ்தலுந் தகுதியாம் புலவோர்க்கு. எ-று. ❁ புகழ்தலுமென்றவும்மையானிவ்விடங்களினுந் தன்னைப்புகழாமையே தகுதியென்பது பெற்றாம். (௫௩)

(௫௪) ஆயிரமுகத்தா னகன்றதாயினும் - பாயிரமில்லது பனுவலன்றே. *

(எ-ன்) இருவகைப்பாயிரங்களு நூற்கின்றியமையாதன வென்பதுணர்-ற்று. (ப-ரை) ஆயிரமுகத்தான் - ஆயிரமுறுப்புக்களால், அகன்றதாயினும் - விரிந்ததாயினும், பாயிரமில்லது - பாயிரமில்லாதது, பனுவலன்று - நூலன்றாகும், எ-று. (பொ-ரை) ஆயிரமுறுப்புக்களான் விரிந்தநூலாயினும் பாயிரமில்லாதது நூலன்று. எ-று. (௫௪)

(௫௫) மாடக்குச் சித்திரமு மாநகர்க்குக் கோபுரமு - மாடமைத்தோ ணல்லார்க் கணியும்போ-னாடிமு - னைதுரையா நின்ற வணிந்துரையை யெந்நூற்கும் - பெய்துரையா வைத்தார் பெரிது *

(எ-ன்) மேற்பாயிரமில்லது பனுவலன்றென்றாரஃதன்றாதற்குக்காரணமுணர்-ற்று. (ப-ரை) மாடக்கு - மாளிகைக்கு, சித்திரமும் - ஓவியமும், மாநகர்க்கு - பெரியபட்டணத்திற்கு, கோபுரமும் - சிகரியும், ஆடு - நாட்டியஞ்செய்கின்ற, அமை - மூங்கில் போன்ற, தோள் - தோள்களையுடைய, நல்லார்க்கு - மங்கையருக்கு, அணியும்போல் - ஆபரணமும்போல, நாடி - நினைத்து, ஐது - அழகியபொருளை, உரையாநின்ற - சொல்லுகின்ற, அணிந்துரையை - இருவகைப்பாயிரங்களையும் - உரையா - உரைத்து, எந்நூற்கும் - எவ்வகைப்பட்டபெரியநூலுக்கும், முன் - முன்னே, பெய்து - சேர்த்து, வைத்தார் - ஆசிரியர்வைத்தார் - பெரிது - மிகவும், எ-று. (பொ-ரை) அறிவுடையோர்மாடமுதலிய மூன்றற்குஞ் சித்திரமுதலிய மூன்றும்போலக் கருதி யழகிதாகிய பொருளையுணர்த்தாநின்ற இருவகைப்பாயிரங்களையுமுரைத் தெவ்வகைப்பட்ட பெரியநூல்கட்கு முன்னர்ப்பெய்துவைத்தார் பெரும்பாலுமாதலிற் பாயிரமில்லதுபனுவலன்றாம். எ-று. (௫௫)

பொதுப்பாயிர முற்றிற்று.

முதலாவது

எழுத்ததிகாரம்.

எழுத்ததிகாரம் - என்பது, எழுத்தினததிகாரத்தையுடையதென அன்மொழித்தொகையாய்ப் படலத்திற்குக் காரணக்குறியாயிற்று. எழுத்தென்றது - அகரமுதனகரவிறுவாய்க்கிடந்த முதலெழுத்துமுப்பதும், உயிர்மெய்ம்முதலிய சார்பெழுத்துப் பத்துமாம். அவற்றிற் கெழுத்தென்னுங்குறி, மொழிமுதற் காரணமென்னுஞ்சூத்திரத்தாலோதுபவாகலின் ஈண்டெதிரதுபோற்றியாளப்பட்டது. அதிகாரம் - அதிகரித்தல். அஃதிருவகைப்படும். அவற்றுள் ஒன்று, வேந்தனிருந்துழியிருந்து தன்னிலமுழுவதுந் தன்னாணையி னடப்பச்செய்வதுபோல, ஒருசொன்னின்றுழிநின்று பலசூத்திரங்களும் பல ஓத்துக்களுந் தன்பொருளே நுதலிவரச்செய்வது. ஒன்று, சென்றுநடாத்துந் தண்டத்தலைவர்போல ஓரிடத்துநின்றசொல் பலசூத்திரங்களோடுஞ் சென்றியைந்து தன்பொருளைப்பயப்பிப்பது. இவற்றிற்குமுறையே வடநூலார் எதோத்தேசபக்கமெனவும், காரியகாலபக்கமெனவுங்கூறுப. இதுசேனாவரையருரையானுமுணர்க. அவற்றுள் ஈண்டதிகாரமென்றதுமுன்னையது. அதனையுடையதெனவே, எழுத்தைநுதலிவரும்பல ஓத்தினதுதொகுதி எழுத்ததிகாரமென்றாராயிற்று. எழுத்தினது அதிகாரத்தையுடையதென்புழி ஆறுவதுவினைமுதற்பொருண்மையின்கண்வந்தகாரகம். இப்படலத்துள்விதிக்கப்படுவனவெல்லாங் கருவியுஞ் செய்கையுமென இருவகைப்படும், அவற்றுட்கருவி - எழுத்தியல்பதவியலென்னு மிரண்டோத்தானும், செய்கை உயிரீற்றுப் புணரியன்முதலிய மூன்றோத்தானுங்கூறப்படும். கருவிபொதுவுஞ்சிறப்புமென இருவகைத்து. முதலிரண்டோத்தினுங் கூறப்படுவனபொதுக்கருவி. உயிரீற்றுப்புணரியன்முதற்கட் புணர்ச்சி இன்னதெனக் கூறப்படுவனவும், உருபுபுணரியலினிறுதிக்கட் சாரியைத்தோற்றங்கூறப்படுவனவுஞ் செய்கையொன்றற்கே யுரியகருவியாகலிற் சிறப்புக்கருவி.

எ ழு த் தி ய ல்.

(௫௬) பூமலியசோகின் புனைநிழலமர்ந்த - நான்முகற்றொழு
துநன் கியம்புவனெழுத்தே.

(எ-ன்) கடவுள்வணக்கமும் அதிகாரமுமுணர்-ற்று. (ப-ரை)
பூ- பூக்களானவை, மலி - நிறைந்த, அசோகின் - அசோகமரத்தி
னது, புனை- அலங்கரிக்கும், நிழல்- நிழலின்கண், அமர்ந்த - எழு
ந்தருளியிருந்த, நான்முகன்- நான்குதிருமுகங்களையுடையகடவு
ளை, தொழுது- வணங்கி, நன்கு- நன்றாக, இயம்புவன்- சொல்லு
வன், எழுத்து- எழுத்திலக்கணத்தை, எ-று. (பொ-ரை) பூக்கண்
மலிந்த அசோகமரத்தின தலங்கரிக்கு நிழலின்கண் எழுந்தருளி
யிருந்த நான்குதிருமுகங்களையுடைய கடவுளைவணங்கி நன்றாகச்
சொல்லுவ னெழுத்திலக்கணத்தை, எ-று. ❁ எல்லாநூலுமங்கல
மொழிமுதல் வகுத்துக்கூற வேண்டுதலிற் பூமலியென்றும் எல்
லாச் சமயத்தோராலும் வணங்கப்படும் படைப்புமுதலிய வைந்
தொழிற்குமுரிய வெல்லாக்கடவுளாகியுநின் றொருவனே யென்
பார் அருகனை நான்முகனென்றுங்கூறினர். இவ்வாறு வள்ளுவநா
யனாரும்—"மலர்மிசையேகினான் மாணடிசேர்ந்தார் - நிலமிசை
நீடுவாழ்வார்,,—என வரையாது கூறுதல்காண்க. எழுத்தென்ப
தாகுபெயர். ஏகாரம் - ஈற்றசை. எல்லாம் வல்லகடவுளை வணங்
கலான் இனிதுமுடியுமென்பதுகருதி நன்கியம்புவனென்றுபுகு
ந்தமையின் இது- நுதலிப்புகுதலென்னுமுத்தி. (௧)

(௫௭) எண்பெயர்முறைபிறப் புருவமாத்திரை - முதலீறி
டைநிலை போலியென்றா - பதம்புணர்பெனப்பன் னிருபாற்ற
துவே.

(என்) அவ்வெழுத் திலக்கணம் இத்துணைத்தென்ப துணர்-ற்
று. (ப-ரை) எண்- எழுத்தினெண்ணும், பெயர்- பெயரும், மு
றை- முறையும், பிறப்பு- பிறப்பும், உருவம் - வடிவமும், மாத்தி
ரை- அளவும், முத(னிலை) - முதனிலையும், ஈறு(நிலை) - கடைநிலையு
ம், இடைநிலை- இடைநிலையும், போலி- போலியும், பதம்- பதமு
ம், புணர்பு-புணர்ச்சியும், என- என்று, பன்னிருபாற்று- பன்னி
ருபகுதியினையுடைத்தாகும், அது- அவ்வெழுத்திலக்கணம், எ-று.
(பொ-ரை) இப்பன்னிருபகுதியினையு முடைத்து அவ்வெழுத்தி
லக்கணம் எ-று. ❁ என்றாவென்பது எண்ணிடைச்சொல். இச்
சூத்திரம் தொகுத்துச்சுட்டலென்னுமுத்தி. மேல்வருவனவெல்
லாம் வகுத்துக்காட்டல். (௨)

(௫௮) மொழிமுதற்காரண மாமணுத்திரளொலி - யெழுத்
தது முதல்சார் பெனவிருவகைத்தே.

(எ-ன்) பன்னிருபாற்றதுவே யென்றவற்றுள் எழுத்தின் அகத்திலக்கணமாகிய பத்தையும் ஓரியலாகவும் அதன்புறத்திலக்கணமாகிய பதப்புணர்பென்னு மிரண்டனுள் அவ்வெழுத்தாகும்பதத்தை ஓரியலாகவும் அப்பதம்புணரும்புணர்ப்பைமூன்றியலாகவும் ஓத்துமுறைவைப்பென்னுமுத்தியான் வைக்கப்புகுந்து முதற்கண்வைத்த எழுத்தியலின் எழுத்தின தெண்ணினை நிறுத்தமுறையானுணர்த்துவான்றொடங்கியெழுத்து இன்னதென்பதூஉம் அதன்வகையுமுணர்-ற்று, (ப-ரை) மொழி - சொல்லுக்கு முதற்காரணமாம்-ஆதிகாரணமாகிவருகின்ற, அணுத்திரள்-அணுத்திரளின்காரியமாகிய, ஒலி- ஒலியாவது, எழுத்து- எழுத்தாகும், அது- அவ்வெழுத்து, முத(லென) - முதலெழுத்தென்றும், சார்பென-சார்பெழுத்தென்றும், இருவகைத்து இரண்டுவகையினையுடைத்தாகும், எ-று. (பொ-ரை) மொழிக்கு முதற்காரணமாய் அணுத்திரளின் காரியமாய் வருமொலியாவதெழுத்து அது முதலெழுத்தென்றும் சார்பெழுத்தென்றும் இருவகையினை யுடைத்து எ-று ※ எனவேமொழிக்குமுதற்காரணமெழுத்தானாற்போலஎழுத்திற்கு முதற்காரணம் அணுத்திரளென்பதுபெற்றாம். ஆமென்னும் பெயரெச்சம் ஒலியென்னும் பெயரொடுமுடிந்தது. முற்குவிளை முதலியவற்றிற்கு முதற்காரணமா யணுத்திரளின் காரியமாய்வருமொலியெழுத்தாகாமையின் மொழிமுதற்காரணமாமொலியென்றார். இதலதுநீர்வாய்ச்சிறுதுகளாற்பெரும்புற்றுருவமைந்தபெற்றியதென்ன ஐம்புலப்பேருருவைந்துமமைந்தணுவா லிப்பரிச்சமைவதியாவருமறிதலின், அநாதிகாரணமாகிய மாயையின யீண்டுக்கூறாது ஆதிகாரணமாகிய செவிப்புலனாமணுத்திரளையெழுத்திற்கு முதற்காரணமென்றார். இவ்வாசிரியர்க்கு மாயையுடன்பாடன்று. அணுத்திரளொன்றுமே துணிவெனிற் பிறிதொடுபடாஅன்றன்மதங்கொளலென்னு மதப்படக் கூறினாரென்றுணர்க. ஈண்டணுவென்ற தொலியினது நுட்பத்தை. (௧)

(௫௮) உயிருமுடம்புமா முப்பதுமுதலே. ※

(எ-ன்) முதலெழுத்தின்விரியுணர்-ற்று, (ப-ரை) உயிரும்-ஆவியும், உடம்பும் - மெய்யும், ஆம்- ஆகும்; முப்பதும் - முப்பதெழுத்தும்; முதல் - முதலெழுத்தாகும், எ-று. (பொ-ரை) உயிருமுடம்புமாகு முப்பதெழுத்தும் முதலெழுத்தாம். எ-று. (௨)

(௫௯) உயிர்மெய்யாய்த முயிரளபொற்றள பஃகிய இ உ ஐ
ஔ மஃகான் - றனிநிலைபத்துஞ் சார்பெழுத்தாகும். ※

(எ-ன்) சார்பெழுத்தின்விரியுணர்-ற்று, (ப-ரை) உயிர்மெய்- உயிர்மெய்யும், ஆய்தம்- ஆய்தமும்; உயிரளபு - உயிரளபெடையு

ம், ஒற்றளபு- ஒற்றளபெடையும், (அஃகிய) இ- குற்றியலிகரமும் (அஃகிய) உ- குற்றியலுகரமும், (அஃகிய)ஐ- ஐகாரக்குறுக்கமும்- (அஃகிய)ஔ- ஔகாரக்குறுக்கமும், (அஃகிய)மஃகான்-மகரக்குறுக்கமும், (அஃகிய)தனிநிலை- ஆய்தக்குறுக்கமும், பத்தும் ஆகியபத்தும், சார்பெழுத்தாகும். சார்பெழுத்தாகும், (எ-று) (பொ-ரை) இப்பத்துஞ்சார்பெழுத்தாம். எ-று. ※ அஃகுதல்-சுருங்குதல். தனிநிலை- ஆய்தம். உயிர்களோடு மெய்களோடுங் கூடியுங்கூடாதுடம்பிபோலத்தனிநிற்றலிற்றனிநிலையெனப்படும் உயிர்மெய்-உயிருமெய்யுங்கூடிப்பிறத்தலானும் ஆய்தம்உயிர்போல "அற்றாலளவறிந்துண்க வஃதுடம்பு - பெற்றானெடிதுய்க்குமாறு,,என. அலகுபெற்றும். மெய்போல "தோன்றிற்புகழொடுதோன்றுக வஃதிலார்- தோன்றலிற் றோன்றாமை நன்று,,—என அலகுபெறாதும் ஒருபுடையொத்து அவற்றினிடையே சார்ந்துவருதலானும் ஏனைய தத்தமுதலெழுத்தின் றிரிபுவிகாரத்தாற் பிறத்தலானுஞ்சார்பெழுத்தாயின வெனக்கொள்க. அவ்வாறன்றி உயிர்மெய்யாழிந்தன அகரமுதலியனபோற் றனித்தானுங் ககரமுதலியனபோல அகரமொடு சிவணியானுமியங்கு மியல்பின்றியொருமொழியைச்சார்ந்துவருதலே தமக்கிலக்கணமாக வுடைமையிற் சார்பெழுத்தாயினவெனக் கோடலுமாமென்க. இனி ஆசிரியர் தொல்காப்பியர் செய்கை ஒன்றினையுநோக்கிச்சார்பெழுத்துமூன்றெனக்கருவிசெய்தாராகலின் இவ்வாசிரியர்செய்கையுஞ்செய்யுளியலுநோக்கிச் சார்பெழுத்துப்பத்தெனக்கருவிசெய்தா ரென்பதுமுய்த்துணர்க. (௫)

(௬௧) உயிர்மெய்யிரட்டுநூற் றெட்டுயராய்த- மெட்டுயிரளபெழு மூன்றொற்றளபெடை- யாறேழஃகு மிம்முப்பானே- ழுகரமாறு றைகான்மூன்றே- யௌகானொன்றே மஃகான்மூன்றே- யாய்தமிரண்டொடு சார்பெழுத்துறுவிரி-யொன்றொழிமூந்நூற் றெழுபானென்ப. *

(எ-ன்)இதுவுமது (ப-ரை) உயிர்மெய்-உயிர்மெய், இரட்டுநூற்றெட்டு - இருநூற்றுப்பதினாறு, உயராய்தம் - குறுகாதவாய்தம், எட்டு- எட்டு, உயிரளபு- உயிரளபெடை, எழுமூன்று, இருபத்தொன்று, ஒற்றளபெடை - ஒற்றளபெடை, ஆறேழ்- நாற்பத்திரண்டு, அஃகுமி- குற்றியலிகரம், முப்பானேழ் - முப்பத்தேழு, (அஃகு) முகரம் குற்றியலுகரம், ஆறாறு- முப்பத்தாறு. (அஃகு) ஐகான்-ஐகாரக்குறுக்கம், மூன்று-மூன்று, (அஃகு) மௌகான்- ஔகாரக்குறுக்கம், ஒன்று- ஒன்று, (அஃகு) மஃகான்-மகரக்குறுக்கம், மூன்று-மூன்று, (அஃகு) மாய்தம் - ஆய்தக்குறுக்கம், இரண்டொடு - இரண்டுடனே, சார்பெழுத்து - சார்பெழு

த்தினது, உறுவிரி- மிகுந்தவிரி, ஒன்றொழிமுந்நூற்றெழுபான்-
மூந்நூற்றறுபத்தொன்பதாம், என்ப - என்றுசொல்லுவர் புலவ
ர். எ - று. (பொ-ரை) உயிர்மெய்யிருநூற்றுப்பதினாறு குறுகா
தவாய்தமெட்டு உயிரளபெடையிருபத்தொன்று ஒற்றளபெடை
நாற்பத்திரண்டு குற்றியலிகரமுப்பத்தேழு குற்றியலுகரமுப்ப
த்தாறு ஐகாரக்குறுக்கமூன்று ஔகாரக்குறுக்கமொன்று மகரக்
குறுக்கமூன்று ஆய்தக்குறுக்கமிரண்டுடனே சார்பெழுத்தினது
மிகுந்தவிரி முந்நூற்றறுபத்தொன்பதாமென்று சொல்லுவர்
புலவர். எ-று. ❁ இவையித்துணையவாதல் பிறப்பதிகாரத்துட்கா
ண்க. இவ்வாறு உயிர்மெய்யொழிந்தனவற்றையும் விரித்தரோன்
னெறியென்பாரென்பவென்றார். (௬)

(௬௨) இடுகுறிகாரணப் பெயர்பொதுச்சிறப்பின. *

(எ-ன்) நிறுத்தமுறையானே யெழுத்தின்பெயராமாறுணர்த்
துவான்றொடங்கிப்பெயர்க்கெல்லாம் பொதுவிலக்கணமுணர்-த்
று. (ப-ரை.) இடுகுறிகாரணப்பெயர் - இடுகுறிப்பெயருங் கா
ரணப்பெயருமாகிய விரண்டும், பொதுச்சிறப்பின - பலபொ
ருளுக்குப் பொதுப்பெயராகியும் ஒருபொருளுக்குச் சிறப்புப்
பெயராகியும் வருவனவாம். எ-று. (பொ-ரை) இடுகுறிப்பெய
ருங் காரணப்பெயருமாகியவிரண்டும் பலபொருட்குப் பொது
ப்பெயராயு மொருபொருட்குச் சிறப்புப்பெயராயும் வருவன
வாம். எ-று. ❁ ஒருபொருளைக்குறித்தற்குக் கடவுளானுமறிவு
டையோரானு மிட்டகுறியாகியபெயர் இடுகுறிப்பெயர். கார
ணத்தான்வரும்பெயர் காரணப்பெயர். [உதாரணம்.] மரம் எ
ன்பது இடுகுறிப்பொதுப்பெயர். பனை என்பது இடுகுறிச்சிறப்
புப்பெயர். அணி என்பது காரணப்பொதுப்பெயர். முடி என்
பது காரணச்சிறப்புப்பெயர். இனி இரட்டுறமொழிதலென்னு
முத்தியா னிச்சூத்திரத்திற்கு இடுகுறியென்றுங் காரணமென்று
ஞ்சொல்லப்படுமிலக்கணங்களையுடையபெயர்கள் இடுகுறிகாரண
மென்னும் இரண்டற்கும் பொதுவாயும் இடுகுறிக்கே சிறப்பா
யுங் காரணத்திற்கேசிறப்பாயும் வருவனவாமென்றும் பொருளு
ரைத்துக்கொள்க. [உ-ம்.] பரம் என்பதிடுகுறிப்பெயர். பரமன்
என்பதுகாரணப்பெயர். முக்கணன் அந்தணன் மறவன் முள்ளி
கறங்கு மொழி சொல் என்பன காரணவிடுகுறிப்பெயர். இவை
காரணவிடுகுறியாயதென்னையெனின் இவற்றுள் முக்கணனென்
னும்பெயர் யானைமுகக்கடவுள் முதலியோர்க்கு மூன்றுகண்ணு
ளவாகலிற்காரணங்கருதியவழி மூன்றுகண்ணினையுடையோர் பல
ர்க்குஞ்செறலானுங்காரணங்கருதாதவழி இடுகுறிமாத்திரையாயயா

யைப் பரமனுக்கேசேறலானுங் காரணவிடுகுறியாயிற்று. ஏனைப் பெயர்கட்கு மிவ்வாறேகாண்க. இவ்வாறேவடநூலார் இடுகுறியை ரூடியென்றுங் காரணத்தையோகமென்றுங் காரணவிடுகுறியை யோகரூடியென்றும் வழங்குப. இவ்விலக்கணத்தானெழுத்தினதுபெயரும் பிறபெயரும் வருமாறுகாண்க. (௭)

(௬௩) அம்முதலீரா றாவிகம்முதன் - மெய்ம்மூவாறென விளம்பினர்புலவர். *

(எ-ன்) ஒருசாரெழுத்தினது பெயராமாறுணர்- ற்று (ப-ரை) அம்முதல் - அகரமுதலாகிய, ஈராறு - பன்னிரண்டனையும், ஆவி (யென) ஆவியென்றும், கம்முதல் - ககரமுதலாகிய, மூவாறு-பதினெட்டனையும், மெய்யென- மெய்யென்றும், விளம்பினர் - சொன்னார், புலவர்-அறிவுடையோர். எ-று. (பொ-ரை) அகரமுதல் ஔகாரமீறாகக்கிடந்தபன்னிரண்டனையும் ஆவியென்றுங் ககரமுதனகரமீறாகக்கிடந்த பதினெட்டனையும் மெய்யென்றும் நூல்களாற்சொன்னார் அறிவுடையோர். எ-று ❋ கடவுளால் ஆவிமெய்யென்றமைத்த பெயர்க்காரண முயிர்களான்முற்றுமுணர்தற்கருமையுங் கடவுணூலுணர்ந்தோர் வழிச்செல்லுந் தமது பெருமையுந்தோன்ற விளம்பினர் புலவரென்றார். ஆவியுமெய்யும்போறலின் இவ்விருவகையெழுத்திற்கும் ஆவிமெய்யெனவுவமவாகுபெயராய்க்காரணப்பொதுப்பெயராயின. ஏனையவுமிவ்வாறேகாண்க. (௮)

(௬௪) அவற்றுள், அ இ உ எ ஒ க்குறிலைந்தே. *

(எ-ன்) இதுவுமது. (ப-ரை) அவற்றுள் - ஆவிமெய்யென்றவற்றுள், அ இ உ எ ஒ-அ இ உ எ ஒ என்கிற, ஐந்து -ஐந்தும், குறில்-குற்றெழுத்தாம், எ-று. (பொ-ரை) ஆவி மெய்யென்றவற்றுள் இவ்வைந்துங்குற்றெழுத்தாம். எ-று. (௯)

(௬௫) ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஔ நெடில். *

(எ-ன்) இதுவுமது. (ப-ரை) ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஔ - ஆ ஈ ஊ ஏ ஐ ஓ ஔ என்கிறவேழும், நெடில் - நெட்டெழுத்தாம். எ-று. (பொ-ரை) இவ்வேழுநெட்டெழுத்தாம். எ-று. (௰)

(௬௬) அ இ உம்முதற் றனிவரிற்சுட்டே. *

(எ-ன்.) இதுவுமது. (ப-ரை) அ இ உ - அ இ உ என்கிற மூன்றும், முதல் - சொல்லுக்குமுதலில், தனி - தனித்து, வரின்- சுட்டுப்பொருளைக்காட்டவந்தால், சுட்டு - சுட்டெழுத்தாம். எ-று. (பொ-ரை) இம்மூன்றெழுத்துமொழிக்குப்புறத்துமகத்து முதற்கட்டனித்துச்சுட்டுப்பொருளுணர்த்தவரிற்சுட்டெழுத்தாம். எ-று ❋ முதலிலெனப்பொதுப்படக் கூறினமையிற் புறத்து மகத்து மென்பதுபெற்றாம். [உ-ம்] அக்கொற்றன் - இக்கொற்றன்- உக்

கொற்றன் (எ-ம்) அவன் - இவன் - உவன் (எ-ம்) வரும். அவனெ ன்பதன்கண் அகரம் அறமென்பதன்கண் அகரம்போலப் பின்னெழுத்துகளோடு தொடர்ந்து நின்றொருபொருளை புணர்த்தாது மலையனென்பதன்கட்பகுதிபோல வேறுநின்றுசுட்டுப் பொருளுணர்த்தலின் அகத்துவருமிதனையுந்தனிவரினென்றார். இவ்வுரை விளுவிற்குங்கொள்க. (௰௧)

(சூ௭) எ யா முதலும் ஆ ஓ வீற்றும் - ஏ யிருவழியும் வினாவாகும்மே. *

(எ-ன்.) இதுவுமது, (ப-ரை) எ யா - எகரமும்யாவும், முதலும்- சொல்லுக்குமுதலிலும், ஆ ஓ - ஆகாரமும் ஓகாரமும், ஈற்றும்-சொல்லுக்கு ஈற்றிலும், ஏ - ஏ கா ர ம், இருவழியும் - அவ்விரண்டிடத்திலும், (தனிவரின்)-தனித்துவினாப்பொருளைக் காட்டவந்தால், வினாவாகும் - வினாவெழுத்தாகும். எ-று. (பொ-ரை) புறத்துமகத்துமொழிமுதற்கண் எகரமும்யாவும் ஈற்றின்கண் ஆகாரமும் ஓகாரமும் இவ்விரண்டிடத்தினும் ஏகாரமும் தனித்துவினாப்பொருளுணர்த்தவரின்வினாவெழுத்தாம். எ - று. ❊ மேற்றனிவரினென்றதனைமீண்டுங்கூட்டுக. இவைபுறத்துமகத்தும்வருதலேற்றபெற்றிகொள்க. ஒன்றினமுடித்த றன்னின முடித்தலென்னுமுத்தியான் யாவினாவையுமுடன்கூறினார் [உ-ம்] எக்கொற்றன்-எவன் யாவன்- என முதற்கண்வந்தன. கொற்றனா - கொற்றனோ - எனவீற்றின்கண்வந்தன. ஏவன் - கொற்றனே - எனவிரிடத்தும்வந்தது எனப்பெயர் வினைகளோடுமேற்ற பெற்றியொட்டிக்கொள்க. (௰௨)

(சூ௮) வல்லினங்கசடதபறவெனவாறே. *

(எ-ன்.) இதுவுமது. (ப-ரை,)வல்லினம்- வல்லெழுத்துகள், கசடதபறவென - கசடதபறவென்று, ஆறு- ஆறும், எ-று.(பொ-ரை) இவ்வாறும்வல்லினமாம். எ-று. (௰௩)

(சூ௯) மெல்லினம்ஙஞணநமனவெனவாறே. *

(எ-ன்) இதுவுமது, (ப-ரை) மெல்லினம்-மெல்லெழுத்துகள், ஙஞணநமனவென - ஙஞணநமனவென்று, ஆறு-ஆறும், எ-று. (பொ-ரை) இவ்வாறும் மெல்லினமாம், எ-று. (௰௪)

(௰) இடையினம்யரலவழளவெனவாறே. ❊

(எ-ன்,) இதுவுமது. (ப-ரை.) இடையினம்-இடையெழுத்துகள், யரலவழளவென - யரலவழளவென்று, ஆறு- ஆறும், எ-று. (பொ-ரை) இவ்வாறுமிடையினமாம். எ-று. (௰௫)

(௰௧) ஐ ஔ இ உச் செறியமுதலெழுத் - திவ்விரண்டோரின மாய்வரன்முறையே. *

(எ-ன்,) இதுவுமது. (ப-ரை.) ஐ ஔ - இணையில்லாத ஐகார

ஒளகாரங்கள், இஉ - ஈகார ஊகாரங்களுக்கு இனமாகிய இகர உகரங்களை, செறிய - தமக்குமினமாகப்பொருந்த, முதலெழுத்து - முதலெழுத்துகளானவை, இவ்விரண்டு - இரண்டிரண்டு, ஓரினமாய் - ஓரினமாகி, வரல்- வருதல், முறை - முறையாதலால் அவை இனவெழுத்தென்றும்பெயர்பெறும். எ-று. (பொ-ரை) இனமில்லாத ஐகார ஒளகாரங்கள் ஈகார ஊகாரங்கட்கினமாகிய இகர உகரங்களைத்தமக்கு மினமாகப் பொருந்த முதலெழுத்துகளிவ்விரண்டோரினமாய்வருதன் முறையாதலால் அவையினவெழுத்தென்றும்பெயரவாம் எ-று. (யசு)

(எஉ) தானமுயற்சி யளவுபொருள்வடி - வானவொன்றுதி யோர் புடையொப்பினமே. *

(எ-ன்,) மேல் இனமென்றதற்குக் காரணமுணர்-ற்று. (ப-ரை) தானம்- பிறப்பிடமும், முயற்சி- தொழிலும், அளவு -மாத்திரையும், பொருள் - பொருளும், வடிவு - உருவமும், ஆன - ஆகிய விவற்றுள், ஒன்றுதி - ஒன்றுமுதலாக, ஓர்புடையொப்பு - ஒருபுடையொத்தலால், இனம் - இனமாம். எ-று, (பொ-ரை) தானமுதலியவிவற்று ளொன்றுமுதலாக வொருபுடையொத்தலா லினமாம், எ-று. ❁தானம்உரமுதலியன. முயற்சி-இதழ்முயற்சிமுதலியன. அளவு-மாத்திரை. பொருள் பாலன் விருத்தனுற்போலக் குறிலினதுவிகாரமே நெடிலாதலினிரண்டற்கும் பொருளொன்றென்று முதனூலானியமிக்கப்பட்டபொருள். வடிவு ஒலிவடிவு வரிவடிவு இவற்றுளொன்றும்பலவுமொத்து இனமாய்வருதல் கண்டுகொள்க. சார்பெழுத்திற்குப்பெயர் கூறுதொழிந்தார் ஆய்தந் தனிநிலையாதலானும் ஏனைச்சார்பெழுத்திற்குச் சுட்டுவினுவென்று விதந்தோதினவையொழிந்த முதலெழுத்தின்பெயரே பெயராயடங்குதலானுமென்க. இச்சூத்திரம் ஏதுவின்முடித்தலென்னுமுத்தி. (யஎ)

(எரு) சிறப்பினு மினத்தினுஞ் செறிந்தீண் டம்முத - னடத்தருமே முறையாகும்மே. *

(எ-ன்) நிறுத்தமுறையாமே முறையாமாறுணர்-ற்று. (ப-ரை) சிறப்பினும் - சிறப்பினலும், இனத்தினும் - இனத்தினலும், செறிந்து- பொருந்தி, ஈண்டு- இவ்வுலகத்தில், அம்முதல்- அகரமுதலாக, நடத்தருமே - வழங்குதலே, முறையாகும்- எழுத்துகளது முறையாம், எ-று. (பொ-ரை) சிறப்பினனும் இனத்தினனும் பொருந்தி இவ்வுலகத்து அகரமுதலாக வழங்குதருமே யெழுத்தினது முறையாம். எ-று. ❁ குறிலினதுவிகாரமே நெடிலாதலாற் குறில்முன்னிற்றலிற் சிறப்பினென்றும் நெடிலினமாய்ப் பின்னிற்றலின் இனத்தினென்றும் நாதமாத்திரையா யெல்லாவெழுத்தி

ற்குங்காரணமாய் முன்னிற்றலின் அம்முதலென்றும் எல்லாவெழு
த்திற்கும்வைத்த முறைக்காரணமுயிர்களான் முற்றுமுணர்தலா
காமையின் நடத்தருனேயென்றுங்கூறினார். அங்ஙனமாயினும் நெ
டுங்கணக்கினுள் அகரமுதல் னகரவிறுவாய்க் கிடக்கை முறையாத
ற்குக்காரணமும் ஒருவாறுகாட்டுதும்.

அகரமுதலிய பன்னீருயிருந் தனித்தியங்குமாற்ற லுடைமை
யானுங் ககரமுதலிய பதினெட்டுமெய்யும் அகரத்தோடுகூடியல்
லதியங்குமாற்றல் இன்மையானும் அச்சிறப்புஞ் சிறப்பின்மையு
நோக்கி உயிர்முன்னும் மெய்பின்னுமாக வைக்கப்பட்டன. இனி
உயிர்களுள் அ இ உ என்பனமுறையேஅங்காந்துகூறுமுயற்சியா
னும் அவ்வங்காப்போ டண்பல்லடிநாவிளிம்புறக்கூறு முயற்சி
யானும் அவ்வங்காப்போ டிதழ்குவித்துக் கூறுமுயற்சியானும் பி
றத்தலான் அப்பிறப்பிடத்துமுறையே முறையாக வைக்கப்பட்ட
ன. ஆகார ஈகார ஊகாரங்கள் அகரமுதலியவற்றிற்கு இனமாதலி
ன் அவற்றைச்சாரவைக்கப்பட்டன. இனி எகரமாவது அகரக்கூ
றும் இகரக்கூறுந் தம்முளொத்திசைத்து நரமடங்கல்போனிற்
பதோன்றுகலானும் ஒகரமாவது அகரக்கூறும் உகரக்கூறுந்தம்
முளொத்திசைத்து அவ்வாறுநிற்பதோன்றுகலானும் அவையவற்
றின்பின்முறையேவைக்கப்பட்டன. ஏகார ஓகாரங்கள் இனமாதலி
ன் அவற்றின்பின்முறையேவைக்கப்பட்டன. அகரமும் யகரமும்
இகரமுந் தம்முளொத்திசைத்து நிற்பதோன்றுகலின் எகரஏகார
ங்களின்பின்னர்ஐகாரமும்அகரமும்வகரமும்உகரமுந்தம்முளொ
த்திசைத்து நிற்பதோன்றுகலின் ஒகர ஓகாரங்களின்பின்னர் ஔ
காரமும் வைக்கப்பட்டன. இவ்வாறுதல் பற்றி எ ஓ ஐ ஔ என்
னு நான்கினையும் வடநூலார் சந்தியக்கரமென்பர். கையடனார்ந
ரமடங்கல்போலென்றுவமையுங்கூறினார். இக்கருத்தேபற்றிஆசி
ரியர். "அம் முனிகரம்யகரமென்றிவை- யெய்தினையொத்திசைக்கு
மவ்வோ- டுவ்வும்வவ்வுமௌவோரன்ன" என்றார். இவ்வாறே ஆசி
ரியர் தொல்காப்பியரும் "அகரவிகர மைகாரமாகும்" "அகர வு
கரமௌகாரமாகும்" எனக்கூறி ஐயென்னு நெட்டெழுத்தின்வ
டிவு புலப்படுதற்கு அகரஇகரங்களே யன்றிஅவற்றிடையே யக
ரமும் ஒத்திசைக்குமென்பார் "அகரத் திம்பர் யகரப்புள்ளியு-
மையெனெடுஞ்சினை மெய்பெறத்தோன்றும்" என்றும்மெய்
பெறவென்ற விலேசானே ஔவென்னு நெட்டெழுத்தின்வடிவு
புலப்படுதற்கு அகரஉகரங்களேயுமன்றி அவற்றிடையே வகரமு
மொத்திசைக்குமென்றும் இம்பரும்பரென்றாற்போல்வன கால
வகை இடவகைகளான்மயங்குமாகலின் இவற்றின் முதற்கணிம்ப

தியாதோ இறுதிக்கணிற்பதியாதோ வென்னுமைய நீக்குதற்கு
"இகரமும் யகரமு மிறுதிவிரவும்.,, என்றுங்கூறினர். மொழிந்த
பொருளோ டொன்றவவ்வயின்மொழியாததனையு முட்டின்றமு
டித்தலென்னுமுத்தியான் எகரஏகாரங்கள் ஒகரஓகாரங்கள் அவ்வா
றுதலுங்கொள்ள வைத்தார். மாபாடியத்துள் ஊகாரத்தின் பின்
னின்ற வடவெழுத்து நான்குயிர்க்குமிடையே ரகர லகரக்கூறுக
ளொத்து நிற்குமென்ற ஆசிரியர் பதஞ்சலியார்க்குஐ ஔ வென்
பழியு மிடையே யகர வகரக்கூறுகள் விரவிநிற்குமென்பது உட
ம்பாடாதல்பெற்றாம். எகரமுதலியவற்றுள் அகரக்கூறு குறையு
ம் இகர உகரக்கூறுகண் மிகுதியுமாமெனவுமுணர்க, இதுவுமா
பாடியத்திற்கண்டது. ஈண்டுக்கூறியவாற்றானே அகரமுயிரெழு
த்துகளினுங் கலந்துநிற்குமாறறிக. இனிமெய்களுள் வலியாரைமு
ன்வைத்து மெலியாரைப் பின்வைத்தன் மரபாகலின் அச்சிறப்பு
நோக்கி வல்லெழுத்துகண்மூன்றும் அவ்வவற்றிற் கினமொத்த
மெல்லெழுத்துகள் அவ்வவற்றின்பின்னுமாக வைக்கப்பட்டன.
அவ்விரண்டுநோக்கியல்ல திடைநிகரனவாயொலித்த லறியப்படா
மையினதுபற்றி யிடைபெழுத்துகளவ்விருகூற்றிற்கும் பின்வைக்
கப்பட்டன. ஒருவாற்றானொத்தலு மொருவாற்றான்வேறுதலு மு
டைமைபற்றியன்றே யினமென்று வழங்கப்படுவது. அவற்றுள்
இடையெழுத்தாறு மிடப்பிறப்பானொத்தலு முயற்சிப்பிறப்பா
ன் வேறுதலுமுடைமையின் இடைக்கணமென வோரினமாயின.
உயிர்க்கணம் வன்கணம் மென்கணமென்பவற்றிற்கும் இஃதொ
க்கும். இனிக்கஙக்களுஞ் சஞக்களும் டணக்களும் தநக்களும் ப
மக்களும் அடிநாவண்ணம் இடைநாவண்ணம் நுனிநாவண்ணம்அ
ண்பல்லடியிதழென்னு மிவற்றின்முயற்சியாற்பிறத்தலான்அப்பி
றப்பிடத்துமுறையேமுறையாகவைக்கப்பட்டன. ய ர ல வக்களு
ன்குமுறையே அடியண்ணமும் இடையண்ணமும் அண்பன்முத
லும் இதழுமென்னு மிவற்றின்முயற்சியாற் பிறத்தலான் அப்பிற
ப்பிடத்து முறையேமுறையாக வைக்கப்பட்டன. ழகார றகாரன
காரங்கண் மூன்றுந் தமிழெழுத்தென்ப தறிவித்தற்கு இறுதிக்க
ண் வைக்கப்பட்டன. அவற்றுள்ளும் ழகர மிடையெழுத்தாகலின்
அதுபற்றியிடையெழுத்தோடு சார்த்தியவற்றிறுதிக்கண் வைக்க
ப்பட்டது. வடமொழியின் லகரம் ளகரமாகவும் உச்சரிக்கப் படு
வதன்றித் தனியே ஓரெழுத்தன்மையின் அச்சிறப்பின்மைபற்றி
யிடையெழுத்தாகிய ளகரம் ழகரத்திற்கும்பின் வைக்கப்பட்டது.
இவ்வாறே உயிருள்ளும் எகர ஒகரங்கள் ஒருவாற்றாற் சிறப்பெழு
த்தாயினும் பிராகிருதமொழியிற் பயின்றுவருதலானுஞ் சாமவே
தமுடையாருள் ஒருசாராரிசைபற்றிக் [illegible]

டோதுபவ கலானுமிறுதிக்கண்வையாதுமுறைபற்றி ஏகார ஒகா
ரங்களின் முன்வைக்கப் பட்டன. ஆகையான் முறையாமாறிவை
யென வுய்த்துணர்ந்துகொள்க. இவ்வாறு உலகத்தும் பிறப்பொ
த்தல் பற்றிஇய யினமென்று வழங்குபவாகலின் ஈண்டினத்தினு
மென்றதற்குப் பிறகாரணங்களுமுளவேனும் பெரும்பான்மையு
ம் பிறப்பொத்தலேஇனமென்றுகொள்க. (௰௮)

(௭௪) நிறையுயிர்முயற்சியி னுள்வளிதுரப்ப - வெழுமணுத்
திரளுரங் கண்டமுச்சி-மூக்குற்றிதழ்நாப் பல்லணத்தொழிலின்
வெவ்வேறெழுத்தொலி யாய்வரல்பிறப்பே. *

(எ-ன்) நிறுத்தமுறையானே பிறப்பாமாறுணர்த்துவான்றொ
டங்கியதன்பொதுவிதியுணர்-ற்று. (ப-ரை) நிறை - ஒலியெழு
த்திற்குவேண்டுங்காரணங்களிற் குறைவின்றிநிறைந்த, உயிர் - உ
யிரினது, முயற்சியின் - முயற்சியால், உள் - உள்ளேநின்ற, வளி -
காற்றானது, துரப்ப - எழுப்ப, எழும் - எழுகின்ற, அணுத்திர
ள் - செவிப்புலனாமணுக்கூட்டம், உரம் - மார்பும், கண்டம் - கழுத்
தும், உச்சி - தலையும், மூக்கு - நாசியும் ஆகியநான்கிடத்தையும்,
உற்று - பொருந்தி, இதழ் - உதடும், நா - நாக்கும், பல் - பல்லு
ம், அணம் - மேல்வாயும் ஆகியநான்கனுடைய, தொழிலின் - முய
ற்சிகளால், வெவ்வேறு - வேறுவேறு, எழுத்து - எழுத்தாகிய, ஒ
லியாய் - ஓசைகளாய், வரல் - தோன்றுதல், பிறப்பு - அவற்றின்
பிறப்பாம். எ-று- (பொ-ரை) ஒலியெழுத்தாகிய காரியத்திற்கு,
வேண்டுங் காரணங்களினொருவாற்றானுங் குறைவின்றி நிறைந்தவு
யிரினது முயற்சியாலுண்ணின்றவளி யெழுப்பவெழுஞ் செவிப்
புலனாமணுத்திரள் உரமுதலியநான்கிடத்தையும்பொருந்தியிதழ்
முதலிய நான்கின்றொழில்களால் வெவ்வேறெழுத்தாகிய வொலிக
ளாய்த் தோன்றுதல் அவற்றின்பிறப்பாம். எ-று. (௰௯)

(௭௫) அவ்வழி, ஆவியிடைமை யிடமிடறாகு - மேவுமென்மை
மூக் குரம்பெறும்வன்மை. *

(எ-ன்) முதலெழுத்துகட்கிடம் வகுத்துணர்-ற்று. (ப-ரை) அ
வ்வழி - முன்சொன்னவழியாற் பிறக்குமிடத்து, ஆவி - உயிரெழு
த்துகளுக்கும், இடைமை - இடையினத்திற்கும், இடம் - இடம், மி
டறாகும் - கழுத்தாகும். மென்மை - மெல்லினம், மூக்கு - நாசியை,
மேவும் - இடமாகப்பொருந்தும், வன்மை - வல்லினம், உரம் - மார்
பை, பெறும் - இடமாகப்பெறும். எ-று. (பொ-ரை) மேற்கூ
றியநெறியாற்பிறக்குங்கால்ஆவியிடையினமென்னுமிருவகையெ
ழுத்தினிடமிடறாம் மெல்லின மூக்கையிடமாகப்பொருந்தும்
வல்லினநெஞ்சையிடமாகப்பெறும். எ-று. (௨௰)

(௭௬) அவற்றுள், முயற்சியுள் அ ஆ வங்காப்புடைய. *

(எ-ன்) முதலெழுத்துட்சிலவற்றிற்கு முயற்சிவகையாற் பிறப்புணர்-ற்று. (ப-ரை) அவற்றுள்-மேலிடம்வகுத்தமுதலெழுத்துகளுள், அ ஆ - அ ஆ இரண்டும், முயற்சியுள் - நால்வகை முயற்சியுள், அங்காப்புடைய-அண்ணத்தின்றொழிலாகிய அங்காத்தலையுடையனவாய்ப்பிறக்கும். எ-று (பொ-ரை) மேலிடம்வகுக்கப்பட்ட முதலெழுத்துகளுள் அகரஆகாரங்களுநால்வகை முயற்சியுளண்ணத்தின்றொழிலாகியவங்காத்தலையுடையவாய்ப்பிறக்கும். எ-று.

(௭௭) இ ஈ எ ஏ ஐ யங்காப்போ - டண்பன்முதனா விளிம்புற
வருமே. *

(எ-ன்) இதுவுமது. (ப-ரை) இ ஈ எ ஏ ஐ-இ ஈ எ ஏ ஐ ஐந்தும், அங்காப்போடு- அங்காப்புடனே, அண்பல்- அண்பல்லை, நாமுதல்- நாக்கடியினது, விளிம்பு- ஓரமானது, உற - பொருந்த, வரும்- பிறக்கும், எ-று. (பொ-ரை) இவ்வைந்தெழுத்துமங்காப்புடனேயண்பல்லையடிநாவிளிம்பு பொருந்தப்பிறக்கும், எ-று. (௨௨)

(௭௮) உ ஊ ஒ ஓ ஔ விதழ்குவிவே. *

(எ-ன்) இதுவுமது. (ப-ரை) உ ஊ ஒ ஓ ஔ- உ ஊ ஒ ஓ ஔ ஐந்தும் பிறத்தற்கேதுவாகியமுயற்சி, இதழ்குவிவு-உதடுகளின்குவிதலாம், எ-று. (பொ-ரை) இவ்வைந்தெழுத்தும் பிறத்தற்கேதுவாகியமுயற்சியிதழ்குவிவாம். எ-று. (௨௩)

(௭௯) கஙவுஞ்சஞவும் டணவுமுதலிடை - நுனிநாவண்ண
முற முறைவருமே. *

(எ-ன்) இதுவுமது. (ப-ரை) கங- கவ்வும் ஙவ்வும், (நா) முதல்- நாக்கினடி, (அண்ண முதல்)- மேல்வாயடியையும், சஞ- சவ்வும் ஞவ்வும், (நா) இடை- நாக்கினடு (அண்ணவிடை)-மேல்வாய்நடுவையும், டண- டவ்வும் ணவ்வும், நா நுனி- நாக்கின்கடை, அண்ண (நுனி)-மேல்வாய்க்கடையையும், உற- பொருந்த, முறை- இம்முறையே, வரும்-பிறக்கும், எ-று. (பொ-ரை) கவ்வும் ஙவ்வும் முதனா முதலண்ணத்தையும் சவ்வும் ஞவ்வும் இடைநாவிடையண்ணத்தையும் டவ்வும்ணவ்வும் நுனிநா நுனியண்ணத்தையும் பொருந்தவிம்முறையேபிறக்கும்- எ-று. (௨௪)

(௮௰) அண்பல்லடிநா முடியுறத்தநவரும். *

(எ-ன்) இதுவுமது. (ப-ரை) அண்பல்-அண்பல்லினது, அடி- அடியை, நாமுடி- நாக்குநுனி, உற- பொருந்த, தந - தவ்வும்நவ்வும், வரும் - பிறக்கும். எ-று. (பொ-ரை) அண்பல்லடியை நாநுனிபொருந்தத் தவ்வும் நவ்வும் பிறக்கும். எ-று. (௨௫)

(௮௧) மீகீழிதழுறப் பம்மப்பிறக்கும். *

(எ-ன்) இதுவுமது. (ப-ரை) மீ (யிதழ்) மேலுதடும், கீழிதழ்-கீழுதடும், உற- பொருந்த, பம்ம- பவ்வும் மவ்வும், பிறக்கும்- பிற

க்கும். எ-று. (பொ-ள்) மேலிதழுங் கீழிதழும் பொருந்தப் பவ்வும் மவ்வும் பிறக்கும். எ-று. (௨௬)

(௮௨) அடிநாவடியண முறயத்தோன்றும். *

(எ-ன்) இதுவுமது. (ப-ரை) நாவடி - நாக்கினடியானது, அணவடி-மேல்வாயடியை, உற - பொருந்த, ய - யகரமானது, தோன்றும் - பிறக்கும். எ-று. (பொ-ள்) அடிநாவடியண்ணத்தைப் பொருந்த யகரம்பிறக்கும். எ-று. (௨௭)

(௮௩) அண்ணநுனிநா வருடரழவரும். *

(எ-ன்) இதுவுமது. (ப-ரை) அண்ண (நுனி)-மேல்வாய்க்கடையை, நாநுனி - நாக்குநுனியானது, வருட - தடவ, ரழ - ரவ்வும் ழவ்வும், வரும் - பிறக்கும். எ-று. (பொ-ள்) அண்ணத்தை நுனிநாத் தடவ ரவ்வும் ழவ்வும் பிறக்கும். எ-று. (௨௮)

(௮௪) அண்பன்முதலு மண்ணமுமுறையி- னுவிளிம்புவீங்கி யொற்றவும்வருடவும்- லகாரளகாரமா யிரண்டும்பிறக்கும். *

(எ-ன்) இதுவுமது. (ப-ரை) அண்பன்முதல்-அண்பல்லடியை, நாவிளிம்பு - நாவோரமானது, வீங்கி - தடித்து, ஒற்ற - நெருங்க, லகார (மாய்) - லகாரமாகியும், அண்ணம் - மேல்வாயை, (நாவிளிம்பு) - நாவோரமானது, வருட - தடவ, ளகாரமாய் - ளகாரமாகியும், இரண்டும் - இரண்டெழுத்துகளும், முறை - இம்முறையே, பிறக்கும் - பிறக்கும். எ-று. (பொ-ள்) அண்பன்முதலை நாவிளிம்புவீங்கியொற்ற லகாரமாகியும்அண்ணத்தை நாவிளிம்புவீங்கிவருடளகாரமாகியும் இவ்விரண்டெழுத்தும் பிறக்கும் எ-று. (௨௯)

(௮௫) மேற்பல்லிதழுற மேவிடும்வவ்வே. *

(எ-ன்) இதுவுமது. (ப-ரை) மேற்பல் - மேற்பல்லானது, இதழ் - கீழுதட்டை, உற - பொருந்த, வ - வகரமானது, மேவிடும் - பிறக்கும். எ-று. (பொ-ள்) மேற்பல்கீழிதழைப்பொருந்தவகரம் பிறக்கும். எ-று. (௩௰)

(௮௬) அண்ணநுனிநா நனியுறிற்றனவரும். *

(எ-ன்.) இதுவுமது. (ப-ரை) அண்ணம் - மேல்வாயை, நாநுனி - நாக்குநுனி, நனியுறின் - மிகப்பொருந்தின், றன - றவ்வும்னவ்வும், வரும் - பிறக்கும். எ-று. (பொ-ள்) அண்ணத்தை நுனிநா மிகப்பொருந்தில் றவ்வும் னவ்வும் பிறக்கும். எ-று. (௩௧)

(௮௭) ஆய்தக்கிடந்தலை யங்காமுயற்சி, சார்பெழுத்தேனவு ந் தம்முதலனைய. *

(எ-ன்) சார்பெழுத்துகட் கிட்முயற்சிவகையாற்பிறப்புணர் - த்று (ப-ரை) ஆய்தக்கு - ஆய்தம் பிறத்தற்கு, இடம் - இடமானது, தலை - தலையாம், முயற்சி - தொழிலானது, அங்கா - வாயை

த்திறத்தல்லாம், சார்பெழுத்தேனவும் - ஆய்தம் நீங்கலாகியமற்றை ச்சார்பெழுத்துகளும், தம்முதலனைய - தம்முதலெழுத்துகளோ டொப்பனவாய்ப்பிறக்கும். எ-று. (பொ-ரை) ஆய்தம்பிறத்தற்கி டந்தலை, முயற்சியங்காத்தலாம். ஒழிந்த சார்பெழுத்துகளுமிட முயற்சிகடம்முதலெழுத்துகளோ டொப்பனவாய்ப் பிறக்கும். எ-று. ❁ சார்பின்சார்பாகியவாய்தக்குறுக்கமும்அதன்முதல்போ ற்பிறக்குமென்பார் எதிரதுதழீஇ யேனவுமென்றார். (௫௨)

(௮௮) எடுத்தல்படுத்த னலிதலுழப்பிற்- றிரிபுந்தத்தமிற் சி றிதுளவாகும். ❋

(எ-ன்) மேற்கூறியபிறப்பிற்கோர்புறனடையுணர்-ற்று.(ப-ரை) பலவெழுத்திற்குப்பிறப்பு ஒன்றாகச்சொல்லப்பட்டாலும், எடுத் தல்- எடுத்தலும், படுத்தல்- படுத்தலும், நலிதல் - நலிதலுமாகி ய, உழப்பின்- எழுத்திற் குரிய ஒலிமுயற்சியால், திரிபும் - ஒன்ற ற்கொன்றுபிறப்புவேறுபாடுகளும், தத்தமில்- அவ்வவற்றின்கண், சிறிது- சிறிதுசிறிது, உளவாகும் உள்ளனவாம்,எ-று.(பொ-ரை) பல்வெழுத்திற்குப் பிறப்பொன்றாகச் சொல்லப்பட்டனவேனு மெடுத்தல் படுத்தனலிதலென்னு மெழுத்திற்குரிய வொலிமுயற் சியானொன்றற்கொன்றுபிறப்பு வேறுபாடுகளுமவ்வவற்றின்கட்சி றிதுசிறிதுளவாம். எ-று. (௫௫)

(௮௯) புள்ளிவிட்டவ்வொடு முன்னுருவாகியு- மேனையுயிரோ டுருவுதிரிந்து - முயிரளவாயதன் வடிவொழித்திருவயிற் - பெய ரொடுமொற்றுமுன் னாய்வருமுயிர்மெய். ❋

(எ-ன்) மேற்பிறப்புணர்த்திய சார்பெழுத்திற்குச்சார்ந்துவரு மாறுமோர்பிறப்பாதலிற் பிறப்பதிகாரத்துளடக்கிபுணர்த்துவா ன்றொடங்கியவற்றுளுயிர்மெய் வருமாறுணர்-ற்று. (ப-ரை) புள் ளிவிட்டு- மெய்புள்ளியைவிட்டு, அவ்வொடு- அகரத்தோடுகூடிய வழி, முன்னுருவாகியும்- அவ்விட்டவுருவேயுருவாகியும், ஏனையுயி ரோடு- அதுநீங்கலாகியவுயிர்களோடுகூடியவழி,உருவுதிரிந்தும்- உருவுவேறுபட்டும், உயிரளவாய் - தன்மாத்திரைதோன்றாது உ யிர்மாத்திரையே மாத்திரையாய், அதன்வடிவொழித்து - தன்வரி வடிவின் விகாரவடிவேவடிவாய் உயிர்வடிவையொழித்து, இருவ யிற்பெயரொடும்- உயிரும்மெய்யும் ஆகிய இரண்டிடத்தும் பிற ந்த உயிர்மெய்யென்னும் பெயருடனே, ஒற்றுமுன்னாய் - ஒற் றொலி முன்னும் உயிரொலிபின்னுமாகி, உயிர்மெய்-உயிர்மெய் யெழுத்து,வரும்-பிறக்கும். எ-று.(பொ-ரை) மெய்புள்ளியைவிட் டகரத்தோடுகூடியவழிவிட்டவுருவேயுருவாகியுமொழிந்த வுயிர் களோடுகூடியவழியுருவுவேறுபட்டுந் தன்மாத்திரைதோன்றாது உயிர்மாத்திரையேமாத்திரையாய்த் தன்வரிவடிவின விகாரவடி

வேவடிவாயுயிர்வடிவ்வயொழித்து மெய்யுயிரொன்னும் பெயரா கிய விரண்டிடுத்தும்பிறந்த வுயிர்மெய்யென்னும் பெயருடனே யொற்றெலிமுன்னுமுயிரொலிபின்னுமாகிவரு முயிர்மெய்யெ ழுத்து. எ-று. ❋ உருவுதிரிதல் புள்ளிபெறுவன புள்ளிபெற்று ம் மேலுங்கீழும்விலங்குபெறுவன விலங்குபெற்றும் கோடுபெ றுவனகோடுபெற்றும் புள்ளியுங்கோடு முடன்பெறுவன வுடன் பெற்றும் வருவனவாம். அருகேபெற்றபுள்ளியை யிக்காலத்தார் காலாக வெழுதுவர். ஒழித்தென்றும் ஒற்றுமுன்னுயென்றும் வந் தவினைவினையிருவயிற்பெயரொடும்வருமென்னுமுதல்வினையோ டுமுடிந்தன. ஆதிமுதலியவற்றிற்றீட்டியவரிவடிவு மொலிவடிவு போலப் பயன்தருமொற்றுமைகுறித் தீண்டவ்விருதிறனும் விர விக்கூறினர். இவ்விலக்கணத்தானெவ்வொருமெய்யிற் பன்னீரு யிருங்கூடப்பன்னிருப்பதினெட்டிருநூற்றெருபத்தாறுவ்வரு மா று வழங்கும் வரிவடிவுள்ளு மொலிவடிவுள்ளுங்காண்க. (௫௪)

(௯௦) குறியதன்முன்ன ராய்தப்புள்ளி - யுயிரொடுபுணர்ந்த வல் லாறன்மிசைத்தே. ❋

(எ-ன்) முற்றாய்தம்வருமாறுணர்-ற்று. (ப-ரை) ஆய்தப்புள்ளி- புள்ளிவடிவினதாகியவாய்தம், குறியதன்முன்னர்- குற்றெழுத்தி ன்முன்னதாய், உயிரொடுபுணர்ந்த- உயிரோடுகூடிய, வல்லாறன் மிசைத்து- வல்லெழுத்தாறனுளொன்றன்மேலதாய்வரும். எ-று. (பொ-ரை) புள்ளிவடிவினதாயவாய்தங் குற்றெழுத்தின் முன்ன தா யுயிரோடுகூடிய வல்லெழுத்தாறன்மேலதாய்வரும். எ-று. ❋ உயிர்வருக்கத்திறுதிக்கட்டந்தவாய்தவடிவைப்பிறகிலாத்து வேறு படவரைந்து வழங்குவாராதலிற்றெல்லவடிவுந்தோன்ற ஆய்தப்பு ள்ளியென்றார். [உ-ம்] எஃகு- கஃசு- இருபஃது. அஃகடிய - அஃகான்-மஃகான்- எனவரும். தனிக்குறிலென்று வரைந்தோதா மையின்-"விலஃஃகி வீங்கிருளோட்டுமேமாத-ரிலஃஃகுமுத்தினி னம்,, எனவும்வரும். பிறவுமன்ன. இச்சூத்திரமேற்கோளாதலாற் றுனெடுத்துமொழித லென்னுமுத்தி. வல்லினவகையாணியல்பா வந்தவாய்த மாறனோடு புணர்ச்சிவிகாரத்தான்வரு மாய்தமுஞ் செய்யுள்விகாரத்தான்வரு மாய்தமுங்கூடியெட்டாய்வருமாறுகா ண்க. (௫௫)

(௯௧) இசைகெடின்மொழிமுத லிடைகடைநிலைநெடி - லள பெழுமவற்றவற் றினக்குறில்குறியே. ❋

(எ-ன்) உயிரளபெடை வருமாறுணர்- ற்று. (ப-ரை) இசை கெடின்- பாட்டிலேரசைகுறையின், மொழி- அவ்வோசை குறை ந்தசொல்லுக்கு, முதல்- முதலிலாகிலும், இடை - நடுவிலாகிலு ம், கடை - இறுதியிலாகிலும், நிலை - நின்ற, நெடில் - நெட்டெ

ழுத்தேழுமொன்று, அளபெழும்- அவ்வோசையை நிறைக்கத்தன்மாத்திரையின் மிகுந்தொலிக்கும், அவற்று - அவற்றின் பின், அவற்றினக்குறில்- அததற்கு இனமாகியகுற்றெழுத்துகள், குறி - அளபெடுத்தமையை அறிதற்குவரிவடிவில் அறிகுறியாய் வரும். எ-று. (பொ-ரை) செய்யுட்கண் இசைகுன்றின் மொழிமுதலினும் இடையினுங் கடையினுநின்ற நெட்டெழுத்தேழும் அவ்விசைநிறைக்கத் தத்தமாத்திரையின் மிக்கொலிக்கும் அவ்வாறு அளபெடுத்தனவறிதற்கு அவற்றின்பின் னவற்றிற்கினமாகிய குற்றெழுத்துகள் வரிவடிவின்க ணறிகுறியாய்வரும் எ-று. [உ-ம்] "ஆஅவளிய வலவன்றன் பார்ப்பினோ - டிஇ ரிரையுங்கொண் டீரளைப் பள்ளியுட்- டூஉந் திரையலைப்பத் துஞ்சா திறைவன்றோண்-மேஎ வலைப்பட்ட நம்போ னறுநுதா- லோஒ வுழக்குந் துயர்.,, (எ-ம்) "உறாஅர்க் குறுநோ யுரைப்பாய் கடலைச் - செறாஅஅய் வாழிய நெஞ்சு.,, (எ-ம்) "அனிச்சப்பூக் கால்களையாள் பெய்தா ணுசுப் பிற்கு - நல்ல படாஅ பறை.,, (எ-ம்) வரும். செறாஅஅய் வாழி யென்புழி நான்குமாத்திரையாயும் ஏனைய மூன்று மாத்திரையாயும் அலகுபெற்றுச் செய்யுளிசைநிறைத்து மூவிடத்தும்வந்தவாறுகாண்க. பிறவுமன்ன. இனி இசைகெடினென்று பொதுப்படக் கூறினமையால் "கெடுப்பதூஉங் கெட்டார்க்குச் சார்வாய்மற்றாங்கே- யெடுப்பதூஉ மெல்லாமழை,, எனக்குறினெடிலா யளபெழுந் தலகுபெற்றும் பெறாதும் இன்னிசை நிறைப்பவருவனவும் "உரனசைஇ யுள்ளந் துணையாகச்சென்றார் - வரனசைஇ யின்னு முளேன்.,, எனவளபெழுந்தலகுபெற்றும்பெறாதுஞ் சொல்லிசை நிறைப்ப வருவனவும் "விழப்படுவார் கெழீஇயிலர் தாம்வீழ்வார் - வீழப் படாஅரெனின்.,, என்பதனுட்செழீஇ யிலரெனவளபெழுந் தலகுபெறாதுசொல்லிசை நிறைப்பவருவனவுங்கொள்க. எழுத்துப்பலவாயின ஒலிவேற்றுமையானன்றே! அங்ஙனமாதலினெடிலதுவிகாரமாய் ஓரொலியாய்ப் பிறப்பதே அளபெடையென்பார் நெடிலளபெழுமென்றும் அவற்றவற்றினக்குறில்குறியே யென்றுங்கூறினார். ஆசிரியர் தொல்காப்பியரும் நீருநீருஞ்சேர்ந்தாற்போல நெட்டெழுத்தோடு குற்றெழுத் தொத்துநின்று நீண்டிசைப்பதே அளபெடை யென்பார் "குன்றிசைமொழிவயி னின்றிசைநிறைக்கு- நெட்டெழுத்திம்ப ரொத்தகுற்றெழுத்தே,, என்றார். இங்ஙனம் ஒலிபற்றிக் கூறும்வகையால் இருவர்க்குங்கருத் தொன்றேயாயினுங் குறியே யென்றது இவ்விரண்டுமேற்கோளிலொன்றுதுணிதலானொருதலை துணிதலென்னுமுத்தியும் அம்மதமும்படவந்ததென்க. இப்பெற்றியறியாதார் நெடிலுங் குறிலும் [illegible]

த்போல இணைந்துநின்று அளபெடுக்குமெனத் தமக்குவேண்டியவாறேகூறுப. நெடிலுங் குறிலு மவ்வாறு நின்றளபெழுமென்றல் பொருந்தாமைக் கெழுத்தேதடையென்ற தளபெடையென்னுங்குறியீடே சான்றுதலறிக. அற்றேல் ஒரொழுத்தினையே யிரண்டுமாத்திரையும் ஒருமாத்திரையுமாகப்பிரித் தசைத்ததனாற் சீர்செய்துதளையறுத்தல் பொருந்தா தென்னி லற்றன்று எழுத்துவகையானென்றது "மாத்திரை வகையாற்றளைதபக் கெடாநிலையாப்பழியாமையென் றளபெடை வேண்டும்.,, எனக்கூறுபவாகலின் எழுத்திற்குமாத்திரை கோடலுமசைத்தலுஞ் சீர்செய்தலுந் தளையறுத்தலும் ஓசைபற்றி யல்லது எழுத்துப்பற்றி யல்லவென்க. இதனுட் செப்பலோசை முதலியவோசைகுன்றுதுநெட்டெழுத்தேழுமொழிமுதலிடைகடைகளினின் றளபெடுக்குங்காலெள்கார மொழியிடைகடைகளின் வரப்பெறுமையி னவ்விடங்களினஃதொழிய நின்றளபெடுக்குமளபெடை பத்தொன்பதோடின்னிசை நிறைப்பவும் சொல்லிசைநிறைப்பவும் அளபெடுக்கு மளபெடையிரண்டுங்கூடி உயிரளபெடை யெழு மூன்றாய் வருமாறுகாண்க. (௩௯)

(௩௨) ஙஞணநமன வயலளவாய்த - மளபாங்குறிலிணை குறிற்கீழிடைகடை - மிகலேயவற்றின் குறியாம்வேறே. *

(எ-ன்) ஒற்றளபெடைவருமாறுணர்- ற்று. (ப-ரை) (இசைகெடின்) - பாட்டிலோசைகுறையின், குறிலிணைக்(கீழ்) - குறிலிணையின்கீழாவது, குறிற்கீழ் குறிற்கீழாவது, இடை - சொல்லுக்கு நடுவிலாகிலும், கடை - சொல்லுக்குக்கடையிலாகிலும், ஙஞணநமனவயலள - ஙம்முதலிய விப்பத்துளொன்றேனும், ஆய்தம்-ஆய்தமேனும், அளபுமிகலாம்- அவ்வோசையை நிறைக்கத் தன்மாத்திரையின்மிகுந்தொலிக்கும், அவற்றின்வேறுகுறியாம்- அப்படியளபெடுத்தமையை யறிதற்கு அவற்றின்பின் அவ்வெழுத்துகளேவரிவடிவில் அறிகுறியாய்வரும். எ-று. (பொ-ரை) செய்யுட்கணிசைகுன்றிற் குறிலிணைக்கீழுங் குறிற்கீழுமாய் மொழியிடையினுமீற்றினுநின்ற விப்பத்தொற்றும்ஆய்தமும் அவ்வோசைநிறைக்கத், தம்மாத்திரையின் மிக்கொலிக்குமவ்வாறளபெடுத்தன வறிதற்கவற்றின்பி னவ்வெழுத்துகளேவரிவடிவின்கண்வேறறிகுறியாய் வரும். எ-று. ❋ "ஒருமொழி யொழிதன் னினங்கொளற் குரித்தே.,, என்பதனான் மேல் இசைகெடி னென்றதனை யிவ்வளபெடைக்கும் வருவித்துக்கொள்க. மாத்திரைநிறைத்தற்கன்றி அறிகுறிமாத்திரையாய் வருமென்று கோடற்குவேறேயென்றார். [உ-ம்] "இலங்ங்கு வெண்பிறைசூ டீசனடியார்க்குக் - கலங்ங்கு நெஞ்ச

மில்லகாண்.,, (எ-ம்) "எங்ங் கிறைவனுள னென்பாய் மனனேயா-னெங்ங்கெனத்திரிவாரின்.,, (எ-ம்) "கலங்ங்கொண்ட கண்மார்பூர்.,, "மடங்ங்கலந்தமனனேகளத்துவிடங்ங்கலந்தானைவேண்டு.,, (எ-ம்,) "அங்ங்கனிந்த வருளிடத்தார்க்கின்புசெய்து- நங்ங்களங்கறுப்பா நாம்.,, (எ-ம்) ஙகரங் குறிலிணைக்கீழுங் குறிற்கீழு மொழிக்கிடையினுங் கடையினுமுறையேயளபெழுந்தது. "கண்ண் கருவிளை கார்முல்லை கூரெயிறு- பொன்ன் பொறிசுணங்கு போழ்வா யிலவம்பூ - மின்ன் னுழைமருங்குன் மேதகு சாயலா - ளென்ன் பிறமகளா மாறு.,, என ணகரமும் னகரமுங்குறிற்கீழ் மொழியீற்றினளபெழுந்தன. "எஃஃஃ கிலங்கிய கையராயின்னுயிர் - வெஃஃஃகுவார்க் கில்லைவீடு.,, என ஆய்தங்குறிற்கீழ்மொழிக்கிடையினளபெழுந்தது. பிறவுமன்ன. ஆய்தமொற்றொடு மொருபுடை யொத்துவருதலின் ஈண்டுத்தந் துரைத்தார். ஙகரம்விதியீறாய்வருதலினதனைவிலக்காதாய்தமொருமொழிக்கண்ணுந்தொடர்மொழிக்கண்ணும் விதித்த முதலெழுத்துக ளிருமருங்கு நின்றெழுப்பவிருசிறகெழுப்ப வெழுமுடலதுபோ லிடையெழுந்தொலிப்பதன்றி ஒருவாற்றானு மீறாய் வருந்தன்மையதன்றாகலின் அஃகடிய முதலியவற்றின்கட் டிரிந்தவாய்தம் அஃகான் முதலியவற்றின்கட் டோன்றிய ஆய்தம்போலத் தொடர்மொழிக்கணிடைநிலையாயதன்றிவிதியீறன்றென் றதனுண்மைதுணிந்ததனை யிறுதிக்கண்விலக்கிஒற்றளபெடை நாற்பத்திரண்டென்று மேலுரைத்தவாறிங்ஙனம்வருதல்காண்க. (௩௭)

(௯௫) யகரம்வரக்குற ளுத்திரியிகரமு- மசைச்சொன் மியாவினிகரமுங்குறிய. *

(எ-ன்.) குற்றியலிகரம் வருமாறுணர் - ற்று. (ப-ரை) யகரம்வர- யகரத்தைமுதலிலே யுடையசொல்வர, குறளு - குற்றியலுகரம், திரி- திரிந்த, இகரமும்- இகரமும், அசைச்சொல் - அசைச்சொல்லாகிய, மியாவின்- மியாவென்பதின் மகரத்தின்மே லிருக்கிற, இகரமும் - இகரமும், குறிய- குற்றியலிகரங்களாம். எ-று. (பொ-ரை) யகரம் வருமொழிக்குமுதலாகிவர நிலைமொழிக்கீறாகிநின்ற குற்றியலுகரந் திரிந்தவிகரமு மியாவென்னுமசைச்சொல்லின்க ணிகரமுங் குற்றியலிகரங்களாம், எ-று. ❁ எனவேயிங்ஙனம்வருமாயி னிவ்வெழுத்தின் றொடர்பாற்குறுகுமென்பது பெற்றாம்: [உ-ம்] நாகியாது- எஃகியாது - வரகியாது - கொக்கியாது - குரங்கியாது - அல்கியாது (எ-ம்) கேண்மியா - சென்மியா- (எ-ம்) வரும், பிறவுமன்ன. பொதுப்படக்கூறியவற்றுள் விலக்குவனவற்றை விலக்கிக்கொள்ளப்படுங் குற்றியலுகர முப்பத்தாறனும் அசைச்சொன்மியாவினானுங் குற்றியலிகர முப்பத்தேழா

ய் வருமாறுகாண்க. (ருஅ)

(கூச) நெடிலோடாய்த முயிர்வலிமெலியிடை - தொடர்மொ
ழியிறுதி வன்மையூருகர - மஃகும்பிறமேற் றொடரவும்பெறு
மே,

(எ-ன்) இடமும் பற்றுக்கோடுஞ்சார்ந்து குற்றியலுகரம் வரு
மாறுணர் - ற்று. (ப-ரை) நெடிலோடு - தனிநெடிலெழுடனே,
ஆய்தம் - ஆய்தமொன்றும், உயிர் - சொல்லுக்குநடுவிலுங்கடையி
லும்வாராத ஔகாரம் நீங்கிய உயிர்பதினொன்றும், வலி - வல்லெ
ழுத்தாறும், மெலி - மெல்லெழுத்தாறும், இடை - வல்லெழுத்து
களோடுதொடராதவகரம் நீங்கிய இடையெழுத்தைந்தும் ஆகிய
முப்பத்தாறனுளொன்றால், தொடர் - ஈற்றுக்கு அயலெழுத்தாக
த் தொடரப்பட்டு, மொழியிறுதி - சொல்லினிறுதியில், வன்மை
வல்லெழுத்துகளுள் யாதாயினுமொன்றன்மேல், ஊர் - ஏறி வரு
கின்ற, உகரம் உகரமானது, அஃகும் - தன்மாத்திரையிற் குறு
கும், பிற - பிறவெழுத்துகளுளொன்றும்பலவும், மேற்றொடரவு
ம் - குறுகுதற்கு மொழிநிறைதற்குங்காரணமாக மேலே தொடர
வும், பெறும் - தனிநெடிலொழிந்த வைந்துதொடரும் பெறும்.
எ-று. (பொ-ரை) தனிநெடிலெழுடனே ஆய்தமொன்று மொ
ழியிடையீறுகளின் வரப்பெறாத ஔகாரமொழித் தொழிந்த வு
யிர் பதினொன்றும் வல்லெழுத்தாறும் மெல்லெழுத்தாறும் வல்
லெழுத்துகளோடு தொடராதவகரமொழித்தொழிந்த இடையெ
ழுத்தைந்துமாகிய முப்பத்தாறெழுத்தினுள் யாதானு மொன்றீ
ற்றுக் கயலெழுத்தாய்த் தொடரப்பட்டு மொழியிறுதிக்கண்
வல்லெழுத்துகளுள் யாதானுமொன்றுபற்றுக்கோடாக வதனையூ
ர்ந்துவரி னவ்வுகரந்தன் மாத்திரையிற்குறுகு மதுதன்மாத்திரை
யிற்குறுகுதற்குமொழிநிரம்புதற்குங்காரணமிவ்வோரெழுத்துத்
தொடர்தன்மாத்திரையினமையாது பிறவெழுத்துகளுளொன்று
ம் பலவுமேலே தொடரவும்பெறும். எ-று. ❋ நெடிலை யொடுக்
கொடுத்துப்பிரித்தார் தனிநெடிலாதலின். உயிரென்றது குற்று
யிர் நெட்டுயி ரிரண்டனையும். தொடரொன்னும்வினைத்தொகை வ
ன்மையூ ருகரமென்னுஞ் செயப்படு பொருளோடு முடிந்தது.
பிறவென்றது பகாப்பதமேழும் பகுபதமொன்பதுமென் றுவ
ரையறுத்தவற்றினிங்ஙனம்ஈற்றயலுமீறுமாகக்கூறியவிரண்டுமொ
ழித்தொழிந்தவேழுமைந்துமாயவெழுத்துகளை. தொடரவுமென்
றவும்மையிறந்தது தழீஇ நின்றது. பெறுமேயென்றது தனிநெ
டிலொழிந்த ஐந்து தொடரும். வன்மையூருகரங் குறுகுதற்கு
மொழிநிரம்புதற்கு மேற்றொடர்தலு மின்றியமையாமையின்.
[உ-ம்] நாகு-எஃகு-வரகு-பலாசு-கொக்கு-குரங்கு-அல்கு-எனவு

ரும். பிறவுமன்ன. இனியிங்ஙனம்பிறமேற்றொடரவும்பெறுமே
யெனக்கூறு தொழியினிவ்வைவகையெழுத்துமீற்றெழுத்துங் கூ
டியேயொருமொழியாய் நிற்குமெனவும்பட்டுஅது இது என்றற்
றொடக்கத்தனவுங்குற்றியலுகரமாவான்செல்லுமெனவும் ஆய்த
முந்தனிமெய்புமொழிக்குமுதலா மெனவுந் தனிநெடிலையொடு
க்கொடுத்துவிதக்கவேண்டாவெனவும் ஆசிரியர் தொல்காப்பியர்
,,நெட்டெழுத்திம்பருந்தொடர்மொழியீற்றுங்-குற்றியலுகரம்வ
ல்லாறூர்ந்தே,,எனத்தொகுத்துக் கூறியவாறேகூறுது எல்லாவெ
ழுத்தையுங்கூறுவார் அவற்றையேயாய்தமுதலைந்தாகவகுத்துத்த
னிநெடிலொடாறுகக் குற்றுகரத்தைய றுவகையான் வழங்குதற்கி
லக்கணந்தோன்றக் கூறினமையினவ்வாறெடுத்தாளுதற் பொருட்
டெல்லாவெழுத்தையுங் குறியீடாகவிதந்தவாய்தமுதலியவைந்த
னுளொன்றீற்றயலினின்றிறுதி வன்மையூருகரத்தைத் தொடர்
தலேயன்றிப்பிறமேற்றொடர்தலுங் குறுகுதற்கேதுவன்றெனவு
ம்பொருள்படுமாறறிக. இச்சூத்திரப்பொருண்முன்மொழிந்து
கோடலென்னுமுத்தி. இனியிவ்வாறன்பகுதித்தொடருமிடமாதலி
னிவ்விடவேற்றுமையாற் குற்றியலுகரமுப்பத்தாறென்று மேற்
கூறியவாறே வருமாறுகாண்க. இவ்வாறுகொள்ளா தாசிரியரீற்றய
லினின்றவெழுத்தையிடமாகக்கொண்டார்போலவீற்றயலினின்ற
வசையையிடமாகக்கொண்டு அவற்றுள் அது இது முதலியமுற்
றுகரத்தை நீக்குதற்குக் குற்றெழுத்துத் 'தனியேவருமசையொ
ன்றனையுமொழித் தேனையேழசையினையும் ,,நெடிலேகுறிலிணை
குறினெடி லென்றிவை- யொற்றொடு வருதலொடுகுற்றொற்றிறு
தியென் - றேழ்குற்றுகரக்கிடனென மொழிப,, எனக்கூறினரு
முளரால்லோவெனின், அவ்வாறேழிடமெனக்கோடுமென்பார்க்கு
ப் பிண்ணாக்குச்சுண்ணாம்பு பட்டாங்கு விளையாட்டு இறப்பூது
முதலியனவும் ஆய்தந்தொடர்ந்தனவுநெட்டொற்றிறுதிநெடிலி
றுதிக்குற்றுகர முதலியனவுங்குற்றொற்றிறுதிக்குற்றுகரமுமாய
டங்குமேனும் போவது வருவதுஎன்பது முதலியனவடங்காமை
யறிக. நெடின் முதலாயின வீற்றயலி னிற்றல்வேண்டுமென யா
ப்புறவின்மையின் முதற்க ணிற்பினு மீற்றுகர மவற்றிறுதியாத
லமையுமெனக்கொண்டு போவது முதலியனவு நெடிலிறுதி
முதலியவாயடங்குமென்பார்க்கும் அங்ஙனம் பாகுபடுத்துக் கூ
றுவிசெய்ததனாற் போதப்பயனின்றென்பதாம். இது-பிறநூற்
குற்றங்காட்டலென்னுமதம். இனி மொழிந்தபொருளோ டொ
ன்றவவ்வயின் மொழியாததனை முட்டின்று முடித்த லென்னு
முத்தியான் நுந்தையென்னு முறைப்பெயர் மருங்கினொற்றிய
நகரமிசையுகரமூர்ந்து மொழிமுதற்க ணிற்பினுங் குற்றியலுக

ரமாமெனவும் அவ்வுகரம் செக்குக்கணை சுக்குக்கொடு எனப்புண ர்மொழியிடைப்படினுந் தன்னரைமாத்திரையிற் குறுகுமென வுங்கொள்க. (௯௪)

(௯௫) தற்சுட்டளபொழி யைம்மூவழியு - நையுமௌவு மு தலற்றாகும். ※

(எ-ன்) ஐகார ஔகாரக்குறுக்கங்கள்வருமாறுணர்-ற்று. (ப-ரை) ஐ- ஐகாரம்; தற்சுட்டளபு - தன்னைக்குறித்துத் தன்பெயர்சொல் லுமளவிற்குறுகாது, ஒழி- ஒழிந்த, மூவழியும்- சொல்லுக்குமுத லிடை கடைகளிலே யெங்கே நின்றாலும், நையும் - தன்மாத்திரை யிற்குறுகும், ஔவும்- ஔகாரமும், முதல்- சொல்லுக்குமுதலில், அற்றாகும்- தன்மாத்திரையிற்குறுகும், எ-று. (பொ-ரை) ஐகார ந்தன்னைக்கருதித் தன்பெயர்கூறுமளவிற் குறுகாதொழிந்த மொ ழிமுத லிடை கடையென்னுமூன்றிடத்துமுன்னும் பின்னுமிரு மருங்கு மாயவெழுத்தின்றொடர்பாற் றன்மாத்திரையிற்குறுகும் ஔகாரமுந்தன்பெயர் கூறுமளவிற்குறுகா தொழிந்த மொழிமு தற்கட் பின்வருமெழுத்தின்றொடர்பாற் றன்மாத்திரையிற் குறுகு ம். எ-று. ※ சுட்டளபென்பது வினைத்தொகை. அளபென்றாரெ ழுத்தின் சாரியைதொடரினுங் குறுகுமென்பதுகருதி. எனவே ஓரெழுத்தொருமொழியாய் நிலைமொழி வருமொழியாய்த்தொட ராது தனித்து ஓரோவிடங்களின்வரிற் றன்மாத்திரைகுறுகாதென் பதுஉம்பெற்றாம். [உ-ம்] ஐப்பசி- டைமப்புறம் (எ-ம்) வலையன் (எ-ம்) குவளை (எ-ம்) மௌவல் (எ-ம்) வரும். இனி "அளபெடை தனிபிரண் டல்வழி யையௌ-வுந்தாமொன்றரை தனிமையுமாகு ம்.,, எனக்கூறினாருமுளராலோவெனிற் றனியியல்பாய விரண்டு மாத்திரையி னின்றுங் குறுகுதலில்லனவற்றை யொழிப்பார் விகா ரத்தான் மூன்றுமாத்திரையு நான்குமாத்திரையுமாய் மிக்கொலிக் கு மளபெடையை யொழிக்கவேண்டாமையினது பொருந்தா தென்க. இது- மறுத்தலென்னுமதம். ஏனையவுடன்படல். இடவ கையா னைகாரக்குறுக்கமூன்றும் ஔகாரக்குறுக்கமொன்றும் வரு மாறுகாண்க. இனி ஐகாரக்குறுக்க மொழிமுதற்க ணொன்றரைமா த்திரையாயும் ஏனையிடங்களி னொருமாத்திரையாயும் ஔகாரக் கு றுக்க மொழிமுதற்க ணொன்றரை மாத்திரையாயுங் குறுகுமென்ப தியைத்துணர்ந்துகொள்க. அவ்வாறியைத்துணர்ந்து கொள்ளாக்கால் "வைகலும் வைகல் வரக்கண்டு மஃதுணரார் - வைகலும் வைகலை வைகுமென் றின்புறுவர் - வைகலும் வைகற்றம் வாழ்நாண்மேல் வைகுதல்- வைகலை வைத்துணராதார்.,, (எ-ம்) "கைவேல் களிற் றொடு போக்கி வருபவன் - மெய்வேல் பறியா நகும்.,, (எ-ம்)

"ஒளவியநெஞ்சத்தானாக்கமுஞ் செவ்வியான்- கேடு நினைக்கப்படும்.,, (எ-ம்) வருமிலக்கியங்கட் கிலக்கணமின்றிப் முடியுமென்க.()

(௯௬) ணனமுன்னும்வஃகான் மிசையுமக்குறுகும். *

(எ-ன்) மகரக்குறுக்கம் வருமாறுணர்-ற்று. (ப-ரை) ணன - ணகர னகரங்களிலொன்று நின்றுதொடர, முன்னும்- அதன்முன்னின்றாலும், வஃகான்- வகரம்வந்துதொடர, மிசையும் - அதன்பின்னின்றாலும், ம- மகரம், குறுகும்-தன்மாத்திரையிற்குறையும். எ-று.(பொ-ரை) ணகார னகாரங்களினொன்றுநின்றுதொடர்ந்திடவதன்முன்வரினும்வகாரம்வந்துதொடர்ந்திடவதன்மேனிற்பினு மகரந் தன்னளவாமாத்திரையிற்குறுகும். எ-று. [உ-ம்] "பசுப்போல்வார்முற்பட்டாற் பாற்பட்டசான்றோர்- முசுப்போல'முள்காந்திருப்பர்- பசுத்தான் - வெருளினுமெல்லாம் வெருளுமஃதன்றிமருளினு மெல்லாமருண்ம்.,, (எ-ம்) "திசையறிமீகானும் போன்ம்.,, (எ-ம்) தரும்வளவன் (எ-ம்) வரும். இனி ணகர னகரங்களின்முன்வந்த மகரஞ் செய்யுமென்னும் வாய்பாட்டுமுற்றீற்ற தென்பதூஉம் அவ்வீற்றய லுகரங்கெட அவ்வுகரமூர்ந்த ளகர லகரங்களீற்றுமகரத்தோடு மயங்காமையின்மயங்குதற்குரிய ணகர னகரமாய்த் திரிந்தனவீண்டுநின்ற ணகர னகர மென்பதூஉ மிவற்றுளொன்றுடன் மொற்றாய்மயங்கின் மகரங்குறுகு மென்பதூஉம் இவற்றின்முன் குறுகுதல் செய்யுட்கண்ணதென்பதூஉம் காணும் கூனும் எனவியல்பாகநின்ற ணகரனகரங்கண்முன்னிவ்வாறுவந்து மகரங்குறுகாதென்பதூஉம் பிறவுமேல்வருஞ் சூத்திரங்களெல்லாவற்றையும்வேண்டிப் பருந்தின்வீழ்வாய்நின்றவிச்சூத்திரத்துய்த்துணர்ந்துகொள்க. இஃதுய்த்துணரவைப்பென்னுமுத்தி. (௪௧)

(௯௭) லளவீற்றியைபினு மாய்தமஃகும். *

(எ-ன்) ஆய்தக்குறுக்கம் வருமாறுணர்-ற்று. (ப-ரை) லளவீற்றியைபின்-லகார ளகார வீற்றுப்புணர்ச்சியினால்,ஆம்- ஆகின்ற, ஆய்தம்- குறில்வழிலளத்தவ்வணையி னாய்தமாகவும் பெறூஉமல்வழியானே என்னுமாய்தம், அஃகும்- தன்னளவாமாத்திரையிற்குறுகும் எ-று. (பொ-ரை) லகார ளகார வீற்றுப்புணர்ச்சியினால்வரும் "குறில்வழி லளத்தவ்வணையினாய்த- மாகவும்பெறூஉம்,, என்றவாய்தமிருமருங்குமாயவெழுத்தின்றொடர்பாற் றன்னரைமாத்திரையிற் குறுகும். எ-று. ❁ [உ-ம்] கஃறீது- முஃடீது- எனவரும். இது - முடிவிடங்கூறலென்னுமுத்தி. இவ்வாய்தங்குறுகாதெனக்காண்டல் விரோதங்கூறுவாருமுளர். (௪௨)

(௯௮) தொல்லைவடிவின வெல்லாவெழுத்துமாண்டு - டெய்து மெகர மொகரமெய்புள்ளி. *

(எ-ன்) நிறுத்தமுறையானே யுருவமாமாறுணர்-ற்று. (ப-ரை)

எல்லாவெழுத்தும்-எல்லாவெழுத்துகளும், தொல்லைவடிவின- பலவேறுவகைப்படவெழுதிவழங்கும் பழையவடிவினையுடையவாம், ஆண்டு-அவ்வடிவையுடையவாய்வழங்குமிடத்து,எகரம்-எகரமும், ஒகரம்- ஒகரமும், மெய்- மெய்களும், புள்ளி- புள்ளியை, எய்தும்-பெறும். எ-று. (பொ-ரை)எல்லாவெழுத்தும் பல்வேறுவகைப் படவரைந்துவழங்கும் பழையவடிவினையுடையவாமவ்வடிவினவாய்வழங்குமிடத்துத் தனித்துமுடம்பூர்ந்தும்வரும்எகரமுமொகரமுந் தனிமெய்களுமியல்பாய்புள்ளியைப் பிற்காலத்தொழித்துவரைந்து எகாரவோகாரங்களோடுமுயிர்மெய்களோடு மையப்படவழங்கும்வழக்கினையுடையவன்றித் துணியப்படுந் தொல்லைவடிவினதுருப்பாய புள்ளியைப்பெறும். எ-று. ✽ வரலாறு. ௭-எ-ஒ்-ஒ-கெ கெ கொ கொ க்க- எனவரும். பிறவுமன்ன. (௪௩)

(௯௯) மூன்றுயிரளபிரண் டாநெடிலொன்றே - குறிலோடையௌக் குறுக்கமொற்றள - பரையொற்றிஉக் குறுக்கமாய்தங்- கால்குறண்மஃகா னாய்தமாத்திரை. ✽

(எ-ன்) நிறுத்தமுறையானேமாத்திரையாமாறுணர்-த்து,(ப-ரை) மாத்திரை - ஒலிக்குமளவு, உயிரளபு - உயிரளபெடைக்கு, மூன்(றும்)- மூன்றாகும், நெடில்- நெட்டெழுத்திற்கு, இரண்டாம்- இரண்டாகும், குறில்- குற்றெழுத்திற்கும், ஐஂ (குறுக்கம்)- ஐகாரக்குறுக்கத்திற்கும், ஔக்குறுக்கம்- ஔகாரக்குறுக்கத்திற்கும், ஒற்றளபு- ஒற்றளபெடைக்கும்,ஒன்(றும்)- தனித்தனியொன்றாகும், ஒற்று-மெய்யெழுத்திற்கும், இக் (குறுக்கம்)-குற்றியலிகரத்திற்கும், உக்குறுக்கம்- குற்றியலுகரத்திற்கும், ஆய்தம்- ஆய்தத்திற்கும்,அரை(யாம்)- தனித்தனியரையாகும், குறண்மஃகான் - மகரக்குறுக்கத்திற்கும், (குற ளாய்தம்- ஆய்தக்குறுக்கத்திற்கும், கா(லாம்)- தனித்தனிகாலாகும். எ-று. (பொ-ரை) உயிரளபெடைக்கு மாத்திரை மூன்றும் நெடிலுக்குமாத்திரை இரண்டாம் குறிலுக்கும் ஐகாரக்குறுக்கத்திற்கும் ஔகாரக்குறுக்கத்திற்கும் ஒற்றளபெடைக்குந் தனித்தனி மாத்திரையொன்றும். ஒற்றிற்குங் குற்றியலிகரத்திற்குங் குற்றியலுகரத்திற்கு மாய்தத்திற்குந்தனித்தனிமாத்திரையரையாம், மகரக்குறுக்கத்திற்குமாய்தக்குறுக்கத்திற்குந் தனித்தனிமாத்திரைகாலாம்.எ-று. ✽ உயிர்மெய்க்களவுகூறுதொழிந்தார். மேலுயிரளபாயென்றுரைத்தலின், இஃதுரைத்தாமென்னுமுத்தி. உயிரளபெடை நான்குமாத்திரையவாதலும் ஐகார ஔகாரக்குறுக்கங்களொன்றரை மாத்திரையவாதலும் ஆரிடத்துள்ளுமவைபோல்வனவற்றுள்ளுமருகிவந்துசெய்யுள்வழுவமைதியாய்முடிதலினவற்றையொழித்தெல்லார்க்கு மொப்பமுடிந்துபயின்றுவருவன மூன்று மாத்திரையுமொருமாத்திரையுமேயாகலின் மூன்றுயிரளபென்று

மொன்றே குறிலோ டையெளக்குறுக்கமென் றுங்கூறினர். குற்றி
யலுகரம்புணர்மொழியிடைப்படிற்குறுகிக்கான்மாத்திரைபெறு
தலுமாயிற்கோடலென்பதனுற்கொள்க. (௪௪)

(௱) இயல்பெழுமாந்த ரிமைநொடிமாத்திரை. *

(எ-ன்) எழுத்தொலியெழுச்சிபலவற்றையுமளந்து கோடற்குக்
கூறியவொருமாத்திரையென்னுங் காலசங்கையியையுணர்-ற்று. (ப-
ரை) மாந்தர்- மனிதருடைய, இயல்பு-இயல்பாக, எழும் - உண்டா
குகின்ற, இமை- கண்ணிமைப்பொழுதும், நொடி- கைந்நொடிப்
பொழுதும், மாத்திரை-ஒருமாத்திரையென்னும்வரையறைப்பொ
ழுதாம். எ-று, (பொ-ரை) மாந்தருடைய வியல்பாகவெழுமிமைப்
பொழுதுநொடிப்பொழுதுமொருமாத்திரையென்னும் வரைய
றைப்பொழுதாம். எ-று. ❀ இமையென்றதிமைத்தலை. நொடியெ
ன்றதுநொடித்தலை. இவையிரண்டுமாகுபெயராய்க்காலத்தையுணர்
த்திநின்றன. இயல்பெழுமென்னும்பெயரெச்சம்இமைநொடியெ
ன்னும் பெயர்களோடு முடிந்தது. எழுத்தொலிமுதலியவற்றையி
யல்புகெடுத் தொருவன்வேண்டியவாறே யெழுப்பினுமவ்வாறெ
ழாநிற்கு மிமையுநொடியுமியல்புகெடுத்தெழுப்பவேண்டினுமவ்
வாறெழா தியல்பாகவே யெழாநிற்குமாதலி னியல்பெழுமெனவும்
மேலைச்சூத்திரத்தெழுத்தொலிகளை வேண்டியவாறேயெழுப்பாதி
வ்வளவானளந் தெழுப்புகவெனவுங்கூறினர். பின்னதுநிறுத்தலெ
ன்னுமுத்தியானிவ்வளவுகருவியிற்கூறப்பட்டது. (௪௫)

(௱௧) ஆவியுமொற்று மளவிறந்திசைத்தலு - மேவுமிசைவிளி
பண்டமாற்றாதியின், *

(எ-ன்) தவளைப்பாய்த்தாயொன்றிடையிட்டுநின்ற மேலதற்கோ
ர்புறனடையுணர்-ற்று. (ப-ரை) ஆவியும்-முதலுஞ்சார்புமாகிய உ
யிரெழுத்துகளும், ஒற்றும் - அவ்விருவகைமெய்யெழுத்துகளும்,
அளவிறந்து- முன்சொன்ன அளவைக்கடந்து, ஒலித்தலும்- அதி
கமாக ஒலித்தலையும், மேவும்- பொருந்தும், இசை- இராகமும், வி
ளி- அழைத்தலும், பண்டமாற்று-பண்டமாற்றலும், ஆதியின்-மு
தலானவைகளிடத்தென்றவாறு. (பொ-ரை) முதல்சார்பெனத்துமா
ய்வாவியுமொற்றுமேற்கூறியவளவிறந்துமிக்கொலித்தலையும்பொ
ருந்துமிசை விளி பண்டமாற்று முதலியவற்றின்கண். எ-று. ❀ ஆ
தியென்றமையாலுலக் குறிப்பிசைமுறையீடு புலம்பலுங்கொள்க.
இசையினளவிறந்திசைக்குங்கா லாவிபன்னிரண்டு மாத்திரையீறா
கவுமொற்றுப் பதினொருமாத்திரையீறாகவுமிசைக்குமென்றாரிசை
நூலார். இது-பிறநூன்முடிந்தது தானுடன்படுதலென்னுமுத்தி. வி
ளியவற்றினளவிறந்திசைக்குங்காலுலக நடைபிறழா திசைப்பதே
வரையறையென்க. நாவலென்பது நெற்போர்செறிக்கு...

ட்டினங்களைத் துரப்பதோர்சொல். "காவ லுழவர் கடுங்களத்துப் போரேறி - நாவலோஒ வென்றிசைக்கு நாளோதை - மாவல வன் - கொல்யானை மேலிருந்து கூற்றிசைத்தாற் போலுமே-நல் யானைக் கோக்கிள்ளி நாடு.,, என்பதனாலறிக. "கஃஃஃ றென்னுங் கல்லத ரத்தம்.,, "சுஃஃஃ றென்னுந் தண்டோட்டுப்பெண்ணை.,, என்பனகுறிப்பிசை. ஏனையபொருடோன்றிக் கிடத்தலினளபிறந்திசைத்தல்வந்தவழிக்காண்க. (௪௬)

(௱௨) பன்னீருயிருங் க ச த ந ப ம வ ய- ஞ ங வீரைந்துயிர் மெய்யுமொழிமுதல். *

(எ-ன்) திறுத்தமுறையானே மொழிக்குமுதலாமாறுணர் - த்று. (ப-ரை) பன்னீருயிரும் - பன்னிரண்டுயிரெழுத்துகளும், கசதநபமவயஞங-ககரமுதல் ஙகரமீறாகச்சொல்லப்பட்ட, ஈரைந்து - பத்து, உயிர் - உயிரேறிய, மெய்யும் - மெய்யெழுத்துகளும், மொழி சொல்லுக்கு,முதல்- முதலாகும். எ-று. (பொ-ரை) பன்னிரண்டுயிரு முயிரூர்ந்த விப்பத்து மெய்யு மொழிக்கு முதலாம். எ-று. ❁ [உ-ம்] அடை- ஆடை- இடை - ஈடு - உடை- ஊடல்- எடு- ஏடு- ஐயம்- ஒதி- ஓதி- ஔவியம் (எ-ம்) களி - சவடி- தளிர்- நலம்- படை- மலை- வளம்- யவனர்- ஞமலி - அங்ஙனம் (எ-ம்) வரும். பிறவுமன்ன. உயிர்போற்றனித்து முதலாந்தன்மையவல்லவாதலி னுயிர்மெய்யென்றார். இஃதின்னதல்ல தி துவெனமொழிதலென்னு முத்தி. (௪௭)

(௱௩) உ ஊ ஒ ஓ வலவொடு வம்முதல். *

(எ-ன்) பொதுவிதியுட் சிறப்புவிதியுணர் - த்று. (ப-ரை) உ ஊ ஒ ஓ வலவொடு - உ ஊ ஒ ஓ என்கின்ற நான்குமல்லாத எட்டுயிர்களோடும், வ- வகரமெய்யானது, முதல்- சொல்லுக்குமுதலாகும், எ-று. (பொ-ரை) இந்நான்குமல்லாத வெட்டுயிரோடும் வகரமொழிக்குமுதலாம். எ-று. ❁ [உ-ம்] வளி - வாளி - விளி - வீளி - வெளி - வேளை - வைகல்- வௌவு- எனவரும். (௪௮)

(௱௪) அ ஆ உ ஊ ஓ ஔ யம்முதல். *

(எ-ன்) இதுவுமது. (ப-ரை) அ ஆ உ ஊ ஓ ஔ (வொடு; - அ ஆ உ ஊ ஓ ஔ என்கிற ஆறுயிரோடும், ய- யகரமெய், முதல்- சொல்லுக்குமுதலாகும். எ-று. (பொ-ரை) இவ்வாறுயிரோடும் யகரமொழிக்குமுதலாம். எ-று. ❁ [உ-ம்] யவனர்- யானை- யுகம்- யூகி- யோகம்- யௌவனம்- எனவரும். மேலையொடுவ்வைவருவித்துக்கொள்க. (௪௯)

(௱௫) அ ஆ எ ஒ வ்வோ டாகுஞம்முதல். *

(எ-ன்) இதுவுமது. (ப-ரை) அ ஆ எ ஒவ்வோடு-அ ஆ எ ஒ என்கின்ற

நான்குயிரோடும், ஞ- ஞகரமெய், முதலாகும் - சொல்லுக்குமுத
லாகும். எ-று. (பொ-ரை) இந்நான்குயிரோடும் ஞகரமொழிக்
குமுதலாம். எ-று. ❁ [உ-ம்] ஞமலி- ஞாலம்- ஞெகிழி - ஞொ
ள்கிற்று- எனவரும். (௫௰)

(௱௯) சுட்டியாவெகர வினாவழியவ்வை- யொட்டிஙவ்வு மு
தலாகும்மே. *

(எ-ன்) இதுவுமது. (ப-ரை) சுட்டு - மூன்றுசுட்டும், யா(வி
னா) - யாவினாவும், எகரவினா எகரவினாவும் ஆகியவைந்தனுடை
ய, வழி- பின்பு, அவ்வை- அகரத்தை, ஒட்டி- சேர்ந்து, ஙவ்வும் -
ஙகரமெய்யும், முதலாகும் - சொல்லுக்குமுதலாகும், எ - று.
(பொ-ரை) மூன்றுசுட்டும் யாவினாவும் எகரவினாவுமாயவிடைச்
சொற்களின்பின் அகரத்தையொட்டி ஙவ்வுமொழிக்குமுதலாம்.
எ-று. ❁ [உ-ம்] அங்ஙனம்- இங்ஙனம்- உங்ஙனம்- யாங்ஙனம்-
எங்ஙனம்- எனவரும. இவற்றை அங்கு எங்கு என்றாற்போல ஒ
ருமொழிகளென்றலென்னையெனின், அஞ்ஞான்று எஞ்ஞான்
று என்பனபோலப் பிளவுபட்டிடையே மெல்லொற்று மிக்கு
வருதலிற் றொடர்மொழிகளேயாமென்க. ஙனமென்ப திடத்தி
னையுந் தன்மையினையுமுணர்த்தும் பலபொருளொருசொல்லா
யவரினுந் தனித்துவருந்தன்மையதன்றி முடவன்கோலூன்றிவந்
தாற்போலச் சுட்டுவினாவாகிய விடைச்சொற்களை முன்னிட்டுவ
ருதலான் வழியென்றும் ஏனைய மெய்கள்போல முதலாகாமையி
னவ்வோடொன்றாது ஒட்டியென்றும் ஒருவாற்றான் முதலாதலி
ழிவுசிறப்பாக ஙவ்வுமென்றுங்கூறினார். இங்ஙனங்கூறலான் ங
கரமொழிக்குமுதலாகா தென்பார்க்குடன்படலு மறுத்தலுமாய்
ப்பிறர்தம்மதமேற்கொண்டுகளைவே யென்னுமதம்படக் கூறினா
ரென்றுணர்க. இனி முதலாமென்றபத்துயிர்மெய்யுள் வகரமு
தலியநான்கினையும் விதந்துகூறவே யொழிந்தவாறு மெய்யும் ப
ன்னிரண்டுயிரோடு முதலாமென்பது அருத்தாபத்தியாற்பெற்றா
ம். இனி "சகரக்கிளவியு மவற்றோ ரற்றே- அ ஐ ஔவெனு மூ
ன்றலங்கடையே," என்பது முதலாகவின்னோரன்ன சிலவெழு
த்துகளை மொழிக்குமுதலாகாவென ஆசிரியர் தொல்காப்பியர்
விலக்கினாராலோவெனின் இவ்வடமொழிகளுந் திசைச்சொற்களு
மக்காலத்திவ்வாறு தமிழின்கட் பயின்று வாராமை பற்றியெ
ன்க. (௫௧)

(௱௭) ஆவி ஞ ண ந ம ன ய ர ல வ ழ ள மெய்- சாயுமுகர
நாலாறுமீறே. *

(எ-ன்) நிறுத்தமுறையானே மொழிக்கீறுமாறுணர்-ற்று.(ப-
ரை) ஆவி - தனித்தும் மெய்யோடும்வரும் பன்னிரண்டு உயிர்க

ளும், ஞ ண ந ம ன ய ர ல வ ழ ள மெய்- இப்பதினொருமெய்களும், சாயுமுகரம் - குற்றியலுகரமுமாகிய, நாலாறும் - இருபத்துநான்கெழுத்தும், ஈறு- மொழிக்கீறாகும், எ-று. (பொ-ரை) தனித்துமொற்றேறும் வருமாவிமுதலாக விங்ஙனங்கூறியவிருபத்துநான்கெழுத்து மொழிக்கீறாம். எ-று. ❁ [உ-ம்] ஆ-ஈ- ஊ- ஏ-ஐ ஓ-ஔ - எனவும். சுட்டும் வினவும் உவமவுருபடியு மாயவோரெழுத்தொருமொழியாயிடைச்சொல்லாகிய அ-இ -எஉ-ஒ- (எ-ம்) விள- பலா- கரி- குரீஇ- கடு- மரூஉ- சே- தை- கோ- (எ-ம்) உரிஞ்- மண்- பொருந்- மரம்- பொன்- வேய்- வேர்- வேல்- தெவ்- வீழ்- வாள்-அஃகு- (எ-ம்) வரும் காட்டாதொழிந்தன வருஞ் சூத்திரத்தாற்காண்க. குற்றுகரமு முயிரா யடங்குமேனும் புணர்ச்சி வேறுபாடுதோன்ற வேறெடுத்தோதினரென்க. (௫௨)

(௫௮) குற்றுயிரளபி னீறாமெகர - மெய்யொடே லாதொந் நவ்வொடாமௌ - க்கரவகரமோ டாகுமென்ப. ❋

(எ-ன்) குற்றுயிர்க்கெய்திய தன்மேற்சிறப்புவிதியும் எகரத்திற்கெய்தியதொருமருங்குவிலக்கலும்ஒகரத்திற்கும் ஔகாரத்திற்குமெய்தியவற்றுட் சிறப்புவிதியுமுணர் - த்று, (ப-ரை) குற்றுயிர் - அ இ உ எ ஒ என்கிறகுற்றுயிரானவை, அளபின் - அளபெடையிலே, ஈறும்- வரிவடிவில் அறிகுறியாகத்தனித்து ஈறாகும், எகரம் - எகரமானது, மெய்யொடேலாது - மெய்யோடீறாகாது, ஒ-ஒகரமானது,நவ்வொடாம்-நகரமெய்யொன்றுடனீறாகும்,ஔ-ஔகாரமானது, ககரவகரமோடாகும்- ககர வகரமாகியஇரண்டுமெய்யுடனுமீறாகும்.என்ப -என்றுசொல்லுவர்புலவர், எ-று. (பொ-ரை) குற்றுயி ரளபெடையின்கண் வரிவடிவி னறிகுறியாய்த்தனித்தீறும் எகரமெய்யோ டீறாகாது ஒகரம் நகரமொன்றுட னீறும் ஔகாரங்ககர வகரங்க ளிரண்டுட னு மீறுமென்று சொல்லுவர்புலவர்,எ-று. ❁ [உ-ம்] ஆஅ வளியவலவன்-(எ-ம) நொ-(எ-ம்)கௌ-வௌ- (எ-ம்) வரும் நெடிலளபெடுப்புழி வரிவடிவின் அறிகுறியாய்வருங்குற்றுயிர் நெடிலோடு தொடர்ந்துடன்படுமெய்யுடனீறுந்தன்மையதன்றித்தனித்து நிற்றலிற் குற்றுயிரளபினீறுமென்றார். தானேயீறுதலன்றிக்குற்றுயிரளபினுமீறுமெனவும்மைகொடாதொழிந்தார் உயிர்கழிந்த உடம்பைப் படுமகன்கிடக்கைகாணூஉவென்றாற்போல அறிகுறிமாத்திரையாய்நின்றதனை இங்ஙனங்குற்றுயிரொன்றதன்றி அஃதோரெழுத்தன்றாதலின். எகர ஒகர ஔகாரங்களை விதந்தோதவே யேனையுயிர்களடைக்கேற்ற மெய்களோடீறுமென்ப துபெற்றாம். முதலுஞ்சார்புமாய்வகுத்து விரித்துக்கொண்ட வெல்லாவெழுத்து முயிருமெய்யு மாய்தமுமாயடங்கலின் முதலுமீறுமாகாத வாய்தத்தை

பொழிந்தொழிந்த வுயிருமெய்யுமாய விரண்டனையு முயிர்முத
ன் மெய்ம்முத லுயிரீறுமெய்யீறென வகுத்துக்கொண்டார் மே
ல்வருப் புணர்ச்சிவிதியடங்குதற்பொருட்டெனக்கொள்க. (௫௩)

(௱௬) நின்றநெறியேயுயிர் மெய்முதலீறே. *

(எ-ன்) எழுத்தினதுமுதலு மீறுமாமாறுணர்- த்று. (ப-ரை)
நின்றநெறியே- மெய்முன்னும் உயிர்பின்னுமாக ஒலித்துநின்ற
வழியே, உயிர்மெய்- உயிர்மெய்க்கு, முதல் - மெய்முதலாகும்,
ஈறு- உயிரீறாகும். எ-று. (பொ-ரை) உயிர்மெய்யினது முதல்
யாது அதனீறியாதெனின் ஒற்றுமுன்னுமுயிர்பின்னுமாயொலித்
துநின்றநெறியே மெய்யதன்முதலாம்உயிரதனீறாம். எ-று. ❁
எனவே யுயிருமொற்று மாய்த்முதலிய வொன்பது சார்பெழுத்
துகளு மோரெழுத்தாகலி னவற்றிற்கு முதலுமீறு மவையேயா
மென்பதுஅருத்தாபத்தியாற் கூறினார். இஃதெஞ்சியசொல்லி
னெய்தக்கூறலென்னு முத்தி. இத்தொடக்கத்தவல்லன சொல்
லின்முடிவி னப்பொருண் முடித்தலென்னு முத்தி. முன்னர்
மொழிக்குமுதலீறென்றவற்றுள்ளும் பின்னர் இடைநிலைபோலி
பதம்புணர்பென்பவற்றுள்ளும் உயிர்மெய்யைப்பிரித்துத் தனி
மெய்யுந் தனியுயிரும்போலவைத் திலக்கணங்கூறலின் மொழிக்
குமுதலுமீறுங் கூறுதலன்றியெழுத்திற்கு முதலு மீறுங்கூறி
னாரென்றுணர்க. இச்சூத்திரஞ் சிங்கநோக்கம். அற்றன்றியாற்
றொழுக்காய் முன்னின்ற மொழிமுதலீறுரைக்குஞ் சூத்திரங்க
ளையே தொடர்ந்துவந்த தென்பாரு முளரர். பின் வழிமுன் கவ்
வாமென்றும் இயல்பினும்விதியினு நின்றவுயிர்முன் க ச த ப
மிகுமென்றும் உயிர்மெய்யினுயிரையு மெய்யையும்வேறுபிரித்
தோதுவ திலக்கணமன்றாய்முடியுமாதலினது பொருந்தா தென்
க. எண்ணதிகாரத்து ளுயிர்மெய்யை யோரெழுத்தாகவெண்ணி
னாரீண்டிரண்டாகவைத் திலக்கணங் கூறுவதென்னையெனின், அ
ப்பொடுபெய்தவுப்பேபோல வுயிரொடுபுணர்த்தியமெய் தன்
னளவுதோன்றா தொன்றாய் நிற்றலி னொன்றுமாய் ஒற்றுமுன்
னு முயிர்பின்னுமா யொலித்துநின்றநெறியானி ரண்டுமாய் நி
ற்றலினென்றுணர்க. இவ்வாற்றா னுயிர்மெய் யென்னுஞ்சொல்
மாத்திரைவகையானும்மைத்தொகைப்புறத்துப்பிறந்தவன்மொ
ழித்தொகையாகவு மொலிவகையா னும்மைத் தொகையாகவுங்
கொள்ளப்படும், (௫௪)

(௱௭) கசதபவொழித்தவீ ரெழன்கூட்ட - மெய்ம்மயக்குட்
னிலை ரழவொழித்தீரெட் - டாகுமிவ்விருபான் மயக்குமொ
ழியிடை - மேவுமுயிர்மெய் மயககளவின்றே, *

(எ-ன்) நிறுத்தமுறையானே மொழிக்கிடைநிலையா மாறுணர்

த்துங்கா லுயிருட னுயிர்மயங்கலும் மெய்யுடன் மெய்மயங்கலு மிவ்விரண்டுமாறிமயங்கலுமென மூன்றாகவகுக்கப்படும் இவற்று ளுயிருட னுயிர் மயங்குந்தன்மையின்மையி னதனையொழித்தே னையிரண்டனையுமுணர்-ற்று.(ப-ரை கசதப-கசதபவென்னு நான்கையும், ஒழித்த-நீக்கிய, ஈரேழன்கூட்டம்-பதினான்குமெய்களும் பிறமெய்களோடுகூடுங் கூட்டம், மெய்ம்மயக் (காகும்) - வேற்றுநிலைமெய்ம்மயக்கமாகும், ரழ- ரழவென்னுமிரண்டனையும், ஒழித்து நீக்கி, ஈரொட்டு- மற்றைப்பதினாறுமெய்களும், (கூட்டம்) - தம்மோடுகூடுங்கூட்டம், உடனிலை (மெய்ம்மயக்) காகும்-உடனிலை மெய்ம்மயக்கமாகும், இவ்விருபான்மயக்கும் - இவ்விருவகை மயக்கமும், மொழி- ஒருமொழிக்குந் தொடர்மொழிக்கும், இடை - நடுவில், மேவும்- வரும், உயிர்மெய்- உயிருடன்மெய்யும் மெய்யுடன் உயிரும், மயக்கு - மாறிமயங்குமயக்கத்திற்கு, அளவின்று- அளவில்லைவேண்டியவாறேமயங்கும். எ-று. (பொ-ரை) மெய்பதினெட்டனுட் க ச த ப வென்னுநான்கையு மொழித்த பதினான்குமெய்யும் பிறமெய்களோடு கூடுங்கூட்டம் வேற்று நிலைமெய்ம்மயக்கமாம் ரகார ழகாரமென்னுமிரண்டனையுமொழித்தொழிந்த பதினாறுமெய்யுந் தம்மோடு கூடுங்கூட்ட முடனிலை மெய்ம்மயக்கமாம்இவ்விரண்டுபகுதிமயக்கமுமொழிக்கிடையே வரும். இவ்வாறுமெய்யுடன்மெய்மயங்குதலன்றி உயிருடன்மெய்யும் மெய்யுட னுயிருமாறி உயிருமெய்யு மயங்குமயக்கத்திற்கு வரையறையின்று வேண்டியவாறேமயங்கும். எ-று. ❁ கூட்டமெனினு மயக்கமெனினுமொக்கும். உடனிலையென்பதனைப் பிறமெய்யென்பதுபெற்றாம். மொழியென்றது ஒருமொழி தொடர்மொழியென்னு மிரண்டனையும். உயிருமெய்யுமயங்குதற் கிடம்விதந்துகூறாது பொதுப்படக்கூறினர் மொழியினு முயிர்மெய்யென்னு மோரெழுத்தினும்வருதலின். இச்சூத்திரத்தான் மெய்யுடன்மெய் மயங்குங்காற் க ச த ப வென்னுநான்குந் தம்மொடுதாமே மயங்குமெனவும் ர ழ வென்னு மிரண்டுந் தம்மொடுபிறவே மயங்குமெனவும் ஒழிந்தபன்னிரண்டு மெய்யுந் தம்மொடுதாமும் பிறவுமயங்குமெனவும் பெற்றாம். உயிருமெய்யுமயங்குதற்குதாரணம்- அல்- வில்-(எ-ம்) கா- (எ-ம்) மொழிக்கண்மயங்கின. க - எனவெழுத்தில்கண்மயங்கின. மெய்யுடன் மெய் மயங்குதற்குதாரணம் மேல்வருஞ் சிறப்புச் சூத்திரங்களிற்காண்க. இவ்விடைநிலையை ஒருமொழி தொடர்மொழி யென்னுமிரண்டினுங்கொள்ளாது ஒருமொழிக்கேயெனக் கொள்வாருமுளர். எவ்விடத்துவரினு மிரண்டெழுத்திணங்கிப் பொருந்து

ம் பொருத்துவாயை யிடைநிலையென்றோதலானு மிணங்காதன வரின் விகாரப்படுதலானு மது நூற்கருத்தன்றெனக் இனி உயிர்மெய் மயக்களவின்றென்பதற்கு உயிர்மெய்முன்னுயிர்மெய் மயங்குதல் வரையறையின்றெனப் பொருள்கூறுவாருமுளர். இங்ஙனம் உயிர்மெய்யையிரண்டெழுத்தாகப்பிரித்து மயக்கவிதி கூறுவாரதனையே யொன்றாகவைத்து மயக்கவிதிகூறா ராதலானுங் கூறினுமிடைநிலை மயக்கமுழுவது மிச்சூத்திரத்தடங்காமையானுமது பொருந்தாதெனக. (௫௫)

(௱௰௧) ஙம்முன்கவ்வாம் வம்முன்யவ்வே. *

(எ-ன்) வேற்றுநிலை மெய்ம்மயக்கத்துள் விதந்துசிறப்புவிதியுணர் - ற்று. (ப-ரை) ஙம்முன்- ஙகரத்தின்முன், க- ககரமும், வம்முன் - வகரத்தின்முன், ய- யகரமும், ஆம் - மயங்கும். எ-று. (பொ-ரை) ஙகரமுன்னர்க் ககரமும் வகரமுன்னர் யகரமுமயங்கும். எ-று. ※ [உ-ம்] கங்கன்- தெவ்யாது- எனவரும். (௫௬)

(௱௰௨) ஞநமுன்றம்மினம் யகரமொடாகும். *

(எ-ன்) இதுவுமது. (ப-ரை) ஞநமுன்- ஞகர நகரங்களின்முன், தம்மினம்-அவற்றிற்கினமாகிய சகரதகரங்களும், யகரம்-யகரமும், ஆகும் - மயங்கும், எ-று. (பொ-ரை) இவ்விரண்டு மெய்முன்னருந்தமக்கினமாகிய சகரதகரங்களும் யகரமுமயங்கும். எ-று. ※ [உ-ம்] கஞ்சன்- உரிஞ்யாது- கந்தன்- பொருந்யாது- எனவரும். (௫௭)

(௱௰௩) டறமுன்கசப மெய்யுடன்மயங்கும். *

(எ-ன்) இதுவுமது. (ப-ரை) டறமுன் - டகர றகரங்களின்முன், கசபமெய்- கசப என்கிறமூன்றுமெய்களும், உடன்மயங்கும்- இணங்கிமயங்கும், எ-று (பொ-ரை) இவ்விரண்டுமெய்முன்னருங் கசப வென்னு மூன்றுமெய்யு மிணங்கிமயங்கும். எ-று. ※ [உ-ம்] கட்கம்- கட்சி- நுட்பம்- கற்க- கற்சிறார்- கற்ப- என வரும். (௫௮)

(௱௰௪) ணனமுன்னினங்கச ஞபமய்வவ்வரும். *

(எ-ன்) இதுவுமது. (ப-ரை) ணனமுன் - ணகர னகரங்களின்முன், இனம்- அவற்றிற்கினமாகிய டகரறகரங்களும் கசஞபமயவ- ககரமுதலியவிவ்வேழுமெய்களும், வரும்- மயங்கும், எ-று. (பொ-ரை) இவ்விரண்டுமெய்முன்னருந் தமக்கினமாகிய டறக்களும் கசஞபமயவவென்னு மேழுமெய்யு மயங்கும். எ-று. ※ [உ-ம்] விண்டு- வெண்கலம் - வெண்சோறு- வெண்ஞமலி - வெண்பல்- வெண்மலர்- மண்யாத்து- மண்வலிது - (எ-ம்) புன்றலை- புன்கண்- புன்செய்- புன்ஞமலி- புன்பயிர்- புன்மலர் - பொன்யாது- பொன்வலிது- (எ-ம்) வரும். (௫௯)

(௪௰௫) மம்முன் பயவ மயங்குமென்ப. *

(எ-ன்) இதுவுமது, (ப-ரை) மம்முன்- மகரத்தின்முன், பயவ- பயவ வென்னுமூன்றுமெய்களும், மயங்குமென்ப- மயங்குமென்றுசொல்லுவர்புலவர், எ-று. (பொ-ரை) மகரமெய்முன்னர்ப் பகர யகர வகரங்கண்மயங்குமென்று சொல்லுவர்புலவர். எ-று, ❁ [உ-ம்] கம்பன்- கலம்யாது- கலம்வலிது- எனவரும். ()

(௪௰௬) யரழமுன்னர் மொழிமுதன்மெய்வரும். *

(எ-ன்) இதுவுமது. (ப-ரை) யரழமுன்னர்- யரழவென்னுமூன்றுமெய்களின்முன், மொழிமுதன்மெய் - மொழிக்குமுதலாக நின்றபத்துமெய்களும், வரும்- மயங்கும்; எ-று. (பொ-ரை) இம்மூன்றுமெய்முன்னரு மொழிமுதற்கு விதந்துகொண்ட பத்துமெய்புமயங்கும். எ-று ❁ [உ-ம்] வேய்-வேர்-வீழ் கடிது-சிறிது-தீது பெரிது-நீண்டது-மாண்டது-ஞான்றது-யாது-வலிது- (எ-ம்) வேய்ங்குழல்- ஆர்ங்கோடு- பாழ்ங்கிணறு- (எ-ம்) வரும் சுருங்கச்சொல்லலென்னும் வனப்புவகையான்மொழிமுதன்மெய்யெனக்கூறலின் யகரத்தின்முன் யகரமயங்குமுடனிலை மீண்டுக்கொள்ளாதொழிக. (கூ௩)

(௪௰௭) லளமுன்கசப வயவொன்றும்மே. *

(எ-ன்) இதுவுமது. (ப-ரை) லளமுன்- லகரளகரங்களின்முன், கசபவய- ககரமுதலியவிவ்வைந்தும், ஒன்றும் - மயங்கும், எ-று. (பொ-ரை) இவ்விரண்டுமெய்முன்னருங் கசபவய வென்னுமைந்துமெய்புமயங்கும், எ-று. ❁ [உ-ம்] வேல்- வாள்- கடிது- சிறிது- பெரிது- வலிது- யாது- எனவரும். (கூ௨)

(௪௰௮) ரழவல்லனதம்முற் றுமுடனிலையும். *

(எ-ன்) உடனிலைமெய்ம்மயக்கத்தின்சிறப்புவிதியுணர்-ற்று. (ப-ரை) ரழவல்லன- ரகர ழகரமல்லாதபதினொறுமெய்களும், தம்முன்- தமக்குமுன், தாம்- தாம், உடனிலையும் உடனின்றுமயங்கும். எ-று (பொ-ரை) ரகார ழகாரமல்லனவாகிய வேற்றுநிலைமெய்ம்மயக்கத்துட்கூறிய பன்னிரண்டுமெய்யு முடனிலைக்கே யுரிய, கசதப நான்குந் தம்முற்றுமுடனின்று மயங்கும். எ-று, ❁ [உ-ம்] அங்ஙனம்- அவ்வை- அஞ்ஞானம்- அந்நீர்- அட்டு- அற்றம்- அண்ணம்- அன்னை - அம்மை- அய்யம்- அல்லி- அள்ளல்- (எ-ம்) அக்கு- அச்சு- அத்து- அப்பு - (எ-ம்) வரும். (கூ௩)

(௪௰௯) யரழவொற்றின்முன் கசதபஙஞநம - வீரொற்றும்மரழத் தனிக்குறிலணையா. *

(எ-ன்) தனிமெய்புடன் றனிமெய்யாயு மயங்குவனவினைய வென்பதூஉ மொழிக்குறுப்பாக மயங்காதன வினையவென்பதூஉ முணர்-த்து. (ப-ரை) யரழ- யரழ வென்கிறமூன்றுமெய்

களும், முன்-இவற்றின்முன் மயங்குமென்ற, ஒற்றில்- பத்துமெய்களுள், கசதபஙஞநம- ககரமுதலாகியவிவ்வெட்டுமெய்களும், ஈரொற்றும்- தனிமெய்யும் உயிர்மெய்யுமாகி மயங்குதலன்றியும் ஈரொற்றாயுமயங்கும், ரழ- ரகார ழகாரமெய்களும், தனிக்குறில்- தனிக்குற்றெழுத்தும், அணையா- சொல்லுக்கு உறுப்பாக வருவதும் நிற்பதுமாக மயங்குவனவல்ல, எ-று. (பொ-ரை) யரழவென்னு மூன்றொற்று மிவற்றின்முன் மயங்குமெனவிதித்தபத்தொற்றுள் இங்ஙனங்கூறிய வெட்டொற்றுந்தனிமெய்யு முயிரூர்ந்தமெய்யுமாய் மயங்குவனவன்றி யீரொற்றாயுமயங்குவனவாம், ரகார ழகாரவொற்றுந் தனிக்குறிலுமயங்குந் தன்மையவாயினும் மொழிக்குறுப்பாக வருவது நிற்பதுமாய்மயங்கா. எ-று. ❁ ஈரொற்றுமாமென்னு மும்மையு மொழிக்குறுப்பாகவென்னுஞ் சொற்களுமெஞ்சிநின்றன. [உ-ம்] வேய்க்குறை- வேர்க்குறை- வீழ்க்குறை- சிறை- தலை -புறம் (எ-ம்) வேய்ங்குழல்- ஆர்ங்கோடு-பாழ்ங்கிணறு (எ-ம்) காய்ந்தனம்-நேர்ந்தனம்-வாழ்ந்தனம் - (எ-ம்) வரும். ஏனையவற்றுழிக்காண்க. அணையா வென்றவாகாதனவற்றிற்குதாரணங் காட்ட லாகாமையுணர்க. (௬௪)

(௱௨௰) லளமெய்திரிந்த னணமுன்மகார- நைந்தீரொற்றாஞ் செய்யுளுள்ளே. *

(எ-ன்) செய்யுட்குரியவா யீரொற்றாய்நிற்பன விளையவென்பதுணர்-ற்று. (ப-ரை) லளமெய்திரிந்த- லகார ளகாரவொற்றுத்திரிந்த, னணமுன்- னகாரணகாரமுன்வரும், மகாரம்-மகரவொற்றானது, நைந்து - முன்சொன்னபடியேகுறுகி, ஈரொற்றும்- அந்தமெய்களுடனே யீரொற்றுடனிலையாய், செய்யுளுள்ளே- பாட்டினுள். எ-று (பொ-ரை) லகார ளகார வொற்றுத்திரிந்த னகார ணகாரங்கண்முன் வருமகரவொற்று முன்னர்க்கூறியவாறே குறுகியவற்றுட னீரொற்றுடனிலையாஞ் செய்யுளகத்து. எ-று. ❁ [உ-ம்] "திசையறி மீகானும் போன்ம்.„ (எ-ம்) "மயிலியன் மாதர்மருண்ம்.„ (எ-ம்) வரும். மகாரநைந்தெனவநுவதித்தார் மகரங்குறுகுதற்குத்தொடரும் னகாரணகாரங்கள் லகர ளகரந் திரிந்தனவென்பதூஉ மக்குறுக்கஞ் செய்யுட்கண்ணதென்பதூஉமுணர்த்துதற்கென்க. (௬௫)

(௱௨௧) தம்பெயர்மொழியின் முதலுமயக்கமு - மிம்முறை மாறியு மியலுமென்ப. *

(எ-ன்) மொழிமுதலி னிடைநிலைக்கட் காவதோர்புறனடை யுணர்-ற்று. (ப-ரை) தம்பெயர் - தம்முடைய பெயர்களை, மொழியின்- சொல்லிநிலைமொழிவருமொழிகளாகப்புணர்க்குமிடத்து, முதலும்- மொழிமுதலுக்கும், மயக்கமும் - இடைநிலைமயக்கத்

திற்கும், இம்முறை- இப்படிவிதிக்கப்பட்டனவும் விலக்கப்பட்
டனவுமாகிய வெல்லாவெழுத்துகளும், மாறியுமிபலும்-முதலாகி
யும்மயங்கியும்வரும், என்ப-என்றுசொல்லுவர்புலவர். எ-று பொ
-ள) எழுத்துகடப்பெயர்களை மொழிந்து நிலைமொழி வரு
மொழியாகப்புணர்க்குமிடத் தெல்லாமொழிமுதற்கு மிங்ஙனம்
விதித்தனவும் விலக்கியனவுமாகிய வெல்லாவெழுத்து முதலாம்
மயக்கத்திற்கு இங்ஙனம்விதித்தனவும் விலக்கியனவு மாகிய வெல்
லாவெழுத்து மயங்குமென்றுசொல்லுவர்புலவர். எ-று. ❁ இங்
ஙன மெல்லா வெழுத்துந் தனித்தனி யதற்கதுவேமுதலாக வரு
மெனவே யீற்றிற்கு விதித்தனவும் விலக்கியனவுமாகிய வெல்லா
வெழுத்துந் தனித்தனி யதற்கதுவேயீறாக வருமெனச் சொல்லா
தே அருத்தாபத்தியா னமைதலி னீறுமென மிகைபடக்கூறு
தொழிந்தார். [உ-ம்] "அவற்றுள் - ளஃகான்முன்னர் யவ
வுந்தோன்றும்," என்புழி லகரமுதலாகியுங் கூனிறுதிளகரவொ
ற்றோடு மயங்கியுநின்றது. கெப்பெரிது என்புழி எகரமெய்
யோ டொன்றாய்நின்றது. பிறவும் வரையலறயின்றி வருதல்காண்க
ஆய்தத்திற்குப் பிறப்பதிகாரத்துள் வருவாய்கூறியவழி மயக்கவி
தியமைந்துகிடந்தமையானுந் தன்பெயர்மொழிய வாராமையா
னுங்கூறுதொழிந்தார். (சாள)

(௱௨௨) மகரவிறுதி யஃறிணைப்பெயரி - னகரமொ டுறழா
நடப்பன வுளவே. *

(எ-ன்) நிறுத்தமுறையானே போலியாமா றுணர்த்துவான்
றொடங்கி மொழியிறுதிப்போலியுணர் - த்து. (ப-ள) அஃறி
ணைப்பெயரின் - பால்பகாவஃறிணைப் பெயர்களிடத்து, இறுதி-
ஈற்றிலேநின்ற, மகரம் - மகரமெய்யானது, னகரமொடு - னகர
மெய்யோடு, உறழா- ஒத்து, நடப்பன- நடப்பவை, உள - உண்
டு, எ-று. (பொ-ள) பால்பகா வஃறிணைப்பெயர்களினிடத்தி
றுதி மகரம் னகரத்தோடொத்து நடப்பனவுளவாம். எ-று ❁
மகரவிறுதி யென்றதனாற் பால்பகாவஃறிணைப் பெயரென்பது
பெற்றும். மகரம் னகரத்தோடொத்தலாவது பெயரிறுதிக்கண்
மகரநின்றநிலைக்களத்து னகரநிற்பினும் வேற்றுமையின்றியொ
த்தல். [உ-ம்] "அகனமர்ந்து செய்யா ளுறையு முகனமர்ந்து-
நல்விருந்தோம்புவானில்.," இதனுள்- அகம்- அகன்- முகம்- மு
கன்- (எ-ம்) தலம்- தலன்- நிலம்- நிலன்- கலம்- கலன்- நலம் - ந
லன்- வலம்- வலன்- (எ-ம்) வரும். பிறவுமன்ன. உறழா நடப்பன
உளவென்றுஞ்சொல்லாற்றலா னுறழாதனபெரும்பாலவென்க.
அவை- வட்டம்- குட்டம்- மாடம்- கூடம்- முதலாயின. பால்ப

காவஃறிணைப் பெயர்களிடத்தியல்பாய மகரவிறுதிநிலையின் னகரம்போலியாய் வருமெனவே அகன் முகன் முதலியசொற்களைப்பால்பகுத்தவாறேயவறிசொல்லெனக் கொள்ளற்க வென்பதூஉம் எகின்- பயின்- குயின் - வயின் - முதலிய னகரவீற்றுப்பெயர்க் கிவ்வையப்பாடில்லையென்பதூஉம் பெற்றாம் இனியிவ்விறுதிப்போலியை முற்கூறியவதனாற் சுரும்பு - சுரும்பர்- அரும்பு- அரும்பர்- சாம்பல்- சாம்பர்- பந்தல்- பந்தர்- முதலியனவுங்கொள்க. (௬௭)

(௱௨௩) அ ஐ முதலிடை யொக்குஞ் ச ஞ ய முன். *

(எ- ன்.) மொழிமுதற்போலியு மொழியிடைப்போலியுமுணர்- த்து. (ப- ரை) அ ஐ - அகரமும் ஐகாரமும், முதல் - சொல்லுக்குமுதலிலும், இடை- நடுவிலும், ஒக்கும் - வேறுபாடில்லாமலொத்துநடக்கும், சஞயமுன் - சகர ஞகர யகரங்களுக்குமுன்வந்தால், எ-று. (பொ-ரை) மொழிமுதலினு மிடையினும் அகர ஐகாரங்கள் வேற்றுமையின்றியொத்து நடப்பனவாம் சகர ஞகர யகரங்கட்கு முன்னர்வருமாயின், எ-று. ✲ ஈண்டு முன்னென்றது காலமுன்னெனக்கொள்க. [உ - ம்] பசல் - பைசல் - மஞ்சு- மைஞ்சு- மயல்- மையல்- (எ-ம்) அமச்சு- அமைச்சு- இலஞ்சி- இலைஞ்சி- அரயர்- அரையர்- (எ-ம்) வரும் பிறவுமன்ன. (௬௮)

(௱௨௪) ஐகான்யவ்வழி நவ்வொடுசில்வழி - ஞஃகானுறழு மென்மரு முளரே. *

(எ-ன்) இதுவு மொழியிடைப் போலியுணர் - த்து. (ப-ரை) சில்வழி - சொல்லுக்குநடுவே சிலவிடத்து, ஐகான் (வழி) - ஐகாரத்தின்பின்னும், யவ்வழி - யகரமெய்யின்பின்னும், நவ்வொடு- இயல்பாய்வரும் நகரமெய்யினோடு, ஞஃகான்- ஞகரமெய்யானது, உறழும்- ஒத்துநடக்கும், என்மரும்- என்றுசொல்வாரும், உளர்- சிலருண்டு. எ-று. (பொ-ரை) மொழியிடைக்கட் சிலவிடத்து ஐகாரத்தின்பின்னும் யகரவொற்றின்பின்னு மியல்பாய்வரும் நகரத்தோடு ஞகரமுறழுமென்று சொல்லுவாருமுளர். எ-று ✲ இப்போலி யருகிவருதலிற் சில்வழியென்றும் எல்லார்க்குமொப்பமுடிந்த தன்றாகலி னென்மருமென்றுங் கூறினார். [உ - ம்] "செய்ஞ்ஞின்ற நீலமலர்கின்ற தில்லைச்சிற் றம்பலவன்-மைஞ்ஞின்ற வொண்கண்மலைமகள் கண்டு மகிழ்ந்துநிற்க-நெய்ஞ்ஞின் றெரியும்விளக்கொத்த நீல மணிமிடற்றான்- கைஞ்ஞின்ற வடல்கண் டாற்பின்னைக் கண்கொண்டு காண்பதென்னே." (எ-ம்) ஐஞ்ஞூறு (எ-ம்) வரும். இச்சூத்திரம் பிறன்கோட்கூறலென்னுமுத்தி. "மண்யாத்த கோட்ட மழகளிறு தோன்றுமே." "மண்ஞாத்த கோட்ட மழகளிறு தோன்றுமே." (எ-ம்) "பொ

ன்யாத்ததார்ப்புரவி பரிக்குமே,,, "பொன்ஞாத்ததார்ப்புரவி ப
ரிக்குமே.,, (எ-ம்) வருமொழி வினைக்குமு ணர் யாநின்றநிலைக்க
ளத்து ஞாநிற்பினுமொக்கும்போலிக்த ஆசிரியர் தொல்காப்
பியர் "ண ன வென் புள்ளிமுன் யாவு ஞாவும் - வினையோ ரனை
ய வென்மனூர் புலவர்.,, எனச்சூத்திரஞ்செய்தவாறு இவ்வாசிரி
யருஞ் சூத்திரஞ்செய்யாதொழிந்த விறந்ததுவிலக்க லென்னுமுத்
தி. பிறவுமன்ன. இம்மூன்றுசூத்திரத்தானுங்கூறிய போலிக
ளை இடைநிலை மயக்கத்தின் பாற்படுத்துப் பொருள் கூறுவாரு
முளர். இங்ஙனங்கூறியவெழுத்துகண் மொழிக்குறுப்பாகவொ
ன்றுநின்ற நிலைக்களத்து மற்றொன்றதுபோல மொழிநிரப்ப நி
ற்பதன்றி யொன்றோடொன்று மயங்கியிரண்டெழுத்து முட
னிற்பதின்மையானு முதலீ றிடைநிலைகட்குப் புறனடையுங் கூ
றிக்குறைவறுத்தமையானு முறழா நடப்பனவென்றும் ஒக்கு
மென்றும்உறழுமென்றும்உவமவுருபுகொடுத்து இம்மூன்றுசூத்
திரத்துங்கூறுதலானுமது பொருந்தாதென்க. (௬௯)

(௱உ௫) அம்முனிகரம் யகரமென்றிவை - யெய்தினையொத்
திசைக்குமவ்வோ- டுவ்வும்வவ்வு மௌவோரன்ன. *

(எ-ன்) வடநூலார் சந்தியக்கரமென்பவற்றுள் ஐ ஔ என்னு
நெட்டெழுத்துகளின் வடிவுபுலப்படுதலுணர் - ற்று. (ப-ரை)
அம்முன்- அகரத்தின்முன், இகரம்- இகரமும், யகரம் - யகரமெ
ய்யுபும், என்றிவை - என்றுசொல்லப்பட்ட விவை, ஒத்து தம்மு
ளொத்து, எய்தின் - பொருந்தினல், ஐயிசைக்கும் - ஐயென்கிற
நெட்டெழுத்து ஒலிக்கும், அவ்வோடு - அகரத்தோடு, உவ்வும் உ
கரமும், வவ்வும், வகரமெய்யும், (ஒத்து) - தம்முளொத்து, ஓர
ன்ன- ஒருதன்மையனவாக, (எய்தின்) - பொருந்தினல், ஔ (வி
சைக்கும்) - ஔவென்கிறநெட்டெழுத்து ஒலிக்கும். எ-று.(பொ
-ரை) அகரத்தின்முன்ன ரிகரமும் யகரமுந் தம்முளொத்தெய்தி
ன் ஐயென்னுநெட்டெழுத்தொலிக்கும் அகரத்தோடுகரமும் வ
கரமுந் தம்முளொத் தொருதன்மையவாக வெய்தின் ஔவென்
னுநெட்டெழுத்தொலிக்கும். எ-று. ❁ மொழிந்தபொருளோ
டொன்றவவ்வயின் மொழியாததனை முட்டின்றுமுடித்த லென்
னுமுத்தியான் அகரக்கூறுமிகரக்கூறுந்தம்முளொத்தைகரமொ
லிக்கும் அகரக்கூறு முகரக்கூறுந் தம்முளொத் தௌகரமொலி
க்குமெனவுங்கொள்க. இனி இச்சூத்திரத்திற் கிவ்வாறுபொருள்
கொள்ளாது தமிழ்நூற்பயிற்சி யொன்றுமேயுடையாரெழுத்து
ப்போலி யுணர்த்திற்றென்று பொருள்கொண்டு- அஇ ஐ-அய் ஐ.
கஇ- கை. கய்-கை. அஉ- ஔ. அவ்- ஔ. கஉ- கௌ. கவ் - கௌ.
என வுதாரணங்காட்டுவர். அவ்வாறுபொருட்கொண் டுதாரணங்

காட்டுமொற்றுப் பெரும்பய னின்மையானும் வடநூலோடு மா றுபடுமாதலானும் மதுபொருந்தாதென்க. (௭௰)

(௱௨௬) மெய்களகரமு நெட்டுயிர்காரமு - மையௌ கானு மிருமைக்குறிலிவ் - விரண்டொடு கரமுமாஞ் சாரியை பெறும் பிற *

(எ-ன்)மேலெழுத்திலக்கணங்கூறியமுகத்தாற் போந்தவெழுத்தி ன்சாரியைகளைத்தொகுத்தினமடைத்தனுதலி-ற்று (ப-ரை)மெய்க ள்- ஒற்றுகள், அகரமும்-அகரச்சாரியையும், நெட்டுயிர் உயிர்நெ டில்கள், காரமும்- காரச்சாரியையும், ஐயௌ- அவற்றுள், ஐகார ஔகாரங்கள், கானும்- காரச்சாரியையுடனே கான்சாரியையும், இ ருமைக்குறில் - உயிர்க்குறிலு முயிர்மெய்க்குறிலும், இவ்விரண் டொடு - காரம் கான் என்கிற விரண்டுடனே, கரமும் - கரச்சாரி யையும், ஆம்- ஆகின்ற, சாரியை- சாரியைகளை, பெறும்- பெறு ம், எ-று. (பொ-ரை) மெய்கள் அகரச்சாரியையும் நெட்டுயிர்கள் காரச்சாரியையும் அவற்றுள் ஐகார ஔகாரங்கள் காரச்சாரியையு டனேகான்சாரியையும் உயிர்க்குறிலு முயிர்மெய்க்குறிலுங்காரங் கானென்னு மிவ்விரண்டுடனே கரச்சாரியையும்பெறும். எ-று. ※ மெய்களை முற்கூறினார் அவற்றிற்கு அச்சாரியையின்றியமை யாமையின். மெய்க ளவ்வுமென்னு தகரமுமென்றார் அங்ஙனங்க ரங் காரங்கான்கள்வரிற் சாரியையகரத்தினது சாரியை யென்று கோடற்கு. ஆஞ்சாரியை யென்றார் கார முதலிய சாரியைகளை யேற்றபெற்றிகோடற்கு. [உ-ம்] க-ங (எ-ம்) ஆகாரம் ஐகாரம்-ஔ காரம். (எ-ம்) ஐகான்- ஔகான்- (எ-ம்)- அகாரம் - அஃகான் அ கரம்- மகாரம்- மஃகான்- மகரம் -(எ-ம்)- வரும். பிறவுமன்ன. பிறவென்றமையாற் குறிலோடுகான்புணருங்காலிடையே யாய்த ந்தோற்றமும் வழங்கும் பிறசாரியைகளுங் கொள்க. உயிர் மெய் நெடிலுமாய்தமுங் கூறுதொழிந்தார் உயிர்மெய்நெடிலி ங்ஙனங்கூறிய மூன்றுசாரியையு மேலாமையானும் ஆய்தப்பிற வழி வாராமையின் மொழியிடைப்படுத் தம்மொழியிறுதிக்கட் பிறசாரியை தந்துயிர் வருக்கத் திறுதிக் கணமேண வழங்குதலானு மென்க. விகற்பத்தின்முடித்தலெனனு முத்தியான் மேல் விரிந் துமுடிந்து கிடந்தனவற்றை புலப்படவேண்டி மீண்டுத் தொ குத்து முடித்தலான் இச்சூத்திர முடிந்தது முடித்தலென்னு முத்தி. (௭௧)

(௱௨௭) மொழியாய்த் தொடரினு முன்னனைத்தெழுத்தே! *

(எ-ன்) இவ்வெழுத்துக்காவதோர் புறனடையுணர்-ற்று (ப-ரை) எழுத்து- இவ்வெழுத்துகள், மொழியாய் - பதமாயினும், தொ டரினும் - அப்பதந் தம்மோடும் உருபோடும் புணர்ந்தாலும்,

முன்னனைத்து - முன்சொல்லப்பட்ட அப்பதத்திலக்கணத்தையு முடையனவாகும், எ-று. (பொ-ரை) இவ்வெழுத்துகள் பதமாயினும் அப்பதந்தம்மோடுமுருபோடும்புணரினு மவற்றும்பிறழாது முன்னர்க்கூறிய அப்பதத்திலக்கணத்தையுமுடையவாம். எ-று. ❁ எழுத்துச்சுண்ணத்தின்கணரிசனமுதலியபோலாது மாலையின்கண்மலர்போலவற்றினிற்றலின் முன்னனைத்தென்றார். எழுத்தென்பது. சாதியொருமையாதலின் அனைத்தென்னுமொருமையோடுமுடிந்தது. முன்னனைத்தாதல் பதவியன் முதலிய நான்கியலுள்ளுங்காண்க. (௭௨)

எழுத்தியன் முற்றிற்று.

இரண்டாவது

பதவியல்.

(௱உஅ) எழுத்தே தனித்துந் தொடர்ந்தும் பொருடரிற்பதமா மதுபகாப் பதம்பகு பதமென - விருபாலாகி யியலுமென்ப. *

(எ-ன்) நிறுத்தமுறையானே பதத்தினதிலக்கண முணர்த்துவான்றொடங்கி யெழுத்தாற் பதமாதலும் அஃதித்துணையவென்பதூஉமுணர் - த்று. (ப-ரை) எழுத்தே - எழுத்துகள் தாமே, தனித்தும்- ஒவ்வொன்றாகத்தனித்தாகிலும், தொடர்ந்தும் - இரண்டுமுதலாகத்தொடர்ந்தாகிலும், பொருள்- பிறபொருளைத்தரின்- காட்டுமேயானால், பதமாம்- பதமாகும், அது- அப்பதமானது, பகாப்பத (மென) - பகாப்பதமெனவும், பகுப்தமென- பகுபதமெனவும், இருபாலாகி - இரண்டுவகையினையுடையதாகி, இயலும்- நடக்கும், என்ப- என்றுசொல்லுவர்புலவர். எ.று (பொ-ரை) எழுத்துகடாமே யொவ்வொன்று தனித்து மிரண்டுமுதலாகத்தொடர்ந்தும் பிறபொருளைத்தருமாயி னதுபதமாம் அப்பதம் பகாப்பதமெனவும் பகுபதமெனவு மிரண்டுபகுதியவாகி நடக்குமென்றுசொல்லுவர்புலவர். எ-று. ❁ எழுத்தானும்பதம்

அரிசனமுதலியவற்றாற் சமைத்த சுண்ணம்போலாது மலராற் சமைத்தமாலைபோனிற்றலினெழுத்தேயென்றும் ஒரெழுத்தேனும்பிறபொருடருதலிற்பதமாமென்பார்தனித்தென்றும் ஒன்றிரண்டு பலவென்பன வடநூல்வழக்கு ஒன்றல்லனவெல்லாம் பலவென்பது தமிழ்நடையாகலின் வடநூல்வழக்குப்பற்றி ஆசிரியர்தொல்காப்பியர் "ஓரெழுத் தொருமொழி யீரெழுத் தொருமொழி- யிரண்டிறந்திசைக்குந் தொடர்மொழி யுளப்பட - மூன்றே மொழிநிலை தோன்றிய நெறியே" எனக்கூறினாரேனுங் கல் வில் என்றற்றொடக்கத் தீரெழுத்தொரு மொழிகளு மொன்றோடொன்றுதொடர்ந்துநின்றே பிறபொருளுணர்த்தலி னிவற்றைத் தொடர்ந்தனவல்லவெனக் கூறினாரல்லரென்பதற்குத் தொடர்மொழியென வாளாகூறா திரண்டிறந்திசைக்குந் தொடர்மொழியென அடைகொடுத்தோதியதே சான்றாகலாற் றமிழ்நடைபற்றி "ஓரெழுத் தொருமொழி யீரெழுத்தொருமொழி- யிரண்டிறந் திசைக்குந் தொடர்மொழி யுளப்பட - மூன்றேமொழிநிலை தோன்றிய நெறியே" என்றார்க்கிரண்டெழுத்துந்தொடர்ந்தனவல்லவெனிலது மொழியு மன்றென்பார் தனிநிலையொழிந்தன வற்றைத் தொடர்ந்தென்றும் இறிஞி மிறிஞி யெனிற்றொடருமேனுந் தன்னையுணர்த்துமன்றிப் பிறபொருடாராமையிற் பதமாகாதென்பார் பொருடரினென்றும் "தன்னையுணர்த்தி னெழுத்தாம் பிறபொருளைச் - சுட்டுதற்கண்ணேயாஞ்சொல்." என்பவாகலிற் பொருளென்றது பிறபொருளென்பாருணர்த்தினென்றது தரினென்றும் அணுவென்னு மொலிநுட்பத்தா னெழுந்தாணுற்போல வெழுத்தென்னு மொலிநுட்பத்தான் மொழியாமென்பார் பதமாமென்றும் இப்பதவியலுக்கு மேற்கோளாரியமென்பார் மொழியென்றது பதமென்றுங் கூறிலர். இச்சூத்திரத்துட் டொடர்ந்துமென்றது பிறர்நூற் குற்றங்காட்டலென்னுமதம். (௧)

(௱௨௯) உயிர்மவிலாறுந் தபநவி லைந்தும்- கவசவி னாலும் யவ்விலொன்று- மாகுநெடினொது வாங்குறிலிரண்டோ - டோரெழுத்தியல்பத மாறேழ்சிறப்பின.

(எ-ன்) மேலெழுத்துத் தனித்துந்தொடர்ந்து மொருமொழியாமென்றார் அவற்றுள் ஓரெழுத்தொருமொழி யிவையென்பதூஉ மித்துணையவென்பதூஉ முணர்- ற்று. (ப-ரை) உயிர்மவில்- உயிர்வருக்கத்திலும் மவ்வருக்கத்திலும், ஆறும் - அவ்வாறும், தபநவில்- தவ்வருக்கத்திலும் பவ்வருக்கத்திலும் நவ்வருக்கத்திலும், ஐந்தும்- அவ்வைந்தும், கவசவில்- கவ்வருக்கத்திலும் வவ்வருக்கத்திலும் சவ்வருக்கத்திலும், நாலும் - அந்நான்கும், யவ்வில்-

யவ்வருக்கத்தில், ஒன்றும் - ஒன்றும், ஆகுநெடில் - ஆகுநெட்டெழுத்தாலாகியமொழிநாற்பதும், நொ - நொவ்வும், து - துவ்வும், ஆங்குறில் - ஆகுங்குற்றெழுத்தாலாகியமொழி, இரண்டொடு - இரண்டுடனே, ஓரெழுத்தியல்பதம் - ஓரெழுத்தாலாகியமொழிகள், ஆறேழ் - நாற்பத்திரண்டும், சிறப்பின - சிறப்பினவாம். எ-று. (பொ-ரை) உயிர்வருக்கத்து மவ்வருக்கத்துமவ்வாறும் தவ்வருக்கத்தும் பவ்வருக்கத்து நவ்வருக்கத்தும் ஐவ்வைந்தும் கவ்வருக்கத்தும் வவ்வருக்கத்துஞ் சவ்வருக்கத்து நந்நான்கும்யவ்வருக்கத்தொன்று மாகு நெட்டெழுத்தாகிய மொழிநாற்பதும் நொவ்வுந் துவ்வுமாகுங் குற்றெழுத்தாகிய மொழியிரண்டுடனே யோரெழுத்தாகியமொழி இந்நாற்பத்திரண்டுஞ் சிறப்பினவாம். எ-று. ❁ [உ-ம்] ஆ-ஈ-ஊ-ஏ ஐ ஓ-(எ-ம்) மா-மீ-மூ-மே-மை-மோ (எ-ம்) தா-தீ-தூ-தே-தை- (எ-ம்) பா-பூ-பே-பை-போ- (எ-ம்) நா-நீ-நே-நை-நோ- (எ-ம்) கா-கூ-கை-கோ-(எ-ம்) வா-வீ-வை-வௌ-(எ-ம்) சா-சீ-சே-சோ-(எ-ம்) யா-(எ-ம்) நொ-து-(எ-ம்) வரும். இவற்றுள் - ஊ - இறைச்சி. ஓ-மதகுநீர்தாங்குபலகை. பே - நுரை. நே - அன்பு. சோ - அரண். நொ-து என்னுங்குறிலிரண்டும் துன்பி-புசி-என்னுமேவல். இவை சிறப்பின வெனவே வகரவீற்றுச் சுட்டுப்பெயர்ப் பொருளையொப்புமையா னுணர்த்திநிற்றலான் ஔவென்னு மோரெழுத்தொருமொழியும் சுட்டுவினா வுவமைப்பொருளைத்தரு மிடைச்சொல்லாதலாற் குற்றுயிரைந்தாகிய வோரெழுத் தொருமொழிகளும் கௌவென்னு முயிர்மெய்யாகிய வோரெழுத்தொருமொழியுமிவைபோல்வனபிறவுஞ் சிறப்பில்லன வெனக்கொள்க.

(௱௩௰) பகாப்பத மேழும் பகுபத மொன்பது - மெழுத்தீறாகத் தொடருமென்ப. ✱

(எ-ன்) தொடரெழுத் தொருமொழியாமாறுணர் - த்து, (ப-ரை) பகாப்பதம்-பகாப்பதங்கள், ஏ(ழெழுத்தீறாக)வும் - இரண்டெழுத்துமுதலேழெழுத்தீறாகவும், பகுபதம்-பகுபதங்கள், ஒன்பதெழுத்தீறாகவும் - இரண்டெழுத்துமுதலொன்பதெழுத்தீறாகவும், தொடரும் - தொடரும், என்ப - என்றுசொல்லுவர்புலவர். எ-று. (பொ-ரை) பகாப்பதமிரண்டெழுத்துமுத லேழெழுத்தீறாகவும் பகுபதமிரண்டெழுத்துமுத லொன்பதெழுத்தீறாகவுந் தொடருமென்றுசொல்லுவர்புலவர். எ-று. ❁ [உ-ம்] அணி-அறம் - அகலம் - அருப்பம் - தருப்பணம் - உத்திரட்டாதி - (எ-ம்) கூனி-கூனன்-குழையன்-பொருப்பன்-அம்பலவன்- அரங்கத்தான்-உத்திராடத்தான்- உத்திரட்டாதியான் (எ-ம்) வரும். எழுந்திருக்கின்றார் - நடத்துவிப்பிக்கிறார் - நடத்துவிப்பிக்கின்றார்.

நடத்துவிப்பிக்கிறார்கள்- நடத்துவிப்பிக்கின்றார்கள்- நடத்துவி
ட்பிக்கின்றவர்கள்- எனப்பகுதிமுதலிய் வுறுப்புவேறுபட்டு வரு
வன வற்றிற் கிவ் வரையறை யில்லையென்க. (௫)

(௱௩௧) பகுப்பாற்பயனற் றிடுகுறியாகி- முன்னேயொன்று
ய் முடிந்தியல்கின்ற - பெயர்வினையிடையுரி நான்கும்பகாப்
பதம். *

(எ-ன்) மேற்பதம்பகாப்பதம்பகுபதமென விரண்டுபகுதி
யவாய் நடக்குமென்றா ரவற்றுட் பகாப்பத மினையவென்பதூஉ
மித்துணைய வென்பதூஉ முணர்-ற்று (ப-ரை) பகுப்பால்- பி
ரிக்கப்படுதலினாலே, பயனற்று- பகுதி விகுதிமுதலாகிய பயனி
ல்லாமல், இடுகுறியாகி- காரணமில்லாமல் இடப்பட்டகுறியாகி
முன்னேயொன்றாய்- படைப்புக்காலந்தொட்டு ஒன்றாகி, முடிந்
து-முடிந்து, இயல்கின்ற-நடக்கின்ற,பெயர் - பெயர்ச்சொல்லு
ம்,வினை-வினைச்சொல்லும், இடை- இடைச்சொல்லும்,உரி- உரிச்
சொல்லுமாகிய, நான்கும்- நான்கும், பகாப்பதம் - பகாப்பதங்
களாகும். எ-று. (பொ-ரை) பகுபதம்போலிதனைப்பகுத்துப்
பார்க்கினப்பகுப்பாற் பகுதிவிகுதி முதலியவுறுப்பின்பயன் வி
ளைவதின்றிக்காரணத்தால்வரும்பதம்போலாது இடுகுறியாய்ப்
பகுதிவிகுதிமுதலியவாறுறுப்பானும் பின்புமுடிக்கப்படுமப்ப
தம்போலாது படைப்புக்காலந்தொட்டொன்றாய் முடிந்து நட
க்கின்ற பெயர்ச்சொல் வினைச்சொல் இடைச்சொல் உரிச்சொல்
என்னும்நான்கும்பகாப்பதமாம். எ-று. ❁ பகுபதத்திற்கு மறுத
லைப்பட்டதென்பா ரிவ்வாறுகூறினார். [உ-ம்.]நிலம்- நீர்- (எ-ம்)
நட- வா- (எ-ம்.) மன்- கொல்- (எ-ம்.) உறு- கழி- (எ-ம்.) வரும்-
பிறவுமன்ன. (௬)

(௱௩௨) பொருளிடங்காலஞ் சினைகுணந்தொழிலின் - வரு
பெயர்பொழுதுகொள் வினைபகுபதமே. *

(எ-ன்) பகுபதமினையவென்பதூஉ மித்துணையவென்பதூஉ
முணர்-ற்று. (ப-ரை) பொருள்- பொருளும், இடம்- இடமும்,
காலம்- காலமும், சினை- உறுப்பும், குணம்- குணமும், தொழிலி
ன்- தொழிலுங்காரணமாக, வரு- வருகின்ற, பெயர்- பெயர்ச்
சொற்களும்,பொழுதுகொள்- தெரிநிலையாகவுங்குறிப்பாகவுங்கா
லத்தைக்கொள்ளும், வினை- வினைச்சொற்களும், பகுபதம்- பகு
பதங்களாகும். எ-று. (பொ-ரை) இங்ஙனங்கூறிய பொருளாதி
யாறுங்காரணமாகவரும் பெயர்ச்சொற்களுந் தெரிநிலையாயுங்கு
றிப்பாயுங் காலத்தைக்கொள்ளும் வினைச்சொற்களுமாகியவிரண்
டும்பகுபதமாம். எ-று. ❁ பொழுதுகொள்வினைபகுபதமாமெ
னவேஅவ்விருவகைவினையாலணையும்பெயரும் பகுபதமாமென்

பது அருத்தாபத்தியாற் கூறினரென்க. [உ-ம்.] பொன்னன்-அ
கத்தன்- ஆதிரையான்- கண்ணன்- கரியன்- ஊணன்- எனப்பெ
யர்ப்பகுபதம்வந்தன. நடந்தான் - நடக்கின்றான்- நடப்பான்-
(எ-ம்) நடந்த- நடக்கின்ற- நடக்கும் (எ-ம்) நடந்து-நடக்க-ந
டக்கின் (எ-ம்) நடவான் (எ-ம்) நடவாத (எ-ம்) நடவாமல் (எ-ம்)
தெரிநிலையுடன்பாட்டுவினைமுற்றும் எச்சமு மெதிர்மறைவினை
முற்றும் எச்சமுமாய வினைப் பகுபதங்களின் முறையே வந்தன.
பொன்னன்- அகத்தன்- ஆதிரையான்-கண்ணன்-கரியன்-ஊணன்
(எ-ம்) கரிய-பெரிய- (எ-ம்) அன்றி- இன்றி (எ-ம்) குறிப்புவினை
முற்றுமெச்சமுமாய வினைப்பகுபதங்கள்வந்தன. நடந்தான்- ந
டந்தவன்- எனத்தெரிநிலைவினையா லணையும் பெயர்ப் பகுபதம்
வந்தன. பொன்னன்- ஊணன் - எனக்குறிப்புவினையாலணையு
ம் பெயர்ப்பகுபதம்வந்தன. பிறவுமன்ன. இனி இங்ஙனம்பொ
ருளாதியாறும்அடியாகத்தோன்றிய அவ்வினைக்குறிப்புப்பெயர்க்கு
ம் வினைக்குறிப்பிற்கும் வேற்றுமையாதோவெனின் வினைக்குறி
ப்புச்சொல்லெல்லாந் தெரிநிலைவினைபோல முதனிலையிற் பொ
ருள் சிறந்துநிற்கும் வினைக்குறிப்புப்பெயர்ச்சொல்லவ்வாறன்றி
விகுதியிற்பொருள்சிறந்து நிற்குமெனவறிக. எனவே பொரு
ளாதியாறுங்காரணமாகவரும் பெயர்ச்சொற்கண் முதனிலை விகு
தியாகிய அவ்விரண்டினும் பொருள்சிறந்துநிற்குமென வுய்த்து
ணர்ந்துகொள்க எல்லாச்சொற்களையுங் கூறுங்காற் பொருள்சிற
க்குமிடத்தெழுத்தினையெடுத்தும் அயலெழுத்தினை நலிந்தும் ஏ
னையெழுத்துகளைப் படுத்துங்கூறுக. அவன்- இவன்- உவன்- எ
ன்னுஞ் சுட்டுப்பெயரும் எவன் - யாவன்- என்னும் வினாப்பெ
யரும் தமர்- நமர்- நுமர்- என்னுங்கிளைப்பெயரும் தந்தை- எ
ந்தை- நுந்தை- என்னுமுறைப்பெயரும் இவைபோல்வனபிறவு
ஞ் சுட்டுப்பொருளும்வினாப்பொருளும்கிளைப்பொருளு முறை
ப்பொருளும் காரணமாகப் பிறபொருட்குவரும் பெயராய்ப் ப
குதிவிகுதி முதலிய வுறுப்புமுறுப்பின் பொருளுந்தந்து வெள்
ளிடைக்கிடக்கும் பகுபதமாய்ப் பகுக்கப்படுதலால் இவற்றைப்
பகுபதமென்னுது பகாப்பதமெனக்கூறி னதுபொருந்தாதெ
ன்க. இனிப் பகுதிவிகுதி முதலியவுறுப்பு முறுப்பின்பொருளு
ந்தரும் ஒருசொல்லைப் பகுபதமென்றமைப்பின், சான்மை-
பொருண்மை- இன்மை- செம்மை- சிறுமை- நடத்தல்- வருதல்-
முதலியசொற்கள் பகுதிவிகுதியாகப் பகுக்கப்படுதலானும் வி
குதிக்குவேறுபொருளின்றிப் பகுதிப்பொருள் விகுதியாய் நிற்
றலானுஞ் சொன்னிலையாற் பகுபதமென்றும் பொருணிலையாற்

பகாப்பதமென்றுங்கொள்ளப்படுமென்க. மேற் சொல்லதிகாரத்துள் திணை பால் இடமுதலிய இலக்கணங்களான் விதந்துகிளையெண்ணெழுஉமுதற்பலபொருளென்னுஞ்சூத்திரமுதலியவற்று ளடங்கியவுள்ளுமுணர்த்தலாலாண்டுணரவரும்பெயர்வினையிடையுரிக ளீண்டுணர வாராவேனும் உரைத்துமென்னுமுத்தியா னவற்றைப் பகாப்பதம் பகுபதமென்றார். (௫)

(௱௩௩) பகுதிவிகுதி யிடைநிலைசாரியை - சந்திவிகார மாறினுமேற்பவை முன்னிப்புணர்ப்ப முடியுமெப்பதங்களும். *

(எ-ன்) பகுபதவுறுப்பு இத்துணையவென்பதுணர்-ற்று. (ப-ரை) பகுதி- முதனிலையும், விகுதி- இறுதிநிலையும், இடைநிலை-இடைநிலையும், சாரியை- சாரியையும், சந்தி- சந்தியும், விகாரம்- விகாரமும், ஆறினும்- ஆகியவிவ்வாறு உறுப்பினுள்ளும், ஏற்பவை - பொருளமைதிக்கு ஏற்பவைகளை, முன்னி - நினைத்து, புணர்ப்ப- அறிவுடையோர் கூட்டிமுடிக்க, எப்பதங்களும் - எவ்வகைப்பட்ட பகுபதங்களும், முடியும்- முடிவுபெறும், எ-று. (பொ-ழி) இங்ஙனங்கூறிய பகுதிமுதலிய வாறுறுப்பினுள்ளு மிப்பதப்பொருளமைதிக் கேற்பனவற்றைக்கருதி யறிவுடையோராற்கூட்டிமுடிப்ப எவ்வகைப்பட்ட பகுபதங்களு முடியும். எ-று. ※ பிரகிருதி-விகிருதி யென்னும் ஆரியமொழிகள் பகுதிவிகுதியெனத்திரிந்துநின்றன. தன்னியல்பினிற்றலிற் பகுதியென்றுந் தன்னியல்பினிற்கு மொருவ னுள்ளத்தை ஆடை அணி முதலியவற்றொருத்தி முன்னின்று தன்னிடத்தவாவ விகாரப்படுத்தல் போலத் தன்னியல்பினிற்கும் பகுதிப்பொருளை யிடைநிலைமுதலியவற்றோடு விகுதிமுன்னின்று தன்னிடத்தவாவ விகாரப்படுத்தலின் விகுதியென்றும் முதனிலைப்பகுதிக்கு மிறுதிநிலை விகுதிக்கு மிடைநிற்றலின் இடைநிலையென்றும் இவ்விகுதிமுதலிய புணர்ப்பைச்சார்ந் தாண்டைக் கியைந்துநிற்றலிற் சாரியையென்றும் நால்வகைச்சொல்லு மொன்றோடொன்று சந்தித்தலான் வருந்தோன்ற றிரிதல் கெடுதலைச் சந்தியென்றும் செய்யுட்டொடை-முதலியவற்றான் வலித்தன்மெலித்தன்முதலாக விகாரப்படுதலி னவற்றை விகாரமென்றுங் காரணக்குறியாய் வந்தன. அவ்வழிவேற்றுமைப் புணர்ச்சிக்குவிதித்த தோன்றறிரிதல் கெடுதலையுஞ் செய்யுட்குவிதித்தவொன்பதுவிகாரத்தையும் இப்பதம்பெறுமென மாட்டுதலின் இது- மாட்டெறிந்தொழுக லென்னுமுத்தி. (௬)

(௱௩௪) தத்தம் பகாப் பதங்களே பகுதியாகும். *

(எ-ன்) பகுபதவுறுப்பு ஆறனுட் பின்னையமூன்றும்புணரியலுளுணர்த்தப்படுதலி னவை யொழித்துமுன்னையமூன்றனுட்பகுதியி

னையவென்பதுணர்-ற்று.(ப-ரை)தத்தம்பகாப்பதங்களே-பெயர்
ப்பகுபதங்களுள்ளும் வினைப்பகுபதங்களுள்ளும்அதனதனுடை
ய முன்னிற்கின்ற பகாப்பதங்களே,பகுதியாகும்-பகுதிகளாகும்,
எ-று.(பொ-ரை) பெயர்ப்பகுபதங்களுள்ளும் வினைப்பகுபதங்
களுள்ளுந் தத்தமுதனிலையாய பகாப்பதங்களே யவற்றின் பகுதி
யாம், எ-று. ❁ பகுபதத்துட் பகுதிவிகுதி முதலிய வுறுப்பெ
ல்லாம் பகாப்பதமாயினும் விகுதிமுதலியவற்றை மேல்விதந்து
கூறலி னீண்டுத் தத்தம்பகாப்பதங்களென்றது முதனிலைகளையே
யென்பதுபாரிசேடத்தாற்பெற்றாம். பகுபதவுறுப்பாமுதனிலை
யிறுதிநிலை யிடைநிலைகளாய பகாப்பதங்களினின்று முதனிலைப்
பகாப்பதமொன்றனையுமே பிரித்துத்தந்தமையிற் பகாப்பதங்
களேயென்னு மேகாரம் பிரிநிலைக்கண்வந்தது. (௭)

(௱௩௫) செம்மை சிறுமை சேய்மை தீமை- வெம்மை புது
மை மென்மை மேன்மை- திண்மை யுண்மை நுண்மையிவற்றெ
தி- ரின்னவும் பண்பிற் பகாநிலைப் பதமே. *

(எ-ன்) பண்புப்பகுதிக் கெய்தியதன்மேற் சிறப்புவிதியுண
ர்-ற்று. (ப-ரை) செம்மைநுண்மை- செம்மைமுதல் நுண்மை
யீறாகச்சொல்லப்பட்ட பதினொன்றும், இவற்றெதிர்- இவைகளு
க்கு எதிரானவெண்மை முதலானவைகளும், இன்னவும் - இவை
போல்வன பிறவும், பண்பின்- பண்புப் பொருளினின்றும், ப
கா- வேறுபொருள் பகுக்கப்படாத, நிலை- நிலையையுடைய,பத
ம்- பதங்களாகும், எ-று. (பொ-ரை) இங்ஙனங்கூறிய பதினொன்
றுமிவற்றிற்கெதிரான வெண்மை கருமை பொன்மை பசுமைக
ளும் பெருமை அணிமை நன்மை தண்மை பழமை வன்மை கீ
ழ்மை நொய்மை இன்மை பருமையும் இவைபோல்வனபிறவு
ம் பகுதியாய பண்புப்பொருளினின்றும் வேறுபொருள் பகுக்
கப்படாத நிலைப்பதமாம் எ-று. ❁ இங்ஙனங்கூறிய வாய்பாடு
முதலியவெல்லாஞ் சொன்னிலையாற் பகுபதமாயினு மைவிதிக்
குப் பகுதிப்பொருளன்றி வேறுபொருளின்மையிற் பொருணி
லையாற் பகுக்கப்படாதென்பார் பண்பிற்பகாவென்றும் "மெய்
யி னியக்க மகரமொடு சிவணும்" என்றாற்போல இங்ஙனங்கூறி
யவாய்பாட்டுப் பண்புகண் மைவிகுதியின்றியியங்காமையி னி
வ்விகுதியினையும் பகுதியாக நிறீஇமேல்வரும் விகுதியோடுபுண
ர்க்கப்படுமென்பார் நிலைப்பதமென்றுங்கூறினார். பண்புப் ப
காப்பதமென்னாது பண்பிற்பகா நிலைப்பதமென்றல்சொற் பொ
ருள்விரித்தலென்னுமுத்தி. செம்மை சிறுமைமுதலியவாய்பாடு
கள் எடுத்துக்காட்டலென்னுமுத்தி. (௮)

(௱௩௬) ஈறுபோத லிடையுகர மிய்யாத - லாதிநீட லடியகர
மையாத- றன்னொற் றிரட்டன்முன் னின்ற மெய்திரித - லினமி
கலினையவும் பண்பிற்கியல்பே. *

(எ-ன்) இதுவுமது. (ப-ரை) ஈறு-இறுதியிலுள்ள மைவிகுதி யானது, போதல்- கெடுதலும், இடை- நடுநின்ற, உகரம்- உகரமானது, இய்யாதல்- இகரமாதலும், ஆதி-முதனின்றகுறிலானது, நீடல்- நெடிலாதலும், அடியகரம் - முதனின்ற அகரமானது, ஐயாதல்- ஐகாரமாதலும், தன்னொற்று- தன்மெய்யானது, இரட்டல்- நடுவேமிகுதலும். முன்னின்றமெய்- முன்னின்ற மெய்யானது, திரிதல்- வேறொருமெய்யாதலும், இனம்- வருமெழுத்திற்கினவெழுத்து, மிகல் - மிகுதலும், இனையவும் - இவைபோல்வனபிறவும், பண்பிற்கு-அப்பண்பினுக்கு, இயல்பு-இயல்பாகும். எ-று. (பொ-ரை) மேற்செம்மை சிறுமைமுதலாகத் தெரித்தவாய்பாடுகளி னிறுதிவிகுதிபோதலு மிடையினின்றவுகர மிகரமாதலுமுதனின்றகுறினெடிலாதலும் முதனின்றஅகரம்ஐகாரமாதலு மிடையேதன்னொற்றுமிகுதலு முன்புநின்ற மெய்திரிதலும் வருமெழுத்திற்கினவெழுத்துமிகுதலு மிவைபோல்வனபிறவு மப்பண்பினுக்கியல்பாம். எ-று. ※ "மெய்யி னியக்க மகரமொடுசிவணும்" என்றவகரம்பன்னீருயிரு மெய்யொடுபுணரவருங்காலத்துநீங்கினாற்போல விகுதிமுதலிய புணரவருங் காலத்துப் பண்படிநிற்க வப்பகுதிப்பொருள்விகுதிநீங்குமென்பாரீறுகெடுதலென்னாதீறுபோதலென்றும் விதந்துகூறுவிகாரங்களுளபல வலவந்தவழிக்கொள்கவென்பாரினையவென்றும் இவ்விகார மொருதலையன்றுசிவப்பன்கறுப்பனென்னும்பிறவாய்பாடுகள்போலச்செம்மையன் கருமைய னெனவு முடியுமென்பா ரெதிர்மறையும்மைகொடுத்தினையவுமென்றும் பெயர்விகுதியோடும் வினைவிகுதியோடும் பதங்களோடும் புணரினுமொருவழி யிவ்விகாரப்படுமென்பார் பகுதிக்கென்னாது பொதுமையிற் பண்பிற் கியல்பேயென்றுங் கூறினார். பதப்புணர்ச்சிக்கும்ஈண்டுக் கூறலொப்பின்முடித்தலென்னுமுத்தி. [உ-ம்] நல்லன்- வல்லன்- என்பன வீற்றுவிகுதி போயின. கரியன்-பெரியன்-என்பனவீற்றுவிகுதிபோயிடையுகரமிகரமாயின. பாசி-பாசடை-என்பன வீற்றுவிகுதிபோயாதிநீண்டன. பைங்கண்-பைந்தார்- என்பனவீற்றுவிகுதிபோ யிடை யுகரஞ்சகரத்தோடுகெட்டு வருமெழுத்திற்கினமிகுந்து அடியகரமைகாரமாயின. வெற்றிலை- நெட்டிலை- என்பன வீற்றுவிகுதிபோய்த் தன்னொற்றிரட்டின. சேதா- சேத்தாம்பல் - என்பன வீற்றுவிகுதிபோயாதிநீண்டு முன்னின்ற மகரவொற்றுத் தகரவொற்றாய்த்திரிந்தன. செம்மைசிறுமை முதலாகவிதந்து மின்னவுமெ

னவடக்கியுங்கூறிய பல்வேறு வகைப்பட்ட பண்புவாய்பாட்டு
விகற்பங்களெல்லாம் பொதுவிதியானு மீறுபோதன்முதலாக வி
தந்து மினையவுமென அடக்கியுங்கூறிய சிறப்புவிதியானும் விகு-
திபதங்களோடுபுணர்ந்தமைந்துகிடந்தமை யுய்த்துணர்ந்துகொ
ள்க. இங்ஙனம் விதந்துகூறிய விகாரங்கள் அன்பன் அழகன்
முதலியவாய்பாடுகட்கு எய்தாமையானும் செம்மை சிறுமை மு
தலாக வெடுத்துக்காட்டுமொழிகட் கெய்தினமையானும் இஃது
எடுத்தமொழியி னெய்தவைத்தலென்னு முத்தி. (கூ)

(௱௩௭) நடவா மடிசீ விடுகூ வேவை- நொப்போ வெளவுரி
ஞுண்பொருந் திருந்தின்- றேய்பார் செல்வவ் வாழ்கே ளஃகெ
ன்- றெய்திய விருபான் மூன்று மீற்றவுஞ் - செய்யெ னேவல்
வினைப்பகாப்பதமே. *

(எ - ன்) தெரிநிலைவினைப்பகுதிக் கெய்தியதன்மேற் சிறப்பு
விதியுணர்- த்து. (ப-ரை) நட - அஃகென்று- நட வா மடி சீ வி
டு கூ ஏ வை நொ போ வெள உரிஞ் உண் பொருந் திரும் தின்
தேய் பார் செல் வவ் வாழ் கேள் அஃகு என்று, எய்திய - முத
னிலையாகப்பொருந்திய, இருபான்மூன்றும் - இருபத்துமூன்று
கும், ஈற்றவும் - உயிரு மெய்யுங் குற்றியலுகரமுமாகிய வீற்றை
யுடைய இவைமுதலாகிய வாய்பாடுகளெல்லாம், செய்யென் - செ
ய்யென்கின்ற, ஏவல் - ஏவலினது, (பகாப்பதம்) - பகாப்பதமாகிய
பகுதியும், வினை - மற்றைவினைகளுக்கு, பகாப்பதம் - பகாப்பதங்
களாகியபகுதியும், ஆம் - ஆகும், எ. று. (பொ-ரை) நட வா மடி சீ
விடு கூ ஏ வை நொ போ வெள உரிஞ் உண் பொருந் திரும் தி
ன் தேய் பார் செல் வவ் வாழ் கேள் அஃகு என்று முதனிலையாய்
எய்திக்கிடந்த இவ்விருபத்துமூன்றுமுயிரு மொற்றுங் குற்று
கரமுமாகிய வீற்றினையுடைய இத்தொடக்கத்து வாய்பாடுகளெ
ல்லாஞ் செய்யென்னு மேவலினது பகாப்பதமாகிய பகுதியு
மேனைவினையினது பகாப்பதமாகிய பகுதியுமாம், எ-று. இத்
தொடக்கத்து வாய்பாடுகளென்பார் அஃகாமென்றது அஃகெ
ன்றெனவும் ஈற்றவுமெனவும் எகரவுயிர் வினாவிடைச்சொற்கண்
ணுந் தன்பெயர்க்கண்ணு மன்றிப் பிறவழி வாராமையின்
அஃதொழிந்தவை யீண்டைக்காமென்பா ராமீற்றவெனவும் வி
கற்பத்தின்முடித்த லென்னுமுத்தியா னிருபத்துமூன் றீற்றவா
கவிகற்பித் தெடுத்துக்காட்டும் வாய்பாடுகண் முதலியவெல்லாம்
இப்பொதுவாய்பாட்டி னடங்குமென்பார் முடிந்ததுமுடித்த
லென்னுமுத்தியாற் செய்யெனவுங்கூறினார். இரட்டுறமொழித
லென்னுமுத்தியா னெடுத்துக்கொண்ட முன்னிலையொன்றற்கே

யுரிய ஏவலினது பகுதிப்பொருளு மேனைவினையினது பகுதிப்பொருளுந் தந்துநிற்கும் நடவாமுதலியவாய்பாடுகளை யெண்ணித்தொகுத்த விருபான்மூன்றுமீற்ற வென்னுந்தொகை செய்யெனேவற் பகாப்பதமென்னும் பயனிலையோடுஞ் செய்யென்வினைப்பகாப்பதமென்னும் பயனிலையோடுந் தனித்தனி முடிந்தன. செய்யென் வினைப்பகாப்பதமென்றதுணையானே செய்யெ னேவற்பகாப்பதமு மடங்காதோ வேறுகூறவேண்டியதென்னையெனின், நட வா உண் தின் என்றற்றொடக்கத்து முதனிலைகளேவிகுதியோடுபுணராது தனித்துநின்றேசைவேறுயாட்டான் முன்னிலையேவலொருமையெதிர்காலவினைமுற்றுப்பொருண்மை புணர்த்தினவோ விகுதியோடுபுணர்ந்துநின்றே யப்பொருண்மையுணர்த்தினவோவென் றையுறுவார்க்கையமறுத்தற்குக் கூறியதெனவுணர்க. ஏவற்பகுதிக்குதாரணம், நடவாய்- வாராய்- உண்ணாய்- தின்னாய்- அஃகாய்- (எ-ம்) நடமின் - வம்மின்- உண்மின்- தின்மின்- அஃகுமின்- (எ-ம்) வரும். இனி ஆசிரியர் தொல்காப்பியர் "செய்யாயென்னு முன்னிலைவினைச்சொற்- செய்யென்கிளவி யாகிடனுடைத்தே.,, எனக்கூறிய வாற்றால் ஆயென்னும்விகுதிகுன்றி நட வா உண் தின் அஃகுஎனவுநிற்குமெனவுணர்க. நிற்பினும் விகுதியொடுபுணர்ந்தனவேயாம். அஃதச்சூத்திரத்திற் சேனாவரையர் கடாவிடைகளான் விளங்கக்கூறியவாற்றானுமறிக. இனி இவ்வாறேவற்பொருளுணர்த்தாது முதனிலைத்தனிவினைப்பொருளுணர்த்திநிற்பிற் பகாப்பதமென்று கொள்ளப்படும். இதுபற்றியன்றே முன்னரேவல்வினைப்பகாப்பதத்திற் குதாரணங் காட்டியதூஉமென்க. இன்னும் அச்சூத்திரத்து மொழிந்தபொருளோ டொன்றவவ்வயின் மொழியாததனை முட்டின்றுமுடித்தலென்னு முத்தியான் விகுதிபுணர்ந்து கெட்டுநிற்குஞ்சொற்கள்பலவுள அவையெல்லாம் பதமுடிப்புழிக்காண்க. ஏனைவினைப்பகுதிக்குதாரணம். நடந்தான்- வந்தான்-மடித்தான்-சீத்தான்- விட்டான்-கூவினான்- ஏவினான்- வைத்தான்-நொந்தான்-போயினான்-வெளவினான்- உரிஞினான்-உண்டான்-பொருநினான்-திருமினான்-தின்றான்-தேய்த்தான்-பார்த்தான்-சென்றான்-வெவ்வினான்-வாழ்ந்தான்- கேட்டான்- அஃகினான்-(எ-ம்) கிடந்தான்-கண்டான்(எ-ம்) ஏகினான்-குறுகினான்-கட்டினான்-பொருந்தினான்-எய்தினான்-(எ-ம்) வரும். பிறவுமன்ன. இவற்றுட்பகுதிமுதனிலையாயெய்திக்கிடந்தமைகாண்க. இனியிச்சூத்திரத்திற்செய்யெனேவல்வினைப்பகாப்பதமேயென்பதற் கிவ்வாறுபொருள்கூறாது ஆற்றொழுக்காகச்செய்யெனேவல்வினைப்பகாப்பதமே வினை வினைப்பெயர்கட்செல்லா முதனிலையெனப் பொருள்கூறுவாருமுளர்.

"அடியேனுன் னடியார் நடுவுளிருக்குமருளைப்புரியாய்.,, "எந்தா யினித்தானிரங்காயே.,, "மருங்கே சார்ந்து வரவெங்கள் வாழ்வேவாவென் றருளாயே.,, "நரிப்பாய்நாயேனிருப்பேனோநம்பி யினித்தா னல்காயே.,, "கீதமினிய குயிலே—அந்தமிலான்வரக் கூவாய்.,, என்றற்றொடக்கத்தன வாயதிணைபாலிடங்காலங்காட்டும் விகுதியுறுப்போடுகூடி முற்றிநிற்கு முன்னிலையேவலொருமை யெதிர்காலவினைமுற்றுப் பகுபதங்களைப் பகாப்பதமென்றல் கூடாமையேயன்றித் "தத்தம் பகாப் பதங்களே பகுதியாகும்.,, என்னும் பொதுச்சூத்திரத்தோடு மாறுகொளக்கூறலா மாதலி னது பொருளன்றெனமறுக்க. இங்ஙனமுதனிலை புடைபெயர்தலே வினையாதலி னெல்லாவினைச்சொற்களும் பிறத்தற்குமூலமாகியபொது முதனிலைத்தனிவினைப் பெயரொன்றே கொள்க. அதனைப்படுத்தலோசையாற் கூறிக்காண்க. எல்லாவினைச்சொற்களாவன திணைபால்இடங்காலம் விதிமறைபொதுச்சிறப்பாதியோடுங்கூடின முற்றெச்சங்களுந் தொழிற்பெயர்களுமென்க. கையறியாமாக்கட்கன்றி நூலியற்று மறிவினையுடையமக்கட்குப் பலகலைக்குரிசில் பவணந்தியென்னும் புலவர்பெருமான் புகழ்போல விளங்கி நிற்றலா னுலகமலையாமையுள்ளிட்ட பத்தழகோடும் பிறந்துநின்றது இச்சூத்திரமென்றுணர்க. வடநூன் மேற்கோளாக வொருமொழிகளை விதந்து பகாப்பதம் பகுபதமெனக் காரணக்குறிதாமேதந்து அவற்றைநல்விருந்தென்ன நாவலர்பயில எழுத்தே தனித்துமென்னுஞ் சூத்திரமுத லிச்சூத்திரமீறாகப் பகாப்பதம்பகுபதமெனப் பல்காற்கூறுதல் தன்குறிவழக்க மிகவெடுத்துரைத்தலென்னு முத்தி. (௩)

(௱௩௮) செய்யென்வினைவழி விப்பிதனிவரிற்-செய்வியென்
னேவ லிணையினீரேவல். *

(எ-ன்) மேலிரட்டுற மொழிந்தவற்றுளேவற்பகுதிக்கெய்திய தன்மேற் சிறப்புவிதியுணர்-ற்று. (ப-ரை) செய்யென் - செய்யென்னும்வாய்பாட்டு, வினைவழி- முதனிலைத் தனிவினையின்பின், விப்பி- விவ்விகுதியாவது பிவ்விகுதியாவது, தனிவரின் - தனித்துவருமாயின், செய்வியென்னேவல் -செய்யென்னுமேவலின்மேலோரேவலாய்ச் செய்வியென்னும்வாய்பாட்டேவற்பகுதியாம், இணையின் - அவ்வினையின்பின் இந்தவிகுதிகள் தன்னொடும் பிறிதொடும் இணைந்துவருமாயின், ஈரேவல்-செய்விப்பியென்னும் வாய்பாட்டேவற்பகுதியாம். எ-று. (பொ-ரை) மேற்கூறிய செய்யென்னும் வாய்பாட்டுமுதனிலைத் தனிவினையின்பின் வி பி என்னுமிவ்விரண்டு விகுதியினுளொன்றுவருமாயிற் செய்யென்னுமேவன் மேலோரேவலாய்ச் செய்வியென்னும் வாய்பாட்டேவற்பகுதியா

ம் அவற்றின்பின்னிவ்விகுதிக டன்னோடும் பிறிதோடுமிணைந்துவருமாயிற் செய்விப்பியென்னும் வாய்பாட்டேவற்பகுதியாம். எ-று. ❁ விதந்த வேவற்சிறப்புவாய்பாட்டையெல்லாஞ் செய்யென்னுமேவற்பொதுவாய்பாட்டு ளடக்கி மேற்கூறலின் நடவா முதலிய வினைவழி யென்பார் செய்யென்வினைவழியென்றும் இவைபெருவழக் கல்லவென்பார் தனிவரினென்றுமிணையினென்றுமிவ்விகுதியொன் றுமிரண்டுமேற்றபெற்றிவருமென்பார் செய்பியென்னாது செய்வியென்றுங் கூறினார். [உ-ம்] நடப்பியாய்- நடப்பிப்பியாய்- வருவியாய்- வருவிப்பியாய்- (எ-ம்) ஆய்விகுதிகுன்றி நடப்பி-நடப்பிப்பி- வருவி-வருவிப்பி- (எ-ம்) வரும். நடவாமுதலிய வேவற்சிறப்புவாய்பாட்டிற் கிலக்கணங் கூறியமுகத்தே யேவற் பொதுவாய்பாட்டிற்கும் செய் செய்விசெய்விப்பியெனக் கூறுங்கூற்று யிலக்கண மமைந்துகிடந்தமையின் இக்கூற் றிரட்டுறமொழிதலென்னுமுத்திக்கினம். இவைபோல்வன பிறவுமது. (ய௧)

(௱௩௯) விளம்பியபகுதிவே றாதலும்விதியே. *

(இ-ள்) வினைப்பகுதிக் காவதோர் புறனடையுணர்-ற்று. (பதவுரை) விளம்பியபகுதி- ஏவற்பகுதி வேறாதல்போல அதன்பின்னே சொல்லப்பட்ட மற்றைவினைப் பகுதிகள், வேறாதலும்- வேறுபடுதலும், விதியே-விதியேயாகும். எ-று. (பொ-ரை) ஏவற்பகுதி வேறாதல்போல வதன்பின்னே விளம்பிய வினைப்பகுதி வேறாதலும் விதியாம்விலக்கன்று. எ-று, ❁ [உ-ம்] நடத்தினான்-நடப்பித்தான்- நடப்பிப்பித்தான்- நடத்துவிப்பித்தான்- எனவரும். பிறவுமன்ன. ஈண்டும் விப்பிகளேற்றபெற்றிகொள்க. இவற்றுள் நடவென்னுந்தன்வினைப்பகுதி பிறவினைப்பகுதியாய் வேறுபட்டுநின்றவாறுகாண்க. வேறுபடாதது பிரகிருதியாமன்றி வேறுப்பட்டது பிரகிருதியாகாதேனுந் தந்தையைக்குறிக்க மகனெனப் பட்டானொருவன் றன்மகனைக்குறிக்கத் தந்தையானாற்போலப் பிறவினைப்படுத்தவருமிவ்விகுதிகளு மேல்வரும் அன் ஆன் முதலியவிகுதிகளைக்குறிக்கப் பகுதியாமாதலின் விதியே யெனப் புறனடைதந்தார். முன்னரேவற்பகுதி வேறுபட்டமையு மன்ன. இச்சூத்திரத்திற்கு வாவென்பகுதிமுதலியன வந்தான்- வருகின்றான்- என விகாரப்படுதலைப் பொருளாகக் கூறுவாருமுளர். இவ்விகாரங்கள் பகுபதவுறுப்பாக மாட்டெறிந்துகொண்ட மூன்று சந்தியுள்ளுமொன்பது விகாரத்துள்ளு மமைந்துகிடத்தலி னதுபொருந்தாதென்க. (ய௨)

(௱௪௰) அன் ஆன் அள் ஆள் அர் ஆர் பம்மார்- அ ஆ குடுதுறு
என் ஏன் அல் அன் அம் ஆம் எம் ஏம் ஓமொ டும்மூர்-கடதற ஐ ஆய்

இம்மின் இர்ஈர்- ஈயுர்கயவு மென்பவும் பிறவும்- வினையின் விகு
தி பெயரினுஞ் சிலவே. *

(எ-ன்) விகுதியினைய வென்பீதுணர்- ற்று. (ப-ரை) அன்-என்
ன்பவும்- அன்முதல் மூப்பத்தேழாகச் சொல்லப்பட்டவைகளு
ம், பிறவும்- இவைபோல்வனபிறவும், வினையின்விகுதி - வினைப்
பகுபதங்களின் விகுதிகளாகும், பெயரினும் - பெயர்ப்பகுபத
ங்களிலும், சில- சிலவிகுதிகளாகும், எ-று. (பொ-ரை) இங்ஙனம்
அன் ஆன் முதன் முப்பத்தேழாகச் சொல்லப் படுவனவும் இவை
போல்வனபிறவுந் தெரிநிலைவினையின் விகுதிகளாம் பெயரிடத்
துமிவற்றுட்சிலவிகுதியாம். எ-று. ❁ இரட்டுறமொழிதலென்னு
முத்தியாற் றன்மையொருமைக்கும் அஃறிணைப்படர்க்கை யொ
ருமைக்கும் பொதுவாகக் குடுதுறுவென்றும் முன்னிலை யொரு
மைக்கும்முன்னிலையேவலொருமைக்குப்பொதுவாக ஆய் என்
றும் அன்னென்னுந்தன்மையொருமைவிகுதிதொன்றுதொட்ட
தன்றியிலக்கியங் கண்டமையின் எதிரதுபோற்ற லென்னுமுத்
தியாற்றழீஇக்கொண்டதாதலின் அதனைவலியுறுத்திப்பின்னுமன்
னென விதந்தும் இன்னுமிவற்றுள், இரட்டுறமொழிதலா னடங்
குவனவடங்க வடங்காவாயபெயரெச்சம் வினையெச்சம்-நடத்து-
நடப்பி, முதலிய பிறவினையென்பவற்றுள்ளும் பிறவற்றுள்ளு
ம் பகுதியை விகுதிப்படுத்தி வருவனயாவை அவை யெல்லாம்
விகுதியென்று சுருஇக்கோடற்குப் பிறவு மென்றுங் கூறினர்.
பெயரினுஞ் சிலவென்ற மாத்திரையிற் குறிப்பு வினையினுஞ்
சிலவென்பதுகூறுமே யமைதலின் இங்ஙனம்வினையென்றது அவ்
விரண்டுமொழிந்த தெரிநிலைவினை யென்பதூஉ பெற்றாம். [உ
-ம்] நடந்தனன்- நடந்தான்- இவை யாண்பாற்படர்க்கை. நட
ந்தனள்- நடந்தாள்- இவை பெண்பாற்படர்க்கை. நடந்தனர்-ந
டந்தார்- நடப்ப-நடமார்- இவை பல்லோர்படர்க்கை. நடந்தன
-நடவா- இவை பலவின்படர்க்கை. நடக்கு- உண்டு-நடந்து-சே
று- நடந்தனென்- நடந்தேன்- நடப்பல்- நடப்பன்- இவை ஒரு
மைத்தன்மை. நடந்தது- கூயிற்று- குண்டுகட்டு- இவை ஒன்றன்
படர்க்கை. நடப்பம்-நடப்பாம்-நடப்பெம்- நடப்பேம்-நடப்
போம்- நடக்கும்- உண்டும்- நடந்தும்- சேறும்- இவை தன்மை
ப்பன்மை. நடந்தனை- நடந்தாய்- நடத்தி- இவை ஒருமைமுன்
னிலை. நடமின்-நடந்தனிர்- நடந்தீர்- இவை பன்மைமுன்னிலை.
நிலீயர்- நடக்க- வாழிய- இவை வியங்கோள். நடக்கும் - இது
செய்புமென்னுமுற்று. பிறவுமன்ன. இவை திணைபாலிடங்களை
யுணர்த்திவினையி விகுதிநிலையாய் முழுவதும் வந்தன: வில்லன்-

வில்லான் - வளையள்- வளையாள்- ஊரர்- ஊரார்- வில்லி- வாளி - அரசி- செட்டிச்சி- காதறை- மூக்கறை- இவைபெயர்க்கட் சிலவ ந்தன. பிறவுமன்ன. (௰௩)

(௱௩௧) இலக்கியங் கண்டதற் கிலக்கண மியம்பலிற்- பகுதி விகுதி பகுத்திடை நின்றதை - வினைப்பெய ரல்பெயர்க் கிடை நிலை யெனலே. *

(எ-ன்) இடைநிலையாமா றுணர்த்துவான் றொடங்கிப் பெயர்க் கிடை நிலையுணர் - த்று. (ப-ரை) இலக்கியம் - அறிவுடையோரா லே நியமிக்கப்பட்ட இலக்கியத்தை, கண்டு- பார்த்து, அதற்கு- அவ்விலக்கியத்திற்கு, இலக்கணம் - அவ்விலக்கியத்தினமைதியே யிலக்கணமாக, இயம்பலின்- சொல்லுதலால், பகுதி - முன்சொ ல்லப்பட்ட பகுதியையும், விகுதி- விகுதியையும், பகுத்து- பிரி த்து, இடை நின்றதை- நடுநின்றதை, வினைப்பெயரல்பெயர்க்கு - வினையாலணையும் பெயரல்லாத பெயர்களுக்கு, இடை நிலையெ னல் - இடைநிலையென்றுசொல்லுக. எ-று. (பொ-ரை) அறிவு டையோரானியமிக்கப்படுமிலக்கியங்கண்டதனுக்குஅவ்விலக்கிய த்தி னமைதியே யிலக்கணமாகக்கூறலின் மேற்கூறிய பகுதியை யும் விகுதியையும்பகுத் திடையேநின்றதியா ததனைவினையால ணையும் பெயரல்லாத பெயர்கட் கிடைநிலை யென்று சொல்லுக. எ-று. ❁ குறிக்கப்படு மிலக்கணத்தை யுடையனவெல்லா மிலக் கியமாயினும் ஈண்டிலக்கியமென்றது பெயர்ப்பகுபதத்தை.இ லக்கணமென்ற ததனகத்துப்பகுதிமுதலிய வுறுப்புக்களை. மா- பலா- முதலியன பராரைமுதலிய சினையோடு நின்றனவெனக்க ண்டது கூறுவார்போலப் பகுபதம் பகுதிமுதலியவுறுப்பொடு நின்றதெனக் கண்டதுகூறி யப்பதந்தந்தமேதொலாநாவின்மேலோ ராணையினிற்றலிற் கண்டதற்கென்றும் சாரியை சந்தி விகாரங்க ளு மிடைநிற்குமேனுமவைமேல்விதக்கப்படுதலி னவையொழி த்தனவற்றை யிடை நின்றதையென்றும்மேல்வினைக்குவிதந்துகூ றுமிடைநிலை வினையாலணையும் பெயர்க்கு மமைதலின் வினைப் பெயரல்பெயர்க்கென்றும் இப்பெயரிடைநிலை வரையறுக்கப்பு ட்டதன் றுங்காங்குணர்ந் துரைக்கவென்பா னெனலே யென்றுங் கூறினர். [உ-ம்] அறிஞன்-என்பது ஞகரவிடைநிலைபெற்றது. ஓதுவான்- பாடுவான்- என்பன வகரவிடைநிலை பெற்றன. வலை ச்சி- புலைச்சி - என்பன சகரவிடைநிலை பெற்றன. வண்ணாத்தி- பாணத்தி - மலையாட்டி - வேளாட்டி - தந்தை- எந்தை - நுந்தை என்பன தகரவிடைநிலை பெற்றன. பிறவுமன்ன. (௰௪)

(௱௩௨) தடறவொற்றின்னே யைம்பான்மூவிடத்- திறந்தகால த் தருந்தொழி லிடை நிலை. *

(எ-ன்) இறந்தகாலவினைக் கிடைநிலையுணர்-த்து (ப-ரை) தடறவொற்று- தகர டகர றகர மெய்களும், இன்-இன்னும், ஐம்பான்மூவிடத்து- ஐம்பான்மூவிடங்களிலும், இறந்தகாலம்- இறந்தகாலத்தை, தரும்- காட்டுகின்ற, தொழில்-வினைப்பகுபதங்களினுடைய, இடைநிலை- இடைநிலைகளாகும். எ-று (பொ-ரை) தகரடகர றகரமெய்களும் இன்னென்னுங்குற்றொற்றும் ஐம்பான் மூவிடத்து மிறந்தகாலத்தைத்தரும் வினைப்பகுபத விடைநிலைகளாம் எ-று ❁ [உ-ம்] நடந்தான்- நடந்தாள் - நடந்தார்- நடந்தது- நடந்தன- நடந்தேன்- நடந்தேம்- நடந்தாய்- நடந்தீர்- (எ-ம்) உண்டான்- (எ-ம்) சென்றான்- (எ-ம்) உறங்கினான்- (எ-ம்) வரும். இன்னிடைநிலை எஞ்சியதெனக் கடைகுறைந்தும், போனதென முதல்குறைந்தும் வரும். பிறவுமன்ன. (௰௫)

(௱௪௩) ஆநின்றுகின்று கிறுமூவிடத்தி- னைம்பானிகழ்பொழு தறைவினை யிடைநிலை. ❋

(எ-ன்) நிகழ்காலவினைக்கிடைநிலையுணர்-த்து. (ப-ரை) ஆநின்று- ஆநின்றென்பதும், கின்று- கின்றென்பதும், கிறு-கிறுவென்பதும், ஐம்பான் மூவிடத்தின்- ஐம்பான் மூவிடங்களிலும், நிகழ்பொழுது- நிகழ்காலத்தை, அறை- காட்டுகின்ற, வினை- வினைப்பகுபதங்களினுடைய, இடைநிலை-இடைநிலைகளாகும். எ-று. (பொ-ரை) ஆநின்றென்பதூஉம் கின்றென்பதூஉம் கிறுவென்பதூஉம் ஐம்பான் மூவிடத்தினு நிகழ்காலத்தைத்தரும் வினைப்பகுபத விடைநிலைகளாம். எ-று. ❁ தருவினையை யறைவினையென்ற திலக்கணை. மேலைச்சூத்திரத்தில் வருவதூஉமது. [உ-ம்.] நடவாநின்றான்- நடக்கின்றான்-நடக்கிறான்-எனவரும். ஏனைப்பாலிடங்களினு மொட்டிக்கொள்க. (௰௬)

(௱௪௪) பவ்வமூவிடத் தைம்பாலெதிர்பொழு- திசைவினை யிடைநிலை யாமிவை சிலவில. ❋

(எ-ன்) எதிர்காலவினைக் கிடைநிலையு முக்கால விடைநிலைகட்குமாவதோர்புறனடையுமுணர்-த்து. (ப-ரை) பவ்வ-பகர மெய்யும் வகரமெய்யும், ஐம்பான்மூவிடத்து - ஐம்பான் மூவிடங்களிலும், எதிர்பொழுது- எதிர்காலத்தை, இசை- காட்டுகின்ற, வினை- வினைப்பகுபதங்களினுடைய, இடைநிலையாம்- இடை நிலைகளாகும், இவை-இம்முக்காலவிடைநிலைகளும், சில- சில முற்றெச்சங்களுக்கு, இல- இல்லை. எ-று (பொ-ரை) பகரவொற்றும் வகரவொற்றுமைம்பான்மூவிடத்து மெதிர்காலத்தைத்தரும்வினைப்பகுபதவிடைநிலைகளாம். இம்முக்காலமுமுறையேகாட்டுந் தகரவொற்று முதல் வகரவொற் றீறாயவிடைநிலைகள் சிலமுற்றுவினை யெச்சவினைகட்கிலவாம். எ-று. ❁ [உ-ம்] நடப்பான் - வருவான் - எனவரும்.

எனைப்பா லிடங்களினுமொட்டிக்கொள்க. இனியிவைசிலவிலவென
வே காலத்தை யிறுதிநிலைதருமென்பதூஉ முதனிலைதருமென்ப
தூஉம் பிறவிடைநிலைதருமென்பதூஉம் பெற்றாம், இவ்விகற்ப
மெல்லாம் வருஞ் சூத்திரத்தாற் கூறுப. (௰எ)

(௱சுரு) றவ்வொடுகர வும்மைநிகழ் பல்லவுந் - தவ்வொ டிறப்
புமெதிர்வும்டவ்வொடு- கழிவுங் கவ்வொ டெதிர்வு மின்னேவல்-
வியங்கோ ளிம்மா ரெதிர்வும் பாந்தஞ்- செலவொடு வரவுஞ் செ
ய்யு நிகழ்பெதிர்வு- மெதிர்மறை மும்மையு மேற்கு மீங்கே. *

(எ-ன்) மேலைச்சூத்திரத் திவைசிலவிலவென்றா ரவையிவையெ
ன்பதுணர்த்து.(ப-ரை)றவ்வொடு- றகரமெய்யோடுகூடிய,உகரவு
ம்மை- உகரவிகுதியும் உம்விகுதியும், நிகழ்பல்லவும்- இறந்தகால
த்தையும் எதிர்காலத்தையும், தவ்வொடு தகரமெய்யோடு கூடிய,
(உகரவும்மை) - உகரவிகுதியும் உம்விகுதியும், இறப்புமெதிர்வும்-
இறந்தகாலத்தையும் எதிர்காலத்தையும், டவ்வொடு- டகரமெய்
யோடுகூடிய, (உகரவும்மை) - உகரவிகுதியும் உம்விகுதியும், கழி
வும்- இறந்தகாலத்தையும்,கவ்வோடு- ககரமெய்யோடு கூடிய, (உ
கரவும்மை) - உகரவிகுதியும் உம்விகுதியும், எதிர்வும்-எதிர்காலத்
தையும், மின்- மின்விகுதியும், ஏவல்- முன்னிலையேவலவிகுதிகளு
ம், வியங்கோள்- வியங்கோள்விகுதிகளும், இ- இகரவிகுதியும்,மா
ர்-மார்விகுதியும்,எதிர்வும்- எதிர்காலத்தையும், பாந்தம்-பகரவிகு
தி,செலவொடுவரவும்-இறந்தகாலத்தையும் எதிர்காலத்தையும்,செ
ய்யும்-செய்யுமென்னும்வாய்பாட்டுமுற்றுவிகுதி,நிகழ்பெதிர்வும்
நிகழ்காலத்தையும்எதிர்காலத்தையும்,எதிர்மறை-எதிர்மறைஆகார
விகுதி, மும்மையும்-மூன்றுகாலத்தையும்,எற்கும்-எற்றுவரும்,ஈங்
கு-இவைசிலவிலவென்றவைகளுள், எ-று.(பொ-ரை)றகரத்தோடுகூ
டியவுகரவீறுமும்மீறு மிறந்தகாலமுமெதிர்காலமுந் தகரத்தோ
டுகூடிய வவ்விரண்டீறு மவ்விருகாலமும் டகரத்தோடுகூடிய வவ்
விரண்டீறு மிறந்தகாலமுங் ககரத்தோடுகூடியவவ்விரண்டீறுமெ
திர்காலமும் மின்னீறுமேனையேவலின்வருமனைத்தீறும்வியங்கோ
ளீறும்இகரவீறும்மாரீறுமெதிர்காலமும்பகரவீ றிறந்தகாலமும்
எதிர்காலமுஞ் செய்யுமென்னும் வாய்பாட்டுமுற்றீறு நிகழ்கால
முமெதிர்காலமும்முற்றுவிகுதியெச்சவிகுதியாமளாய்புணர்தற்கு
ரியவெதிர்மறையாகாரவீறு மூன்றுகாலமுமேற்கும் மேலைச்சூத்தி
ரத் திவை சிலவில வென்றவற்றுள். எ-று. ❋ அந்தமென்பதனை
யெல்லாவற்றினு மொட்டிக்கொள்க றவ்வொ டுகரவும்மீறும் தவ்
வொடுகரவும்மீறும் பார்த்தமுமிறந்தகாலமு மெதிர்காலமுமேற்
குமென்னத் தொகுத்துக்கூறாது விகற்பத்தின்முடித்தலென்னு மு
த்தியான் வகுத்துக்கூறினார் புலப்படவேண்டியென்க. இகரவீறு

னித்தியலாமையின் யாதானுமோர் மெய்யினை யூர்ந்து வருமென்பதூஉம் அதுகாலங்காட்டாதென்பதூஉம் அதுகாலங்காட்டியதேல் இவ்விறுகாலங்காட்டா தென்பதூஉம் செய்யுமென்னும் வாய்பாட் டெச்சமும் இடைநிலையின்றி யீறுகாலங்காட்டு மென்றும் அஃ தெதிர்காலங் காட்டுமென மேல் விதத்தலின் இங்ஙனஞ் செய்யுமெனவெடுத்தோதிய துமுற்றென்பதூஉம்பெற்றாம். மூன்றுகாலமும் அவைபற்றிப்புடைபெயரும் வினையு மில்லனவற்றையெதிர்மறைவினை மூன்றுகாலமுமேற்குமென்றுகூறுதல் இலக்கணையாதலிற் பிற்கூறினார். [உ-ம்] சென்று - சென்றும் சேறு சேறும்- வந்து-வந்தும்- வருது-வருதும்- உண்டு-உண்டும்- உண்கு - உண்கும்- உண்மின்-உண்ணும்- உண- உண்க- வாழிய- வாழியர் -சேறி - உண்மார் உண்ப உண்ணும்- உண்ணான் - எனவரும். மும்மையுமென்னு முற்றும்மையை "முற்றும்மை யொரோவழி யெச்சமுமாகும்" என்பதனான் எச்சவும்மையாக்கி- நடந்திலன்-நடவாநின்றிலன் - என வெதிர்மறை யொருகால் மேற்றுவருதலுங் கொள்க. சென்றி - செல்லாநின்றி - எனவருமாயின் இடைநிலைகாலங்காட்டியவிகாரவீற்றவாம். இவைசிலவில வென்றவற்றுள் இறுதிநிலைகாலங்காட்டுவனவற்றை விதந்தோதி முதனிலையும் பிறவிடைநிலையுங் காலங்காட்டுவனவற்றை ஓதாமையின் அவை சிறுபான்மைய வந்தவழிக்காண்கவென்றாராயிற்று. அவை வருமாறு-தொட்டான்- விட்டான்- உற்றான்- பெற்றான்- புக்கான்- நக்கான்- என்பனவற்றுள் இடைநிலையின்றி முதனிலைவிகாரமாய் இறந்தகாலங் காட்டின. என்மனார்- என்றிசினோர்- என்மர் - என்பவற்றுள் எடுத்தோதாப் பிறவிடைநிலைகணின்று முன்னையவிரண்டும் இறந்தகாலமும் பின்னையதொன்று மெதிர்காலமுங்காட்டின. பிறவுமன்ன. ஈங்கேயென்ற மிகையானே "வருதி பெயர்தி வருந்துதி துஞ்சாய்- பொருதி புலம்புதி நீயும்" எனவிகரவீறு நிகழ்காலங் காட்டலும் மேனையகூறியகாலத்திற் பிறழ்ந்துவருவனவுளவேல் அவையும் பெயரெச்ச வினையெச்சங்களின் இடைநிலையின்றி இறுதிநிலைகாலங் காட்டுவனவுங்கொள்க. இனிப்பகுதிமுதலிய வுறுப்புக்களாற் பதமுடியுமாறு அவனென்னுஞ் சுட்டுப்பொருட் பெயர்ப்பகுபதம் அ என்னும்பகுதியும் அன்னென்னும்விகுதியும் பெற்று "எகர வினாமுச் சுட்டின்முன்னர்" என்னுஞ்சூத்திரத்தால் வகரந்தோன்றி "உடன்மே லுயிர்வந் தொன்றுவ தியல்பே" என்பதனான் வகரத்தின்மேல் விகுதியுயிரேறி முடிந்தது. தமன் என்னுங்கிளைப்பொருட் பெயர்ப்பகுபதம் தாமென்னும் பகுதியும் அன்னென்னும்விகுதியும்பெற்றுத் "தான்றாமுதல்

குறுகும்.,, என்பதனாற் பகுதிமுதல்குறுகி உடன்மே லுயிரோறி
முடிந்தது. குறிஞ்சியானென்னும் இடப்பெயர்ப்பகுபதம்குறி
ஞ்சியென்னும் பகுதியும் ஆனென்னும் விகுதியும்பெற்று யகர
வுடம்படுமெய்தோன்றி உயிரேறி முடிந்தது. பிரபவனென்னு
ங் காலப்பெயர்ப்பகுபதம் பிரபவமென்னும்பகுதியும் அன்னெ
ன்னும்விகுதியும்பெற்று“ஒருமொழி மூவழிக் குறைதலு மனைத்
தே.,, என்பதனாற் பகுதிகடைக்குறையாய் வகரவொற்றின்மேல்
விகுதி அகரவுயிரேறிமுடிந்தது. திணிதோளனென்னுஞ் சினைப்
பெயர்ப்பகுபதம் திணிதோளென்னும்பகுதியும் அன்னென்னு
ம் விகுதியும்பெற்று உடன்மேலுயிரேறி முடிந்தது. பெரியனெ
ன்னுங் குணப்பெயர்ப்பகுபதம் பெருமையென்னும்பகுதியும்
அன்னென்னும்விகுதியும் பெற்றுப் பகுதியீறுபோ யிடையுகர
மிகரமா யகரவுடம்படு மெய்தோன்றி யுயிரேறிமுடிந்தது. ஓது
வானென்னுந் தொழிற்பெயர்ப்பகுபதம் ஓது என்னும்பகுதியு
ம் ஆன் என்னும்விகுதியும் வகரவிடைநிலையும்பெற்று உயிரேறி
முடிந்தது. நன்மையென்னும் பகுபதம் நல் என்னும் பகுதி
யும் மை என்னும்விகுதியும்பெற்று “மெலிமேவினணவும்,, எ
ன்பதனான் லகரம் னகரமாய்த் திரிந்து முடிந்தது. வருதலென்
னும்பகுபதம் வா வென்னும்பகுதியும் தல் என்னும் விகுதியும்
பெற்று “வலித்தன் மெலித்தல்,, என்பதனாற் பகுதிமுதல்குறு
கி ரகரவுகரம் விரிந்துமுடிந்தது. நடந்தனனென்னும்இறந்தகா
ல வினைப்பகுபதம் நடவென்னும் பகுதியும் அன் னென்னும்வி
குதியும் இறந்தகாலந்தருந் தகரவிடைநிலையும் அன்சாரியையும்
பெற்றுப் பகுபதவுறுப்புக்களுட் பகுதியொழிந்தன இடைச்
சொல்லாதலின் “இடையுரி வடசொலி னியம்பிய கொளாதவும்,,
என்பதனாற் பகுதியீற்றினின்ற வுயிர்முன்வந்த தகர விடைநிலை
மிகா ததற்கினமிகுந்து இடைநிலைத்தகரவொற்றின்மேற்சாரியை
யகரவுயிரேறிச் சாரியையீற்று னகரவொற்றின்மேல்விகுதி அகர
வுயிரேறி முடிந்தது. நடவாநின்றான் என்னுநிகழ்கால வினைப்
பகுபதம் நடவென்னும்பகுதியும் ஆனென்னும்விகுதியும் ஆநி
ன்றென்னு மிடைநிலையும்பெற்று உடம்படுமெய்தோன்றியிடை
நிலையீற்றுக் குற்றுகரங்கெட்டு உயிரேறி முடிந்தது. நடப்பான்
என்னுமெதிர்கால வினைப்பகுபதம் நடவென்னும்பகுதியும் ஆ
னென்னும்விகுதியும் பகரவிடைநிலையும்பெற்று “இயல்பினும்
விதியினு நின்ற வுயிர்முன் கசதப மிகும்.,, என்பதனாற் பகர
மிகுந்து உடன்மே லுயிரேறி முடிந்தது. நடந்தது என்னும்
அஃறிணை யொருமைப்படர்க்கை இறந்தகாலவினைப்பகுபதம்ந
டவென்னும்பகுதியும் துவ்வென்னும்விகுதியும் தகரவிடைநிலை

யும் துவ்விகுதிக்கும் தகரவிடைநிலைக்கும் இடையே அகரச்சாரி
யையும்பெற்று முடிந்தது. நடவாயென்னு முன்னிலையேவலொ
ருமை யெதிர்காலவினைமுற்றுப்பகுபதம் நடவென்னும்பகுதியு
ம் ஆயென்னும் விகுதியும்பெற்று வகரவுடம்படு மெய்தோன்றி
விகுதி ஆகாரவுயிரேறி முடிந்தது. நடப்பிபாயென்னும் ஏவற்
பிறவினைப்பகுபதம்நடவென்னும்பகுதியும் பி என்னும்விகுதி
யும்பெற்றுப் பகரமிகுந்து இரண்டுமோர்பகுதியாய்நின்றுமே
ல்வரும்ஆய்விகுதியோடுபுணர்ந்து யகரவுடம்படுமெய்தோன்றி
விகுதி ஆகார வுயிரேறிமுடிந்தது. நடப்பிப்பியாயென்னு மவ்
வினைப்பகுபதம்நடப்பியென்னும்பகுதியும் பி என்னும்விகுதி
யும்பெற்றுப் பகரமிகுந்து அனைத்து மோர்பகுதியாய்நின்றுமே
ல்வரும் ஆய்விகுதியோடுபுணர்ந்து யகரவுடம்படுமெய்தோன்றி
விகுதியாகாரவுயிரேறி முடிந்தது. விளம்பியபகுதிவேறுனவை
யுமிவ்வாறேமுடிந்துஅனைத்துமோர்பகுதியாய்நின்றுமேல்வரும்
அன் ஆன் முதலிய விகுதியோடு புணர்ந்தமை காண்க. நடவா
னென்னு மெதிர்மறை வினைப்பகுபதம் நடவென்னும் பகுதி
யெதிர்மறையாகார விகுதியோடுபுணர்ந்து இரண்டுமோர்பகுதி
யாய்நின்றுமேல்வரும் ஆன்விகுதியோடுபுணர்ந்து "ஒருமொழி
மூவழிக் குறைதலு மனைத்தே." என்பதனான் விகுதியின தாகா
ரங்குறைந்து முடிந்தது. நடவாவென்னு மஃறிணைப் பன்மைப்
பகுபதம் "ஆவே யெதிர்மறைக் கண்ணதாகும்," என்பவாகலி
ற் பால்காட்டும் ஆகாரவிகுதியன்றி யெதிர்மறை ஆகாரம்வேண்
டாதுமுடிந்தது. நடந்திலன் - நடவாநின்றிலன் - என்பவற்றுட்
காலவிடைநிலையும் அவற்றைமறுத்த இல் என்னுமெதிர்மறைவி
குதியுந் தந்தவற்றை யோர்பகுதியாக்கிமுடிக்க. இவ்வாறே பெ
யரெச்ச வினையெச்சங்களும் பிறவும் பகுதி விகுதி முதலிய வு
றுப்புக்களோடேற்றவா றமைந்துகிடந்தமை காண்க. எழுதப்ப
டுவதென்னும் பொருட்கண் எழுதென்னு முதனிலை முன்னர்ச்
செயப்படுபொருண்மை யுணர்த்தும் ஐகாரவிகுதிபுணர்ந்துகெ
ட்டுக்கெட்டவழித் தகரமிரட்டித் தெழுத்தெனமுடிந்தது. ஊ
ண்- தீன்- கோள்- என்றாற்போல்வனவுஞ் செயப்படு பொருண்
மையுணர்த்தும் ஐகாரவிகுதிபுணர்ந்து கெட்டுமுதனீண்டு நின்ற
ன. திரை-நுரை-அலை- தளிர்-பூ-காய்-கனி- என்றாற்போல்வனவி
னைமுதற்பொருண்மையுணர்த்தும் இகரவிகுதி புணர்ந்துகெட்டு
நின்றன. கெடுவாகவையா தென்புழிக் கெடுவென்பது புடைபெ
யர்ச்சியையுணர்த்துந் தல்விகுதிகெட்டுநின்றது. கேடென்பது
அவ்வாறாய் முதனீண்டு நின்றதெனக் கொள்க. ஏனையவுமிவ்வா
றே யேற்றபெற்றியறிந்து முடித்துக் கொள்க. திரை- நுரை- த

ளிர் - என்றாற்போல்வன விகுதிகுன்றி முதனிலைமாத்திரையாய் நிற்றல்பற்றி இவற்றை முதனிலைவினைப்பெயரென வழங்குப. ஐகாரவிகுதி செயப்படுபொருண்மை புணர்த்துதல், நடலை - சேக்கை - உடுக்கை - தொடை - விடை - என்றாற் போல்வனவற்றுள்ளும் இகரவிகுதி வினைமுதற்பொருண்மை புணர்த்துதல், சேர்ந்தாரைக்கொல்லி - நூற்றுவரைக்கொல்லி - நாளோதி - நூலோதி - என்றாற்போல்வனவற்றுள்ளுங் காண்க. இவ்விகுதிகள் சிறுபான்மை பிறபொருளுணர்த்தியும் வரும். வடநூலாரும் வினைப்பெயர் விகுதிகள்கூறிய நியமந் தப்பிப் பிறபொருளுணர்த்தியும்வருமெனக்கொள்வர். உடுக்கையென்பதுடுக்கப்படும் பொருளுணர்த்துங்கால் ஐகாரவிகுதித்தென்றும் உடுத்தலென்புடைபெயர்ச்சியைப்புணர்த்துங்காற் கைவிகுதித்தென்றுந் தெரிந்துணர்ந்துகொள்க. பகுதி விகுதி யென்னுஞ் சூத்திரமுதல் இச்சூத்திரமீறாகப் பகுபதங்களை மேலோர்முடித்தவாறு முடித்துக்காட்டினமையின் முடித்துக்காட்டலென்னுமுத்தி. முன்னைத் தமிழ்நூல்களுள் இல்லனவற்றை இவ்வாசிரியர்தாமே பகாப்பதப்பகுபதமென முன்னர்நாட்டி இச்சூத்திரங்காறு மவற்றிற் கிலக்கணந்தந்து நிறுத்தலமையிற் றுஅனுட்டித் தனதுசிறப்பென்னுமதம்.

(௱௪௬) இடையினான்கு மீற்றிலிரண்டு - மல்லாவச்சை வருக்கமுதலீறு - யவ்வாதி நான்மை ளவ்வாகு மையைம் - பொதுவெழுத் தொழிந்தநா லேழுந் திரியும். *

(எ-ன்) இவ்வியன் மொழியாக்கமாதலின் ஆரியமொழி திரிந்து வடமொழியாமா றுணர்த்துவான்றொடங்கி யவற்றின் பொதுவிதி யுணர் - ற்று. (இ - ள்) இடையில் - ஆரியத்தில் அ ஆ இ ஈ உ ஊ 𑌋 𑍠 𑌌 𑍡 எ ஐ ஒ ஔ 𑌅𑌂 𑌅𑌃 என்கிற உயிர் பதினாறனுள் நடுவிலிருக்கின்ற, நான்கும் - 𑌋 𑍠 𑌌 𑍡 என்கிறநாலெழுத்துகளும், ஈற்றில் - கடையிலிருக்கின்ற, இரண்டும் - 𑌅𑌂 𑌅𑌃 என்கிற இரண்டெழுத்துகளும், அல்லா - நீங்கலாகிய, அச்சு - அ ஆ இ ஈ உ ஊ எ ஐ ஒ ஔ என்கிற பத்துயிர்களும், ஐவருக்கம் - 𑌕 𑌖 𑌗 𑌘 𑌙 𑌚 𑌛 𑌜 𑌝 𑌞 𑌟 𑌠 𑌡 𑌢 𑌣 𑌤 𑌥 𑌦 𑌧 𑌨 𑌪 𑌫 𑌬 𑌭 𑌮 𑌯 𑌰 𑌲 𑌵 𑌶 𑌷 𑌸 𑌹 𑌳 𑌕𑍍𑌷 [illegible] என்கிற மெய்முப்பத்தேழனுள் கசரமுத லைந்தெழுத்துகளாகிய ஐந்துவருக்கங்களுடைய, முதல் - முதலிலிருக்கின்ற க ச ட த ப என்கிற வைந்து மெய்களும், ஈறு - கடையிலிருக்கின்ற ங ஞ ண ந ம என்கிற ஐந்துமெய்களும், யவ்வாதி நான்மை - ய ர ல வ என்கிற நான்குமெய்களும், ளவ் - ளகரமெய்யும், ஆகு மையை யெழுத்து - ஆகிய இருபத்தைந் தெழுத்துகளும், பொது - தமிழிற்கும் ஆரியத்திற்கும் பொதுவெழுத்துகளாகும் ஒழிந்த - அவையொழிந்த, நாலே

ழும்-இருபத்தெட்டெழுத்துகளும்,திரியும்-ஆரியத்திற்குச் சிறப்
பெழுத்துகளாய்த் தமக்கேற்ற பொதுவெழுத்துகளாகத் திரிந்து
வரும்.எ-று.(பொ-ளை) ஆரியமொழியுள் அச்சென்றுவழங்குமுயி
ர்பதினாறனுள்ளும் இடையினின்றவேழா முயிர்முதனான்கும் ஈற்
றினின்றவிரண்டுமான ஆறுமொழிந்துநின்ற அ ஆ இ ஈ உ ஊ எ
ஐ ஓ ஔ என்னும்பத்தும் அல்லெனவழக்கு முப்பத்தேழு மெ
ய்யுள்ளுங் க ச ட த ப என்னு மைந்துவருக்கத்தி னிடையி லுர
ப்பியு மெடுத்துங் கனைத்துஞ் சொல்லப்பட்டு நிற்கு மூன்றுமொ
ழிந்த க ங ச ஞ ட ண த ந ப ம என்னும்பத்தும் ய ர ல வ எ
ன்னுநான்கும் ளவ்வுமாகு மிருபத்தைந்துந் தமிழிற்கும் ஆரிய
த்திற்கும் பொது வெழுத்தாம். இவையன்றி மேல் உயிருளொ
ழிந்தவாறும் ஐந்துவருக்கங்களினு மிடைகளி னொழிந்த பதினை
ந்தும்,முப்பதாமெய் முதலானவெட்டனுள் ளகரமொழிந்த வே
ழுமான இருபத்தெட்டும் ஆரியத்திற்குச் சிறப் பெழுத்தாய்த்
தமக்கேற்ற பொதுவெழுத்தாகத் திரிந்து வடமொழியாம். எ-று.
❁ மேல் ஏழாமுயிரென விதப்பாராதலின் இடையினான்கெ
ன விதவாதுகூறினார். பொதுவெழுத்தெனவே சிறப் பெழுத்
தென்பதுபெற்றாம். தமிழைநோக்கிச் சிறப்பாயின. சிறப்பெ
ழுத்துத்திரியுமென வரையறைகூறவே பொதுவெழுத் தியல்பா
யுந் தமக்கேற்ற விகாரமாயும் வருமென்பது உங்கூறினாராயிற்று.

(௱௪௭) அவற்றுள், ஏழாமுயி ரிய்யு மிருவு மைவருக்கத் தி
டையின் மூன்று மவ்வம்முதலு- மெட்டே யவ்வு முப்பது சய
வு- மேலொன்று சடவு மிரண்டு சதவு- மூன்றே யகவு மைந்
திரு கவ்வு- மாவீ றைய்யு மீயீ றிகரமும்.

(எ-ன்) மேலதற்குச் சிறப்புவிதி யுணர் - ற்று. (ப ளை) அவ
ற்றுள்- முன்னே திரியுமென்ற வெழுத்துகளுள், ஏழாமுயிர்- சிற
ப்பெழுத்தாகிய ஏழாமுயிரானது, இய்யுமிருவும்- இகரமாகவாது
லும் இருவாகவாதலும்வரும், ஐவருக்கத்து- ஐந்துவருக்கங்களிலு
ம், இடையின்மூன்றும்- நடுநின்றமும்மூன்றெழுத்துகளும், அவ்
வம்முதலும்- அவ்வவ்வருக்கங்களின் முதலெழுத்துகளாகும், எட்டு-
எட்டாவதாகிய சகரவருக்கத்து மெய்யானது, யவ்வும்- ஒரோவிட
த்தில் யகரமுமாகும், முப்பது- முப்பதாமெய்யானது, சயவும்
-மொழிக்குமுதலிலேசகரமும் நடுவிலேயகரமுமாகும், மேலொ
ன்று- முப்பத்தோராமெய்யானது, சடவும்-மொழிக்குமுதலிலே
சகரமும் நடுவிலே டகரமுமாகும், இரண்டு - முப்பத்திரண்டா
மெய்யானது, சதவும்- மொழிக்குமுதலிலே சகரமும் நடுவிலே
தகரமுமாகும், மூன்று- முப்பத்துமூன்று மெய்யானது, அகவு

ம்- மொழிக்குமுதலிலே அகரமும் நடுவிலே ககரமுமாகும், ஐந்து- முப்பத்தைந்தா மெய்யானது, இருகவ்வும்- இரண்டு ககரமாகும், ஆவீறு பொதுவெழுத்துக்களிலே மொழியிறுதி ஆகாரமானது, ஐயும்- ஐகாரமாகும், ஈயீறு- மொழியிறுதி ஈகாரமானது, இகரமும்- இகரமாகும். எ-று (பொ-ரை) மேற் றிரியுமென்றவற்றுட் சிறப்பெழுத்தாகிய வேழாமுயி ரிகரமு மிருவுமாம் ஐந்துவருக்கங்களினு மிடையினின்றமூன்றும் அவ்வவ் வருக்கங்களின் முதலெழுத்தாம் எட்டா மெய்யான சவ்வருக்கத்துள் எடுத்துச் சொல்லுமெய் யொரோவிடத்துயகரமுமாம். முப்பதாமெய்மொழிமுதற்கட் சகரமும் இடைக்கண் யகரமுமாம். முப்பத்தொன்றுமெய் மொழிமுதற்கட்சகரமுமிடைக்கண்டகரமுமாம். முப்பத்திரண்டாமெய் மொழிமுதற்கட்சகரமும்இடைக்கண்தகரமுமாம். முப்பத்துமூன்றுமெய் மொழிமுதற்கண் அகரமும் இடைக்கண் ககரமுமாம். முப்பத்தைந்தாமெய்இரண்டுககரமாம். பொது வெழுத்துண் மொழிபிறுதி ஆகாரம் ஐகாரமாம். மொழியிறுதி ஈகார மிகரமாம். எ-று. ❈ மேற் றிரியுமெனப் பொதுவிதிபோந்தவற்றுட் பயின்றுவருவனவற்றிற்குத் திரிபுகூறி யேனைய வந்தவழிக்காண்கவென்பா ரிகரமு் மாகுமெனப் பயனிலைகொடுத்துமுடியாது இகரமுமென அவாய்நிலையாக முடித்தார். [வரலாறு] இடபம்- விடபம்- திட்டி- (எ-ம்) இருடி- மிருகம்- விருத்தி- (எ-ம்) எழாமுயி ரிகரமு மிருவுமாயிற்று. நகம், நாகம்- மேகம்- (எ-ம்) சலவாதி- விசயம்- சருச்சனை- (எ-ம்) பீடம்-பீடை- திடம் (எ-ம்) தலம்-தினம்-தனை- (எ-ம்) பலம்-பந்தம்-பாரம்- (எ-ம்) ஐந்துவருக்கத்தினு முரப்பியும் எடுத்துங் கனைத்துஞ் சொல்லு மூன்றுமவ்வம் முதலாயின. அயம்- பங்கயம்- எனவெட்டாமெய் யகரமுமாயிற்று, சாலை- சூலை- (எ-ம்) மயானம்- (எ-ம்) முப்பதாமெய்சகரமும் யகரமுமாயிற்று. சட்டி- (எ-ம்) இடபம்- (எ-ம்) முப்பத்தொன்றுமெய் சகரமும் டகரமுமாயிற்று. சித்தி- சூத்திரம்- சேனை- (எ-ம்) ஆதனம்- வாதனை- (எ-ம்) முப்பத்திரண்டாமெய் சகரமுந்தகரமுமாயிற்று. அரன்- அரி- (எ-ம்) சிங்கம்- மோகம்-(எ-ம்) முப்பத்துமூன்றுமெய் அகரமுங் ககரமுமாயிற்று. பக்கம் - தக்கணம்- எனமுப்பத்தைந்தாமெய் இரண்டு ககரமாயிற்று. வேலை- சாலை-மாலை- உவமை- வனிதை- என ஆகாரவீறு ஐகாரவீறாயிற்று. புரி-மேதினி-குமாரி- என ஈகாரவீறு இகரவீறாயிற்று. (௨௰)

(௱௪௮) ரவ்விற் கம்முத லாமுக் குறிலும்- லவ்விற் கிம்முத லிரண்டும் யவ்விற்- கிய்யு மொழிமுத லாகிமுன் வருமே. ❈

(எ-ன்) இதுவுமது. (ப-ரை) ரவ்விற்கு- ரகரத்திற்கு, அம்முத

லாமுக்குறிலும்- அ இ உ என்கிறமூன்று குற்றெழுத்துகளிலொன்றும், லவ்விற்கு- லகரத்திற்கு, இம்முதலிரண்டும் - இ உ என்கிற இரண்டிலொன்றும், யவ்விற்கு- யகரத்திற்கு, இய்யும் - இகாரமும், மொழிமுதலாகி- அவ்வெழுத்துகளை முதலிலுடைய வடமொழிகளுக்குமுதலாகி, முன்வரும் - அம்மூன் றெழுத்துகளுக்கு முன்னேவரும். எ-றி. (பொ-ள) ரகர லகர யகரங்களைமுதலாகவுடைய ஆரியமொழிகள் வடமொழிபாங்கால் அகர இகர உகர மென்னு மிம்மூன்றுகுற்றுயிரும் இங்ஙனஞ் சொன்னவாறே அவ்வடமொழிகட்குமுதலாய் அம்மூன்றெழுத்திற்கு முன்னர்வரும். எ-று [வ-று] அரங்கம்- இராமன்- உரோமம்- (எ-ம்) இலாபம்- உலோபம்- (எ-ம்) இயக்கன்- (எ-ம்) வரும். (உக)

(௱சக) இணைந்தியல்காலை யரலக் கிகரமு- மவ்வக் குகரமு நகரக் ககரமு- மிசைவரும் ரவ்வழி யுவ்வுமாம் பிற. *

(எ-ன்) இதுவுமது. (ப-ள) இணைந்து - ஆரியமொழியுள் இரண்டெழுத்து இணைந்து, இயல்காலை- ஓரொழுத்தைப்போலநடக்கும்போது, யாலக்கு- பின்னின்ற யகர ரகர லகரங்களுக்கு, இகாரமும்- இகாரமும், மவ்வக்கு- மகர வகரங்களுக்கு - உகரமும்- உகாரமும், நகரக்கு - நகரத்திற்கு, அகரமும் - அகாரமும், மிசை- மேலே, வரும் - வந்து வடமொழிகளாகும், ரவ்வழி- இணைந்து முன்னின்ற ரகரத்திற்குப்பின், உவ்வுமாம்- உகாரமும் வரும். எ-று. (பொ-ள) ஆரியமொழியுள் இரண்டெழுத்திணைந்து ஓரொழுத்து நீர்மையாய் நடக்குங்காற் பின்னிற்கும் யரலக்கண்மீதே இகரமும் மகர வகரங்கண்மீதே உகரமும்நகரமீதே அகரமும் வந்துவடமொழியாம் இணைந்து முன்னிற்கும் ரகரத்திற்குப்பின்ன ருகரமும்வரும். எ-று. ❁ [வ-று.] வாக்கியம்-வாசகியம்-நாட்டியம்- (எ-ம்) வக்கிரம்- வச்சிரம்- சத்திரம்- அப்பிரம்- (எ-ம்) சுக்கிலம்- ஆமிலம்- (எ-ம்) பதுமம்- (எ-ம்) பக்குவம்- (எ-ம்) அரதனம்- (எ-ம்) அருக்கன்-அருத்தம்- கருப்பம்- சருக்கம் - தருமம்- (எ-ம்) வரும். பிறவென்றமையானே, சத்தி- சுட்சி- காப்பியம்- பருப்பதம்- என்றற் றொடக்கத்துத் திரிபும், தூலம் - அத்தம் - ஆதித்தன்- அநத்தம்- என்றற்றொடக்கத்துக் கேடும் மற்றும் விகாரத்தால் வருவனவுங் கொள்க. (உஉ)

(௱ருய) றனழ எ ஒவ்வுமுயிர் மெய்யுமுயிரளு- புல்லாச்சார்புந் தமிழ்பிற பொதுவே. *

(எ-ன்) வடமொழியாக்கங் கூறவேண்டி ஆரியத்திற்குப் பொதுவெழுத்து சிறப்பெழுத்தெனவிருந்தமையி னிவ்விதப்புத் தமிழிற்குண்டோவின்றோவென்றையுறுவார்க் கையமறுத்தனுதலிற்று. (ப-ளா) ற ன ழ எ ஒவ்வும்- முதலுஞ் சார்புமாகிய தமிழெழுத்

தூநாற்பதுகளிலே றகர ணகர ழகர எகர ஒகரங்களைந்தும், உயிர்மெய்யுமுயிரள பல்லாச்சார்பும்- உயிர்மெய்யும் உயிரளபெடையுமல்லாத சார்பெழுத்தெட்டும், தமிழ்- தமிழிற்கே சிறப்பெழுத்துகளாம், பிற- ஒழிந்தவிருபத்தே ழெழுத்துகளும், பொது- பொதுவெழுத்துகளாம். எ-று. (பொ-ரை) முதலுஞ்சார்புமான நாற்பதெழுத்துள்ளும் றகர ஙகர ழகர எகர ஒகரமான முதலெழுத்தைந்தும் உயிர்மெய்யு முயிரளபெடையுமல்லாத சார்பெழுத்தெட்டுந் தமிழிற்கே சிறப்பெழுத்தாம் ஒழிந்த விருபத்தேழுந் தமிழிற்கும் ஆரியத்திற்கும் பொதுவெழுத்தாம். எ-று. ❁ மெய்யை முற்கூறினர் எகர ஒகரங்கள் பிராகிருதத்திற்கு முரியவாதலி னென்க. (உரு)

இரண்டாவது பதவியன் முற்றிற்று.

மூன்றாவது.

உயிரீற்றுப்புணரியல்.

(௱௫௧) மெய்யுயிர் முதலீ றாமிரு பதங்களுந் - தன்னொடும் பிறிதொடு மல்வழி வேற்றுமைப் - பொருளிற் பொருந்துழி நிலைவரு மொழிக - ளியல்பொடு விகாரத் தியைவது புணர்ப்பே. *

(இ-ள்) நிறுத்த முறையானே மேலையியலுட் கூறிய பதங்களொன்றோடொன்று புணருமா றுணர்த்துவான்றொடங்கிப் புணர்ச்சி யின்னதென்பதூஉம் பொதுப்புணர்ச்சியு முறையே தலைப்பெய் துயிரீற்றப்பதப்புணருஞ் சிறப்புப்புணர்ச்சி கூறுவார் சமுகந்தோட்ட மென்றுற்போல மிகுதிபற்றியுகுறியா யிவ்வியற்கு உயிரீற்றுப் புணரியலெனப் பெயர்தந்தமையி னிவ்வியலின் கவத்தமுறையே புணர்ச்சி யின்னதென்ப துணர்-ற்று. (ப-ரை) மெய்யுயிர் - மெய்யாவது உயிராவது, முதலீறும்- முதலுமீறுமாகிய, இருபதங்களும்- பகாப்பதம் பகுபதம் என்கின்ற விரண்டுபதங்களும், தன்னொடும் பிறிதொடும்- தன்னொடுதானும் பிறிதொடு பிறிதுமாய், அல்வழிவேற்றுமைப்பொருளின் - அல்வழிப் பொருளினாலாவது வேற்றுமைப் பொருளினாலாவது, பொருந்துழி - பொருந்துமிடத்து, நிலைவருமொழிகள் - நிலை

மொழியும் வருமொழியும், இயல்பொடுவிகாரத்து - இயல்போடாயினும் விகாரத்தோடாயினும், இவைவது - பொருந்துவது, புணர்ப்பு - முன்சொல்லப்பட்ட புணர்ச்சியாம், எ-று. (பொ-ரை) மெய்யையும் உயிரையும் முதலும் ஈறுமாகவுடைய பகாப்பதம் பகுபதமென்னும் இரண்டுபதங்களுந் தன்னொடுதானும் பிறிதொடு பிறிதுமாய் அல்வழிப்பொருளினானுதல் வேற்றுமைப்பொருளினானுதல் பொருந்துமிடத்து நிலைமொழியும் வருமொழியும் இயல்போடும் விகாரத்தோடும் பொருந்துவது மேற்கூறிய புணர்ச்சியாம் எ-று. ❁ உயிர்மெய் முதலீறுமெனில் உயிர்மெய்யென்னும் ஓரெழுத்தாகப் பொருள்படுமாதலின் மெய்யுயிர்முதலீறுமென மெய்யை முற்கூறினார். திசைச்சொல்லும் வடசொல்லும் பெயர்வினையிடையுரியாய் அடங்குமாதலின் அவற்றுள் அடக்கி இருபதங்களுமென்றார். வேற்றுமையல்லாதவழி அல்வழியாதலின் வேற்றுமையல்வழியெனக்கூறவேண்டும் அங்ஙனங்கூறின் வேற்றுமைப்பொருள் அல்வழிப்பொருளென விருபொருட்படாது வேற்றுமையென்பது அல்வழியை விசேடித்ததாய் அல்வழிப்பொருள் ஒன்றினும் பொருந்துழியெனப் பொருள்படுமாதலின் அல்வழிவேற்றுமையென அல்வழியை முற்கூறினார். இயல்பெனினும் தன்மையெனினும் இயற்கையெனினுமொக்கும். விகாரமெனினும் செயலெனினும் செயற்கையெனினும் விதியெனினுமொக்கும். இவ்விரண்டனுள் "நின்றசொன்முன் னியல்பாகும்மே" என இயற்கையைச் செயற்கையாகவும் "இசையாவொருபொருளில்லென்றல் யார்க்கும் - வசையன்று வையத்தியற்கை" எனச் செயற்கையை இயற்கையாகவுங் கூறுதல் இலக்கணம். புணரியன் மூன்றனுள்ளு மெய்யுயிர் முதலீறுமிரு பதங்களும் இவ்வாறு புணர்ந்து வருதல் காண்க. (க)

(௱ரு௨) வேற்றுமை யைம்முத லாறு மல்வழி - தொழில் பண் புவமை யும்மை யன்மொழி - யெழுவாய் விளியீ ரெச்சமுற் றிடையுரி - தழுவு தொடரடுக் கெனவீ ரேழே, ❁

(எ-ன்) மேல் அல்வழிவேற்றுமையென்றார் அவ்வயிரண்டையு மென்பதுணர் - ற்று. (ப-ரை) வேற்றுமை - வேற்றுமைப் புணர்ச்சியாவது, ஐம்முதலாறும் - ஐ ஆல் கு இன் அது கண் என்கின்ற ஆறுருபுகளும் மறைந்தாகிலும் வெளிப்பட்டாகிலும்வரப் பதங்கள் பொருந்துந் தொடர்ச்சியாம், அல்வழி - அல்வழிப்புணர்ச்சியாவது, தொழில் - வினைத்தொகையும், பண்பு - பண்புத்தொகையும், உவமை - உவமைத்தொகையும், உம்மை - உம்மைத்தொகையும், அன்மொழி - அன்மொழித்தொகையும், எழுவாய் - எழுவாயுந், விளி -

விளியும், ஈரெச்சம் - பெயரெச்ச வினையெச்சங்களும், (ஈர்)முற்று - தெரிநிலைவினை குறிப்புவினைமுற்றுக்களும், இடை - இடைச்சொல்லும், உரி - உரிச்சொல்லும், அடுக்கென - அடுக்குமென்று, ஈரேழ் பதினான்குவகையாக, தழுவுதொடர் - பதங்கள்பொருந்துந் தொடர்ச்சியாம், எ-று. (பொ-ரை) வேற்றுமைப்புணர்ச்சி பெயர்மேல ஐ ஆல் என்னுஞ்சூத்திரத்து ஐமுதலிய ஆறு உருபுந்தொக்கும் விரிந்தும்வரப் பதங்கள்பொருந்துந் தொடர்ச்சியாம். அல்வழி புணர்ச்சி வினைத்தொகை முதலிய ஐந்துதொகைநிலையும் எழுவாய் முதல் ஒன்பது தொகாநிலையுமெனப் பதங்கள் பொருந்துந் தொடர்ச்சி பதினான்காம், எ-று. ✽ வேற்றுமைத் தொகைநிலை தொகாநிலையென விதவாமையின் அவ்விரண்டும் வேற்றுமைப்புணர்ச்சி யென்பதூஉம் முற்றெச்சங்களை விதந்தமையிற் றொழிலென்றது வினைத்தொகையை யென்பதூஉம் வினைத்தொகை முதல் ஐந்தும்விரிந்தவழி வினைத்தொகை பெயரெச்சமாயும் பண்பை விளக்குமொழி இடைச்சொல்லாதலிற் பண்புத்தொகையிரண்டும் இடைச்சொற் சந்தியாயும் உவமைத்தொகை யிரண்டாம்வேற்றுமையோடு பயனிலையாயும் உம்மைத்தொகை இடைச்சொற் சந்தியாயும் அன்மொழித்தொகை பொற்றொடி யென்பது பொன்னாலாய தொடியினையுடையாள் எனச் சொற்களுஞ் சந்திகளும் பலவாயுமுடிதலானும் வேற்றுமைத் தொகையன்றி இத்தொகைகள் தொகாநிலையுமாமென மேற்சூத்திரஞ் செய்யாமையானும் இவ்வைந்துந்தொடருந் தொகைநிலை யென்பதூஉம் பெற்றாம். இரண்டென்பதனை முற்றென்பதனோடுந் தழுவுதொடரென்பதனை யெல்லாவற்றோடுமொட்டுக. அடுக்குந் தழுவுதொடராயினும் ஒருசொல்லடுக்கிவருதலின் ஏனையபோற் றழுவுதொட ரன்றென்பார் விதந்துபிற்கூறினார். [உ-ம்] பொன்னுடையான் - பொன்னை யுடையான் - கல்லெறிந்தான் கல்லாலெறிந்தான் - கொற்றன்மகன் கொற்றற்குமகன் - மலைவீழருவி - மலையின்வீழருவி - மலையுச்சி - மலையினுச்சி - மலைமுழை மலைக்கண்முழை - என வேற்றுமைப் புணர்ச்சிவந்தன. கொல்யானை - கருங்குதிரை - ஆயன்சாத்தன் - பொற்சுணங்கு - இராப்பகல் - பொற்றொடி - கொற்றன்கொடுத்தான் - கொற்றாகொள் - உண்டசாத்தன் - உண்டுவந்தான் - உண்டான்சாத்தன் - குண்டுகட்டெருமை - அணங்குகொலாய்மயில் கொல்லோகனங்குழை - தனிமேபதையே - படைபடையென்றஞ்சி - என அல்வழிப் புணர்ச்சி வந்தன. தழுவுதொடராறும் பதினான்குமெனக் கூறவே தழுவாத்தொடருஞ்சிலவுள அவ்விருவழியுமென்றாராயிற்று.

அவைவருமாறு. கைக்களிறு - பொற்குடம் அடகப்புண் - என

பன தழுவுதொடராகிய உருபும் பயனுமுடன் றொக்கமையிற்
களிறு குடம் பூண் என்பனவற்றோடு நிலைமொழிக டழுவாதுதொ
டர்ந்து மூன்றுவிகாரமுமேற்ற வேற்றுமைப்புணர்ச்சி. "இரு
ம்பு திரித்தன்ன மாயிருமருப்பிற் பரலவ லடைய விரலை தெறி
ப்ப,, என்பதனுண் மருப்பினிரலை யெனக் கொண்டுகூட்டாக
வந்து இரண்டாம்வேற்றுமையுருபும் பயனுமுடன்றொக்கு மரு
ப்பென்பது இரலையென்பதனோடுபுணராது மருப்பிற் பரலெ
னப்புணர்ந்து திரிந்தது. இத்தொடக்கத்தனவெல்லாந் தழாத்
தொடராய வேற்றுமைப் புணர்ச்சியாமென்க. "சுனையாழ வம்
மி மிதப்ப,, என்பதனுண் மொழிமாற்றுச் சுனைமிதப்பவெ
னத் தழுவுதொடராகி வரும்வழி இயல்பாகமுடியும் எழுவாய்ப்
புணர்ச்சி சுனையாழவெனத் தழாத்தொடரா யுடம்படுமெய்தோ
ன்றிமுடிந்தது. இத்தொடக்கத்தனவெல்லாந் தழாத்தொடரா
ய அல்வழிப்புணர்ச்சியாமென்க. மாடத்தைக்கட்டினான் - என
வேற்றுமையுருபுஞ் சாரியையும் விரிந்துநின்ற இருமொழி ஒரு
சந்தியாகிய வேற்றுமைச்சந்தியை வேற்றுமை நயங்கருதி நான்
குசொன் மூன்றுசந்தியாக்கி உருபுஞ் சாரியையும் இடைச்சொ
ல்லாதலின் அல்வழியுள் இடைச்சொற் சந்தியென்று கோடலு
மொன்று. எட்டேவேற்றுமையென மேற்கூறுவார் எழுவாயும்
விளியுமொழித்து வேற்றுமை ஐம்முத லாறென்றதென்னையெ
னின், பெயர்ப்பொருளை வேற்றுமை செய்தலான் வேற்றுமை
யெட்டென்பார் எழுவாய்க்கும் விளிக்கும் உருபு பெயரும்பெய
ரதுவிகாரமுமன்றி வேறுருபின்மையின் அவ்விரண்டனையுமொ
ழித்துத்தமக்கென் உருபுடையன இடைநின்ற ஆறு வேற்றுமை
யுமேயாதலின் அவற்றின் உருபாறுந்தொக்கும் விரிந்து மிடை
நிற்க அவ்வாறோடும் பதங்கள்பொருந்துதல் புணர்ச்சியைவேற்று
மைப்புணர்ச்சி யென்றாரென்க. வினைத்தொகை பண்புத்தொ
கை அன்மொழித்தொகை யென்னும் அல்வழிப்புணர்ச்சியவா
ய தொகைநிலைத் தொடர்மொழிகளை ஒருமொழிக ளென்பாரு
முளர், அவர்கூற்றுத்தாய் மலடி யென்றாற் போலும். (உ)

(௱௫௫) விகார மனைத்து மேவல தியல்பே. *

(எ-ன்) மேல் இயல்பொடு விகாரத் தியைவதென்றார் அவற்
றுள் இயல்பாவதுணர் - ற்று. (ப-ரை) விகாரமனைத்தும்- மேல்
வரும் விகாரவகையனைத்தும்; மேவலது- அடையாதது, இயல்பு-இ
யல்பாகும், எ-று. (பொ-ரா) மேல்வரும் விகாரவகை யனைத்து
மேவாதது இயல்புப்புணர்ச்சியாம் எ-று. ※ [வரலாறு.] பொன்
மலை-புகழழகிது. ஒளிமணி- எனவரும். இயல்புக்குவிதி கூறவே
ண்டுவ தென்னையெனின், மலர்க்கணை தொடுத்தானென விகாரமா

யவழி மலராகியகணையைத் தொடுத்தானெனவும் மலர்க்கணைதொடுத்தானென வியல்பாயவழி மலரையுங் கணையையுந் தொடுத்தானெனவும் பொருள்வேறுபடுதலிற் கூறவேண்டுமென்க. (௩)

(௱௫௪) தோன்றல் திரிதல் கெடுதல் விகார- மூன்றுமொழிமூவிடத்து மாகும். *

(எ-ன்) விகாரமுணர்-ற்று. (ப-ரை) தோன்றல்-எழுத்தாவதுசாரியையாவதுதோன்றுதலும், திரிதல்-வேறுபடுதலும், கெடுதல-கெடுதலும், விகாரம்- முன்சொன்ன விகாரமாகும், மூன்றும்-இம்மூவகைவிகாரமும், மொழி- நிலைமொழிவருமொழிகளுடைய. மூவிடத்தும்- முதலிடைகடை என்கின்ற மூன்றிடத்துப், ஆகும் எற்றபடி வரும், எ-று. (பொ-ரை) மெய்யேனு முயிரேனு முயிர்மெய்யேனுஞ் சாரியையேனுமொன்றும் பலவுந்தோன்றுதலுந் திரிதலுங் கெடுதலுமேற்சொன்ன விகாரமாகும். இம்மூவகை விகாரமுநிலைமொழிவருமொழிகளின் முதலிடை கடையென்னு மூன்றிடத்துமேற்றபெற்றிவரும். எ-று. [உ-ம்] பூகொடி- பூங்கொடி வருமொழிக்கு முதலின்மெய் தோன்றின. பஃறலை வருமொழிமுதலினுநிலைமொழியீற்றினுமெய் திரிந்தன. நிலவலையப்- நிலைமொழியீற்றின் மெய்கெட்டது. அறுபது நிலைமொழிமுதலுயிர்திரிந்து வருமொழியிடையொற்றுக்கெட்டது. பல்பொருள் நிலைமொழியீற்றுயிர் கெட்டது. நாடூரி நிலைமொழியீற்றுயிர்மெய்கெட்டு டகரந்தோன்றிற்று. தமிழப்பிள்ளை- பனங்காய் நிலைமொழியீற்றிற்சாரியைதோன்றின. காட்டாதொழிந்தன வந்தவழிக்காண்க. இவ்விகாரங்களிலைமொழி வருமொழிகளுள் ஒருமொழியைச் சார்ந்துவந்தன. ஒருமொழி தொடர்மொழியென விதவாது பொதுப்படமொழிமூவிடத்துமாகுமென்றமையி னிருமொழியைச சார்ந்துவருவனவு முளவெனக்கொள்க. அவைவருமாறு. ஆவழுகிது வகரவுடம்படுமெய் தோன்றிற்று. உரியநெய் யகரவுயிர்மெய் தோன்றிற்று. புளியங்காய் அம்முச்சாரியை தோன்றிற்று. இத்தோன்றலவிகாரங்களிலைமொழிவருமொழிகளுள் ஒருமொழிக்கே யுரியவன்றியிருமொழியையுஞ் சார்ந்துவந்தனமைகாண்க. (௪)

(௱௫௫) வலித்தன் மெலித்த னீட்டல் குறுக்கல்-விரித்தறொகுத்தலும் வருஞ்செய்யுள் வேண்டுழி. *

(எ-ன்) செய்யுள்விகார முணர்- ற்று. (ப-ரை) வலித்தல்- மெல்லொற்றை வல்லொற்றாக்கலும், மெலித்தல்- வல்லொற்றை மெல்லொற்றாக்கலும், நீட்டல்- குற்றெழுத்தை நெட்டெழுத்தாக்கலும், குறுக்கல்- நெட்டெழுத்தைக் குற்றெழுத்தாக்கலும், விரித்தல் - இல்லாதவெழுத்தை வருவித்தலும், தொகுத்தல்- உள்ளவெழுத்தைநீக்கலும், வரும்- வருவனவாம், செய்யுள்-செய்யுளிடத்து, வே

ண்டுழி- அடிதொடை முதலானவைகளைநோக்கி அமைக்கவேண்டுமிடத்து. எ-று. (பொ-ள்) அல்வழி வேற்றுமையான் வருமேற்கூறிய மூன்றுவிகாரமுமேயன்றி ஆறுக இங்ஙனங்கூறிய விகாரங்களும் வருவனவாஞ் செய்யுளகத்து அடி தொடை முதலிய நோக்கி யமைக்கவேண்டுமிடத்து, எ-று. ❁ இவ் வதிகாரத்துட் கூறுஞ் செய்யுண்முடிபும் பிறவுமடங்குதற்கு இன்னது நோக்கியென வரைந்துகூறாராயினர். [வரலாறு.] "குறுத்தாட் பூதஞ் சுமந்த- வறககதி ராழியெம் மண்ணலைத் தொழினே.,, இது - குறுந்தாளென்றற்பாலது- குறுத்தாளென வலித்தவாறு. "தண்டையினக்கிளி கடிவோள் - பண்டைய ளல்லண் மாநோக்கினளே.,, இது தட்டையென்றற்பாலது- தண்டையென மெலித்தவாறு, "தீத்தொழிலே கன்றித் திரிதந் தெருவை போற்- போத்தரார் புல்லறிவினார்.,, இது- பொத்தரு ரென்றற்பாலது- போத்தருரென நீட்டியவாறு. "யானை யெருத்தத் திருந்த விலங்கிலைவேற் றென்னன்- திருத்தார் நன்றென்றேன் றியேன்.,, இது- தீயே னென்றற்பாலது தியேனெனக் குறுக்கியவாறு. "சிறியிலை வெதிரி னெல்விளையும்மே.,, இது- விளையுமே யென்றற்பாலது- விளையும்மே யெனவொற்றிலவழி யொற்றைவிரித்தவாறு இதனுட் சிறியவிலை யென்றற்பாலது- சிறியிலையெனத் தொகுத்தவாறு. "தொட்டனைத் தூறு மணற்கேணி, மாந்தர்க்குக்- கற்றனைத் தூறு மறிவு.,, இதுவுந் தொட்டது கற்றதெனற்பாலது தொட்டுகற்று எனத்தொகுத்தவாறு. பிறவுமன்ன. (௫)

(௱௫௬) ஒருமொழி மூவழிக் குறைதலு மனைத்தே. ❋

(எ-ன்.) இதுவுமது. (ப-ரை) ஒருமொழி - ஒருசொல்லினுடைய, மூவழி- முத லிடை கடையென்கிற மூன்றிலோரிடத்து, குறைதலும்- குறைந்துவருதலும், அனைத்து- அச்செய்யுள்விகாரமாம். எ-று. (பொ-ரை) அடி தொடை முதலியநோக்கித் தொகுக்கும்வழித் தொகுத்தலன்றி வழக்கின்கண் மரூஉப்போலச் செய்யுட்கண் மரூஉவா யடிப்பாடாகவொருமொழி முதலிடைகடையென் னுமூன்றிடத்துங் குறைந்துவருதலுஞ் செய்யுள் விகாரமாம். எ-று. ❁ [வ-று.] "மரையிதழ் புரையு மஞ்செஞ் சீறடி.,, (எ-ம்) "வேதின வெரிநி னோதிமுதுபோத்து.,, (எ-ம்) "நீலுண் டுகிலிகை கடுப்ப.,, (எ-ம்) முறைவே தாமரை ஓந்தி நீலம் எனற்பாலன குறைந்தவாறுகாண்க. செய்யுட்கேயுரிய விகாரங்களை மீண்டுக்கூறிய தென்னையெனிற் செய்யுளகத்து அல்வழிவேற்றுமையான்வரு மூன்றுவிகாரமும் இவ்வொன்பது விகாரமும்வருதலின் வேறுபா டறிதற்கென்க, (௬)

(௱௫௭) ஒருபுணர்க் கிரண்டு மூன்று முறப்பெறும். *

(எ-ன்.) அல்வழி வேற்றுமைப் புணர்ச்சிவிகாரத்தின் வருவ தோர் ஐயமறுத்தனுதலி-ற்று. (ப்-ரை) ஒருபுணர்க்கு,- ஒருபுணர்ச் சிக்கு, இரண்டுமூன்றும்- ஒருவிகாரமே யல்ல மவிரண்டுமூன்று ம், உறப்பெறும்- வரப்பெறும். எ-று. (பொ-ரை ஒருபுணர்ச்சிக் கட் டோன்ற றிரிதல் கெடுதலென்ற விகாரமெத்துணை வருமெ ன்றையுறற்க வென்றேயன்றி இரண்டுமூன்றும் வரப்பெறும். எ-று. ❁ விகாரத்தியைவது புணர்ப்பெனவே யொன்றுவருதல் கூறாதேயமைதலின் இரண்டுமூன்றுமென்றார். [வ-று] யானை க்கோடு- நிலப்பனை பனங்காய்- எனமுறைமைய காண்க (௭)

(௱௫௮) எண்மூ வெழுத்தீற் றெவ்வகைமொழிக்கு - முன்வரு ஞ நம ய வக்க ளியல்புங்- குறில்வழி யத்தனி யைநொது மு ன்மெலி-மிகலுமாம் ண ள ன ல வழிநத் திரியும். *

(எ-ன்) பொதுப்புணர்ச்சி யுணர்- ற்று. (ப-ரை) எண்மூவெ ழுத்து - இருபத்துநான்கெழுத்துகளையும், ஈற்று - இயல்பி னலா யினும் விதியினலாயினும் ஈறாகவுடைய, எவ்வகைமொழிக்கும்- பெயர்ச்சொல் வினைச்சொல் இடைச்சொல் உரிச்சொல திசைச் சொல் வடசொல் என்கின்ற பலவகைப்பட்ட சொற்களுக்கும், முன்- முன்னே, வரும்- வருகிற, ஞ ந ம ய வக்கள்- ஞகர நகர ம கர யகர வகரங்கள், இயல்பும் அல்வழி வேற்றுமை யிரண்டினுமி யல்பாதலும், குறில்வழிய- குற்றெழுத்தின்பின்னின்ற யகரமெ ய்யே, தனியை- உயிர் உயிர்மெய் என்கிற ஐகாரமே, நொ-நொவ் வே, து - துவ்வே, முன் - என்பவைகளுக்குமுன்வருகிற, மெலி- ஞகார நகார மகாரங்கள், மிகலும்- பிறசொற்களுக்குமுன் இயல் பாதலன்றி மிக்குமுடிதலும், ஆம்- ஆகும், ண ள ன லவழி- ண ள ன லக்களின்முன்வருகிற, ந- நகரமானது, திரியும் மற்றை யீறுகளு க்குமுன் னியல்பாதலன்றித் திரியும். எ-று (பொ-ரை.) இயல்பா கவும் விதியாகவுமிருபத்து நான்கெழுத்தையு மீறாகவுடையபெய ச்சொல் வினைச்சொல் இடைச்சொல் உரிச்சொல திசைச்சொல் வடசொல் என்பன நிலைமொழியாகநிற்கவிவற்றிற்குமுன்னர்வரு ம் ஞகார நகார மகர யகார வகாரங்க ளல்வழிவேற்றுமையாயவி ருவழியு மியல்பாதலுங் குற்றெழுத்தின்பின் வரும் யகர வெற் றெயோரெழுத்தொருமொழியானவுயிருயிர்மெய்யென்னும்ஐகா ரமே நொவ்வே துவ்வே யென்பவற்றிற்கு முன்னர்வரும் ஞகார நகார மகாரங்கள் பிறசொற்கண்முன் னியல்பாதலன்றி மிக்குமு டிதலுமாய் ணகார ளகார னகார லகாரங்கட்கு முன்வரும் நகார ப்பிறவீற்றின்முன் னியல்பாதலன்றித் திரியும். எ-று. ❁ எவ்வ கைமொழிக்கு மென்றமையான் விதியீறும்பெற்றாம். நகரம் இ

வ்வாறுதிரியுமென ஈண்டுக்கூறிக் குறைவுறுமையின் மேலவற்றோ
டொருங்கெண்ணாது விதந்தார். புணரிய விடத்தியாண்டும் அல்வ
ழி வேற்றுமையெனக் குறிப்பானும் வெளிப்படையானு
ம் விதவாராயின் இருவழியுங்கொள்க. [உம்] விள - பலா - புளி - தீ -
கடு - பூ - சே - பனை - கோ - கௌ - உரிஞ் - மண் - பொருந் - மரம் - பொன் -
வேய் - வேர் - வேல் - தெவ் - யாழ் - வாள் - எஃகு - எனநிறுத்தி, குன்ற
து - நீண்டது - மாண்டது - யாது - வலிது - (எ-ம்) ஞாற்சி - நீட்சி - மா
ட்சி - யாப்பு - வலிமை - (எ-ம்) விளைவு நாட்டினன் - மண்ணை வைத்
தான் - (எ-ம்) வருவித்து இருவழியும் வருமொழிக்கு முதலாய
மென்கணமும் இடைக்கணமும் இயல்பாயவாறுகாண்க. ஒழிந்த
உயர்திணைப்பெயர் முதலிய அறுவகைச் சொற்களினும் இவ்வா
றேயொட்டுக. மெய் - கை - குன்றது - நீண்டது - மாண்டது - (எ-
ம்) ஞாற்சி - நீட்சி - மாட்சி - (எ-ம்) இருவழியுமிக்கன. நொ - து -
ஞொள்ளா - நாகா - மாடா - என இவை வினையாகலின் அல்வழியின்
மிக்கன. தொழிற்பெயரிறுதி மெய்யுகரம்பெறுதலு நகரத்திரி
பு மேல்வருஞ் சிறப்புச் சூத்திரத்துட்காண்க. மெலி மிகலுமா
மென வெண்ணின்கணிற்கும் எச்சவும்மையானே - நொ து - என்
னு மிரண்டுசொன்முன்னும் இடையின மிகலுமாமெனக் கூறி
னாராயிற்று. அவைவருமாறு, நொய்யவனு - நொவ்வளவா - துய்ய
வனு - துவ்வளவா - எனவரும். இடையினமிகுதல் குறில்வழி யவ்வி
ற்குத் தனி ஐக்கும் பொருந்தாமையின் உம்மையாற் றழீஇயி
னார். இவ்வாறு இடையின்மிகுதலை ஆசிரியர் தொல்காப்பியரும்,
"அவற்றுள், மெல்லெழுத் தியற்கை யுறழினும் வரையார்." என
உம்மையாற் றழீஇயினார். அச்சூத்திரத்திற்கு அவ்வாசிரியர் கருத்
தன்றி வேறுரை செய்வாருமுளர். நொ து வென்னு மிவ்விரண்டு
சொன்முன்னும் மெல்லினமும் இடையினமு மிகாவேற்புணர்ச்
சியின்றி விட்டிசைபோலும். அன்றேல், வாழைப்பழம் கீரை
கறி யென்றாற்போலும். எகரவீற்றிற்கு உதாரணங்காட்டாரில
ம் அது வினாவிடைச்சொற்கணன்றி வாராமையானும் அவ்வினா
விற்கெய்தியது விலக்கிப் பிறிதுவிதி மேற்கூறுதலானு மென்க.
இச்சூத்திரமுதலியன தொடர்சொற்புணர்த்த லென்னுமுத்தி.()

(௱௫௯) பொதுப்பெய ருயர்திணைப் பெயர்க ளீற்றுமெய்-
வலிவரி னியல்பா மாவி யரமுன் - வன்மை மிகா சில விகாரமா
முயர்திணை. *

(எ-ன்) இதுவுமது. (ப-ரை) பொதுப்பெயர் - இருதிணைகளு
க்கும் பொதுவானபெயர்களுக்கும், உயர்திணைப்பெயர்கள் - உய
ர்திணைப்பெயர்களுக்கும், ஈற்றுமெய் - ஈற்றிலுள்ள மெய்கள், வலி -
வல்லெழுத்து முதன்மொழிகள், வரின் - வந்தால், இயல்பாம் இய

ல்பாலும், ஆவி- உயிரையும், யர- யகர ரகர மெய்களையு மீறாகவு
டைய அவ்விருவகைப் பெயர்களுக்கும், முன்- முன்வருகிற, வன்
மை- வல்லெழுத்துகள், மிகா- மிகாவாம், உயர்திணை- உயிரீறு மெ
ய்யீறுமாகிய உயர்திணைப்பெயர்கள் நாற்கணங்களோடும் புணரு
மிடத்து, சிலவிகாரமாம்- நிலைமொழிவருமொழிகள் விகாரப்படு
வனவுஞ் சிலவுளவாம், எ-று. (பொ-ரை இருதிணைப் பொதுவான
பெயர்க்குமுயர்திணைப் பெயர்க்கு மீறானமெய்கள் வல்லினமுத
ன்மொழிவந்தாலியல்பாம் உயிரோ யகரமே ரகரமேயென்னு மிவ்
வீற்றவ்விருபெயர்கண் முன்னரும் வரும் கசதபக்கண் மிகாவாம்
மெய்யுயிரீற் றுயர்திணைப்பெயர்க ணாற்கணங்களோடும் புணருமி
டத்து நிலைமொழி வருமொழிகள் விகாரப்படுவனவுஞ் சிலவுளவா
ம். எ-று. ✿ வல்லினத்துண் மயங்காதனமயங்கி னீற்றுமெய்விகார
ப்படுவனவுமுளவாதலிற் பொருட்பட வலிவரினென்றும வல்லி
னமிகுதற் குரியழகர மஃறிணைக்கன்றி யிவ்விருபெயர்க்குமீறாகா
மையி னதனையொழித்து யரமுன்னென்றும் வன்கணமேயன்றி
யேனைக்கணங்கள்புணரினும் விகாரப்படுமாதலின் இறந்ததுதழீஇ
ய வெச்சவும்மை கொடுத்து விகாரமுமாமென்றது விகாரமாமெ
ன்றும் அவ்விகார நிலைமொழிவருமொழி யிரண்டினு மேற்றபெற்
றியாகவருதலி னுயர்திணையீறென்னு துயர்திணையென்றுங் கூறினா
ர். உயர்திணைப்பெயரைப் பின்வைத்தார் பின்பு மெடுத்து விதத்த
ற்கென்க. [உ-ம்] சாத்தன்- கொற்றன்- ஊண்- குறிது- சிறிது- தீது
- பெரிது- குறியன்- சிறியன்- தீயன்- பெரியன்- (எ-ம்) கை- செ
வி- தலை- புறம்- (எ-ம்) பொதுப்பெயரிறுதி னகர ணகரங்கள்வன்
மைவர இருவழியு மியல்பாயின. ஊரன்- அவன்- குறியன்- சிறி
யன்- தீயன்- பெரியன்- (எ-ம்) கை-செவி-தலை புறம் எ-ம்) உயர்
திணைப்பெயர்களீற்றுனகரம் வன்மைவர இருவழியு மியல்பாயிற்
று. பிறவுமன்ன. சாத்தி-கொற்றி தாய்-குறிது சிறிது- தீது-பெ
ரிது-குறியள்-சிறியள்-தீயள்-பெரியள் (எ-ம்) கை-செவி-தலை- புற
ம் (எ-ம்) பொதுப்பெயரீற்று இகர யகரங்கண் முன்வந்த வல்லி
னமிருவழியு மிகாவாயின. நம்பி- விடலை குறியன்- சிறியன்- தீ
யன்-பெரியன் (எ-ம்) கை-செவி தலை-புறம்- (எ-ம்) அவர்- ஒருவர்
-குறியர்-சிறியர்- தீயர்-பெரியர் (எ-ம்) கை-செவி-தலை-புறம் (எ-
ம்) உயர்திணை இகர ஐகார ரகரங்கண்முன்வந்த வல்லினமிருவழி
யு மிகாவாயின. பிறவுமன்ன. கபிலபரணர்- வடுகநாதன்- அரசவ
ள்ளல் (எ-ம்) ஆசீவகப்பள்ளி- குமரகோட்டம் குமரக்கோட்டம்
(எ-ம்) இருவழியு முயர்திணையுட் சில தமக்கேற்ற விகாரமாயின.
பிறவுமன்ன. (௯)

(௱௬௰) ஈற்றியா வினாவிளிப் பெயர்முன் வலி யியல்பே. *

(எ-ன்) இதுவுமது. (ப-ரை) ஈற்று (வினாமுன்) - ஆ ஏ ஓ என்கின்றமூன்றீற்று வினாமுன்னும், யாவினா (முன்) - யாவினாமுன்னும், விளிப்பெயர்முன்- உயிரீறு மெய்யீறுமாகிய விளிப்பெயர்முன்னும், வலி- வருகிற வல்லெழுத்துகள், இயல்பு- இயல்பாகும், எ-று. (பொ-ரை) மூன்றீற்று வினாமுன்னும் யாவென்னும் வினாப்பெயர்முன்னும் உயிரீறொற்றீறாய விளிப்பெயர்கண் முன்னும் வருவல்லின மியல்பாம். எ-று. ✺ [உ-ம்] நம்பியாகொண்டான்-சென்றான்-தந்தான்- போயினான்- உண்காகொற்றா - சாத்தா-தேவா-பூதா- (எ-ம்) யாகுறிய- சிறிய- தீய- பெரிய- (எ-ம்) வினாமுன்வல்லின மியல்பாயின. நம்பி நம்பீ- விடலை-விடலாய்- கிள்ளை-கிள்ளாய்- சாத்தி- சாத்தீ- தாய்- தாயே- கொள்-செல்- தா- போ- என உயர்திணைப்பெயர் அஃறிணைப்பெயர் பொதுப்பெயரின் அண்மைவிளிமுன்னும் சேய்மைவிளிமுன்னும் வரும்வல்லின மியல்பாயின. பிறவுமன்ன. இறுதி யேகார ஓகார வினாமுன்வரும் வல்லின மியல்பாதற்கு உதாரணங்காட்டிற்றிலம் அவ்விரண்டற்கும் மேற்சிறப்புவிதி இடைச்சொல்லேயோ வென்னுஞ் சூத்திரத்து ளடக்கிக்கூறுதலின். (ம)

(௱௬௧) ஆவி யரழ விறுதிமுன் னிலைவினை - யேவன்முன் வல்லின மியல்பொடு விகற்பே. ✻

(எ-ன்) இதுவுமது. (ப-ரை) ஆவி- உயிரையும், யரழ- யரழ என்கின்ற மூன்றுமெய்களையும் இறுதி - இறுதியாகவுடைய, முன்னிலைவினை- முன்னிலைவினைமுன்னும், ஏவன்முன் - ஏவல்வினைமுன்னும், வல்லினம்- வருகிற க ச த பக்கள், இயல்பொடு- இயல்புடனே, விகற்பு- விகற்பமாம், எ-று. (பொ-ரை) உயிரையும் யரழஎன்னு மூன்றொற்றையும் இறுதியாகவுடைய விகுதியுருபினவாய முன்னிலைவினைமுன்னும் ஏவன்முன்னும் வரும்வல்லினமியல்புடனே விகற்பமாம். எ-று. ✺ [உ-ம்] உண்டி- தின்றி உண்டனை- தின்றனை- உண்டாய்-தின்றாய்-உண்டனிர்- தின்றனிர்- கொற்றா-சாத்தா தேவா- பூதா- கொற்றரோ- சாத்தரோ- தேவரோ- பூதரே- எனமுன்னிலைவினைமுன் னியல்பாயின. கொணா- எறி- விடு- ஆட்- சேர்-தாழ்-கொற்றா- சாத்தா-தேவா பூதா- என ஏவன்முன் னியல்பாயின. விகற்பம்வந்தவழிக் கண்டுகொள்க. நடகொற்றா- நடக்கொற்றா- எய்கொற்றா- எய்க்கொற்றா- ஈர்கொற்றா- ஈர்க்கொற்றா - தாழ்கொற்றா- தாழ்க்கொற்றா - என ஏவன்முன் விகற்பித்தனவென்று கோடலுமொன்று. இவ்வா றருகிவருதலின் இயல்பொடுவிகற்பேயென விகற்பத்தைப் பிரித்துக்கூறினார். ழகர வீறு முன்னிலைவினை யேலாமையின் உதாரணங்காட்டிற்றிலம். முன்னி

லவினையென்றார் ஏவலெனவிதந்த தென்னையெனின், முன்னிலை
வினையென்பது தன்மைவினை படர்க்கைவினைகட்கு இனமாகிய
முன்னிலை வினையையுணர்த்துமல்லது இனமின்றி முன்னிலையொ
ன்றற்கேயுரிய ஏவல்வினையை யுணர்த்தாமையி னென்க (௰௬)

(௱௬௨) இ ஈ ஐ வழி யவ்வுமேனை யுயிர்வழி வவ்வு மேமு
னிவ் விருமையு- முயிர்வரி னுடம்படு மெய்யென் றாகும். *

(எ-ன்) உயிரீற்றுப் பதம்புணருஞ் சிறப்புப்புணர்ச்சி கூறுவா
னொருடங்கி உயிரீற்றின்முன் னுயிர்முதல்வந்து புணருமா று
ணர் - ற்று. (ப-ரை) இ ஈ ஐ வழி இகர ஈகார ஐகாரங்களின்மு
ன்னே, யவ்வும்-யகரமும், ஏனையுயிர்வழி- அ ஆ உ ஊ ஒ ஓ ஔ
என்கின்ற இவ்வே முயிர்களின்முன்னே, வவ்வும்- வகரமும், ஏமு
ன்- ஏகாரத்தின்முன்னே, இவ்விருமையும்- யகரமும் வகரமும்,
உயிர்வரின் - உயிர்முதன்மொழிவத்தால், உடம்படு மெய்யென்
றாகும்- உடம்படு மெய்யென்று வரப்பெறும், எ-று. (பொ-ரை)
இகர ஈகார ஐகாரங்களின்வழிமெய் யகரமும் அ ஆ உ ஊ ஒ ஓ ஔ
என்னும் இவ்வே முயிர்களின்வழியே வகரமும் ஏகாரத்தின்வழி
யே யகரமும் வகரமும் உயிர்முதன் மொழி வந்தால் உடம்படு
மெய்யென்றுவரும். எ-று. ❁ இருமையென்பது, "ஒருமைச்
செயலாற்றும் பேதை யெழுமையுந்- தான்புக் கழுந்து மளறு."
என்றாற் போலக் குணியைக் குணமாகக்கூறுவதோர் மரபு வழு
வமைதி [உ-ம்] மணியழகிது- தீயெழுந்தது - அவை யெளவி
யம் (எ-ம்) விளவழகிது- பலாவழகிது - கடுவழகிது- பூவழகிது-
நொவ்வழகா-சோவழகிது கௌவழகிது (எ-ம்) "ஏயேயிவளொ
ருத்தி பேடியோவென்றார்." சேவழகிது- (எ-ம்) அல்வழிக்கட்
கூறிய முறையே யுடம்படுமெய்பெற்றன. மணியொளி- விளவ
டி- மணியை யளித்தான் - என வேற்றுமைக்கண்வந்தன. பிறவு
மன்ன. மாயிருஞாலம் - என உரிச்சொல் ஆகாரவீற்றின்வழி ய
கர வுடம்படுமெய்வந்த தென்னையெனின், அஃது "இடையுரி
வடசொலி னியம்பிய கொளாதவும்." என்னுஞ் சூத்திரத்தா ன
மையுமென்க. விண்வத்துக் கொட்கும் என மெய்யீற்றின் வழி
யும் உயிர்வரி னுடம்படுமெய் பெறுமென்பாரு முளராலோவெ
னின், உயிரீற்றின்முன் னுயிர்முதல்வரின் உயிரோ டுயிர்க்கும்
யக்கமின்மையிற் புணர்சசியின்றி விட்டிசைத்துநிற்குமாதலின்
உடம்படாத அவ்விரண்டும் உடம்படுதற் பொருட்டிடையேவரு
மெய்யை யுடம்படுமெய் யென்பவாகலின் வருமுயிரோடி யொ
ற்றுமைப்பட்டுப் புணர்தற்குரிய மெய்யீற்றின்வழித் தோன்று
மெய்யை யுடம்படுமெய்யென்பதுபொருந்தாது. அவ்வகரமெ
ய்தோன்றுதற்கு விதி வருஞ் சூத்திரத்துட் கூறுப. உடன்பட

லென்பது உடம்படலென மரீஇயிற்று. "உடம்பா டிலாதவர் வாழ்க்கை,, எனவருதல்காண்க. உயிரோ டுயிர்க்கு மயக்க மின்மையின்வருமுயிர்க்கு உடம்பாகவடுக்குமெய் யுடம்படுமெய்யெனப் பொருள்கூறுதலுமொன்று. இவ்வுடம்படுமெய்களின்றோற்ற மேனைத்தோன்றல் விகாரம்போலாது மயங்காதன மயங்குதற்காசுபோல வந்தமையின் இப்புணர்ச்சியை யியல்புப் புணர்ச்சியென்றுகூறுவார்கூற்றும் அமையுமென்பார் உடம்படுமெய்தோன்றுமென்னாது உடம்படுமெய்யென் ருகுமென்ருர். ஈண்டும் எகரவீ றொழியக்கொள்க. (௰௨)

(௱௬௩) எகர வினாமுச் சுட்டின் முன்ன- ருயிரும் யகரமு மெய்தின் வவ்வும்- பிறவரி னவையுந் தூக்கிற் சுட்டு • நீளின் யகரமுந் தோன்றுத னெறியே. *

(எ-ன்) இஈஐவழியென்னுஞ் சூத்திரத்தானும் எண்மூ வெழுத்தீற்றென்னுஞ் சூத்திரத்தானும் எய்தியவிதிவிலக்கிப் பிறிதுவிதிவகுத்த னுதலி- ற்று. (ப-ரை) எகரவினா (முன்னர்) - எகரவினாவிடைச்சொல்லின்முன்னும், முச்சுட்டின்முன்னர்- மூன்றுசுட்டிடைச்சொல்லின்முன்னும், உயிரும் உயிரும், யகரமும் யகரமும், எய்தின் - வந்தால், வவ்வும் - வகரமும், பிற - யகரமொழிந்த மெய்கள், வரின்- வந்தால், அவையும் அவ்வந்தமெய்களும், தூக்கில்- செய்யுளிடத்து, சுட்டு- சுட்டுகள், நீளின்- நீண்டுவருமிடத்து, யகரமும்-யகரமும், தோன்றுதல்- மிகுதல், நெறி-முறையாம். எ- று. (பொ-ரை) எ என்னும் வினாவிடைச்சொன்முன்னும் அ இ உ என்னு மூன்றுசுட்டிடைச்சொன்முன்னும் உயிரும் யகரமும்வந்தால் வகரமும்ஒழிந்தமெய்கள்வந்தால் ் மெய்களுஞ் செய்யுட்கட்சுட்டு நீண்டிசைத்தவழி யகரமு மிகுதன்முறையாம். எ-று. ❊[உ-ம்] எவ்வணி- எவ்யானை- அவ்வணி- அவ்யானை- இவ்வணி- இவ்யானை உவ்வணி- உவ்யானை- (எ-ம்) அ- இ- உ- குதிரை-சேனை- தண்டு- படை -ஞாலம்- நாடு-மனை வளை- (எ-ம்) எங்ஙனம்- அங்ஙனம்- இங்ஙனம் - உங்ஙனம்- (எ-ம்) ஆயிடைத்தமிழ் கூறுநல்லுலகத்து- (எ-ம்) வகரமும் வந்தமெய்களும் யகரமுமுறையே தோன்றியவாறுகாண்க. பிறவுமன்ன. யகரமுமெய்தின் வவ்வுமென்றமையின் இங்ஙனந் தோன்றிய வகர யகரங்கள் உடம்படுமெய்யல்ல வென்பதூஉம் சுட்டு நீளினெனவே நீடல் உடம்பா டென்பதூஉம் நீட லொருதலை யன்றென்பதூஉம் யகரந்தோன்றுமெனவே இந்நீட்சி அடிதொடைநோக்கி நீட்டும்வழிநீட்ட லன்றென்பதூஉம் யகரமுமெனா வெண்ணின்கணின்ற இழிவு சிறப்பும்மையான் யகரத்தோற்றம் உயிர்வரும்வழி யன்றிப் பிறவழித்தோன்ருதென்பதூஉம் நெறியென்றமையின் இவ்வாறுநெறிப்பட வருவனவெல்லாங்கோ

டல்லேவுண்டு மென்பதூஉம் பெற்றாம். ஆவயினான எனச் சுட்டு நீண்டு பிறவழி யகரந்தோன்றாதாயிற்று. இவ்வாறு நெறிப்பட வருவனவருமாறு, யாங்ஙனம்- என யாவினாமுன் வருமொழி ஙகரமிகுந்தது. ஆங்ஙனம்- ஈங்ஙனம் ஊங்ஙனம்- எனச் சுட்டுநீண்டவழியும் வருமொழி ஙகரமிகுந்தது. ஈது - (எ-ம்) ஆங்கு - ஈங்கு - ஊங்கு- (எ-ம்) ஆண்டு - ஈண்டு - (எ-ம்) சுட்டுப் பெயர்ச்சொனீண்டன. விண்ணவத்துக்கொட்கும் - (எ-ம்) செல்வுழிச் செல்க- (எ-ம்) சார்வுழிச் சார்ந்ததலையள் - (எ-ம்) மெய்யீற்றுமுன் னுயிர்வருங்கால் இங்ஙனம் உடம்படுமெய் யன்றெனக்கூறும் வகரந்தோன்றின. பிறவுமன்ன. (௬௩)

(௱௬௪). உயிர்வரி னுக்குறண் மெய்விட் டோடும் யவ்வரி னிய்யா முற்றுமற் றொரோவழி. *

(எ-ன்) குற்றிய லுகரத்திற்கு இ ஈ ஐவழி யென்னுஞ் சூத்திரத்தா னெய்தியதுவிலக்கிப்பிறிதுவிதிவகுத்தலும் முற்றியலுகரத்திற்கச்சூத்திரத்தா னெய்தியதன்மேற் சிறப்புவிதிவகுத்தலு நுதலிற்று. (ப-ரை) உக்குறள்- குற்றியலுகரமானது, உயிர் - உயிர்முதன்மொழி, வரின்- வந்தால், மெய்விட்டு-தனக்கிடமாகிய மெய்யைவிட்டு, ஓடும்- கெடும், ய- யகரமுதன்மொழி, வரின்- வந்தால், இய்யாம்- அதுஇகரமாகத்திரியும், முற்றும் முற்றியலுகரமும், அற்று-அவ்விருவிதியும் பெறும், ஒரோவழி- ஒவ்வோரிடத்து. எ-று. (பொ-ரை) குற்றியலுகர முயிர்முதன்மொழிவந்தாற் றனக்காதாரமான மெய்நிற்கத் தான்கெடும் யகரமுதன்மொழிவந்தா லிகரமாகத்திரியும் முற்றியலுகரமு மவ்விருவிதியும்பெறு மொரோவிடங்களின். எ-று ❁ [உ-ம்] நாகரிது- நாகியாது- (எ-ம்) நாகின்வளர்சசி- நாகியமன்கொள்ளான்- தருதடி- (எ-ம்) கதவு- செலவு- அழகிது- யாது- (எ-ம்) அதனை- இதனை- (எ-ம்) இருவழியும்வந்தன. பிறவுமன்ன. கெடுமென்னுமேதாடு மென்றமையாற் குற்றியலுகரமொரோவழி இ ஈ ஐவழியென்னும் பொதுவிதி பெறாதலுங் கொள்க. [வ-று.] "தன்முகமாகத் தானழைப்பதுவே.,, -"ஆற ரொருமைக் கதவுமாதுவும்.,, எனவரும். ஆசிரியர் தொல்காப்பியர் "அவற்றுண், மெய்யீறெல்லாம் புள்ளியொடுநிலையல்.,, (எ-ம்) "குற்றியலுகரமுமற்றென மொழிப.,, எனவுங்கூறிய சூத்திரங்களுள் அற்றென்னு மாட்டேற்றிற்கு மெய்யீறுபோலக் குற்றியலுகரவீறும் புள்ளிபெற்று நிற்குமெனப் பொருள்கொள்ளாது இம்மூன்றாஞ் சூத்திரத்தைப் "புள்ளியீற்றுமு னுயிர் தனித்தியலாது- மெய்யொடுசிவணு மவ்வியல்கெடுத்தே.,, என்னுமுப்பத்தாறாஞ் சூத்திரத்தோடு மாட்டெறிந்ததாகக் குற்றியலுகரமும் புள்ளியீறுபோல வுயிரேற விடங்கொடுத்துக் கெடாதிரண்டியிரு மொருங்கு நிற்குமெனக்கூறிச் சாதிப்

பாருமுளர். அவ்வாறுகூறன்மாட்டேத் திலக்கணமன்றும் அன்றி யும் மெய்யுயிரொன்பன உவமவாகு பெயராய்வந்த காரணக்குறி யல்லவாகவேண்டும் அதனால் அஃது அந்நூலாசிரியர் கருத்தன் றும். இவ்வாறு அந்நூலோடு பொருந்தாவுரைகளோ பலவுள அவ ற்றை அந்நூற்கருத்தாகத் துணிந்து அந்நூலோடு இந்நூலை மறு தலைப்பட்டதென்று கோடற்க. (௰௪)

(௱௬௫) இயல்பினும் விதியினு நின்ற வுயிர்முன்— க ச த ப மிகும்வித வாதன மன்னே. *

(எ-ன்) உயிரீற்றின்முன் வல்லினம்புணருமா றுணர்த்துவான் றொடங்கி உயர்திணைப்பெயர் பொதுப்பெயர்க்கு ஆவியரமுன் வன்மைமிகாவென வெய்தியதன்மேற் சிறப்புவிதியும் அஃறிணை ப்பெயர்க்கும் வினைமுதலியவற்றிற்கும் எய்தாத தெய்துவித்த லு துதலி- ற்று: (ப-ரை) இயல்பினும்- இயல்பினாலும், விதியினும் - விதியினாலும், நின்ற- இறுதியாகநின்ற, உயிர்முன் - உயிர்களின் முன், க ச த ப - வருகிற க ச த பக்கள், மிகுமன் - பெரும்பா லுமிகும், விதவாதன - சிறப்புவிதியிற் சொல்லாதவைகள். எ-று. (பொ-ரை) இயல்பினானும் விதியினானும் இறுதியாகநின்ற உயி ர்களின்முன்னர் வரும் க ச த பக்கள் பெரும்பாலுமிகும் விதந் துசொல்லாதன. எ-று. ❁ விதியீறுவன முன்னைய உயிரீறு மெ ய்யீறு மொழிய உயிரீறாய்நிற்பனவும் யாதானுமோருயிர் பின் னர் இறுதிக்கட் டோன்றிநிற்பனவுமாம், விதப்பாவன சிறப்பு விதி. [உ-ம்] ஆடூஉக்குறியன்- சிறியன்-தீயன்-பெரியன்-நம்பித் கொற்றன் - (எ-ம்) சாத்திப்பெண் (எ-ம்) தாராக்கடிது - ஒ ற்றைக்கை- வட்டக்கல்- தாழக்கோல் (எ-ம்) மூவகைப் பெயர்ப்ப தமுன் அல்வழியின்மிக்கன. இவற்றுள் ஒற்றை- வட்ட- தாழ-எ ன்பன விதியீறு. ஆடூஉக்கை-செவி-தலை- புறம்- எட்டிப்பூ கா விதிப்பூ- நம்பிப்பூ- (எ-ம்) விளக்கோடு- கடுக்காய்- ஆட்டுக்கால்- (எ-ம்) உயர்திணை யஃறிணைப் பெயர்ப்பதமுன் வேற்றுமைக்கண் மிக்கன. ஆடிக்கொண்டான் - ஆடாக்கொண்டான் - ஆடூக்கொ ண்டான்- ஆடெனக்கொண்டான்- ஆடக்கொண்டான்- உணபாக் குச்சென்றான்-பூத்துக்காய்த்தது- பொள்ளெனப்பரந்தது- சால ப்பகைத்தது-(எ-ம்) இருளின்றிக்கண்டார்- பொருளன்றிக்காணார் (எ-ம்) பலவகைத்தெரிநிலை குறிப்பாய வினையெச்சங்கண்முன்மிக் கன. மற்றைச்சாதி (எ-ம்) கடிக்கமலம்- (எ-ம்) சொன்றிக்குழிசி (எ-ம்) கங்கைச்சடை (எ-ம் இடைச்சொல் உரிச்சொல் திசைச் சொல் வடசொன்முன் மிக்கன. பிறவுமன்ன. விதவாதன பெ

றும்பாலு மிகுமெனவே விதந்தன சிறுபான்மை மிகுமெனவும்
விதவாதன சிறுபான்மை மிகாவெனவுங் கூறினாராயிற்று. அவை
வருமாறு, நொக்கொற்று - துக்கொற்று - சாத்தா - தேவா - பூதா -
என்பன ஏவன்முன் வல்லின மியல்பொடுவிகற்பேயென்று முற்
கூறியவிதப்புவிதிபெறாது மிகுந்தன. எனவே நொது முன்
மூவினமு மிகுமென்றாராயிற்று. ஏரிகரை - குழந்தைகை - குழ
விகை - பழமுதிர்சோலை மலைகிழவோனே - (எ-ம்) கூப்புகரம் ஈட்
டுதனம் நாட்டுபுகழ் - (எ-ம்) இருவழியும் பின்விதவாதன மிகாவா
யின - பிறவுமன்ன. (௰௫)

(௱௬௬) மரப்பெயர் முன்ன ரின மெல்லெழுத்து - வரப்
பெறு னவுமுள வேற்றுமை வழியே. *

(எ-ன்) உயிரீற்றுச்சிலமரப்பெயர்முன்வரும் வல்லெழுத்திற்
கெய்தியதொருவழிவிலக்கிப் பிறிதுவிதியுணர் - ற்று. (ப-ரை)
மரப்பெயர்முன்னர் - உயிரீற்றுமரப்பெயர்களுக்குமுன், இன
மெல்லெழுத்து வர - முன்சொன்ன பொதுவிதியால் வருகிறவ
ல்லெழுத்து மிகாமல் அவற்றிற் கினமாகிய மெல்லெழுத்து மிக,
பெறுனவும் - பெறுவனவும், உள - சிலவுளவாம், வேற்றுமைவழி -
வேற்றுமைவழியில், எ-று. (பொ-ரை) உயிரீற்று மரப்பெயர்க
ண்முன் மேலைப்பொதுவிதியான் வல்லெழுத்துமிகாது வரும்
வல்லெழுத்திற் கினமான மெல்லெழுத்து மிகப்பெறுவனவுஞ் சி
லவுள வேற்றுமைக்கண். எ-று ❁ பெறுவனவென்னுஞ் சொற்
பெறுனவெனத் தொகுத்தல் விகாரமாயிற்று. [உ-ம்] விளங்கா
ய் - களங்கனி - மாங்கொம்பு - செதிள் - தோல் - பழம் - எனவரும். பி
றவுமன்ன. இனமெல்லெழுத்துமென்றமையிற் பொதுவிதி
யிக்காட் டேலாவென்க. (௰௬)

(௱௬௭) செய்திய வென்னும் வினையெச்சம் பல்வகைப் - பெ
யரி னெச்சமுற் றற னுருபே - யஃறிணைப் பன்மை யம்மமு
ன் னியல்பே. *

(எ-ன்) உயிரீறுகட்குத் தனித்தனிச் சிறப்புவிதி கூறுவான்றொ
டங்கி அகரவீற்றுச்சொல்லுட் சிலவற்றிற்கெய்தியது விலக்கனுத
லி - ற்று. (ப-ரை) செய்திய வென்னும் வினையெச்சம் - செய்திய
வென்னும் வினையெச்சவினையும், பல்வகைப் பெயரினெசசம் - ப
லவகைப்பட்ட பெயரெச்சவினையும், (பல்வகை) முற்று - பலவ
கைப்பட்டமுற்றுவினையும், ஆறனுருபு - ஆறும்வேற்றுமை அகர
வுருபும், அஃறிணைப்பன்மை - அஃறிணைப்பன்மைப்பெயரும், அ
ம்ம - அம்மவென்கின்ற வுரையசை யிடைச்சொல்லும், முன் - ஆ
கிய அகரவீற்றுச்சொற்களாறன்முன்னும், இயல்பு - வலமெல்ழுத்
துக வியல்பாம். எ-று. (பொ-ரை) இங்ஙனம்விதந்த அகரவீற்று

ச்சொற்க ளாறன்முன்னும் வரும்வல்லினமியல்பாம் எ-று. ❋ பல்வ
கையென்பதனை முற்றென்பதனோடுங்கூட்டுக. பெயரினெச்சமும்
எனவின்சாரியை தவிர்வழிவந்தமையின் விரித்தல்விகாரம். இதன்
முதலிறுதிகளின் அகரவீற்றுச்சொல்வைத்தமையானிடையனவும்
அகரவீற்றவென்பதூஉம் பல்வகையென்றதனான்வினையடி நான்கி
னும்பிறந்தபெயரெச்ச முற்றென்பதூஉம் முற்றெனவிதந்தமை
யினஃறிணைப்பன்மையென்றது பெயரொன்பதூஉம்பெற்றாம் வி
னையடிநான்காவன இயல்பாகிய வினையடியொன்றும் எனைப்பெ
யரிடையுரியடியாகப்பிறந்தவினையடிமூன்றுமாம். [உ-ம்] உண்ணி
யகொண்டான்- சென்றான்- தந்தான்- போயினான் எனச்செய்யி
யவென்னும் வினையெச்சமுன் னியல்பாயின. உண்ட- உண்ணாநி
ன்ற- உண்ணாத- (எ-ம்) கடைக்கணித்த- சித்திரித்த- வெளுத்த- சி
னவிய- கறுவிய அடரிய- (எ-ம்) திண்ணென்ற- பொன்போன்ற-
(எ-ம்) சான்ற- உற்ற - (எ-ம்) குதிரை - செந்நாய் - தகர்- பன்றி-
(எ-ம்) நால்வகைத்தெரிநிலைப் பெயரெச்சமுன்னு மியல்பாயின.
அமர்முகத்த- கடுங்கண்ண- சிறிய- பெரிய- உள- இல- பல- சில-
(எ-ம்) பொன்னன்ன- (எ-ம்) கடிய- (எ-ம்) குதிரை- செந்நாய்-
தகர் - பன்றி - (எ-ம்) மூவகைப் பெயரெச்சக்குறிப்பின்முன்னு
மியல்பாயின, முற்றிற்கும் பொருள்வேறுபாடன்றிச் சொல்வே
றுபா டின்மையி னிவையேகாட்டாகக் கொள்க. வாழ்க - வாழிய-
கொற்றா- சாத்தா- தேவா- பூதா- என வியங்கோண்முற்றின்முன்
னியல்பாயின. முற்றுமுன்னியல்பாமென்றமையின் அருத்தாபத்
தியா னிவ்வினைமுற்று வினையெச்சமாயுங் குறிப்புமுற்றீறெச்சமா
யுநின்றவழி வரும்வல்லின மியல்பாதலுங் கொள்க. [வ-று.] உண்
டகண்டன- (எ-ம்) அமர்முகத்தகுதிரை-(எ-ம்) அமர்முகத்தகலக்
கின- (எ-ம்) வரும். தனைகைகள்- செவிகள்- தாள்கள்- பதங்கள்- எ
ன ஆறனுருபின்முன் னியல்பாயின. பலகுதிரை-செந்நாய்-தகர்-
பன்றி- (எ-ம்) பலகொடுத்தான்- செய்தான்- தந்தான்- படைத்தா
ன்- எ-ம் இருவழியு மஃறிணைப்பன்மைப்பெயர்முன் னியல்பா
யின. பிறபெயர்களுமன்ன. அம்மகொற்றா- சாத்தா- தேவா- பூதா
என வுரையசையிடைச்சொன்முன் னியல்பாயின. ஒருசொல்லை
யே பலவிடத்துங்காட்டிய தென்னையெனின், இங்ஙனம் காட்டி
யவற்றுட் பலவென்னு மொருசொல் பெயரெச்சக் குறிப்பாயுங்
குறிப்புவினைமுற்றாயுங் குறிப்புமுற்றீறெச்சமாகும். பெயரெச்ச
க்குறிப்பாயும் வினையெச்சக்குறிப்பாயுங் குறிப்புவினையாலணையு
மஃறிணைப்பன்மைப்பெயராயும் பொருளாதி யாறனுட் பண்பு
காரணமாகவரு மஃறிணைப்பன்மைப்பெயராயு மறுவகைப்பட்டி
ப்பொருணோக்கமுஞ்சுவியவற்று னின்னதென்று துணியப்படுமா

தலா னென்க. பிறசொற்களுமன்ன. இவ்விகற்பமெல்லாஞ் சொல்லதிகாரத்துட் காண்க. (௰௭)

(௱௬௮) வாழிய வென்பத னீற்றி னுயிர்மெய்- யேகலு முரித்தஃ தேகினுமியல்பே. ✻

(எ-ன்) வியங்கோண் முற்றுச்சொற் கெய்தாத தெய்துவித்தலு மெய்தியவழிப் புணரும் வல்லினத்திற் கெய்திய திகந்துபடாமற் காத்தலு நுதலி- ற்று. (ப - ரை) வாழியவென்பதன் - வாழியவென்னும் வியங்கோண்முற்றினுடைய, ஈற்றின்- இறுதியிலுள்ள, உயிர்மெய்- யகர வுயிர்மெய்யானது, ஏகலும்- குறைதலும், உரித்து- உரித்தாகும், அஃது- அவ் வுயிர்மெய்யானது, ஏகினும் - குறைந்து- இகரவீறாய் நின்றாலும், இயல்பே-வல்லினம் பொதுவிதியினுமேலமிகாமற் சிறப்புவிதியிற்கூறிய இயல்பேயாம், எ-று (பொ-ரை) வாழியவென்னும் வியங்கோண்முற்றினது ஈற்றுயிர் மெய்குறைதலுமுரித்து குறைந் திகரவீறாய்நின்றாலும் வல்லினம்பொதுவிதியான்மிகாது சிறப்புவிதியுட்கூறிய இயல்பேயாம். எ-று. ❁ [உ-ம்] ஆவாழி-அந்தணர்வாழி-படாஅதிவாழி எனவீற்றுயிர்மெய்குறைந்துவந்தது. வாழிகொற்றா- சாத்தா- தேவா- பூதா - எனக்குறைந்தவழியும் வல்லினமியல்பாயின. ஏகலு முரித்தென முடித்துப் பின்பஃதெனச்சுட்டிப் புணர்ச்சிவிதிகூறுதலானுஞ் செய்யுளிறுதிக்கண் வாழியெனமுடிந்துநிற்றலானு மிதுபுணர்ச்சிவிகாரமன்று கடைக்குறையென்பதூஉம் இவ்வடிப்பாடாகக்குறைந்து இயலுந் தன்மை செய்யியவென்னும்வாய்பாட்டு வாழிய வென்னும் வினையெச்சத்திற் கின்மையின் வாழியவென்னும் வியங்கோண்முற்றிற்கே இவ்விகாரங்கூறினா ரென்பதூஉம் பெற்றாம். (௰௮)

(௱௬௯) சாவவென் மொழியீற் றுயிர்மெய்சா தலும்விதி. ✻

(எ-ன்) சாவ வென்னு நிலைமொழிக் கெய்தாத தெய்துவித்தனுதலி- ற்று. (ப-ரை) சாவவென்மொழி - சாவவென்னுஞ் செயவெனெச்ச வினைச்சொல்லினுடைய, ஈற்று - இறுதியி லிருக்கின்ற, உயிர்மெய்- வகரவுயிர்மெய்யானது, சாதலும் - கெட்டுப் புணர்தலும், விதி - விதியாகும், எ-று. (பொ-ரை) சாவவென்னுஞ் செயவெனெச்ச வினைச்சொல்லினது ஈற்றுயிர்மெய் கெட்டுப் புணர்தலும் விதியாம். எ-று. ❁ [உ-ம்] சாக்குத்தினான்- எனவரும். இப்புணர்ச்சி சாவக்குத்தினான் என்னும்புணர்ச்சிபோற் சிறந்ததன்மையிற் சாதலுமென்றும் ஒரோவழி யருகிவருதலின் விதியென்றுங் கூறினார். (௰௯)

(௱௭௰) பலசில வெனுமிவை தம்முன் றாம்வரி- னியல்புமிகலு மகரமேக- லகரம் றகர மாகலும்பிறவரி- னகரம் விகற்பமாகலு மௗபிற.

(எ-ன்) வருமொழிக் கெய்திய திகழ்துபடாமைக் காத்தலும்
அதன்மேற் சிறப்புவிதியும் நிலைமொழிக் கெய்தாத தெய்துவித்
தலு முணர்த்துதனுதலிற்று. மிகுதல் செய்யியவென்னுஞ் சூத்
திரத்தான் விலக்கி ஈண்டு விதித்தலைமயிற் சிறப்புவிதியாயிற்று.
(ப-ரை) பல்சிலவெனுமிவை-பலசிலவென்கின்ற இவ்விருசொல்
லும், தம்முன் - தமக்குமுன்னே, தாம்வரின்- தாம்வருமாயின், இ
யலபும்- இயல்பாதலும், மிகலும் மிகுதலும், அகரம்-அகர மான
து, ஏக கெட, லகரம்- லகரமானது, றகரமாகலும்- றகரமாகத்திரி
தலும், பிற - இவற்றின் முன் பிறமொழிகளுள் யாதாயினுமொன்
று, வரின்- வந்தால், அகரம்- அகரமானது, விகற்பயாகலும் - நிற்
றலுநீங்கலும், உள - உளவாம், எ-று. (பொ-ரை) பல்சில வென்
னும் இவ்விருசொல்லுந் தம்முன்னர்த் தாம்வருமாயின் இயல்பா
தலு மிகுதலும் அகரங்கெட லகரம் றகரமாகலும் இவற்றின்மு
ன் பிறமொழிகளுள் யாதானுமொன்றுவரின் அகரம் நிற்றலுநீங்க
லுமுளவாம். எ-று ❀ [உ-ம்] பலபல-சிலசில-என இயல்பாயின.
பலப்பல - சிலச்சில - என மிக்கன. இம்மிகுதி இயல்புபோற்
பயின்றுவாராமையின் வல்லினம்விகற்பமாகலு மென்னுது - இ
யல்புமிகலு மென்றார். பற்பல - சிற்சில - என அகரமேக லகர
ம் றகரமாயின. பலகலை - பல்கலை - பலசாலை- பல்சாலை- பலதா
ழிசை- பஃறாழிசை- பலபடை- பல்படை- பலஞானம்- பன்ஞா
னம்- பலநாள்- பன்னாள்- பலமணி - பன்மணி - பலவளை - பல்வ
ளை- பலயானை- பல்யானை- பலவணி - பல்லணி - பலவாயம் - பல்
லாயம்- எனப்பிறவரின் அகரம் விகற்பமாயின. சிலவென்பதற்
கு மிவ்வாறேகொள்க, பிறவென்றமிகையானே, பல்பல-சில்சில-
என அகரமேக லகரம் றகரமாகாது அருகிவருதலும் பிறவல்லின
மொழிவரின் லகரம் றகரத்தோடு உறழும்வழி உறழாது இயல்
பாதலும் அகரவீற்றுப்புணர்ச்சியுள் அமையாதொழிந்தன வுள
வேல் அவையுங்கொள்க. அகரநீங்கநின்ற பல்லாயமுதலியன ந
ன்மை வன்மை மென்மை அன்மை இன்மை என்பனபோல லக
ரமெய்யீற்றுப்பண்படியாய்நின்று வருமொழியோடு புணர்ந்த
ன வென்று அவற்றை அகர வீற்றின வாக்கவைத்துப் புணர்த்த
தென்னையெனின், அப்பண்படி பன்மை சின்மை எனப்பகுதி
ட்பொருள் விகுதியோடேனும் பலர் பல சிலர் சில எனவிகுதி
ட்பொருள் விகுதியோடேனும் அன்றித் தனித்துநில்லாவொற்
றுமைநடம்பற்றியென்க. இஃதொன்றின முடித்த றன்னின
முடித்த லென்னு முத்திக்கினம். அகரம்விகற்பமா மென்றதனு
ணையானே பல் சில எனப்பண்படி தோன்றினமையின் இவ்விதி

அல்வழிக்கேயென்பது கூறாதே யமையுமென்க. (உ௰)

(௱௭௧) அல்வழி யாமா மியாமுற்று முன்மிகா. *

(எ-ன்) ஆகாரவீற்றுச் சொல்லுட் சிலவற்றிற்கெய்திய தொருமருங்கு விலக்குத னுதலிற்று. (ப-ரை) அல்வழி - அல்வழியில், ஆமா- ஆவுமாவுமாகிய இருபெயரும், மியா- மியாவென்னும் முன்னிலையசை இடைச்சொல்லும், முற்று-ஆகாரவீற் றஃறிணைப்பன்மை யெதிர்மறை முற்றுவினையுமாகிய, முன்- இவற்றின்முன், மிகா- வருகிறவல்லினம் இயல்பாகும், எ-று. (பொ-ரை) அல்வழிக்கண் ஆவுமாவுமாகிய இருபெயரும் மியாவென்னு முன்னிலையசை இடைச்சொல்லும் ஆகாரவீற் றஃறிணைப்பன்மை யெதிர்மறை மூற்றுவினையுநிற்க இவற்றின்முன் வரும்வல்லின மிகா. எ-று. [உ-ம்] ஆகுறிது - மாகுறிது- சிறிது- தீது பெரிது- (எ-ம்) கேண்மியாகொற்றா- சாத்தா-தேவா-பூதா- (எ-ம்) உண்ணா குதிரைகள்- தின்னாகுதிரைகள்- செந்நாய்கள்- தகர்கள்- பன்றிகள் (எ-ம்) வரும் ஆமாவென்ற துணையானே காட்டாவெனவும் பொருடர இரட்டுற மொழிந்தமையான் ஆமாகுறிது- சிறிது- தீது- பெரிது- என மிகாமையும் முற்றுமுன்மிகா வென்றமையான் அருத்தாபத்தியான் அவ்வினையாலணையும் பெயர்முன் உண்ணா குதிரைகள்- தின்னாகுதிரைகள் - செந்நாய்கள்- தகர்கள்- பன்றிகள் என மிகாமையும் அவ்வினைமுற்று வினையெச்சமா யவற்றின்முன் உண்ணாகிடந்தன- தின்னாகிடந்தன-சென்றன- தந்தன-போயின- என மிகாமையுங்கொள்க. உண்ணாக்குதிரைகள்- உண்ணாக்கிடந்தன- எனப் பொதுவிதியான் மிகுமேல் எதிர்மறைப்பெயரெச்சமுஞ் செய்யாவென்னும் வாய்பாட்டுவினை யெச்சமுமாமென்க.()

(௱௭௨) குறியதன் கீழாக் குறுகலு மதனோ- டுகரமேற்றலு மியல்புமாந் தூக்கின். *

(எ-ன்) ஆகாரவீற்றுட் சிலசொல்லினது இறுதிக்கெய்தாதன வெய்துவித்தலும் அவ்வழிவருவதோர் ஐயமறுத்தலு நுதலிற்று. (ப-ரை) குறியதன்கீழா- குற்றெழுத்தின் கீழ்நின்ற ஆகாரம், குறுகலும்- அகரமாதலும், அதனோடு- அவ்வகரமாதலுடனே, உகரமேற்றலும்- உகரம்பெறுதலும், இயல்பும்- அவ்விரண்டுமில்லாம லியல்பாதலும் ஆகியமூன்றுவிதியும், ஆம் - ஆகும், தூக்கின்- பாட்டினிடத்து, எ-று. (பொ-ரை) குற்றெழுத்தின் கீழ்நின்ற ஆகாரங்குறுகலும் அக்குறுகலுடனே உகரம்பெறுதலும் அவ்விரண்டுமின்றித் தன்னியல்பி னிற்றலுமாகிய மூன்றுவிதியும் பெறுஞ் செய்யுட்கண். எ-று. [உ-ம்] சுறமறிவன துறையெல்லாம்- நிலவிரிகானல்வாய்- (எ-ம்) இறவுப்புறத்தன்ன-சுறவுக்கோட்டன்ன - மருவிலென் செய்யுமோ நிலவு (எ-ம்) நிலாவணங்கு வெண்மணை

ண்மேனின்று - நெடியகழியுயிரா (எ-ம்) முறையேகொள்க. ஈ
ண் டியல்பு ஐயமறுத்தற் குரைத்தாரென்க. இம்மூன்றுமாந்
தூக்கினெனவே வழக்கில் இரண்டுமொன்றுமாமென்றாராயிற்று.
[வ-று.] உரித்ததுநிலவு- நிலா- கண்டேன்கனவு - கனா - எனக்
குறுகுதலோடு உகரமேற்றலுந் தன்னியல்புமாகிய இரண்டும்வந்
தன. தரா - மிடா - எனத் தன்னியல் பொன்றுமாய்நின்றன. இ
வ்விகாரங்கள் அல்வழிவேற்றுமைப் புணர்ச்சியான் வந்தனவல்ல
வென்று ஐயமறுத்தற்குக் கூறப்பட்டன வென்க. இவ்வாறு வரு
வனவெல்லா மன்ன. (௨௨)

(௱எரு) அன்றி யின்றியென் வினையெஞ் சிகரந் - தொடர்பி
னு ளுகர மாய்வரினியல்பே. *

(எ-ன்) இகரவீற்றுச்சொற்களுள் அன்றி இன்றியென்னும் வினை
யெச்சக்குறிப்பிற் கெய்தாததெய்துவித்தலு மெய்திய வழிப்புண
ரும்வல்லினத்திற் கெய்தியதுவிலக்கலுநுதலிற்று. (ப-ரை) அன்றி
யின்றியென்- அன்றி இன்றி என்கின்ற, வினையெஞ் சிகரம்- வினை
யெச்சக்குறிப்புச் சொற்களி னீற்றிலிருக்கின்ற இகரம, தொடர்
பினுள்- செய்யுளில், உகரமாய்வரின், உகரமாய்த்திரிந்துவரின், இ
யல்பு- வருகிற கசதபக்கள் இயல்பாகும். எ-று. (பொ-ரை) அன்
றியின்றியென்னும் வினையெச்சக் குறிப்புச்சொல்லினீற்றிகரஞ்
செய்யுட்கண் உகரமாய்வருமாயிற் கசதபக்கள் பொதுவிதியான்
மிகாதியல்பாம்.எ-று. ※ என்னென்னும் வினைத்தொகையு மெஞ்
சென்னும்வினைத்தொகையுஞ் சொல்லென்னு முதற்பெயரோடுமு
டியாது அதனகத் திகரமென்னுஞ் சினைப்பெயரோடுமுடிந்தன.
இவ்வாறுடம்படுபுணர்த்திக் கூறினமையின் இதற்கிதுவே விதியெ
ன்பதூஉம் உகரமாய் வரினெனவே உகரமாத லுடன்பா டென்ப
தூஉம் அஃதொருதலையன்றென்பதூஉம் பெற்றாம். [உ-ம்] "நா
ளன்று போகிப் புள்ளிடைதட்பப்- பதனன்று புக்குத் திறனன்று
மொழிபினும்-வறிதுபெயர்குநரல்லர்- நெறிகொளப் பாடான்றி
ரங்குமருவிப்- பீடுகெழுமலையற் பாடியோரே.,, (எ-ம்) "உப்பின்
று புற்கையுண்கமாகொற்கையோனே.,, (எ-ம்)வரும்.பிறவுமன்ன.

(௱எசு) உரிவரி னாழியி னீற்றுயிர் மெய்கெட - மருவும் டக
ர முரியின் வழியே- யகரவுயிர் மெய்யா மேற்பன வரினே. *

(எ-ன்.) எய்தியது விலக்கிப் பிறிதுவிதிவகுத்த னுதலிற்று.
(ப-ரை) உரிவரின்- உரியென்னுமளவுப்பெயர்வந்தால், நாழியின்
- நாழியென்னுமளவுப் பெயரினது, ஈற்றுயிர்மெய் - ஈற்றிலுள்
ளழிகரமானது, கெட- நீங்க, டகரம்- டகரமெய்யானது,மருவும்-
வரும், உரியின்வழி- உரியென்னு மளவுப்பெயரின் பின், யகரவு
யிர்மெய்யாம் - யகரவுயிர்மெய்வரும், ஏற்பன - அவ்வுயிர் மெய்

வருதற்கு ஏற்றமொழிகள், வரின்- வந்தால். எ-று. (பொ-ள்) உரி
யென்னுமளவுப்பெயர்வரி னுழியென்னுமளவுப்பெயரினிற்று
யிர்மெய்கெட அவ்வழி டகரவொற்றுவரும், உரியென்னுமளவுப்
பெயரின்பின்யகரவுயிர்மெய்வரும் அவ்வுயிர்மெய்வருதற்கேற்ற
வருமொழிகள் வருமாயின். எ-று. ❁ [உ-ம்] நாடுரி (எ-ம்) உரி
யவுப்பு- உரியபயறு- உரியமிளகு- உரியவரகு-(எ-ம்) வரும். ஏற்
பனவரினெனவே யேலாதனவரின் உரியரிசி- உரியாழக்கு - உரி
யெண்ணெய் என இச்சிறப்புவிதி பெறாதுபொதுவிதியே பெ
றுதல்கொள்க. நாடுரியென்பது நாவுரியென இக்காலத்துமரீஇயி
ற்று. பொதுவிதியான் வருமுடம்படுமெய்யை இச்சிறப்புவிதி
விலக்கினமையின் நாழியுரியென்ப திலக்கணமன்றென்க. (உச)

(௱௭௫) சுவைப்புளி முன்னின மென்மையுந் தோன்றுப். *

(எ-ன்.) எய்திய தன்மேற் சிறப்பு விதியுணர்-ற்று. (ப-ரை)
சுவை- அறுசுவையு ளொன்றையுணர்த்துகின்ற, புளிமுன் - புளி
யென்னும்பெயர்முன், இனமென்மையும் வருகிறவல்லெழுத்து
கள் மிகுதலல்லாமல் அவற்றிற்கு இனமாகிய மெல்லெழுத்துகளு
ம், தோன்றும்- ஒரோவிடத்துமிகும். எ-று. (பொ-ரை) புளியென்னு
மரமும்பழமுமன்றி யறுசுவையுளொன்றையுணர்த்தும்பெயர்மு
ன் வரும்வல்லின மிகுதலேயன்றி யவற்றிற்கினமாயமெல்லினமு
மொரோவழிமிகும். எ-று. ❁ [உ-ம்] புளிங்கறி - சோறு- தயிர்-
பாளிதம்- எனவரும். பலசுவையு முடைத்தேனு மிகுதிபற்றிப்பு
ளிப்பாகிய கறியெனவும் புளிப்பையுடைய கறியெனவும் விரித
லின் இருவழிக்கு மிவையேகாட்டாமென்க. மென்மையுமென்றவி
றந்தது தழீஇயவிழிவு சிறப்பும்மையாற் புளிக்கறியெனப் பொ
துவிதியான்வரும் வல்லெழுத்துப்பேறே சிறப்புடைத்தென்க.()

(௱௭௬) அல்வழி இ ஐ முன்ன ராயி - னியல்பு மிகலும்
விகற்பமு மாகும். *

(எ-ன்) இகர ஐகாரவீற் றஃறிணைப்பெயர்முன்வரும் வல்லின
த்திற் கொருவழியெய்தியது விலக்கலுமெய்திய திகந்துபடாமற்
காத்தலு மெய்தியதுவிலக்கலுடன்விலக்காமையுமுணர்-ற்று, (ப-
ரை) இ ஐ முன்னர்-இகர ஐகாரவீற் றஃறிணைப்பெயர்முன், அல்வ
ழி- அல்வழியினிடத்து, ஆயின்-வல்லினம்வருமாயின், இயல்பும்-
இயல்பாதலும், மிகலும்- பொதுவிதியான் மிகுதலும், விகற்பமு
ம்- ஒன்றற்கே யொருகான் மிகாமையும் ஒருகான் மிகுதலும், ஆகு
ம்-ஆகும் எ-று (பொ-ரை) இகர ஐகாரவீற் றஃறிணைப்பெயர்மு
ன்வல்லினம் அல்வழிக்கண்வருமாயின் இயல்பாயும்பொதுவிதியா
ன்மிகுந்துமொன்றற்கே யொருகான் மிகாதுமொருகான்மிகுந்து
ம்புணரும். எ-று. ❁ இவ்விற்றுயர்திணைப்பெயர்பொதுப்பெயர்

வினைகட்குப்பொதுச்சூத்திரங்களான் இம்மூன்றுவிதியும் அமைந்துகிடந்தமையின் இச்சூத்திரத்தாற்கூறுதன் மிகுதியொன்றுமே யமைந்துகிடந்த அஃறிணைப்பெயர்க்கென்பது பெற்றாம். ஓம்பின்முடித்தலான் ஐகாரவீறு முடன்கூறினர். [உ-ம்] பருத்தி ஒதி-யானை-குதிரை-குறிது-சிறிது தீது-பெரிது-என இயல்பாயின. கிளிகுறிது-கிளிக்குறிது- தினைகுறிது- தினைக்குறிது எனவிகற்பித்தன. பிறவுமன்ன. மிகுதியெய்திய திகந்துபடாமைக் கூறினமையிற் காட்டிற்றிலம். (உ௬)

(௱௭௭) ஆமுன் பகரவீ யனைத்தும் வரக்குறுகு- மேலனவல்வழி யியல்பா கும்மே. *

(எ-ன்) தொடர்மொழியுட் பின்னின்றஇடக்கர்ச் சொல்லினிற்றீகாரத்திற் கெட்டாத தெய்துவித்தலும் எய்தியவழி அதன் முன்வரும் வல்லினத்திற்கு மேலைச்சூத்திரத்தானெய்திய திகந்துபடாமைக் காத்தலு நுதலிற்று. (ப-ரை) ஆமுன்பகரவீ- ஆமுன்னின்ற பகரவீகாரம், அனைத்தும்- நாற்கணமும், வர- வந்தால, குறுகும்- குறுகும், அல்வழி- அல்வழியில், மேலன- மேலைச்சூத்திரத்தினுட்கூறியவிதிமூன்றனுள், இயல்பாகும்-வருகிறவல்லினம் இயல்பைப்பெறும், எ-று. (பொ-ரை) ஆவென்னும்பெயர் முன்னின்ற பகரவீகாரம் இருவழியும் நாற்கணங்களும் வரிற் குறுகும் குறுகி விதியிகரவீறாகநின்ற அதன்மேல்வரும் வல்லினம் அல்வழிக்கண் மேலைச்சூத்திரத்துட்கூறிய விதிமூன்றனுள் இயல்பைப்பெறும். எ-று. ✲ குறுகுதற்குக்காரணம் அனைத்தும்வருதலேயன்றி மேனின்ற ஆவுமாமென்பார் ஆமுன்னென்றார். பகரவீயென்ற திடக்கரடக்கல். வருஞ்சூத்திரத்துட் பவ்வீயுமது. ஆவென்னுஞ்சொல்லும் நாற்கணத்தொன்று முன்னும்பின்னுந் தொடராமைதற் குறுகாதென்பார் வரக் குறுகுமென்றார். இருமொழியை நிலைமொழியாக நிறீஇப்புணர்த்தமையான்வரும்விதி இகரவீறுதலி னெய்திய திகந்துபடாமை யியல்பாகுமென்றார். ஆகும்மே யென்றது விரித்தல் விகாரம். [உ-ம்.] ஆப்பியரிது- ஆப்பிகுளிரும்- ஆப்பிநன்று - ஆப்பிவலிது - (எ-ம்) ஆப்பியருமை- ஆப்பிக்குளிர்ச்சி - ஆப்பிநன்மை- ஆப்பிவன்மை - (எ-ம்) இருவழியும் ஈகாரங்குறுகுதலும் அல்வழிக்கண் வல்லின வியல்பிகந்துபடாமையுங் காண்க. (உ௭)

(௱௭௮) புவ்வீ நீமீ முன்ன ரல்வழி- யியல்பாம் வலிமெலி மிகலுமா மீக்கே. *

(எ-ன்) ஈகாரவீற் றிடக்கர்ப்பெயர்க்கும் நீ என்னும்பெயர்க்கும் மீ என்னும்பெயர்க்கும் முன்னர்வரும் வல்லினத்திற் கொ

ருவழி இயல்பினும்விதியினுமென்னுஞ் சூத்திரத்தா னெய்தியது
விலக்கலும் இவற்றுண் மீயென்பதன்முன்வரும் வல்லினத்திற்கு
அச்சூத்திரத்தா னெய்திய திகந்துபடாமைக்காத்தலும் எய்தியது
விலக்கிப் பிறிதுவிதியு முணர்-ற்று. (ப-ரை) பவ்வீ- பகரமெய்
யின்மேலேறிநின்ற ஈகாரவீற் றிடக்கர்ப்பெயரும், நீ- நீ என்கிற
முன்னிலைப்பெயரும், மீ- மீ என்கிற மேலாகிய பண்பையும்மே
லிடத்தையும் உணர்த்தும்பெயருமாகிய,முன்னர்- இம்மூன்றன்
முன்னும், அல்வழி- அல்வழியில், இயல்பாம்- வருகிறவல்லின மி
யல்பாகும், மீக்கு- இவற்றுள்மீ மீயென்னுஞ் சொல்லுக்கு, வ
லி வல்லெழுத்து, (மிகலுமாம்) - மிகுதலுமாகும். மெலி மெல்
லெழுத்து, மிகலுமாம்- மிகுதலுமாகும், எ-று (பொ-ளா) பகர
வொற்றை யூர்ந்துநின்ற ஈகாரவீற் றிடக்கர்ப்பெயரும் நீயென்
னு முன்னிலையொருமைப் பொதுப்பெயரும் மீயென்னு மேலா
யபண்பையும் அப்பண்பாகுபெயராய் மேலா யவிடமுதலியவற்
றையும் உணர்த்திநிற்கும் பலபொரு ளொருசொல்லு நிற்க இவற்
றின்முன்வரும் வல்லினம் அல்வழிக்க ணியல்பாம் இங்ஙனம்புண
ரும் மீயென்னுஞ்சொற்குமுன் அல்வழிக்கண் வல்லெழுத்து மிக
லுமாம் மெல்லெழுத்துமிகலுமாம், எ-று ❁ [உ-ம்] பீகுறிது-
சிறிது-தீது- பெரிது- (எ-ம்) நீகுறியை- சிறியை- தீயை- பெரி
யை- (எ-ம்) மீகண்- (எ-ம்) இயல்பாயின. மீக்கூற்று- மீக்கோள்-
என எஃதிய திகந்துபடாமை மிக்கது. மீந்தோல்- என மெலி
மிகுந்தது. பிறவும் ஏற்றபெற்றிவருவன வுளவேற்கொள்க. மீ
கண் என்பது கண்ணினது மேலிடமெனப் பொருடந்துநிற்கு
மேனும் ஆறனுருபின் பயனிலையாம் மீயென்னும் வருமொழி
நிலைமொழியாய்நின்று வல்லெழுத்துமிகாது புணர்ந்தமையின்
இலக்கணப் போலியாய் அல்வழியாயிற்று. மீக்கூற்றென்பது
புகழ். அதுமேலாய சொல்லாற்பிறந்த புகழென்னு மேம்பா
டெனப் பொருடந்துநிற்றலிற் பண்புத்தொகைப்புறத்துப் பி
றந்த அன்மொழித்தொகை. மீக்கோளென்பது-மேற்போர்வை.
அது யாக்கையின்மேற் கொள்ளுதலையுடைய போர்வையெனப்
பொருடந்துநிற்றலின் ஏழாம்வேற்றுமைத்தொகைப்புறத்துப்
பிறந்த அன்மொழித்தொகை ஈண்டுமீயென்றது இடப்பொரு
ளோடு ஏழாம்வேற்றுமையுருபின் பொருள்படநின்றதேனுங் க
ண்ணுருபு வேண்டாமையின் வேற்றுமைத் தொகையாயிற்று.
மீந்தோலென்பது- மேற்றோல். அது மேலாயதோலெனப்பொ
ருடந்துநிற்றலிற் பண்புத்தொகை. இஃதிக்காலத்துப் பீந்தோ
லென மரீஇயிற்று. நீயென்பதன்முன் வல்லின மியல்பாதல்
பொதுப்பெய ருயர்திணைப்பெயர்க ளீற்றுமெய் யென்னுஞ்

சூத்திரத்தான் அமையாதோவெனின், விகாரமொழியன்றி அல்வழிக்கண்ணும் வேற்றுமைக்கண்ணும் ஆவியரக்களின்னீற்றதாய்நின்றுபுணரும் பொதுப்பெயர்க்கே வன்மைமிகாவென விருவழிக்குங்கூறியது, அமையுமன்றி அல்வழிக்கண் நீயென வுயிரீறும் வேற்றுமைக்கண் நின் என நெடில்குறுகி னகரவொற்றீறும் விகாரப்பட்டுநிற்கும் இப்பொதுப்பெயர்க்கு அவ்விதி யமையாதென்க. (உஅ)

(௱எகூ) மூன்று றுருபெண் வினைத்தொகை சுட்டீறு - றுகு முகர முன்ன ரியல்பாம். *

(எ-ன்) முற்றுகரவீற்றுட் சிலவற்றின்முன் வரும்வல்லினத்திற்கு இயல்பினும் விதியினுமென்னுஞ் சூத்திரத்தா னெய்தியது விலக்க னுதலிற்று. (ப-ரை) மூன் (றுருபு) - மூன்றும்வேற்றுமையுருபிற்கும், ஆறுருபு- ஆறும்வேற்றுமை யுருபிற்கும், எண் - இயல்பாயும் விகாரமாயும்வருகிற எண்ணிற்கும், வினைத்தொகை -வினைத்தொகைக்கும், சுட்டு- சுட்டுப்பெயருக்கும், ஈறாகும்- ஈறாகிய, உகரமுன்னர்- முற்றியவுகரத்தின்முன்னே, இயல்பாம்- வருகிறவல்லினம் இயல்பாகும், எ-று (பொ-ரை) முற்றுகரவீற்று மூன்றுமுருபே யாறுமுருபே இயல்பாயும் விகாரமாயும் வருமெண்ணே வினைத்தொகையே சுட்டுப்பெயரோ யென்னும் இவற்றின்முன் வரும்வல்லின மியல்பாம் எ-று. ஃ மூன்றுறுருபு என்புழி யாமென்னுஞ்சாரியைதொக்கன. [உ-ம்] சாத்தனொடுகொண்டான்-சென்றான்-தந்தான்-போயினான் (எ-ம்) சாத்தனதுகை-செவி-தலை-புறம்- (எ-ம்) எழு-ஒரு-இரு-அறு-கை-செவி-தலை-புறம் (எ-ம்) அடுகளிறு-சேனை-தானை-படை (எ-ம்) அது-இது-உது-குறிது சிறிது-தீது-பெரிது (எ-ம்) கண்டான்- செகுத்தான்- தந்தான்-படைத்தான் (எ-ம்) வரும். உதுகாண்- உதுக்காண்- என இயல்பாயும் விகாரமாயும் வரப்பெறுமாலோவெனின், அஃதியல்பின்விகாரமுமென்னுஞ்சூத்திரத்தன்னபிறவுமென்பதனா னமையுமென்க. (உகூ)

(௱அ0) அதுமுன் வருமன் றான்றுந் தூக்கின். *

(எ-ன்) அதுவென்னுஞ் சுட்டுப்பெயர்முன் வருமன்றென்னுஞ்சொற் கெய்தாத தெய்துவித்த னுதலிற்று. (ப-ரை) அதுமுன்- அதுவென்னுஞ் சுட்டுப்பெயர்முன், வரும்-வருகிற, அன்று- அன்றென்னும் வினைக்குறிப்புமுற்றானது, தூக்கின் - பாட்டினிடத்து, ஆன்றும் முதனீளும், எ-று (பொ-ரை) அதுவென்னுஞ் சுட்டுப்பெயர்முன்வரும் அன்றென்னும் வினைக்குறிப்புச்சொன் முதனீளுஞ் செய்புளகத்து. எ-று. ஃ [உ-ம்] அதான்று - என வரும். ஆன்றேயாமென இயல்பைவிலக்காமையின், அதுவன்

று- அத்ன்று- என வருவனவுங்கொள்க. அதுமுன்வருமன் றன்றுமென விதந்தடையான் எனை இது உது- முன்வருமன்றன்று காதென்பது பெற்றாம். (௫௰)

(௱அ௧) வன்றொட ரல்லன முன்மிகா வல்வழி. *

(எ-ன்) குற்றுகரவீற்றுட் சிலவற்றிற்கு இயல்பினும்விதியினு மென்னுஞ்சூத்திரத்தா னெய்தியதொருவழி விலக்குதனுதலிற்று (ப-ரை) வன்றொட ரல்லனமுன்- வன்றொடரொழிந்த ஐந்து குற்றிய லுகரவீற்றின்முன்னும், அல்வழி- அல்வழியில், மிகா- வருகிறவல்லினம் இயல்பாகும், எ-று- (பொ-ரை) வன்றொடரொழிந்த ஐந்தன்பகுதிக் குற்றுகரவீற்றின்முன்னும்வரும்வல்லின மிகா வல்வழிக்கண். எ-று. ❀ [உ-ம்] நாகு-எஃகு- வரகு- குரங்கு-தெள்கு-கழிது-சிற்து-தீது- பெரிது (எ-ம்) எகுகால் - அஃகுபிணி - பொருதுசென்றான்- அறிந்துதந்தான்- எய்துகொன்றான் - (எ-ம்) வரும். பிறவுமன்ன. (௫௧)

(௱அ௨) இடைத்தொட ராய்தத் தொடரொற் றிடையின்- மிகாநெடி லுயிர்த்தொடர் முன்மிகா வேற்றுமை. *

(எ-ன்) இதுவுமது. (ப-ரை) இடைத்தொடர் (முன்)- இடைத்தொடர்முன்னும், ஆய்தத்தொடர் (முன்) - ஆய்தத்தொடர்முன்னும், ஒற்றிடையின்மிகாநெடிற் (றொடர்முன்)- ஒற்றிடையே மிகாத நெடிற்றொடர்முன்னும், உயிர்த்தொடர்முன் - உயிர்த்தொடர்முன்னும், வேற்றுமை- வேற்றுமையில், மிகா- வருகிறவல்லினம் இயல்பாம், எ-று. (பொ-ரை) இடைத்தொடர்முன்னும் ஆய்தத்தொடர் முன்னும் ஒற்றிடையே மிகாத நெடிற்றொடர் முன்னும் உயிர்த்தொடர்முன்னும் வரும்வல்லின மிகா வேற்றுமைக்கண். எ-று. ❀ [உ-ம்] தெள்கின்கடுமை எஃகின்கடுமை -நாகின்கடுமை- வரகின்கடுமை- சிறுமை- தீமை- பெருமை- என வரும். சாரியைப்பேறு இதற்கிதுசாரியையென்னுஞ் சூத்திரத் தானமைந்தன. சாரியைமிகுதலின் வல்லெழுத்து மிகாவென எதுவலாந்துகூறாது மிகாவென வாளாகூறினமையின்- வரகுகதிர் - எனச் சாரியை மிகாவழி வல்லினமிகாது வருவன வுளவேனுங் கொள்க. (௫௨)

(௱அ௩) நெடிலோ டுயிர்த்தொடர் குற்றுகரங்களுட் - டற வொற் றிரட்டும் - வேற்றுமை மிகவே. *

(எ-ன்) மேலைநிலைமொழிக்கோர் புறனடையாயெய்தாததெய்து வித்தலும் வருமொழிக்குமுத லுயிரேல் இந்நிலைமொழிக்கு உயிர்வரினுக்குறளென்னுஞ் சூத்திரத்தா னெய்தியதன்மேற் சிறப்பு விதியுமுணர்- ற்று. (ப-ரை) நெடிற் (றொடர்) - நெடிற்றொடர்களும், உயிர்த்தொடர்- உயிர்த்தொடர்களுமாகிய, குற்றுகரங்க

ளுள்- குற்றியலுகரமொழிகளுள், டறவொற்று- அவ்வுகரமேற்றி ன்ற டகர றகரமெய்கள், வேற்றுமை- வேற்றுமையில், மிக பெ ரும்பாலும், இரட்டும்- இரட்டிப், எ-று. (பொ-ள்) நெடிற்றொ டர் குற்றுகரவீற்று மொழிகளுள்ளும் உயிர்த்தொடர்க் குற்றுக ரவீற்று மொழிகளுள்ளும் அவ்வுகரம் பற்றுக்கோடாகிய வல்லெ ழுத்து ஆறனுள் டகார றகாரமென இரண்டொற்றும் பெரும் பாலும் வேற்றுமைக்கணிரட்டும். எ-று ❁ குற்றுகரங்களெ ன்னும் எழுத்துக்குறிப்பு அம்மொழிகளை யுணர்த்தி நின்றது. வரு மொழி வரையாமையின் நாற்கணமுங்கொள்க. [உ-ம்.] ஆட்டுக் கால்- பாற்றுக்கால்- முருட்டுக்கால்- முயிற்றுக்கால் செவி-தலை- புறம்- ஞாற்சி நிறம் மயிர்-யாப்பு-வன்மை அடி எனவரும். இவ் விரண்டொற்றுப் பெருப்பாலும் வேற்றுமைக்கணிரட்டுமென வே சிறுபான்மை வேற்றுமைக்கணிரட்டாமையும் சிறுபான்மை அல்வழிக்கணிரட்டுதலும் சிறுபான்மை பிறவொற்றிரட்டுதலுங் கொள்க. [வ-று.] "காவிரி புரக்கு நாடுகிழவோனே," "காட கமிறந்தார்க்கே யாமென் மனனேகாண்," "கலைமிடை நணி யலு மணிந்தன் றக்கறை," என வேற்றுமைக்கணிரட்டாவாயி ன. காட்டரண்- களிற்றியானை- என அல்வழிக்கணிரட்டின. வெ ருக்குக்கண் வெங்கருனை- எருத்துக்கால்- (எ-ம்) எருத்துமாடு- (எ -ம்) இருவழியும் பிறவொற்றிரட்டின. (௫௫)

(௱௮௪) மென்றொடர் மொழியுட் சிலவேற் றுமையிற்- றம் மின வன்றொட ராகா மன்னே. ❁

(எ-ன்) மென்றொடர் குற்றுகர மொழிகளுட் சிலநிலைமொ ழிக்கு மூவினமும்வரின் எதிர்மறைமுகத்தா னெய்தாத தெய்தி வித்தலும் உயிர்வரின் அவ்வெதிர்மறைமுகத்தா னெய்தியதன்மே ற் சிறப்புவிதியு முணர்- ற்று. (ப-ரை) மென்றொடர்மொழியுள் -மென்றொடர் குற்றியலுகரமொழிகளுள், சில சிலமொழிகள், வே ற்றுமையில்- வேற்றுமைக்கண், தம்மினம் - தமக்கினமாகிய, வன் றொடர் - வன்றொடர் குற்றியலுகர மொழிகளாக, ஆகா - ஆதலை யொழிந்தன, மன்- பெரும்பாலன, எ-று. (பொ-ள்) மென்றொ டர் குற்றுகர மொழிகளுட் சிலவேற்றுமைக்கட் டமக்கினமாகு வன்றொட ராதலையொழிந்தன பெரும்பால. எ-று. ❁ சிலவெ ன்னும் எழுவாய் ஆகாவென்னும் எதிர்மறைவினையாலணையும்பெய ரகத்து முதனிலையோடுமுடிந்தது. வருமொழிவரையாமையின் நாற்கணமுங்கொள்க. [உ-ம்] மருந்துப்பை- சுருப்புநாண்- கரு ப்புவில் கற்று- எனவரும். இவ்வாறுசிலவருதலையும் எதிர்மறை முகத்தாற் கூறினமையின் வழக்கின்கண்ணும் சான்றோர் செய்யு

ட்கண்ணும் எற்றபெற்றிகொள்க. வண்டுக்கால் - பந்துத்திரட்சி - முதலியவெல்லாம் வன்றொடராகாதனவெனக. இலவன்றொடரமெனவே ஆகாதன பலவென்பது தானே போதரவும்மன்மையென்ற மிகையானே, எற்புடம்பு - அற்புத்தளை - குரக்குமனம் என அல்வழிக்கணருகி வன்றொடராதலுங்கொள்க. (ருச)

(௱அரு) ஐயீற் றுடைக்குற் றுகரமு முளவே. *

(எ-ன்) இதுவுமேலை நிலைமொழிக்கு மூவினமும்வரி னெய்தாத தெய்துவித்தலும் உயிர்வரி னெய்தியதன்மேற் சிறப்புவிதியு முணர்-ற்று. (ப-ரை) ஐ - ஐகாரச்சாரியையை, ஈற்றுடை - இறுதியிலேபெற்றுவருகிற, குற்றுகரமும் - மென்றொடர் குற்றியலுகரமொழிகளும், உள - சில உண்டு, எ-று. (பொ-ரை) ஐகாரச்சாரியையை இறுதியிலே பெற்றுவரு மென்றொடர் குற்றுகரமொழிகளுஞ் சிலவுள எ-று. ❀ மேலைச் சூத்திரத்தைச் சாரவைத்தமையான் இதுவுமென்றொட ரென்பது பெற்றாம். வருமொழி வரையாமையின் நாற்கணமுங்கொள்க. [உ-ம்] பண்டைக்காலம் - இற்றைநாள் (எ-ம்) அன்றைக்கூலி - இற்றைநலம் (எ-ம்) வரும். பிறவுமன்ன. மேலைச்சூத்திரத்தைச் சாரவைத்தாரேனும் ஐயீற்றுடைக்குற்றுகரமெனப் பொதுப்படக் கூறினமையின் மேற்றைப்பொழுதெனப் பிறதொடர்கள் ஐகாரம்பெறுதலும் ஐயீற்றுடைக்குற்றுகரமென உடைமையாக்கிக் கூறினமையின் வருமொழிப்புணர்ச்சியானன்றி, ஒற்றை - இரட்டை - வேட்டை - என ஒருமொழியாய்நின்று ஐகாரம்பெறுதலும் ஈராட்டை - மூவாட்டை - எனத் தொடர்மொழியாய்நின்று ஐகாரம்பெறுதலுங் கொள்க. ()

(௱அசு) திசையொடு திசையும் பிறவுஞ் சேரி - னிலையீற் றுயிர்மெய் கவ்வொற்று நீங்கலும் - றகரம் னலவாத் திரிதலு மாம் பிற. *

(எ-ன்) குற்றுகரவீற்றுத் திசைப்பெயர்க்கெய்தாத தெய்துவித்தலுதலிற்று (ப-ரை) திசையொடு - திசைச்சொல்லோடு, திசையும் - திசைச்சொல்லும், பிறவும் - பிறசொல்லும், சேரின் - புணருமிடத்து, நிலையீற்று - நிலைமொழியீற்றிலேநின்ற, உயிர்மெய் - உயிர்மெய்யும், கவ்வொற்று - அதன்பின்னின்ற ககரமெய்யும், நீங்கலும் - கெடுதலும், றகரம் - அவ்விடத்துநின்ற றகரமெய், னலவா - னகரமெய்யாகவும் லகரமெய்யாகவும், திரிதலும் - திரிதலும், ஆம் - ஆகும், எ-று. (பொ-ரை) திசைச்சொல்லோடு திசைச்சொல்லும் பிறசொல்லும் புணருமிடத்து நிலைமொழி யீற்றினின்ற உயிர்மெய்யும் அதன்மேனின்ற ககரவொற்றுங் கெடுதலும் அங்ஙனம் நின்ற றகரவொற்று னகரவொற்றாயும் லகரவொற்றாயுந் திரிதலுமாம், எ-று. ❀ [உ-ம்] வடகிழக்கு - வடமேற்கு - வடதிசை -

வடமலை- வடவேங்கடம், தென்கிழக்கு - தென்மேற்கு - தென்குமரி- தென்வீதி- தென்மலை மேல்பால்- மேனாடு- குடதிசை - குடநாடு - குணகடல்- குணபால்- எனவரும் பிறவென்றமையானே, மேற்றிசை- மேலைத்திசை - கீழ்த்திசை - கீழைத்திசை - கீழ்மேற்றென்வடல் - (எ-ம்) கிழக்கு- மேற்கு தெற்கு - வடக்கு- வடக்கூர் - தெற்கூர்-வடக்குமலை- தெற்குமலை- என இங்ஙனங்காட்டியவிகாரமின்றியும்வருமெனவும் இவ்விதியெல்லாமெற்றபெற்றி கோடல்வேண்டுமெனவுங்கொள்க. வடகிழக்கு என்பது வடக்கும் கிழக்குமாயதோர்கோணமென உம்மைத்தொகைப்புறத்துப் பிறந்த அன்மொழித்தொகை. வடதிசை என்பது- வடக்காய திசையெனப் பண்புத்தொகை. வடமலை என்பது- வடக்கின்கண் மலையென ஏழம்வேற்றுமைத்தொகை. கீழ்மேற்றென்வடல் கிழக்கு மேற்கு தெற்கு வடக்கு என்பன உம்மைத் தொகை. பிறவுமன்ன. (௬௬)

(௱அஎ) தெங்குநீண் டீற்றுயிர் மெய்கெடுங் காய்வரின். *

(எ-ன்) தெங்கென்னும்பெயர்க் கெய்தாத தெய்துவித்த னுதலிற்று. (ப-ரை) காய்- காயென்னுஞ்சொல், வரின்- வந்தால், தெங்கு- தெங்கென்னு நிலைமொழி, நீண்டு- முதனீண்டு, ஈற்றுயிர்மெய்- ஈற்றிலுள்ளவுயிர்மெய், கெடும்- நீங்கும், எ-று. (பொ-ரை) காயென்னுஞ்சொல் வருமாயிற் றெங்கென்னு நிலைமொழி முதனீண்டு ஈற்றுயிர்மெய்கெடும். எ-று ஈறு கெடுமென்றமையான் முதனீளுமென்பது பெற்றாம் [உ-ம்] தேங்காய்-எனவரும். தெங்கு நீண்டீற்றுயிர்மெய் கெட்டே புணருமென இயல்பை விலக்காமையிற் றெங்கங்காய் - எனவருமுடிபுங் கொள்க. (௬௭)

(௱அஅ) எண்ணிறை யளவும் பிறவு மெய்தி - னொன்று முத லெட்டீறு மெண்ணுண் - முதலீ ரெண்முத னீளு மூன்று- மாறு மேழுங் குறுகு மாறே ழல்லவற் றீற்றுயிர் மெய்யு மேழனு யிரு- மேகு மேற்புழி யென்மனார் புலவர். *

(எ-ன்) ஒன்றுமுதலெட்டீறு மெண்ணுப்பெயர்க் குயிர்வரினெய்தியதன்மேற் சிறப்புவிதியு மெய்வரினெய்தாத தெய்துவித்தலு நுதலிற்று. (ப-ரை) எண்- எண்ணுப்பெயரும், நிறை- நிறைப்பெயரும், அளவும்- அளவுப்பெயரும், பிறவும்- பிறபெயர்களும், எய்தின்- வந்தால், ஒன்றுமுதல்- ஒன்றுமுதல், எட்டீறும் - எட்டீறும், எண்ணுள்- எண்களுள், முதலீரெண்- முதலிலுள்ள இரண்டெண்களும், முதனீளும்- முதற்குறினீளும், மூன்றுமாறும்- மூன்றும் ஆறும் ஏழும், முதல்) குறுகும்- முதனெடில்குறுகும், ஆறேழல்லவற்றின்- ஆறும் ஏழுமல்லாத ஆறெண்களினுடைய, ஈற்றுயிர்மெய்யும்- இறுதியிலுள்ள உயிர்மெய்களும், ஏழன்- ஏழனுடைய, (ஈற்)

றுயிரும்- இறுதியிலுள்ளஉயிரும், எகும்- கெடும், ஏற்புழி - ஏற்கு
மிடங்களில், என்மனர்- என்றுசொல்லுவார், புலவர் புலவர்- எ-று.
(பொ-ரை) எண்ணுப்பெயரும் நிறைப்பெயரும்அளவுப்பெயரு
ம்பிறபெயரும்வரினிலைமொழியாக நின்றவொன்றுமுதல் எட்டீ
றுமெண்களுண்முதற்கண்ணவாய வொன்றிரண்டென்னும் இரண்
டெண்ணுமுதனீளும் மூன்று மாறுமேழுமுதல்குறுகும் ஆறுமே
ழுமல்லாத ஆறெண்களினீற்றுயிர் மெய்யும்ஏழென்னுமெண்ணீ
ற்றுயிருங்கெடு மேற்குமிடங்களிலென்று சொல்லுவர் புலவர். எ
று- ※ இச்சூத்திரத்துட்கூறிய விகாரமு மிப்புணர்ச்சிமுற்ற மு
டித்தற்குப்பின்னேற் சூத்திரத்தாற் கூறும் விகாரமு முயிர்வரினுக
ரமெய் விட்டோடுமென்பு மொழிற்சகலங்களெரீற் றல்னியல்பி னி
ற்றலையும் விலக்கியவல்ல விவ்விகாரமனைத்து மொருங்கு வேண்டு
மென்னு நியதியவல்ல இவ்விகாரம் பண்புத்தொகைக்கே யுரிய
வென்பார் ஏற்புழியென்றாம் ஏழென்பதனீ யுயிரீற்றுமொழியா
கக்கொள்வார்சிலர் ஒற்றீற்றுமொழியாகக் கொள்வார்சிலர் யா
மொருதலை துணிந்தாமென்பார் என்மனர் புலவரென்றும் ஒற்
றீற்றும் விலக்கப்படுவ தன்றென்பா ருடம்படுபுணர்த்தி யொற்
றீறுகமேழ் குறுகுமென்றுங்கூறிலர். ஏழென்பது முற்றுகரவீற்
றதனுய் ஒன்றினைமுடித்த றன்னினைமுடித்த லென்னுமுத்தியா
னீண்டுக் கூறப்பட்டதென்க. [உம்] அறுபது-எழுபது கழ
ஞ்சு நாழி-மீன்- (எ-ம்) எழ்கடல்- எ-ம்) வரும். ஏனையவற்றிற் கு
தாரணம் பின்னர்க் காட்டுதும். இரண்டாயிரம் - எழாயிரம் - என
வுயிர்வரிற் குற்றுகரமும் முற்றுகரமுங் கெட்டுப்புணர்ந்தன. இர
ண்டுகழஞ்சு- மூன்றுபடி- நான்குபொருள்- ஏழுகடல்- எனத்தன்
னியல்பினின்று புணர்ந்தன பிறவுமன்ன, (௫௮)

(௱௮௯) ஒன்றன் புள்ளி ரகர மாக - விரண்ட னொற்றுயி
ரேகவுவ் வருமே. *

(எ-ன்) இதுவுமது. (ப-ரை) ஒன்றன்-ஈற்றுயிர் மெய்கெடநின்
றவொன்றென்னு மெண்ணினது, புள்ளி-னகர மெய்யானது, ரக
ரமாக-ரகரமெய்யாக, இரண்டன் - இரண்டனுடைய, ஒற்று - ணக
ரமெய்யும், உயிர்- அகரவுயிரும், ஏக கெட, உவ்வரும்- அவ்விரண்டு
ரகரமெய்மேலும் உகரம்வரும், எ-று. (பொ-ரை) மேற்கூறிய நால்வ
கைப்பெயரும் வருமிடத்தீற்றுயிர் மெய்யேகு மென்றமையா னி
றுதி யுயிர்மெய்கெடநின்ற வொன்றென்னு மெண்ணினது னகர
வொற்று ரகரவொற்றாக இரண்டென்னு மெண்ணினது ணகர
வொற்றும் ரகரத்தையூர்ந்துநின்ற அகரவுயிருங்கெட அவ்விரண்
டு ரகரத்தின்மேலு முகரம்வரும். எ-று. ※ [உ-ம்] ஓராயிரம்-
ஈராயிரம் ஒருபது-இருபது- ஒருகழஞ்சு- இருகழஞ்சு ஒருநாழி-

இருநாழி- ஒருவகை - இருவகை - எனவரும். ஓராயிரம் - ஈரா யிரம்- என்புழி உகரக்கேடு மூற்றுமற்றோரோவழி யென்பதனாற் கொள்க. பிறவுமன்ன. (௩௯)

(௱௯௰) மூன்ற னுறுப் பழிவும் வந்தது மாகும். *

(எ-ன்) இதுவுமது. (ப-ரை) மூன்றன்- இறுதியுயிர்மெய்கெ டநின்ற மூன்றென்னு மெண்ணினது, உறுப்பு- மெய்யானது, அ ழிவும்- கெடுதலும், வந்ததும்- வருகிறமெய்யாகத் திரிதலும், ஆ கும்- ஆகும், எ-று. (பொ-ரை) நால்வகைப்பெயரும் வருமிடத் திறுதியுயிர்மெய் கெடநின்ற மூன்றென்னு மெண்ணினது ன கரவொற்றுக்கெடுதலும் வருமொற்றாகத் திரிதலுமாம். எ-று. ❁ [உ-ம்] மூவொன்று- மூவெடை- மூவுழக்கு- மூவுலகு (எ-ம்) மு ப்பது- முக்கழஞ்சு- மூந்நாழி- மும்மொழி (எ-ம்) வரும். (௪௰)

(௱௯௰௧) நான்கன் மெய்யே லறவா கும்மே. *

(எ-ன்) இதுவுமது, (ப-ரை) நான்கன்- இறுதியுயிர்மெய் கெ டநின்ற நான்கென்னு மெண்ணினது, மெய்- னகரமெய், லறவா கும்-லகரமெய்யாகவும் றகரமெய்யாகவுந் திரியும், எ-று. (பொ-ரை) நால்வகைப்பெயரும் வருமிடத் திறுதியுயிர்மெய் கெடநி ன்ற நான்கென்னு மெண்ணினது னகரவொற்று லகரவொற்றாயு ம் றகரவொற்றாயுந் திரியும். எ-று. ❁ [உ-ம்] நாலொன்று- நா லெடை - நாலுழி- நான்மணி- (எ-ம்) நாற்பது-நாற்கழஞ்சு- நா ற்கலம்-நாற்கவி- (எ-ம்) வரும். (௪௧)

(௱௯௰௨) ஐந்தனொற் றடைவது மினமுங் கேடும். *

(எ-ன்) இதுவுமது. (ப-ரை) ஐந்தன்- இறுதியுயிர்மெய்கெட நின்ற ஐந்தென்னு மெண்ணினது, ஒற்று- நகரமெய்யானது, அ டைவதும் - வருகிறமெய்யாகியும், இனமும் - அதற்கினமாகியும், கேடும்- கெட்டும் வரும், எ-று. (பொ-ரை) நால்வகைப் பெயரு ம்வருமிடத் திறுதியுயிர்மெய் கெடநின்ற ஐந்தென்னு மெண்ணி னது நகரவொற்று வருமொற்றாகியும் அதற்கினமாகியுங் கெட்டும் முடிவுதாம். எ-று. ❁ [உ-ம்] ஐம்மூன்று- ஐம்மஞ்சாடி - ஐவ்வ ட்டி- ஐவ்வண்ணம் (எ-ம்) ஐம்பது - ஐங்கழஞ்சு - ஐங்கலம் - ஐம் பொறி- (எ-ம்) ஐயொன்று- ஐயெடை- ஐயாழாக்கு- ஐயப்பு (எ- ம்) வரும். அடைவதும் இனமுமென்றமையின் அருத்தாபத்தி யான், ஐந்நூறு - ஐந்தூணி - என்புழி யொற்றுத் தன்னியல்பி னிற்றல் கொள்க. (௪௨)

(௱௯௰௩) எட்ட னுடம்பு ணவ்வாகு மென்ப. *

(எ-ன்) இதுவுமது. (ப-ரை) எட்டன்- இறுதியுயிர்மெய் கெ டநின்ற எட்டென்னு மெண்ணினது, உடம்பு-டகரமெய்யானது,

ணவ்வாகும்- ணகரமெய்யாகும், என்ப- என்றுசொல்லுவர்புலவர் எ-று. (பொ-ரை) நால்வகைப்பெயரும் வருமிடத் திறுதி யுயிர்மெய் கெடநின்ற எட்டென்னு மெண்ணினது டகரவொற்று ணகரவொற்றாகுமென்று சொல்லுவர் புலவர். எ-று. ❁ [உ-ம்] எண்பது எண்கழஞ்சு- எண்கலம்- எண்குணம்- எனவரும. எண்ணிறையளவு மென்னுஞ்சூத்திரத்துட்கூறிய புணர்ச்சிக்குவேண்டும்விகார மிதுகாறுமென்பதுதோன்ற அச்சூத்திரத்துட் கூறிய புலவரென்னு மெழுவாயைச்சுட்டி யதன்பயனிலையாக இச்சூத்திரத்திறுதிக்க ணென்ப வென்றார். (௬௫)

(௱௯௬) ஒன்பா னொடு பத்து நூறு மொன்றின் - முன்னதி னேனைய முரணி யொவ்வொடு-தகர நிறீஇப் பஃ தகற்றி னவ்வை நிரலே ணளவாத் திரிப்பது நெறியே. *

(எ-ன்) ஒன்பதென்னு மெண்ணுப் பெயர்க் கெய்தாத தெய்துவித்தலும் அதனோடுபுணரும் பத்து நூறென்னும் வருமொழிகட்கு இயல்பினும் விதியினு மென்னுஞ் சூத்திரத்தானு மெண்மூவெழுத்தீற் றென்னுஞ் சூத்திரத்தானு மெய்தியது விலக்கிப் பிறிதுவிதியு முணர்- ற்று. (ப-ரை) ஒன்பானொடு- ஒன்பஃதுடனே, பத்தும்- பத்தென்பதும், நூறும்- நூறென்பதும், ஒன்றின்- வந்துபுணருமாயின், முன்னதின்- முன்னதாகிய நிலைமொழியினின்றும், ஏனைய- மற்றைவருமொழிகளாகிய பத்தையும் நூற்றையும், முரணி - முறையே நூறெனவும் ஆயிரமெனவுந் திரித்து, ஒவ்வொடு- நிலைமொழிமுதலிலுள்ள ஒகரவுயிரோடு, தகரம்- தகரமெய்யை, நிறீஇ அதற்கு ஆதாரமாகநிறுத்தி, பஃது- அந்நிலைமொழியிறுதியிலுள்ள பஃதை, அகற்றி- கெடுத்து, னவ்வை- அம்மொழிமுதற் கயனின்ற னகரமெய்யை, நிரலே - முறையே, ணளவா- ணகரமெய்யாகவும் ளகரமெய்யாகவும், திரிப்பது - திரிப்பது, நெறி- முறையாகும், எ-று. (பொ-ரை) ஒன்பஃதுடனே பத்தென்பதும் நூறென்பதும் வந்துபுணருமாயின் அந்நிலைமொழி வருமொழிகளுண் முன்னர்த்தாகிய நிலைமொழியினின்று மேனைவருமொழியாகிய பத்தையு நூற்றையு நிரனிறைவகையானே நூறெனவும் ஆயிரமெனவுந்திரித்து நிலைமொழிக்கு முதற்கணொகரவுயிரோடு தகரமெய்யை அதற்காதாரமாக நிறுத்தி அந்நிலைமொழியிறுதிக்கட் பஃதைக்கெடுத்து அம்மொழிமுதற்கயனின்ற னகரவொற்றை முறையே ணகரவொற்றாயும் ளகரவொற்றாயுந் திரிப்பது முறைமையாம். எ-று. ❁ முன்னதினென்னு மின்னுருபுநீங்கற்பொருட்டா யேனையவென்னும் இடைச்சொல்லடியாகத்தோன்றியவினைக்குறிப்புப்பெயர்கொண்டது. நிலைமொழித்திரிபுபோல வருமொழித்திரிபும் வகைபடக்கூறுது பொது

ப்பட முரணியென்றாரேனும், "ஒன்பா னொகர மிசைத் தகர
மொற்று - முந்தை யொற்றே ணகார மிரட்டும் - பஃதென்
கிளவி யாய்த பகரங் கெட - நிற்றல் வேண்டு மூகாரக் கிளவி-
யொற்றிய தகரம் றகரமாகும்.,, (எ-ம்) "ஒன்பான் முதனிலை
முந்துகிளந் தற்றே-முந்தை யொற்றே ளகார மிரட்டு- நூறெ
ன் கிளவி நகார மெய்கெட- ஊவா வாகு மியற்கைத் தென்ப
- வாயிடை வருத லிகார ரகர - மீறுமெய் கெடுத்து மகரமொ
ற்றும்.,, (எ-ம்) ஆசிரியர் தொல்காப்பியர் கூறியவாற்றான் அவற்றி
ன் றிரிபறிந்து திரித்துக்கொள்க. நெறியேயென்ற விலேசானே த
னிக்குறின் முன்னொற்றிரட்டித்தலுங் கொள்க. [உ-ம்] தொண்ணூ
று (எ-ப்) தொள்ளாயிரம் (எ-ம்) வரும். தொளாயிரமென இக்காலத்
து மரீஇயிற்று. ஒன்பஃதுநின்றுபுணரினும் ஒன்பதுநின்றுபுண
ரினு மிம்முடிபேயாமென்பார் பஃதகற்றி யென்பதனோடு பொ
ருந்த வொன்பஃதோடென்னாது - ஒன்பானொடென்றும் தகர
வொற்றை ஒகரவுயிர்க் குடம்பாக நிறுத்துகவென்பார் ஒவ்வோ
டென்றும் இப்புணர்மொழிக ளொகரவுயிரொன் றொழிய விகா
ரப்பட்டுக் கிடந்தமையிற் குறிப்பின்றி முடியு மரூஉமுடிபெ
ன்று கொள்ளற்க வென்பார் திரிவதென்னாது - திரிப்பதென்றும்
இவற்றை இலக்கணமுடிபாகத் தொல்லாசிரியர் முடித்தவாறே
முடித்தாமென்பார் நெறியேயென்றுங் கூறினார். இச்சூத்திரத்து
முன்னதினேனையமுரணியென்பதற் கிவ்வாறுபொருள்கொள்ளா
தொன்பஃதினானே பத்தையும் நூற்றையும் பெருக்கி யெனப்
பொருள்கொள்வாருமுளர். முரணியென்னுஞ்சொற் கது பொ
ருளன் றாதலானும் அதுபொருளாமேனு மதனால் வருமொழி
யிவ்வாறு திரிந்தவெனத்தோன்றாமையானுந் தோன்றி னிலைமொ
ழிக்கு விகாரங் கூறவேண்டாமையானு மதுபொருந்தாதென்க.
இன்னு முன்னதினேனைய முரணியென்பதற்கு நிலைமொழியாய
வெட்டின்மே லொன்று ஒன்பஃதெனப் பஃதென்னு மிறுதிய
தாய்த், திரிந்துநின்றாற்போல வருமொழியாய வெண்பதின்மேற்
பத்தை நூறெனவும் எண்ணூற்றின்மே னூற்றை யாயிரமெனவுந்
திரித்துப் பொருள்கோடலு மொன்று. (௪௪)

(௱௯௫) முதலிரு நான்கா மெண்முனர்ப் பத்தி- னிடையொற்
றேக லாய்த மாக - லெனவிரு விதியு மேற்கு மென்ப, *

(எ-ன்) ஒன்றுமுதலெட் டெண்களின் முன்வரும் பத்தென்னு
மெண்ணிற்கு இயல்பினும்விதியினு மென்னுஞ் சூத்திரத்தானெ
ய்தியதுவிலக்கிப் பிறிதுவிதிவகுத்தனுதலிற்று. (ப-ரை) முதல்-ஒ
ன்றுமுதலாகிய, இருநான்கா மெண்முனர்- எட்டெண்களின்முன்

னும்வருகிற, பத்தின்- பத்தென்னுமெண்ணினது, இடை - நடுநின்ற, ஒற்று- தகரமெய்யானது, ஏகல்- கெடுதலும், ஆய்தமாகல் -தகரநின்றவிடத்து அதுகெட ஆய்தம்வருதலும், என்விருவிதியும்-என்னு மிவ்விரண்டு விதியையும், ஏற்கும்- ஏற்கும், என்ப- என்றுசொல்லுவர்புலவர், எ-று. (பொ-ரை) ஒன்றுமுதலாகிய வெட்டெண்களின்முன்னும் வரும் பத்தென்னு மெண்ணிடைநின்ற தகரவொற் றொருகாற்கெடுதலு மொருகா லிடையே தகரநின்ற நிலைக்களத் ததுகெட ஆய்தம் வருதலுமென்னு மிவ்விரண்டுவிதியையு மேற்குமென்று சொல்லுவர்புலவர். எ-று ❁ இடையென்பதனைப் பின்னுங்கூட்டுக. இடையே யாய்தமாகலென்றமையி னவ்வழித் தகரக்கேடு கூறாதேயமையுமென்க. [உ-ம்] ஒருபது- இருபது- முப்பது- நாற்பது- ஐம்பது அறுபது- எழுபது - எண்பது (எ-ம்) ஒருபஃது- இருபஃது- முப்பஃது - நாற்பஃது- ஐம்பஃது- அறுபஃது- எழுபஃது - எண்பஃது (எ-ம்) வரும். (௪௫)

(௱௯௬) ஒருபஃதாதிமுன் னொன்றுமுதலொன்பா-னெண்ணு
மவையூர் பிறவு மெய்தி - னாய்த மழியவாண் டாகுந் தவ்வே.*

(எ-ன்) மேலைச் சூத்திரத்தா னெய்திய வொருபஃதாதியாய நிலைமொழிக்கு உயிர்வரின் உயிர்வரி னுக்குறளென்னுஞ் சூத்திரத்தா னெய்தியதன்மேற் சிறப்புவிதியு மெய்வரி னெய்தாததெய்துவித்தலு நுதலிற்று. (ப-ரை) ஒருபஃதாதிமுன் - ஒருபஃதுமுதலாகிய எட்டெண்களின்முன், ஒன்று முதல்- ஒன்றுமுதலாகிய, ஒன்பானெண்ணும்- ஒன்பதெண்களும், அவை- அவ்வெண்களை, ஊர்- ஊர்ந்த, பிறவும்- மற்றவையும், எய்தின்-வந்துபுணருமாயின், ஆய்தம்-நிலைமொழியிடையிலேநின்ற ஆய்தமானது, அழிய கெட, த- இயல்பாகியதகரம், ஆண்டு- அவ்வாய்தநின்றவிடத்து, ஆகும்- வரும், எ-று. (பொ-ரை) ஒருபஃதாதியாய வெட்டெண்களின்முன்னு மொன்றுதியொன்ப தெண்ணு மவையூர்ந்த பிறவும்வந்துபுணருமாயி னாய்தங்கெட அந்நிலைக்களத்தியல்பாய தகரம் வரும். எ-று, ❁ ஐயமறுத்தற் கவையூர் பிறவுமென்றார். [உ-ம்] ஒருபத்தொன்று - இருபத்தொன்றேகாலேயரைக்கால்- முப்பத்தொருகழஞ்சு- எழுபத்தொன்பதின்கலனேதூணி - எண்பத்தொன்பதியாண்டு- எனவரும். பிறவுமன்ன. • ஆய்த மழியவாண் டாகுந்தவ்வேயென்றமையா னாய்தமழிந்தவற்றிற்கும் ஒருபதுமுதலிய முற்றுகரவீற்றெண்ணுப்பெயர்கட்கும்வேற்றுமையின்மையின் அருத்தாபத்தியா னவற்றோடு இவ்வருமொழிகள் புணரினு மாண்டாகுந் தவ்வே யென்றாராயிற்று. இவற்றிற்குங் காட்டவையேயா மென்க. (௪௬)

(௱கூஎ) ஒன்றுமுதலீரைந் தாயிரங்கோடி-யெண்ணிறை யளவும் பிறவரிற் பத்தி-னீற்றுயிர்மெய்கெடுத் தின்னு மிற்று-மேற்ப தேற்கு மொன்பது மினைத்தே.

(எ-ன்) பத்தென்னுநிலைமொழிக்கு உயிர்வரின் உயிர்வரினுக்குறளென்னுஞ் சூத்திரத்தா னெய்தியது விலக்கிப் பிறிதுவிதியு மெய்வரி னெய்தாத தெய்துவித்தலும் ஒன்பதென்னு நிலைமொழிக்கு உயிர்வரின் உயிர்வரினுக்குறளென்னுஞ் சூத்திரத்தா னெய்திய தன்மேற் சிறப்புவிதியு மெய்வரி னெய்தாத தெய்துவித்தலு முணர்-ற்று. (ப-ரை) ஒன்றுமுதலீரைந்து - ஒன்றுமுதலாகிய பத்தெண்களும், ஆயிரம்- ஆயிரமும், கோடி - கோடியுமாகிய, எண்- எண்ணுப்பெயரும், நிறை- நிறைப்பெயரும், அளவும்- அளவுப்பெயரும், பிற- பிறபெயரும், வரின்- வந்துபுணருமாயின், பத்தின்- நிலைமொழியாகிய பத்தினது, ஈற்றுயிர்மெய்- இறுதியிலுள்ள துகரவுயிர்மெய்யை, கெடுத்து- அழித்து, இன்னும்- இன்சாரியையாயினும், இற்றும்- இற்றுச்சாரியையாயினும், ஏற்பது - அவ்விடத்திற் கேற்பது, ஏற்கும் - ஏற்றுநிற்கும், ஒன்பதும்- ஒன்பதென்னுநிலைமொழியும், இனைத்து-இப்படியே எண்ணுப்பெயர் முதலானவை வந்துபுணருமாயின் இன்னாயினும் இற்றாயினும் அவ்விடத்திற்கு ஏற்பது ஏற்றுநிற்கப்பெறும், எ-று. (பொ-ரை) ஒன்றுமுதலாகிய பத்தும் ஆயிரமுங் கோடியு மென்னு மெண்ணுப்பெயரும் நிறைப்பெயரும் அளவுப்பெயரும் பிறபெயரும்வந்துபுணருமாயின் நிலைமொழியாகியபத்தென்னு மெண்ணின தீற்றுயிர்மெய்யைக்கெடுத்து அந்நிலைக்களத் தின்சாரியையேனு மிற்றுச்சாரியையேனு மாண்டைக்கேற்ப தேற்று நிற்கும் ஒன்பதென்னுநிலைமொழியு மிங்ஙனமேவிதந்த வெண்ணுப்பெயர்வந்துபுணருமாயி னின்னேனு மிற்றேனு மாண்டைக்கேற்ப தேற்றுநிற்கப்பெறும். எ-று. ❁ [உ-ம்] பதினொன்று- பதின்மூன்று- பதினாயிரம்- பதின்கழஞ்சு- பதின்கலம் - பதின்மடங்கு- (எ-ம்) பதிற்றொன்று- பதிற்றிரண்டு- பதிற்றுமூன்று- பதிற்றுக்கோடி.- பதிற்றுத்தூணி- (எ-ம்) ஒன்பதினாயிரம்- ஒன்பதின்கழஞ்சு- ஒன்பதின்கலம் - ஒன்பதின்மடங்கு (எ-ம்) ஒன்பதிற்றொன்று- ஒன்பதிற்றிரண்டு - ஒன்பதிற்றுக்குறுணி - (எ-ம்) வரும். பிறவுமன்ன. பதினொன்றென்பது - உம்மைத்தொகை. பதிற்றொன்றென்பது - பண்புத்தொகை. பிறவுங்கண்டுகொள்க. பத்துக்கோடி- ஒன்பதுகோடி- என இந்நிலைமொழிக டன்னியல்பினிற்றலேயன்றி வழக்கின்கண்ணும் சான்றோர்செய்யுட்கண்ணு மிவ்வாறமைத்து இடர்த்தனவுங் கொள்கவென்பா ரேற்பு தேற்கு

மென்றும் ஒன்பதனீற்றுயிர்மெய்யைக்கெடாது குற்றுகரவீற்
றுப் பொதுவிதியா னுயிரொன்றுமேகெட இன்னுமிற்றுமேற்
படதேற்றுநிற்றலி னொன்பதுமிற்றேயெனத் தன்மையணியாக்கா
து- உவமையணியாக்கி இனைத்தே யென்றுங் கூறினார். ஒன்ப
தென்பதனிறுதி பத்தென்பதுபோல முரணிநிற்றலி னதனோ
டிதனை மாட்டெறியப்பட்டதெனினு மமையும். (௪௭)

(௱௯௮) இரண்டு முன்வரிற் பத்தினீற் றுயிர்மெய் - கரந்
திட வொற்று னவ்வாகு மென்ப. *

(எ-ன்) இதுவும் பத்தென்னு நிலைமொழிக்கு உயிர்வரி னுக்
குறளென்னுஞ் சூத்திரத்தா னெய்தியதுவிலக்கிப் பிறிதுவிதி வ
குத்த னுதலிற்று. (ப-ரை) இரண்டு- இரண்டென்பது, முன்வரி
ன்- முன்வருமாயின், பத்தின்- பத்தென்னுநிலைமொழியினது, ஈ
ற்றுயிர்மெய் ஈற்றிலுள்ள துகரவுயிர்மெய்யானது, கரந்திட-கெட,
ஒற்று- தகரமெய், னவ்வாகும்- னகரமெய்யாகத் திரியும், என்ப- எ
ன்றுசொல்லுவர் புலவர். எ-று (பொ-ரை) இரண்டென்பதுவரி
ற் பத்தென்னுநிலைமொழியின தீற்றுயிர்மெய்கெடத் தகரவொற்
று னகரவொற்றாகத் திரியுமென்றுசொல்லுவர் புலவர். எ-று.
❋ [உ-ம்] பன்னிரண்டு- எனவரும். உம்மைத் தொகைக் கண்
ணும் பண்புத்தொகைக்கண்ணு மிரண்டென்னுமெண் வரு
மொழியாய் வருமேனு முன்வரி னென வருதலைச் சிறப்பித்தமை
யா னொருசொன் னீர்மையாய்ச்சிறந்த உம்மைத்தொகைக் கிவ்
விதி கூறினாரென்க. (௪௮)

(௱௯௯) ஒன்ப தொழித்த வெண் ணொன்பது மிரட்டின்-மு
ன்னதின் முன்னல வோட வுயிர்வரின்- வவ்வு மெய்வரின் வந்தது
மிக னெறி. *

(எ-ன்) ஒன்பதொழித்த வொன்பதெண்களாய நிலைமொழி
களுண் மூன்றுமேழுற் கெண் ணிறை யளவும் பிறவுமெய்தினெ
ன்னுஞ் சூத்திரத்துண் மூன்றுமேழுங் குறுகுமென வெய்தியதன்
மேற் சிறப்புவிதியு மெல்லாவற்றிற்கு முயிர்வரி னெய்தியதுவி
லக்கிப் பிறிதுவிதியு மெய்வரி னெய்தாத தெய்துவித்தலு நுதலி
ற்று. (ப-ரை) ஒன்பது-ஒன்பதென்கிற எண்ணொன்றனையும், ஒழி
த்த- ஒழித்துநின்ற, எண் ணொன்பதும்- ஒன்றுமுதற் பத்திறுதியா
ஒன்பதெண்ணினையும், இரட்டின் - இரட்டித்துச்சொன்னால், மு
ன்னதின் - நிலைமொழியினது, முன்னல- முதலெழுத்தல்லாதவை
களெல்லாம், ஓட- கெட, உயிர்வரின்- உயிர்முதலானவெண்வரின்,
வவ்வும் வகரமெய்யும், மெய்வரின் - மெய்முதலான வெண்வரின்,
வந்ததும் - வந்தமெய்யும், மிகல் - மிகுதல், நெறி - முறையாம்,
எ-று. (பொ-ரை) ஒன்பதென்னு மெண்ணொன்றனையு மொழித்

துநின்றவொன்றுறி பத்திருன வெண்ணென்பதனையு மிரட்டி
த்துக்கூறி னிலைமொழி முதலெழுத் தொன்றுநிற்க அல்லனவெ
ல்லாங்கெட வுயிர்முதலான வெண்வரின் வகரவொற்று மெய்ம்முத
லானவெண்வரினவ்வத்தவொற்று மிகுதன் முறைமையாம். எ-று.
※ [உ-ம்] ஒவ்வொன்று-இவ்விரண்டு-மும்மூன்று-நந்நான்கு-ஐ
யைந்து- அவ்வாறு- எவ்வேழு- எவ்வெட்டு- பப்பத்து- எனவரும்.
நெறியென்றமையானேநான்கிற்குக்குறுக்கமும்ஐயைந்தென்புழி
ஐகாரக் குறுக்கத்தின் முன்னொற் றிரட்டாமையும் ஒரோவொன்
று- ஒன்றொன்று-கழக்கழஞ்சு- கலக்கலம்-என விரட்டித்துவருவ
னவுங் குற்றுகரப்புணர்ச்சிவிதியுட் கூறுதொழிந்து நெறிப்படவ
ருவனவுளவேலவையுங் கொள்க. ஒவ்வொன்று கொடுவென்றுவ்
இம்முறையே பலவற்றையுங் கொடுவெனப் பொருடந்துநிற்றலி
னிஃதடுக்கன்று வேற்றுமையல்லன வெல்லாம் அல்வழியாதலிற்
றழாத்தொடராய அல்வழியு ளொன்றுமென்க. (௪௯)

(உ௱) பூப்பெயர் முன்னின மென்மையுந் தோன்றும். ※

(எ-ன்) ஊகாரவீற்றுப் பூவென்னும் பலபொரு ளொருசொ
ன்முன்வரும்வல்லினத்திற்கு இயல்பினும் விதியினு மென்னுங்கு
த்திரத்தா னெய்தியதன்மேற் சிறப்புவிதியுணர் - ற்று. (ப-ரை)
பூப்பெயர்முன்- பூவென்னும் பலபொரு ளொருசொன்முன், இ
னமென்மையும்- வருகிறவல்லினமிகுதலல்லாமல்அவற்றிற் கினமா
கிய மெல்லினமும், தோன்றும்- மிகும். எ-று.(பொ-ரை) பூவெ
ன்னும்பலபொருட் பெயர்ச்சொன்முன் வல்லினம்வரிற் பொதுவி
தியான் கசதபமிகுதலேயன்றி யவற்றிற்கினமாகியமெல்லொற்றுக
ளு மிகும் எ-று. ※ இப்பொருட்டாய பூப்பெயரென விதவாமை
யிற் பலபொருளொருசொல் லென்பதுபெற்றாம். [உ-ம்] பூங்
கொடி- பூஞ்சோலை- பூந்தடம்- பூம்பணை- எனவரும். இவற்றுட்பூ
வென்பது மலரோ விரண்டாம்வேற்றுமை யுருபும் பயனு முடன்
றொக்கதொகையாகவும் பொலிவேற் பண்புத்தொகையாகவும் பூ
ங்கணையென்புழி மலரென்னு மொருபொருட்டாய் மூன்றாம்வே
ற்றுமையுருபும் பயனு முடன்றொக்க தொகையாகவும் பண்புத்
தொகையாகவும் பூங்கரும் பென்புழி பொலிவென்னு மொரு
பொருட்டாய்ப் பண்புத்தொகையாகவும் வருவனகாண்க. உறழ்ந்
துவருமெனவுறுதிகூறாது பூக்கொடியென வல்லின மிகுதலையும்
மையாற் றழீஇக்கொண்டமையி னிவ்விருவகைத்தோன் றலு மேற்
றவெற்றி கொள்க. (௫௰)

(உ௱க) இடைச்சொல் லேயோ முன்வரி னியல்பே. ※

(எ-ன்) ஏகார ஓகார விடைச்சொற்கண் முன்வரும் வல்லினத்
திற்கு இயல்பினும்விதியினு மென்னுஞ் சூத்திரத்தா னெய்தியது

விலக்கனுதலிற்று. (ப-ரை) இடைச்சொல்-இடைச்சொல்லாகிய, ஆ
(முன்)-ஆமீறகாரத்தின்முன்னும், ஓமுன்-எட்டோகாரத்தின்முன்
னும், வரின்- வல்லினம்வந்தால், இயல்பு பொதுவிதியான்மிகாது
இயல்பாகும். எ-று. (பொ-ரை) இடைச்சொல்லாய் ஆமீறகாரத்தி
ன்முன்னும் எட்டோகாரத்தின்முன்னும் வல்லினம் வருமாயிற்
பொதுவிதியான் மிகாதியல்பாம். எ-று ❀ [உ-ம்] அவனே கொ
ண்டான். என்பது பிரிநிலையும் வினாவுமீற்றசையுந் தேற்றமுமாம்.
அறமேபொருளே காமமேதுறவே என்பனவெண்.எயெதனையெ
ன்றோரிருடிவினவ என்பதிசைநிறை.அவனோகொண்டான் என்ப
தொழியிசைமுதலிய வெட்டுமாம். இவற்றுள் வல்லின மியல்பாத
ல்காண்க. இவ்விடைச்சொல்லொன்று பலபொரு டருமா றிடைச்
சொல்லியலுட் காட்டுதும். (௫௧)

(௨௱௨) வேற்றுமை யாயி னைகா னிறுமொழி - யீற்றழி
வோடுமம் மேற்பவு முளவே. ❋

(எ-ன்) ஐகாரவீற்று நிலைமொழிக் கெய்தாததெய்து வித்தனுத
லிற்று. (ப-ரை) ஐகானிறுமொழி - ஐகாரவீற்றுச்சொற்கள்,வே
ற்றுமையாயின் - வேற்றுமைக் கண்வருமாயின், ஈற்றழிவோடும்-ஈ
ற்றைகாரங் கெடுதலுடனே, அம் - அம்முச்சாரியை,எற்பவும்-பெ
ற்றுமுடிவனவும், உள- சிலவுள. எ-று. (பொ-ரை) ஐகாரவீற்றுச்
சொல்வேற்றுமைக்கண்வருமாயி னிறுதி ஐகாரங்கெடாத் தம்முச்
சாரியைபெற்று முடிவனவும் ஐகாரங்கெட்டு அம்முச்சாரியைபெ
ற்றுமுடிவனவுஞ் சிலவுளவாம்.எ-று ❀ உம்மைகளிரண்டனுள்மு
ன்னையதுஎதிர்மறைக்கண்ணும் பின்னையதுஎதிர்மறையோ டிழி
வு சிறப்பின்கண்ணும் வந்தன. [உ-ம்] புன்னையங்கானல்-கொல்
லையஞ்சாரல் - கொன்றையந்தீங்குழல் முல்லையம்புறவம்- (எ-ம்)
வழுதுணங்காய்- ஆவிரம்பூ- வேர் - (எ-ம்) வரும். தகுதியாக்கா
தேற்பன வென்றமையான் முல்லைப்புறவம் என வரினுங்கொள்
க. அம்முமென்றுமையி னும்மையான் வல்லினந் தழீஇய தன்
றென்க. வருமொழி வரையாமையி னூற்கணத்து மேற்பன
கொள்க. (௫௨)

(௨௱௩) பனைமுன் கொடிவரின் மிகலும் வலிவரி- னைமே ய
ம்முந் திரள்வரி னுறழ்வு- மட்டுறி னைகெட் டந் நீள்வுமாம் வே
ற்றுமை. ❋

(எ-ன்) பனையென்னு நிலைமொழிக்கும் அதனோடுபுணருஞ் சி
லவருமொழிகட்கும் இயல்பினும் விதியினு மென்னுஞ் சூத்திர
த்தானு மேலைச்சூத்திரத்தானு மெய்தியவற்றை இகந்துபடாமற்
காத்தலும் இ ஈ ஐவழி யென்னுஞ் சூத்திரத்தா னெய்தியதுவி
லக்கிப் பிறிதுவிதிவகுத்தலு நுதலிற்று. (ப-ரை) பனைமுன் - ப

னையென்னும் பெயர்முன், கொடிவரின்- கொடியென்னும்பெயர்வருமாயின், மிகலும்- வந்ததுமிகுதலும், வலிவரின்-கசதபக்கள் வருமாயின், ஐபோய்- நிலைமொழியீற் றைகாரங்கெட்டு, அம்மும் - அம்முப்பெறுதலும், திரள்வரின்- திரளென்னும் பெயர்வருமாயின், உறழ்வும்- வந்ததுமிகுந்தும் ஐபோய் அம்முப் பெற்றும் விகற்பித்தலும், அட்டுறின்- அட்டென்னும்பெயர்வருமாயின், ஐகெட்டு - ஐகாரங்கெட்டு, அந்நீள்வும்- வருமொழி அகரம் ஆகாரமாதலும், ஆம் - ஆகும், வேற்றுமை- வேற்றுமைக்கண் எ-று. (பொ-ரை) பனையென்னும்பெயர்முன் கொடியென்னும்பெயர் வருமாயின்வந்ததுமிகுதலும் க ச த பக்கள்வரின் நிலைமொழியீற்றைகாரங்கெட்டு அம்முப்பெறுதலும் திரளென்னுப்பெயர் வருமாயின் வந்ததுமிகுந்தும் ஐபோ யம்முப்பெற்றுந் தம்மு ளுறழ்தலும் அட்டென்னும் பெயர்வருமாயின் ஐகாரங்கெட வருமொழி அகரம் ஆகாரமாதலுமாம் வேற்றுமைக்கண். எ-று. ❁ வெட்டென்பது செயவெனெச்சந் திரிந்து நின்றது. [உ-ம்] பனைக்கொடி (எ-ம்) பனங்காய்-செறும்பு- தூண்- படம் (எ-ம்) பனைத்திரள்- பனந்திரள்- (எ-ம்) பனாட்டு, (எ-ம்) வரும். பனைக்கொடியென்பது - பனையை யெழுதிய கொடி. பனாட்டென்பது - பனையினது தீங்கட்டி. (௫௬)

உயிரீற்றுப் புணரியன்

முற்றிற்று.



மெய்யீற்றுப் புணரியல்.

(௨௱௪) உடன்மே லுயிர்வந் தொன்றுவ தியல்பே. *

(எ-ன்.) மெய்யீற்றுப் பதப்புணருஞ் சிறப்புப்புணர்ச்சி இவ்வியலாற் கூறப்படுதலின் மெய்யீற்றுமுன் உயிர்முதல் வந்து புணருமாறுணர் - ற்று. (ப-ரை) உடன்மேல்- நிலைமொழியீற்றினின்ற மெய்யின்மேல், உயிர் - வருமொழிமுதலுயிர், வந்து- வந்து, ஒன்றுவது - ஒன்றுபட்டிணங்கி நிற்பது, இயல்பே - இயல்பு புணர்ச்சியேயாம், எ-று. (பொ-ரை) நிலைமொழியீற்றினின்ற மெய்யின்மேல் வருமொழிமுதலுயிர்வந்தொன்றுபட்டிணங்கிநிற்பது இயல்புபுணர்ச்சியேயாம். எ-று. ❁ [உ-ம்,] தோன்றலழகன் - ஊரிருழகிது - புகழழகிது - (எ-ம்) வேலெறிந்தான் - (எ-ம்) இருவழியுங் காண்க. பிறவுமன்ன. இவ்வாறு மெய்யுமுயிருங்கூடி யுயிர்மெய்யாய் மெய்யினதுப்புள்ளியுமுயிர்வடிவமுங்கெட்டுநிற்றலின் விகாரமாமென்பாரைவிலக்கிச் சிறந்த வொலிவடிவின் யாக்கையுமுயிரும்போன் மெய்யினது மாத்திரையுள்ளடங்க வொன்றுபட் டிரட்டையிலைபோல் ஒற்றொலிமுன்னும் உயிரொலிபின்னுமா யிணங்கிநிற்றலானு மொன்றுத தனிக்குறின்முன்னொற்று முதலியன விகாரப்படுதலானு மொன்றுவதியல்பே யென்றார். ஏகாரம் பிரிநிலைக்கண் வந்தது. (௧)

(௨௱௫) தனிக்குறின் முன்னொற் றுயிர்வரி னிரட்டும். *

(எ-ன்) எய்தியதன்மேற் சிறப்புவிதி புணர்- ற்று. (ப-ரை) தனிக்குறின்முன்- தனிக்குற்றெழுத்தின்முன்னின்ற, ஒற்று - மெய்யானது, உயிர்- உயிரானது, வரின்- வந்தால், இரட்டும் - இரட்டித்து நிற்கும், எ-று. (பொ-ரை) தனிக்குறின்முன் னொற்றுயிர் வரி னிரட்டித்துநிற்கும். எ-று. ❁ [உ-ம்] மண்ணரிது- பொன்னரிது (எ-ம்) மண்ணகம் - பொன்னொளி- (எ-ம்) வரும். பிறவுமன்ன. (௨)

(௨௱௬) தன்னொழி மெய்ம்முன் யவ்வரி னிகரந் - துன்னு மென்று துணிநரு முளரே. *

(எ-ன்) யகரமொழிந்த பத்துமெய் முன்னும்வரும் யகரத்திற் கென்மூ வெழுத்தீற் றென்னுஞ் சூத்திரத்தா னெய்தியதன்மேற்

சிறப்புவிதி யுணர் - ற்று. (ப-ரை) தன்னொழி - தன்னையொழி ந்த,மெய்ம்முன் - ஞ ண ந ம ன ர ல வ ழ ள என்கிறபத்து மெ ய்களின்முன்னும், ய - யகரமானது, வரின்-வந்தால், இகரம்- இகர ச்சாரியையை, துன்னுமென்று - தன்முன் பொருந்துமென்று, துணிநரும்- அறிதிற் கொள்வாரும், உளர் - சிலருளர். எ-று. (பொ-ரை) யகரந்தன்னை யொழிந்த ஞ ண ந ம ன ர ல வ ழ ள வென்னும் பத்துமெய்முன்னும்வந்தாற் றன்முன்னிகரச்சாரியை யைப் பொருந்துமென்றறிதிற்கொள்வாருஞ் சிலருளர். எ-று. ❁ [உ-ம்] வேளியாவன் மண்ணியாது- (எ-ம்) வேளியானை-மண ணியானை - (எ-ம்) வரும். பிறவுமன்ன. எதிர்மறையாய விழிவு சிறப்பும்மையா னிகரந் துன்னுது பொதுச்சூத்திரத்தா னியல் பா மென்பார் பெரும்பாலரென்க. (௯)

(உ௱எ) ஞ ண ந ம ல வ ள ன வொற்றிறு தொழிற்பெய- ரேவல் வினைநனி யவ்வன் மெய்வரி- னுவ்வுறு மேவ லுறுசில சில்வழி. ⁂

(எ-ன்) முதனிலைத் தொழிற்கு மேவற்கும் பொதுவாய சில நிலைமொழிகட் கெய்தாத தெய்துவித்த னுதலிற்று. (ப-ரை.) ஞ ண ந ம ல வ ள ன - ஞ ண ந ம ல வ ள ன என்கிற, ஒற்று - எட்டுமெய்களும், இறு - இறுதியாகிய, தொழிற்பெயர் - முதனி லைத்தொழிற்பெயர்களும், ஏவல்வினை - ஏவல்வினைகளும், யவ்வன் மெய்- யகரமொழிந்தமெய்கள், வரின்- வருமாயின், நனி - பெரு ம்பாலும், உ - உகரச்சாரியையை, உறும்- இறுதிக்கட்பொருந்து ம், சிலவேவல்- சிலவேவல்வினைகள், சில்வழி- சிலவிடங்களிலே, உ று- அவ்வுகரச்சாரியையைப் பொருந்தாவாம், எ-று. (பொ-ரை) ய ர ழக்களையொழிந்த வெட்டொற்று மிறுதியாகு முதனிலைத் தொழிற்பெயரு மேவல்வினையு மேல்விதந்த யகரமொழிந்தமெ ய்வருமாயிற் பெரும்பாலு முகரச்சாரியையை யிறுதிக்கட்பொ ருந்தும் சிலவேவல்வினை யவ்வுகரச்சாரியையைப் பொருந்தா சி லவிடங்களின். எ-று. ❁ ஏவல்வினையோ டெண்ணினமையின் முதனிலைத் தொழிற்பெய ரொன்பது பெற்றும். [உ-ம்] உரிஞுக் கடிது- உண்ணுக்கடிது- பொருநுக்கடிது- திருமுக்கடிது - தின் னுக்கடிது- நீண்டது- வலிது- (எ-ம்) கடுமை-நீட்சி-வன்மை- (எ- ம்) தொழிற்பெயர்க ளிருவழியு முகரம்பெற்றன. பிறவுமன் ன. உரிஞுகொற்று- உண்ணுகொற்று- பொருநுகொற்று - திரு முகொற்று- தின்னுகொற்று- நாகா- வளவா - என வேவல்வினையு கரம்பெற்றன. பிறவுமன்ன. உரிஞு - உண்ணு - என வருமொ ழியின்றி யுகரம்பெறுதலும், மனைலேவாரு - சருகையாரு - எனச் சிறுபான்மை விலக்கியவழி யுகரம்பெறுதலு முளவென்பார் நனி

யென்றும் யகரம்வருமொழிக்கிகரம்விதித்தலின் அதனோடுபுண ரு மிந்நிலை மொழியீறுதி யுகரம்பெறுதென்பார் டவ்வன்மெய் யென்றும், உண்ணுகொற்று- உண்கொற்று - என உகரப்பெற்று ம்பெறுதும் வருவனவும், உரிஞுகொற்று - என உகரப்பெற்றே வருவனவுமுளவென்பார் சிலவேவனுரு சில்வழியென்றுங் கூறி னர். ஏவலுருவென்னது- ஏவற்குருவெனப் பாடமோதுவாரு முளராலோவெனின், உறுமென்னும் வினைக்குத் தொழிற்பெ யர்களையு மேவல்வினைகளையும் வினைமுதலாக்கிக்கூறுதலானு மத னைமறுத்த வுருவென்னும் பன்மைவினைக் கொருமையுகரம் வி னைமுதலாகாமையானு மதுபாட மன்றென்க. (௪)

(௨௱அ) நவ்விறு தொழிற்பெயர்க் கவ்வுமாம் வேற்றுமை *

(எ-ன்) நகரவீற்றுத் தொழிற்பெயர்க் கெய்தியதன்மேற் சி றப்புவிதியுணர்-ற்று. (ப-ரை நவ்விறு - நகரமிறுதியாகிய, தொ ழிற்பெயர்க்கு- முதனிலைத்தொழிற்பெயர்க்கு, அவ்வுமாம் உகர ச்சாரியையல்லாமலும் அகரச்சாரியையுமாகும், வேற்றுமை- வே ற்றுமைக்கண். எ-று (பொ-ரை) நகரமிறுதியாகு முதனிலைத் தொ ழிற்பெயர்க்குஉகரச்சாரியையே யன்றி அகரச்சாரியையுமாம்வே ற்றுமைக்கண். எ-று. [உ-ம்] பொருநககடுமை- நன்மை- வன் மை- எனவரும் பிறவுமன்ன. பொருநவெலாருவர் மற்றொரு வர்போல வேடங்கொள்ளும் பொருநராது தொழிலாதலி னொருத் தலென்னும் பொருட்டு. (௫)

(௨௱௯) ணனவல் லினம்வரட் டறவும் பிறவரி - னியல்பு மாகும் வேற்றுமைக் கல்வழிக்- கனைத்துமெய் வரினு மியல்பா கும்மே. *

(எ-ன்) மேலைச்சூத்திரங்காறு மெய்யீற்றுட்பொதுப்புணர்ச் சி கூறியவற்றிற்கேயுரிய ஞகர நகரங்களை யொழித் தேனையவற்றி ற்கு முறையே தனித்தனிச் சிறப்புவிதி கூறுவான்றொடங்கி ணக ர னகரவீறுபுணருமாறுணர்-ற்று. (ப-ரை) ணன- ணகார னகார ங்கள், வேற்றுமைக்கு- வேற்றுமைக்கண், வல்லினம்- வன்கணம், வ ர- வந்தால், டறவும்- முறையே டகாரமும் றகாரமும், பிற- மெல் லினமும் இடையினமும், வரின்- வந்தால், இயல்பும்- இயல்பும், ஆகும்- ஆம், அல்வழிக்கு- அல்வழிக்கண், அனைத்துமெய் - மூவி னமெய்களும், வரினும்- வந்தாலும், இயல்பாகும்- இயல்பேயாகு ம், எ-று. (பொ-ரை) ணகார னகாரங்கள் வேற்றுமைக்கண் வல்லி னம்வந்தால் முறையே டகாரமும் றகாரமுமாம் மெல்லினமு மிடையினமும்வந்தா லியல்பாம் அல்வழிக்கண் மூவினம்வந் தாலு மியல்பேயாம். எ-று. [உ-ம்] சிறுகட்களிறு பேரம ர்க்கட்பேதை-.(எ-ம்) பொற்றட்டு- பொற்றகடு - (எ-ம்) வேற்று

மைக்கண் வல்லினம்வரத் திரிந்தன. மண்-பொன்-ஞாற்சி-நீட்சி-மாட்சி யாப்பு வன்மை-எனவேற்றுமைக்கண் மெல்லினமு மிடையினமும்வர வியல்பாயின. மண்-பொன்-கடிது-சிறிது தீது-பெரிது ஞான்றது-நீண்டது-மாண்டது-யாது வலிது- (எ-ம்). உண்டான்கொற்றன்-வெள்ளன் வளவன் (எ-ம்) அல்வழிக்கண் மூவினமும்வர இயல்பாயின. பிறவுமன்ன ஒப்பின்முடித்தலானகாரமு முடன்கூறினர். இவ்வாறுபின்வருவனவு மன்ன. (௬)

(௨௱௰) குறிலணை வில்லா ணனக்கள் வந்த - நகரந் திரிந்துழி நண்ணுங் கேடே. *

(எ-ன்) ணகார னகார வீற்று ளொருசார னவற்றிற்கெய்திய துவிலக்கிப் பிறிதுவிதிவகுத்த துதலிற்று. (ப-ரை) குறில்- தனிக்குறிலொன்றனையும், அணைவில்லா- சாராமல் ஒருமொழி தொடர்மொழிகளைச்சார்ந்த, ணனக்கள்- ணகார னகார மெய்களானவை, வந்த- வருமொழிக்குமுதலாகவந்த, நகரம்- நகரமானது, திரிந்துழி-மயக்கவிதியில்லாமையினாலே திரிந்தவிடத்து, கேடு- கெடுதலை, நண்ணும்-பொருந்தும், எ-று. (பொ-ரை) தனிக்குறிலொன்றனையுமொழிந் தொருமொழி தொடர்மொழிகளைச்சார்ந்த ணகார னகாரங்கள் வருமொழிக்கு முதலாகவந்த நகரம் மயக்கவிதியின்மையிற் றிரிந்தவிடத் தியல்பாகாது கெடுதலைப்பொருந்தும். எ-று ❊ [உ-ம்.] பாணன்று - தூணன்று - பசுமணன்று - (எ-ம்) நன்மை (எ-ம்) அரசனலன் - செம்பொனன்று - (எ-ம்) நன்மை (எ-ம்) இருவழியுங்கெட்டன. (௭)

(௨௱௰௧) சாதி குழூஉப்பரண் கவண்பெய ரிறுதி- யியல்பாம் வேற்றுமைக் குணவெண் சாண்பிற - டவ்வா கலுமா மல்வழி யும்மே. *

(எ-ன்) ணகா வீற்றுட் சிலவற்றிற்கு வேற்றுமைக்கணெய்தியதுவிலக்கலுஞ் சிலவற்றிற் கல்வழிக்கணெய்திய தன்மேற் சிறப்புவிதியு முணர்-ற்று. (ப-ரை) சாதிப் (பெயர்) - சாதிபற்றிவரும்பெயர்களுக்கும், குழூஉப் (பெயர்)- திரள்பற்றிவரும் பெயர்களுக்கும், பரண்கவண்பெயர்- பரண்கவணென்னும்பெயர்களுக்கும், இறுதி- ஈற்றுணகரமானது, வேற்றுமைக்கும் - வேற்றுமைக்கண்ணும், இயல்பாம்- வல்லினம்வந்தா லியல்பாகும், உண்வெண் (பெயர்) - உணவிற்குரிய வெள்ளின் றிரிசொல்லாகிய வெண்ணென்னும் பெயருக்கும், சாண் (பெயர்) - சாணென்னும் நீட்டலளவைப்பெயருக்கும், (இறுதி) - ஈற்றுணகரமானது, அல்வழியும்- அல்வழிக்கண்ணும், டவ்வாகலுமாம் - வல்லினம்வந்தால் திரிந்து டகரமாதலும் பொருந்தும், எ-று, (பொ-ரை) சாதி

பற்றியும் திரள்பற்றியும்வரும் பெயர்களும் பரண்கவணென்னு
ம் பெயர்களுமானவற்றினிறுதி ணகரம் வேற்றுமைக்கண்ணும்வ
ல்லினம்வந்தாலியல்பாம் எண்ணலளவையன்றி புணர்விற்குரியவெ
ள்ளின் றிரிசொல்லாய வெண்ணென்னும் பெயருஞ் சாணென்
னுநீட்டலளவைப்பெயரும் வல்லெழுத்துகள்வரிற் றிரிந்து டகர
மாகலும் பொருந்து மல்வழிக்கண்ணும். எ-று. ❁ அலவழிக்க
ணிறந்ததுதழீஇய வெச்சவும்மையை வேற்றுமைக்கண்ணுங்கூட்
டுக, [உ-ம்] பாண்- உமண்- குடி- சேரி- தோட்டம்- பாடி- (எ-
ம்) அமண்குடி சேரி- தோட்டம் பாடி- (எ-ம்) பரண்கால்- கவ
ண்கால்- (எ-ம்) வேற்றுமைக்கண்ணு மியல்பாயின. எட்கடிது-
சிறிது- தீது- பெரிது (எ-ம்) சாட்கோல் - (எ-ம்) அல்வழிக்கண்
ணுந் திரிந்தன. டவ்வாகலுமாமென்னு மிறந்ததுதழீஇய வெ
ச்சவிழிவுசிறப்பும்மையான், எண்கடிது- சாண்கோல் - என இய
ல்பாதலே வலியுடைத்தென்க. பிறவென்றமிகையானே வேற்று
மைக்கண்- பாணக்குடி என அகரச்சாரியை பெறுதலும், அட்டூ
ண்டிழனி- என்னுமியல்பும், மண்குடம்- மட்குடம்- என்னு முற
ழ்வும் இருவழிக்கணணுமின்னும் ணகரவீற்று ளமையாதனவுள
வேலவையுங்கொள்க சாதியுங் குழூவும் ஆகுபெயராயவற்றை
யுடையராய [illegible]ணைப் பொருளை யுணர்த்தி நின்றன வேனுந்
தெய்வமென்றாற்போலச் சொல்லா னஃறிணையாதலிற் பொதுப்
பெயருயர்திணைப் பெயர்க ளீற்றுமெய்வலிவரினியல்பாமென்ப
தனுளமையாவாயின. மேல்வரும்னஃகான்கிளைப்பெயருமது (அ)

(௨௱௰௨) னஃகான் கிளைப்பெய ரியல்பு மஃகா- னடைவு
மாகும் வேற்றுமைப் பொருட்கே. *

(எ-ன்) னகரவீற்றுச் சாதிப்பெயர்க்கு வேற்றுமைக்கணெ
ய்தியது விலக்கலும் பிறிதுவிதி வகுத்தலு நுதலிற்று. (ப-ரை)
னஃகான்- னகரத்தையிறுதியி லுடைய, கிளைப்பெயர்-சாதிப்பெ
யர், இயல்பும்- வல்லினம்வர வீறு திரியாதியல்பாதலும், அஃகா
னடைவும் - அகரச்சாரியைபெறுதலும், வேற்றுமைப்பொருட்
கு- வேற்றுமைப்பொருட் புணர்ச்சிக்கண், ஆகும்- ஆகும், எ-று.
(பொ-ரை) னகரவீற்றுச் சாதிப்பெயர்வல்லினம்வர வீறுதிரியா
தியல்பாதலும் அகரச்சாரியைபெறுதலுமாம் வேற்றுமைப்பொ
ருட் புணர்ச்சிக்கண். எ-று. ❁ [உ-ம்] எயின்குடி- எயினக்குடி
- சேரி - தோட்டம்- பாடி - எனவரும். பொருட்கேயென்றமி
கையானே, எயினமரபு- எயினவாழ்வு- எயினவணி - என வேனக்
கணம்வரின் அகரச்சாரியை பெறுதலும், எயினக்கன்னி- எயினப்
பிள்ளை- எயினமன்னன்- என அல்வழிக்க ணகரச்சாரியை பெறு

தலுங்கொள்க, இளையென்னும் பலபொரு ளொருசொ லீண்டு
ச் சாதிமெய னின்றது. (௬)

(உ௱௰௩) மீன்றவ் வொடுபொருஉம் வேற்றுமைவழியே. *

(எ-ன்) மீ னென்னுஞ் சொற்கு வேற்றுமைக்க ணெய்திய
தொரு வாற்றான் விலக்க னுதலிற்று. (ப-ரை) மீன்- மீனென்னு
மொழியிறுதினகரம், வேற்றுமைவழி - வேற்றுமைக்கண் வல்லெ
ழுத்துவரின், றவ்வொடு- றகரத்தோடு, பொருஉம் - உறழ்ந்து வ
ரும், எ-று, (பொ-ரை) மீனென்னு மொழியிறுதி னகரம்வேற்
றுமைக்கண் வல்லெழுத்துவரின் றகரத்தோ டுறழ்ந்துவரும். எ-
று. ❁ [உ-ம்] மீன்கண்- மீற்கண்- செவி- தலை- புறம்- எனவரும்.
றகரமாத லிக்காலத்துப் பயின்று வாராதேனும் தொன்னெறி
யாதலி னுணைவழிநிற்க வென்பார் வழியேயென்றார். (௭)

(உ௱௰௪) தேன்மொழி மெய்வரினியல்பு மென்மை-மேவினி
றுதியழிவும் வலிவரி- னீறுபோய் வலிமெலிமிகலுமா மிருவழி. *

(எ-ன்) தேனென்னுஞ் சொற்கு ணவல் லினம்வரட் டறவு
மென வெய்தியது விலககலும் பிறவரினியல்பு மாகும்வேற்று
மைக் கல்வழிக்கணத்து மெய்வரினு மியல்பாகும்மே மென
வெய்திய திகர்துபடாமற் காத்தலு மிச்சூத்திரத் தியல்பு மென
வெய்திய தன்மேற் சிறப்புவிதியும் வரும் வல்லினத்திற்கு இயல்
பினும் விதியினு மென்னுஞ் சூத்திரத்தா னெய்தியதன்மேற் சி
றப்புவிதியு முணர் - ற்று. (ப-ரை) தேன்மொழி - தேனென்னு
ஞ்சொல், மெய்வரின்- மூவினமெய்களுட்வரின், இயல்பும் - இறு
தினகரமெய் யியல்பாதலும், மென்மைமேவின்- மெல்லினம் வ
ரின், இறுதி- அம்மெய், அழிவும்- இயல்பாதலேயன்றிக் கெடுதலு
ம், வலிவரின்- வல்லினம்வரின், ஈறு- அம்மெய், போய்- இயல்பா
தலேயன்றிக்கெட, வலிமெலிமிகலும்-வந்தவல்லினமாவது அதற்
கினமாவது மிகுதலும், ஆம்- ஆகும், இருவழி - இருவழிக்கண்ணு
ம், எ-று. (பொ-ரை) தேனென்னுஞ்சொன் மூவினமெய்யும் வ
ரி னிறுதி னகர மியல்பாதலு மெல்லினம்வரி னவ்விறுதி யியல்
பாதலே யன்றிக்கெடுதலும் வல்லினம்வரி னிறுதி யியல்பாதலே
யன்றிக்கெட வந்தவல்லினமாத லதற்கினமாதன் மிகுதலுமா மி
ருவழிக்கண்ணும். எ-று. ❁ "குறிலணை வில்லா ணனக்கள் வந்த-
நகரந் திரிந்துழி நண்ணுங் கேடே.,, என்றமையா லியல்பிற்கு ந
கரமொழிந்த வெட்டு மெய்யும் வருவித்துக் காண்க. [உ-ம்]
தேன்கடிது-தேன்ஞான்றது-தேன்யாது - (எ-ம்) தேன்மொழி-
தேமொழி- (எ-ம்) தேன்குழம்பு தேக்குழம்பு-தேங்குழம்பு- எ
-ம்) அல்வழிக்கண் வந்தன. தேன்கடுமை- தேன்மலிவு-தேன்யாப்

பு- (எ-ம்) - தேன்மலர் தேமலர்- (எ-ம்)தேன்குடம் - தேக்குடம்- தேங்குடம்- (எ-ம்) வேற்றுமைக்கண் வந்தன. பிறவுமன்ன. தே னென்பது பலபொரு ளொருசொல்லாதலின்மணங்கமழ் சோலை யென்னும் பொருட்டாய்த் தேங்கமழ்சோலை யெனஇவ்விகாரங் களேற்றுவருவனவுங் கொள்க. (௰௧)

(உ௱௰௫) மரமல் லெகின்மொழி யியல்பு மகர மருவ வலி மெலி மிகலு மாகும். *

(எ-ன்) எகினென்னுஞ் சொற்கு வேற்றுமைக்கண் ணன வல்லினம்வரட் டறவுமென வெய்தியது விலக்கலும் அகர மருவவென்றமையின் அச்சூத்திரத்தா லிருவழிக்கண்ணு மெய்தி யதுவிலக்கிப் பிறிதுவிதிவகுத்தலும் வருமவல்லினத்திற்கு இயல் பினும் விதியினு மென்னுஞ் சூத்திரத்தா னெய்தியதன்மேற் சி றப்புவிதியு முணர் - ற்று. (ப-ரை) மரமல் - மரமல்லாத, எகின் மொழி- அன்னத்தை யுணர்த்து மெகினென்னுஞ் சொல், இயல் பும்- வேற்றுமையிலும் வல்லினம்வர இறுதியியல்பாதலும், அகர மருவ- இருவழியிலும் அகரச்சாரியைபொருந்த, வலிமெலிமிகலு ம்-வல்லெழுத்தாவது அதற்கு இனமாவது மிகுதலும்,ஆகும் ஆகு ம், எ-று. (பொ-ரை) மரமன்றிப் பறவையாய அன்னத்தை யுணர் த்து மெகினென்னுஞ்சொல் வேற்றுமைக்கண்ணும் வல்லினம்வர இறுதியியல்பாதலுமிருவழியும் அகரச்சாரியையைப்பொருந்தவ ரும்வல்லெழுத்தாதல அவற்றிற் கினமாதல் மிகுதலுமாம். எ-று. ❁ [உ-ம்] எகின்கால் சிறை-தலை-புறம்- எனவேற்றுமைக்கண்ணு மியல்பாயிற்று. எகினப்புள்-எகினம்புள்- (எ-ம்) எகினக்கால்-எகி னங்கால்- (எ-ம்) இருவழியும் அகரமருவ வலிமெலிமிகுந்தன. அ கரமருவுதற்கு வருமொழிவரையாமையின் நாற்கணமுங்கொள்க. எகினமாட்சி-வாழ்க்கை- அழகு- எனவரும். பிறவுமன்ன. (௰௨)

(உ௱௰௬) குயினூன் வேற்றுமைக் கண்ணு மியல்பே. *

(எ-ன்) குயினூ னென்னுஞ் சொற்கட்கு ணனவல்லினம்வரட் டறவுமென வெய்திய துவிலக்க லுதலிற்று. (ப-ரை) குயின் - கு யினென்னும்பெயரும், ஊன்- ஊனென்னும்பெயரும், வேற்று மைக்கண்ணும்- வேற்றுமையினிடத்தும், இயல்பு - இயல்பாகும், எ-று. (பொ-ரை) குயினென்னும்பெயரும் ஊனென்னும் பெ யரும் வல்லினம்வரி னல்வழிக்க ணியல்பாதலேயன்றி வேற்றுமை க்கண்ணு மியல்பாம். எ-று ❁ [உ-ம்] குயின்கடுமை - ஊன்கடு மை- சிறுமை- தீமை- பெருமை- எனவரும். குயின்மேகம். ௰௩)

(உ௱௰௭) மீன்றின் பன்கனே லொழிற்பெய ரனைய - கன்னவ் வேற்று மென்மையோ டுறழும். *

(எ-ன்) மின்பின் பன்கன்னென்னு நான்குசொற்கும் ணன வல்லினம்வரட் டறவுமென்னுஞ் சூத்திரத்தா னெய்தியது விலக்கிப் பிறிதுவிதிவகுத்தலு மீண்டகரச்சாரியை முன்வரும் வல்லினத்திற்கு இயல்பினும் விதியினு மென்னுஞ் சூத்திரத்தா னெய்தியதன்மேற் சிறப்புவிதியு முணர்-ற்று. (ப-ரை) மின் பின் பன் கன் - மின்முதலிய நான்குசொற்களும், தொழிற்பெயரனைய - தொழிற்பெயர்போல யகரமல்லாத மெய்கள்வரின் உகரசசாரியைபொருந்தும், கன் - இவற்றுட்கன்னென்னுஞ்சொல், அவ்வேற்று - அகரச்சாரியையும்பெற்று, மென்மையோடுறழும் - வருகிற வல்லெழுத்தாவது அதற்கு இனமாவது மிகப்பெறும் எ-று. (பொ-ரை) இந்நான்கு சொல்லுந் தொழிற்பெயர்போல யவ்வன்மெய்வரி னுகரச்சாரியையைப் பொருந்தும் இவற்றுட் கன்னென்னுஞ்சொல் உகரச்சாரியையேயன்றி அகரச்சாரியையும் பெற்று வல்லினம்வந்தால் வருமெழுத்தாத லதற்கினமாதல் மிகப்பெறும். எ-று. ※ அவ்வுமென்னு மும்மையும் பெறுமென்னுமுற்றும் விகாரத்தாற் றொக்கன. [உ-ம்] மின்னுக்கடிது- பின்னுக்கடிது- பன்னுக்கடிது - கன்னுக்கடிது- நன்று - வலிது- (எ-ம்) கடுமை- நன்மை- வன்மை- (எ-ம்) கன்னத்தட்டு- கன்னந்தட்டு- (எ-ம்) கன்னத்தூக்கு- கன்னந்தூக்கு- (எ-ம) அல்வழிவேற்றுமைக்கண் முறையே வந்தன. பிறவுமன்ன. கன்னென்பது- சிறுதராசுத்தட்டு. முன்னென்னுஞ்சொல்லை முன்னமென்றாற்போல இதனைக் கன்னமென்றுங் கூறுப. (௰௪)

(உ௱௰அ) தன்னென் னென்பவற் றீற்றுனவ் வன்மையோ டுறழு நின்னீ றியல்பா முறவே. ※

(எ-ன்) தன்னென்றும் என்னென்றும்வரும் விகாரமொழிகட்கு ணனவல் லினம்வரட் டறவுமென வெய்திய தொருவாற்றான்விலக்கலும் நின்னென்றுவரும் விகாரமொழிக் கெய்தியது விலக்கலு நுதலிற்று. (ப-ரை) தன்னென் னென்பவற்று - தன் என் என்பவைகளினுடைய, ஈற்று - இறுதியிலுள்ள, ன- னகரமெய்யானது, வன்மையோடுறழும் - வல்லினம்வரிற் பொதுவிதியால் றகரமாகத்திரிதலும் அவ்விதியேலா தியல்பாதலுமாய், நின்- நின்னென்பதனது, ஈறு - இறுதியிலுள்ள னகரமெய்யானது, இயல்பாம்- வல்லினம்வரிற் றிரியா தியல்பேயாகும், எ-று (பொ-ரை) தானென்பதும் - தன்னென்றும் யானென்பது - என்னென்றும் வரும் விகாரமொழிகளி னீற்றுனகரம் வல்லினம்வரிற் பொதுவிதியானே றகரமாய்த்திரிதலும் அவ்விதியேலா தியல்பாதலுமாம் நீயென்பது- நின்னென்நின்ற விகாரமொழி யீற்றுனகரம் வல்

லினம்வரிற் றிரியா தியல்பேயாம். எ-று. ❁ வன்மையென்றது-ணகரத்திற் கினமாய றகரத்தை. [உ-ம்] தன்பகை - தற்பகை - என்பகை - எற்பகை - (எ-ம்) நின்பகை - (எ-ம்) வரும். உறவேயென்ற மிகையானே, மின்பின்முதலியன - மின்கடிது - ன்மின்மை- என இருவழியுஞ் சாரியைப்பெறாத் திரிபுமின்றிவருதலும் மான்குளம்பு- அழன்கை- எனவேற்றுமைக்கண் விதவாதன வியல்பாதலும் வரிற்கொள்ளும் எனச் செயினென்னும் வாய்பாட்டுவினையெச்சம்பொதுச்சூத்திரத்தானியல்பாகாது திரிதலும் இன்னும் னகரவீற்று ளமையாதனவுளவே லவையுங்கொள்க. நின்னென்பது விகாரமொழியாதலிற் பொதுப்பெயருயர்திணைப் பெயர்களீற்றுமெய் வலிவரினியல்பா மென்பதனு ளடங்காதாயிற்று. (௰௫)

(௨௱௰௯) மவ்வீ றொற்றழிந் துயிரீ றொப்பவும்- வன்மைக் கினமாத் திரிபவு மாகும். ❋

(எ-ன்) மகாவீறு புணருமா றுணர்-ற்று. (ப-ரை) மவ்வீறு -மகரவீற்றுச்சொற்கள், ஒற்று- இறுதியிலுள்ளமகரமெய், அழிந்து - கெட, உயிரீறொப்பவும் - விதியுயிரீறுப்நின்று இயல்புயிரீறும்போலப் புணர்வனவும், வன்மைக்கினமாத்திரிபவும் - வல்லினம்வரிற்கெடாது அவற்றிற்கு இனமாகத் திரிவனவும், ஆகும்- ஆகும், எ-று. (பொ-ரை) மகர வீற்றுச்சொற்க ளிறுதி மகரங்கெட விதியுயிரீறுய்நின்று இயல்புயிரீறுபோல வுயிர்வரினுடம்படுமெய்தோன்றவும் வல்லினம்வரின் அவைமிகவும் மெல்லினமும் இடையினமும்வரின் இயல்பாகவும்புணர்வனவும் வல்லினம்வரிற்கெடாதவற்றிற் கினமாய்த் திரிவனவுமாம். எ-று. ❁ [உ-ம்] வட்டவாழி- வட்டக்கடல்- நேமி- வாரி- (எ-ம்) மரவடி- மரக்கால்- நார் -வேர்- (எ-ம்) தாங்கடியம்- அடுங்களிறு - (எ-ம்); தங்கை - (எ-ம்) முறையே யிருவழியும் வந்தன. பிறவுமன்ன. வன்மைக் கினமாத் திரிபுமென்றமையின் அருத்தா பத்தியால், நாம்பெரியம்- எனப்பகரம் வரும்வழித்திரியா தென்பது பெற்றாம். (௰௬)

(௨௱௨௰) வேற்றுமை மப்போய் வலிமெலி யுறழ்வு - மல்வழி யுயிரிடை வரினியல் பும்முள. ❋

(எ-ன்) சிலமகரவீற்றிற்கு மேலச்சூத்திரத்தா னெய்திய திகந்துபடாமற் காத்தலும் விலக்கலும் வரும் வல்லினத்திற்கு இயல்பினும் விதியினு மென்னுஞ் சூத்திரத்தா னெய்திய தன்மேற் சிறப்புவிதியு முணர்-ற்று. (ப-ரை) வேற்றுமை- வேற்றுமைக்கண், ம- மகரவீற்றி, போய்- கெட, வலிமெலியுறழ்வும்- வல்லினமாவது அவற்றிற்கு இனமாவது மிகுதலும், அல்வழி- அல்வழிக்கண், உயிர்- உயிரும், இடை - இடையினமும், வரின் - வந்தால்,

இயல்பும் - கெடாதியல்பாதலும், உள - உளவாம். எ-று. (பொ-ழி) வேற்றுமைக்கண் மகரவிறுதிகெட வவற்றின் முன்வரும் வல்லினமாதல் அவற்றிற்கினமாதன் மிகுதலும் அல்வழிக்கண் உயிரும் இடையினமும்வரிற் கெடா தியல்பாதலு முளவாம். எ-று ※ [உ-ம்] குளக்கரை - குளங்கரை, (எ-ம்) குளமழகிது - குளம்யாது - (எ-ம்) அருளுமரசன் - கொல்லும்யானை - (எ-ம்) வரும். பிறவு மன்ன. (௰௭)

(உ௱உக) நுந்தம், எம் நம் மீறா மவ்வரு ஞநவே ※

(எ-ன்) சில பொதுப்பெயர்க்கு மவ்வீ றொற்றழிந்தெனவெய்திய துவிலக்கிப் பிறிதுவிதிவகுத்த லுதலிற்று. (ப-ழி.) நுந்தம் எம்நம் - நும்முதலிய நான்குவிகார மொழிகளுக்கும், ஈறாய் - இறுதியாகிய, ம - மகரமெய்யானது, வருஞந - வருகிற ஞகர நகரங்களாகத் திரியும், எ-று. (பொ-ழி) இந்நான்கு விகாரமொழிகளீற்றுமகர மேல்வரு ஞநக்களாகத் திரியும் எ-று. ※ [உ-ம்] நுஞ்ஞாண் - நுந்நூல் - தஞ்ஞாண் - தந்நூல் - (எ-ம்) எஞ்ஞாண் - எந்நூல் - நஞ்ஞாண் - நந்நூல் (எ-ம்) வரும். ஞநவரினவையாய்த் திரியுமெனவே யொழிந்த மகரம்வரின் நும்மணியென இயல்பா மென்பது பெற்றாம். (௰௮)

(உ௱உஉ) அகமுனர்ச் செவிகை வரினிடை யனகெடும். ※

(எ-ன்) அகமென்னுஞ் சொற்கு வன்மைக் கினமாத் திரிபவுமென வெய்தியி தன்மேற் சிறப்புவிதி யுணர்-ற்று. (ப-ழி) அகமுனர் - அகமென்னு மிடப்பெயர்முன், செவிகை - செவி கை என்கிறசினைப்பெயர்கள், வரின் - வந்தால், இடையன - நிலைமொழிநடுநின்ற ககரமெய்யும் அதன்மேலேறிய அகரவுயிரும், கெடும் - அழியும், எ-று (பொ-ழி) அகமென்னு மிடப்பெயர்முன்னர்ச் செவி கை என்னும் சினைப்பெயர்வரி னிலைமொழியிறுதி மகரம் வன்மைக் கினமாத் திரிதலே யன்றி யதனிடைநின்ற ககரவொற்றும் அதனையூர்ந்த அகரவுயிருங்கெடும். எ-று. ※ [உ-ம்] "அஞ்செவி நிறைய மந்திர மோதி," "அங்கையு ணெல்லி யதன்பயன்," எனவரும். செவியெனச் சகரத்தை முற்கூறினார். "அஞ்சிறைத் தும்பி," (எ-ம்) வருதலினென்க. இடையன கெடுமென நியதிகூறாமையின் அகஞ்செவி - அகங்கை - அகஞ்சிறை - எனவருதல் விலக்கப்பட்டன வல்லவென்க. நகர்ப்புறமென்பதனைப் புறநகரென்றாற்போலச் செவியகங் கையகமென்னு மிடவுருப்புத் தற்கிழமைப் பெயரோடுமுடிந்த ஆறாம்வேற்றுமைத் தொகைச்சொல்லை முன்பின்னாக வழங்கலி னிவ்விரண்டும் இலக்கணப்போலியாய்த் தழாத்தொடராய அல்வழியு ளொன்றாமென்க. அகஞ்சிறையென்பு தேனையவற்றின் சிறைபோலப் புறத்

தின் கண்ணவன்றி யகத்தின்கண்ணவாகலின் ஏழாம்வேற்றுமைத்
தொகை. (பிகூ)

(உ௱உ௩) ஈமுங், கம்மு முருமுந் தொழிற்பெயர் மானு- மு
தலன வேற்றுமைக் கவ்வும் பெறுமே. *

(எ-ன்) இம்மூன்றுசொற்கு மவ்விரெுத்தழிந் தென்னுஞ்
சூத்திரத்தா னெய்திய துவிலக்கிப் பிறிதுவிதிவகுந்த னுதலிற்று
(ப-ரை) ஈமுங்கம்மு முருமும்- ஈம் கம் உரும் என்கின்ற மூன்று
ம்,தொழிற்பெயர்மானும்-இருவழியினுந்தொழிற்பெயர்போலய
காமல்லாதமெய்கள்வந்தால் உகரச்சாரியை பெற்றுமுடியும்;முத
லன- இவற்றுள்ளேமுதற்கணின்ற ஈமுங்கம்மும், வேற்றுமைகரு-
வேற்றுமைக்கண்,அவ்வும்பெறும்- உகரச்சாரியையல்லாமலும் அ
கரச்சாரியையும் பெறும், எ-று. (பொ-ரை) இம்மூன்றுசொல்லு
மிருவழியு முதனிலைத்தொழிற்பெயர்போல யவ்வன்மெய்வரி னு
கரச்சாரியைபெற்றுமுடியும் இவற்றுண் முதற்கணின்ற ஈமுங்க
ம்மும் வேற்றுமைக்கண் உகரச்சாரியை யன்றி அகரசசாரியையு
ம் பெறும். எ-று. ❁ இவற்றுட் கம்மென்பது பலபொருளொ
ருசொல்லாதலின் எப்பொருளை யுணர்த்திநிற்பினு மிவ்விதிகொ
ள்க. [உம்.] ஈமுக்கடிது- கம்முக்கடிது- உருமுக்கடிது- நீண்ட
து- வலிது-(எ-ம) கடுமை- நீட்சி- வன்மை- (எ-ம்) ஈமக்குடம் -
கம்மக்குடம்- (எ-ம்) முறையே காண்க. பிறவுமன்ன. கம்மென்
பது- கம்மியரதுதொழில். அத்தொழிலாற் சமைந்த குடமென்
க. இது- முதனிலைத்தொழிலன் றாதலின் மானுமென்றார். (உ.ய)

(உ௱உச) யரழமுன்னர்க் கசதப வல்வழி யியல்பு மிகலு
மாகும் வேற்றுமை - மிகலு மினத்தோ டுறழ்தலும் விதிமேல்.*

(எ-ன்) யரழ மெய்யீற்றமுன் கசதபக்கள் புணருமா று
ணர்- த்று. (ப-ரை) யரழமுன்னர் - யகர ரகர ழகரமெய்களின்
முன், கசதப- ககர சகர தகர பகரங்கள்வரின், அல்வழி- அல்வழி
யில், இயல்பும் - இயல்பாதலும், மிகலும் - மிகுதலும், வேற்று
மை- வேற்றுமையில், மிகலும் - மிகுதலும், இனத்தோடுறழ்தலு
ம்- வல்லினமாவது மெல்லினமாவது மிகுதலும், விதியாகும் வி
தியாகும், எ-று. (பொ-ரை) இம்மூன்றீற்றின்முன்னுங் க ச த
பக்கள்வரின் அல்வழிக்கணியல்பாதலு மிகுதலும் வேற்றுமைக்க
ண் மிகுதலும் வல்லினமாதன் மெல்லினமாதன் மிகுதலும் விதி
யாம். எ-று. ❁ [உ-ம்] வேய்கடிது-வேர்கடிது-வீழ்கடிது- (எ
-ம்) மெய்க்கீர்த்தி - போர்க்கொண்டான்- கார்ப்பருவம்- பூழ்ப்
பறவை (எ-ம்) நாய்க்கால்- தேர்க்கால்- பூழ்க்கால்- (எ-ம்) வேய்க்
குழல்- வேய்ங்குழல்- ஆர்க்கோடு- ஆர்ங்கோடு- (எ-ம்) முறையே
வந்தன. பிறவுமன்ன. மேலென்ற மிகையானே, "வாய்புகு வ

தனிநுங்கால்பெரிது கெடுக்கும்.,, என வேற்றுமைக்க ணியல்பா
தலும், பாழ்க்கிணறு- பாழ்ங்கிணறு - எனப் பண்புத்தொகைக்க
ணுறழ்தலும் இன்னுமமையாதன வுளவேலவையுங்கொள்க. (௨௧)

(௨௱௨௫) தமிழவ் வுறவும் பெறும்வேற் றுமைக்கே- தாழுங்
கோல்வந் துறுமே லற்றே. *

(எ-ன்) இவ்விருசொற்கு மெய்தாத தெய்துவித்த னுதலிற்
று. (ப-ரை) தமிழ் - தமிழென்கிறசொல், வேற்றுமைக்கு - வேற்
றுமைக்கண்ணே நாற்கணமும்வந்தால், அவ்வுறவும் - அகரச்சாரி
யை பொருந்தவும், பெறும் - பெறும், தாழும் - தாழென்னுஞ்
சொல்லும், கோல்- கோலென்னுஞ்சொல்லானது, வந்து வந்து,
உறுமேல்- பொருந்துமாயின், அற்று- அவ்வகரச்சாரியை பெறு
ம், எ-று. (பொ-ரை) தமிழென்னுஞ்சொல் நாற்கணமும்வரின்
வேற்றுமைக்கண் அகரச் சாரியையைப் பொருந்தவும் பெறும்
தாழென்னுஞ் சொல்லும் கோலென்னுஞ் சொல்வந்து பொரு
ந்துமாயின் அவ்வகரச்சாரியையைப் பெறும்.எ-று. ❁ தமிழிற்கு
வருமொழி வரையாமையின் நாற்கணமு மென்றும். [உ-ம்]
தமிழப்பல்லவதரையர் - தமிழநாகன் - தமிழவளவன் - தமிழவ
ரசன் - (எ-ம்) தாழக்கோல் - (எ-ம்) வரும். பிறவுமன்ன. அவ்வு
றவுமென்னு மெதிரதுதழீஇய வெச்சவும்மையா னென்ன தமிழின்
சுவையென இன்சாரியைபெறுதலுங் கொள்க. தமிழையுடையப
ல்லவதரையர் தாழைத்திறக்குங்கோல் எனவிரியும். தாழக்கோ
லெனினும் திறவுகோலெனினுமமையும். தாழாயகோலெனவொ
ருபொருட் இருபெயரொட்டாக்கலு மொன்று. (௨௨)

(௨௱௨௬) கீழின்முன் வன்மை விகற்பமு மாகும். *

(எ-ன்) கீழென்னுஞ் சொன்முன்வரும் வல்லினத்திற்கு ய ர
ழ முன்ன ரென்னுஞ் சூத்திரத்தா னெய்தியது பெருப்பாலும்
விலக்க னுதலிற்று. (ப-ரை) கீழின்முன்- கீழென்கிற சொல்லின்
முன்வருகிற, வன்மை - வல்லினம், விகற்பமுமாகும் - ஒருகாலிய
ல்பாகியும் ஒருகான்மிகும் வருகிற விகற்பத்தையும் பொருந்து
ம், எ-று. (பொ-ரை) கீழென்னுஞ் சொன்முன்வரும் வல்லினம்
ஒருகாலியல்பாகியுமொருகால் மிககும்வரும்விகற்பத்தையும்பொ
ருந்தும்.எ-று. ❁ [உ-ம்] கீழ்குலம் கீழ்க்குலம்- கீழ்சாதி கீழ்ச்சா
தி-எனவரும். பிறவுமன்ன. இழிவு சிறப்பும்மையான் இவற்றுளிய
ல்பே சிறப்புடைத்தென்க. கீழ்மையென்னும் பண்பொடு புண
ர்தல் பதவியலுண் முடித்துப் போந்தமையிற் “கீழிருந் துங் கீழ
ல்லார் கீழல்லவர்.,, என்றாற்போலக் கீழென்பது பண்பாகும்பெய
ராய் இத்தொடர்இருபெயரொட்டுப்பண்புத்தொகையாமென்க.

(௨௱௨௭) லளவேற் றுமையிற் றடவு மல்வழி - யவற்றோ டுறழ்வும் வலிவரி னாமெலி - மேவி னணவு மிடைவரி னியல்பு - மாகு மிருவழி யானு மென்ப. *

(எ-ன்) லளவீறு புணருமா றுணர் - ற்று. (ப-ரை) லள - லகர ளகரமாகிய இரண்டுமெய்யீறுகளும், வலிவரின் - வல்லினம் வந்தால், வேற்றுமையில் - வேற்றுமைக்கண், றடவும் - முறையே றகார டகாரமெய்களும், அல்வழி - அல்வழிக்கண், அவற்றோடுற ழ்வும் - றகார டகாரங்களுடனே யுறழ்வனவும், ஆம் - ஆகும், இரு வழியானும் - இருவழிக்கண்ணும், மெலிமேவின் - மெல்லினம்வந் தால், னணவும் - முறையே னகார ணகாரமெய்களும், இடைவரி ன் - இடையினம்வந்தால், இயல்பும் - இயல்பும், ஆகும் - ஆகும், எ ன்ப - என்றுசொல்லுவர்புலவர், எ-று. (பொ-ரை) லகார ளகார மானவிரண்டீறும் வல்லினம்வரின் வேற்றுமைக்கண் முறையே றகார டகாரங்களாம் அல்வழிக்கண்ணே றகார டகாரங்களுடனே யுறழ்வனவாம் இருவழிக்கண்ணு மெல்லினம்வரி னகார ணகார ங்களாம் இடையினம்வரின் இயல்பாமென்று சொல்லுவர்புலவர் எ-று. ※ [உ-ம்] கற்குறை - முட்குறை - (எ-ம்) கல்குறிது - கற்கு றிது - முள்குறிது - முட்குறிது - (எ-ம்) கன்ஞெரிந்தது - முண் ஞெரிந்தது - (எ-ம்) கன்ஞெரி - முண்ஞெரி - (எ-ம்) கல்யாது - மு ள்யாது - (எ-ம்) கல்யாப்பு முள்யாப்பு - (எ-ம்) முறையே வந்த ன. பிறவுமன்ன. அல்வழியவற்றோ டுறழ்வுமென்றமையானும் இவ ற்றோடு மாங்காதெனவிலக்கிய தகரம்வரின் எட்டுழிக் கோடலா னுறழ்ச்சியு மியல்பொழித்துத் திரிபொன்றுமே பெறுதல்கொ ள்க. கற்றீது முட்டீது எனவரும். (௨௪)

(௨௱௨௮) குறில்வழி லளத்தவ் வணையி னாய்த - மாகவும் பெ றூஉ மல்வழி யானே. *

(எ-ன்) இவ்விரண்டீற்றிற்கு மேலைச்சூத்திரத்தா னெய்தியத ன்மேற் சிறப்புவிதி யுணர் - ற்று. (ப-ரை) குறில்வழி - தனிக்கு றிலின்பின்னின்ற, லள - லகர ளகர மெய்களானவை, அல்வழியா ன் - அல்வழிக்கண், த - தகரமானது, அணையின் - வருமாயின், ஆய் தமாகவும் - றகர டகரங்களாகத் திரிதலல்லாமலும் ஆய்தமாகத்திரி தலையும், பெறூஉம் - பொருந்தும், எ-று. (பொ-ரை) தனிக்குறி லின்பின்னின்ற லகர ளகரங்கள் அல்வழிக்கண்ணே தகரம்வரு மாயின் றகர டகரங்களாகத்திரிதலேயன்றி யாய்தமாகத் திரிதலை யும் பொருந்தும் எ-று. ※ [உ-ம்] கஃறீது - முஃடீது - எனவரும்.

(௨௱௨௯) குறில்செறி யாலள வல்வழி வந்த - தகரந் திரிந்த பிற் கேடு மீரிடத் தும் - வருநத் திரிந்தபின் மாய்வும் வலிவரி - னியல்புந் திரிபு மாவன வுளபிற. *

(எ ன்) லளவேற்றுமையிற் றடவுமென்னுஞ் சூத்திரத்தா னெய்திய துவிலக்கிப் பிறிதுவிதிவகுத்த னுதலிற்று. (ப-ரை) கு றில்செறியா- தனிக்குறிலொன்றனையுஞ் சாராத, லளா- லகார ளகா ரமெய்களானவை, அல்வழி அல்வழிக்கண், வந்த- வருமொழிக்கு முதலாய்வந்த, தகரம்- தகரமானது, திரிந்தபின் - திரியுமிடத்து, கேடும்- கெடுதலும், ஈரிடத்தும்- இருவழிக்கண்ணும், வரு - வரு மொழிக்குமுதலாய்வந்த, ந- நகரமானது, திரிந்தபின் - திரியுமி டத்து, மாய்வும்- கெடுதலும், வலி - வல்லெழுத்து முதன்மொழி, வரின்- வந்தால், இயல்புந்திரியும் - அல்வழிக்கண் ணுறழா தியல் பாதலுந் திரிதலும் வேற்றுமைக்கண்ணே திரியா தியல்பாதலும் ஆவனவுள- பொருந்துவனவுள, எ-று (பொ-ரை) தனிக்குறில் ஒன்றனையுஞ் சாராதுவரும் லகார ளகாரங்கள் அல்வழிக்கணவந் த தகரந்திரியு மிடத்துக் கெடுதலும் இருவழிக்கண்ணும் வந்த நகரந்திரியு மிடத்துக் கெடுதலும் வல்லினம்வரின் அல்வழிக்க ண்ணுறழா தியல்பாதலுந்திரிதலும் வேற்றுமைக்கட் டிரியா தியல்பாதலும் பொருந்துவனவுள. எ-று. ❁ திரியு முங்கெடுவ னவற்றைத் திரிந்தபிற்கேடு மாய்வுமென்றமையிற் காலவழுவமை தி. [உ-ம்] தோன்றறீயன் - வேடீயன் (எ-ம்) தோன்றனல்லன்- வேணல்லன்- (எ-ம்) தோன்றனன்மை- வேணன்மை- (எ-ம்) கா ல்கடிது- மரங்கள்கடிய- (எ-ம்) வேற்படைக் குமரன்-வாட்படை க் கையன்- (எ-ம்) "கால் குழித் தோடிக் கடல்புக மண்டி", "வா ள்போழ்ந் தட்ட நீள்கழன் மறவர்", (எ-ம்) முறையே காண்க பிறவென்றமிகையாமன, தோன்றறீமை-வேடீமை- என வேற்று மைக்கண்ணுந் தகரந்திரியுமிடத்துக் கெடுதலும், கற்றூணை-தாட் டூணை- எனக் கெடாமையும், விற்படை- என உறழாதுதிரிதலும், கொல்களிறு-கொள்பொருள்- எனவினைத்தொகை யியல்பாதலும் இன்னு மிவ்விரண்டுற்றுள் அமையாதன பிறவுங்கொள்க. இங் ஙன முயர்திணைச்சொல்லின்கட் காட்டியவிகாரங்கண் மெய்க்கவி தியின்மையிற் படுவனவாதலிற் சிலவிகாரமா முயர்திணையென்ப தனு ளடங்காவென்க. (௨௬)

(௨௱௩௰) லள விறு தொழிற்பெய ரீரிடத்து முவ்வுறு-வலிவ ரின்ல்வழி யியல்புமா வனவுள. ❁

(எ ன்) விகுதிபெற்ற தொழிற்பெயர்க்கு முதனிலை திரிந்த தொழிற் பெயர்க்கும் வருவதோர் ஐயமறுத்தலு மொருவாற்றால் அல்வழியவற்றே முறழ்வுமென வெய்தியது விலக்கலு நுதலிற்று (ப-ரை) லளவிறுதொழிற்பெயர் லகாரத்தை யிறுதியாகவுடைய விகுதிபெற்ற தொழிற்பெயரும் ளகாரத்தை யிறுதியாக வுடைய முதனிலை திரிந்த தொழிற்பெயரும், ஈரிடத்து - இருவழியிலும்,

உவ்வுறு- யகரமல்லாதமெய்கள்வந்தால் உகரப்பெறுவாம், வலி- வல்லினம், வரின்-வந்தால், அல்வழி-அல்வழிக்கண், இயல்புமாவன உறழாதியல்பாவனவும், உள- சிலவுள, எ-று (பொ-ரை) லகரத்தையிறுதியாகவுடைய விகுதிபெற்ற தொழிற்பெயரும் ளகரத்தையிறுதியாகவுடைய முதனிலைதிரிந்த தொழிற்பெயரும் முதனிலைத் தொழிற்பெயர்போல யவ்வன்மெய்வரி னுகரம்பெறுமோ பெறுவோ வென்றையுறற்க இருவழியுமுகரம் பெறுவாம் வல்லினம்வரின் அல்வழிக்க ணுறழா தியல்பாவனவுஞ் சிலவுள. எ-று. ❀ [உ-ம்] ஆடல்சிறந்தது- ஆடற்சிறந்தது- ஆடனன்று- ஆடல்வலிது- (எ-ம்) ஆடற்சிறப்பு- ஆடனன்மை- ஆடல்வன்மை- (எ-ம் கோள்கடிது- கோட்கடிது- கோணன்று- கோள்வலிது (எ-ம்) கோட்கடுமை-கோணன்மை- கோள்வன்மை (எ-ம்) இருவழியு முகரம்பெறாது பொதுவிதியான் முடிந்தன. நடத்தல்கடிது- நடப்பித்தலகடிது- எனச் சில்வுறழாது அல்வழிக்கணியல்பாயின. இறந்ததுதழீஇயவெச்சவிழிவு சிறப்பும்மையானே, பின்னல்கடிது பின்னற்கடிது- உன்னல்கடிது- உன்னற்கடிது - எனப் பொதுவிதியா னுறழ்ந்தமேலெடுக்கும்பாலவென்க. (உ௭)

(௨௱௩௧) வல்லேதொழிற்பெய ரற்றிருவழியும்- பலகைநாய் வரினும் வேற்றுமைக் கவ்வுமாம். ✱

(எ-ன்) லளவேற் றுமையிற் றடவு மென்னுஞ் சூத்திரத்தானெய்தியதுவிலக்கிப் பிறிதுவிதிவகுத்த னுதலிற்று. (ப-ரை) வல் வல்லென்கிற சூதாடுகருவிப்பெயர், இருவழியும் இருவழிக்கண்ணும், தொழிற்பெயரற்று- யகரமல்லாத மெய்கள்வந்தால் தொழிற்பெயர்போல உகரச்சாரியைபெறும், பலகைநாய்வரினும்-பலகைநாயென்கிற விருபெயர்வரினும் பிறபெயர்கள்வரினும், வேற்றுமைக்கு- வேற்றுமைக்கண், அவ்வுமாம்- உகரச்சாரியை யல்லாமலும் அகரச்சாரியையும்பெறும், எ-று.(பொ-ரை)வல்லென்னுஞ் சூதாடுகருவிப்பெயர் யவ்வன்மெய்வரிற் றொழிற்பெயரே போல இருவழியுமுகரச்சாரியைபெறும் பலகைநாயென்னு மிருபெயர் வரினும் பிறபெயர்வரினும் வேற்றுமைக்கண் அகரச்சாரியையும் உகரச்சாரியையும் பெறும். எ-று. ❀ வரினுமென்னு மெதிரதுதழீஇய வெச்சவும்மையாற் பிறபெயரென்பதூஉம் அவ்வுமென்னு மிறந்ததுதழீஇய வெச்சவும்மையான் உகரச்சாரியையென்பதூஉம் பெற்றாம். [உ-ம்] வல்லுக்கடிது- நன்று- வலிது எ-ம்) வல்லுக்கடுமை-நன்மை-வன்மை- (எ-ம்) வல்லப்பலகை- வல்லநாய்- வல்லப்புலி- வல்லக்குதிரை- (எ-ம்) வல்லுப்பலகை- வல்லுநாய்- வல்லுப்புலி- வல்லுக்குதிரை- (எ-ம்) முறையேகாண்க. வல்லினைத்தறை வனாந்தபல்லகை-வல்லினுனாய்- எனவும்விரியும். வேற்று

ணமக்கென்றலைமையின் வல்லாயநாய் - என இருபெயரொட்டாய வழி யகரச்சாரியை பெறுமென்க. (௨௮)

(௨௱௬௨). நெல்லுஞ்செல்லுங் கொல்லுஞ்சொல்லு மல்வழி யானும் றகர மாகும். *

(எ-ன்) இதுவுமது. (ப-ரை) நெல்லுஞ்செல்லுங்கொல்லுஞ்சொல்லும் - நென்முதலிய நான்குசொற்களி னீற்றுலகரமெய்யானது, அல்வழியானும் - அல்வழிக்கண்ணும், றகரமாகும் - பொதுவிதியானுறழாது வேற்றுமைபோல றகர மெய்யாகத் திரியும், எ-று. (பொ-ரை) இந்நான்குசொல்லும் வல்லினம்வரிற் பொதுவிதியானுறழாது அல்வழிக்கண்ணும் வேற்றுமைபோல றகரமாய்த் திரிந்துமுடியும். எ-று ❀ [உ-ம்] நெற்-செற்-கொற்-சொற்-கடிது சிறிது தீது-பெரிது- எனவரும். செல்லென்பது -மேகம். கொல்லென்பது - சூருயிர்குடித்த வென்றாற்போலக் கொல்லலென்னு முயர்திணைப் பொருளை யுணர்த்தி நின்றதோர் அஃறிணைச்சொல். (௨௯)

(௨௱௬௩) இல்லெ னின்மைச் சொற்கை யடைய - வன்மை விகற்பமு மாகா ரத்தொடு - வன்மை யாகலு மியல்புமாகும். *

(எ-ன்) இல்லென்னும் பண்புச்சொற்கு ல ள வேற்றுமையிற் றடவுமல்வழி யவற்றோ டுறழ்வுமென வெய்துய விலக்கிப் பிறிதுவிதிவகுத்தலும் அவற்றின்முன் வரும் வல்லினத்திற்கு அல்வழி இ ஐ முன்னராயி னென்னுஞ் சூத்திரத்தானும் இயல்பினும் விதியினு மென்னுஞ் சூத்திரத்தானு மெய்திய திகந்து படாமற் காத்தலு நுதலிற்று. (ப-ரை) இன்மை - இன்மைப் பண்பை யுணர்த்துகின்ற, இல்லென்சொற்கு - இல்லென்கிறசொல்லுக்கு, ஐ - ஐகாரச்சாரியையானது, அடைய - பொருந்த, வன்மை - அவ்விடத்துவருகிறவல்லினம், விகற்பமும் - விகற்பித்தலும், ஆகாரத்தொடு - ஆகாரச்சாரியை பொருந்த, வன்மையாகலும் அவ்விடத்துவருகிறவல்லினமிகுதலும், இயல்பும் - இவ்விருவிதியும் பெறாதியல்பாதலும், ஆகும் - பொருந்தும், எ-று. (பொ-ரை) இல்விடத்தை யுணர்த்தாது இன்மைப்பண்பை யுணர்த்திநிற்கும் இல்லென்னுஞ்சொற்கு ஐகாரச்சாரியைபொருந்த அவ்வழிவரும்வல்லினம் விகற்பித்தலும் ஆகாரச்சாரியைபொருந்த அவ்வழிவரும் வல்லினமிகுதலும் இவ்விருவிதியும்பெறா தியல்பாதலும் பொருந்தும் எ-று. ❀ சாரியைப் பேற்றிற்கு, வருமொழி வரையாமையின் நாற்கணமுங்கொள்க. [உ-ம்] இல்லைப்பொருள் - இல்லைபொருள் - இல்லாப்பொருள் - இல்பொருள் - ஞானம் - வன்மை - அணி - எனவரும். இல்லென்னும் பண்படிநின்று வருமொழி

யோடு புணர்வழிவருஞ் சாரியையாதலின் இவ்விருசாரியைதோ ன்றியவழியும் இல்பொருளென்னு மியல்புப் புணர்ச்சிபோற் பண்புத் தொகையேயாமென்க. இது - மெய்பீற்றுப் புணரிய லாதலானும் லகரவீற்றிற்குப் பொதுவிதிகூறிச் சிறப்புவிதிகூ றும்வழி யின்மைப்பொருளைத்தரும் இல்லென்னுஞ்சொற்கெண விதந்தமையானும் விகுதியடைதல் பதவியலுளன்றி யீண்டுக்கூ றவேண்டாமையானும் ஆகாரத்தொடு வன்மையாகலுமென வவ் வினைப்பேற்றோடு ஆகாரத்தையு முடனிகழ்த்திக் கூறுதலானு மி யல்புமாகுமென்றமையானும் மறைப்பொருளை இல்லென்னும் பகுதியன்றி யாகாரந்தரவேண்டாமையானுந்தருமேல் இன்மை க்கு மறையாய உண்மைப்பொருளைத் தரவேண்டு மாதலானும் ஆகாரமறைவிகுதி தெரிநிலைக்கன்றிக் குறிப்பிற்கு வாராமையா னு மீண்டுப்பெறும் ஐகார ஆகாரங்கள் சாரியையேயன்றிக் குறி ப்புமுற்றுவிகுதியும் எச்சத்தின்கண்வந்த மறைவிகுதியுமல்லவெ ன்க இலலைபொருள்- இல்லைப்பொருள்- என்பன இங்ஙனங்கூ றியவாறே பண்புத்தொகையாகவும் ஐகாரவீற்றுக் குறிப்புமுற் றுப் பயனிலையோடுமுடிந்த தொகாநிலையாகவுங் கொள்ளப்படு மாதலிற் றம்முள்வேற்றுமை யாதோவெனிற் றொகைநிலை யொ ருமொழிபோ[ல] நடத்தலுந் தொகாநிலை விட்டிசைத்து நடத்த லுந் தம்முள்வேற்றுமையென்க. இல்லாப்பொருளென்பது இ ங்ஙனங்கூறியவாறே பண்புத்தொகையாகவு மில்லாத வென்னும் பெயரெச்சக் குறிப்பின திறுதிகெட்டுப் பயனிலையோடு முடிந் த தொகாநிலையாகவுங் கொள்ளப்படும். இவற்றிற்குந் தம்முள் வேற்றுமை யிதுவாமென்க. இவ்வாறே யாசிரியர் தொல்காப்பிய ரும், "இல்லென் கிளவி யின்மை செப்பின் - வல்லெழுத்து மி குதலு மையிடைவருதலு - மியற்கை யாதலு மாகாரம் வருத லுங் - கொளத்தகு மரபி னுகிட னுடைத்தே,, என்றார். (௫௰)

(௨௱௫௪) புள்ளும் வள்ளுந் தொழிற்பெயரு மானும். *

(எ-ன்) ல ள வேற்றுமையிற் றடவ்மென்னுஞ் சூத்திரத்தா னெய்தியதன்மேற் சிறப்புவிதியுணர்- ற்று (ப-ரை) புள்ளும்வள் ளும். இவ்விருசொற்களும், தொழிற்பெயருமானும் - யகரமல் லாதமெய்கள்வந்தாற் பொதுவிதியான் முடிதலல்லாமலுந் தொ ழிற்பெயர்போல உகரச்சாரியையும் பெற்றுப்புணரும், எ-று. (பொ-ரை) இவ்விருசொற்களு மிருவழியும் யவ்வன்மெய்வரிற் பொதுவிதியான் முடிதலேயன்றித் தொழிற்பெயர்போல உகர ச்சாரியை பெற்றும்புணரும், எ-று. ❁ [உ-ம்] புள்ளுக்கடிது வள்ளுக்கடிது- நன்று-வலிது- (எம்) கடுமை- நன்மை- வன்மை (எ-ம்) வரும். (௫௧)

(உ௱கூரு) சுட்டு வகரமூ வினமுற முறையே- யாய்தமு மெ
ன்மையு மியல்புமாகும். *

(எ-ன்) வகரவீற்றுச் சுட்டுப்பெயர் மூவினத்தோடும் புண
ருமா றுணர்-ற்று. (ப ரை) சுட்டுவகரம்- அவ் இவ் உவ் என்கிற
அஃறிணைப்பன்மைச் சுட்டுப்பெயர்களீற்று வகரமெய், மூவின
ம்- வல்லினமும் மெல்லினமும் இடையினமும், உற-வர, முறை
-முறையாக, ஆய்தமும் - தனிநிலையும், மென்மையும் - மெல்லின
மும், இயல்பும்- இயல்பும், ஆகும் - ஆகும், எ-று. (பொ-ரை)
அவ் இவ் உவ் என்னு மஃறிணைப்பன்மைச் சுட்டுப்பெயரீற்று
வகரம் வல்லினமு மெல்லினமு மிடையினமும் வர முறையா
னே ஆய்தமும் வருமெல்லினமு மியல்புமாம், எ-று. [உ-ம்]
அஃகடிய- இஃகடிய- உஃகடிய- (எ-ம்) அஞ்ஞானம் இஞ்ஞான
ம்-உஞ்ஞானம்- (எ-ம்) அவ்பாவை- இவ்பாவை- உவ்பாவை- (எ-ம்)
வரும். வேற்றுமைப்புணர்ச்சிக்கு அற்றுச்சாரியை பெறுமென
மேல் விதத்தலி னிவ்விதி யல்வழிக் கென்க. (கூஉ)

(உ௱கூசா) தெவ்வென் மொழியே தொழிற்பெய ரற்றே-மவ்
வரின் வஃகான் மவ்வு மாகும். *

(எ-ன்) தெவ்வென்னுஞ் சொல் யவ்வன்மெய்யோடு புணரு
மாறுணர் - ற்று. (ப-ரை) தெவ்வென்மொழி - தெவ்வென்கிறப
கையையுணர்த்தும்பெயரானது,தொழிற்பெயரற்று-யகரமல்லா
தமெய்களோடு புணருமிடத்துத் தொழிற்பெயர்போல உகரச்
சாரியைபெற்றுமுடியும், ம- மகரமெய்யானது, வரின்- வந்தால்,
வஃகான்- வகரமெய்யானது, மவ்வுமாகும் உகரச்சாரியைபெறுத
லல்லாமலும் ஒரோவிடத்து மகரமெய்யாகவுந் திரியும், எ-று.
(பொ-ரை) தெவ்வென்னுஞ்சொல் யவ்வன்மெய்யொடுபுணரு
மிடத்துத் தொழிற்பெயர்போல உகரச்சாரியைபெற்றுமுடியும்
அவற்றுண் மகரம்வருங்கால் உகரச்சாரியை பெறுதலேயன்றி ஒ
ரோவழியீற்று வகர மகரமாகத் திரியவும்பெறும். எ-று. ❁ [உ-
-ம்] தெவ்வுக்கடிது மாண்டது-வந்தது- (எ-ம்) தெவ்வுக்கடுமை-
மாட்சி-வன்மை- (எ-ம்) தெவ்வுமன்னர்-தெம்மன்னர் (எ-ம்) தெ
வ்வுமுனை-தெம்முனை (எ-ம்) இருவழியினு முறையேகாண்க. இ
ப்பகையென்னும் பண்புப்பெயர் பண்பியாய்ப் பகைப்பொரு
ளையுணர்த்தி யாகுபெயராய்நின்ற வழியுமிவைபெகாட்டென்க.()

(உ௱கூஎ) ணலமுன் றனவும் ளளமுன் டணவு- மாகுந் தந
க்க ளாயுங் கால‍ே. *

(எ-ன்) முன்னர்ப் புணர்த்திய வருமொழிக்குமுதலாய மெ
ய்களுட் டிரிதற்பாலன இவையென் விதந்துணர் - ற்று. (ப-ரை)
ணலமுன் - ணகர லகரமெய்களின்முன், (த) - வருகிறதகரம், ந

(வ்வும்)- றகரமும், (த)-வருகிற நகரம், ண (வ்வும்)- ணகரமும், ண ளமுன்- ணகர ளகர மெய்களின்முன், த- வருகிறதகரம், ட (வ்வும்)- டகரமும், ந- வருகிறநகரம், ணவ்வும் - ணகரமும், ஆகும்- ஆகும், ஆயுங்கால்- ஆராயுமிடத்து, எ-று. (பொ-ரை) னகரலகரங்கண் முன்னர்வருந் தகரம் றகரமாம் அவற்றின் முன்னர் வரும்நகரம் னகரமாம் ணகர ளகரங்களின்முன்னர்வருந் தகரம் டகரமாம் அவற்றின்முன்னர்வரும் நகரம் ணகரமா மாராயுங்காலத்து. எ-று, ❁ [உ-ம்] பொன்றீது-கற்றீது- பொன்னன்று- கன்னன்று-மண்டீது- முட்டீது-மண்ணன்று- முண்ணன்று- என வரும் தீமை-நன்மை-என வருவித்துவேற்றுமைக்கண்ணுந்திரியுமாறுதாண்க. ஆயுங்காலே யென்றதனான் அல்வழிவேற்றுமைப்பொருளுக்கத்தா னன்றி மயக்கவிதியின்மையின் இங்ஙனம்புணருமுதலீரிண்டனு ளொன்றேனும் இரண்டுமேனும் விகாரப்பட்டு மயங்குதற் குரியனவாகிநின்று புண்ருமெனபதூஉ மயக்கவிதி யுள்ளனவற்றிற்குவரும் விகாரமல்வழிவேற்றுமைப் பொருளுக்கத்தான் வருமென்பதூஉம்பெற்றாம். (௯௪)

(௨௱௯௮) உருபின் முடிபவை யொக்குமப் பொருளினும். ❋

(எ-ன்) உயிரீற்றுப்புணரியற்கண்ணும் இவ்வியற்கண்ணு முடிந்த வேற்றுமைப்பொருட் புணர்ச்சிக் கெய்தியதன்மேற் சிறப்புவிதியுணர்த்து. (ப-ரை) உருபின்முடிபவை - மேலுருபு புணர்ச்சிக்கண் முடியுமுடிபுகள், அப்பொருளினும்- அப்பொருட் புணர்ச்சிக்கண்ணும், ஒக்கும்- ஒத்துமுடியும், எ-று. (பொ-ரை) மேலுருபு புணர்ச்சிக்கண் முடியுமுடிபுகள் அப்பொருட்புணர்ச்சிக்கண்ணு மொக்கும். எ-று. ❁ [உ-ம்] எல்லாவற்றதும்- எல்லாவற்றுகம்காலும்- என அஃறிணைக்கண் அற்றுமுருபின்மேலும் மும்பெற்றாற்போலப் பொருட் புணர்ச்சிக்கும்பெற்றன. எல்லா நமதுப் எல்லாநங்கையும்- என உயர்திணைக்கண் நம்முமுருபின் மேலும்மும் பெற்றாற்போலப் பொருட் புணர்ச்சிக்கும் பெற்றன. எல்லார்தமதும்- எல்லார்தங்கையும்- எல்லீர்நும்மதும்- எல்லீர் நுங்கையும்- தனது-தன்கை- தமது தங்கை- நமது நங்கை-எனது- என்கை- எமது-எங்கை-நினது-நின்கை நுமது நுங்கை- என உருபு புணர்ச்சிபோற் பொருட்புணர்ச்சியு முடிந்தவாறு காண்க. பிறவுமன்ன. (௯௫)

(௨௱௯௯) இடையுரி வடசொலி னியம்பிய கொளாதவும்- போலியு மரூஉம் பொருந்தியவாற்றிற்- கியையப் புணர்த்த லியாவர்க்கு நெறியே. ❋

(எ-ன்). இப்புணரியல்கட்கு ஆவதோர்புறனடை யுணர்-ற்று (ப-ரை) இடை (ச்சொல்லின்) - இடைச்சொற்களுள்ளும், உரி

(சீசொலின்) - உரிச்சொற்களுள்ளும், வடசொலின் - வடசொற்களுள்ளும், இயம்பிய - உயிரீறு மொற்றீறுமான புணரியலிலே தோன்றல் திரிதல் கெடுதல் இயல்பாதல் எனச்சொல்லிய புணர்ச்சி யிலக்கணங்களுள், கொளாதவும் - பொருந்தாது வேறுபட்டு வருவனவும், போலியும்-இலக்கணப்போலிமொழிகளும், மரூஉம் - மரூஉமொழிகளும், பொருந்திய- இருவகைவழக்கினுநடக்கின்ற, ஆற்றிற்கு- முறைமைக்கு, இயைய- பொருந்துமாறு, புணர்த்தல்- புணர்க்கை, இயாவர்க்கும்- அறிவுடையோ ரெல்லார்க்கும், நெறி - முறை, எ - று. (பொ-ரை) இடைச்சொல்லினும் உரிச்சொல்லினும் வடசொல்லினும் உயிரீறு மொற்றீறுமான புணரியலில் தோன்றல் திரிதல் கெடுதல் இயல்பென வோதியபுணர்ச்சி யிலக்கணங்கள் பொருந்தாது வேறுபட்டுவருவனவும் இலக்கணப் போலிமொழிகளு மரூஉமொழிகளு மிருவகைவழக்கினு நடக்கு முறைமை யறிந்து அதற்குப் பொருந்துமாறு புணர்க்கை அறிவுடையோ ரெல்லார்க்கு முறைமை. எ-று. ❁ [உ-ம்] ஆன்கன்று- வண்டின்கால்- என வேற்றுமைப்புணர்ச்சிக்கட் சாரியை யிடைச்சொற் றிரியா தியல்பாயின. மழகளிறு- தடந்தோள்- என அகரவீற்று உரிச்சொன்முன் வல்லெழுத்துமிகா தியல்பாயு மெல்லெழுத்து மிகுந்தும் வந்தன. அளிகுலம்- தனதடம்- என இயல்பீறும் விதியீறுமான உயிரீற்று வடசொன்முன் வல்லெழுத்துமிகா தியல்பாயின. இன்முன்- முன்றில்- பொது இல் - பொதியில் - என இலக்கணப் போலிமொழிகளும், அருமருந்தன்னபிள்ளை- அருமந்தபிள்ளை- குணக்குள்ளது- குணாது- தெற்குள்ளது- தெனாது- வடக்குள்ளது- வடாது - சோழநாடு - சோணாடு - பாண்டியநாடு - பாண்டிநாடு - மலையமாநாடு - மலாடு- தஞ்சாவூர் - தஞ்சை- ஆற்றூர் - ஆறை - ஆதன்றந்தை- ஆந்தை- பூதன்றந்தை- பூந்தை - வடுகன்றந்தை - வடுகந்தை - என மரூஉமொழிகளும் நிலைமொழி வருமொழிகளு ளேற்குஞ் செய்கையறிந்துமுடிக்க. பிறவுமன்ன. (௫௬)

மெய்யீற்றுப்புணரியல்

முற்றிற்று.

ஐந்தாவது.

உருபுபுணரியல்.

(உ௱சய.) ஒருவ னொருத்தி பலவொன்று பலவென - வருபெய ரைந்தொடு பெயர்முத் லிருநான் - குருபு முறழ்தர நாற்பதா முருபே. *

(எ-ன்.) வேற்றுமையுருபுக ணிலைமொழி யோடும் வருமொழியோடும் புணருமா றிவ்வியலாற் கூறுவான்றொடங்கி அவ்வெட்டுருபுகளுஞ்சாரு மிடவகையான் இத்துணைத்தென்ப துணர்-ற்று. (ப-ரை) ஒருவன்- ஒருவனும், ஒருத்தி- ஒருத்தியும், பலர்- பலரும், ஒன்று- ஒன்றும், பல- பலவும், என- என்றுகருத, வரு - வருகிற, பெயரைந்தொடு- ஐந்துபெயரோடும், பெயர்முதல்- எழுவாய்வேற்றுமையான பெயர்முதல் விளியீறாகநின்ற, இருநான் குருபும்- எட்டுருபுகளையும், உறழ்தர- பெருக்க, உருபு - வேற்றுமையுருபுகளானவை, நாற்பதாம் - நாற்பதாகும், எ-று. (பொ-ரை) இப்பாற்பொருளின வென்றுகருதவரும் ஐந்துபெயருடனே எழுவாய்வேற்றுமையான பெயர்முதலாக விளியீறாகநின்ற வெட்டுருபினையு முறழவேற்றுமையுருபுக ணாற்பதாம். எ-று. ❀ சொன் மேல்வைத்தோதின் இப்பெயர்களோ டன்றிப் பொதுப்பெயர்களோடுருபு வாராவெனப் பொருள்படுமாதலின் எல்லாப்பெயரு மடங்குதற்குப் பொருண் மேல்வைத்து என வருபெய ரென்றார். [வ-று.] நம்பி- சாத்தி- மக்கள்- மரம்- மரங்கள்- என்னுமிவற்றுள், நம்பி- நம்பியை-நம்பியால்-நம்பிக்கு- நம்பியின்- நம்பியது-நம்பிகண்-நம்பீ- என ஒருவனென்னும்வாய்பாட் டுயர்திணை யாண்பாற்பெயரோ டெட்டுருபுகளும்வந்தன. ஏனைநான்குபெயரோடு மிவ்வாறே யொட்டுக. (க)

(உ௱சக) பெயர்வழித் தம்பொரு டரவரு முருபே. *

(எ-ன்) வேற்றுமையுருபுகள் வருதற்குக்காரணமும் வருமிடமு முணர் - ற்று. (ப - ரை) உருபு-வேற்றுமையுருபுகளானவை, தம்பொருள்- தம்பொருளை, தர- கொடுக்க, பெயர்வழி - பெயர்க்குப்பின், வரும்- வரும், எ-று. (பொ-ரை) வேற்றுமை யுருபுகடம்பொருளைத்தரப் பெயர்க்குப்பின்வரும். எ-று. ❀ [வ-று.] நம்பிபெற்றான்- நம்பியைப்பெற்றான்-, நம்பியாற்பெற்றான் - எ

* ஆண்பாற்பெயர்முதலிய.

ணவரும். பிறவுமன்ன. தம்பொருட்ட வருவன எழுவாய்முதலி
ய வெட்டுருபும் வழிவருவன பெயர்முழுவதூஉ முருபாய வெ
ழுவாயொழிந்த வேழுருபுமெனக் கொள்க. (உ)

(உாசஉ) ஒற்றுயிர்முதலீற் றுருபுகள்புணர்ச்சியி- னொக்கு
மன்னப்பெயர் வேற்றுமைப்புணர்ப்பே. *

(எ-ன்) ஐம்முதலிய ஆறுருபும் நிலைமொழிவருமொழியோ
டு புணருமா றுணர் - ற்று. (ப-ரை) ஒற்றுயிர்முதலீற்று - நிலை
மொழியோடும் வருமொழியோடும் புணருகிற மெய்யுயிர்களை
முதலுமீறுமாகவுடைய, உருபுகள் - ஐம்முதலிய ஆறுருபுகளும்
இடைச்சொல்லாயினும், புணர்ச்சியின் - இயல்பொடு விகாரத்தி
யையும்புணர்ச்சிவகையால், மன்- பெரும்பாலும், ஒக்கும்- ஒக்கு
ம், வேற்றுமைப்புணர்ப்பு-போனவிரண்டியலுள்ளும்வேற்றுமை
ப்புணர்ச்சிக்கண், அப்பெயர்- இயல்பொடுவிகாரத்தியைந்தமெ
ய்யுயிர்முதலீற்றுப்பெயர்களை, எ-று (பொ-ரை) தொகாநிலைய
ய வேற்றுமைப்புணர்ச்சிக்கண் இடையேநின்று நிலைமொழியோ
டும் வருமொழியோடும் புணருமொற்றுயிர்களை முதலு மீறு
மாகவுடைய ஐம்முதலிய வேற்றுமை யுருபாறு மிடைச்சொல்
லேனும் இயல்பொடுவிகாரத் தியையும்புணர்ச்சி வகையாற் பெ
ரும்பாலுமொக்கும் போன விரண்டியலுள்ளும் வேற்றுமைப் பு
ணர்ச்சிக்கண் இயல்பொடுவிகாரத் தியைந்த வொற்றுயிர்முதலீற்
றுப் பெயர்களை . எ-று. ※ மன்னென்றமையாற் சிறுபான்மை
யொவ்வா வென்பதாம். [உ-ம்] நம்பிகண்வாழ்வு - என்புழி "ஆ
வி யரமுன் வன்மை மிகா," என்றும் "ண ன வல் லினம்வரட்ட
றவும் பிறவரி னியல்பு மாகும் வேற் றுமைக்கு," என்றுங் கூறிய
வாறே கண்ணுருபின் முதலுமீறு மியல்பாயின. உறிக்கட்டயிர்-
என்புழி "இயல்பினும் விதியினு நின்ற வுயிர்முன் க ச த ப மி
கும்," என்றும் "ண ன வல்லினம் வரட் டறவும்," என்றுங் கூறி
யவாறே கண்ணுருபின் முதலு மீறும்விகாரமாயின. பழிக்கஞ்சி
- என்புழி "இயல்பினும் விதியினு நின்ற வுயிர்முன் க ச த ப
மிகும்," என்றும் "முற்றுமற் றொரோவழி," என்றுங்கூறியவாறே
குவ்வுருபின் முதலு மீறும் விகாரமாயின. நம்பிக்குப்பிள்ளை-
என்புழி "ஆவி யரமுன் வன்மை மிகா," என்ற விதியொவ்வா து
குவ்வுருபின்முதல் வல்லொற்றுமிக்கது. பிறவுமன்ன. இவ்வுருபு,
சாத்திக்கு- கிளிக்கு - எனப் பொதுப்பெயரஃறிணைப் பெயர்க்க
ண்ணு மிகுதலிற் சிலவிகாரமா முயர்திணையென்னும் விதியன்று.
ஒற்றுயிர் முதலீற் றுருபுக ளென்றமையின் றாற்பதா முருபே
யெனத் தொகைகொடுத்துக் கொணர்ந்தவற்றுள் எழுவாயும் வி
ளியுமொழித்துத் தமக்கெனவுருபு முதலீறு முடைய ஐமுதலிய

ஆறுருபிற்கு மிவ்விதிகூறுகின்றா ரென்பதூஉம் இவ்வுருபுகளின் முதலீறுகட்கு மாட்டேற்றான் இவ்விதிகூறவே யுருபின் இருமருங்கும் புணருநிலைமொழியீறும் வருமொழிமுதலும் பம்பாருபாட்டிற்கு விதிபோன விரண்டியலுள்ளும் வேற்றுமைப் புணர்ச்சிக்கென விதித்தவற்று ளடங்குமாதலி னவையும் இம்மாட்டேற்றா னமைத்தாரல்ல ரென்பதூஉம் அங்ஙன மடங்குதற்கு மூன்றா மருபெண் ணென்னுஞ்சூத்திரமேகரியென்பதூஉம் தான்றாநான்முதல்குறுகு மென்றற்றொடக்கத் துருபோடுபுணருநிலைமொழிகளின் விகாரங்கள் தொகைநிலைக்கண்ணும் நாற்கணத்தின் முன்னும்வருதலின் அவ்விகாரமெழுத்துப் புணர்ச்சியான் வந்தனவல்ல வேற்றுமைப் பொருளேக்கத்தானே வந்தன வதனால், இவ்வியைலுட் கூறப்படுமென்பதூஉம் ஒக்குமன்னப்பெய ரொன்றமையின் வினையிறுதி வேற்றுமைப்புணர்ச்சிக்கு வாராமையின் அதனையொழித்துப் பெயரை யுவமித்தா ரென்பதூஉம் வேற்றுமைப்புணர்ப்பேயென்றமையின் வேற்றுமையுருபின் புணர்ச்சியாதலின் அதற்கு அல்வழிப்புணர்ச்சி யொவ்வாவென்பதூஉம் பெற்றாம். (௫)

(உ௱௪௫) பதமுன் விகுதியும் பதமு முருபும் - புணர்வழி யொன்றும் பலவுஞ் சாரியை- வருதலுந் தவிர்தலும் விகற்பமு மாகும். *

(எ-ன்) உருபுபுணர்ச்சிக் கெட்டியதன்மேற் சிறப்புவிதியாகச் சாரியைமேல் விதிப்பான்றொடங்கி யவைவருமா றிவ்வாறெனவுணர்த்தும்வழி யொப்பின் முடித்தலான் விகுதிப் புணர்ச்சிக்கும்பதப்புணர்ச்சிக்கு முடனுணர்- ற்று. (ப-ரை) பதமுன்- பதத்தின் முன், விகுதியும்- இறுதிநிலையாவது, பதமும் - பதமாவது. உருபும்- உருபாவது, புணர்வழி - புணருமிடத்து, சாரியையொன்றும் - ஒருசாரியையாயினும், (சாரியை) பலவும் - பலசாரியையாயினும், வருதலும்- வருதலும், தவிர்தலும் - வாராதொழிதலும், விகற்பமும்- இவ்விரண்டுமாகிய விகற்பமும், ஆகும் - ஆகும், எ-று. (பொ-ரை) பதத்தின்முன் விகுதியேனும் பதமேனும் உருபேனும் புணருமிடத்துச் சாரியையொன்றேனும் பலவேனும் வருதலும் வாராதொழிதலும் இவ்விரண்டுமாகிய விகற்பமுமாம். எ-று. ❁ புணர்ந்தவழி புணரும்வழியென்றுந்து - புணர்வழியெனப் பொதுமையிற் கூறவே இம்மூவகைப் புணர்ச்சியுட் சாரியை விதித்தனவற்றுள்ளும் விதிப்பனவற்றுள்ளும் மொழிந்தனவற்றுள்ளும் அவைவருமா றிவ்வாறென வுய்த்துணர்க வென்றாராயிற்று. [வ-று.] நடந்தனன்- (எ-ம்) நடந்தான்- (எ-ம்) நடந்தன- நடந்த- (எ-ம்) விகுதிப்புணர்ச்சியுட் சாரியைவேண்டியும்

வேண்டாதும் விகற்பித்தும்வந்தன. புளியமரம்- புளியங்காய்-உரினுக்கடித்து உரினுக்கமிலை- (எ-ம்) புளிக்கறி- (எ-ம்) நெல்லின்குப்பை -நெற்குப்பை - (எ-ம்) பதப்புணர்ச்சியுட் சாரியையவ்வாறாயின. அவற்றை- அவற்றினை - மரத்தை - மரத்தினை- (எ-ம்) தன்னை- என்னை- (எ-ம்) ஆனை- ஆவை- (எ-ம்) உருபுபுணர்ச்சியுட் சாரியை யவ்வாறாயின. பிறவுமன்ன. மாடத்துக்கு-மாடக்கு- என்றதற்றொடக்கத்தன சாரியைவேண்டியவழி யின்மையிற் செய்யுள்விகாரமா மென்க. (௪)

(உ௱௪௪) அன் ஆன் இன் அல் அற் றிற் றத் தம்- தம் நம் நும் எ அ உ ஐ கு ன- வின்னபிறவும் பொதுச்சாரியையே.*

(எ-ன்) மேற் சாரியையென்றார் அவை யிவையென்பதுணர்-த்-. (ப-ரை) அன்-ன ஆன்முதல் னகரமெய்யீறாகச் சொல்லப்பட்டபதினேழும், இன்னபிறவும் - இவைபோல்வனபிறவும், பொதுச்சாரியை - விகுதி பதம் உருபு என்கிறமூன்றுபுணர்சசிகளிலுந் தனிமொழிகளிலும் வருதலினாலே பொதுச்சாரியையாகும், எ-று. (பொ-ரை) அன்னும் ஆனும் இன்னும் அல்லும் அற்றும் இற்றும் அத்தும் அம்மும் தம்மும் நம்மும் நும்மும் எயும் அவ்வும் உவ்வும் ஐயும் குவ்வும் னவ்வும் இவைபோல்வன பிறவும் விகுதி பதம் உருபு என்னுமூன்றுபுணர்ச்சிக்கண்ணுந் தனிமொழிககண்ணும் வருதலிற் பொதுச்சாரியையென்னும் பெயரவாம். எ-று. ※ [வ-று.] ஒன்றன் கூட்டம்- ஒருபாற்கு - வண்டின்கால்- தொடையல்- பலவற்றை - பதிற்றுப்பத்து- மரத்திலை- மன்றம்- எல்லார்தம்மையும்- எல்லாநம்மையும் - எல்லீர்நும்மையும்- கலனே தூணி - நடந்தது - சாத்தனுக்கு - "சேழலட்ட பேழ்வாயேற்றை,,—"துறுகல் மறையினு முய்குவை போலாய்,,—ஆன் எனமுறையே காண்க. இன்னபிற வென்றதனானே, அவன்றனை- -எனவுழித் தன்னென்னுஞ்சாரியையும், அவன்றான்- அவர்தாம்- -என்புழித் தான் தாம், என்னுஞ் சாரியையும், புற்றுஞ்சோறு - -என்புழி ஞ்சாரியையும் இல்லாப்பொருளென்னும் பண்புத்தொகைக்கண், ஆகாரச்சாரியையும் வந்தன. இன்னும் வருவனவுங் காண்க. (௫)

(உ௱௪௫) எல்லா மென்ப திழிதிணை யாயி-னற்றோ டுருபின் மேலும் முற்றே- யன்றே னம்மிடை யடைந்தற் றாகும்.*

(எ-ன்) ஒருசார் நிலைமொழியோடு உருபுபுணர்தற்கு ஒற்றுயிர் முதலீற் றுருபுக ளென்னுஞ் சூத்திரத்தா னெய்தியதன்மேற் சிறப்புவிதி யுணர்-த்-று. (ப-ரை) எல்லாமென்பது - எல்லாமென்னும்பொதுப்பெயர், இழிதிணையாயின்- அஃறிணையில்வரு

ம்போது அதனொடு ஆறுருபுகளும்புணரின், (இடை) - இடையி
லே, அற்று- அற்றுச்சாரியையும், உருபின்மேல் - உருபின்மேல்,
உம்- முற்றும்மையும், உறும்- பெறும், அன்றேல்- உயர்திணையில்
வரும்போது, இடை- இடையிலே, நம்- நம்முச்சாரியை, அடைந்
து- அடைந்து, அற்று தம்- உருபின்மேல் முற்றும்மையும்பெறு
ம், எ-று. (பொ-ரை) எல்லாமென்னும்பொதுப்பெய ரஃறிணை
க்கண் ஆனகாலை யதனொடு ஆறுருபும்புணரின் இடையே அற்று
ச்சாரியையும் உருபின்மேல் முற்றும்மையும்பெறும் உயர்திணை
க்கண் ஆனகாலையிடையே நம்முச்சாரியையும் உருபின்மேன்மு
ற்றும்மையும்பெறும். எ-று. ❀ [உ-ம்] எல்லாவற்றையும் எல்லா
வற்றாலும்- (எ-ம்) எல்லாநம்மையும்- எல்லாநம்மாலும் - (எ-ம்)
வரும். இனி இரட்டுறமொழிதலென்னுமுத்தியான் எல்லாமெ
ன்ப திழிதிணையாய் (எ-ம்) இன்னதற்றேல் (எ-ம்) பிரித்து அஃறி
ணைக்கண்ணாகி இன்சாரியை அற்றுச்சாரியையோடெனப்பொரு
டந்து எல்லாவற்றினையும் எனவருதலுங்கொள்க. ஏனையவற்றோடு
மிவ்வாறே பொட்டுக. இச்சொற்கு இருதிணைக்கண்ணும் அற்றுச்
சாரியையும் நம்முச்சாரியையும் உருபு புணர்ச்சிக்கண் பதமு
ன்விகுதியுமென்னுஞ்சூத்திரத்திற் கூறியவாறே வேண்டியேவ
ருதலோடு வின்றியமையா முற்றும்மையோடெனிகழ்ச்சிப்
பொருளவா யற்றோடென்றும் அடைந் தற்றுமென்றுங் கூ
றினர். தாம் நாம் நீர் என்னுமூவிடப்பெயர் வேற்றுமைப்பு
ணர்ச்சிக்கண் வந்தமையானே தம் நம் நும் என விகாரப்பட்டுத்
தமக்கினமான மூவிடப்பெயர்களை முறையேசார்ந்து சிறப்புப்
பொருடாராமையின் ஒருபொருட் பன்மொழி யல்லவாய்வரு
தலின் இம்மூன்றுஞ் சாரியையிடைச்சொல் லெனப்படுமாதலிற்
றம்மென்பதைப் படர்க்கைப்பெயர்க்கும் நும்மென்பதை முன்
னிலைப்பெயர்க்கும் வருஞ்சூத்திரத் தமைத்தாற்போல நம்மென்
பதனை மீண்டுத் தன்மைப்பெயர்க் கமைத்தா லென்பதூஉம் தன்
மையாயினுந் திணைப்பொதுமையி னில்லாது, பாணரோம்-என்
றாற்போல எல்லாநம்மையுமென்ற துணையானே யுயர்திணைத்த
ன்மையை புணர்த்துமென்பதூஉம் பெற்றாம். (௯)

(உ௱௪௯) எல்லாரு மெல்லீரு மென்பவற் றும்மை-தள்ளி
நிரலே தம்நும் சாரப்- புல்லு முருபின் பின்ன ரும்மே. ✱

(எ-ன்) இதுவுமது. (ப-ரை) எல்லாருமெல்லீருமென்பவற்
று- ஆறுருபும்புணருமிடத்து எல்லாரும் எல்லீருமென்கிற இரு
பெயர்களினுடையவிறுதியினுள்ள, உம்மை - முற்றும்மைகளை, த
ள்ளி-தள்ளி, நிரல்-முறையாக, தம்- தம்முச்சாரியையும், நும்- நும்
முச்சாரியையும், சார-அவையிருந்த விடங்களிலேபொருந்த, உம்

-அவற்றினாலே தள்ளுண்ட முற்றும்மைகள், உருபின்பின்னர் - உருபுகளின்பின்னே, புல்லும் - வந்துபுணரும், எ-று. (பொ-ரை) எல்லாருமென்னு முயர்திணைப்படர்க்கைப் பெயரோடும் எல்லீருமென்னு முன்னிலைப்பொதுப்பெயரோடும் ஆறுருபும் புணருமிடத்து அவ்விருபெயரினிறுதிகளினின்ற முற்றும்மைகளைத்தள்ளி அந்நிலைக்களங்களிற் படர்க்கைப்பெயர்க்குத் தம்முச்சாரியையும் முன்னிலைப்பெயர்க்கு நும்முச்சாரியையும் பொருந்த அவற்றாற் றள்ளுண்ட முற்றும்மைகளுருபின் பின்னேவந்து பொருந்தும். எ-று. ❁ [உ-ம்] எல்லார்தம்மையும்-எல்லாரையும்- (எ-ம்) எல்லீர்நும்மையும்-எல்லீரையும்- (எ-ம்) விகற்பித்துவந்தன. ஏனையவற்றோடு மிவ்வாறேயொட்டுக. நந்தம்மை' நுந்தம்மை எனப் படர்க்கைக்குரிய தம்முச்சாரியை தன்மைமுன்னிலைகளின்வருதலோரிடம் பிறவிடந் தழுவலு முளவேயன்னும் வழுவமைதி யென்க. (எ)

(௨௱௪௭) தான் தாம் நாம் முதல் குறுகும் யான்யாம்- நீ நீர் என் எம் நின் நுமாம்பிற- குவ்வி னவ்வரு நான்கா றிரட்டல. *

(எ-ன்) இதுவுமது. (ப-ரை) தான்தாம்நாம்-தான்முதலியமூன்றுபெயர்களும், முதல்குறுகும் - உருபுகள்புணருமிடத்துநெடுமுதல்குறுகிமுறையே தன்னை தம்மை நம்மை எனவரும், யான்யாம் நீ நீர்- யான்முதலியநான்குபெயர்களும், என்எம் நின்நுமாம்- உருபுகள்புணருமிடத்துமுறையே என்னை எம்மை நின்னை - நும்மை- எனவரும், குவ்வின்- இவ்வேழுபெயரோடும் குவ்வுருபுபுணருமிடத்து, அவ்வரும்-நடுவே தனக்கு என அகரச்சாரியை வரும், நான்கு- குவ்வுருபின் அகரச்சாரியைவரினும், ஆறு - ஆருமுருபுகள்வரினும், இரட்டல- அவ்வேழுசொற்களிலு மிறுதியாகிய தனிக்குறின்முன் னொற்றுக்கள் இரட்டாவாம், எ-று. (பொ-ரை) இங்ஙனங்கூறிய இருதிணைப்பொதுவாய மூவிடப்பெயர்களேழோடு மாறுருபும் புணருமிடத்துத் தான் தாம் நாம் என்னு மூன்றுபெயரும் நெடின்முதல்குறுகி முறையே தன்னை தம்மை நம்மை எனவரும் யான் யாம் நீ நீர் என்னு நான்குபெயரும் முறையே என்னை எம்மை நின்னை நும்மை எனவரும். இவ்வேழுபெயரோடுங் குவ்வுருபுபுணருமிடத்து இடையே தனக்கு என அகரச்சாரியைவரும் குவ்வுருபின் அகரச்சாரியைவரினும் ஆறுருபுயிர்கள்வரினும் இவ்வேழுவிகாரமொழிகளினிறுதியவாய தனிக்குறின்முன் னொற்றுக்க ளிரட்டாவாம். எ-று. ❁ ஒழிந்தவுருபுகளோடு மிவ்வாறேயொட்டுக. பிறவென்ற மிகையானே, நீயென்பது- உன்னையென்றும், நீர் என்பது - உம்மையென்றும், வருதல்கொள்க. முன்னுமின்னுஞ் சாரியைப்பேறு கூறுவார்சாரியை

பெறுது விகாரப்படு மொழிகளை இச்சூத்திரத்தாற்றோன்ற இ
டைவைத்துக் கூறியது இப்பொதுப்பெயர்களை இங்ஙனம் தம் நம்
நும் எனக்கூறிய சாரியையிடைச்சொல்லு மாயினவென உய்த்
துணர்ந்து கொள்க. (௮)

(௨௱௪௮) ஆமா கோனவ் வணையவும் பெறுமே. *

(எ-ன்) இதுவுமது (ப-ரை) ஆ- ஆவென்கிற பசுவின்பெய
ரும், மா- மாவென்கிற விலங்கின்பொதுப்பெயரும், கோ - கோ
வென்கிற இறைவனை யுணர்த்திநிற்கும்பெயரும், னவ்வணையவும்-
உருபுகள்புணருமிடத்து னகரச்சாரியை பொருந்தவும், பெறும்
-பெறும், எ-று. (பொ-ரை) ஆவென்னும் பெயரும் மாவென்
னும் விலங்கின் பொதுப்பெயரும் கோவென்னு மிறைவனையு
ணர்த்திநிற்கும்பெயரும் உருபுகள்புணருமிடத்து னகரச்சாரி
யைபொருந்தவும்பெறும். எ-று ❁ [உ-ம்] ஆனை-ஆவை-மானை
-மாவை-கோனை கோவை- எனவிகற்பித்துவருதல்காண்க. பிறவ
ற்றோடு மிவ்வாறேயொட்டுக. எதிரதுதழீஇயவெச்சவும்மையா
லே, ஒவ்வுருபிற்கு னகரச்சாரியை யொன்றுமே யமையாது,
ஆனுக்கு-மானுக்கு-கோனுக்கு- என உகரச்சாரியையுடன்பெறு
தலும், ஆவுக்கு-மாவுக்கு-கோவுக்கு- என உகரச்சாரியையொன்று
மேபெறுதலும், ஆவினுக்கு-மாவினுக்கு-கோவினுக்கு-என இ
ன்சாரியையும் உகரச்சாரியையு முடன்பெறுதலும், ஆவினை -
மாவினை-கோவினை- என இன்னெனவருஉம்வேற்றுமையுருபொ
டிந்தவற்றிற்கு இன்சாரியைபெறுதலுங் கொள்க. இனி இரட்டு
றமொழிதலான் ஆமாவென வொருசொல்லாய்க் காட்டாவினையு
ணர்த்திநின்று இவ்விதிகள்பெறுதலும் அணையவுமென்றொழியா
து பெறுமேயென்றமையானே ஆன்-மான்- கோன்- ஆமான்-
என னகரச்சாரியை தனிமொழிக்கண்ணும் வருதலுங்கொள்க. ஆ
வென்பதனோடு கோவென்பதனைச் சாரவையாது - மாவென்பத
னைச் சாரவைத்தமையானே கோவென்பது இறைவனையுணர்
த்தியதென்பதூஉம் மாவென்பது விலங்குமா வென்பதூஉம்
பெற்றாம். (௯)

(௨௱௪௯) ஒன்றுமுதலெட் டீறாமெண்ணூர்- பத்தின்முன்னான்
வரிற் பவ்வொற்றொழியமே- லெல்லாமோய் மொன்பதுமிற்றே

(எ-ன்) இதுவுமது. (ப-ரை) ஒன்றுமுதல்-ஒன்றுமுதல், எட்
டீறும்-எட்டீறாகிய, எண்-எண்களோடு, ஊர்- புணர்ந்த, பத்தின்
முன் - பத்தென்கிறவெண்முன் உருபுகள்புணருமிடத்து, ஆன் -
ஆன்சாரியை, வரின்-வருமாயின், பவ்வொற்று பகரமெய், ஒழிய-
நிற்க, மேல்- அதன்மேலேநின்ற, எல்லாம்-எல்லாவெழுத்தும், ஓய்ம்-
கெடும், ஒன்பதும்- ஒன்பதென்கிற வெண்முன்னும், இற்று-உரு

புகள்புணருமிடத்து ஆன்சாரியைவரின் அதன் பகரமெய்நீக்க
மேனின்ற வெல்லாவெழுத்துங் கெடும், எ-று. (பொ-ளா) ஒ
ன்றுமுத லெட்டீறுமெண்களோடுபுணர்ந்த பத்தென்னுமெண
முன்னர் உருபுகள்புணருமிடத்து இடையே ஆன்சாரியைவரின்
அப்பத்தென்னுமெண்ணினது பகரவொற்றொன்றுமேநிற்க மே
னின்ற வெல்லாவெழுத்துங்கெடும் ஒன்பதென்னுமெண்முன்ன
ரு முருபுகள் புணருமிடத்து ஆன்சாரியைவரின் அதன்பகரவொ
ற்றுநிற்க மேனின்ற வெல்லாவெழுத்துங் கெடும். எ-று ❁ [உ-
ம்] ஒருபானை- ஒருபதை- ஒருபஃதை - இருபானை- இருபதை-
-இருபஃதை- (எ-ம்) ஒன்பானை- ஒன்பதை- ஒன்பஃதை- (எ-ம்)
விகற்பித்து வரும். பிறவற்றோடு மிவ்வாறே யொட்டுக. ஒருப
து - ஒருபஃது - என விகாரப்பட்டு வரும் பத்தென்பார் எண்
ணூர்பத்தென்றூர். வரினென்றமையான் வருதற்கு மிதுவேவி
தியென்பதூஉம் இவ்வாறுன்வருதலைப் பராமுகமாகக் கூறினமை
யைமயின் உகரச்சாரியை யின்சாரியைகளும் வேண்டுழிவருமென்
பதூஉங் கொள்க. (௰)

(உ௱௫௰) வவ்வீறு சுட்டிற் கற்றுறல் வழியே. *

(எ-ன்) இதுவுமது. (ப-ளா) வவ்விறுசுட்டிற்கு- வகரமெய்யீ
ற்று மூன்றுசுட்டுப் பெயர்களுக்கும், அற்றுறல் - உருபுகள்புண
ருமிடத்து அற்றுச்சாரியை பொருந்தல், வழி - முறைமையாம்,
எ-று. (பொ-ளா) அஃறிணைப்பன்மையவாய வகரவீற்று மூன்
றுசுட்டுப்பெயர்க்கும் உருபுகள்புணருமிடத்து அற்றுச்சாரியை
பொருந்தன் முறைமையாம். எ-று, ❁ [உ-ம்] அவற்றை இவற்
றை-உவற்றை- என அற்றுச்சாரியைவேண்டியே வருதல் காண்க.
வழியேயென்றமிகையானே, அவற்றினை- இவற்றினை உவற்றினை-
என இன்சாரியைவருதலுந் தனிக்குறின்முன்னொற் றுயிர்வரினி
ரட்டாமையுங்கொள்க பிறவற்றோடு மிவ்வாறே யொட்டுக. (௰௧)

(உ௱௫௧) சுட்டின்முன் னாய்த மன்வரிற் கெடுமே. *

(எ-ன்) இதுவுமது. (ப-ளா) சுட்டின்முன் - அஃது இஃது
உஃது என்கிற சுட்டுப்பெயர்களின் மொழிமுதற் சுட்டெழுத்தி
ன் முன்னின்ற, ஆய்தம் - ஆய்தமானது, அன்வரின் - அச்சுட்டுப்
பெயர்களோடு உருபுகள்புணருமிடத்து அன்சாரியைவரின், கெ
டும்- கெடும், எ-று. (பொ-ளா) அஃது இஃது உஃது என்வ
ருமூன்றுசுட்டுப் பெயர்களோடு உருபுகள் புணருமிடத்து இ
டையே அன்சாரியைவரின் மொழிமுதற் சுட்டெழுத்துக்கண்மூ
ன்றின் முன்னின்ற ஆய்தங் கெடும். எ-று. ❁ [உ-ம்] அதனை -
அஃதை- இதனை- இஃதை- உதனை- உஃதை- எனச் சாரியை விகற்பி

த்துவருதலும் வந்தவழி யாய்தங்கெடுதலுங் காண்க. அன்சாரியை வருதலொழுக்கின் ஆய்தங்கெட்டவழி அது இது உது என ஆய்தமில்லாச் சுட்டுப்பெயர்களாய்ப் பின்னர் அன்சாரியைபெறுதலின் அவற்றிற்கும் இதுவேவிதியெனக்கொள்க. [வ-று.] அதனை -அதை- இதனை-இதை- உதனை-உதை - எனவிகற்பித்து வருதல்காண்க. அன்வருதலைப் பராமுகமாகக்கூறினமையின் குவ்வுருபுபுணர்வழி அதற்கு என அன்சாரியை தனித்துவருதலேயன்றி அதனுக்கு என உகரச்சாரியை யுடன்வருதலுங் கொள்க. (௰௨)

(௨௱௫௨) அத்தி னகர மகரமுனை யில்லை *

(எ-ன்) அத்துச்சாரியைக்கு இஃது ஐவழி யென்னுஞ்சூத்திரத்தானெய்தியது விலக்கிப் பிறிதுவிதி வகுத்துணர் - ற்று. (ப-தொ) அத்தின் - அத்துச்சாரியையினது, அகரம் அகரவுயிரானது, அகரமுனை - இயல்பினும் விதியினுநின்ற அகரவுயிரீற்றின்முன்வரின், இல்லை - வகரவுடம்படுமெய் பெறாது கெடும், எ-று. (பொ-ரை) அத்துச்சாரியையின் அகரவுயிர் இயல்பினும் விதியினு நின்ற அகரவுயிரீற்றின் முன்வரின்வகரவுடம்படுமெய் பெறாது கெடும். எ-று. ❁ [உ-ம்] மகத்துக்கை - மரத்துக்குறை- - என இரண்டு அகரவீற்றின் முன்னுங்கெட்டது. (௰௩)

(௨௱௫௩) இதற்கிது சாரியை யெனினள வின்மையின் விகுதியும் பதமு முருபும் பகுத்திடை - நின்ற வெழுத்தும் பதமு மியற்கையு - மொன்ற வுணர்த்த லுரவோர் நெறியே. *

(எ-ன்) சாரியைக் காவதோர் புறனடை யுணர் - ற்று. (ப-தொ) இதற்கிதுசாரியையெனின் - விகுதிமுதலிய புணர்ச்சிக்கண் இதற்கு இது சாரியையென்று அளவுசெய்து விதித்தனவற்றுள்ளும் ஒழிந்தனவற்றுள்ளுந் தனித்தனி சொல்லப்புகின், அளவின்மையின் - அளவுபடாமையால், விகுதியும் - விகுதிப்புணர்ச்சியையும், பதமும் - பதப்புணர்ச்சியையும், உருபும் - உருபுபுணர்ச்சியையும், பகுத்து - கண்டவிடத்துப்பகுத்து, இடைநின்ற - நடுவேநின்ற, எழுத்தும் - னகாரம் அகரம் முதலிய வெழுத்துச்சாரியையினையும், பதமும் - அன் ஆன் முதலிய பதச்சாரியையினையும், இயற்கையும் - இவ்விரண்டுசாரியையுந் தோன்றாத இயல்பினையும், ஒன்றவுணர்த்தல் - தெரியவறிவித்தல், உரவோர் - பெரியோரது, நெறி - கட்டளையாம், எ-று. (பொ-ரை) விகுதிமுதலியபுணர்ச்சிக்கண் இதற்கு இதுசாரியையென்று வரையறுத்து விதித்தனவற்றுள்ளு மொழிந்தனவற்றுள்ளுந் தனித்தனி சொல்லப்புகின் வரையறைப்படாமையின் விகுதிப்புணர்ச்சியினையும் பதப்புணர்ச்சியினையும் உருபுபுணர்ச்சியினையுங் கண்டுழிப்பகுத்து இடையே நின்ற னகாரம் ஆகரம் முதலியவெழுத்துச்சாரியையினையும் அன்

ஆன் முதலிய பதச்சாரியையினையும் இவ்விரண்டு சாரியையுந் தோன்றா வியல்பினையுந் தெரிய வழிவித்தல் பெரியோரது நெறியாம் எ-று ❁ [உ-ம்] "ஆனமணி யியம்புங் கானத் தான," (எ-ம்) "ஆனநெய் தெளித்து நான நீவி," (எ-ம்) விதித்தவிபொருட் புணர்ச்சிக்கண் "உருபின் முடிபவை யொக்குமப் பொருளினும்." என்றமாட்டேற்றின் அமைந்த னகரச்சாரியை யன்றி அகரச்சாரியையு முடன் வந்தன. இனி விறியா தொழிந்தன வற்றின்கண் பாட்டின்பொருளெனக் குற்றியலுகரத் தின்சாரியையும், மரத்திலை- என மஃகான்புள்ளிக்கு அத்துச்சாரியையும் வந்தன, தன்கை- என்கை- எனச்சாரியையின்றி யியல்பாய் வந்தன. இவ்வாறே மூவகைப்புணர்ச்சியும் பகுத்துணர்ந்து கொள்க. எல்லாச்சாரியையும் இடைப்பதமேனும் எழுத்துச்சாரியை பதச்சாரியையெனப் பகுத்தல் வேறறிதற்கு இட்ட விலச்சினையாமென்க. (௰௪)

(உ௱௫௪) விகுதி பதஞ்சா ரியையுரு பனைத்தினு- முரைத்த விதியினோர்ந் தொப்பன கொளலே. ❋

(இ-ன்) இங்ஙனங்கூறிய நான்கின் புணர்ச்சிக்கு மாவதோர் புறனடைபுணர்- ற்று. (ப-ரை) விகுதி-விகுதியும், பதம்- பதமும், சாரியை-சாரியையும், உருபு-உருபுமாகிய, அனைத்தினும்- நான்கின்புணர்ச்சிக ளிடத்தும், உரைத்த- பொதுப்படச் சொல்லப்பட்ட, விதியின்-விதிகளுள், ஓர்ந்து- இவ்விதி இதற்குப்பொருந்தும் இவ்விதி இதற்குப்பொருந்தாது என உய்த்துணர்ந்து, ஒப்பன- எவ்விதி எதற்குப்பொருந்துமோ அவ்விதியை, கொளல் - அதற்குக்கொள்க. எ-று. (பொ-ரை) விகுதியே பதமே சாரியையே உருபே யென்னு நான்கின் புணர்ச்சிக்கண்ணும் விதிகள்பொதுப்படக் கூறப்பட்டவேனும் அவ்விதிகளுள் இவ்விதி இதற்குப்பொருந்தும் இவ்விதி இதற்குப்பொருந்தா தெனவுய்த்துணர்ந்து எவ்விதி எதற்குப்பொருந்துமோ அவ்விதி அதற்குக்கொள்க. எ-று. ❁ விகுதிப்புணர்ச்சியுள் "றவ்வொடுகர வும்மைநிகழ் பல்லவும்," எனப்பொதுப்பட விதித்தாரேனும் விதியுளதென்றுகருதி இவ்விகுதி வந்தழியெல்லாம் இவ்விருகாலமும் பொருந்துமென்று கொள்ளற்க. சென்று- என்புழி இறந்தகாலமும், சேறு- என்புழி எதிர்காலமும் பொருந்துமென்று கொள்க. பதப்புணர்ச்சியுள், "அல்வழி இ ஐம் முன்னராயி - னியல்பு மிகலும் விகற்பமு மாகும்.," எனப்பொதுப்பட விதித்தாரேனும் இப் விதியுளதென்றுகருதி. ஆடிதிங்கள்- என இயல்பாமென்றும், பருத்திக்குறிது- என மிகுமென்றுங் கொள்ளற்க. பருத்திகுறிது -என எழுவாய்க்கண் இயல்பாமெனவும், ஆடித்திங்கள்- எனப் ப

ண்புத்தொகைக்கண் மிகுமெனவுங்கொள்க. சாரியைப் புணர்ச்சியுள் "பதமுன் விகுதியும் பதமு முருபும் புணர்வழி யொன்றும் பலவுஞ் சாரியை - வருதலுந் தவிர்தலும் விகற்பமு மாகும்." எனப்பொதுப்பட விதித்தாரேனும் விதியுளதென்றுகருதி நாட்டினீங்கினான் - என இன்னென வருஉம் வேற்றுமை யுருபிற்கின்சாரியை வருமென்றும், நாட்டுக்கணிருந்தான் - எனக் கண்ணுருபிற் கின்சாரியை வாராதென்றுங்கொள்ளற்க. நாட்டின்கணிருந்தான் - எனக் கண்ணுருபிற்கின்சாரியை வருமென்றும், நாட்டினீங்கினனென இன்னுருபிற் கின்சாரியை வாராதென்றுங் கொள்க, உருபுபுணர்ச்சியுள் "ஒற்றுயிர் முதலீற் றுருபுகள் புணர்ச்சியி- னொக்குமன் னப்பெயர் வேற்றுமைப் புணர்ப்பே." எனப்பொதுப்படவிதித்தாரேனும் விதியுளதென்றுகருதி நம்பிகு - என உயிரீற்று உயர்திணைப்பெயர்முன்வந்த குவ்வுருபுமிகாவென்றும், நம்பிக்கண் - என மன்னென்றமையாற் கண்ணுருபு மிகுமென்றுங்கொள்ளற்க, நம்பிகண் - எனக் கண்ணுருபு மிகாவென்றும், நம்பிக்கு - எனக் குவ்வுருபு மன்னென்றமையான் மிகுமென்றுங்கொள்க. பிறவுமன்ன. சாரியைப்புணர்ச்சி யேனை மூவகைப்புணர்ச்சியினையுஞ்சார்ந்து இடையே தோன்றல்விகாரமாய்வந்துபுணர்தலின் விகுதிபதஞ்சாரியையுருபென வுருபிற்குமுற்கூறினார். இச்சூத்திரத்தற் கிவ்வாறுபொருள்கொள்ளாது இந்நால்வகைப் புணர்ச்சியுள் ஒன்றற்குச்சொன்னவிதி மற்றொன்றற்குங்கொள்கவெனப்பொருள்கொள்வாருமுளர். அப்பொருட் கமைந்தசொல் இச்சூத்திரத் தின்மையானும், "சாரியை சந்தி விகார மாதிமேற்பவை - முன்னிப் புணர்ப்ப முடியுமெப் பதங்களும்." என்றும், ஈறுபோதலென்னுஞ் சூத்திரத் தவ்விகாரம் விகுதிப்புணர்ச்சிக்கணன்றிப் பதப்புணர்ச்சிக்கண்ணும் வருமென்பது தோன்றப் "பண்பிற்கியல்பே." என்றும், புணரியல்விதி பெயர் வினை யிடையுரி நான்கிற்கும் பொருந்துமென்பது தோன்ற "மெய்யுயிர்முதலீ றாமிருபதங்களும்." என்றும் விதந்தோதாத சிறப்புவிதிகளுள் "உருபின் முடிபவை யொக்குமப் பொருளினும்." என்றும் "ஒற்றுயிர்முதலீற் றுருபுகள்புணர்ச்சியி- னொக்குமன் னப்பெயர் வேற்றுமைப் புணர்ப்பே." என்றுங்கூறியவாற்றான் அப்பொருளமைந்து கிடத்தலானும், அது பொருந்தாதென்க. (௧௫)

(௨௱௫௫) இயல்பின் விகாரமும் விகாரத் தியல்பு - முயர்திணை யிடத்து விரிந்துந் தொகலும் - விரவுப் பெயரின் விரிந்து நின்று - மன்னு பிறவு மாகுமை யுருபே. *

(எ-ன்.) வேற்றுமைப் புணர்ச்சிக் காவதோர்புறனடைபுணர்-த்து. (ப-ரை.) இயல்பின்விகாரமும் - பொதுவிதியேயாம் முடிந

லேயன்றி அப்படிவிதித்த இயல்பிலேவிகாரமாகியும், விகாரத்தியல்பும்- விகாரத்திலே யியல்பாகியும், உயர்திணையிடத்து-உயர்திணையினிடத்து, விரிந்தும்-வெளிப்பட்டும், தொக்கும்- மறைந்தும், விரவுப்பெயரின்- பொதுப்பெயரின்கண், விரிந்தும்- வெளிப்பட்டும், நின்றும்- மறைந்தும், அன்னபிறவும் - அவைபோல்வன பிறவேறுபாடுகளும், ஆகும்- ஆகிவரும், ஐயுருபு- இரண்டாம் வேற்றுமைப்புணர்ச்சி. எ-று. (பொ-ரை) வேற்றுமைப் புணர்ச்சிக்கு விதித்த பொதுவிதியோடு தானுமொருங்குமுடிதலே யன்றி அங்ஙனம்விதித்த இயல்பின்கண் விகாரமாயும் விகாரத்தின்கண இயல்பாயும் உயர்திணைக்கண் விரிந்துந் தொக்கும் விரவுப்பெயர்க்கண் விரிந்தும் விரிதலொழிந்தும் இவைபோல்வனபிற வேறுபாடாயுப்வரும் இரண்டாம்வேற்றுமைப்புணர்ச்சி. எ-று. ❀ உயிரோ ஒற்றே சாரியையே யென்றிவை தோன்றல் திரிதல் கெடுத லுறழ்ச்சி விகற்பங்களையெல்லா முள்ளடக்கி இயல்பின் விகாரமும் விகாரத்தியல்புமென்றும் எல்லாவேற்றுமையும் விரிந்துந் தொக்கும் வருதல்போலாது இவ்வேற்றுமை உயர்திணைப்பெயர்க்கண்ணும் விரவுப்பெயர்க்கண்ணும் விரிதலே தகுதியாய்த் தொகுதறகுதியாயும் வலிந்துகோடலாயும் வருமென்பது தோன்ற விரிந்துந் தொக்கும் விரிந்தும் விரிதனின்றும் என்றும் நெருநலளவும் வருத்தியபிணி யின்று நின்ற[illegible]பதுபோல வொழிதற்பொருடோன்ற நின்றென்றுங் கூறினர். மேலைச்சூத்திரத் தொப்பனகொளலே யென்றமையான் இவ்விதிகளை இரண்டாம் வேற்றுமைப்புணர்ச்சி வந்துழியெல்லாங்கூட்டாது வேற்றுமைப்பொதுப்புணர்ச்சியோடொருங்கொத்து முடிவன இவை இப்புறனடைச்சிறப்புவிதியான் முடிவன இவையென வுய்த்துணர்ந்து ஏற்பனவற்றோடு கூட்டுக. [வ-று.] "வழிபடு தெய்வ நிற்புறங் காப்ப" என இயல்பின் விகாரமாயிற்று. மண்கொணர்ந்தான்- என விகாரத்தியல்பாயிற்று. நம்பியைக்கொணர்ந்தான்- என உயர்திணைக்கண்விரிந்தது. ஆடூஉவறிசொல் - மகடூஉவறிசொல்- பல்லோரறியுஞ்சொல்- நான்முகற்றொழுது- என அதன்கட்டொக்கது. கொற்றனைக்கொணர்ந்தான் - என விரவுப்பெயர்க்கண் விரிந்தது. ஆண்பெற்றாள்- பெண்பெ[illegible]ள்- "தற்கொண்டான் வளர்த்தக்காள் வாழ்க்கைத் துணை"—"வழிபடு தெய்வ நிற்புறங் காப்ப"—என அதன்கட்டொக்கது. இவ்விரண்டிடத்துத் தொகையுட் சில தகுதியாயும் சில வலிந்துகோடலாயும் வருதல்காண்க. அன்னபிறவுமென்றமையானே, தற்கொண்டான் - ஏற்பணியாளாய்- என உறழப்படுவன திரிந்தேவருதலு மின்னு

ம்வருவனவுளவே லவையுங் கொள்க. இங்ஙன மெண்ணின்கணின்ற இறந்தது தழீஇய விழிவுசிறப்பும்மைக்களானே வேற்றுமைக்கெனவிதித்த பொதுவிதியோ டொருங்கொத்து, வரகுகட்டினான்- என இயல்பின்கண் இயல்பாயும், விளக்குறைத்தான் - பலாக்குறைத்தான்- கடுக்குறைத்தான்-என விகாரத்தின்கண் விகாரமாயும் வருதலே பெரும்பாலவென்க. இனி விரவுப்பெயர்க்கண் விரிந்துநின்றுமென்பதற்கு இவ்வாறன்றி எழுந்திருந் தென்பதற்கு இருந்தென்பதனை அசைநிலையாக்கி எழுந்தெனவொருபொருள் கோடல்போல நின்றென்பதனை அசைநிலையாக்கி விரிந்தெனவொருபொருள்கொள்ளின் வழக்கின்கண்ணும் செய்யுட்கண்ணுந்தொக்குவரும் இலக்கியங்கட் கிலக்கண மின்றாமென்க. (௰௯)

(௨௱௯௰) புள்ளியுமுயிரு மாயிறுசொன்முன் - றம்மினாகிய தொழின்மொழிவரினே- வல்லினம்விகற்பமு மியல்பு மாகும்.

(எ-ன்) இதுவுமது. (ப-ரை) புள்ளியு முயிரு மாயிறுசொன்முன்- மூன்றும்வேற்றுமைப் புணர்ச்சியுள் மெய்யும் உயிரும் இறுதியாகநின்ற சொற்களின்முன், தம்மினாகிய - கருத்தாவாகிய நிலைமொழிப் பொருள்களாலாகிய, தொழின்மொழி - தொழிற்சொல், வரின்- வந்தால், வல்லினம்- அவ்விடத்து வருகிற வல்லினம், விகற்பமும்- உறழ்ச்சியும், இயல்பும்- இயல்பும், ஆகும்- ஆகும், எ-று. (பொ-ரை) மூன்றும்வேற்றுமைப்புணர்ச்சியுள் ஒற்றுமுயிரு மிறுதியாய்நின்ற சொன்முன்னர்க் கருவிகருத்தாவுடனிகழ்வதன்பொருளென்பவற்றுட் கருத்தாவாகிய நிலைமொழிப் பொருட்டமாலாகிய தொழிற்சொல் வரின் அங்ஙனம்வரும் வல்லினம் வேற்றுமைப்பொதுமுடி பேலாது விகற்பமுமியல்புமாம். எ-று. ❁ இவ்விதியு மொப்பனகொள்க. [வ-று.] பேய்கோட்பட்டான்-பேய்க்கோட்பட்டான் சூர்கோட்பட்டான் சூர்க்கோட்பட்டான் - புலிகோட் பட்டான்- புலிக்கோட் பட்டான் - (எ-ம்) பேய்பிடிக்கப்பட்டான் - புலிகடிக்கப்பட்டான் - (எ-ம்) வரும். உம்மையாற் சுறாப்பாயப்பட்டான் - அராத்தீண்டப்பட்டான் - என வேற்றுமைப்பொதுவிதியான் மிக்குமுடிவனவே பெரும்பாலவென்க. இவற்றுட் டம்மினாகியதொழில் பட்டானென்பதாம். கோளென்பதுமுதலியவா யிடைப்பிறவருவன தந்தொழிலாம். இங்ஙனமாயினும் இவ்விரண்டனையு மொருசொல்லாக்கித் தம்மினாகியதொழின்மொழியென்றார். பட்டானென்புழி இதுபட்டானென்னும் பொருடோன்றக் கோளென்பதுமுதலியன அதனைவிசேடித்துநிற்கும் ஒற்றுமைநயங்கருதியென்க. வேற்றுமைநயங்கருதிற் கோட்பட்டானென்ப தொழிந்தன எழுவாய்ப்பயனிலையாகிய வினையெச்சமுற்றுவினை கொண்டதாம். எழுவாய்க்

கண்ணும் மூன்றாம்வேற்றுமைக்கண்ணுங் கருத்தாவுளவாதலிற் றந்தொழிலையே யீண்டுத் தம்மினாகிய தொழிலென்றானின், மெய்பிடித்ததென்னு மொழிவாய்க்கட் பெயரற்பிடித்ததென மூன்றாமுருபும் விரித்தற் கமையும். அங்ஙனம் விரித்தல்கூடாமையிற் றந்தொழிலுந் தம்மினாகிய தொழிலு மொழிவாய்க்கட் கருத்தாவு மூன்றாம்வேற்றுமைக்கட் கருத்தாவுந் தம்முள் வேறுபாடுடையவாம். அவ்வேறுபாடு அவ்விலக்கணங் கூறுழிக் காட்டுதும். (௰எ)

(உ௱௰எ) இதற்கிது முடிபென் றெஞ்சா தியாவும்-விதிப்பள வின்மையின் விதித்தவற் றியலான்- வகுத்துரை யாதவும் வகுத்தனர் கொளலே. *

(எ-ன்) இவ்வதிகாரத்திற் காவதோர் புறனடை யுணர்-ற்று. (ப - ரை) இதற்கிதுமுடிபென்று - இதற்கு இதுமுடிபென்று, யாவும் - இவ்வதிகாரத்துள் விதிக்கத் தகுவனவற்றையெல்லாம், எஞ்சாது-குறையாமல், விதிப்பு-தனித்தனி அளவுசெய்து விதிக்கப்புகின், அளவின்மையின்- அதற்கு ஓரளவில்லாமையால், விதித்தவற்று வகுத்துவிதித்தவற்றினுடைய, இயலான்- இலக்கணங்களை ஏதுவாகக்கொண்டு, வகுத்துரையாதவும்- வகுத்துவிதி உரையாதனவற்றையும், வகுத்தனர்கொளல்- கருதலளவையால் வகுத்துவிதியுரைத்துக்கொள்க. எ-று. (பொ - ரை.) இதற்கிதுமுடிபென்று இவ்வதிகாரத்துள் விதிக்கத் தகுவனவற்றையெல்லாந் தனித்தனி வரையறுத்து விதிக்கப்புகின் அதற்கோர் வரையறையின்மையின் வகுத்து விதித்தனவற்றின் இலக்கணங்களை ஏதுவாகக்கொண்டு வகுத்து விதியுரையாதனவற்றையுங் கருதலளவையான்வகுத்து விதியுரைத்துக்கொள்க. எ-று. ❁ [வ-று] எழுத்தியலுள் “மொழிமுதற்காரண மாமணுத் திரளொலி” எழுத்தென, உரைத்தமையானே “கட்புல னில்லாக் கடவுளைக் காட்டுஞ் - சட்டகம் போலச் செவிப்புல வொலியை- யுட்கொளற் கிடமுரு பாம்வடி வெழுத்தே” எனப்பிறர்கூறியவாறு இவ்வொலிவடிவைக் காட்டுதற்கோர் கருவியாக வரைந்துகொள்ளப்பட்டது வரிவடிவெழுத்தெனவும், பதவியலுள் “அன் ஆன் அள் ஆள்” என்னுஞ்சூத்திரத்துமுறையே அன் ஆன் விகுதி யாண்பாற்கென உரைத்தமையானே, பெருமாளென்னும்பதம் பெருமையையுடையானென்னும் பொருடோன்றநின்ற பெருமானென்னும் பதத்தினிறுதி ஆன்விகுதி ஆள்விகுதியா யொரோவிடங்களிற் றிரிந்து ஆண்பாலையேயுணர்த்தி நின்றதெனவும், உயிரீற்றுப்புணரியலுள் “இயல்பினும் விதியினுநின்றவுயிர்முன் க ச த ப மிகும்” என உரைத்தமையானே, “ணனவல்லினம்வரட்டறவும்” என்புழிடகரமும்வல்லினமாதலின்

பிருந்ததெனவும், மெய்யீற்றுப்புணரியலுள் "நந்தம் எம் நம்மீ ருமவ்வரு ஞநவே" என உரைத்தமையானே, அம்மென்னுஞ்சொல்லிறுதிமகரமும் குற்றொற்றாதலிற் றன்னொடுமயங்காத மெல்லினம்வரின் அதுவாய்த்திரிந்து அந்நலம் என அழகினது நலமென்னும்பொருட்டாய் வருமெனவும், உருபுபுணரியலுள் - "வவ்விறுசுட்டிற் கற்றுறல்வழியே" என உரைத்தமையானே அதுபோலும். வினவும், எவற்றை என அற்றுச்சாரியை பெறுமெனவும், இரண்டாம்வேற்றுமைக்கும் மூன்றாம்வேற்றுமைக்கும் புறனடை புணர்த்தமையானே ஏழாம்வேற்றுமையும் "மண்புகுந்தும் விண்பறந்து மாலுமயனுங் காணா வொருபொருள்" என வேற்றுமைப் பொதுவிதி யேலாது சிறுபான்மை வருமெனவுங் கொள்க இன்னும் இவ்வைந்தியலுள்ளும் வகுத்துரையாதனவற்றையெல்லாம் இடர்ப்படாது இதுவேநிலனாக வகுத்துரைத்துக் கொள்க. (௰௮)

உருபுபுணரியல்

முற்றிற்று.

முதலாவது எழுத்ததிகாரம் - முற்றிற்று.

(கட்டளைக்கலித்துறை.)

அடையெண்பெயர்முறைதோற்றம்வடிவளவாதியந்தம் *
இடைநிலைபோலியென்றீரைந்தெழுத்துமிருபதமும் *
படுபுணர்மூன்றினியல்பும்விகாரமுஞ்சாரியையும் *
உடனுணர்வாரையெழுத்தறிவாரென்பருத்தமரே. *



இரண்டாவது

சொல்லதிகாரம்.

சொல்லதிகாரமென்பது - சொல்லினததிகாரத்தை யுடைய தென அன்மொழித்தொகையாய்ப் படலத்திற்குக் காரணக்குறி யாயிற்று. சொலலென்றது - எழுத்தினானாக்கப்பட்டு இருதிணை ப்பொருட்டன்மையும் ஒருவ னுணர்தற்குக்கருவியா மோசை யாகிய பெயர் வினை இடை உரி என்னு நால்வகைச்சொல்லும் பிறவுமாம். அவை "இயற்சொற் றிரிசொல்" என்னுஞ்சூத்திரத் தாற் பிற்கூறுபவாகலின் ஈண் டெதிரதுபோற்றியாளப்பட்டது. அதிகாரம்- அதிகரித்தல். அதனை மேலை அதிகாரமுகத் துரைத்தா ங் குரைத்துக்கொள்க. எனவே சொல்லை நுதலிவரும் பல ஓத்தின துதொகுதி சொல்லதிகாரமென்றவாறாயிற்று. எழுத்தினாலாக்கப் படுதன் மேலை அதிகாரத்திற்போந்த பதவியலுட் காண்க. இரு திணைப்பொருண்முதலியன பின்வருஞ் சூத்திரங்களா னுணர்க. இனிப் பொருட்டன்மையாவது ஒருபொருட்குக் கேடுபிறந்தா லுந் தனக்குக்கேடின்றித் தானொன்றேயாய்ப் பலவலகைப்பட்ட பொருடோறு நிற்குமென்றுணர்க. *

முதலாவது

பெயரியல்.

(௨௱௫௰௮) முச்சக நிழற்று முழுமதி முக்குடை - அச்சுதன் அடிதொழு தறைகுவன் சொல்லே. *

(என்) கடவுள்வணக்கமும் அதிகாரமுமுணர் - ற்று. (ப-ரை) முச்சகம் - மூன்றுலகத்திற்கும், நிழற்றும் - நிழலைச்செய்கின்ற, முழுமதி - நிறைந்தமதிபோலும், முக்குடை - மூன்றுகுடையை யுடைய, அச்சுதன்-அழியாதகடவுளுடைய, அடி- அடிகளை, தொ

ழுது - வணங்கி, அறைகுவன் - சொல்லுவேன், சொல் - முன்னதி காரத்துட் சொல்லிய வெழுத்தினாலாகிய சொல்லிலக்கணத்தை. எ-று. (பொ-ரை) மூன்றுலகத்திற்கு நிழலைச்செய்து நிறைந்த மதிபோலும் மூன்று குடையையுடைய அழிபாதவன் அடிகளை வணங்கிச் சொல்லுவன் மேலை அதிகாரத்திற்கூறிய வெழுத்தினானாய சொல்லிலக்கணத்தை. எ-று. ❁ தோன்றி யழியு மாலையவென்பார் சகமென்றும் உலகமே யுருவமாயினான் உயிரின்புறுவதே தானின்புறுவதென்பார் அக்கடவுள் முடிமேல் நிழற்றுங் குடையை முச்சகத்திற்கு நிழற்றுமென்றும் நிறைந்ததண்ணளியை யுடையனென்பார் அதனை உவமைமுகத்தாற் குடைமேல் வைத்து முழுமதிமுக்குடையென்றும், சுதந்தரமின்றித் தோன்றி யழியு முயிரும் பிறவுமாகிய சகத்திற் கவ்வாறுதோன்றி யழியான் றலைவனாகவேண்டுமென்பார் அச்சுதனென்றும், நஞ்செயலன்றென்பார் அடிதொழுதறைகுவனென்றும், வரையறைப்படாத பெருமையை யுடையதென்பார் அவ்வாற்றமேருன்றச் சொல்லென்றுங் கூறினார். ஈண்டுக் காப்பதுகருதி அச்சுதனென்றது மேலை அதிகாரத்துப் படைப்பதுகருதி நான்முகனென்றது போலும். சொல்லென்பது ஆகுபெயர். ஏகாரம் ஈற்றசை. (௧)

(௨௱௫௯) ஒருமொழி தொடர்மொழி பொதுமொழி யென்று - இருதிணை யைம்பாற் பொருளையுந் தன்னையு - மூவகையிடத்தும் வழக்கொடு செய்யுளின் - வெளிப்படை குறிப்பின் விரிப்பது சொல்லே. *

(எ-ன்) மேற் சொல்லென்றதிஃதென்பதுணர்-த்று. (ப-ரை) ஒருமொழி - ஒருமொழியும், தொடர்மொழி - தொடர்மொழியும், பொதுமொழி - பொதுமொழியும், என்று - என மூன்றுபிரிவினதாகி, இருதிணை - இருதிணையாகிய, ஐம்பாற்பொருளையும் - ஐம்பாற்பொருளையும், தன்னையும் - அப்பொருளையன்றித் தன்னையும், மூவகையிடத்தும் - மூன்றிடத்திலும், வழக்கொடு - வழக்கினிடத்தும், செய்யுளின் - செய்யுளிடத்தும், வெளிப்படை - வெளிப்படையாலும், குறிப்பின் - குறிப்பினாலும், விரிப்பது - விளக்குவது, சொல் - சொல்லாகும், எ-று. (பொ-ரை) ஒருமொழியுந் தொடர்மொழியும் பொதுமொழியும் எனமூன்றுகூற்றினதாய் இருதிணையாகிய ஐம்பாற்பொருளினையும் அப்பொருளையன்றித்தன்னையும் மூன்றிடத்திலும் வழக்கின்கண்ணுஞ் செய்யுட்கண்ணும் வெளிப்படையானுங் குறிப்பினாலும் விளக்குவது சொல்லாம். எ-று. ❁ எனவே யெல்லாச்சொல்லும் பொருளும் ஒருமொழி தொடர்மொழி பொதுமொழி யென்னு மூன்றுயும் இருதிணை ஐம்பாலாயு மடங்குமென்பதூஉம் இருதிணைமுதலிய காரணத்தான்

உயர்திணைச்சொல் அஃறிணைச்சொல் ஆண்பாற்சொல் பெண்
பாற்சொல் பலர்பாற்சொல் ஒன்றறிசொல் பலவறிசொல் தன்
மைச்சொல் முன்னிலைச்சொல் படர்க்கைச்சொல் வழக்குச்
சொல் செய்யுட்சொல் வெளிப்படைச்சொல் குறிப்புச்சொல்
(எ-ம்) உயர்திணைப்பொருள் அஃறிணைப்பொருள் ஆண்பாற்
பொருள் பெண்பாற்பொருள் பலர்பாற்பொருள் ஒருபொரு
ள் பலபொருள் தன்மைப்பொருள் முன்னிலைப்பொருள் பட
ர்க்கைப்பொருள் வழக்குப்பொருள் செய்யுட்பொருள் வெளி
ப்படைப்பொருள் குறிப்புப்பொருள் (எ-ம்) வழங்கப்படுமெ
ன்பதூஉம் உயிர்க் கறிவு கருவியாய்நின்று தன்னையும் பொருளை
யு முணர்த்துமாறுபோல ஒருவற்குச் சொற் கருவியாய்நின்று
தன்னையும், உளபொருள் இல்பொருள் மெய்ப்பொருள் பொ
ய்ப்பொருள் சித்துப்பொருள் சடப்பொருள் நித்தியப்பொ
ருள் அநித்தியப்பொருள் உருவப்பொருள் அருவப்பொருள்
காட்சிப்பொருள் கருத்துப்பொருள் இயற்கைப்பொருள் செ
யற்கைப்பொருள் முதற்பொருள் சினைப்பொருள் இயங்கியற்
பொருள் நிலையியற்பொருள் எனப்பலவாற்றானும் பகுத்துக்
கூறப்படும் இருதிணை ஐம்பாற்பொருளையு முணர்த்துமென்ப
தூஉம் பெற்றாம். (௨)

(௨௭௩) ஒருமொழி யொருபொரு ளனவாந் தொடர்
மொழி - பலபொரு ளனபொது விருமையு மேற்பன. *

(எ-ன்) மேலைச் சூத்திரத்து நிறுத்தமுறையானே மூவகை
மொழிகளாமாறுணர்-ற்று. (ப-ரை) ஒருமொழி - ஒருமொழிக
ளாவன, ஒருபொருளனவாம் - பகாப்பதமாவது பகுபதமாவது
ஒன்றுநின்று தத்த மொருபொருளைத் தருவனவாம், தொடர்
மொழி-தொடர்மொழிகளாவன, பலபொருளன - அவ்விருவகைப்
பதங்களுந் தன்னொடும் பிறிதொடும் அல்வழி வேற்றுமைப்பொ
ருண்மைக்கத்தால் இரண்டுமுதலியவாகத் தொடர்ந்துநின்று இர
ண்டுமுதலிய பலபொருளைத் தருவனவாம், பொது (மொழி) -
பொதுமொழிகளாவன, இருமையுமேற்பன - ஒன்றாய்நின்று ஒ
ருபொருளைத்தந்தும் அதுவே தொடர்ந்துநின்று பலபொருளை
த்தந்தும் இவ்விரண்டற்கும் பொதுவாய் நிற்பனவாம். எ-று.
(பொ-ரை) ஒருமொழிகளாவன பகாப்பதமேனும் பகுபதமேனு
மொன்றுநின்று தத்த மொருபொருளைத்தருவனவாம் தொடர்
மொழிகளாவன அவ்விருவகைப்பதங்களுந் தன்னொடும் பிறிதொ
டும் அல்வழி வேற்றுமைப்பொருண்மைக்கத்தான் இரண்டுமுதலி
யவாகத் தொடர்ந்துநின்று இரண்டுமுதலிய பலபொருளைத்தரு
வனவாம் பொதுமொழிகளாவன வொன்றாய்நின்று ஒருபொரு

டந்தும் அதுவே தொடர்ந்துநின்று பலபொருடந்தும் இவ்வி
ரண்டற்கும் பொதுவாய் நிற்பனவாம். எ-று. [வ-று.] நிலம்-நி
லத்தன் நட- நடந்தான்- நில் மன்-தவ-நனி - என்றற்றொடக்கத்த
ன வொருமொழி. நிலம்வலிது-அஃதுகொல்-சாலப்பகை-நிலங்கடந்
தான் நிலத்தைக்கடந்தான்- நிலங்கடந்தநெடுமால்- என்றற்றொட
க்கத்தன தொடர்மொழி, எட்டு-கொட்டு-தாமரை-வேங்கை-எழுந்
திருந்தான்- வாராநின்றான்- உரைத்திட்டான்- என்றற்றொடக்கத்த
ன பொதுமொழி. இவையொருமொழிகளா யொருபொருடருவ
தன்றி, எள்ளைத்து-கொள்ளைத்து-தாவுகின்றமரை-வேகின்றகை-எ
ழுந்து பின்னிருந்தான் - வந்துநின்றான் - உரைத்துப்பின்னிட்
டான்- எனத் தொடர்மொழிகளாய்ப் பலபொருடருதலுங்காண்
க. மொழிதொடரா தியாங்கணுந் தனித்துநில்லாவேனும் இப்
பொருட்கு இச்சொல்லென இறைவனாலும் அறிவுடையோராலு
ம் படைக்கும் படைப்புக்காலத்துந் தொடர்மொழிக்கணின்ற
இரண்டுமுதலியசொற்களு ளொன்றுநின்று மற்றைய வெஞ்சிய
வழியுந் தனித்துநிற்றலின் ஒருமொழியென்றார். எஞ்சியவழித்
தனித்துநிற்றல் வருமாறு ஒருவனுழை யொருவன்வந்துழி வா
வென்ற வுலகியல் அவ்வழி வருதற்கு வினைமுதலாகிய நீயென்னு
ஞ்சொல லெஞ்சி வாவென்னுஞ்சொற் றனித்து ஒருமொழியாய்
நின்றது இத்தொடக்கத்தனவெல்லாங் கொள்க. சேனை-குழாம்
- என்றற்றொடக்கத்தன வொருமொழி பலபொருடந்த தென்னை
யெனின், ஈண்டுத் தொடர்மொழி பலபொருளனவென்றது பல
சொல்லிற் பலபொருளையன்றி இப்பொருளை அன்றென்க. இப்
பொருளைப் பலபொருளானியைந்த வொருபொருளென ஆசி
ரியர் அகத்தியனார் "பலவினியைந்தவு மொன்றெனப் படுமே
- யடிசில் புத்தகஞ் சேனை யமைந்த- கதவ மாலை கம்பல மனை
ய.,, எனக்கூறுமாறுகாண்க. இனியிவ்வொருமொழியைத் தனி
மொழியெனவும் தனிமொழியாவது சமயவாற்றலாற் பொருள்
விளக்குவதெனவும் அது பெயர்ச்சொன்முதலாக நான்குவகை
ப்படுமெனவுங்கூறித், தொடர்மொழியாவது இருமொழித்தொ
டரும் பன்மொழித்தொடருமென இருவகைப்படுமெனவும்
அவை தொடருங்காற் பயனிலைவகையானுந் தொகைநிலைவகையா
னும் எண்ணுநிலைவகையானுந் தொடருமெனவும் அவ்வாறன்றி
வடநூலார்கூறியவாறே அவாய்நிலையானும் அண்மையானுந் த
குதியானுந் தொடருமெனவும், அவற்றிற்குதாரண முறையே சா
த்தன்வந்தான்-யானைக்கோடு கிடீர்-ஆவைக்கொணா-ஆற்றங்கரைக்க
ணைந்துகனித குளவாகின்றன நீரானே - (எ-ம்) அறம்வேண்டி
யரசனுலகப்புரந்தான்- (எ-ம்) கூறுப. அவையெல்லாம் ஒருவகை

ப்பதத்துள்ளும் அல்வழிவேற்றுமைப் பொருள்களுள்ளு மட ங்குமா றுய்த்துணர்க. (௫)

(உ௱௬௧) மக்கடேவர் நரகருயர்திணை - மற்றுயி ருள்ளவு மில்லவு மஃறிணை.

(எ-ன்.) நிறுத்தமுறையானே இருதிணையாமாறுணர் - ற்று, (ப-ரை) மக்கள் - மக்களும், தேவர் தேவரும், நரகர் - நரகரும், உயர்திணை - உயர்திணையாகும், மற்றுயிருள்ளவும் - அவமொழிந்தவில ங்குமுதலாகிய வுயிருள்ளவையும், இல்லவும் - நிலம் நீர் முதலாகிய வுயிரில்லாதவையும், அஃறிணை - அஃறிணையாகும், எ-று. (பொ-ழி) மக்களுந் தேவரும் நரகரும் உயர்திணையாம், அவரையொ ழிந்தவிலங்குமுதலிய வுயிருள்ளனவும் நிலம் நீர் முதலிய வுயி ரில்லனவு மஃறிணையாம், எ-று. ❀ மக்கள் தேவர் நரகர் எனப் படுதலவ்வுடம்போடுயிருங்கூடி நின்றவழியாதலின் அவை பிரிந்தவழியும் வேறுகருதியவழியும் அவ்வுயிரையும் உடம்பை யு முயிரில்லனவாகிய அஃறிணையாகக் கொள்ளப்படுமென்க. வி லங்குமுதலியவற்றி னுயிருடம்புகளுமன்ன. மக்களாகப் பிறந்து புண்ணிய பாவ மியற்றிப் புண்ணியமிகுதியாற் றேவராயும் பாவ மிகுதியால் நரகராயும் பிறத்தலின் மக்கடேவர் நரகரெனச் சா தனசாத்தியமுறையே வைத்தாரென்க. அன்றியும் ஆசிரியர் தொ ல்காப்பியர் "உயர்திணை யென்மனார் மக்கட் சுட்டே" என மு ன்னர்க்கூறிப் பின்னர் "இவ்வென வறியு மந்தந் தமக்கிலவாகிய - தெய்வஞ் சுட்டிய பெயர்நிலைக் கிளவி - யுயர்திணை மருங்கிற் பால்பிரிந் திசைக்கும்" எனக்கூறலின் உயர்திணைப்பாற்படுத்து மக்கடேவர் நரகருயர்திணையென முறைதெரித் தோதினரெனக் கோடலுமாமென்க. "திணை நிலங் குலமொழுக்கம்" என்பவாக லிற் றிணையென்னுஞ் சொல்பொருளொருசொலீண்டுக் குலத்தி னை யுணர்த்தி நின்றது. உயர்திணையல்லாததிணை யஃறிணையெனப் பட்டது. இவ்விரண்டும் பண்புத்தொகை. உயர்வாயகுலம் அஃறி ன்மையவாயகுலம் எனவிரியும். அடையடுத்த இவ்விரண்டுசாதிப் பண்புகளும் ஆகுபெயராய்ப் பண்பிகளையுணர்த்தி நின்றன. தி ணையென்பது - ஒழுக்கம். அஃதாகுபெயராயொழுக்கத்தையுடை ய பொருள்களையுணர்த்தி நின்றதெனவும், உயர்திணையென்பது - வினைத்தொகையெனவுங் கூறுவாருமுளர், சாதிவேற்றுமைகருதி உலகப்பொருள்களையெல்லாம் உயர்திணை அஃறிணை என இரண் டுசாதியாகவகுத்து அவ்வேற்றுமைகருதி அவற்றை ஐம்பாலாகப் பகுத்தலே யெல்லாவாசிரியர்க்குங் கருத்தாவதன்றி ஈண்டொ ழுக்கங்கருத வேண்டுவ தின்மையானும் அவ்வொழுக்கமும் உயி

ரில்லனவற்றிற்குப் பொருந்தாமையானும் ஈண்டுத் திணையென்
பதற்கு அதுபொருளன்றெனவும் உயர்திணையை உயர்ந்ததிணை
யென இறந்தகால வினைத்தொகையாக விரிக்கின் மரம்நாடோறு
முயர்ந்தமைகருதி உயர்மரமெனவும் கல்வி அறிவு நாடோறு
முயர்ந்தமைகருதி அதனையுடையார்மேலேற்றி உயர்மக்களென
வுங்கூறும் வினைத்தொகைபோல உயர்திணையென்பதற்கு உயரு
ம்புடைபெயர்ச்சிவினை காட்சிவகையானும் கருத்துவகையானும்
இன்மையின் அது வினைத்தொகையன்றெனவுங் கொள்க. (௪)

(உ௱௬௨) ஆண் பெண் பலரென முப்பாற் றுயர்திணை. *

(எ-ன்) நிறுத்தமுறையானே ஐம்பாலுட் சிலபாலும் அவற்
றிற்குரிய திணையுமுணர் -ற்று. (ப-ரை) ஆண் - ஆண்பாலும்,
பெண்- பெண்பாலும், பலர் - பலர்பாலும், என - என்று, முப்
பாற்று - மூன்றுபாலினையுடைத்தாகும், உயர்திணை - உயர்திணை.
எ-று. (பொ-ரை) ஆண் பெண் பலர் என்னு மிம்மூன்றுபாலி
னையுமுடைத்து உயர்திணை. எ-று ❁ ஆடவர் என்றற்றொடக்க
த்து ஆண்பன்மையும், பெண்டிர் என்றற்றொடக்கத்துப் பெண்
பன்மையும், மக்கள் என்றற்றொடக்கத்து இருவர்பன்மையு மட
க்கிப் பலரெனப்பட்டதென்க. மேற்பலவென்பது மது. (௫)

(உ௱௬௩) ஒன்றே பலவென் றிருபாற் றஃறிணை. *

(எ-ன்) இதுவுமது. (ப-ரை) ஒன்று - ஒன்றன்பாலும், பல - ப
லவின்பாலும், என்று - என்று, இருபாற்று - இரண்டுபாலினையுடை
த்தாகும், அஃறிணை - அஃறிணை. எ-று. (பொ-ரை) ஒன்றும்பல
வும் என்னு மிரண்டுபாலினை யுடைத்து அஃறிணை. எ-று ❁
அஃறிணைக்கண்ணும் சேவல் என்றற்றொடக்கத்து ஆண்பாலும்,
பெடை என்றற்றொடக்கத்துப் பெண்பாலு முளவேனு மவ்வா
ண்பாலும் பெண்பாலு முயிருள்ளனவற்றுட் சிலவற்றிற்கு முயி
ரில்லனவற்றிற்கு மின்மையி னப்பகுப்பொழித் தெல்லாவற்றிற்
கும்பொருந்த ஒன்றெனப்பட்ட தென்க. (௬)

(உ௱௬௪) பெண்மைவிட் டாணவா வுவபே டாண்பா - லா
ண்மைவிட் டல்ல தவாவுவ பெண்பா - லிருமையு மஃறிணை ய
ன்னவு மாகும். *

(எ-ன்.) திணைபால்கட் காவதோர் புறனடை யுணர் ற்று.
(ப-ரை) பெண்மை- பெண்டன்மையை, விட்டு- விட்டு, ஆண்- ஆ
ண்டன்மையை, அவாவுவ- அவாவுவனவாகிய, பேடு-பேடுகள், ஆ
ண்பால் - உயர்திணை யாண்பாலாகும், ஆண்மை - ஆண்டன்மை
யை, விட்டு விட்டு, அல்லது- பெண்டன்மையை, அவாவுவ - அ
வாவுவனவாகிய, (பேடு)- பேடுகள், பெண்பால்- உயர்திணைப் பெ
ண்பாலாகும், இருமையும்- இவ்விருவகைப்பேடுகளும், அஃறிணை

யன்னவும் - அஃறிணையையொப்பனவும், ஆகும்- ஆகும், எ-று.
(பொ-ள்) பெண்டன்மையினைவிட்டு ஆண்டன்மையினை அவா
வுவனவாகிய பேடிகள் உயர்திணை யாண்பாலாம். ஆண்டன்மையி
னைவிட்டுப் பெண்டன்மையினை அவாவுவனவாகிய பேடிகள் உ
யர்திணைப்பெண்பாலாம் இவ்விருவகைப்பேடிகளும் உயர்திணை
யாமன்றி அஃறிணையையொப்பனவுமாம். எ-று ❁ ஆணிலக்க
ணமும் பெண்ணிலக்கணமும் விரவி ஒருவகையேனு நிரம்பாது
நிற்கும் பேட்டினைப் பாற்பொதுமையினீக்கி உயர்திணை யாண்
பாலோடும் பெண்பாலோடுஞ்சேர்த்தமையின் அவ்விலக்கணங்
களுள்விட்ட இலக்கணமும் அவாவு மிலக்கணமுஞ் சிறந்தனவெ
ன்பதூஉம் விடாத இலக்கணமும் அவாவாத இலக்கணமு முள
அவை அத்துணைச்சிறப்பினவல்லவென்பதூஉம் விடுதலும் அவா
வுதலும் இலக்கணமேயென்பதூஉம் பேட்டிலக்கணங்களுட் சிறந்
ததொன்றையே கருதாது சிறவாதனவற்றையு முடன்கருதியவழி
இருவகைப்பேடும் ஆண்பெண்ணென்னு மிரண்டனு ளொன்ற
ன்பாற்படுதல் கூடாமையின் அப்பாலினவா முயர்திணையு மன்றி
அஃறிணையிலக்கண மின்மையின் அஃறிணையுமன்றி உயிருள்ளன
வற்றுள் ஆண்பெண்ணென்னும் பகுப்பிலவாகிநின்ற அஃறிணை
யை யொக்குமென்பதூஉம் பெற்றாம். பேடு- அலிதூஉ அலி-
-மகண்மா- என்பன வொருபொருட் கிளவி. அலி மகண்மா என்
பனவற்றை வேறுகூறுவாருமுளர். "பெண்ணவா யாணிழந்தபே
டி யணியாளோ- கண்ணவாத் தக்க கலம்.,, எனப் பெண்ணிலக்க
ணஞ்சிறந்தமையிற் பெண்பாற்பட்டது, ஆண்பாற்பட்டதற்கு
ம் அஃறிணையொத்துநின்றதற்கு மிலக்கியம் வந்தவழிக் காண்க.
(உ௱௬) படர்க்கை வினைமுற்று நாமங் குறிப்பிற்- பெற
ப்படுந் திணைபா லனைத்து மேனை- யிடத்தவற் றொருமைப் ப
ன்மைப் பாலே. ❋

(எ-ன்) நிறுத்தமுறையானே மூன்றிடத்துஞ் சொற்றன்னை
யும் பொருளையு முணர்த்துமாறுணர் - ற்று. (ப-ள்) படர்க்கை
வினைமுற்று - படர்க்கைவினை முற்றுச்சொல்லையும், (படர்க்கை)
நாமம்- படர்க்கைப்பெயர்ச்சொல்லையும், குறிப்பின்- முன்குறித்
தால், திணைபாலனைத்தும்- இருதிணையைம்பாலும், பெறப்படும்-பி
ன் அவ்விருவகைச்சொல்லாலும்பெறப்படும், ஏனையிடத்து-ஒழிந்
ததன்மைமுன்னிலைகளின், (வினைமுற்று)- வினைமுற்றுச்சொல்லை
யும், (நாமம்)- பெயர்ச்சொல்லையும், (குறிப்பின்)- முன்குறித்தா
ல், அவற்று- அவ்விருதிணை யைம்பாலுள், ஒருமைப் (பால்)- ஒரு
மைப்பாலும், பன்மைப்பால்-பன்மைப்பாலும், (பெறப்படும்)-
அந்நால்வகைச்சொல்லாலும் பெறப்படும், எ-று (பொ-ள்) வெளி

ப்படைச்சொல்லாயுங் குறிப்புச்சொல்லாயும் வழக்கின்கண்ணும்
செய்யுட்கண்ணு நிற்கும்படர்க்கை வினைமுற்றுச்சொல்லையும் ப
டர்க்கைப்பெயர்ச்சொல்லையும் முன்குறித்தாற் பின் அவ்விருவகை
ச்சொல்லுங் கருவியாக இருதிணையும் ஐம்பாலும் பெறப்படும்
ஒழிந்ததன்மைமுன்னிலை வினைமுற்றுச்சொல்லையுந் தன்மைமுன்
னிலைப்பெயர்ச்சொல்லையும் முன்குறித்தாற் பின்பு அந்நால்வகை
ச்சொல்லும் கருவியாக இருதிணை ஐம்பாலுள் ஒருமைப்பாலும்
பன்மைப்பாலும் பெறப்படும் எ-று. ௸ வினைமுற்று நாமமெ
ன்பனவற்றையுங் குறிப்பினென்னும் வினையெச்சத்தையும் பெற
ப்படுமென்பதனையு மேனையிடத்துங் கூட்டுக. [வ-று.] நடந்தா
ன்-நடந்தாள் நடந்தார்-நடந்தது நடந்தன-(எ-ம்) அவன்-அவ
ள்-அவர்-அது-அவை-(எ-ம்) படர்க்கை வினைமுற்றுச்சொல்லு
ம் படர்க்கைப்பெயர்ச்சொல்லு முன்புதம்மையுணர்த்திப் பின்பு
இருதிணையும் ஐம்பாலுமாகிய பொருள்களையுணர்த்தின. நடந்
தேன் நடந்தேம்-(எ-ம்) யான்-யாம்-(எ-ம்) நடந்தாய்-நடந்தீர்-
(எ-ம்) நீ-நீர்-(எ-ம்) தன்மைவினைமுற்றுச்சொல்லுந் தன்மைப்
பெயர்ச்சொல்லும் முன்னிலைவினைமுற்றுச்சொல்லும் முன்னிலை
ப்பெயர்ச்சொல்லும் முன்பு தம்மையுணர்த்திப் பின்பு இருதி
ணை ஐம்பாலு ளொருமைப்பாலும் பன்மைப்பாலு முணர்த்தின.
பிறவுமன்ன. வினைமுற்றைமுற்கூறினமையா னவை யிருதிணைம
ருங்கின் ஐம்பாலறியவீற்றினின்றிசைக்கும் விகுதிகளோடுபயின்
றுவருதலின் இருதிணை ஐம்பாற்பொருள்களையுணர்த்து நெறிபிற்
பெயர்களிற் சிறந்தன வென்பதூஉம் குறிப்பினென்றமையாற்
சொற்றன்னையுணர்த்து மென்பதூஉம் தன்னை முன்னுணர்த்தி
ப் பொருளைப்பின் னுணர்த்துமென்பதூஉம் ஒலியெழுத்தை
உணர்தற்கு வரிவடிவோரறிகுறியாய் நின்றாற்போலப் பொருளை
உணர்தற்குச் சொல்லோர்குறியாய் நின்றதென்பதூஉம் அக்குறி
யினைக் குறித்தாலன்றி யிருதிணை ஐம்பாலாகிய பொருட்பேறின்
றென்பதூஉம் பெறப்படுமென்றமையாற் செவிப்புலனாகியசொ
ல்லையொழிந்த சுட்டுபொறிமாத்திரையாயின் இருதிணை ஐம்பாற்
பொருள்களை ஒருவனுணருமுணர்ச்சி விலங்குணர்ச்சிபோலுமெ
ன்றி அதுபொருட்பேறாகா தென்பதூஉம் ஒருமைப்பன்மைப்
பாலேயென்றமையாற் றன்மைமுன்னிலைகளின் ஆண் பெண்
பலர் ஒன்று பல என்னும் பால்விகற்பத்தோடு இருதிணையுந்
தோன்றாவென்பதூஉம் மூவிடங்களினுள் நின்றதற்குரிய வினைமுற்
றும் பெயருந் தம்மையும் பொருளையு முணர்த்துமாறு இவ்வா
றெனவே இவ்விடங்கட்குப்பொதுவாகிய வினைமுற்றுக்களும்பெ
யர்களும் பொதுமைநீங்கி யோரிடத்திற் குரியவாகி இவ்வாறு

தம்மையும் பொருளையு முணர்த்துமென்பதூஉம் பெயரெச்ச
மும் வினையெச்சமும் வினைத்தொகையும் பண்புத்தொகையுங்
குறைச்சொல்லாதலிற் றம்பயனிலையாகிய வருமொழியொடு ப
ணர்ந்து பொருண்முற்றி இம்மூவிடவினைமுற்றுள்ளும் பெயரு
ள்ளுமடங்குதலின் இவ்வாறு தம்மையும் பொருளையு முணர்த்
துமென்பதூஉம் இடைச்சொல்லும் உரிச்சொல்லும் பெயர்வி
னையு ளடங்குதலின் அவ்வாறு தம்மையும் பொருளையு முணர்
த்துமென்பதூஉம் இவ்வாறெல்லாச்சொல்லையும் வினைமுற்றுள்
ளும் பெயருள்ளுமடக்கி மூவகையிடத்துநின்றசொல் லிருதி
ணை யைம்பாற்பொருளையுந் தன்னையுமுணர்த்துஞ் சிறப்புவிதிகூ
றினாரென்பதூஉம் பெற்றாம். “வயிர வூசியு மயன்வினை யிரும்பு
ஞ்-செயிரறு பொன்னைச் செம்மைசெய் யாணியுந்-தமக்கமைகரு
வியுந் தாமா மவைபோ-லுரைத்திற முணர்த்தலு முரையது தொ
ழிலே.,,என்றார் ஆசிரியரகத்தியனாரு மென்க. இனி இச்சூத்திரத்
திற்கு இவ்வாறன்றி இருதிணை ஐம்பாலைப் பொருளகத்தறிவித்தத
ன்றிச் சொல்லகத்தறியுமாறு கூறினாரெனப் பொருள்கூறின் “இ
ருதிணை மருங்கி னைம்பா லறிய-வீற்றினின் றிசைக்கும் பதினோ
ரெழுத்துந் -தோற்றந் தாமே வினையொடு வருமே.,, என ஆசி
ரியர் தொல்காப்பியனார் கூறியவாறே படர்க்கைவினைமுற் றொ
ன்றுமேகூறி லமையும் படர்க்கைநாமமென்றன் மிகைபடக்கூ
றலாம் எனையிடத்தவற் றொருமைப் பன்மைப்பாலே யென்றல்
தன்மை முன்னிலைக ளொருமை பன்மைமாத்திரையன்றி இருதி
ணை ஐம்பாலை விளக்காமையின் மற்றொன்றுவிரித்தலாம். இவ்வா
றன்றி மூவிடங்களின் ஒவ்வொன்றற்குரிய முற்றும் பெயருமே
இருதிணை ஐம்பாற்பொருளினை விளக்கு மொழிந்தன விளக்கா
வெனப் பொருள்கூறின், எல்லாச்சொல்லு மூவகையிடத்து நின்
றிருதிணை ஐம்பாற்பொருளை விளக்குமெனக்கூறிய “ஒருமொழி
தொடர்மொழி,, என்னும் பொதுச்சூத்திரத்தோடு மாறுகொள
க்கூறலாம். இச்சூத்திரத்துட் குறிப்பினென்னுஞ்சொல்லை வி
னையெச்சமாக்காது குறிப்பினானு மிருதிணை யைம்பாலும் விள
க்குமெனப் பொருள்கூறின் வெளிப்படையுங் குறிப்புமாஞ்சொ
ற்கள் இருதிணை ஐம்பாற்பொருள்களை விளக்குநெறியன்றி மூவி
டச்சொற்போலக் குறிப்புச்சொல்லென வேறொன்றின்மையா
னும் ஒருவ ரறிவுதந்தாரொன்றால், “நுண்ணுணர் வுடையோர்
நூலொடு பழகினும் - பெண்ணறி வென்பது பெரும்பேதை
மைத்தே.,, என்பவாகலின் அறிவு பெண்பாலாற் பெறுதல்கூடா
மையின் அதனையொழித்து ஒருவரொன்னும் படர்க்கைப் பெய

ரும் அதன்பயனிலையாகிய தந்தாரென்னும் படர்க்கைமுற்றும் உயர்திணையினையும் ஆண்பாலினையுங் குறிப்பான் விளக்குதலின் இப்பெயர்வினைகளை யொழித்துப் படர்க்கைவினைமுற்று நாமமென்றாரல்ல ராதலானுஞ் சொற்கள் வெளிப்படையானுங் குறிப்பினானும் இருதிணை ஐம்பாற்பொருள்களை விளக்குத னிருத்தமுறையே "ஒன்றொழி பொதுச்சொல்,, என்னுஞ்சூத்திரத்தாற் பிற்கூறுதலானும் ஈண்டுங்கூறுதல் கூறியதுகூறலா மாதலானும், அது பொருளன்றென்க. (௮)

(௨௱௬௬) தன்மை முன்னிலை படர்க்கைமூ விடனே. *

(எ-ன்) நிறுத்தமுறையானே மூவிடமாமா றுணர்-ற்று. (ப-ரை) மூவிடன்- மூவிடமாவன, தன்மை-தன்மையும், முன்னிலை-முன்னிலையும், படர்க்கை- படர்க்கையுமாம், எ-று. (பொ-ரை.) மூவிடமாவன தன்மையும் முன்னிலையும் படர்க்கையுமாம் எ-று. ❁ [வ-று] யான்- நீ- அவன்- (எ-ம்) வந்தேன்- வந்தாய் வந்தான் -(எ-ம்) வரும், சொல்வானுங் கேட்பானுமாகிய இருவர்கூட்டத்துப் பிறந்தசொல் அவ்விருவரிடத்து நில்லாது அயலானிடத்திற் படர்தலிற் படர்க்கையெனப்பட்டது. (௬)

(௨௱௬௭) இலக்கண முடைய திலக்கணப் போலி- மரூஉவென் றாகு மூவகை யியல்பு-மிடக்க ரடக்கன் மங்கலங் குழூஉக் குறி -யெனுமுத் தகுதியோ டாறும் வழக்கியல். *

(எ-ன்) நிறுத்தமுறையானே வழங்காமா றுணர்-ற்று. (ப-ரை) இலக்கணமுடையது - இலக்கணவழியால் வருவதும், இலக்கணப் போலி - இலக்கணமில்லையாயினும் இலக்கண முடையதுபோல வருவதும், மரூஉ- இலக்கணஞ்சிதைந்து மரீஇயதும், என்றாகும்- என்றுவழங்குகிற, மூவகையியல்பும்- மூவகையியல்புவழக்கும், இடக்கரடக்கல்- சொல்லத்தகாததைமறைத்துச் சொல்வதும், மங்கலம்- மங்கலமில்லதையொழித்து மங்கலமாகக்கூறுவதும், குழூஉக்குறி - ஒருகூட்டத்திலுள்ளோர் யாதாயினு மொருகாரணத்தால் ஒருபொருளினது சொற்குறியையொழித்து வேறொருசொற்குறியாற்கூறுவதும், எனும்- என்றுவழங்குகின்ற, முத்தகுதியோடு- மூன்றுதகுதிவழக்குடனே, ஆறும்- ஆறுகும், வழங்கியல் - வழக்கிலக்கணம், எ-று (பொ-ரை) இலக்கணமுடையதென்றும் இலக்கணப்போலியென்றும் மரூஉவென்றும் வழங்கு மூவகையியல்புவழக்கும் இடக்கரடக்கலென்றும் மங்கலமென்றும் குழூஉக்குறியென்றும் வழங்கு மூன்று தகுதிவழக்குடனேகூட அறுவகைப்படும் வழக்கிலக்கணம். எ-று. ❁ [வ-று.] நிலம்-நீர்-தீ- காற்று - ஆகாயம்-நன்னிலம்-தண்ணீர்- என்றற்றொடக்கத்தன இலக்கணமுடையன. இன்முன் என்பதனை முன்றிலென்றும், நகர்ப்

புறமென்பதனைப் புறநகரென்றும், புறவுலா வென்பதனை உலாப்புறமென்றும், கண்மீயென்பதனை மீகண்ணென்றும், கோவிலென்பதனைக் கோயிலென்றும், பொதுவிலென்பதனைப் பொதியிலென்றும், வழங்குமித்தொடக்கத்தன இலக்கணப்போலி. அருமருந்தன்னபிள்ளை யென்பதனை அருமந்தபிள்ளை யென்றும், மலையமானாடு என்பதனை மலாடென்றும், சோழனாடு என்பதனைச் சோணாடென்றும், பாண்டியனாடு என்பதனைப் பாண்டிநாடென்றும், இந்நாடு என்பதனை இந்தநாடென்றும், ஆதன்றந்தை யென்பதனை ஆந்தையென்றும், பூதன்றந்தை யென்பதனைப் பூந்தையென்றும், மரவடி யென்பதனை மராடியென்றும், குளவாம்பல் என்பதனைக் குளாம்பலென்றும், யாவரென்னும் பெயரை யாரென்றும் ஆரென்றும், யாதென்னுங் குறிப்புவினையை ஆதென்றும், எவனென்னுங் குறிப்புவினையை என்னென்றும் என்னவென்றும், ஆற்றூர் என்பதனை ஆறையென்றும், வழங்குமித்தொடக்கத்தன மரூஉ. கண்கழீஇ வருதும் - கால்கழீஇ வருதும் - வாய்பூசிவருதும் - ஆமுன்பகரவீ - பவ்வீ - புலிநின்றிறந்த நீரல்லீரத்து - கருமுகமந்தி - செம்பினேற்றை - என்றற்றொடக்கத்தன இடக்கரடக்கல். செத்தாரைத் துஞ்சினாரென்றும், ஓலையைத் திருமுகமென்றும், காராட்டை வெள்ளாடென்றும், இடுகாட்டை நன்காடென்றும், வழங்குமித்தொடக்கத்தன மங்கலம். பொற்கொல்லர் பொன்னைப் பறியென்றும், யானைப்பாகர் ஆடையைக் காரையென்றும், வேடர்கள்ளைச் சொல்விளம்பியென்றும், வழங்குமித்தொடக்கத்தன குழூஉக்குறி. இலக்கணநெறியால் வருவதனை இலக்கணமுடையதென்றும், இலக்கணமுடையதன்றிப் படைப்புக்காலத் திலக்கணமுடையதோ டொருங்கு படைக்கப்பட்டதுபோல வருவதனை இலக்கணப்போலியென்றும், தொன்றுதொட்டதன்றி இடையேயிலக்கணஞ் சிதைந்து மரீஇயதனை மரூஉவென்றும் இம்மூன்றுந் தகுதிவழக்குப் போலாது எப்பொருட்கு எச்சொல்லமைந்ததோ அப்பொருளை அச்சொல்லாற்கூறுதலின் இயல்புவழக்கென்றும் "இடக்கரொன்பதூஉம் மறைத்துமொழி கிளவி." என்பவாகலின் இடக்கர்தோன்றுதனை மறைத்தலித இடக்கரடக்கலென்றும் இடக்கர்போற் கூறத்தகாத தன்றேனும் மங்கலமில்லதையொழித்து மங்கலமாக்கூறுவதை மங்கலமென்றும், ஒவ்வொரு குழூவிலுள்ளோர் யாதானுமொருகாரணத்தான் ஒருபொருளினது சொற்குறியையொழித்து வேறோர்சொற்குறியாற் கூறுவதைக் குழூஉக்குறியென்றும், இம்மூன்று மிப்பொருளையறிதற் கமைந்துவிட்ட இச்சொல்லாற் கூறுதற்குதியன்று வேறோர்சொல்லாற் கூறுதற்குதியெனக்

கருதிக்கூறுதலிற் றகுதிவழக்கென்றும் பெயர்பெற்றன. இலக்கணப்போலியினையும் மரூஉவினையும் வேறறிதற்குச் சான்றோராட்சியேகாரணமென்க. அன்றி நிலைமொழி வருமொழிகண் முன்பின்னாக மாறிநிற்பன இலக்கணப்போலி ஒழிந்தசிதைவெல்லாம் மரூஉவென்று கோடலுமொன்று. இவ்வறுவகைவழக்குந் திரிசொற்கண்ணும் வருதலின் இயற்சொல்லாகிய உலகவழக்கையுந் திரிசொல் திசைச்சொல் வடசொல்லாகிய செய்யுள்வழக்கையுந் தொகுத்து இச்சூத்திரத்தான் வழக்கெனப் பட்டதென்க. அங்ஙனமாயிற் செய்யுளென வேறுகூறுவ தியாதுகருதியெனின் இவ்வுலகவழக்குஞ் செய்யுள்வழக்கும் வழக்காய்நில்லாது தொடைப் பட்டமை கருதியென்க. வழக்கென்பது - சொன்னடை. இனி ஆசிரியர் தொல்காப்பியர் இடக்கரென்பதனை “அவையல்கிளவி” எனவும் அவையல்கிளவியாவ திழிந்தோர்சொல்லு மிழிந்தசொல்லாதலான் அதனை நன்மக்களிடை மறைத்துக்கூறுக வென்பர் “அவையல் கிளவி மறைத்தனர் கிளத்தல்” எனவும் மறைத்துக்கூறுங்கான் மேற்றொட்டுபரீஇ வழங்கியதனை மறைத்தலை நீக்குகவென்பார் “மறைக்குங் காலை மரீஇய தொரால்.” எனவுங்கூறுவர். மேற்றொட்டுமரீஇவழங்கியது “ஆப்பிநீரொங்குந் தெளித்துச் சிறுகாலை” யானையிலண்டம் - யாட்டுப்பிழுக்கை - எனவரும். தம்பொருண்மேனில்லாதணிகுறித்துநின்ற “பகல்கான் றெழுதரும் பல்கதிர்ப் பரிதி” என்றாற்போல்வன தம்பொருளையுணர்த்துங்கான் மறைத்துக் கூறப்படுமாறுமுணர்க. (௰)

(௨௱௬௮) பல்வகைத் தாதுவி னுயிர்க்குட லோற்பல-
சொல்லாற் பொருட்கிட னாக வுணர்வினின்-வல்லோ ரணிபெறச் செய்வன செய்யுள். *

(எ-ன்) நிறுத்தமுறையானே செய்யுளாமாறுணர்-ற்று. (ப-ரை) பல்வகைத்தாதுவின் - தோல் இரத்தம் இறைச்சி மேதை எலும்பு மச்சை சுவேதநீர் என்கிற எழுவகைத்தாதுக்களினாலே, உயிர்க்கு - உயிருக்கு இடமாகச்செய்யப்பட்ட, உடல்போல் - உடம்புபோல, பலசொல்லால் - இயற்சொல் திரிசொல் திசைச்சொல் வடசொல் என்கிறநால்வகைச்சொற்களால், பொருட்கு - பொருளுக்கு, இடனாக - இடமாக, உணர்வினின் - கல்வியறிவினால், வல்லோர் - செய்யுள்செய்யவல்லவர், அணிபெற - அலங்காரம்பெற, செய்வன - உண்டாக்குவன, செய்யுள் - செய்யுளாம், எ-று. (பொ-ரை) தோல் இரத்தம் இறைச்சி மேதை எலும்பு மச்சை சுவேதநீர் என்னும் எழுவகைத்தாதுக்களினால் உயிர்க்கிடனாக இயற்றப்பட்ட உடம்புபோல இயற்சொல் திரிசொல் திசைச்சொல் வடசொல் என்னும் நால்வகைச்சொற்களாற் பொருட்கிடனாகக் கல்வியறிவினாற் செ

ட்யுளியற்ற வல்லோர் அலங்காரம்பெற இயற்றுவன செய்யுளாம் எ-று. ❀ ஈண்டுப் பொருளென்றது அகமும் புறமுமாகியபொருள்களை. இங்ஙனங்கூறவே யெழுத்தா லியன்றது சொல்லாதலின் எழுத்துச் சொல் பொருள் அணி என்னும்நான்கினு நடப்ப தியாப்பென்பதாயிற்று. [வ-று.] "வருங்குன்ற மொன்றுரித் தோன்றில்லை யம்பல வன்மலயத் - திருங்குன்ற வாண ரிளங்கொடி யேயிட ரெய்த லெம்மூர்ப் - பருங்குன்ற மாளிகை நுண்களபத்தொளி பாய நும்மூர்க் - கருங்குன்றம் வெண்ணிறக் கஞ்சுக மேய்க்குங் கனங்குழையே.," என்னும் இக்கட்டளைக்கலித்துறை யிடமணித்தென்னும் பொருட்கிடனாகித் தன்மை உவமை உருவகவணிகளும் பிறவுமுடைத்தாய் வருதல்காண்க. பிறவுமன்ன. (௰௧)

(௨௱௬௯) ஒன்றொழி பொதுச்சொல் விகாரந் தகுதி- யாகுபெய ரன்மொழி வினைக் குறிப்பே- முதலொருகை குறிப்போடின்ன பிறவுங் குறிப்பிற் றருமொழி யல்லன வெளிப்படை. *

(எ-ன்) நிறுத்தமுறையானே வெளிப்படையுங் குறிப்புமாமாறுணர்- ற்று. (ப-ரை) ஒன்றொழிபொதுச்சொல் - இருதிணையாண்பெண்ணுளொன்றனை யொழிக்கும்பொதுச்சொல்லும், விகாரம் வலித்தன்முதலாகிய விகாரச்சொற்களும், தகுதி-மூவகைத் தகுதிவழக்குச்சொற்களும், ஆகுபெயர்- ஆகுபெயர்ச்சொல்லும், அன்மொழி- அன்மொழித்தொகைச்சொல்லும், வினைக்குறிப்பு- வினைக்குறிப்புச்சொல்லும், முதல் - முதற்குறிப்புச் சொல்லும், தொகை-தொகைக்குறிப்புச்சொல்லும், குறிப்பு- இம்முதலொருகையல்லாத பலவழியானும்வருங் குறிப்புச்சொல்லும், இன்ன பிறவும்- இவைபோல்வனபிறவும், குறிப்பின்- குறிப்பினால், தரு - இருதிணை ஐம்பாற்பொருள்களையுந்தருகிற, மொழி- சொற்களாம், அல்லன- இவையல்லனவெல்லாம், வெளிப்படை - வெளிப்படையால், (தரு.) அப்பொருளைத்தருகிற, (மொழி)- சொற்களாம், எ-று. (பொ-ரை) இருதிணையாண்பெண்ணுளொன்றனையொழிக்கும் பொதுச்சொல்லும் வலித்தன்முதலிய வொன்பது விகாரச்சொல்லும் மூவகைத்தகுதி வழக்குச்சொல்லும் ஆகுபெயர்ச்சொல்லும் அன்மொழித்தொகைச்சொல்லும் வினைக்குறிப்புச்சொல்லும் முதற்குறிப்புச்சொல்லும் தொகைக்குறிப்புச்சொல்லும் இம்முதலொருகையல்லாத பலவாற்றானும் வருங்குறிப்புச்சொல்லும் இவைபோல்வனபிறவுங் குறிப்பினான் இருதிணை ஐம்பாற்பொருளைத்தருஞ் சொற்களாம் இவையல்லனவெல்லாம் வெளிப்படையான் அப்பொருள்களைத்தருஞ் சொற்களாம், எ-று. ❀ வெளிப்

படை பல்லனவெல்லாங் குறிப்புச்சொல்லாயினும் அக்குறிப்புச்
சொல்லுள்ளும் வேற்றுமைதோன்றற்கு ஏகாரமிடையிட்டுக் கூ
றினமென்க. [வ-று.] ஆயிரமக்கள்பொருதார் - பெருந்தேவி
பொறையுயிர்த்தகட்டிற்கீழ்நால்வர்மக்களிருந்தார்- என்புழி மக்
களென்னும் பொதுப்பெயரும், பொருதார்-இருந்தார்- என்னு
ம்பொதுவினையும் உயர்திணை யாண்பால் பெண்பாலுள் ஒன்ற
னையொழித்து ஒன்றனைக் குறிப்பானுணர்த்தின. இப்பெற்றமு
ழவொழிந்தன- இப்பெற்ற மறத்திற்கேகறக்கும்- என்புழிப் பெ
ற்றமென்னும் பொதுப்பெயரும் ஒழிந்தன கறக்குமென்னும்
பொதுவினைகளும் அஃறிணை யாண்பால் பெண்பாலுளொன்ற
னையொழித்து ஒன்றனைக் குறிப்பானுணர்த்தின. இவற்றுட்பொ
ருதார்கறக்கும்- என்னும்வினைகள் விகுதிமாத்திரையாயிற் பொதுவி
னையாயின. குறுந்தாட்பூதம்-மரைமலர் குலிகமொடிகலியவங்
கை- என்புழி இவ்விகாரச்சொற்கள், குறுந்தாள்-தாமரை-இங்குலி
கம் என்பனவற்றைக் குறிப்பாலுணர்த்தின. கால்கழீஇவருதும்-
-நன்காடு-பதி-என்புழி இத்தகுதிக டத்தம் பொருளைக் குறிப்பா
லுணர்த்தின. புளித்தின்றான் கடுத்தின்றான்- எனபுழி இவ்வாகு
பெயர்களவற்றின் பழத்தினைக் குறிப்பாலுணர்த்தின. பொற்
றொடிதந்தபுனைமடல்- அறற்கூந்தற்கில்லைபருள்- என்புழி இவ்வ
ன்மொழித்தொகை யவற்றையுடைய மகளிரைக்குறிப்பா லுணர்
த்தின. “சொலல்வல்லன் சோர்விலனஞ்சானவனை - யிகல்வெல்
லல் யார்க்குமரிது.”—என்புழி வல்லன் இல்லனென்னுஞ் சொ
ற்கள் பெயர்ப்பொருளையொழித்து வினைக்குறிப்புப்பொருளைக்
குறிப்பா லுணர்த்தின. “அறத்தா றிதுவென வெள்ளைக் கிழிபு.”
என்புழி இம்முதற்குறிப்புச்சொற்கள் —“அறத்தா றிதுவென
வேண்டா சிவிகை - பொறுத்தானோ டூர்ந்தா னிடை.”—என்னு
ம்பாட்டைக் குறிப்பாலுணர்த்தின.—“அலங்குளைப் புரவி யைவ
ரொடு சினைஇ - நிலந்தலைக் கொண்ட”—என்புழி ஐவரென்னுந்
தொகைக்குறிப்புச்சொற் பாண்டவரைக் குறிப்பாலுணர்த்திற்று.
“ஒன்றி னிரண்டாய்ந்து மூன்றடக்கி நான்கினால்- வென்று களங்
கொண்ட வேல்வேந்தே- சென்றுலா- மாழ்கடல்சூழ் வையகத்து
ளைந்துவென் றாறகற்றி- யேழுகடிந் தின்புற் றிரு” என்பதுமது.
இனிப் பலவாற்றானும் வருங்குறிப்புச்சொற்கள் பொருளைக்குறி
ப்பாலுணர்த்துமாறு கற்கறித்துநன்கட்டாய்- நீயிர்பெரிதுமறிதி
ர்- பறவாக்குளவி- பாயாவேங்கை— “உவர்க்கட லன்ன செல்வரு
முளரோ - கிணற்றூற் றன்ன நீயுமா ருளையே.”— “செல்வர்தம்
பெருந்திருவுறுக- பல்பகனிவா ழியரோ- நெடிதேயியாச் சிறு
விலைக் காலத்தாயினு- முழுப்பொருடந்தெஞ் சொற்கொள் வோ

யே.,,—"பல்சான் றீரே பல்சான் றீரே- கயன்முள் ளன்ன நரை
முதிர் திரைகவுட்-பயனின் மூப்பிற் பல்சான் றீரே.,,—"அறனொ
மற்றிது விறன்மாண் குடுமி-யின்னா வாகப் பிறர்தம் மண்கொண
டினிய செய்திநின் னார்வலர் முகத்தே.,,—"நீயுந் தவறிலை நின்னை
ப் புறங்கடைப்-போதர விட்ட நுமருந் தவறிலர் நிறையழி கொ
ல்யானை நீர்க்குவிட் டாங்குப்-பறையறைந் தல்லது செல்லற்கவெ
ன்று - விறையே தவறுடை யான்.,,—"மைபார் தடங்கண் மயில
ன்றைப் தீத்தீண்டு - கையார் பிரிவித்தல் காண்.,, — "சோலைமய
யோமொழுத்தா லென்சொல்லுந் தொக்கதன்மே லீலப்பே மெவ்
வெழுத்தி னுனிரட்பு- மாலைக் - குடை வேந்தன்சென்னி குலநதி
யின் பேனைக்- கடைசேர்ந்த வோமொழுத்தாற் காண்.,, கா- காவி-
காவிரி-என்பதுபொருள். இஃதெழுத்துப் பெருக்கம். "ஆர்றி
ன்ம்ப ரீற்றி னெழுத் தொழிப வின்பஞ்சேர்-நார்கால தாமீற் று
யிர்நடப்ப- வேற்புடைய- வுண்பயனு மாங்கதனி னீரெழுந்தா
லோது நூற்- இன்பஞ்சேர் செய்புளா மின்று,, பாலாறு- பாலா-
பால்-பா- என்பது பொருள். இஃதெழுத்துச் சுருக்கம். "வாம
மணிமே கலையார் மயிர்குறுகி - ழைவர் பெய்யு மணிதழை யே
ம- மயிர்நிறுவி மற்றதற்கோர் புள்ளி கொடுப்பிற்- செயிர்தீர் மர
மாகுஞ் சென்று,,— கூழை-குழை- ஓதி-ஒதி- என்பது பொருள்
இதுமாத்திரைச் சுருக்கம். "பூமேலா ளாளொன்பார் பூம்பே[illegible]வை
யென்செய்புந்- திமேர்படிற் கொடுத்தாற் கொள்வ தெவனுமே
-நலந்திகழுஞ் செங்கை நயதீர னெங்கோன்- சிலம்பன் றிருவேங்
கடன்.,, இது விஞவுத்தரம். "நீத்தொழிந்த வாறைந் தடக்கிப்
பின் னிச்சயமே- வாய்த்தமைந்த வாயில்பெண் ணனையுங் கூத்தற்
கு- வாளேறு டோசைவிளை நில மிவ்வல்லாற்- கேளா யுடன்வரு
வதில்.,, நிலையாமைகடைப்பிடி - சிவபுண்ணியஞ்செய் என்பது
பொருள், இத்தொடக்கத்தனவெல்லாங்குறிப்பிற்றத்தம்பொரு
ள்களையுணர்த்தின. இன்னபிறவுமென்றமையானே தெரிநிலைவினை
குறிப்புவினையாலணையும்பெயரும்வினைமுற்றுங்குறிப்பு முற்று
னும் வருமெச்சங்களும்செப்புமென்னுமுற்றும், அன்று-இன்று-
என்னும்வினையெச்சக்குறிப்புங்கேட்குநபோலவுங்கிளக்குநபோ
லவும் இயங்குநபோலவும் இயற்றுநபோலவும் அஃறிணைமருங்கி-
லுமறையப்படுதன்முதலியஇலக்கணைகளும் இவைபோல்வனபிற
வுங்கொள்க. இவ்வாறன்றி, நிலம்-நீர்-தீ-காற்று-ஆகாயம்- என்றற்
றொடக்கத்தனவெல்லாம் வெளிப்படையிற் பொருளுணர்த்தின.
வடநூலார் சொற்பொருளை, வாச்சியம் வேங்கியம்- இலக்கணை- எ
னமூன்றெனவு மிலக்கணையை வேங்கியத்துளடக்கி யிரண்டெ
னவுங்கூறுப. இவற்றுள் வாச்சியமென்பது வெளிப்படை. வேங்

கியமென்பது குறிப்பு. இலக்கணையென்ப தொருபொருளின திலக்கணத்தை மற்றொருபொருட்குத் தந்துரைப்பது. அது விட்ட இலக்கணைவிடாத இலக்கணைவிட்டும் விடாத இலக்கணையென மூவகைப்படும். அவை வருமாறு:- "சென்றதுகொல், போந்ததுகொல் செவ்வி பெறுந்துணையு-நின்றதுகொ னேர்மருங்கிற் கைகூப்பி-முன்றில்-முழங்குங் கடாயானை மொய்ம்மலர்த்தார் மாறற்-குழந்துபின் சென்றவென் னெஞ்சு," என்புழி மருங்குங்கையும் ஊனுறுதலு முதலிய இலக்கணங்க ளெஞ்சிற்கின்மையின் விட்ட இலக்கணை. கங்கையின்கணிடைச்சேரி- புளித்தின்றான்- என்புழி இடைச்சேரி கங்கைக்கரைக்கணிருத்தலும் புளியினது பழத்தைத்தின்றலு முண்மையின் விடாத இலக்கணை. "பாயிருள் பருகிப்-பகல்கான்றெழுதரு பல்கதிர்ப் பரிதி," என்புழி இருளைப்பருகுதலும்பகலைக்காலுதலும் பரிதிக்கின்மையானும் இருளைப்போக்குதலும் பகலைத்தருதலும் அதற்குண்மையானும் விட்டும்விடாத இலக்கணை. இவையுங்குறிப்பினு ளடங்குமாதலின் "வெளிப்படைகுறிப்பின் விரிப்பது சொல்லே," எனத்தொகுத்தும் இவ்வாறு வகுத்துங் கூறிற்றென்க. (௰௨)

(௨௱௭௰) அதுவே, இயற்சொற் றிரிசொ லியல்பிற் பெயர்வினை- யெனவிரண் டாகு மிடையுரி யடுத்து- நான்கு மாந்திசை வடசொ லணுகா வழி. *

(எ-ன்.) மேலைச்சூத்திரங்கூறுஞ் சொல்லாவ திஃதெனக்காட்டக்கண்டசொல் இத்துணையாமென்ப துணர்-ற்று. (ப-ரை) அது- முன்னேகாட்டியசொல், இயற்சொல்-இயற்சொல்லும், திரிசொல் திரிசொல்லுமென்கிற, இயல்பின் - தன்மையையுடைய, பெயர்ச் (சொல்)- பெயர்ச்சொல்லும், வினைச் (சொல்). வினைச்சொல்லும், என-என்று, இரண்டாகும் - இரண்டாகும், இடைச் (சொல்)- இடைச்சொல்லும், உரிச் (சொல்)-, உரிச்சொல்லும், அடுத்து- அவற்றுடனடுத்து, நான்குமாம்-நான்குமாகும், திசைவடசொல்- திசைச்சொல்லும் வடசொல்லும், அணுகாவழி-அவற்றுடன்சேராதவிடத்து, எ-று. (பொ-ரை) மேற்காட்டியசொல் இயற்சொல் திரிசொல் என்னு மியல்பினையுடையபெயர்ச்சொல்லும் வினைச்சொல்லுமென இரண்டாம்இவற்றுடனிடைச்சொல்லும் உரிச்சொல்லும்அடுத்துநான்குமாம்இவற்றுடன் திசைச்சொல்லும்வடசொல்லும்அணுகாவிடத்து. எ-று. ❀ செய்யுட்குரியன உரிச்சொல்லெனக் கூறுதலானும் வருஞ்சூத்திரஞ் செந்தமிழாகியெனக்கூறுதலானும் இயற்சொல்லென்றதைப் பெயர்வினையிடையினுந் திரிசொல்லென்றதை யெல்லாவற்றினும் பிரித்துரைத்துக் கொள்க. எனவே அதுவே எனச்சுட்டியசொல் பெயரியற்சொல்

பெயர்த்திரிசொல் வினையியற்சொல் வினைத்திரிசொல் இடையியற்சொல் இடைத்திரிசொல் உரித்திரிசொல் என எழுவகைப்படுமென்பதூஉம் திசைச்சொல்லும் வடசொல்லும் அணுகியவழி ஒன்பதுவகைப்படுமென்பதூஉம் பெற்றாம். உரியியற்சொல் இன்றாகவும் உரித்திரிசொல் என்றது இயற்சொல் திரிசொலென்னும் பொதுவிலக்கணநோக்கியென்க. இச்சொற்களை யொருங்கோதாது முறைதெரித்தோதிய தென்னையெனின், ஒருவன் ஒருத்தியென்றமாத்திரையின் அவர் கைகான்முதலிய அகத்துறுப்பும் ஆடை அணி முதலிய புறத்துறுப்புமடங்குதல்போலப் பெயர்வினை யென்றமாத்திரையின் அவற்றின்அகத்துறுப்பாகிய விகுதியுருபுமுதலிய இடைச்சொற்களும் புறத்துறுப்பாகியவேற்றுமையுருபுமுதலிய இடைச்சொற்களு மடங்குதலானும் உரிச்சொல் "பல்வகைப்பண்பும் பகர்பெயராகி" என்பவாகலிற் பெயருளடங்குதலானுந் திசைச்சொல்லும் வடசொல்லும் இவற்றுள் யாதானுமொன்றாயடங்குதலானும் இவற்றை அடக்கிநின்றதலைமையுஞ் சிறப்புந்தோன்றப் பெயர்வினையெனவிரண்டாகுமென வரையறுத்தும் பெயர்வினையுளடங்கிநின்றவற்றையே வேறுபாடறிதற்கு வேறுபடுத்துத் தொகைகோடலின் இடையுரிக்கு அத்தலைமையுஞ் சிறப்பு மின்றென்பதுந்தோன்றஅடுத்து நான்குமாமென்றும் கொடுந்தமிழ்முதலியசொற் செந்தமிழோடுவிராயவழி அவற்றைத்திசைச்சொலென்றும் ஆரியச்சொற் றமிழ்நடைபெற்றுச் செந்தமிழோடுவிராயவழி யதனை வடசொல்லென்றுந் தமிழோடுதழுவப்படுமாயினுஞ் செந்தமிழ்ச்சொல்லோடுதொகைகோட லொருதலையன்றென்பதுந்தோன்ற அணுகாவழியென்று முறைதெரித்தோதினானென்க. வடக்குமோர்திசையன்றோ திசைச்சொல்லன்றி வடசொலெனவேறுகூறுவ தென்னையெனின், தமிழ்நாட்டிற்குவடதிசைக்கட் பதினெண்மொழிகளுள் ஆரியமுதலிய பலமொழியு முளவேனுந் தென்றமிழ்க்கெதிராயது கடவுட்சொல்லாகிய ஆரியமொன்றுமேயென்பதுந்தோன்ற அவற்றுட் டமிழ்நடைபெற்றதைவடசொலென்றும் ஏனையவற்றுட்டமிழ்நடைபெற்றதைத் திசைச்சொலென்றுஞ் சான்றோரால் நியமிக்கப்பட்டனவென்க. அன்றியும், ஆரியச்சொ லெல்லாத்தேயத்திற்கும் விண்ணுலகமுதலியவற்றிற்கும் பொதுவாகலான் அவ்வாரியச்சொற்றமிழ்நடைபெற்றதைத்திசைச்சொலென்றல் கூடாதெனக் கோடலுமாம். அங்ஙனமாயின் வடசொலென்ற தென்னையெனின், ஆண்டுப் பயிற்சிமிகுதிபற்றி யெனக்கொள்க. இச்சொற்களைப்பெயர்முதலியவாக வைத்ததென்னையெனின், பெயர்ச்சொல்பொருளை விளக்குதலானும்வினைச்சொல்

பொருளதுபுடைபெயர்ச்சியைவிளக்குதலானும் இடைச்சொல் பொருளையும் பொருளதுபுடைபெயர்ச்சியையுந் தம்மாலன்றித் தத்தங்குறிப்பான்விளக்குதலிற் பெயர்ச்சொல் வினைச்சொற்களும் ஆகாது அவற்றின்வேறுமாகாது இடைநிகரனவாய்நிற்றலானும் உரிச்சொல்பொருட்பண்பாகிய இசை குறிப்புப்பண்புமூன்றனையும் விளக்கிப் பொருட்குரிமைபூண்டுநிற்றலானும் திசைச்சொற் கொடுந்தமிழ்மொழியாயும் அன்னியமொழியாயும் வருதலானும் வடசொல் அன்னியமொழியேயாய் வருதலானும் இம்முறை வைக்கப்பட்டனவென்க. "சொல்லெனப் படுப பெயரே வினையென் றாயிரண் டென்ப வறிந்திசி னோரே.,,— "இடைச்சொற் கிளவியு முரிச்சொற் கிளவியு - மவற்றுவழி மருங்கிற் றோன்று மென்ப.,, என்றார் ஆசிரியர் தொல்காப்பியனாரு மென்க. (௰௩)

(௨௱௭௧) செந்தமிழாகித் திரியாதியார்க்கும்- தம்பொருள்விளக்குந் தன்மையவியற்சொல். *

(இ-ள்) மேலைச்சூத்திரத்து நிறுத்தமுறையானே இயற்சொல்லாமாறுணர்-ற்று. (ப-ரை) செந்தமிழாகி- செந்தமிழ்நிலத்து மொழியாகி, திரியாது-திரிசொற்போலாகாது, யார்க்கும்- கற்றோருக்குங் கல்லாதோருக்கும், தம்பொருள் - தம்பொருளை, விளக்கும்- ஒப்பவிளக்குகின்ற, தன்மைய- தன்மையையுடையவுலகவழக்கே, இயற்சொல்- இயற்சொல்லாகும், எ-று, (பொ-ரை) செந்தமிழ்நிலத்துமொழியாகி அந்நிலத்து மொழியுண் மேற்கூறப்படுந் திரிசொற்போலாது கற்றார்க்குங் கல்லாதார்க்கு மொப்பத் தம்பொருளை விளக்குந்தன்மையினையுடைய வுலகவழக்கியற்சொல்லாம். எ-று. ❁ யார்க்குமென்றதனால் உலகவழக்கென்பது பெற்றாம். [வ-று.] மண்-பொன்- என்றற்றொடக்கத்தன பெயரியற்சொல். நடந்தான்-வந்தான்- என்றற்றொடக்கத்தன வினையியற்சொல். அவனை- அவனால் - என்றற்றொடக்கத்துவரும் வேற்றுமையுருபு முதலியன இடையியற்சொல். — செந்தமிழ்நிலமாவ தியாதெனில்—"சந்தனப் பொதியச் செந்தமிழ் முனியுஞ் சவுந்தர பாண்டிய னெனுந்தமிழ் நாடனுஞ் - சங்கப் புலவருந் தழைத்தினி திருக்கு- மங்கலப்பாண்டி வளநா டென்ப.,, இவ்வாறன்றிச் செந்தமிழ்நிலம் வையையாற்றின் வடக்கெனக் கூறுவாருமுளர். கொடுந்தமிழ்நிலத்துப் புனனாடெனப்படுவது சோணாடாதலானும் பாண்டியனையே தமிழ்நாடனெனச் சான்றோர் கூறுதலானு மஃதுரையன்றென்க. (௰௪)

(௨௱௭௨) ஒருபொருள்குறித்த பலசொல்லாகியும் - பலபொருள்குறித்த வொருசொல்லாகியு-மரிதுணர்பொருளன திரிசொல்லாகும். *

(எ-ன்) நிறுத்தமுறையானே திரிசொல்லாமாறுணர் - ற்று. (ப-ரை) ஒருபொருள்- ஒருபொருளை, குறித்த-கருதிய, பலசொல்லாகியும் பலசொற்களாகியும், பலபொருள்-பலபொருள்களை, குறித்த-கருதிய, ஒருசொல்லாகியும்- ஒருசொல்லாகியும், அரிது-அரிதாக- உணர்-கற்றோர் அறிகின்ற, பொருளன - பொருளினவாய்வருவன, திரிசொல்லாகும்- திரிசொல்லாகும், எ-று. (பொ-ரை) ஒருபொருளைக் கருதிய பலசொல்லாகியும் பலபொருளைக்கருதிய ஒருசொல்லாகியுங் கற்றோருணரும் பொருளவாய்வருவன திரிசொல்லாம் எ-று. ❁ அரிதுணர்பொருளன வென்றமையான் ஒருபொருள்குறித்த பலசொல்லுள்ளும் பலபொருள்குறித்த ஒருசொல்லுள்ளும் வருமியற்சொல் லொழியக்கொள்க [வ-று.] கிள்ளை-சுகம்- தத்தை- என்றற்றொடக்கத்தன ஒருபொருள்குறித்த பலபெயர்த்திரிசொல். யானையுங் கோழியுஞ் சங்கும் வாரணம் என்றற்றொடக்கத்தன பலபொருள்குறித்த ஒருபெயர்த் திரிசொல். படர்ந்தான்- சென்றான்- என்றற்றொடக்கத்தன ஒருபொருள் குறித்த பலவினைத் திரிசொல். வரைந்தான்- ஆர்த்தான்- என்றற்றொடக்கத்தன பலபொருள்குறித்த ஒருவினைத்திரிசொல். சேறும்-வருதும்-என்றற்றொடக்கத்து விகுதிகள் ஒருபொருள்குறித்த பலவிடைத்திரிசொல். "கொல்லே யைய மசைநிலைக் கூற்றே" என்றற்றொடக்கத்தன பலபொருள்குறித்த ஓரிடைத்திரிசொல். "சாலவுறுதவநனிகூர்கழி மிகல்" என்றற்றொடக்கத்தன ஒருபொருள்குறித்த பலவுரித் திரிசொல். "கடியென் கிளவி காப்பே கூர்மை" என்றற்றொடக்கத்தன பலபொருள்குறித்த ஒருரித்திரிசொல். திசைச்சொல்லும் வடசொல்லும் ஒருபொருள் பலபொருளென்னும் விகற்பத்தான் வந்தனவேற் காண்க. ஈண்டியற்சொல் திரிசொலென்ற தவற்றினெழுத்துக்க டிரியாமையுந் திரிந்தமையுங் கருதியன்று வானரத்தின்முகந்தன்னியல்பா யிருந்ததேனும் நரர்முகச்செவ்விக்கு மறுதலைப்பட்டமைகருதி வலிமுகமெனப் பட்டதுபோலக் கல்வியேதுவானன்றி இயல்பாகத் தம்பொருளையுணரநிற்றலின் இயற்சொல்லென்றும் அவ்வியல்பிற்கு மறுதலைப்பட்டுக் கல்வியேதுவாற் றம்பொருளை யுணரநிற்றலிற் றிரிசொல்லென்றுங் கூறப்பட்ட தென்க. (௰௫)

(௨௱௭௩) செந்தமிழ்நிலஞ்சேர் பன்னிருநிலத்தினு -மொன்பதிற்றிரண்டினிற் றமிழொழிநிலத்தினுந்-தங்குறிப்பினவே திசைச்சொ லென்ப. ❋

(எ-ன்) நிறுத்தமுறையானே இயற்சொற் றிரிசொலென்றவற்றின் பின்னின்ற அவ்வியல்பினவாய பெயர்வினையிடையுரிகளை

இவ்வியலுள் இடுகுறி காரணமென்னுஞ் சூத்திரந்தொட் டிவ்வதிகாரத்தைந்தியலானு முணர்த்த நிறீஇ யொழிந்ததிசை வடசொற்களுட் டிசைச்சொல்லாமாறுணர்-ற்று. (ப - ரை) செந்தமிழ் நிலம்-செந்தமிழ்நிலத்தை, சேர்- சேர்ந்த, பன்னிருநிலத்தினும்-பன்னிரண்டு கொடுந்தமிழ் நிலங்களினும், ஒன்பதிற்றிரண்டினில் -பதினெண்மொழிகளுள், தமிழ்- தமிழ்நிலமானது,ஒழி-ஒழிந்த, நிலத்தினும்-நிலங்களினுமுள்ளோர், தங்குறிப்பின- தங்குறிப்பினவாய் அத்திசைகளினின்றுஞ் செந்தமிழ்நிலத்து வந்து வழங்குவன, திசைச்சொலென்ப- திசைச்சொல்லென்று சொல்லுவர் புலவர். எ-று. (பொ-ரை) செந்தமிழ்நிலத்தைச்சேர்ந்த பன்னிரண்டுகொடுந்தமிழ் நிலத்தின்கண்ணும் பதினெண்மொழியுட் டமிழுமேற்கூறும் வடசொற்குக் காரணமாகிய ஆரியமும் ஒழிந்த பதினாறுமொழியும் வழங்கும் பதினாறுநிலத்தின்கண்ணு முள்ளோர்தங்குறிப்பினவாய்ச் செந்தமிழோர் குறிப்பினவன்றி அத்திசைகளினின்றுஞ் செந்தமிழ்நிலத்து வந்துவழங்குவன திசைச்சொல்லென்று கூறுவர் புலவர். எ-று. ❁ செந்தமிழென்றமையாற் கொடுந்தமிழென்பதூஉம் ஆரியத்தின்காரியமாய வடசொல்லை வேறுகூறுதலிற் றமிழொழிநிலம் பதினாறென்பதூஉம் கற்றோரையு மற்றோரையுந் தழீஇத் தங்குறிப்பினவெனப் பொதுவமையிற் கூறினமையின் இத்திசைச்சொற்கள் அந்நிலத்தோர்க் கியற்சொல்லாய்ச் செந்தமிழோர்க் கவ்வாறு குறிக்கப்படாத திரிசொல்லாய் நிற்குமென்பதூஉம் பெற்றாம். கொடுந்தமிழ்நிலம் பன்னிரண்டாவன "தென்பாண்டி குட்டங் குடங்கற்கா வேண்பூழி-பன்றி யருவா வதன்வடக்கு-நன்றாய-சீத மலாடு புனனாடு செந்தமிழ்சே-ரேதமில் பன்னிருநாட் டெண்.,,—என்பனவாம். இவற்றுட் செந்தமிழ்ப்பாண்டிநாட்டின் றென்றிசைக்கண்ண தாகிய தென்பாண்டிநாட்டார் ஆவினைப் பெத்தமென்றும் சோற்றைச் சொன்றியென்றும், குட்டநாட்டார் தாயைத் தள்ளையென்றும், குடநாட்டார் தந்தையை அச்சனென்றும், கற்காநாட்டார் வஞ்சரைக் கையரென்றும், வேணாட்டார் தோட்டத்தைக் கிழாரென்றும், பூழிநாட்டார் சிறுகுளத்தைப் பாழியென்றும், அருவாநாட்டார் செறுவைச் செய்யென்றுஞ் சிறுகுளத்தைக் கேணியென்றும், அருவாவடதலையார் புளியை எகினென்றும், சீதநாட்டார் தோழனை எலுவனென்றுந் தோழியை இகுளையென்றும்,வழங்குவர். இவைமுதலியனவுந் தமிழொழிந்த பதினாறுநிலத்துமொழிகளுள் எப்பனவுஞ் செந்தமிழ்நாடு விரவிவருதல் காண்க. (௰௯)

(௨௱௭௪) பொதுவெழுத்தானுஞ் சிறப்பெழுத்தானு-மீரெழுத்தானு மியைவனவடசொல். ❁

(எ-ன்) வடசொல்லாமாறுணர்-ற்று. (ப-ரை) பொதுவெழுத்தானும் - ஆரியத்திற்குந் தமிழிற்கும் பொதுவெழுத்தாலும், சிறப்பெழுத்தானும் ஆரியத்திற்கேயுரிய சிறப்பெழுத்துத்திரிந்த வெழுத்தாலும், ஈரெழுத்தானும் - இவ்விரண்டெழுத்தினாலு ம், இயைவன- செந்தமிழ்ச்சொல்லை ஒப்பனவாகி வடதிசையிலிருந்து செந்தமிழ்நிலத்துவந்து வழங்குவன, வடசொல்-வடசொல்லாம், எ-று (பொ-ரை) ஆரியத்திற்குந் தமிழிற்கும் பொதுவெழுத்தானும் ஆரியத்திற்கேயுரிய சிறப்பெழுத்துத்திரிந்த வெழுத்தானும் இவ்விரண்டானுஞ் செந்தமிழ்ச்சொல்லை ஒப்பனவாகிவடதிசைக்கணின்றுஞ் செந்தமிழ்நிலத்துவந்துவழங்குவன வடசொல்லாம். எ-று ❁ பதவியலுள் "பொதுவெழுத்தொழிந்தநாலெழுந்திரியும்,,எனக்கூறினமையிற் சிறப்பெழுத்துத்திரிந்தவெழுத்தானுமென்பது பெற்றாம். அவ்வடசொற் காரியச்சிறப்பெழுத்துத் திரிந்தவெழுத்து ஆதிகாரணமாயும் அச்சிறப்பெழுத்து அநாதிகாரணமாயும் நிற்றலிற் சிறப்பெழுத்தானுமென்றார். அது பருத்தியாலியன்ற படாமென்றாற்போலும். ஆரியச்சொற் சிதைந்து வடசொல்லாதலின் இவைசொல்லாற் செந்தமிழ்ச் சொல்லை ஒவ்வாமைகருதி யெழுத்தொடுக்குமென்பார் எழுத்தானியைவன வென்றார். [வ-று.] அமலம்- உருவம்- கமலம்- காரணம்- காரியம்- என்றற்றொடக்கத்தன பொதுவெழுத்தானியைந்தன. சுகி- போகி- சுத்தி- என்றற்றொடக்கத்தன சிறப்பெழுத்தானியைந்தன. அரன்- அரி- கடினம்- சலம்- என்றற்றொடக்கத்தன ஈரெழுத்தானுமியைந்தன. அரன்- என்புழித் தமிழின்சிறப்பாகிய னகரவிறு பதவியலுள் "உவ்வுமாப்பிற,, என்றமையானமைந்தமையின் ஈண்டுவிதந்துகூறாராயினார். பிறவுமன்ன. "வடசொற்கிளவி வடவெழுத்தொரீஇ - யெழுத்தொடுபுணர்ந்த சொல்லாகும்மே.,, — "சிதைந்தன வரினு மியைந்தன வரையார்.,,— என்றார் ஆசிரியர் தொல்காப்பியனாரு மெனக. (௰௪)

(௨௭௫) இடுகுறிகாரண மரபோடாக்கந் - தொடர்ந்துதொழிலல காலந்தோற்று-வேற்றுமைக்கிடனாய்த் திணைபாலிடத்தொன்-றேற்பவும்பொதுவு மாவனபெயரே. ✻

(எ-ன்) இவ்வதிகாரத்தைற்றியலாற்று முணர்த்ததிறீஇய பெயர் வினை இடை உரி என்னு நான்கனுட் பெயரிலக்கண முணர்த்துவான்றொடங்கி அதன்பொதுவிலக்கண முணர் - ற்று. (ப-ரை) இடுகுறி- இடுகுறியும், காரண (க்குறி)- காரணக்குறியும், மரபு-மரபினையும், ஆக்கம்- ஆக்கப்பாட்டினையும், தொடர்ந்து-தொடர்ந்து, தொழிலல- வினையாலணையுங் காரணக்குறியல்லாதவை, கால

ம்-காலத்தை, தோற்ற - காட்டாமல், வேற்றுமைக்கு - எட்டுவேற்றுமையுஞ்சார்தற்கு, இடனாய்-இடமாகி, திணை- இருதிணையினும், பால்- ஐம்பாலினும், இடத்து- மூவிடத்தினும் - ஒன்று ஒன்றனை, ஏற்பவும் ஏற்பனவும், பொதுவும்-பலவற்றினை யேற்பனவும், ஆவன- ஆகிவருவன, பெயர்-பெயர்களாம், எ-று. (பொ-ரை) இடுகுறியுங் காரணக்குறியும் மரபினையும் ஆக்கப்பாட்டினையுந் தொடர்ந்து வினையாலணையும் காரணக்குறியொன்றுங் காலந்தோற்ற அல்லன காலந்தோற்றுவாய் எட்டுவேற்றுமையுஞ் சார்தற்கிடமாயிருதிணை யைம்பான்மூவிடத் தொன்றனையேற்பவும் பலவற்றினையேற்பவுமாய் வருவனபெயர்களாம். எ-று. ❁ [வ-று] ஆண்- பெண்- மரம்- தெங்கு- கமுகு- என்றற்றொடக்கத்தன இடுகுறி மரபுதொடர்ந்துவந்தன. அவன்-அவள் காளை- காரிகை- விலங்கு-பறவை- என்றற்றொடக்கத்தன காரணக்குறி மரபுதொடர்ந்து வந்தன. "பொன்போலுங் கள்ளிப் பொறியறக்குங் கானலிலே யென்பேதை செல்லற் கிசைந்தனளே - மின்போலு - மானவேல் முட்டைக்கு மாறாய தெவ்வர்போங் கானவேல் முட்டைக்குங் காடு" என்னும் பொய்யாமொழிப் புலவன்பாட்டில் வேட்டுக்குமரன் றன்பெயர் முட்டை என்றற்றொடக்கத்தன இடுகுறியாக்கந் தொடர்ந்தன. பொன்னன் - பூணன் - "மலைமகண் மகனே மாற்றோர் கூற்றே" என்றற்றொடக்கத்தன காரணக்குறி யாக்கம் தொடர்ந்தன. நடந்தவனை - நடந்தானை - என்றற்றொடக்கத்தன வினையாலணையுங் காரணக்குறி காலங்காட்டின. ஏனையிலக்கணங்கண் முன்னும் பின்னும் பெறப்படுதலின் ஈண்டுக்காட்டிற்றிலம். ஆண் பெண்முதலிய இடுகுறிப்பெயரும், அவன் அவள் முதலிய காரணப்பெயரும், இடையே யொருவரால் ஆக்கப்பட்டனவன்றி அவ்விலக்கணங்களோடு தோன்றிய பொருள்கட்கெல்லாந் தொன்றுதொடு மரபுபற்றி வருதலானும், முட்டை யென்றற்றொடக்கத்து இடுகுறிப்பெயரும், பொன்னன்- என்றற்றொடக்கத்துக் காரணப்பெயரும், மரபுபோலத் தொன்றுதொட்டனவன்றி அப்பொருள்கட்கு இடையே ஒருவரால் ஆக்கப்பட்டு வருதலானும், இடுகுறிகாரணமிரண்டும் மரபையும் ஆக்கத்தையுந்தொடர்ந் தென்றார். இதற்கு இவ்வாறன்றி இடுகுறிப்பெயர் காரணப்பெயர் இரண்டுமொழிய இடையன்-பாகன்- என்னு மரபுப்பெயர் தெங்கு கடுவென்னும் ஆகுபெயரெனப் பொருள்கொள்வாருமுளர், எல்லாப்பெயரும் இடுகுறிப்பெயர் காரணப்பெயர் என்னுமிரண்டாய் அடங்குவதன்றி வேறின்மையானும் — "இடுகுறி காரணப் பெயர்பொதுச் சிறப்பின" — என வரையறைகூறிப் போந்தமையானும், அது பொருந்தாதென்க. (௨௮)

(உ௱எரு) அவற்றுள், கிளையெண்குழூஉமுதற் பல்பொருடி
ணைதே- மூர்வானகப்புற முதலநிலன்யாண் - டிருதுமதிநா ளா
திக்காலந் - தோள்குழன்மார்புகண் காதுமுதலுறுப் - பளவறி
வொப்பு வடிவுநிறங்கதி- சாதிகுடிசிறப் பாதிப்பல்குண மோத
லீத லாதிப்பல்வினை - யிவையடைசுட்டு வினாப்பிறமற் றொடு- ற்ற
னவ்வீறு நம்பியாடூஉ - விடலைகோவேள் குரிசிற்றோன்ற - லின்
னனவாண்பெய ராகுமென்ப. *

(எ-ன்) மேற் றிணைபாலிடத்தோன் றேற்பவுமென்றவற்றுள்
உயர்திணை யாண்பாற் குரிய பெயர்களுணர் - ற்று. (ப- ரை)
அவற்றுள்- மேற் பெயரொன்றவற்றுள், கிளை- சுற்றமும், எண்- எ
ண்ணும், குழூஉ - கூட்டமும், முதல் - முதலாகிய, பலபொரு
(ளோடு)- பலபொருள்களோடும், திணை- ஐந்திணையும், தேம்- தே
யமும், ஊர்- ஊரும், வான்-வானும், அகம்- அகமும், புறம்- புற
மும், முதல- முதலியனவாகிய, நில (னொடு)- இடங்களோடும், யா
ண்டு- வருடமும், இருது- பருவமும், மதி- மாதமும், நாள்- நாண்
மீனும், ஆதி- முதலாகிய, கால (மொடு) - காலங்களோடும், தோள்
-புயமும், குழல் - மயிரும், மார்பு- மார்பும், கண்- கண்ணும், கா
து-காதும், முதல்-முதலாகிய, உறுப் (பொடு)- அவயவங்களோடு
ம், அளவு- அளவும், அறிவு- அறிவும், ஒப்பு- ஒப்பும், வடிவு- வடி
வும், நிறம்-நிறமும், கதி நாற்கதியும், சாதி- குலமும், குடி- குடி
யும், சிறப்பு- சிறப்பும், ஆதி- முதலாகிய, பல்குண (மொடு)-பல
குணங்களோடும், ஓதல் - ஓதுதலும், ஈதல் - கொடுத்தலும், ஆதி-
-முதலாகிய, பல்வினை (யொடு)- பலதொழில்களோடும், இவை-இ
வற்றை, அடை - அடைந்த, சுட்டுவினாப்பிறமற்றொடு- சுட்டும் வி
னாவும் பிறவும் மற்றும் ஆகியநான்கனோடும், உற்ற- பொருந்திய,
னவ்வீறு- னகரமெய்யீற்றுப்பெயர்களும், நம்பி யாடூஉ விடலை
கோ வேள் குரிசி றோன்றல்- நம்பிமுதலாகச்சொல்லப்பட்ட இப்
பெயர்களும், இன்னன - இவைபோல்வனபிறவும், ஆண்பெயரா
கும்- உயர்திணை யாண்பாற்பெயர்களாகும், என்ப - என்றுசொல்
லுவர் புலவர். எ-று. (பொ - ரை.) மேற் பெயரெனவென்றவற்று
ள் இங்ஙனம் பகுத்துக்கூறிய பொருளாதி ஆறனோடும் இவற்றை
யடையுஞ் சுட்டினோடும் வினாவினோடும் பிறவென்பதனோடும்
மற்றென்பதனோடும் பொருந்திய னகரவீற்றுப்பெயர்களும் ந
ம்பிமுதலாக வெடுத்தோதியபெயர்களும் இவைபோல்வனபிறவு
ம் உயர்திணையாண்பாற் பெயர்களாமென்று சொல்லுவர் புலவ
ர் எ-று. ❁ "த ந நு எம் முதன் மகரபிடை யிட்டு - னளரவா
யீற்றன சுற்றப் பெயர்;" என்பவாகலிற் கிளைப்பெயர் அறிக

சுட்டுமுதலிய நான்கிடைச்சொற்குந் தமக்கென வோர்பொருளின்றிப் பொருளாதி யாறனுள் யாதானுமொன்றைக் கூறுவான் குறி பின்வழியடைந்து உணர்த்தலின் இவையடைசுட்டு வினுப்பிற மற்றென்றார். வினுச்சுட்டுடனும் வேறுமாமெனப்படுமது. [வ-று.] தமன்- நமன்- நுமன்- எமன்- என்பன கிளையான்வருபெயர். ஒருவன் என்பது எண்ணான்வருபெயர். அவையத்தான்- அத்திகோசத்தான்-என்பன குழூஉவான்வருபெயர். பொருளான்- பொன்னன் முடியன்- என்றற்றொடக்கத்தன முதலென்பவற்றான் வருபெயர். இவை பொருளான் வருபெயர் வெற்பன்- பொருப்பன்-சிலம்பன்- (எ-ம்) மறவன்-எயினன்- (எ-ம்) இடையன்- ஆயன்- (எ-ம்) ஊரன்-மகிழ்நன்- (எ-ம்) சேர்ப்பன்- துறைவன்- (எ-ம்) வருவன குறிஞ்சிமுதலிய ஐந்திணையானும் வருபெயர். சோழியன் - கொங்கன் - என்பன தேயத்தான் வருபெயர். கருவூரான்- மருவூரான்- என்பன ஊரான்வருபெயர். வானத்தான்- அகத்தான்- புறத்தான்- என்பன வான்முதலிய மூன்றானும் வருபெயர் மண்ணகத்தான் - பாதலத்தான் - என்றற் றொடக்கத்தன முதலவென்பவற்றான் வருபெயர். இவை இடத்தான்வருபெயர். மூவாட்டையான்-வேனிலான்-தையான்-ஆதிரையான் என்பன யாண்டுமுதலிய நான்கானும்வருபெயர். நெருநலான் - காலையான் மாலையான்-என்றற்றொடக்கத்தன ஆதியென்பவற்றான்வருபெயர். இவை காலத்தான் வருபெயர். திணிதோளன்-செங்குஞ்சியன்- வரைமார்பன் - செங்கண்ணன் - குழைக்காதன்- என்பன தோண்முதலிய வைந்தானும் வருபெயர். குறுந்தாளன்- நெடுங்கையன்- என்றற்றொடக்கத்தன முதலென்பவற்றான் வருபெயர். இவை சினையான்வருபெயர். பெரியன் புலவன்- பொன்றொட்பான் கூனன் கரியன் மானுடவன்-பார்ப்பான்-சேரன்- ஆசிரியன்-என்பன அளவுமுதலிய ஒன்பதானும்வருபெயர். நல்லன் தீயன்- என்றற்றொடக்கத்தன ஆதியென்பவற்றான் வருபெயர். இவை குணத்தான் வருபெயர். ஓதுவான் -ஈவான்- என்பன அவ்விரண்டானும்வருபெயர். கணக்கன் - பிணக்கன் -என்றற்றொடக்கத்தன ஆதியென்பவற்றான் வருபெயர். இவை தொழிலான் வருபெயர். அவன்-இவன்-உவன்-எவன்-யாவன் ஏவன்-பிறன்- மற்றையான் என்பனசுட்டுமுதலிய நான்கானும்வருபெயர். நம்பிமுதலியபெயர்களேழு மூன்றாக்கிடையிற் காண்க. இன்னனவென்றமையான், வில்லி-வாளி-சென்னி-கிள்ளி- என்றற்றொடக்கத்து உயர்திணையாண்பாற் பொருள்குறித்து வருவனவெல்லாங்கொள்க. "இவையடைசுட்டு வினுப்பிறமற்றோடுற்றனவ்வீறு" என்பவற்றிற்கு, அப்பொருளன் - இப்பொருளன்- உப்பொருளன்- எப்பொருளன்-

பிறபொருளன்- மற்றப்பொருளன்- என உதாரணங் காட்டுவாரு முளர். சுட்டிமுதலிய நான்கனோடும் னகரவீறுறுத லின்மையா னவற்றிற்கு அவைகாட்டாகா வென்க. (௰௯)

(௨௭௭) கிளைமுதலாகக் கிளந்தபொருள்களுள் - ளவ்வொற்றிக ரக் கேற்றவீற்றவுந் - தோழிசெவிலி மகடூஉநங்கை - தையலோ டின்னன பெண்பாற்பெயரே. *

(என்.) உயர்திணைப் பெண்பாற் குரியபெயருணர் - ற்று. (ப-ரை) கிளைமுதலாக - சுற்றமுதலாக, கிளந்த - முன்சூத்திரத்திலே பகுத்துச்சொல்லப்பட்ட, பொருள்களுள்- அறுவகைப்பொருள்களுள், ளவ்வொற்றிகரக்கு- ளகரமெய்யும் இகரவுயிரும்பொருந்தற்கு, ஏற்ற-ஏற்ற, ஈற்றவும்-ஈற்றுப்பெயர்களும், தோழிசெவிலி மகடூஉ நங்கை தையலோடு- தோழிமுதலாக எடுத்துச்சொல்லப்பட்டபெயர்களும் ஆகிய இவற்றுடனே, இன்னன - இவைபோல்வனபிறவும், பெண்பாற்பெயர் - உயர்திணைப்பெண்பாற்பெயர்களாம், எ-று. (பொ-ரை) மேலைச்சூத்திரத்துக் கிளைமுதலாகப் பகுத்துக்கூறிய அறுவகைப்பொருள்களுள் ளகரவொற்றும் இகரவுயிருமுறுதற் கேற்ற அவ்விரண்டீற்றவாய்வரும்பெயர்களும் தோழிமுதலாக எடுத்தோதியபெயர்களும் இவற்றுடனே இவைபோல்வனபிறவும் உயர்திணைப்பெண்பாற் பெயர்களாம். எ-று.

✿ [வ-று.] தமள்-நமள் நுமள்-எமள்- அவையத்தாள்- அத்திகோசத்தாள் பொருளாள்-பொன்னாள்- (எ-ம்) ஒருத்தி - அவையத்தி அத்திகோசத்தி - பொன்னி - (எ-ம்) பொருளாதி யாறனுள்ளும் ளகரவொற்றிற்கும் இகரவுயிர்க்கும் ஏற்பனவறிந் தொட்டிக்கொள்க. ஏற்றவீற்றவென்றமையாற் கிளைப்பெயர் இகரவீறேலாமையும் எண்ணுப்பெயர் ளகரவொற்றீறேலாமையுங்காண்க. பிறவுமென்ன. தோழிமுதலிய ஐந்துபெயரும் உரைக்கிடையிற் காண்க. இன்னன வென்றமையான், இகுளை - மாது - அங்கனை - என்றற்றொடக்கத்து உயர்திணைப்பெண்பால்குறித்து வருவனவெல்லாங் கொள்க. (௨௰)

(௨௭௮) கிளந்தகிளைமுத லுற்றரவ் வீற்றவுங் - கள்ளெ னீற்றி னேற்பவும்பிறவும்- பல்லோர்பெயரின் பகுதியாகும். *

(என்.) பலர்பாற்குரியபெயருணர் - ற்று. (ப-ரை) கிளந்த-முன்னே சொல்லப்பட்ட, கிளைமுதல்- சுற்றமுதலாகிய அறுவகைப் பொருளையும், உற்ற- பொருந்திய, ரவ்வீற்றவும் - ரகரமெய்யீற்றுப்பெயர்களும், கள்ளெனீற்றின் - கள்ளென்னும்விகுதியையிறுதியுடையபெயர்களுள், ஏற்பவும்- இவ்விடத்திற்குப் பொருந்திவருவனவும், பிறவும்- இவைபோல்வனபிறவும், பல்லோர்பெயரின்

பகுதியாகும்-பலர்பாலின்பெயர்களாம், எ-று. (பொ-ரை) மேற்கூறப்பட்டகிளைமுதலிய அறுவகைப்பொருளையும் பொருந்திய ரகரவொற்றீற்றுப்பெயர்களுங் கள்ளென்னும்விகுதியை யீறாகவுடையபெயர்களுள் ஈண்டைக்குப்பொருந்தி வருவனவும் இவைபோல்வனபிறவும் பலர்பாலின்பெயர்களாம். எ-று. ❀ கள்ளீறு பகுதிப்பொருள் விகுதியாயும் விகுதிமேல் விகுதியாயும் வருதலின் உம்மையிடையிட்டு வேறோதினார் கள்ளெனீறினைற்பவுமென்றார் அஃறிணைக்கண்ணுங்கள்ளீற்றுப்பெயர்வருதலின். பல்லோர்பகுதியின் பெயராமெனக்கூட்டுக. பகுதியென்பதுபால். தொகுப்புத்தொகுதி யெனநின்றாற்போலப் பகுப்புப்பகுதியென நின்றது. பகுப்புப் பல்லோர்பெயரின் பகுப்பாகு மெனினுமமையும். [வ-று.] தமர்-நமர்-நுமர்-எமர்- இருவர்-மூவர்- எனப் பொருளாதி யாறனோடு மொட்டுக. கோக்கள்-மனுக்கள்- என்றற்றொடக்கத்தன பகுதிப்பொருள் விகுதியீற்றுப்பெயர்கள். தமர்கள்-நமர்கள்-அரசர்கள்-மறவர்கள்- என்றற்றொடக்கத்தன விகுதிமேல் விகுதியீற்றுப்பெயர்கள். இவ்விகுதிமேல் விகுதியிடைச்சொல்லாதலின்,—"ஒருபொருட் பன்மொழி சிறப்பினின்வழா,, என்னுஞ் சூத்திரத்தாற்கூறும்வழுவமைதியாய்வந்தன. பிறவுமென்றமையான், மாந்தர்-மக்கள்- என்றற்றொடக்கத்துப் பலர்பால் குறித்து வருவனவெல்லாங் கொள்க. (உக)

(உ௭௯) வினாச்சுட்டுடனும் வேறுமாம்பொரு-ளாதியுறுதுச சு
ட்டணையாய்த-மொன்றெனெண்ணின்னன வொன்றன்பெயரே.

(எ-ன்) அஃறிணை யொருமைப்பாற்குரியபெயருணர்-ற்று. (ப-ரை) வினாச்சுட்டுடனும், வினாவிலுஞ் சுட்டிலு மறைந்து அவற்றுடனாகியும், வேறுமாம் - வினாவவுஞ் சுட்டவும்படாது வேறாகியும்வருகிற, பொருளாதி- பொருளாதியாறனையும், உறு- பொருந்திய, து- துவ்விகுதியீற்றுப்பெயரும், சுட்டணையாய்தம்-சுட்டோடுகூடிய ஆய்தத்தைப்பொருந்திய துவ்விகுதியீற்றுப் பெயரும், ஒன்றெனெண்-ஒன்றென்கிற எண்ணுகுபெயரும், இன்னன- இவைபோல்வனபிறவும், ஒன்றன்பெயர் - அஃறிணை யொருமைப்பாற்பெயராகும், எ-று. (பொ-ரை) வினாவின்கண்ணுஞ் சுட்டின்கண்ணும் கரந்தவற்றினுடனாயும் வினாவவுஞ் சுட்டவும்படாது வேறாயும்வரும் பொருளாதியாறனையும் பொருந்திய துவ்விகுதியீற்றுப்பெயருஞ் சுட்டோடுகூடிய ஆய்தத்தைப்பொருந்திய துவ்விகுதியீற்றுப்பெயரும் ஒன்றென்னு மெண்ணுகுபெயரும் இவைபோல்வனபிறவும் அஃறிணையொருமைப்பெயராம் எ-று. ❀ [வ-று.] எது-யாது எது- (எ-ம்) அது இது உது- (எ-ம்) குழையது- நிலத்தது- மூலத்தது-கோட்டது-குறியது- ஆடலது- (எ-ம்)

அஃது-இஃது-உஃது- (எ-ம்) ஒன்று- (எ-ம்) வரும். இன்னனவென்றமையாற், பிறிது- மற்றையது - என்றற்றொடக்கத்து அஃறிணையொருமைப்பொருள்குறித்து வருவனவெல்லாங்கொள்க. சுட்டணையாய்தம் இப்பகுதி விகுதிப்புணர்ச்சிக்கட் சந்திவகையான் வந்ததன்மையின் இச்சுட்டுப்பெயர்கள் வேறோதப்பட்டனவென்பதூஉம் இவைபோலெடுத்தோதாதாமையின் ஆய்தமணையாச் சுட்டுப்பெயர்களே வினாச்சுட்டுடனு மென்றவற்றுள் அமைந்துகிடந்தனவென்பதூஉம் வினாச்சுட்டுடனு மென்பதற்கு, எக்குழையது- அக்குழையது- என உதாரணங்காட்டுவது பொருந்தாதென்பதூஉம் பெற்றாம். (உஉ)

(உ.அ) முன்னரவ்வொடு வருவையவ்வுஞ்-சுட்டிறுவவ்வுங் கள்ளிறுமொழியு மொன்றலெண்ணு முள்ளவில்ல- பல்லசில்ல வுளவில்பலசில - வின்னவும்பலவின் பெயராகும்மே. *

(எ-ன்) அஃறிணைப் பன்மைப்பாற் குரியபெயருணர் - ற்று. (ப-ரை) முன்னர்- முன்னேசொல்லப்பட்ட, அவ்வொடு - வினாச்சுட்டுடனும் வேறுமாம்பொருளாதி யாறனோடும், வரு- ஏற்றபடிவருகிற, வை (யும்)-ஐவிகுதியீற்றுப்பெயர்களும், அவ்வும்- அகரவீற்றுப்பெயர்களும், சுட்டிறுவவ்வும்- வகரமெய்யீற்றுச் சுட்டுப்பெயர்களும், கள்ளிறுமொழியும் - கள்ளென்னும் பகுதிப்பொருள் விகுதியீற்றுப்பெயர்களும், ஒன்றலெண்ணும்- இரண்டுமுதலாகிய எண்ணுதபெயர்களும், உள்ள வில்ல பல்ல சில்ல வுள வில பல சில - உள்ளவென்பதுமுதலாகிய குறிப்புவினையாலணைந்தவெட்டுப்பெயர்களும், இன்னவும்- இவைபோல்வனபிறவும், பலவின்பெயராகும்- அஃறிணைப்பன்மைப்பாற்பெயர்களாகும், எ-று. (பொ-ரை) முன்னர்க்கூறிய வினாச்சுட்டுடனும் வேறுமாம்பொருளாதி யாறனோடும் ஏற்றபெற்றிவரும் வகரவைகார வீற்றுப்பெயர்களும் அகரவீற்றுப்பெயர்களும் வகரவொற்றீற்றுச்சுட்டுப்பெயர்களும் கள்ளென்னும்பகுதிப்பொருள் விகுதியிறுதியாகிய பெயர்களும் ஒன்றல்லாத இரண்டுமுதலிய வெண்ணுகுபெயர்களும் 'உள்ளவென்பதுமுதலிய குறிப்புவினையாலணைந்தவெட்டுப்பெயர்களும் இவைபோல்வனபிறவும் அஃறிணைப்பன்மைப்பெயர்களாம் எ-று. ❁ மேலைச்சூத்திரங்களுட் கூறியவாறே உறுதிகூறாது வருவையென்றதனை வேற்றபெற்றி யென்பதூஉம் உள்ளவில்லமுதலிய பண்பொடுவரும் 'அகரவீற்றுப்பெயர்கள் முன்னரவ்வொடு வருவையவ்வு மென்பவற்று ளடங்குதலிற் 'பின்னர்க்கூறிய வுள்ள வில்ல முதலியவெட்டுங் குறிப்பு வினையாலணையும் பெயரென்பதூஉம் பெற்றாம். [வ-று.] எவை - யாவை- (எ-ம்) அவை- இவை- உவை- (எ-ம்) நெடியவை - கரியவை-

நல்லவை தீயவை-உள்ளவை-இல்லவை- (எ-ம்) பொருள - பொரு
ளன-அகத்த-அகத்தன-மூலத்த-மூலத்தன்-கோட்ட- கோட்டன-க
ரிய-கரியன-உள்ள-உள்ளன-இல்ல-இல்லன-ஒதுவ-ஒதுவன-ஈவ-ஈ
வன-(எ-ம்) அவ்-இவ்-உவ்- (எ-ம்) யானைகள்-குதிரைகள்-(எ-ம்)
இரண்டு-மூன்று-பத்து-நூறு-ஆயிரம்- (எ-ம்) வரும், உள்ள முத
லியவெட்டும் உரைக்கிடையிற்காண்க. இன்னவுமென்றமையான்
யா பிற மற்றைய - என்றற்றொடக்கத்து அஃறிணைப்பன்மைப்
பொருள்குறித்து வருவனவெல்லாங் கொள்க. (உரு)

(உஅக) பால்பகாவஃறிணைப் பெயர்கள்பாற் பொதுமைய. *

(என்) மேற் பொதுவுமாவன பெயரோவென்றார் அவற்றுள்
அஃறிணையிருபாற்கு முரியபொதுப்பெய ருணர்-ற்று. (ப-ரை)
அஃறிணை- அஃறிணைப்பெயர்களுள், பால்பகா - பால்பகுக்கப்ப
டாத, பெயர்கள்-பெயர்களனைத்தும், பால்- அத்திணையிருபாலுக்
கும், பொதுமைய - பொதுப்பெயர்களாம், எ-று. (பொ-ரை)
அஃறிணைப்பெயர்களுள் இங்ஙனம் பால்பகுத்தலையொழிந்து நி
ன்றபெயர்கள் அனைத்துமத்திணையிருபாற்குமுரியபொதுப்பெ
யர்களாம், எ-று. [வ-று.] யானைவந்தது-யானைவந்தன-குதிரைவந்
தது-குதிரைவந்தன-மரம்வளர்ந்தது-மரம்வளர்ந்தன- கண்சிவந்த
து-கண்சிவந்தன-எனவரும். இச்சூத்திரந் திணைப்பொதுப்பெயரி
ன் பிற்கூறாது ஈண்டுக்கூறிய தென்னையெனின், விளங்குதற்பொ
ருட்டொன்றினைமுடித்த றன்னின்முடித்த லென்னுமுத்தியாற்
கூறப்பட்டதென்க. (உச)

(உஅஉ) முதற்பெயர்நான்குஞ் சினைப்பெயர்நான்குஞ் சினை
முதற்பெயரொரு நான்குமுறையிரண்டுந்- தன்மைநான்கு மு
ன்னிலையைந்து- மெல்லாந்தாந்தா னின்னனபொதுப்பெயர். *

(என்) இருதிணைக்குமுரிய பொதுப்பெயர்களைத் தொகுத்
துணர்-ற்று. (ப-ரை) முதற்பெயர்நான்கும்- முதற்பெயராகிய
நான்குபெயரும், சினைப்பெயர்நான்கும் - சினைப்பெயராகியநா
ன்குபெயரும், சினைமுதற்பெயரொருநான்கும் - சினைமுதற்பெ
யராகிய நான்குபெயரும், முறைப் (பெய) ரிரண்டும் - முறைப்
பெயராகிய இரண்டுபெயரும், தன்மைப் (பெயர்) நான்கும்- த
ன்மைப்பெயராகிய நான்குபெயரும், முன்னிலைப் (பெய)ரைந்
தும்- முன்னிலைப்பெயராகிய ஐந்துபெயரும், எல்லாந்தாந்தான்
-எல்லாம் தாம் தான் என்கிறமூன்றுபெயரும், இன்னன - இவை
போல்வனபிறவும், பொதுப்பெயர் - இருதிணைக்கும் பொதுப்
பெயர்களாம். எ-று. (பொ-ரை) முதற்பெயர்முதலான வொன்
பதுகூற்றுப்பெயர்களும் இவைபோல்வனபிறவும் இருதிணைக்கு
முரியபொதுப்பெயர்களாம். எ-று. ❁ பெயரொன்பதனை முறை

முதலியவற்றினோடுங் கூட்டுக. எல்லாமென்பதுமுதல் இன்னன வென்பதீறாகநின்ற செவ்வெண்ணின் இறுதிக்கணுன்குமென்னுந் தொகைமெயாடு உம்மைதொக்கன. எல்லாம்-தாம்-தான்- என விதந்த மூன்றுபெயருமொழிய இன்னனவென்றமையாற், சூரியனுதித்தான் - சூரியனுதித்தது - என ஒருபொருளையே உயர்திணைப்பொருளாக்கியும் அஃறிணைப்பொருளாக்கியுங் கூறப்படும் பொதுப்பெயர்முதலியனவும், ஊமைவந்தான் - ஊமைவந்தாள்- என உயர்திணையிருபாலையும் உணர்த்தும்பொதுப்பெயர்முதலியனவுந் தன்மை முன்னிலைவினையாலணையும்பெயரும் பிறவுங் கொள்க. முதற்பெயர்முதலாக முன்னிலைப்பெயரீறாகக் கூறிய அறுவகைப்பெயர்கட்குமுதாரணம் பின்வருந்தத்தம் வகைச்சூத்திரங்களுட் காண்க. உயர்திணைக்குச்சிறந்தபெயர் அஃறிணைக்கண்விரவியும் அஃறிணைக்குச்சிறந்தபெயர் உயர்திணைக்கண்விரவியும்வருதலின் இவற்றை விரவுப்பெயரென்றுங்கூறுப. அங்ஙனம்வருதல் காட்டுமுதாரணங்களுட் காண்க. (௨௫)

(௨௬) ஆண்மைபெண்மை யொருமைபன்மையி - னாமந்
நான்மைக ளாண்பெண் முறைப்பெயர். *

(எ-ன்) மேற்றொகுத்துணர்த்தியவற்றுண் முதற்பெயர்முதன் முறைப்பெயரீறாகக் கிடந்தவற்றை வகுத்துணர்-ற்று. (ப-ரை) ஆண்மை பெண்மை யொருமை பன்மையின் - ஆண் முதலாகிய இந்நான்குபாலுங்காரணமாக, ஆம் - அம்முதற்பெயருஞ் சினைப்பெயருஞ் சினைமுதற்பெயரும், நான்மைகளாம்- தந்நான்காகும், ஆண்பெண் - ஆண்மை பெண்மை யென்கிற இருபாலுங் காரணமாக, முறைப்பெயர்- முறைப்பெயர், (இரண்டாம்) - இரண்டாகும், எ-று. (பொ-ரை) ஆண்மைமுதலிய இந்நான்குபாலுங் காரணமாக முற்கூறிய முதற்பெயர் சினைப்பெயர் சினைமுதற்பெயர் என்னுமூன்றும் ஒவ்வொன்று நந்நான்காம் ஆண்மை பெண்மையென்னு மிருபாலுங்காரணமாக முறைப்பெயர் இரண்டாம். எ-று. * மேலைச்சூத்திரத் திரண்டென்பதனையும் இச்சூத்திரத்தாமென்பதனையுங்கூட்டி முறைப்பெயர் இரண்டாமென்வுரைத்துக் கொள்க. உயர்திணைக்கேயுரிய பலர்பாலையும் அஃறிணைக்கேயுரிய ஒன்றுபலவென்னும் இருபாலையுமொழித்து இருதிணைக்கும்பொதுவாகிய ஆண்மை பெண்மை ஒருமை பன்மையென்னு நான்குபாலினையும் இவற்றுண்முறைகூறுதற்குரிய ஆண்மை பெண்மையென்னு மிருபாலினையுங்காரணமாக இச்சூத்திரத்துட் கூறினர் இவற்றின்காரியங்களை இனத்தென்றறிபொருளாக மேலைச்சூத்திரத்துட் கூறியவாறு உய்த்துணர்தற் கென்க.

எனவே, ஆண்மைமுதற்பெயர் - பெண்மைமுதற்பெயர் - ஒருமைமுதற்பெயர்- பன்மைமுதற்பெயர் (எ-ம்) ஆண்மைச்சினைப்பெயர்- பெண்மைச்சினைப்பெயர்- ஒருமைச்சினைப்பெயர்- பன்மைச்சினைப்பெயர்- (எ-ம்) ஆண்மைச்சினைமுதற்பெயர்- பெண்மைச்சினைமுதற்பெயர் - ஒருமைச்சினைமுதற்பெயர் - பன்மைச்சினைமுதற்பெயர்- (எ-ம்) ஆண்மைமுறைப்பெயர் - பெண்மைமுறைப்பெயர்- (எ-ம்) பெயர்பெறு மென்பதாயிற்று. [வ-று.] சாத்தன்- சாத்தி- கோதை- கோதைகள்- இவை முதற்பெயர்நான்கு. முடவன்- முடத்தி- செவியிலி- செவியிலிகள்- இவை சினைப்பெயர்நான்கு. முடக்கொற்றன்- முடக்கொற்றி- கொடும்புறமருதி- கொடும்புறமருதிகள் - இவை சினைமுதற்பெயர்நான்கு. தந்தை- தாய்- இவை முறைப்பெயரிரண்டு. கள்விகுதி அஃறிணைப் பன்மைக்குச் சிறந்ததாய் உயர்திணைப்பன்மைக்கண்ணும்விரவி வருதலின் ஒருமைப்பொதுப்பெயரோடு கள்விகுதி புணர்ந்த துணையானே அவை பன்மைப்பொதுப்பெயராயின. (உகூ)

(உஅச) அவற்றுள், ஒன்றேயிருதிணைத் தன்பாலேற்கும். *

(எ-ன்) திணைப்பொதுவாய்நின்றபெயர்கள் பாற்பொதுவாய் நிற்குமாறுணர்- ற்று. (ப-ரை) அவற்றுள்- முதற்பெயர்முதலாகச்சொல்லப்பட்டவிருபத்தாறும் பிறவுமாகிய பொதுப்பெயர்களுள், ஒன்றே- ஒவ்வொன்றே, இருதிணை- இருதிணையிலும், தன்பால்-தன்றன்பாலை, ஏற்கும்- ஏற்றுவரும். எ-று. (பொ-ரை) முதற்பெயர்முதலவாகக்கூறப்பட்டவிருபத்தாறும் பிறவுமாகியபொதுப்பெயர்களுள் ஒவ்வொன்று இருதிணைக்கண்ணும் தன்றன்பால்களை ஏற்கும். எ-று. ※ எனவே ஆண்மைப்பொதுப்பெயர் உயர்திணை யாண்பாலினையும் அஃறிணை யாண்பாலினையும் பெண்மைப்பொதுப்பெயர் உயர்திணைப்பெண்பாலினையும் அஃறிணைப் பெண்பாலினையும் ஒருமைப் பொதுப்பெயர் உயர்திணை யானொருமை பெண்ணொருமையினையும் அஃறிணை யொருமையினையும் பன்மைப்பொதுப்பெயர் உயர்திணைப்பன்மையினையும் அஃறிணைப் பன்மையினையும் ஏற்குமென்ப தாயிற்று. [வ-று.] சாத்தனிவன்- சாத்தனிவ்வெருது- (எ-ம்) சாத்தியிவள்- சாத்தியிப்பசு- (எ-ம்) கோதையிவன் - கோதையிவள்- கோதையிது- (எ-ம்) கோதைகளிவர்-கோதைகளிவை (எ-ம்) தந்தையிவன்- தந்தையிவ்வெருது (எ-ம்) தாயிவள்- தாயிப்பசு- (எ-ம்) யானம்பி- யானங்கை-யான்பூதம் (எ-ம்) யாமக்கள்- யாம்பூதங்கள் (எ-ம்) நீநம்பி நீநங்கை- நீபூதம்- (எ-ம்) நீயிர்மக்கள்- நீயிர்பூதங்கள்- (எ-ம்) அவனெல்லாம்- அவையெல்லாம்- (எ-ம்) அவர்தாம்- அவைதாம் (எ-ம்) அவன்றான்- அவடான்- அதுதான்- (எ-ம்) வரும். இவற்றுட் காட்

டாதொழிந்தனவும் பிறவு மிவ்வாறேயொட்டிக்காண்க. ஆண்மை
ப்பொதுப்பெயர் பெண்மைப்பொதுப்பெயர்கட்கு, ஆண்மக
கள்- ஆண்விலங்கு- பெண்மக்கள்- பெண்விலங்கு- காளைவந்தான்-
காளைவந்தது- மான்வந்தாள்- மான்வந்தது- என இக்காலத்துப்பி
ன்றுவருவன காட்டலுமொன்று. பிறவுமன்ன. செஞ்ஞாயிறு எ
ன்றாற்போலத் தன்னோடியைபின்மைநீக்கிய விசேடணத்தான்
விசேடிக்கப்பட்டனவன்றிச், செந்தாமரை- என்றாற்போலப் பி
றிதோடியைபுநீக்கிய விசேடணத்தான் விசேடிக்கப்பட்டனவாகி
ஆண்மைப்பொதுப்பெயர் பெண்மைப்பொதுப்பெயர் என்று
ம், ஒருமைப்பொதுப்பெயர் பன்மைப்பொதுப்பெயரென்றும்,
இனச்சுட்டுளவாய்வருதலிற் றன்பாலேற்குமெனக் கூறினரென்க.
இனி ஆசிரியர் தொல்காப்பியர் பன்மைசுட்டியபெயரென்றது
பலபாலையுஞ் சுட்டிநிற்றலிற் பிறிதியைபுநீக்கிய விசேடணம
டுத்து நின்றதென்பார்.—"பன்மை சுட்டிய வெல்லாப் பெயரு
-மொன்றே பலவே யொருவ னென்னு -மென்றிப் பாற்கு மோ
ரன் னவ்வே." எனக்கூறித் தன்பாலேற்றலை யுண்மையாற் றழீஇ
யினர். அவ்வாசிரியர் கருத்தறியாது பன்மைப்பொதுப்பெய
ருட் பன்மையென்பது பிறிதோடியைபுநீக்கிய விசேடணமன்
றெனத் தோன்றியவாறே விசேடணஇலக்கணஞ்சிதைத்து இடர்
ப்பட்டு உரைகூறுவாருமுளர். அதனைத் தோன்றக்கூறிற் பெருகு
ம் அவ்வாசிரியர் கூறியவாறே பன்மைப்பொதுப்பெயர்க்குதா
ணம், யானைவந்தது- யானைவந்தன- யானைவந்தான்- யானைவந்தா
ள்- எனவருமாறும் இங்ஙனம் யானையென்னும் பால்பகா அஃறி
ணைப்பெயர்க்குக் கள்விகுதியின்மையின் அஃறிணை ஒருமைக்கே
சிறந்ததாய் அதன்பன்மைக்கண்ணும் விரவி ஆகுபெயரா யுயர்
திணை ஆணொருமை பெண்ணொருமையினும் விரவிவருமாறுங்
காண்க பலபாலையுஞ் சுட்டிநிற்றலின் அவற்றையும் பன்மை சு
ட்டியபெயரெனல் வேண்டுமாலெனின் அது பொருந்தாது. நா
ன்குபாலுஞ் சுட்டிநிற்றுந் தன்னைநோக்க ஏனைமூன்றுபாலுஞ் சு
ட்டிநிற்கும்பெயர்கள் சின்மைசுட்டிய பெயரெனப்படுவன வல்
லது பன்மைசுட்டிய பெயரெனப்படா வாகலானென்க. அற்றே
ல் அவற்றைச் சின்மைசுட்டியபெயரெனவே யமையும்பிறவெனி
ன், அவற்றுள் ஆண்மைசுட்டுதன்முதலிய பகுப்புண்மையின் அ
வற்றைப் பகுத்துக்கூறவேண்டுதலான் அமையாவென்க. இக்கரு
த்தேபற்றியன்றே பஃறொடைவெண்பாவென்றாற்போல ஏனை
யவற்றையும் பஃறொடைவெண்பாவெனக்கூறாததூஉம் பகுப்பு
ண்மையிற் சிஃறொடைவெண்பாவென்றொழியாததூஉம் பஃறு
ழிசைக்கொச்சகமென்றதனைநோக்கி அதிற் குறைந்ததனைப்பகுப்

பின்மையாற் சிஃறுழிசைக்கொச்சகமென்றே போந்ததூஉமெ ன்க. இனி இவ்வாறன்றி ஆணொருமை பெண்ணொருமை அஃறி ணையொருமையென்ற மூன்று மொருமைப்பாலென வொன்றுய டங்குதலிற் பலபால்களையுஞ் சுட்டிநின்றன வல்லவாகலான் அம் மூன்றொருமையுஞ் சுட்டியபெயர்களை ஒருமைசுட்டியபெயரொ னவும் இஃதொருமையும் பன்மையுமென்னும் இருபால்சுட்டி நிற்றலாற் பன்மைசுட்டிய பெயரொனவுங்கொள்ளினு மிழுக்காது.

(உஅ௫) தன்மையானான் யாநாமுன்னிலை - யெல்லீர்நீயிர் நீவி ர்நீர்நீ - யல்லனபடர்க்கை யெல்லாமெனல்பொது. *

(ள்-ன்) தன்மைநான்கு முன்னிலை யைந்தென்றார் அவையிவை யென்பதூஉம் இடத்தொன்றேற்பவும் பொதுவுமென்றார் அ வையிவையென்பதூஉ முணர் - ற்று. (ப-ரை) தன்மை-தன்மைப் பெயர்நான்காவன, யானான்யாநாம்-யான் நான் யாம் நாம் என்ப னவாம், முன்னிலை- முன்னிலைப்பெயரைந்தாவன, எல்லீர், நீயிர் நீவிர் நீர் நீ - எல்லீர் நீயிர் நீவிர் நீர் நீ என்பனவாம், அல்லன- இவ்வொன்பதுமல்லாத பெயர்களெல்லாம், படர்க்கை-படர்க்கை யிடத்திற் குரியனவாம், எல்லாமெனல்- அவற்றுள் எல்லாமென் னும்பெயரொன்றும், பொது- மூவிடத்திற்கு முரித்தாம், எ-று, (பொ-ரை) தன்மைப்பெயர்நான்காவன யான் நான் யாம் நாம் என்பனவாம், முன்னிலைப்பெயரைந்தாவன எல்லீர் நீயிர் நீவிர் நீர் நீ என்பனவாம், திணைபாலு ளொன்றற்கேற்பவும் பொதுவு மாகியபெயர்களுள் இவ்விரண்டிடத் தொன்பதுபெயருமல்லா த பெயர்களனைத்தும் படர்க்கையிடத்திற்குரியவாம் அவற்றுளெ ல்லாமென்னும்பெய ரொன்று மூவிடத்திற்கு முரித்தாம். எ-று.

எல்லாமென்னும்பெயர் மூவிடத்தும்வருமாறு, யாமெல்லா ம் நீயிரெல்லாம்- அவரெல்லாம்-அவையெல்லாம்-எனவரும். இத் தன்மைமுன்னிலைப்பெயர்களை யுரைத்தலுங் கேட்டலும் இல்லா வஃறிணைக்கண் இவ்வொன்பதுபெயரும்விரவிப் பொதுப்பெய ராமா றென்னையெனின், ஆசிரியர் தொல்காப்பியர் "அவ்வழி, அவனிவ னுவனென வரூஉம் பெயரும்" என்னுஞ் சூத்திரத்து யான் யாம் நாமென வரூஉம்பெயரும் உயர்திணைப்பெயரெனக் கூறினரேனுமரபியலுள் "மக்கடாமே யாறறி வுயிரே பிறவு முள வே யக்கிளைப் பிறப்பே"— என்னுஞ் சூத்திரங்களின் விலங்கினு ளொருசாரன கிளியுங் குரங்கும் யானையு முதலாயினவும் மனவு ணர்வுடையனவாயின் அவையு மீண்டாறறிவுயிரா யடங்குமெனக் கூறலின் அம்மரபுபற்றிப் பொதுப்பெயரெனப் பட்டனவென்க. மேவருதன்மை முன்னிலைவினைகளும் அவ்வினையாலணையும்பெ யர்களு மன்ன. அங்ஙனமாகவே "கேட்குந போலவுங் கிளக்குந

போலவு - மியங்குநபோலவு மியற்றுநபோலவு - மஃறிணைமருங்கினு மறையப்படுமே,,— என்பது புணைந்துரைவகையால் வழுவமைதியாகக்கூறப்பட்டனவே யாமாதலின் அவைபற்றிப்பொதுப்பெயரெனப்பட்டன வெனக்கோடல் பொருந்தாமையுமறிக. ()

(௨௮௬) வினையின்பெயரே படர்க்கைவினையா - லணையும்பெயரே யாண்டுமாகும். *

(எ-ன்) சிலவினையின்பெயர்க்கு அல்லன படர்க்கையென்பதருனெய்தியவிடம் யாண்டுமாகுமென்பதனான் இகந்துபடாமற் படர்க்கையென்பதனாற் காத்தலும் வினையாலணையும்பெயர்க்கு அதனைவிலக்கி யிடப்வகுத்தலு நுதலிற்று. (ப-ரை) வினையின்பெயரே - தொழிற்பெயர்களே, படர்க்கை - படர்க்கையிடத்திற் குரியவாகும், வினையாலணையும்பெயர் - வினைமுற்றுலணையும் பெயர்களானவை, யாண்டுமாகும் - தனித்தனி மூவிடத்திற்கு முரியவாகும், எ-று. (பொ-ரை.) யானுணல் நீயுணல் அவனுணல் என மூவிடத்துவினையாயினும் அவ்வுணல் தினலென்றற்றொடக்கத்து வினையின்பெயர் படர்க்கைக்கே யுரியவாம் அவ்வினையா லணையும்பெயர் அவ்வினையின்பெயர்போற் படர்க்கைக்கே யுரியவாகாது உண்டேனை உண்டாயை உண்டானை யெனத் தனித்தனி மூவிடத்திற்கு முரியவாம். எ-று ❁ யானுண்டேன் - நீயுண்டாய் - அவனுண்டான் - என இடத்தால் ஒன்றுபடநின்ற நிலைமொழிவருமொழிபோல அம்மூவிடமுற்றின்கட்டொழில் பயனிலையாகி, யானுணல் - நீயுணல் - அவனுணல் - என ஒன்றுபடநிற்பனவற்றிற் கன்றி எனதுணல் - நினதுணல் - அவனதுணல் என்றும், உணல் என்றும், வேறுபட்டு நிற்குப் வினையின்பெயர்கட்கெய்தியவிடம் இகந்துபடுதல் இன்றெனவுணர்க. இவ்வாறன்றி வினையின்பெயரே படர்க்கையென்பதற்கு வினையின்பெயரனைத்தும் படர்க்கையெனப்பொருள் கொள்ளிற் கூறியதுகூறலாம் அது பொருந்தாதென்க. (௨௬)

(௨௮௭) தான்யானானீ யொருமைபன்மைதாம் - யாநாமெலாமெலீர் நீயிர்நீர்நீவிர். *

(எ-ன்) இப்பன்னிரண்டு பொதுப்பெயர்களும் இருதிணைக்கும்பொதுவாகிய ஆண்மை பெண்மை ஒருமை பன்மை என்னு நான்குபொதுப்பால்களுள் இப்பாலுளமைந்து கிடந்தனவென்பதுணர்-ற்று. (ப-ரை), தான்யானானீ - தான் யான் நான் நீ என்கிறநான்கும், ஒருமை - இருதிணைமுக்கூற்றொருமைப்பெயர்களாம், தாம்யாநாமெலாமெலீர்நீயிர்நீர்நீவிர் - தாம் யாம் நாம் எல்லாம் எல்லீர் நீயிர் நீர் நீவிர் என்கிறவெட்டும், பன்மை - இருதிணையிருகூற்றுப் பன்மைப்பெயர்களாம், எ-று (பொ-ரை) தான்

யான் நான் நீ என்னுநான்கும் இருதிணைமுக்கூற்றொருமைப்பெயராம் தாம் யாம் நாம் எல்லாம் எல்லீர் நீயிர் நீர் நீவிர் என்னுமெட்டும் இருதிணையிருகூற்றுப் பன்மைப்பெயராம். எ-று ❁ இதனை—"அவற்றுள், ஒன்றே யிருதிணைத் தன்பா லேற்கும்.,,—என்னுஞ்சூத்திரத்தின் முற்கூறாது ஈண்டுக்கூறிய தென்னையெனின், தன்மைமுன்னிலைப்பெயர்களின் வகையுணர்ந்தன்றி ஒருமை பன்மை தோன்றாமையின் ஈண்டுக்கூறி யவற்றின்பின்னின்றவாகலின். எல்லாம் தான் தாம் என்பவற்றிற்குமீண்டு ஒருமைபன்மையுடன்கூறினாரென்க. (௲ய)

(உஅஅ) ஒருவனொருத்தி பெயர்மேலெண்ணில. ✻

(எ-னி) எண்ணான்வரு முயர்திணைப்பெயர்க்காவதோர் புறனடையுணர்-ற்று, (ப-ரை) ஒருவனொருத்தி- ஒன்றென்னுமெண்ணால் ஒருவன் ஒருத்தி எனவருவனவன்றி, மேல் - இவற்றின்மேல், எண்- இரண்டுமுதலாகிய எண்களால், பெயர் - இவ்வாண்பாற்பெயரும் பெண்பாற்பெயரும், இல - வருவன இலவாம், எ-று. (பொ-ரை) எண்ணானுயர்திணையாண்பாற்பெயரும் பெண்பாற்பெயரும் வருங்காலத்து ஒன்றென்னுமெண்ணான் ஒருவன் ஒருத்தியென வருவனவன்றி இவற்றின்மேல் இரண்டுமுதலிய எண்களான் இப்பெயர்கள்வருவன இலவாம் எ-று ❁ இருவன்-இருத்தி- என்றற்றொடக்கத்தனவாகிவரிற் பன்மைப்பகுதியோடொருமைவிகுதிபுணர்ந்து பால்வழுவாமாதலின் எண்ணிலவென்றார்.

(உஅக) ஒருவனென்ப துயரிருபாற்றாய்ப் - பன்மைவினை கொளும் பாங்கிற்றென்ப. ✻

(எ-ன்) இதுவுமது. (ப-ரை) ஒருவரென்பது- ஒருவரெனவழங்குஞ்சொல், உயரிருபாற்றாய்- உயர்திணையாண்பெண் ணிவ்விருபாற்கும்பொதுவாய், பன்மைவினை - அத்திணைப்பன்மைவாய்பாட்டுவினையை, கொளும்- கொண்டுமுடிகின்ற, பாங்கிற்று - பாங்கினையுடைத்தாகும், என்ப என்றுசொல்லுவர்புலவர். எ-று. (பொ-ரை) ஒருவரெனவழங்குஞ்சொல் உயர்திணையாண்பால்பெண்பால் இரண்டற்கும்பொதுவாய் அத்திணைப்பன்மைவாய்பாட்டு வினையைக்கொண்டுமுடியும் பாங்கினையுடைத்து என்றுசொல்லுவர்புலவர். எ-று ❁ [வ-று.] ஆடவருளொருவரறத்தின்வழிநிற்பார்-ஒருவர்நில்லார்- பெண்டிருளொருவர் கொழுநன்வழிநிற்பார்- ஒருவர்நில்லார் (எ-ம்) "யாஅரொருவ ருலகத்தார் சொல்லில்லார்,, (எ-ம்) வரும். இவ்வொருவரென்னுஞ்சொற் பொதுவியலுட்கூறு முவப்புயர்வுமுதலியவற்றான்வரும் ஒருவரென்னுஞ் சொல்லன்றித் தன்னியல்பாய்வந்ததாகலின் ஈண்டுக்கூறப்பட்டதென்றுணர்க. இச்சொல்லின்கட் பகுதிக்கேற்ப இருபாற்றுயென்றும், விகு

திக்கேற்பப் பன்மைவினைகொளுமென்றும், உயர்திணைமுப்பா
லுட் பன்மையைப்பின்விதத்தலின் ஆண்பெண்ணென விதவாது
உயரிருபாற்குமென்றும், உயமொனமுன்விதத்தலின் உயர்திணை
ப்பன்மைமெனவிதவாது பன்மையென்றும்,ஒருவர்வந்தார்ஒருவ
ரவர்- என வினையும்பெயருங் கொளவருவது உவப்புயர்வுமுதலி
யவற்றான்வருவதாம் இங்ஙனம் தன்னியல்பாய்வரும் ஒருவமொன்
பது வினையும் வினைக்குறிப்புமே கொள்ளுமென்பார் பெயரை
யொழித்து வினைகொளுமென்றும்,இச்சொல் லொருமைப்பகுதி
யோடு பன்மைவிகுதிமயங்கிப் பால்வழுவாய்நின்றதேனுந் த
ன்னியல்பாய் மயங்கிநின்றமையின் வழாநிலைபோலுமென்பதூஉ
ம் பன்மைவினையென்றது சொன்மாத்திரையிற் பன்மைவினைய
ன்றிப் பொருண்மாத்திரையின் ஒருமைவினையாமாதலின் இப்ப
யனிலையை ஒருவமொன்னுஞ்சொற்கொள்ளுதல் வழூவன்றென்ப
தூஉந்தோன்றப்பாங்கிற்றென்றும், இங்ஙனமாதல் சான்றோர்க்
கொப்பமுடிந்ததென்பா ரென்பவென்றுங் கூறினார். (௫௨)

(௨௯௰) பொருண்முதலாறோ டளவைசொற்றானி- கருவிகாரி
யங் கருத்தனுதியு -ளொன்றன்பெயரா னதற்கியைபிறிதைத் -
தொன்முறையுரைப்பன வாகுபெயரே. *

(எ-ன்) மேற்கூறிய வொன்றற்கேற்பவும் பொதுவுமாகியபெ
யர்க்கண்வருங்காரணப்பெயர்களுள் ஆகுபெயராமாறுணர் த்து,
(ப-ரை) பொருண்முதலாறோடு - பொருள் இடம் காலம் சினை
குணம் தொழில் என்னுமாறுடனே, அளவை- இவற்றின் பகுதி
யவாகிய நால்வகையளவையும், சொல்- சொல்லும், தானி - தானி
யும், கருவி- காரணமும், காரியம் - காரியமும், கருத்தன் - வினை
முதலும், ஆதியுள்- ஆதியாகவரும்பொருள்களுள், ஒன்றன் - ஒரு
பொருளினது, பெயரான்- இயற்பெயரால், அதற்கு - அப்பொ
ருளினுக்கு, இயை - இயைந்த, பிறிதை - பிறிதொருபொருளை,
தொன்முறை - தொன்றுதொட்டு வருமுறைமைய, உரைப்பன -
சொல்லப்பட்டுவருவன, ஆகுபெயர் - ஆகுபெயர்களாம், எ-று.
(பொ-ரை) பொருளே இடமே காலமே சினையே குணமே தொ
ழிலேயென்னு மாறுடனே இவற்றின்பகுதியவாகிய நால்வகை அ
ளவையே சொல்லே தானியே கருவியே காரியமே கருத்தாவே
யென்னுமாறும் ஆதியாகவரும்பொருள்களுள் ஒருபொருளின்
இயற்பெயரானே அப்பொருளினுக்கு இயைந்தபிறிதொருபொ
ருளைத் தொன்றுதொட்டு வருமுறைமைய கூறிவருவன ஆகுபெய
ர்களாம். எ-று. ✲ பொருளாதியாறன்றி வேறுபொரு ளின்றே
னும் அவற்றுட் பயின்றுவருவனவற்றைப் பிரித்து அளவைமுத
லாக விதந்தமையிற் பொருண்முதலா றென்பன இவையொழித்

தனவற்றையென்பதூஉம் அதற்கியை பிறிதையென்றமையான்
இயையாதனவற்றிற்கு வருவனபலபொருள் ஒருசொல்லன்றி யா
குபெயராகாவென்பதூஉம் தொன்முறையுரைப்பன வென்றமை
யான் ஆகுபெயர்மேல் ஆகுபெயராயும் அடையடுத்தும் இரு
பெயரொட்டாயும் வழக்கின்கண்ணுஞ் செய்யுட்கண்ணும் பயி
ன்று பலபொருள் ஒருசொற்போல்வருவனவன்றி இடைமேய்தோ
ன்றியவா ருக்கப்படுவன வல்லவென்பதூஉம் பெற்றாம். [வ-று.]
"தாமரைபுரையுங் காமர் சேவடி„—"ஆம்ப லூழ்ந் தேம்பொதி
கிளவி„ என முதற்பொருளின்பெயர் சினைப்பொருளுக்காயின.
—"அகனமர்ந்து செய்யா ளுறையும்„—"புறங்கொடை யறியா
மறந்திகழ் வேலோன்„ என இடப்பெயர் சித்தத்திற்கு முதுகிற்
குமாயின.—"காரறுத்தது-கார்த்திகைபூத்தது„ எனக் காலப்பெ
யர் பைங்கூழிற்குந் தோன்றிக்குமாயின.—இவற்றுட் காரென்ப
து நிறத்தின்பெயர் மேகத்திற்காய் மேகத்தின்பெயர் பருவத்திற்
காய்ப் பருவத்தின்பெயர் பைங்கூழிற்கானமையின் மும்மடியா
குபெயர்.—அறுபதமூரலும்- மருக்கொழுந்துநட்டான்- வெற்றி
லைநட்டான்- புளிமுளைத்தது- என அடையடுத்துந் தனித்துவந்
த சினைப்பெயர்முதலுக்காயின.—இவற்றுட் புளியென்பது - சு
வைப்பெயர் பழத்திற்காய்ப் பழத்தின்பெயர் மரத்திற்கானமை
யின் இருமடியாகுபெயர். "நெறிநீரிருங்கழி நீலமுஞ் சூடாள்„
"கார்நிகர் வண்கை„ புளித்தின்றான்- என நிறமுஞ் சுவையுமாகி
ய குணப்பெயர்கள் குவளைக்குமேகத்திற்கும் பழத்திற்குமாயின.
"எழுத்தறியத்தீரு மிழிதகைமை„—"பாட்டின்பொருளைப் பர
விப் பல்கால்„—எனத் தொழிற்பெயர் அக்கரத்திற்குஞ் சொற்
றொடைக்குமாயின.— ஒன்று - இரண்டு - அரை - கால் - என எ
ண்ணலளவைப்பெயர் அஃறிணையொருமைக்கும் பன்மைக்கும்
யாக்கையின்கணுறுப்பிற்குமாயின.—துலாக்கோல் - துலாவாரந்
தூங்கினான்- துலாவிறைத்தான்-என எடுத்தலளவைப்பெயர் நிறை
கோலிற்குந் தராசிற்கும் இறைத்திறைவமரத்திற்குமாயிற்று.—
இவற்றுள் துலாக்கோலென்பது இருபெயரொட்டு முன்மொழி
யாகுபெயர்.— நாழி- உழக்கு- ஆழாக்கு- என முகத்தலளவைப்
பெயர் அளவுகருவிகட்காயின.—கிழைத்தடி- மேலைத்தடி - எழுத்
தடியென்னும் நீட்டலளவைப்பெயர் விளைநிலத்திற் காயிற்று.—
அவன்மொழியுணர்ந்தான்- இந்நூற்குரைசெய்தான் - என மொழி
யுரையென்னுஞ் சொல்லின்பெயர் அதன்பொருட்காயின.—வி
ளக்குமுரிந்தது-நெஞ்சுநொந்தது -என விளக்குமொலியையுடை
ய பிழைப்புமுளரிவுமாகிய தனிகளின்பெயர் அவற்றிற்குத் தான
மாகியவிளக்குத்தண்டிலுக்கு மார்பினுக்குமாயின.—திருவாசகப்-

திருவாய்மொழி - என அடையடுத்த வாசகம் மொழியென்னு மு
தற்கருவியின்பெயர் அவற்றின்காரியமாகிய யாப்பிற்காயின.—
இந்நூலலங்காரம்-இந்நூல்பாட்டியல்-என இவ்விலக்கணங்களாகிய
காரியத்தின்பெயர் இவற்றைத்தருதற்குக் கருவியாகிய நூல்களுக்கா
யின. இந்நூல் திருவள்ளுவர்-எனக்கருத்தாவின்பெயர் காரியத்திற்
காயிற்று.— ஆதியென்றமையானே, காளைவந்தான் - என்றற்றொட
க்கத்து உவமையான்வருவனவுந் தேவர்முதலியோர்பெயரை மக்
கட்கிட்டு வழங்குவனவும் பிறவுங்கொள்க. அறுபதமுதலியனவற்
றைப் பொற்றொடி முதலியனபோல் அன்மொழித்தொகைப்பெ
யரொன்று லென்னையெனின், அன்மொழித்தொகைப்பெயர் செய்
யுளியற்றுவோன் ஒருவனா விடப்பட முதலியவற்றுற் றன்கூற்றாயும்
பிறர்கூற்றாயும் உரைப்புழி யாங்காங்குவருவதன்றி இதுபோல நி
யதிப்பெயராய் வருவதன்றென்க. அங்ஙனமாயினும் ஆகுபெயரு
ம் அன்மொழித்தொகையுந் தம்பொருளுணர்த்தாது பிறிதுபொ
ருளுணர்த்துதலான் ஒக்குமாதலின் அவை தம்முள் வேற்றுமை யா
தோவெனின், ஆகுபெயர் ஒன்றன்பெயரான் அதனோடியைபுப
ற்றிப் பிறிதொன்றனையுணர்த்தி ஒருமொழிக்கண்ணதாம் அன்
மொழித்தொகை யியைபுவேண்டாது இருமொழியுந்தொக்கதொ
கையாற்றலாற் பிறிதுபொருளுணர்த்தி இருமொழிக்கண்ணதாம்
இவை தம்முள்வேற்றுமையென்க. இருபெயரொட்டாகுபெயர் இ
ருமொழிக்கண்வந்ததன்றோவெனின் அன்று; என்னை, வகரக்கிளவி
-அதுவாகுகிளவி-மக்கட்சுட்டு-என்னும் இருபெயரொட்டாகுபெ
யருள் வகரமுமதுவாதலும் மக்களுமாகிய அடைமொழிகள்கிளவி
சுட்டென்னு மியற்பெயர்ப்பொருளை விசேடித்துநில்லாது எழு
த்துஞ் சொற்பொருளும் பொருளுமாகிய ஆகுபெயர்ப்பொரு
ளை விசேடித்துநிற்பக் கிளவிசுட்டென்பனவே ஆகுபெயர்ப்பொ
ருளையுணர்த்த இருபெயருமொட்டிநிற்குமாகலின். இனிப்பொற்
றொடியென்னும் அன்மொழித்தொகையிற் பொன்னென்பது அ
வ்வாறு அன்மொழித்தொகைப்பொருளை விசேடித்துநில்லாது தொ
டியினையே விசேடித்துநிற்ப அவ்விரண்டன்றொகையாற்றலான் அ
ன்மொழித்தொகைப்பொருளையுணர்த்துமாறுமறிக. இக்கருத்தேப
ற்றி மக்கட்சுட்டுமுதலியவற்றைப் பின்மொழியாகுபெய ரென்பா
ருமுளரெனவறிக. இட்டடமசீனம்-இப்பொன்கழஞ்சு-இந்நென்
னாழி-இம்மனையைங்கோல்- இப்புண்ணேரம்பு- இந்நெல்லவல்- இ
வ்வாடைகோலிகன்- என வருவனவற்றுள், சீனம்- கழஞ்சு- நாழி-
கோல்- அம்பு- அவல்- கோலிகன்- என்பனவற்றை ஆகுபெயரெ
னவும் எழுத்துச் சொற்பொருள் யாப் பலங்காரம் என ஐந்ததிகா

ரங்கட்கும்வரும் காரியஆகுபெயரைச் சொல்லாகுபெயரெனவும்,
அகத்தியம் - தொல்காப்பியம் - என்பனவற்றை ஆகுபெயர்த்திரி
பெனவுங் கூறுவாருமுளர். இப்பட்டுச்சினத்துள்ளதென்பார் இ
சையெச்சமாக்கி இப்பட்டுச் சினமெனக்குறைத்துக்கூறலான் இ
ப்பட்டென்னு மெழுவாய்க் குள்ளதென்பது பயனில்லயன்றிச் சி
னமென்பது பயனில்லயன்றாதலானுஞ் சுட்டிக்கூறாது சினமென
வாளாகூறினது பலபொருளொருசொற்போல் அவ்விடத்தினையு
ம் பட்டினையு முணர்த்தாமையானும் இத்தொடக்கத்தனவாகிய
இசையெச்சங்களை ஆகுபெயரென்பார்க்கு—"திருவளர் தாமரை
சீர்திகழ் காவிக ளீசர்தில்லைக் - குருவளர் பூங்குமிழ் கோங்குபைங்
காந்தள்கொண் டோங்குதெய்வ- மருவளர் மாலை.,,—என்வருமுரு
வகங்களையும் ஆகுபெயரெனக் கூறல்வேண்டுமாதலானும் இவை
யெல்லாம் ஆகுபெயரிலக்கணத்தான் வந்தனவல்லவெனவும் சொ
ல்லாகுபெயர்க்கு அவர்காட்டியவற்றுட்சொல்லினதுபெயர் அவ
ற்றிற்கானதின்மையின் அவைசொல்லாகுபெயராகாவெனவும் வெ
ளிப்படைச்சொல் குறிப்புச்சொல் என்னு மிரண்டனுள் ஆகு
பெயர் குறிப்புச்சொல்லாதலானும், அகத்தியம் - தொல்காப்பிய
ம் - என்பன கருத்தாவோ காரியமோவென ஐயமுற் றென்றனைக்
குறிப்பானுணரவேண்டாது காரியமாகிய நூல்களை வெளிப்படை
யானுணர்த்தலானுங் கருத்தாவின்மேற் செல்லாமையானும் விகு
திச்சூத்திரத்துப் பிறவென்பதனான்வரும் அவ்விகுதியோடு பகு
திபுணர்ந்து இந்திரனாற்செய்யப்பட்ட நூலுக்கு ஐந்திரமெனவ
ந்த ஆரியச்சொற்போல வந்தனவன்றி ஈறுதிரிந்தன வல்லவெனவு
முணர்க. இவற்றுள் எழுத்துச்சொற்பொருள் யாப்பலங்காரமெ
ன்பன காரியவாகுபெயரெனக் கோடலன்றி அப்பெயர்களான் அ
வ்விலக்கணங்களைக் கூறுதற்குத் தானமாகியபடலங்களைக் கூறின
மையான் இவை தானியாகுபெயரெனக் கோடலுமாமென்க. இனி
த்திருவாசகம் - திருவாய்மொழி - என்பன வண்மையானோக்குவா
ர்க்கு அன்மொழித்தொகை யாவனவன்றி ஆகுபெய ராகாமையு
முணர்க. இனி ஆகுபெயர்கடாந் தத்தம்பொருளை நீங்காது நின்
று தம்பொருளின் வேறல்லாதபொருளோடுபுணர்தலும் பொருத்
தமில்லாதகூற்றினின்று பிறிதுபொருளை யுணர்த்தலுமாகிய, அ
வ்விரண்டிலக்கணத்தையுடைய விடாதவாகுபெயரும் விட்டவாகு
பெயருமென இருவகையவெனவும் அவற்றிற்குதாரணமுறையே,
கடுத்தின்றான்- குழிப்பாடிநேரிது - எனவுங்கூறுவர். அவ்வாறாகு
பெயர்கள் வருமாறு மூய்த்துணர்ந்துகொள்க. (௫௫)

(௨௯௧) எத்துமெவ்வகைப் பெயர்க்குமீ றாய்ப்பொருள்-வேற்
றுமைசெய்வன வெட்டேவேற்றுமை. *

(எ-ன்) மேல் வேற்றுமைக்கிடனுமென்றார் அவ்வேற்றுமையி
னையவெனவும் இத்துணையவெனவு முணர் - ற்று. (ப-ரை) எற்கு
ம்- தம்மையேற்றுக்கொள்ளுதற்குரிய, எவ்வகைப்பெயர்க்கும் - எ
வ்வகைப்பட்ட பெயர்களுக்கும், ஈறய்- இறுதியாய், பொருள் அ
ப்பெயர்ப்பொருளை, வேற்றுமைசெய்வன - வேற்றுமைப் படு
த்துவனவாகிய, வேற்றுமை - வேற்றுமைகள், எட்டே - எட்டே
யாகும், எ-று. (பொ-ரை) தம்மை யேற்றுக்கோடற்குரிய எவ்வ
கைப்பட்டபெயர்கட்கும் இறுதியாய் அப்பெயர்ப்பொருளை வே
ற்றுமைப்படுத்துவனவானவேற்றுமைக ளெட்டேயாம். எ-று. ❀
வேற்றுமைசெய்வனவேற்றுமை யெட்டேயெனக்கூட்டுக. எல்லா
ப்பெயரும் எல்லாவேற்றுமையும் ஏலாதென்பார் எற்குமென்றும்
வினைச்சொல் இடைச்சொல் உரிச்சொற்களுட் பெயர்படநின்ற
னவுந் தழீஇக்கோடற்கு எவ்வகையென்றும் வினைமுதலிய மூன்
றும் வேற்றுமைகொள்ளாதென்பார் பெயரொன்றும் ஏற்குமெவ்
வகைப்பெயர்க்குமீறுயென வெய்தியதனைவிலக்கி "எழுவாயுரு
பு திரிபில்பெயரே,, என்ப்பிறிதுவிதிவகுத்தலிற் பெயர்முழுவ
தூஉம்உருபாம் எழுவாயுருபினையொழித்து விளியுருபிற்குப்
பெயரிறுதியாகிய அகப்பாட்டெல்லையினையும் ஏனை யாறுருபிற்
கும் அதன் இறுதியாகிய புறப்பாட்டெல்லையினையுந் தழீஇக்
கோடற்குப் பொதுமையின் ஈறுயென்றும் பொருளையேயன்றிச்
சொல்லையும் ஒரோவழி வேறுபடுப்பது ஐம்முதலிய எழுருபிற்கு
மேயன்றி எழுவாய்க்கு ஒவ்வாமையானும் பொருளொன்றனையும்
வேறுபடுத்தல் எட்டுருபிற்கு மொப்பமுடிந்தமையானுஞ் சொ
ல்லையுமுடன்கூறுது பொருளென்றும் வேற்றுமையென்னுங் காரி
யத்தைச்செய்யுங்கருத்தாவாகிய எட்டுவேற்றுமையுருபிற்கும்வேற்
றுமையெனவும்பெயர்போந்தது காரியவாகுபெயராகியகாரணக்
குறியென்பார் வேற்றுமைசெய்வனவேற்றுமையென்றும் "ஏழிய
ன்முறைய தெதிர்முக வேற்றுமை-வேறெனவிளம்பான்பெயரது
விகாரமென் - றோதிய புலவனு முளனொருவகையா - னிந்திரனெட்
டாம் வேற்றுமையென்றனன்.,,— என ஆசிரியர் அகத்தியனார்
கூறுபவாகலின் விளியுருபுபடர்க்கைச்சொல்லையும் பொருளையும்
முன்னிலைச்சொல்லும் பொருளுமாக வேற்றுமைசெய்தலின் அத
னையெழுவாயுளடக்காது வேறுகோடலே தந்துணிபென்பார் எட்
டேயென்றுங்கூறினர். வேற்றுமையென்னும்பண்புப்பெயர் ப
ண்பிக்காகாமையிற் பண்பாகுபெயரன்றாயிற்று. இனி இரட்டுற
மொழிதலான் வேற்றுமைசெய்வனவேற்றுமை யெட்டேயெனக்
கொண்டுகூட்டாது ஆற்றொழுக்காக்கிநீஇ யேகாரத்தைத் தேற்ற
மாக்காது-பிரிநிலையாக்கி இங்ஙனம் வருவனவாகியவெட்டுருபும் வே

ற்றுமை அவையன்றி ஒருசாரார்கூறும் உருபடைந்தபெயரும் உருபின் பயனிலையும் வேற்றுமையல்லவெனவும் பொருளுணர்த்துக்கொள்க. (௩௪)

(உ௯உ) பெயரே ஐ ஆல் கு இன் அது கண் - விளியென்றுகுமவற்றின்பெயர்முறை. *

(எ-ன்) வேற்றுமைகளின்பெயரு முறையு முணர் - ற்று. (ப-ரை) அவற்றின்- முன்னை யெட்டுவேற்றுமையென்னப்பட்டவைகளினுடைய, பெயர்- பெயர்களும், முறை- முறையுமாவன, பெயர்- பெயரும், ஐ- ஐயும், ஆல்- ஆலும், கு - குவ்வும், இன் - இன்னும், அது- அதுவும், கண் - கண்ணும், விளி- விளியும் - என்றுகும் -என்றிப்படிச்சொல்லப்பட்டவையாகும், எ-று. (பொ-ரை) மேல் எட்டேவேற்றுமையென்றவற்றின் பெயரென்னை கிடக்கைமுறையென்னையெனிற் பெயர்முதலாக விளியீறாக இங்ஙனங்கூறியபெயருமுறையுமாம். எ-று. ❁ ஏகார மெண். மேல் எட்டேயென்றதொகைக்கு வகைதோன்றப் பெயர்கூறினரன்றி அவ்வேற்றுமைகளின் பெயர்விகற்பமெல்லாங் கூறப்புகுந்தாரல்ல ராதலின் அவையெல்லாம் வருஞ்சிறப்புச்சூத்திரங்களானுணர்க. இவை இம்முறைநிற்றற்குக் காரணமும் அங்ஙனங்காட்டுதும். அன்றியும், "நாராயணன்பூ வோராயிரத்தைக் -, கரத்தாற்கொய்தோ ரரற்கே கொடுத்துச் - சக்கரச்சிறுமையி னீங்கிநற்சுவைப்- பாற்கடற்கண்ணே பள்ளிகொண்டான்,, என்பதனானு மறிக. (௩௫)

(உ௯௩) ஆறனுருபு மேற்கு மவ்வுருபே. *

(எ-ன்) மேற்கூறிய வேற்றுமையுருபு எட்டனுள் எழுவாயுருபே யேனையுருபுகளையு மேற்குமென்ப துணர் - ற்று. (ப-ரை.) அவ்வுருபே- பெயராய்நிற்கின்ற அவ்வெழுவாயுருபே, ஆறனுருபும்- ஐம்முதலாகிய ஆறுவேற்றுமையுருபுகளையும், ஏற்கும் - ஏற்கும், எ-று. (பொ-ரை) எழுவாய்வேற்றுமையாவது பெயர்மாத்திரையாய்த் தோன்றிநிற்த நிலையென்பவாகலின் அவ்வெழுவாயாய்நின்ற உருபே ஐம்முதலிய ஆறுவேற்றுமைகளினுருபு மேற்கும். எ-று ❁ ஏனவே விளியுருபாவது பெயரது விகாரமேயாதலின் அவ்வெழுவாயுருபின் வேறல்லவெனவும் படுமென்பதுபடநிற்றி ஆறனுருபுமேற்குமவ்வுருபேயென்றார். இங்ஙனம் ஆறனுருபுமென அன்சாரியைதவிர்வழிவந்தமையாற்செய்யுள்விகாரம். இனி இச்சூத்திரத்திற்குஇவ்வாறுபொருள்கொள்ளாதுபெயரேயன்றி ஆறும்வேற்றுமையுருபும் அவ்வுருபுகளையேற்குமெனப்பொருள்கொண்டு, சாத்தனது-சாத்தனதை சாத்தனதால்-சாத்தனதற்கு- சாத்தனதனின் சாத்தன்தனது-சாத்தனதன்கண் சாத்தனதே- என உதாரணங்காட்டுவாருமுளர். உருபேற்றவ் பெயர்க்கேயுரிய இலக்கணம

ன்றி வினைமுதலியவற்றிற்குரிய இலக்கணமன்றாமாதலானும் "பெயர்வழித் தம்பொரு டரவரு முருபே." என்றும் — "ஏற்கு மெவ்வகைப்பெயர்க்குமீறாய்." என்றும் வரையறைகூறிப் போந்தமையானும். மீண்டு இடைச்சொல் உருபேற்குமெனின் மாறுகொளக் கூறலாமாதலானும், சாத்தனை-சாத்தனால்-என்புழி, சாத்தனதென்பது, குழையது கோட்டது- என்றாற்போல துவ்விகுதியும் அகரச்சாரியையும்பெற் றுருபேற்றுநின்ற வினைக்குறிப்புப்பெயராமாதலானும் அன்றியும், உருபு ஏற்புழிப்பெயர்போலத் தனித்து நின்று உருபேற்றல் வேண்டுமாதலானும், அதனை-அதனால்-என உருபேற்குமெனிற் சுட்டுப்பெயர் உருபேற்றதா மன்றி உருபு உருபேற்றதன்று மாதலானும், அது பொருந்தாதென்க. (௫௧)

(௨௯௪) நீயிர்நீவிர்நா னெழுவா யலபெறா. *

(எ-ன்) மேல் ஏற்குமெவ்வகைப்பெயர்க்கு மென்றமையின் எலாப்பெயரு முளவென்றாராதலின் அவற்றுள் இரண்டாவதுமுதலிய எழுருபுமேலாதன இவையென வுணர்-ற்று. (ப-ரை) நீயிர் நீவிர் நான் - நீயிர்முதலாகிய இம்மூன்றுபெயர்களும், எழுவாயல எழுவாயல்லாதவேற்றுமைகளை, பெறா - எலாவாம், எ-று. (பொ-ரை) இம்மூன்றுபெயரும் எழுவாய்வேற்றுமையினையன்றி ஏனையேழுவேற்றுமையினையும் எலா எ-று. ※ எனவே நீயென்னும் ஈரெழுத்தொருமொழி அதுபோல ஈரெழுத்தொருமொழியாகிய நும்மெனவும், யானென்னும் யகரமுதன்மொழி யகரத்தோடு பிறப்பொத்த எகரமுதன்மொழியாகிய என்னெனவுந்திரிந்து ஐம்முதலிய ஆறுருபுமேற்றாற்போல நீயிர் நீவிர் நான் என்னு மூன்றும் அங்ஙனம்வாராமையின், நும்- என்- எனத்திரிதலும் அவ்வுருபுகளை ஏற்றலும் இலவென்பதாயிற்று. (௫௨)

(௨௯௫) அவற்றுள், எழுவாயுருபு திரிபில்பெயரே- வினைபெயர்வினாக்கொள லதன்பயனிலையே. *

(எ-ன்) நிறுத்தமுறையானே பெயர் வேற்றுமையி லிலக்கணமுணர்-ற்று. (ப-ரை) அவற்றுள்- முன்சொல்லப்பட்ட எட்டுவேற்றுமைகளுள், எழுவாய்-முதல்வேற்றுமையினது, உருபு- உருபாவது, திரிபில்- ஐம்முதலாகிய உருபேற்றுத்திரிதலில்லாத, பெயரே- பெயரேயாம், வினை- வினையையும், பெயர்- பெயரையும், வினா- வினாவையும், கொளல்- கொள்ளவருதல், அதன்- அவ்வுருபினது, பயனிலை- பொருணிலையாய்வருதலாம், எ-று. (பொ-ரை) மேற்கூறிப்போந்த எட்டுவேற்றுமையுண்முதல்வேற்றுமையின் உருபாவது திரிபில்லாதபெயரேயாம் அதன்பொருளாவது, வினையை

யும்பெயரையும்வினையையுங் கொளப்பொருணிலையாய்வருதலாம். எ-று. ❁ திரிபில்லாமையாவது உருபும் விளியும் எலாதுமுடிக்குஞ்சொல்லு நோக்காது ஆ என்றாற்போலத் தன்னிலையினிற்றலாம். பயனிலையென்றது ஈண்டுமுடிக்குஞ்சொல்லன்று பொருணிலையெனவுணர்க. பொருணிலையெனினும் பயனிலையெனினுமொக்கும். பொருளென வாளாகூறாது பொருணிலையென்றதென்னையெனின், ஏனை வேற்றுமையின் பொருள்கட்கெல்லாம் அப்பொருண்முதற்கண் நிலைபெறுதலினென்க. கொளவருதலாவது- முடிக்குஞ்சொற் கொளவருந்தன்மை. எனவே எழுவாய்வேற்றுமையுருபாவது தன்னிலையினிற்கும்பெயரேயென்பதூஉம் பெயரேயென்றமையான் இதற்கிதெனவேறுருபின்றென்பதூஉம் அதன்பொருளாவது வினைமுதற்பொருண்மையாகத் தன்னைத்தானே வேற்றுமைசெய்தலென்பதூஉம் பெற்றாம். தன்னைத்தானே வேற்றுமைசெய்தல்—"தன்னிலைக்கட் டன்னை நிறுப்பானுந் தன்னை- நிலைகலக்கிக் கீழிடுவானு நிலையினு- மேன்மே லுயர்த்து நிறுப்பானுந் தன்னைத்- தலையாகச் செய்வானுந் தான்" —என்பதனானுமுணர்க. வினைசெயப் பொதுப்படக்கூறினமையின் வினையும் வினைக்குறிப்புமாகிய விகற்பமெல்லாங்கொள்க. இவ்வாறே ஆசிரியர் தொல்காப்பியரும்—"எழுவாய் வேற்றுமை பெயர்தோன்று நிலையே" (எ-ம்) "பொருண்மைசுட்டல் வியங்கொளவருதல் - வினைநிலையுரைத்தல் வினாவிற்கேற்றல் - பண்புகொளவருதல் பெயர்கொளவருதலென் - றன்றியனைத்தும் பெயர்ப்பயனிலையே" (எ-ம்) கூறியமுறைமையும் பொருண்மை சுட்டன்முதலியவாகக் கூறியவாறும் இம்மூன்றுளடங்குமாறுங்காண்க [வ-று] ஆவுண்டு என்பது - ஒருபொருளின் பண்புமுதலாயின சுட்டாதப்பொருட்டன்மையது உண்மைத்தன்மையேசுட்டி நிற்கவருதலாம். ஆசெல்க என்பது - தான் ஏவலைக்கொள்ள வருதலாம். ஆகிடந்தது என்பது - தனதுதொழிலினைச் சொல்லவருதலாம். ஆகரிது என்பது - தனதுபண்பினைத் தான்கொள்ள வருதலாம். வினைக்குறிப்பாதல் ஒப்புமையான், ஆவில்லை - ஆவல்ல - என்னுந் தொடக்கத்துக் குணப்பொருள வல்லா வினைக்குறிப்புக் கொளவருதலுங்கொள்க. இவையெல்லாம் வினைப்பாற்பட்டன. ஆபல என்பது - தான்பெயரைக்கொண்டு முடியவருதலாம். ஆயாது - ஆவெவன் - என்பன தான்வினாவுதற்குப் பொருந்தி வருதலாம் எனப்பகுத்துக்காண்க. அங்ஙனம்பகுத்துக் காண்புழி யவிகாரியாய்நின்றபெயர் இம்முடிக்குஞ் சொற்களை அவாவியகாலத்தவிகாரியினின்றும் விகாரியாகத் தன்னைத்தானே வேற்றுமைசெய்து நின்றமையுங்காண்க. இதனை முதல்வேற்றுமையென்றதெ

ன்னையெனின், பெயரேயாய் நிற்றலானும் வினைமுதற்பொருண்
மையைத் தருதலானுமென்க. இனிப் பயனிலையென்றது முடிக்
குஞ்சொல்லெனக்கூறுவாருமுளர். வினைபெயர்விளக்கொளுமெ
னமுற்றுச்சொல்லாற்கூறுதுவினைபெயர்விளக்கோளிலெனத்தொ
ழிற்பண்புச்சொல்லாற்கூறுதலானும் இரண்டாம்வேற்றுமை மு
தலியவற்றிற்கு உருபும்பொருளுங்கூறலான் இம்முதல்வேற்று
மைக்கும் உருபும்பொருளுங்கூற வேண்டுமாதலானும் இவ்வெ
ட்டுவேற்றுமைக்கு முடிக்குஞ்சொல் "எல்லையின் னுமதவும்பெ
யர்கொளு மல்ல வினைகொளும்" என்னுஞ்சூத்திரத்தாற் பிற்கூ
றுதலானும் ஈண்டுங்கூறிற் கூறியதுகூறலா மாதலானும், அது
பொருந்தாதென்க. இன்னும் அவருட் சிலர் விளக்கொளிலென்
பதற்குச், சாத்தனேவென விளிவிடைச்சொற்களைக்கொள்ளுமெ
ன உதாரணங்காட்டுவர். அங்ஙனமாயிற் பிறவிநிலைத்தர் முதலிய
பொருடரும் இடைச்சொற்களையுங் கொள்ளுமெனக் கூறல்வேண்
டுமாதலானும் இஃது இடைச்சொற்சந்தியன்றி யெழுவாய்ச்சந்
தியன்றாமாதலானும் அவர்க்கு அது கருத்தன்றென்க. இவ்வினை
முதற்பொருள்—"பிறர்க்கின்னா முற்பகற் செய்யிற் றமக்கின்னா-
-பிற்பகற் றாமே வரும்."—"பெரியவர் கேண்மை பிறைபோல
நாளும் - வரிசை வரிசையா நந்தும் - வரிசையா - வானூர் மதிய
ம்போல் வைகலுந் தேயுமே - தானே சிறியார் தொடர்பு."—என்
பவற்றுள் இன்னாதமேவரும் கேண்மைதானேநந்தும் தொடர்
புதானேதேயும் எனச் செயப்படுபொருட்கண்ணும், ஆதித்தன்
கற்றீப்பிறப்பித்தான் - கீற்றுப்பழமுதிர்த்தது - என ஏதுவின்க
ண்ணும், சாத்தனுண்டான் - எனத் தன்வசமென்பதன் கண்ணும்,
மாடஞ்செய்யப்பட்டது- எனவினைமுதலென்று தெரிப்படாம
ல் வினைமுதலாயே நிற்பதாகியதெரியாநிலைக்கண்ணும்—"ஒத்தகி
ழவனுங் கிழத்தியுங் காண்ப."—என ஓர்பொருளே ஒருகால் வி
னைமுதலாயும் ஒருகாற்செயப்படுபொருளாயுநிற்குந் தடுமாற்ற
த்தின்கண்ணும்—"அறவினையாதெனிற் கொல்லாமைகோறல்-பிற
வினை யெல்லாந் தரும்."— என்பதனுட் கொல்லாமை அறவினை
யெல்லாந் தரும், கோறல் பிறவினையெல்லாந் தரும், எனத்தொழி
ற்பெயர்க்கண்ணும், கண்காணும் - செவிகேட்கும்- எனக்கருவியி
ன்கண்ணும், குன்றுகுவட்டைத்தாங்கும்- தூண்போதிகையைத்
தொட்டது- என இடத்தின்கண்ணும்—"இரப்பவ ரென்பெறினுங் கொள்வர்."—எனக் கொள்பவன்கண்ணும் வருமெனவும், தாய்
மகவுக்கூட்டினள்-ஆசிரியன் மாணாக்கனைப்படிப்பித்தான் - தலைவ
ன் றலைவியைப்புல்லினான்-என இருவினைமுதலா லொருவினையுமு
ளவெனவும், அரசன்றேர்செய்தான்-தச்சன்றேர்செய்தான்-சாத்த

னுறங்கினான்- என "ஏவுதலியற்றுத வினையின்வேறுதல்,, என வினைமுதன்மூவகையாமெனவுங் கொள்க. இவையெல்லா முறையிற் கோடலென்னுந் தந்திரவுத்தி. இவ்வாறு பிறவருவனவு மன்ன. ()

(உ௯௬) இரண்டாவதனுரு வையேயதன்பொரு -ளாக்கலழித்த லடைதனீத்த -லொத்த லுடைமை யாதியாகும். *

(எ-ன்) இரண்டாம்வேற்றுமையி னிலக்கண முணர்- ற்று. (ப-ரை) இரண்டாவதன்- இரண்டாம்வேற்றுமையினது, உருபு-உருபாவது, ஐயே - முன்சொல்லப்பட்ட ஐயொன்றுமேயாம், அதன்- அதனுடைய, பொருள்- பொருள்களாவன, ஆக்கல்- ஆக்கப்படுபொருளும், அழித்தல்- அழிக்கப்படுபொருளும், அடைதல்- அடையப்படுபொருளும், நீத்தல்- துறக்கப்படுபொருளும், ஒத்தல்- ஒக்கப்படுபொருளும், உடைமை- உடைமைப்பொருளும், ஆதியாகும்- முதலியனவாக அவ்வுருபையேற்ற பெயர்ப்பொருள்கள் வேறுபட்டசெயப்படு பொருள்களாம், எ-று. (பொ-ரை) இரண்டாம்வேற்றுமையினது உருபுமேற்கூறிய ஐயுருபொன்றுமே அதன்பொருள்களாவன தன்னையேற்ற பெயர்ப்பொருளை ஆக்கப்படுபொருளாகவும் அழிக்கப்படுபொருளாகவும் அடையப்படுபொருளாகவும் துறக்கப்படுபொருளாகவும் ஒக்கப்படுபொருளாகவும் உடைமைப்பொருளாகவும் இவைபோல்வன பிறவாகவும் வேற்றுமைசெய்தலாம் எ-று. ❁ ஈண்டுத்தந் துரைத்தனவெல்லா மேற்போந்த வற்றுமெய்வகை யென்னுஞ் சூத்திரத்திற்கு இயையவந்த விசையெச்சம். மேல்வருவனவு மன்ன. [வ-று.] குடத்தைவனைந்தான்- உடைத்தான்- அடைந்தான்- துறந்தான் ஒத்தான்- உடையான்-எனவரும். குடத்தையொத்தானென்புழிச் சுதந்தரமின்றி ஒழுகினனென்பது பொருள் — ஆதியென்றமையான் இவ்வாறுசெயப்படுபொருளாக வேற்றுமைசெய்தலெல்லாங் கொள்க. ஒருவனோர்வினைசெய்யவதனாற்றோன்றிய பொருள்யாதது செயப்படுபொருளென்பதாம். ஒருவனோர் வினைசெய்யத் தொழிற்படுபொருள்யாதது செயப்படுபொருளெனினுமமையும். செயப்படுபொருள்- செய்பொருள்- கருமம்- காரியம்- என்பனவொருபொருட் கிளவி. அழித்தன்முதலிய வினைசெய்தலிற்றோன்றியகாரியங்க ளென்னையெனின், அழிபொருளாதன்முதலியனவுங் குறிப்பிட்டவினையு ளொன்றனையுடையனாகியகாலத்தஃதுடைமையாதலுமாம். பிறவுமன்ன. இச்செயப்படுபொருள்கருத்துண்டாதல் கருத்தின்றுதல் இருமையுமாதல் ஈருருபிணைதல் கருத்தாவாதல் அஃதில்லாதல் தெரிநிலை என இவைமுதலாகியும் வருமெனக்கொள்க. இவற்றிற்கு உதாரணம், சோற்றையுண்டான் (எ-ம்)

சோற்றைக்குழைத்தான் (எ-ம்) எறும்பைமிதித்து வழியைச்சென்றான்- பசும்புல்லைமிதித்துப் பலவூரையடைந்தான்- தூளொடு கூழையுண்டான்- நஞ்சினைக்கலந்த பாலைக்குடித்தான்- கத்தரிக்காயையும் புடலையுங்கறித்தான்- பதரையுநெல்லையும் பிணத்திற்குக்கொண்டான் - (எ-ம்) ஆரியனை ஐயுற்றபொருளை வினவினான் - (எ-ம்) பசுவினைப்பாலினைக் கறந்தான் - யானையைக்கோட்டைக்குறைத்தான் - (பசுவினது யானையது என்பனபோல ஆரியனது எனவாராமைபற்றி இங்ஙன மிருருபுணைத லிருவகைப் பட்டன.) (எ-ம்) தன்னைப்புகழ்ந்தான்- தன்னைக்குத்தினான்- தன்னைப்பேணினான்-தன்னைக்காதலித்தான்- (எ-ம்) வருதலைச்செய்தான் - (எ-ம்) மாடஞ்செய்யப்பட்டது (எ-ம்) முறையேகாண்க. தெரிநிலையாவது வினைமுதலுருபேற்றுஞ் செயப்படுபொருளேயெனத்தெரியநிற்றல். வெயிலையிழைத்தான்- பொருளைப்பெற்றான்- கயிற்றையறுத்தான் - எனமுறையே யியற்றப்படுதலும் எய்தப்படுதலும் வேறுபடுக்கப்படுதலு முதலியனவற்றுள்ளேயடங்கும். முதலியனவென்றதனால், ஆரியன்மாணாக்கனையூர்க்குப்போக்கினான்-தாய்மகளையூர்க்குப்போக்கினாள்- என்புழி இருவருப்போதலாலே வினைமுதலாயும், ஏவப்படுதலாற் செயப்படுபொருளாயும், ஏவலைத்துக்கொள்ளுதலால் ஏவுதற்கருத்தாவாயும், ஏவப்போதலால் இயற்றுதற்கருத்தாவாயும் வந்தன. இவ்வேற்றுமை தன்பெயர்ப்பொருளைமேற்போந்த கருத்தனலாகிய காரியமாக்குதலின், இரண்டாம் வேற்றுமையெனப்பட்டது. (௫௯)

(௨௯௭) மூன்றாவதனுரு பாலானொடு - கருவிகருத்தா வுடனிகழ்வதன்பொருள். *

(எ-ன்) மூன்றாம்வேற்றுமைய திலக்கணமுணர்-ற்று. (ப-ரை) மூன்றாவதன்- மூன்றாம்வேற்றுமையினுடைய, உருபு-உருபுகளானவை, ஆலானொடு- முன்சொல்லப்பட்ட ஆலேயன்றி ஆனும் ஒடும் ஒடுவுமாகும், அதன்-அவ்வுருபுகளுடைய, பொருள்-பொருள்களானவை, கருவி- கருவிப்பொருளும், கருத்தா - வினைமுதற்பொருளும், உடனிகழ்வு - உடனிகழ்ச்சிப்பொருளும் ஆகிய அவ்வுருபுகளையேற்ற பெயர்ப்பொருள்கள்வேறுபட்ட மூன்றுமாகும், எ-று (பொ-ரை) மூன்றாம்வேற்றுமையின் உருபு மேற்கூறிய ஆலேயன்றி ஆனும் ஒடும் ஒடுவுமாம் அவற்றின்பொருள்களாவன தம்மையேற்றபெயர்ப்பொருளைக் கருவியாகவும் ஏதுப்பொருட்டாகிய கருத்தாவாகவும் உடனிகழ்வதாகவும் வேற்றுமைசெய்தலாம். எ-று. ※ மூன்றாம்வேற்றுமைப்பொருளாதலின் ஏதுப்பொருட்டாகிய கருத்தாவென்றும் அதனைப்பொருளென்பது தொகுதி

ஒருமையாதலின் அதற்கு அவற்றின்பொருளென்றும் பொருள் கூறினும். கருவி-காரணம்-ஏது-நிமித்தம்-என்பன வேறுபொருட்கிளவியாயும், ஒருபொருட்கிளவியாயும்வருதலிற் காரணமூன்றனுள் முதற்காரணந் துணைக்காரணமென்னுமிரண்டனையுங் கருவியென்றும் ஏவுதற்கருத்தாவும் இயற்றுதற்கருத்தாவுமாகிய நிமித்தகாரணமிரண்டனையுங் கருத்தாவென்றுங் கூறினார். வனைந்தான் என்புழிக் குடமாகியகாரியத்திற்கு அதுவதுவாகியமண் முதற்காரணம். குலாலனதறிவு மந்தக்கரணமுமுதலிய ஞாபகக்கருவியும் தண்டசக்கரமுதலிய காரகக்கருவியும், அம்முதற்காரணத்துக்குத் துணையாய்நின்று காரியத்தைத்தருதலிற் றுணைக்காரணம். குலாலனிமித்தமாக அக்காரியந்தோன்றுதலின் அவனிமித்தகாரணம். ஞாபகக்கருவியென்பது அறிதற்கருவி. காரகக்கருவியென்பது செய்தற்கருவி. நடந்தான் என்புழிக் குடம்போலவதோர் காரியமின்றேனும் நடத்தலைச்செய்தானென்பது பொருளாதலில் நடத்தல் காரியம். அவயவத்தாற் பலவேறுவகைப்பட்ட குடமுதலியகலன்களிற் பொதுமையினிற்கு மண்போலப் பலவேறுவகைப்பட்ட வினைகளிற் பொதுமையினிற்குந்தொழில் நடத்தற்கு முதற்காரணம். அறிவுங் காலுமுதலியன துணைக்காரணம். வினைமுத னிமித்தகாரணம் பிறவுமன்ன. [வ-று.] அறிவாலாக்கியகாட்சி- அறிவாலாகியகாட்சி- என்புழி ஆலுருபு பெயர்ப்பொருளை ஞாபகமுதற்கருவியாக வேற்றுமைசெய்தது. கண்ணாலாக்கியகாட்சி - கண்ணாலாகியகாட்சி- என்புழி ஞாபகத்துணைக்கருவியாக வேற்றுமைசெய்தது. காட்சியென்றது காட்சியுணர்வை. மண்ணாலாக்கியகுடம்- மண்ணாலாகியகுடம்-என்புழிக்காரகமுதற்கருவியாக வேற்றுமைசெய்தது. திரிகையாலாக்கியகுடம்- திரிகையாலாகியகுடம்- என்புழிக் காரகத்துணைக்கருவியாக வேற்றுமைசெய்தது. இங்ஙனம் ஆக்குதற்குவினைமுதலறிவனுங் குலாலனுமாம். ஆதற்குவினைமுதல்காட்சியுணர்வுங் குடமுமாம். இக்காட்சியுணர்வுங் குடமும் வினைமுதலாயகாலத்து இக்கருவிகள் ஏதுப்பொருளவாய்நின்றன. அரசனாலாகியதேவகுலம்- தச்சனாலாகியதேவகுலம்- என்புழிமுறையே ஏதுப்பொருளவாகிய ஏவற்கருத்தாவாகவும் இயற்றுதற்கருத்தாவாகவும் வேற்றுமைசெய்தது. ஆக்கியதேவகுலமெனவரின் மூன்றுமுருபேலாவாய் அரசனுந் தச்சனு மெழுவாயாம். இஃதெழுவாய்க்கண்வருங் கருத்தாவிற்கும் இவ்வேற்றுமைக்கண்வருங் கருத்தாவிற்குந் தம்முள்வேற்றுமையென்க.— "தூங்குகையா னோங்குநடைய,, — "உறழ்மணியா னுயர்மருப்பின.,,— "பண்டறியேன் கூற்றென்பதனை யினியறிந்தேன் - பெண்டகையாற் பேரமர்க்கட்டு.,, என்புழி உடனிகழ்வதாகவேற்றுமைசெய்தது. ஆனுருபையும் இவ்

வாறேயொட்டிக் காண்க.— "நாவிற் றிருந்த கலைமாமகளோடு ந
ன்பொற் - பூவிற் றிருந்த திருமாமகள் புல்ல நாளும்,, (எ-ம்)
"மனத்தொடு வாய்மை மொழியிற் றவத்தொடு - தானஞ்செய் வா
ரிற்றலை.,, (எ-ம்) முறையே ஒடும் ஒடுவும் உடனிகழ்வுதாக்கின எ
ற்புழிக்கோடலான் இவ்விரண்டுருபிற்கும் உடனிகழ்ச்சிப்பொரு
ளொன்றுமே கொள்க. இங்ஙனம்வருங் கருத்தா ஏதுப்பொருட்
டாய்வருதலின் விதந்துகூறாது கருவியின்பாற்படுத்தினும் அமை
யுமென்பதுந்தோன்ற இவ்வுருபிற்குச் சிறந்தகருவிப்பொருளை மு
ற்கூறினார். இக்கருவிப்பொருள் அகக்கருவி புறக்கருவி ஒற்றுமை
க்கருவியென மூன்றாயும் வருமெனக்கொள்க. அவையாவன, மன
த்தானினைத்தான்- வாளால்வெட்டினன்- அறிவாலறிந்தான்- என மு
றையே காண்க. இரண்டாம்வேற்றுமைப் பொருளாகிய காரியத்தி
ற்குவேண்டுங் கருவிப்பொருளைத்தருதலின் இது மூன்றாம்வேற்
றுமையெனப்பட்டது.—"ஆலு மானு மோடு மொடுவுஞ் சாலு
மூன்றாம் வேற்றுமைக் குருவே - செய்வோன் காரணஞ் செயத்த
குகருவி யெய்திய தொழின்முத லியைபுடைத்தன்பொருள்.,,-
என்றார் ஆசிரியர் அகத்தியனாருமென்க. முதற்காரணத்தைக் கார
ணமென்றும் ஏவற்கருத்தாவைத் தொழின்முதலென்றும் விதந்து
கூறினாராதலின் இங்ஙனம்பொருள் ஐந்தாயின. (சய)

(உகூஅ) நான்காவதற்குரு பாகுங்குவ்வே - கொடைபகை
நேர்ச்சி தகவதுவாதல்- பொருட்டுமுறையாதியி னிதற்கிதெனல்
பொருளே. *

(எ-ன்) நான்காம்வேற்றுமைய திலக்கணமுணர்-ற்று. (ப-ரை)
நான்காவதற்கு- நான்காம்வேற்றுமைக்கு, உருபு- உருபாவது, கு
வ்வேயாகும்- முன்சொல்லப்பட்ட குவ்வொன்றுமேயாகும், பொ
ருள்- அவ்வுருபின்பொருள்களாவன, கொடை-கொடையும், பகை-
-பகையும், நேர்ச்சி- நட்பும், தகவு- தகுதியும், அதுவாதல்-முதற்
காரணமும், பொருட்டு - நிமித்த காரணமும், முறை-முறையும்,
ஆதியின்- முதலானபொருட்சொற்களின் புணர்ச்சியில, இதற்கி
தெனல்- இதற்கு இதுவென்கிறதுபட வருகின்றவையாகிய அவ்வு
ருபேற்றபெயர்ப்பொருள் வேறுபட்டபலவுமாம், எ-று. (பொ-
ழி) நான்காம்வேற்றுமைக்கு உருபு மேற்கூறியகுவ்வொன்றுமே
யாம் அதன்பொருளாவது கொடையும் பகையும் நேர்ச்சியுந் தக
வு மதுவாதலும்பொருட்டு முறையுமுதலானபொருடோன்றப் பு
ணரும்புணர்ச்சிக்கண் இதற்கிதென அங்ஙனம்வருதற்குரிய எப்
பொருளினையும் ஏற்றுக்கொள்ளும்பொருளாகத்தன்னையேற்றபெ
யர்ப்பொருளை வேற்றுமைசெய்தலாம். எ-று. ❁ இதற்கிது என்
றமையான் ஏற்றுக்கொள்ளும் பொருளென்பது பெற்றாம். ❁

[வ-று] "இரப்பார்க்கொன்- றீவார்மே னிற்கும்புகழ்.,, என்பது -கொடை.—பிணிக்குமருந்து என்பது- பகை.— விளக்கிற்கெண்ணெய் என்பது- நேர்ச்சி—நட்பென்பது மிது. "அருங்கலமுலகின்மிக்க வரசர்க்கேயுரிய,, என்பதுதகுதி.—ஆடைக்குநூல் என்பது- அதுவாதல். கூழிற்குக்குற்றேவல்செய்யும்- என்பதுபொருட்டு. —சாத்தற்குமகன்- என்பதுமுறை.— ஆதியென்றமையானே, கைக்கியாப்புடையதுகடகம் என்னும் யாப்புடைமைமுதலியவாய் இதற்கிதென்பதுபட வருவனவெல்லாங்கொள்க. இவ்வற்றுள் ஏற்றுக்கொள்ளும்பொருளாக வேற்றுமைசெய்தல்காண்க. இவ்வேற்றுக் கோடற் பொருள்,— "கேளாதேற்றல் கேட்டேயேற்ற -லில்லாதேற்ற லீவோனேற்ற- லுயர்ந்தோனேற்ற லிழிந்தோனேற்ற - லொப்போனேற்ற லுணர்வின்றேற்றல்- விருப்பாயேற்றல் வெறுப்பாயேற்றல்,, என இவைமுதலாகப் பலவுமாமெனக்கொள்க. [உ-ம்,] ஆவிற்குநீர்விட்டான்- (எ-ம்) வறியார்க்கீந்தான் (எ-ம்) மாணாக்கனுக்கு அறிவைக்கொடுத்தான்- (எ-ம்) தனக்குச்சோறிட்டான்- தனக்கரிசிகொடுத்தான் - "அருமறை சோரு மறிவிலான் செய்யும்- பெருமிறை தானே தனக்கு,, (எ-ம்) அரனுக்குக் கண்ணலர்கொடுத்தா னரி (எ-ம்) அரிக்குச்சக்கரங்கொடுத்தா னரன்- (எ-ம்) சோழற்குவிருந்துகொடுத்தான்சேரன்- (எ-ம்) சோற்றிற்குநெய்விட்டான்- நீர்க்குவாசமூட்டினான்- வாளிற்குறைவழங்கினான்- தண்டிற்குத் தங்கங்கட்டினான்- சுவர்க்குச்சித்திர மெழுதினான் (எ-ம்) மாணாக்கனுக்குக்கசையடிகொடுத்தா னாசிரியன்- (எ-ம்) கள்ளனுக்குக்கசையடிகொடுத்தானரசன் (எ-ம்) முறையேகாண்க. முதலென்றதனால், மருகனுக்குமகட்கொடுத்தான்-என்பதுவழக்கு. மகனுக்கு அரசுகொடுத்தான் - என்பது உரிமை. அரசற்குத் திறைகொடுத்தான்- என்பது அச்சம். தந்தைதாய்க்குத் திதிகொடுத்தான்-என்பது பாவனை- எனவும் வரும். ஒருவனோர்காரியத்தை ஒருகருவியாற்செய்தல் அக்காரியந் தனக்கேனும் பிறர்க்கேனும் உதவுதற்பொருட்டன்றி வீண்காரியஞ் செய்யானாதலின் இஃது இம்முறையானே நான்காம்வேற்றுமை யெனப்பட்டது. (௪௧)

(௨௯௯) ஐந்தாவதனுரு பில்லுமின்னு நீங்கலொப்பெல்லை யேதுப்பொருளே. *

(எ-ன்) ஐந்தாம்வேற்றுமைய திலக்கணமுணர்-ற்று. (ப-ரை) ஐந்தாவதன்-ஐந்தாம்வேற்றுமையினுடைய, உருபு - உருபுகளானவை, இல்லு மின்னும்-இல்லும் முன்சொல்லப்பட்ட இன்னுமாம், பொருள் - அவ்வுருபுகளின் பொருள்களாவன, நீங்கல் - நீக்கப்பொருளும், ஒப்பு - ஒப்புப்பொருளும், எல்லை- எல்லைப்பொருளும், ஏது ஏதுப்பொருளுமாகிய அவ்வுருபுகளையேற்ற பெயர்ப்பொருள்

கள் வேறுபட்ட இந்நான்குமாம். எ-று. (பொ-ள்) ஐந்தாம்வேற்றுமையினுருபாவன இல்லும் மேற்கூறிய இன்னுமாய் அவற்றின்பொருளாவன நீங்கற்பொருளாகவும் உவமைப்பொருளாகவும் எல்லைப்பொருளாகவும் ஏதுப்பொருளாகவுந் தம்மைப்பெற்றபெயர்ப்பொருளை வேற்றுமை செய்தலாம். எ-று. ✿ ஏதுப்பொருண் மூன்றும்வேற்றுமைக்கன்றி இதற்கு அத்துணைச்சிறப்பின்மையிற் பிற்கூறப்பட்டது. [வ-று.] தமரிற்றீர்ந்தானிவன் - வரையின் வீழருவி —"தலையினிழிந்த மயிரனையர்மாந்தர் - நிலையினிழிந்தக்கடை.,,- (எ-ம்) அரசரிற்பெரிய ரந்தணர் - ஆவினிழிந்த தூமேதி - (எ-ம்) வருவழி இன்னுருபு நீங்குதற்பொருளவாக வேற்றுமை செய்தது. — பாலின்வெளிது கொக்கு - காக்கையிற்கரிது களம்பழம் - நாயிற்கடைப்பட்ட நம்மை - என்பனவும் ஒப்புமைகருதாது உயர்வுந் தாழ்வுங்கருதியவழி நீங்குதற்பொருளவாம். இந்நீங்கற்பொருள் நிலைத்திணை இயங்குதிணை பண்பாதியின்வருமெனவுங் கொள்க. அவையாவன, மலையினிழிந்தான் - (எ-ம்) யானையினிழிந்தான் - (எ-ம்) சிறுமையினீங்கிய - (எ-ம்) வரும். ஆதியென்றமையான், —"குடிப்பிறந்து குற்றத்தினீங்கி.,, — ஐயத்தினீங்கி - என வருமெனவுங்கொள்க இவ்விலக்கணத்தான் முன்னர்க்காட்டிய உதாரணங்களையு முய்த்துணர்ந்து கொள்க. — "திறல்வேனுதியிற் பூத்தகேணி,, — "பொன்னிற்பிதிர்ந்த பொறிசுணங்கிளமுலை.,, — என்புழி உவமைப்பொருளாக வேற்றுமை செய்தது. — கருவூரின் கிழக்கு - மருவூரின்மேற்குச் சேணும் - என்புழி எல்லைப்பொருளாகவேற்றுமைசெய்தது. — "கோட்டிற்செய்த கொடிஞ்சிநெடுந்தேர்.,, — அறிவிற்பெரியன் - என்புழி யேதுப்பொருளாக வேற்றுமைசெய்தது. — இல்லுருபினையும் இவ்வாறேயொட்டிக்காண்க. இங்ஙனங்கூறவே எல்லாப்பொருளையும் இதனினிற்றிதென விகற்பித்துணர்தற்கு வருவன இவ்வுருபென்பதாயிற்று. ஆகவே நான்காம்வேற்றுமைப்பொருளாகிய கொள்வோனையுங் கொடைப்பொருளினையும் இவ்வாறு விகற்பித்துணர்ந்தல்லது கொடுத்தல் கூடாமையின், இஃது ஐந்தாம்வேற்றுமையெனப்பட்டது. (௪௨)

(௯௩.) ஆறனொருமைக் கதுவுமாதுவும் - பன்மைக்கவ்வு முருபாம்பண்புறுப் - பொன்றன்கூட்டம் பலவினீட்டந் - திரிபினாக்க மாந்தற்கிழமையும் - பிறிதின்கிழமையும் பேணுதல்பொருளே *

(எ-ன்) ஆறாம்வேற்றுமைய திலக்கண முணர்-ற்று (ப-ரை) அது - ஆறாம்வேற்றுமையினது, ஒருமைக்கு - ஒருமொழியின் ஒருமைப்பொருண்மைக்கு, அதுவுமாதுவும் முன்சொல்லப்பட்ட அதுவேயன்றி ஆதுவும், பன்மைக்கு - பன்மொழியின்

பன்மைப்பொருண்மைக்கு, அவ்வும்- அகரமும், உருபாம்-உருபுகளாகும், பொருள்- அவற்றின்பொருள்களாவன, பண்பு-குணமும், உறுப்பு- அவயவமும், ஒன்றன்கூட்டம் - ஒருபொருட்கூட்டமும், பலவினீட்டம்- பலபொருட்கூட்டமும், திரிபினாக்கம் - ஒன்றுதிரிந்தொன்றாதலும், ஆந்தற்கிழமையும் - ஆகியவைந்துதற்கிழமைப்பொருள்களையும், பிறிதின்கிழமையும்- அவையல்லாதபிறிதின்கிழமைப்பொருள்களையும், பேணுதல் - உடையனவாக அவ்வுருபுகளையேற்ற பெயர்ப்பொருள்கள் வேறுபட்ட இவ்விருவகைச் சம்பந்தப்பொருள்களுமாகும், எ-று (பொ-ரை.) ஆறும் வேற்றுமையினது ஒருமைப்பொருண்மைக்கு மேற்கூறிய அதுவென்பதேயன்றி ஆதுவென்பதும் பன்மைப்பொருண்மைக்கு அகரமு முருபாம். அவற்றின்பொருளாவன குணமுந் தொழிலுமாகிய பண்புஞ் சினையும் ஒருபொருட்கூட்டமும் பலபொருட்கூட்டமும் ஒன்றுதிரிந்தொன்றானதுமாகிய ஐந்துதற்கிழமைப்பொருளினையும் பிறிதின்கிழமைப்பொருளினையு முடையதாகத் தம்மையேற்ற பெயர்ப்பொருளை வேற்றுமைசெய்தலாம். எ-று.

❀ கிழமையென்பது ஆகுபெயர். [வ-று.] நிலத்தகலம்- சாத்தனதியல்பு- சாத்தனதுநன்மை - சாத்தனதிருக்கை சாத்தனதுநிலை- சாத்தனதுவரவு - கபிலரதுபாட்டு - (எ-ம்) சாத்தனது கை- சாத்தனது கால் (எ-ம்) மரத்தினது தொகுதி- நெல்லது குப்பை-(எ-ம்) படையது தொகை - விலங்கினதீட்டம் - (எ-ம்) நெல்லினது பொரி- கோட்டது நூறு - (எ-ம்) ஐவகைத்தற்கிழமையு முறையே வந்தன. ஒன்றன்கூட்டத்தற்கிழமைமாறிக் குப்பையது நெல் - எனவரினுறுப்புத்தற்கிழமை. பலவினீட்டமாறி நிற்பினு மது. சாத்தனதாடை -சாத்தனதுபிள்ளை-எனப்பிறிதின்கிழமைவந்தன. பாட்டென்பது வரிவடிவை நோக்கியகாலத்துப் பிறிதின்கிழமையாம். எனதுகை- தனதுதாள் - எனதுநிலம் - தனதெயில் - என ஆறுருபோடும், எனகைகள்- தனதாள்கள் எனயானைகள் _ தனதானைகள் 'என அகரவுருபோடு மொட்டுக. சாத்தனதாடை என்புழிச் சாத்தனதுகையென்றாற்போலாது ஆடைக்குச் சாத்தன் பிறிதாதலின் அப்பிறிதினதுகிழமை பிறிதின்கிழமையெனப்பட்டது. அஃறிணையொருமைப்பன்மைகட்கு இயைந்தவுருபு இங்ஙனங்கூறவே உயர்திணை யொருமை பன்மையாகிய கிழமைப்பொருட்கு இவ்வுருபுகளெலாமென்பது பெற்றாம். அவைவருங்கால், அவனுடையவிறலி - அவனுடையவிறலியர் - எனமூன்றுசொல்லாய் இரண்டுசந்தியாய் முன்னது எழுவாய்ச்சந்தியும் பின்னது பெயரெச்சக்குறிப்புச்சந்தியுமாமென்க, அவன்விறலி-என்புழி உடையவென்பது இசையெச்சம்; சாத்தனுடையவியல்பு-

-சாத்தனுடையதை - என்றற்றொடக்கத்தனவு மன்ன.—இவற்றை ஆறாம்வேற்றுமைச்சந்தியென்றும் உடையவென்பதனைச் சொல்லுருபென்றுங் கூறுவாருமுளர். ஆசிரியர் தொல்காப்பியனாரும் உயர்திணையொருமை பன்மைகட்கு இவ்வுருபுகள் ஏலாவென்பது கருதி—"அதுவென்வேற்றுமை யுயர்திணைத்தொகைவயி னது வெனுருபுகெடக் குகரம்வருமே.," என்றார்.—இவ்வாறாம்வேற்றுமைப் பொருளாகிய குறைப்பொருள் ஒற்றுமை வேற்றுமை யென உரைக்கப்படுமெனவும், அவற்றுள் ஒற்றுமையாவதோர் பொருளேயாகுமெனவும், வேற்றுமையாவது ஒன்றாய்த்தோன்றல் உரிமையாய்த்தோன்றல் வேறாய்த்தோன்றல் என மூவகைப்படுமெனவும், அம்மூவகையுள் ஒன்றாய்த்தோன்றல் ஒன்றன்கூட்டம் பலவினீட்டம் திரிபினாக்கம் சினை குணந் தொழில் என அறுவகைப்படுமெனவும், உரிமையாய்த்தோன்றல்- பொருள் இடம் காலம் இருவகை நூல் என ஐவகைப்படுமெனவும், வேறாய்த்தோன்றல் வேறிடத்துஞ்செல்லும் நிலைமையிலுடைமைகள் பலவுமாமெனவுங் கொள்ளப்படும். [உ - ம்.] என்னுயிர் - இராசுத்தலை- என்றாற்போல்வன வேற்றுமை.—வேற்றுமைவகையுள் ஒன்றாய்த்தோன்றலுக் குதாரணம்- முன்னர் ஐவகைத் தற்கிழமைக்குக் காட்டியனவேயாம்.— உரிமையாய்த்தோன்றலுக் குதாரணம், முருகனதுவேல்- குறிஞ்சி- வெள்ளியதாட்சி- சம்பந்தனதுதமிழ்- சம்பந்தனதுபிள்ளைத்தமிழ் என்முறையேகாண்க. வேறாய்த்தோன்றலுக் குதாரணம், சாத்தனதுபசு- சாத்தனதுசோறு- சாத்தனதுபொன்- எனவரும். இவை முன்னொருவர்க்குரிமையாயும், பின் வேறொருவர்க்குரிமையாயும்வருதலின் நிலைமையிலுடைமையாயின. இம்மூவகைவேற்றுமையை வடநூலார் நாற்றொருமேபதமாக்குவர் மேற்போந்த கொள்வோனையுங் கொடைப்பொருளினையும் இதனினிற் றிதுவென விகற்பித்துணர்ந்து கொடுத்தல் இவ்விரு கிழமைப்பொருளுக்குமேயோர், செயலென்பதுதோன்ற இஃது ஆறாம்வேற்றுமையெனப் பட்டது.— "ஆறனுருபே யதுவாதவ்வும் - வேறொன்றுடையதைத் தனக்குரியதையென - விருபாற் கிழமையின் மருவுற்வருமே.,,—என்றார் ஆசிரியர்அகத்தியனாருமென்க. (௬௩)

(௩௱௧) எழனுருபுகண் ணாதியாகும் - பொருண்முதலாறு மோரிருகிழமையி - னிடனாய்நிற்ற லிதன்பொருளென்ப. *

(எ-ன்) ஏழாம்வேற்றுமை யிலக்கண முணர்-ற்று. (ப-ரை) ஏழன்-ஏழாம்வேற்றுமையினுடைய; உருபு-உருபுகளாவவை,கண்ணாதியாகும்- முன்சொல்லப்பட்டகண்ணேயன்றி அதுமுதலாகிய பிறவுமாம். இதன் .. இவ்வுருபுகளுடைய, பொருள் - பொருளாவ

து, பொருண்முதல்- பொருளாதியாகிய, ஆறும்- ஆறும், ஓரிருகிழமையின்- ஆறும்வேற்றுமைச்சூத்திரத்திலே சொல்லப்பட்டவிருகிழமைப் பொருள்களுக்கும், இடனாய்நிற்றல் - இடமாய்நிற்கிறவுருபேற்றபெயர்ப்பொருள்வேறுபட்ட அவ்விடப்பொருளாம், என்ப - என்றுசொல்லுவர் புலவர். எ-று. (பொ-ரை) ஏழாம்வேற்றுமையினுருபு மேற்கூறிய கண்ணேயன்றி அஃதாதியாய பிறவுமாம் இவற்றின்பொருளாவன தம்மையேற்றபெயர்ப்பொருளாகிய பொருளாதியாறு மேற்போந்த இருகிழமைப்பொருட்கும் இடமாகிநிற்க அவற்றினை வேற்றுமைசெய்தலாமென்று சொல்லுவர் புலவர். எ-று. ❁ இடப்பொருளேயன்றிப் பின்னையுந்து பொருளு மீண்டு இடனாய்நிற்றலிற் பொருண்முதலாறுமென்றும், வினைவரினும் அவ்வினைமுதல் இவ்விருகிழமையின் பாற்படுமாதலிற் கிழமையினிடனென்றுங் கூறினார். ஈண்டிதுவென்றது உந்தொகுதியொருமை. [வ-று.] மணியின்கண்ணொளி- மணியின்கண்ணிருந்தவொளி (எ-ம்) பனையின்கணன்றில்-பனையின்கணிருந்த அன்றில்- (எ-ம்) இருகிழமைக்கும் பொருளிடமாயிற்று. —ஊரின்கணில்லம்- ஊரின்கணிருந்தவில்லம்- (எ-ம்) ஆகாயத்தின்கட்பருந்து- ஆகாயத்தின்கட் பறந்தபருந்து- (எ-ம்) இட மிடமாயிற்று.— நாளின்கணாழிகை- நாளின்கண் வந்தநாழிகை- (எ-ம்) வேனிற்கட்பாதிரி-வேனிற்கட்பூத்தபாதிரி (எ-ம்) கால மிடமாயிற்று.— கையின்கண்விரல்- கையின்கணிருந்தவிரல்- (எ-ம்) கையின்கட்கடகம்- கையின்கட்கிடந்தகடகம் (எ-ம்) சினை இடமாயிற்று.— கறுப்பின்கணழகு - கறுப்பின்கணிருந்தஅழகு- (எ-ம்) இளமையின்கட்செல்வம்- இளமையின்கணிருந்தசெல்வம் (எ-ம்) குணமிடமாயிற்று.— ஆடற்கட்சதி - ஆடற்கணிகழ்ந்தசதி - (எ-ம்) ஆடற்கட்பாட்டு ஆடற்கட்பாடப்பட்டபாட்டு (எ-ம்) தொழிலிடமாயிற்று.— ஆறுமியன்றமையான், வருமுருபுகள் வருஞ்சூத்திரத்தாற் கூறுபவாகலின் அவை அங்குணங்காட்டுதும். இதும்பெயர்ப்பொருளை மேற்போந்த இருகிழமைப்பொருள்கட்கு இடமாக வேற்றுமைசெய்தலின் ஏழாம்வேற்றுமையெனப்பட்டது. இவ்விடவேற்றுமைப்பொருள், உரிமை- இருவகை- ஓரிடம் எங்கும்- என நான்கென்றே கிளப்புவர். அவற்றிற்கு உதாரணம், நிலத்தின்கட் டேரோடுகின்றது- கடற்கணாவோடுகின்றது- ஆகாயத்தின்கட் பருந்துபறந்தது- காட்டின்கட் புலிவாழ்ந்தது- (எ-ம்) மதிக்கண்மறு- கையின்கண்விரல்- குன்றின்கட்குவடு- நெற்றியின்கண்விழி ஆண்டின்கணிருது- நாளின்கண்வைகறை- (எ-ம்) ஊர்க்கணிருந்தான், தேர்க்கணிருந்தான் - (எ-ம்) மணியின்கணொளி- உயிரின்கணுணர்வு- பாலின்கட்சுவை- நெய்- தியின்கட்குடித்தான்

கட்சிதம் - (எ-ம்) முறையே காண்க.— இவையெல்லா மூற்கூறி யவற்றுளடங்கும். இனி இடமல்லாவிட மூவகைப்படும், கூட்டிப் பிரித்தல் - பிரித்துக்கூட்டல் - இருவரின்முடியும் ஒருவினைத்தொழிற்பெயர் என. அவையாவன,—“உடையா னரசரு ளேறு.,,— “அவற்றுள், அ இ உ எ ஒக்குறில்,, (எ-ம்) “வானுலறையுந் தெய்வத்துள் வைக்கப்படும்.,,—“மற்றையான் செத்தாருள் வைக்கப்படும்.,, (எ-ம்) “புல்லி விடாப் புலவியுட் டோன்றும்.,,— நட்டுப் புலைக்கண்வந்தான்- புல்லுதற்கண் வேர்வைவந்தது - பொருதற்கண் மழைபெய்தது- சூதாடற்கட் டுக்கம்வந்தது- (எ-ம்) முறையே காண்க. (௬௨)

(௩௱௨) கண்கால்கடையிடை தலைவாய்திசைவயின்- முன்சார் வலமிட மேல்கீழ்புடைமுதல்- பின்பாடளைதே முழைவழியுழி யுளி - யுள்ளகப்புறமில் லிடப்பொருளுருபே. ※

(இ-ன்) மேற்கண்ணுறியென்றார் அவையிவை யென்பதுணர்த்-று. (ப-ரை) கண்- இல்- கண்முதலாக இல்லீறுகச்சொல்லப்பட்ட இவ்விருபத்தெட்டும், இடப்பொருளுருபு - தம்மையேற்ற பெயர்ப்பொருளை இடப்பொருளாக வேற்றுமைசெய்கின்ற உருபுகளாம், எ-று. (பொ-ரை) இங்ஙனம் கண்முதலாக இல்லீறுக எண்ணப்பட்ட இருபத்தெட்டும் இடப்பொருளாக வேற்றுமை செய்யு முருபுகளாம். எ-று. ❀ தொடர்புதோன்றக் கண்ணுருபைமீண்டும் அநுவதித்தார். [வ-று.] ஊர்க்காணிவந்தபோதும் பருள் - வேலின் கடைமணிபோற் திண்ணியான்- நல்லாரிடைப்புக்கு-மலைத்தலைமானன்னநோக்கியர்- குளாகடல்வாயமுதென்கோ-தேர்த்திசையிருந்தான்- அவர்வயிற்செல்லாய்- சுற்றூர்முற் றேன்றுகழிவிரக்கம்- காட்டுச்சாரோடுங் குறுமுயால். “காழ்வரை நில்லாக் களிறன்றூன் கைவலத்தி - யாழ்வரை நின்றது.,, இல்லிடப்பாத்தை- தன்மேற் கடுவரைநீரித் கடுத்துவரக்கண்டும் - “பிண்டிக்கண்ணூர் நிழற்கீ ழெழுந்தமடிகள்,, - கடைப் புடை கொள்ளியநீர் - “சுரன்முதல்வந்த வுரன்மாய் மாலை.,, - காதலிபின் சென்றதம்ம - நம்பாடணையாதநாள் - கல்லளைச்சுனைநீர் கையிலுண்மையான் - தோழிக்குரியவை கோடாய்தேத்து - அவனுழை வந்தான்- நின்றுதார் நறவேங்கை நிழல்வழி யசைந்தன்ன - உறையுழி யோலைபோல்- குயில்சேர் குளிர்காவுளிசேர்புறையும்- முல்லையங்குவட்டுள்வாழும்- “பயன்சாராப் பண்பில்சொற் பல்லாரகத்து,,—“செல்லு மென்னுயிர்ப் புறத்திறந்த மருண்மாலை,,— ஊரிலிருந்தார் என இவை பலதிறத்தன்போலும்மேனும் அவையாகாதொருதிறத்தனவாய்க்கண்ணுருபின்பரியாயவுருபாய்வருதல்காண்க.—இனி

கண் கான்முதலியன இடவிகற்பங்களை யுணர்த்தின் ஒருதிறத்தவாகிய உருபாகாது பலதிறத்தவாகிய இடங்களை யுணர்த்தும்பெயராகி, கண்ணகன்ஞாலம்- கடைநாள்- இடைச்சுரம்- தலையாயார் - தென்றிசை - என்றற்றொடக்கத்தனவாய் வருதல் காண்க.—மணியின் கண்ணொளி- என்புழிக் கண்ணென்பது பெயராயின் மணியினிடத்தொளி யென்பது பொருளாய் மூன்றுசொல்லாய் இரண்டு சந்தியாமெனக். ஏனையவு மன்ன.

இனிப் பெயர்முதலாகக்கூறிய எழுருபுகளுந் தமக்குரியபொருளல்லனவற்றையு முணர்த்துமெனக் கொள்வர். அவையாவன, மாடஞ்செய்யப்பட்டது- என்புழி வினைமுதலன்றிச் செயப்படுபொருளு முணர்த்திற்று.—வீட்டைவிரும்பினன்-என்புழிச் செயப்படுபொருளை யன்றி வேறுபொருளை விளக்கிற்று.—மலையோடுபொருதமால்யானை- தொடியொடு தொல்கவின் வாடிய தோள்- பாலொடுதேன்கலந்தற்றே- மதியோடொக்கு முகம்- விலங்கொடு மக்களனையர்- எழுத்தொடுபுணர்ந்தசொல்-என்புழிக் கருவிகருத்தாவுடனிகழ்வதன்றி,வினையின்மை வேறுவினை-மயக்கம்- ஒப்பு-ஒப்பலொப்பு-ஒற்றுமை எனப் பலபொருளு முணர்த்தின.—சோற்றிற்கரிசி- கூழிற்குக்குற்றேவல் - பூவிற்குப்போனான் - உணற்கு வந்தான்- பிணிக்குமருந்து- உணற்குக்கருவிகை- என்புழிக் கொள்வோனை விட்டு, ஆதிகாரணகாரியம் - நிமித்தகாரணகாரியம் - இருவகைப்பெயர்ப்பின் வினையெச்சம் இருவகைப்பெயர்ப்பின் பெயரெச்சம் எனப் பலபொருளு முணர்த்தின.—பித்தரிற்பேதையாரில்- வேங்கடத்தின் றெற்கு- குமரியின்வடக்கு - வாணகத்திலையினன்- காக்கையிற்கரிது களம்பழம்- என்புழி, ஒப்பு - எல்லை- ஏது- ஒப்பின்மை- எனப்பலபொருளு முணர்த்தின.—வாளதுவெட்டு - என்புழிக் குறையேயன்றி வேறுபொருளு முணர்த்திற்று.—அறிவின்கட்டிரிவு என்புழி- இடமேயன்றி வேறுபொருளு முணர்த்திற்று எனக்கூறுவர். அவையெல்லாம் இவ்வாசிரியர் கூறியவற்றுட் சிலவருமாறும் ஏனையவற்றை இலக்கியங்களுள்ளுங் காண்க. (சரு)

(கூாஙு) எட்டனுருபே யெய்துபெயரீற்றின் - திரிபுகுன்றன் மிகுதலியல்பயற்- றிரிபுமாய்ப்பொருள் படர்க்கையோரைத்- தன் முகமாகத் தானழைப்பதுவே. *

(எ-ன்) எட்டாம்வேற்றுமைய திலக்கணமுணர்- த்று. (ப-ரை) எட்டன் - எட்டாம் வேற்றுமையினுடைய, உருபு - உருபுகளானவை,எய்துபெயரீற்றின்-விளியடைத்த பெயரீற்றினுடைய, திரிபு திரிதலும், குன்றல்- கெடுதலும், மிகுதல்- மிகுதலும், இயல்பு-இயல்பாகலும், அயற்றிரிபும்-

ஆகும், பொருள்- அவற்றின்பொருளாவது, படர்க்கையோரை-படர்க்கைப்பெயர்ப்பொருளை, தன்முகமாக-தனக்கெதிர்முகமாக, அழைப்பது-அழைப்பதாலாகிய விளிக்கப்படுபொருளாம், எ-று. (பொ-ரை) எட்டாம்வேற்றுமையாகிய விளிக்கு வேறுருபின்று அவ்விளியடைந்தபெயரீற்றின் றிரிபுங் கேடு மிகுதலும் இயல்பும் ஈற்றயனின்றதன் றிரிபுமேயுருபாம் இவற்றின் பொருளாவன இவற்றினையேற்றபடர்க்கைப் பெயர்ப்பொருளை ஒருவன் றனக்கெதிர்முகமாக அழைக்கப்படுவதாக வேற்றுமைசெய்தலாம். எ-று. ❁ எய்துபெயரீற்றி னென்றமையான் வேறுருபின்றென்பது இசையெச்சமாய் நின்றது. இயல்பென்றமையான் இவ்வியல்பாய விளியுருபிற்கும் எழுவாயுருபிற்குஞ் சொல்லான் வேற்றுமையின்றேனும் பொருளான்வேற்றுமை யுண்டென்பதூஉம் படர்க்கையோரையெனவே ஒருமொழியொழிதன்னினங்கொளற்குரித்தாகலிற்படர்க்கையம்பாலும்விளியேற்குமென்பதூஉம் ஏனைத் தன்மைமுன்னிலைகள் ஏலாவென்பதூஉம்பெறாம். தாமென்பது அசைநிலை. ஈறுதிரிதன்முதலிய ஐவகையுருபும்பொருளும் பின்வருஞ் சிறப்புச்சூத்திரங்களானு முணர்க. இஃதெழுவாயினின்றும் ஒருவாற்றான்வேறுபட்டமையின் இறுதிக்கட்டந்து எட்டாம் வேற்றுமையெனப் பட்டது. (௬௬)

(௩௱௪௰) இஉ ஊஐஓ னளரல - யவ்வீற்றுயர்திணை யோரவல் லிவற்றொடு - ணஃகானாவீ றாகும்பொதுப்பெயர் - ஞநவொழியனைத்தீற் றஃறிணைவிளிப்பன. ❋

(எ-ன்) பெயருள் விளிக்கப்படுவன இவையென்பதுணர்-ற்று (ப-ரை.) இ உ ஊ ஐ ஓ ன ள ர ல ய - இகரமும் உகரமும் ஊகாரமும் ஐகாரமும் ஓகாரமும்- என்கிறவுயிர்களும் னளரலய என்கிறமெய்களும்- ஆகியபத்தெழுத்துகளையும், ஈற்று- இறுதியிலுடைய, உயர்திணைப் (பெயர்)- உயர்திணைப்பெயர்களும், ஓரவல்- ஓகாரவுயிரும்ரகரமெய்யுமொழிந்த, இவற்றொடு- இவ்வெழுத்துகளுடனே, ணஃகானாவீறு- ணகரமும் ஆவும் ஆகிய பதிதெழுத்துகளும், ஈறாகும்- இறுதியாகிய, பொதுப்பெயர்-பொதுப்பெயர்களும், ஞநவொழி- ஞகர நகரங்களும் (ஈறாகாத எகரமு) மொழிந்த, அனைத்து- இருபத்தொரு எழுத்துகளையும், ஈற்று - ஈற்றிலுடைய, அஃறிணைப் (பெயர்)- அஃறிணைப்பெயர்களும், விளிப்பன- அழைக்கப்படுவன, எ-று. (பொ-ரை) இ உ ஊ ஐ ஓ ன ள ர ல ய என்னும் பத்தீற்றுயர்திணைப்பெயரும் இவற்றுள் ஓகாரமும் ரகாரமுமான இரண்டுமொழித்துநின்ற எட்டுடனே ணகாரமும் ஆகாரமுமான இரண்டுங்கூடிய பத்தீற்றுப் பொதுப்பெயரும் ... ஞகரமும் நகரமும் இன்னோரன்ன

இடங்களிலிருகாதென மேலே அதிகாரத்துவிலக்கிய ஏகாரமொழிந்த இருபத்தோரீற்றஃறிணைப்பெயரும் விளிக்கப்படுவனவாம். எ-று. ❁ இ உ ஊவோடென்புழிக் குற்றுகரமுற்றுகரமென உகரத்தை விதவாமையின் இரண்டுங் கொள்க. பெயரொன்பதனையிருதிணைக்கண்ணுங் கூட்டுக. விளிப்பனவென்பது வினைமுதல் வினையைச் செயப்படுபொருண்மே லேற்றப்பட்டது. இவ்வீற்றுப்பெயர்கள் விளிக்கப்படுமெனவே யேனையீற்றுப்பெயர்கள் விளிக்கப்படாவென்பது பெற்றாம். (சஎ)

(கூ௱ரு) இம்மூப்பெயர்க்கண் ணியல்புமேயு - மிகர நீட்சியு மூருபாமன்னே. ❁

(எ-ன்) மூவகைப்பெயர்க்கும் பொதுவாகிய விளியுருபு தொகுத்துணர்-ற்று. (ப-ரை) இம்மூப்பெயர்க்கண்- மூன்விளிக்கப்படுமென்ற மூவகைப்பெயர்களிடத்தும், இயல்பும் - இயல்பாதலும், ஏயும்- ஏகாரமிகுதலும், இகரநீட்சியும்-இகரம் ஈகாரமாதலும், உருபாமன்-பெரும்பாலும் விளியுருபுகளாகும், எ-று. (பொ-ரை) மேல் விளிக்கப்படுமென்ற மூவகைப்பெயர்க்கண்ணும் இயல்பாதலும் ஏகாரமிகுதலும் இகரவீறு ஈகாரவீறாய்த் திரிதலும் விளியுருபாம் பெரும்பாலும். எ-று. ❁ [வ-று.] முனிகூறாய்- வேந்துகூறாய்- ஆடூஉக்கூறாய்- விடலைகூறாய் - கோக்கூறாய் - கோன்கூறாய்- வேள்கூறாய்- மாந்தர்கூறீர்- தோன்றல்கூறாய்- சேய்கூறாய்- முனியே- வேந்தே- நம்பீ - என உயர்திணைக்கண் மூன்றுருபும் வந்தன.—பிதாக்கூறாய்- ஆண்கூறாய்- பிதாவே- ஆணே- சாத்தீ - எனப் பொதுப்பெயர்க்கண் மூன்றுருபும் வந்தன.—விளக்கொடியை- புறாக்கொடியை- புல்வாய்கொடியை - விளவே- புறாவே- புல்வாயே- மந்தீ- என அஃறிணைக்கண் மூன்றுருபும் வந்தன.— பிறவு மன்ன. மன்னேயென்றமையான் இவ்வுருபுகள் சிலவற்றிற்கேலாமையும் இப்பொதுவிதியினு மேல்வருஞ் சிறப்புவிதியினும் அடங்காதுவரும் உருபுகள்சிலவுளவே லவையுங்கொள்க. (சஅ)

(கூ௱சு) ஐயிறுபொதுப்பெயர்க் காயுமாவு- முருபா மல்லவற் றாயுமாகும். ❁

(எ-ன்) ஐகாரவீற்றிற் கெய்தியதன்மேற் சிறப்புவிதியுணர்-த்து. (ப-ரை) ஐயிறுபொதுப்பெயர்க்கு- பொதுவிதியால் இயல்பும் ஏகாரமிகுதலுமன்றி ஐகாரவீற்றுப்பொதுப்பெயர்க்கு, ஆயுமாவும்- ஐகாரம் ஆயாதலும் ஆவாதலும், அல்லவற்று- உயர்திணை அஃறிணைப்பெயர்களுக்கு, ஆயும்- அவ்விரண்டுமல்லாமல் ஐகாரம் ஆயாதலும், உருபாகும்-விளியுருபுகளாம், எ-று (பொ-ரை) ஐகாரவீற்றுப் பொதுப்பெயர்க்கு இயல்பும் ஏகார மிகுதலுமன்றி ஐகாரம் ஆயும் ஆவுமாய்த்திரிதலும் உயர்திணை அஃறிணைப்பெயர்க்

ரு அவ்வுருபுகளன்றி ஐகாரம் ஆயெனத்திரிதலு முருபாம். எ-று.
[வ-று.] அன்னாய்- தந்தாய்- (எ-ம்) "ஆவன்றுவலந்தனை
யுந்தராய்." - (எ-ம்) விரவுப்பெயர்க்கண் இரண்டுருபும் வந்தன.
விடலாய்- மடந்தாய்- (எ-ம்) - "சிறுமீன்கவுட்கொண்ட செந்தா
விநாராய்."— "கான்றாய்க்குருந்தே கொடிமுல்லாய்." (எ-ம்) இ
ருதிணைப்பெயர்க்கண்ணும் ஆயுருபுவந்தது. (௬௯)

(௩௱எ) ஒருசார்னவ்வீற் றுயர்திணைப்பெயர்க்கண் - ணளபீ
றழிவய னீட்சியதனொடு மறுபோத லவற்றொடோவுற - லீறழிந்
தோவுற லிறுதியவ்வாத - லதனொடயதிரிந் தேயுறலீறழிந் - தய
லேயாதலும் விளியுருபாகும்.

(எ-ன்) னகரவீற்றுயர்திணைப்பெயர்க் கெய்தியதன்மேற் சிற
ப்புவிதியுணர்- த்து. (ப-ரை) னவ்வீற்றுயர்திணைப்பெயர்க்கண்
- பொதுவிதியன்றி னகரமெய்யீற்று உயர்திணைப்பெயர்களுள்,
ஒருசாரளபு- சில அளபெடுத்தலும், (ஒருசா) ரீறழிவு- சில ஈறுகெ
டுதலும், (ஒருசா) ரயனீட்சி - சில ஈற்றயனீளுதலும், (ஒருசா) ர
தனொடு மறுபோதல்- சில ஈற்றயனீண்டு ஈறுகெடுதலும், (ஒருசா) ர
வற்றொடோவுறல்- சில ஈறுகெட்டு ஈற்றயனீண்டு ஓகாரமிகுதலு
ம், (ஒருசா) ரீறழிந்தோவுறல் - சில ஈறுகெட்டு ஓகாரமிகுதலும்,
(ஒருசா) ரிறுதியவ்வாதல்- சில இறுதினகரமெய் யகரமெய்யாத
லும், (ஒருசா) ரதனொடயதிரிந்தேயுறல் - சில ஈற்று னகரமெய்
யகரமெய்யாய்த்திரிந்து அயலில் ஆகாரம் ஓகாரமாய் ஏகாரமிகு
தலும், (ஒருசா) ரீறழிந்தயலேயாதலும்- சில ஈறுகெட்டு அயலி
ல் அகரம் ஏகாரமாதலும், விளியுருபாகும் - விளியுருபுகளாகும்,
எ-று. (பொ-ரை) பொதுவிதியன்றி னகரவீற்று உயர்திணைப்
பெயர்களுட் சில அளபெழுதலும், சில ஈறழிகெடுதலும், சில ஈ
ற்றயனீடலும், சில ஈற்றயனீண்டு ஈறுகெடுதலும், சில ஈற்றயனீ
ண்டு ஈறுகெட்டு ஓகாரமிகுதலும், சில ஈறுகெட்டு ஓகாரமிகுதலு
ம், சில இறுதினகரவொற்று யகரவொற்றாய்த்திரிதலும், சில இறு
தினகரவொற்று யகரவொற்றாய்த்திரிந்து அயலில் ஆகாரம் ஓகார
மாய் ஏகாரமிகுதலும் சிலவீறுகெட்டயலி லகரம் ஏகாரமாதலும்
விளியுருபாம். எ-று. ஒருசாரென்பதனை விளியதிகாரமனை
த்திலுங்கூட்டுக. [வ-று] அப்பர்கிழா அன்- வல்லங்கிழா அன்- என
அளபாயின. எல்லசிறுக்கோமறநண்ப- புலவ- தோழ- என ஈ
றழிந்தன —நம்பான் - பெருமான் - என ஈற்றயனீண்டன.— இ
றைவா-மன்னா- என அயனீண்டு ஈறுகெட்டன.ஐயாவோ - அப்பா
வோ - என ஈறுகெட்டு அயனீண்டு ஓகாரமிக்கன.—நினையவோ -
ஐயவோ- என ஈறழிந்து ஓகாரமிக்கன.—வாயிலாய்- ஆதினாய்-

என இறுதியவ்வாயின.—வாயிலோயே - என இறுதியவ்வொற்று மீற்றயல் ஆகாரமோகாரமா யேகாரமிக்கது.—"ஐயவெமக்கருண்மடவை,,—"மன்றவாழியமுருகே,, என ஈறழிந்து அயலில் அகரம் ஏகாரமாயின. (௫௰)

(௩௱அ) ளஃகானுயர்பெயர்க் களபீறழிவய - னீட்சியிறுதி யவ்வொற்றாத- லயலிலகரமே யாதலும்விளித்தனு. *

(எ-ன்) ளகரவீற்றுயர்திணைப்பெயர்க் கெய்தியதன்மேற்சிறப்புவிதியுணர்-ற்று (ப-ரை) ளஃகானுயர்பெயர்க்கு - பொதுவிதியன்றி ளகரமெய்யீற்றுயர்திணைப்பெயர்களுள், (ஒருசா) ளபு- சில அளபெடுத்தலும், (ஒருசா) ஈறழிவு- சில ஈறுகெடுதலும், (ஒருசா) யனீட்சி- சில ஈற்றயனீளுதலும், (ஒருசா) இறுதியவ்வொற்றாதல்- சில இறுதி ளவ்வொற்று யவ்வொற்றாதலும், (ஒருசா) அயலிலகரமேயாதலும்- சில ஈற்றயல் அகரம் ஏகாரமாதலும், விளித்தனு- விளியுருபுகளாகும். எ-று. (பொ-ரை) ளகரவீற்றுயர்திணைப்பெயர்க்குப் பொதுவிதியன்றி அளபெழலும் ஈறுகெடலும் அயனீடலும் இறுதி ளகரவொற்று யகரவொற்றாதலும் ஈற்றயலகரமேகாரமாதலும் விளியுருபாம். எ-று, ❁ [வ-று] "மவார்த் தொலைந்த விறன்மிதுவேளே,, என அளபாயிற்று.—"துனிகொள்ளலெல்லாதீ,, என ஈறுகெட்டது.—நமர்காள் - எமர்காள்- என ஈற்றயனீண்டன.—குழைபாய்- வாயிலாய்- என இறுதி ளகரவொற்று யகரவொற்றாயின.—"தலைமீது கொள்வமடிகேள்,, என ஈற்றயலகர மேகாரமாயிற்று.—எல்லாவென்பது தோழி முன்னிலைப் பெயரன்றோ விளியேலாதென விலக்கப்பட்ட அம்முன்னிலைப் பெயரை மீண்டுக்காட்டிய தென்னையெனின், "முன்னிலையெல்லீர்நீயிர்நீவிர்நீர்நீயல்லனபடர்க்கை,, என வரையறுக்கப்பட்டமையிற் றோழியென்னும்பொருட்டாகிய எடவென்னும்படர்க்கைப்பெயர் விளியேற்றமையின் எடாவென்பதுதோழன்முன்னிலைப்பெயரொன்றும் தோழியென்னும் பொருட்டாகிய எல்லாள் எடியென்னும் படர்க்கைப்பெயர்கள் விளியேற்றமையின் "எல்லாவுமேடியுந்தோழிமுன்னிலைப்பெயர்,,என்றுங்கூறப்பட்டவன்றி அவை யியல்பாய்நின்ற முன்னிலைப்பெயரல்லவென்க.()

(௩௱அ) ரவ்வீற்றுயர்பெயர்க் களபெழலீற்றய- லகரம் இஈ யாதலாண்டையா- வீயாதலத்னோ டேயுறலீற்றே- மிக்கயல்யாக் கெட் டதனயனீட- லீற்றினுற விவையுபரீண்டுருபே. *

(எ-ன்) ரகாரவீற்றுயர்திணைப்பெயர்க் கெய்தியதன்மேற் சிறப்புவிதியுணர்-ற்று. (ப-ரை) ரவ்வீற்றுயர்பெயர்க்கு - (பொது விதியன்றி) ரகரமெய்யீற்று உயர்திணைப்பெயர்களுள், (ஒருசா) ளபெழல்-சில அளபெடுத்தலும் (ஒருசா) ஈற்றயலகரம் இஈயாத

ல்-சில ஈற்றயல் அகரமானது இகரமாதலும் ஈகாரமாதலும், (ஒரு
சா) ராண்டையாவீயாதல்- சில அவ்வீற்றயல் ஆகாரம் ஈகாரமாத
லும், (ஒருசா) ரதனோடேயுறல்-சில அதனோடு ஏகாரமேற்றலும்,
(ஒருசா) ரீற்றேமிக்கயல்யாக்கெட் டதனயனீடல்- சில ஈற்றில் ஏ
காரமிக்கு அயலில்யாக்கெட்டு அதனயல் இகரம் ஈகாரமாதலும்,
(ஒருசா) ரீற்றினீருறல்-சில ஈற்றில் ஈர் ஆதலும்; இவையும்- ஆகிய
இவையும், ஈண்டு- இவ்விடத்து, உருபு- விளியுருபுகளாகும், எ-று.
(பொ-ரை) பொதுவிதியன்றி ரகாரவீற்று உயர்திணைப்பெயர்க்
கு அளபெழலும் ஈற்றயலகரம் இகரமாதலும் ஈகாரமாதலும் அ
வ்விடத்து ஆகாரம் ஈகாரமாதலும் அதனோடு ஏகாரமேற்றலும் ஈ
ற்றில் ஏகாரமிக்கு அயலில்யாக்கெட்டதனயலிகரம் ஈகாரமாத
லும் ஈற்றினீராதலும் விளியுருபாம். எ-று. ❁ [வ-று.] சிறுஅர்-
மகாஅர்- என அளபாயின.—"என்னை முன்னிலன் மிக்கிறவ்வி
ர்." என ஈற்றயலகரம் இகரமாயிற்று.—வேந்தீர்- நாய்கீர் - என
அகரம் ஈகாரமாயின.—சான்றீர்- மடவீர்- என ஈற்றயல் ஆகார
ம் ஈகாரமாயின.—"பல்சான்றீரே பல்சான்றீரே." கணியீரே- என
ஈற்றயல் ஆகாரம் ஈகாரமாய் ஏகார மே[illegible]ன.—நம்பீரே - தம்பீ
ரே- தோழீரே- தொழும்பீரே- என ஈற்றில் ஏகாரமிக்கயல்யாக்கெ
ட்டதனயல் இகரம் ஈகாரமாயின.—எமரீர்- தமரீர் - என ஈரீற்ற
ன.—ஈண்டென்றமிகையானே, கடலாரே- கடலீரே- கழியாரே-க
ழியீரே-சாத்தியாரே-சாத்தியீரே-கொற்றியாரே-கொற்றியீரே-என
அஃறிணைப்பெயர் விரவுப்பெயர்களைச் சிறப்பித்து ரகரவீற்றுய
ர்திணைப்பெயர்போலக் கூறியவழியும் இவ்வுருபேற்றல்கொள்க.()
(௩௱௰) லகாரவீற்றுயர்பெயர்க் களபயனீட்சியும்- யகாரவீற்
றிற் களபுமாமுருபே. ❁

(எ-ன்) லகாரயகாரவீற்றுயர்திணைப்பெயர்க்கெய்தியதன்மேற்
சிறப்புவிதியுணர்-த்து. ப-ரை) லகாரவீற்றுயர்பெயர்க்கு-பொ
துவிதியன்றி லகரமெய்யீற்று உயர்திணைப்பெயர்க்கு, (ஒருசா)
ரளபு- சில அளபெடுத்தலும், (ஒருசா) ரயனீட்சியும்- சில ஈற்றய
னீளுதலும், யகாரவீற் (றுயர்பெயர்க்கு) - யகரமெய்யீற்று உய
ர்திணைப்பெயர்க்கு, அளபும்- அளபெடுத்தலும், உருபாம் - விளி
யுருபுகளாகும், எ-று. (பொ-ரை) பொதுவிதியன்றி லகாரவீற்று
உயர்திணைப்பெயர்க்குஅளபெழலும்ஈற்றயனீடலும்யகாரவீற்று
உயர்திணைப்பெயர்க்கு அளபெழலு முருபாம். எ-று ❁ உயர்
திணைப்பெயரென்பதனை யகாரவீற்றின்கண்ணும் உம்மையை ய
ளபென்பதன் கண்ணுங்கூட்டுக. [வ-று.] "வலம்புரித் தடக்கை
மாஅனின்னிறம்." (எ-ம்) தோன்றால் மடவரால்-தாழ்குழால்- (எ
-ம்) சேஎய்- (எ-ம்), வரும்.

(௩௱௰௧) ணவ்வீற் றுயர்திணை யல்லிருபெயர்க்க ணிறுதிய ழிவத னோடய னீட்சி. *

(எ-ன்) ணகரவீற் றஃறிணைப்பெயர்க்கும் விரவுப்பெயர்க்கு மெய்திய தன்மேற் சிறப்புவிதியுணர்-த்று. (ப-ரை) ணவ்வீற் றுயர்திணையல்லிருபெயர்க்கண் - பொதுவிதியன்றி ணகரமெய்யீற்று அஃறிணைப்பெயர் பொதுப்பெயர்களிடத்து, (ஒருசா) ரிறுதியழிவு - சில ஈறுகெடுதலும், (ஒருசா) ரதனோடயனீட்சி - சில ஈறு கெடுதலுடனே ஈற்றயனீளுதலும் விளியுருபுகளாம், எ-று. (பொ-ரை) பொதுவிதியன்றி ணகரவீற் றஃறிணைப் பெயர்க்கண்ணும் விரவுப்பெயர்க்கண்ணும் இறுதிகெடுதலும் அதனோடு ஈற்றயனீடலும் விளியுருபாம். எ-று. ❁ இறந்ததுதழீஇய வெச்சவும்மை களும் விளியுருபாமென்பதூஉந் தொக்குநின்றன. [வ-று.] அலவ- இகல- கழுழ- (எ-ம்) அலவா- இகலா- கழுழா- (எ-ம்) சாத்த- கொற்ற- (எ-ம்) சாத்தா- கொற்றா- (எ-ம்) வரும். (௫௪)

(௩௱௰௨) லளவீற் றஃறிணைப் பெயர்பொதுப்பெயர்க்கண - ணீற்றய னீடசியு முருபாகும்மே. *

(எ-ன்) லகாரளகாரவீற் றஃறிணைப்பெயர்க்கும் விரவுப்பெய ர்க்குமெய்தியதன்மேற் சிறப்புவிதியுணர்-த்று. (ப-ரை) லளவீற் றஃறிணைப்பெயர் பொதுப்பெயர்க்கண் - லகரளகரமெய்யீற்று அஃறிணைப்பெயர்க்கும் பொதுப்பெயர்க்கும், ஈற்றயனீட்சியும் - பொதுவிதியன்றி ஈற்றயலெழுத்துநீளுதலும், உருபாகும்- விளியுருபாகும், எ-று. (பொ-ரை) பொதுவிதியன்றி லகாரளகாரவீற் றஃறிணைப்பெயர்க்கண்ணும் விரவுப்பெயர்க்கண்ணும் ஈற்றயனீடலும்விளியுருபாம் எ-று ❁ [வ-று.] "காட்டுச்சாரோடுங் குறுமுயால்" கிளிகாள்- (எ-ம்) தூங்கால்- மக்காள்- (எ-ம்) வரும். (௫௫)

(௩௱௰௩) அண்மையினியல்புமீ றழிவுஞ்சேய்மையி - னளபும் புலம்பி னோவுமாகும். *

(எ-ன்) மேல் விதந்தவிளியுருபுகட் காவதோர்புறனடை யுணர்-த்று. (ப-ரை) முன்சொல்லப்பட்ட விளியுருபுகளுள், அண்மையின்- சமீபவிளிகளுக்கு, இயல்புமீறழிவும்- இயல்பாதலும் ஈறுகெடுதலும், சேய்மையின் - தூரவிளிகளுக்கு, அளபும் - அளபெடுத்தலும், புலம்பின்- புலம்பல்விளிகளுக்கு, ஓவும்- ஓகாரமிகுதலும், ஆகும்- வரும், எ-று. (பொ-ரை) மேற்போந்த விளியுருபுகளுள் இயல்புகளும் ஈறழிவுகளும் அண்மைவிளிக்கண்ணும் அளபுகள் சேய்மை விளிக்கண்ணும் ஓகாரங்கள் புலம்பல்விளிக்கண்ணும் வரும், எ-று. ❁ எனவே ஏனைவிளியுருபுகள் அண்மை சேய்மை புலம்பென்னு மூன்றிடத்தும் விராய்வருமென்பது பெற்றாம். (௫௬)

(சூ௱௰௪) நுவ்வொடுவினாச்சுட் டுற்றனளர - வைதுத்தாந்தா னின்னனவிளியா. *

(எ-ன்) இஉ ஊவேொடென்னுஞ் சூத்திரத்திற் காவதோர்புறனடைபுணர் - ற்று. (ப-ரை) நுவ்வொடு- நுவ்வுடனே, வினா - மூன்றுமுதல்வினாவையும், சுட்டு - மூன்றுசுட்டையும், உற்ற - முறைமேய பொருந்திய, னளர - னளரவென்னீற்று உயர்திணைப்பெயர்களும், வை து - வை - து என்கிற இரண்டு ஈற்றுஅஃறிணைப்பெயர்களும், தான் - தானென்கிற பொதுப்பெயரும், இன்னன - இவை போல்கின்றபிறவும், விளியா - விளிக்கப்படுவனவல்ல. எ-று. (பொ-ரை) மேல் விளிக்கப்படுமென்றவற்றுள் நுவ்வுடனே மூன்றுமுதல்வினாவையும் மூன்றுசுட்டையும் வரன்முறையே பொருந்திய னளரவென்னு மூன்றீற்றுயர்திணைப்பெயர்களும், வை - து - என்னுமிரண்டீற்றஃறிணைப்பெயர்களும், தானென்னும் பொதுப்பெயரும் விளிக்கப்படா. எ-று. ❁ இங்ஙனம்விதந்த இவைப்பெயர் வினாப்பெயர் சுட்டுப்பெயர்களின் இடைநிற்குமெழுத்தையொழித்துமுதலெழுத்தோடுற்றதாக இறுதி னளரக்களைக்கூறலமையின் வரன்முறையென்றும் நுவ்வொடு வைது என்னுமிரண்டும்பொருந்தாவென்பார் அதனை ஒடுக்கொடுத்துப் பிரித்தார். மகரவீற்றுப்பொதுப்பெயர் முன்னமே விலக்கப்பட்டமையின் ஈண்டுத் தாமென்றது அசைநிலை. [வ-று] நுமன்- நுமள்- நுமர்- (எ-ம்) எவன்- எவள்- எவர்- எவை- எது- யாவன்- யாவள்- யாவர்- யாவை- யாது- ஏவன்- ஏவள்- ஏவர்- ஏவை- ஏது (எ-ம்) அவன்- அவள்- அவர் அவை- அது- இவன் இவள்- இவர்- இவை இது - உவன்- உவள்- உவர்- உவை- உது (எ-ம்) தான் (எ-ம்) வரும். இன்னென்றமையானே, பிறன்- மற்றையான்- என்றற்றொடக்கத்தனவுங் கொள்க. (௫௭)

(சூ௱௰௫) முதலை யையுறிற் சினையைக்கண்ணுறு - மதுமுதற் காயிற் சினைக்கையாகும். *

(எ-ன்) முதல் சினைத்தொடர்பின்கண் இரண்டாமுருபுவரின் முதல்சினை யிரண்டன்பாலும்வாராது தடுமாறிவருதலே மரபெனப் புறனடைபுணர் - ற்று. (ப-ரை) முதலை - முதலினை, ஐயுறின் - ஐயுருபுபொருந்தினால், சினையை - சினையினை, கண் - கண்ணுருபு, உறும் - பொருந்தும், அது - அதுவுருபு, முதற்கு - முதலுக்கு, ஆயின் - வரின், சினைக்கு - சினையினுக்கு, ஐ - ஐயுருபு, ஆகும் - வரும். எ-று. (பொ-ரை) முதலினை ஐயுருபுபொருந்திற் சினையினைக் கண்ணுருபுபொருந்தும் அதுவுருபு முதலுக்குவரிற் சினைக்கு ஐயுருபு வரும். எ-று. ❁ "ஒருமொழியொழிதன் னினங்கொளற்

குரித்தே.,,—என்பதனுன் ஆருவதன்பன்மை யுருபுங்கொள்க.—இனி இரட்டுறமொழித லென்னுமுத்தியான் அதுவென்பதனைச் சுட்டாக்கிக்கண்ணுருபு முதற்காயிற் சினைக் கையாகு மெனவும் பொருளுரைத்துக்கொள்க. [வ-று.] யானையைக்காலின்கண்வெட்டினுன் - யானையது காலை வெட்டினுன் - யானையின காலகளை வெட்டினுன் - யானையின்கட் காலைவெட்டினுன் (எ-ம்) கையினைவிரலின்கட்பிடித்தான் - கையது விரலைப்பிடித்தான் - கையின விரலகளைப்பிடித்தான் - கையின்கண் விரலைப்பிடித்தான் (எ-ம்) வரும்.—இங்ஙனங்கூறவே யானையைக்காலைவெட்டினுன் - என இரண்டன்பாலும் ஐயுருபுவாராதென்முராயிற்று. வரிற்செயப்படுபொருளிரண்டாய் முதல்சினைகள் ஒருபொருட்பகுதியவல்லவா மாதலின் இங்ஙனஞ் செயப்பட்டதொருபொருளே முதல்சினைகள் ஒருபொருட்பகுதியவே யென்பதுதோன்றக் கண்ணுருபும் அதுவுருபும் வருமென்பதாயிற்று. இவ்வாறன்றி ஒரோவழி முதல்சினையிரண்டன்பாலும் ஐயுருபுவரின் "யாதனுருபிற் கூறிற்றாயினும்,, என்னுஞ் சூத்திரத்தான் முதலின்பால் ஐயுருபை அதுவுருபாயேனுஞ் சினையின்பால் ஐயுருபைக் கண்ணுருபாயேனுந் திரிக்கப்படுமென்க. (௫௮)

(௩௱௰௯) முதலிவைசினையிவை யெனவேறுளவில-வுரைப்போர்குறிப்பின வற்றேபிண்டமும். ✻

(எ-ன்) மேல் முதல்சினையிரண்டன்பாலும் ஐயுருபுவாராதென அருத்தாபத்தியாற் கூறினூர் அங்ஙனம்வாராமைக்கேதுவும் மேலைச் சூத்திரப்பொருளோடு இப்பொருளைப் பிண்டப்பொருளுக்கு மேற்பித்தலுமுணர்-ற்று. (ப-ரை) முதலிவைசினையிவையென- கடங்களிவை படங்களிவை என்கிறதுபோல முதற்பொருள்களிவை சினைப்பொருள்களிவை என்கிறதற்கு, வேறுளவில - இரண்டாகவேறுள்ளவையில்லவாம், உரைப்போர்-ஒருபொருளையே யிரண்டாகப் பகுத்துச்சொல்லுவோரது, குறிப்பின-குறிப்பின்மாத்திரையனவேயாம், பிண்டமும் பிண்டப்பொருளும், அற்று- அத்தன்மைத்தாம். எ-று. (பொ-ரை) கடங்களிவை படங்களிவையென்றாற்போல முதற்பொருள்களிவை சினைப்பொருள்களிவையென இரண்டாகவேறுள்ளனவில்லவாம் ஒருபொருளையே யிரண்டாகப் பகுத்துக்கூறுவார் குறிப்பின் மாத்திரையனவேயாம் பிண்டப்பொருளும் அத்தன்மைத்தாம். எ-று. ❁ யானையைக்குறித்தவழி யானையுண்டாய்க் கால் கை கோடு முதலியனவேறில்லையாய்க் கால் கை கோடு முதலியவற்றைக்குறித்தவழி அவையுண்டாய் யானை வேறில்லையாய்நிற்கும் ஒருபொருட் பகுதியவாதலின் இவ்வாறுகூறப்பட்டன. வேறுளவிலவென்றமையான், யானையைக் காலைவெட்

டினன்- என ஐயுருபு முதல்சினையிரண்டன்பாலும்வாராமைக்கு ஏதுக்கூறினராயிற்று. இனி ஒருபொருட்கண்முதலைக்கருதிச், சினையெனவும், சினையைக்கருதி முதலெனவும், கூறுதல்போலப்பிண்டித்தபொருள்களைக்கருதியல்லது பிண்டமெனல் கூடாமையிற் பிண்டமு மற்றேயென்றதுணையானே, பிண்டித்தபொருள்களு மனையவேயென்பதுதாமே போதருமென்க. அவை வருமாறு, நெல்லைப்பொலியின்கண்வாரினன் - நெல்லினதுபொலியை வாரினன்- என வரும்.—நெல்லைப்பொலியைவாரினன்- என இரண்டன்பாலும் ஐயுருபுவாரா இப்பிண்டப்பொருளாகிய பொலிக்குப்பையும் பிண்டித்தபொருளாகிய நெல்லும் முதல்சினையனையவாய் வேறுளவில்லவாமாதலினென்க. இச்சூத்திரத்திற்கு இவ்வாறன்றி, யானையதுகோடு - கோட்டதுநுனி- என ஒன்றற்குச்சினை மற்றொன்றற்கு முதலாயும் ஒன்றற்குமுதல் மற்றொன்றற்குச்சினையாயும் நியதியின்றி வருதலின் இவையேமுதல் இவையேசினையெனவேறறியக்கிடப்பனவில்லை யவைசொல்லுவோர்குறிப்பினான் ஆங்காங்குமுதல் சினையென வுணரப்படுவனவாம், நெல்லினது குப்பை- குப்பையினதுநெல்- எனப் பிண்டப்பொருளும் அத்தன்மைத்தாய்க் கிழமையாய்நின்றது கிழமைத்தாயுங் கிழமைத்தாய்நின்றது கிழமையாயும் நியதியின்றிச் சொல்லுவோர்குறிப்பினானறியவருமெனப் பொருள்கூறுவாருமுளர். இப்பொருண் முதல் சினையிரண்டன்பாலும் ஐயுருபுவாராமைக்கேதுவாகாமையானும் இவ்வாறுமுதலுஞ்சினையும்வருதல் வெளிப்படையாதலின் இவற்றை யுணர்ப்போர்குறிப்பினவெனக் கூறவேண்டாமையானும் ஆசிரியர் தொல்காப்பியரும் முதல்சினைகளொருபொருட்பகுதிய வென்பதுதோன்ற—"முதலுஞ் சினையும் பொருள்வேறுபடா."—என்றமையானும் இப்பொருளு மிதனோடு மாட்டெறிந்தபொருளும் பொருந்தாதென்க. (௩௯)

(௪௰) யாதனுருபிற் கூறிற்றாயினும்- பொருள்சென் மருங்கின் வேற்றுமைசாரும். *

(எ-ன்) வேற்றுமையுருபுகண்மயங்கி ஒன்றுநிற்குநிலைக்களத்து மற்றொன்றுவரினு மமையுமெனப் புறனடையுணர்-த்து. (ட-ரை) யாதனுருபின் - மற்றொருவேற்றுமையுருபால், கூறிற்றாயினும்- ஒருவேற்றுமைப்பொருள் சொல்லப்பட்டதாயினும், பொருள்செல்மருங்கின் - அப்பொருள்சென்றவழியே, வேற்றுமை - அவ்வுருபு, சாரும்- சேரும், எ-று. (பொ-ரை) ஒருவேற்றுமைப்பொருண் மற்றொருவேற்றுமையுருபாற் கூறப்பட்ட தாயினும் அவ்வுருபு மயங்கிவந்தண்மையின் அவ்வுருபுசென்றவழியே பொருள்சாராது பொருள்சென்றவழியே அவ்வுருபு சாரும், எ-து. இ

எனவே அங்ஙன மயங்கிவந்த வுருபைப் பொருளுக்கியைந்த உருபாகத் திரித்துப் பொருள்கொள்க வென்பதாயிற்று. [வ-று.] "நாகுவேயொடு நக்குவீங்குதோள்.,, என்புழி நாகுவே யுடனிகழ்ச்சிப்பொருளாகாது செயப்படுபொருளாய் நிற்றலி னொடு உருபை ஐயுருபாகத் திரித்துக் கொள்க.— "கிளையரி நாணற் கிழங்குமணற்கீன்ற- முளையோரன்ன முள்ளெயிற்றுத் துவர்வாய்.,, என்புழி மணலேற்றுக்கோடற்பொருளாகா திடப்பொருளாய் நிற்றலிற் குவ்வுருபைக்கண் ணுருபாகத் திரித்துக்கொள்க. பிறவுமன்ன. வேற்றுமையுருபு மயங்கிவரிற் பொருளுக்கித் திரித்துக்கொள்ளவேண்டு மென்பதாயிற்று. *

இனி இவ்வாறு மாறுபட நிற்றலன்றி, உரையிற்கோடலென்பதனால்— "தடுமாறுருபுக டாஞ்சிலவுள.,, எனவும் ஒருபொருட்கேதத்தமுருபுகள்போல வேறுருபுகள் வருவனவுளவென்வுங்கொள்க. "தடுமாறுருபுகடாஞ்சிலவுள,, ஆதற்குதாரணம்,— "அவ்வித்தழுக்கா றுடையானைச் செய்யவ— டவ்வையைக் காட்டி விடும்.,, எனவரும். இதனுள் ஐயுங்குவ்வுந்தடுமாறி வருமாறுகாண்க. ஒருபொருட்கே தத்தமுருபுகள்போல வேறுருபுகள்வருவன வினைமுதன்முதலாக முறையே புணர்க்கின்றாம்— "ஒன்றுமூன்றுநான்காறெனுமுருபொடு- வரும்வினைமுத லெனவகுத்தனரே.,,— [உ-ம்.] அவர்செய்தார்- அவராற்செய்யத்தகுமக்காரியம்- அவர்க்குச்செய்யத்தகுமக்காரியம்- அவரதுவரவு- எனமுறையே காண்க. "எல்லாவுருபொடுஞ் செயப்படுபொருளெழும்.,, [உ-ம்.] சோறடப்பட்டது- சோற்றைபட்டான்- அரிசியாற்சோறாக்கினான்- அவட்குக்கொள்ளுமிவ்வணிகலம்- பழியினஞ்சும்- நாலதுகுற்றங் கூறினான்- தூணின்கட்சார்ந்தான்- எனமுறையேகாண்க.— "ஒன்றுமூன்றுநான் கைந்தாறுருபொடு-கருவிவருமெனக் கருதினர்பெரியோர்,, [உ-ம்.] கண்காணும்- கண்ணாற்காண்பன்- கண்ணிற்குக்காணலாம்- கண்ணிற்காணலாம்- கண்ணினதுகாட்சி- எனமுறையே காண்க. "எல்லாவுருபொடுங் கொள்வோனெழுமே.,, [உ-ம்.] "இரப்பவ ரென்பெறினுங் கொள்வர்.,,— "செய்யவ டவ்வையைக் காட்டிவிடும்.,, நாகராற்பலி- நாகர்க்குப்பலி- நாகரின்புசெய்தான்- நாகரதுபலி- நாகர்கணன்புசெய்தான்- எனமுறையேகாண்க. "இரண்டுநான் கைந்தொடு மெழுமெனநீக்கம்.,, [உ-ம்.] மதுரையை நீங்கினான்- மதுரைக்குவடக்குச்சிதம்பரம்- மதுரையின்வடக்குச்சிதம்பரம்- எனமுறையேகாண்க.— "நான்கைந்தாறொடுகுறை நடக்கும்.,, [உ-ம்.] சாத்தனுக்குமகன்- மரத்தினீங்கியகொம்பு- சாத்தனதுகை- உயிரின்கணுணர்வு- எனமுறையேகாண்க.— "ஒன்றிரண்டு நான் கேழா டிடமெழும்.,, [உ-ம்.] ஆண்டேபோந்தை

தொட்டது- தாளைச்சார்ந்தான்- இற்றைக்கு- நாளைக்கு- பகலைக்கு- அந்திக்கு- சந்திக்கு- மாலைக்கு- காலைக்கு- ஊர்க்கு- வீட்டிற்கு வருவான்- தாளின்கட்சார்ந்தான்-எனமுறையேகாண்க. (சுல)

(ஈா௰அ) ஐயான்குச்செய்யுட் கவ்வுமாகு - மாகாவஃறிணைக் கானல்லாதன. *

(எ-ன்) சில வேற்றுமையுருபுசெய்யுட்கட் டிரிந்துவருமா றுணர்த்துதல் நுதலிற்று. (ப-ரை) ஐயான்கு- ஐயும் ஆனும் குவ்வும் ஆகியமூன்றுருபுகளும், செய்யுட்கு- செய்யுளிடத்து, அவ்வுமாகும்- ஒரோவழி அகரமாகத்திரிந்துவரவும்பெறும், அஃறிணைக்கு- அஃறிணையிடத்து,ஆனல்லாதன- ஆனல்லாத ஐயுங் குவ்வும், ஆகா- அகரமாகத் திரியாவாம், எ-று. (பொ-ரை) ஐ ஆன் கு என்னுமூன்றுருபுஞ் செய்யுளகத்து ஒரோவழி அகரமாகத் திரிந்துவரவும்பெறும் அஃறிணைக்கண்ணெனின் ஆனொன்றுமேதிரியும் ஐயுங் குவ்வுந் திரியா. எ-று. ஆகாவஃறிணைக்கு ஆனல்லாதனவெனவே உயர்திணைக்கண் மூன்றுருபுந் திரியுமென்பது பெற்றாம். [வ-று.] "காவலோனக் களிறஞ்சும்மே" என்பது "காவலோனைக் களிறஞ்சும்மே" என்றும், "புலவரான்" என்பது "புலவரான" என்றும், "கடிநிலையின்றே யாசிரியற்கு" என்பது "கடிநிலையின்றே யாசிரியற்க" என்றும், உயர்திணைக்கண் மூன்றுருபுந் திரிந்தன. "புள்ளினான்" என்பது "புள்ளினா" என ஆனுருபொன்றும் அஃறிணைக்கட்டிரிந்தது. அவ்வாமென்னும் இழிவுசிறப்பும்மையான் இங்ஙனந்திரிதலொருதலையன்றென்க. அகரமாகத்திரியுமென்றமையின் ஆனுங்குவ்வுந்திரிந்தவழி அவற்றின்முன்னின்ற ஆனுங்குவ்வுஞ்சாரியையென்பதுபெற்றாம். அல்லது அவ்வுமாகுமென்பதனை இரட்டுறமொழிதலாக்கி ஐயுருபுஅகரமாய்த்திரியவும்பெறும் ஆனுருபுங்குவ்வுருபும் அகரத்தின்கண்ணுகவும் பெறுமெனப்பொருள்கோடலுமொன்று ()

(ஈா௰௯) எல்லையினும் மதுவும்பெயர்கொளு - மல்லவினைகொளு நான்கேழிருமையும் - புல்லும்பெரும்பாலு மென்மனார்புலவர். *

(எ-ன்) எழுவாய்முதலிய எட்டுவேற்றுமைக்கு முடிக்குஞ்சொல்லுணர்- த்துதல். (ப-ரை) எல்லையின்னும்- எல்லைப்பொருட்டாகிய ஐந்தாம்வேற்றுமையும், அதுவும்- ஆறாம்வேற்றுமையும், பெயர்- பெயரை, கொளும்- கொண்டுமுடியும், அல்ல- ஒழிந்த எழுவாய்முதலிய வேற்றுமைகளெல்லாம், வினை- வினையை,கொளும்- கொண்டுமுடியும், நான்கேழ்- நான்காம்வேற்றுமையும் ஏழாம்வேற்றுமையும், இருமையும்- வினையையன்றிப் பெயரையும், புல்

லும்- கொண்டுமுடியும், பெரும்பாலும்- மிகவும், என்மனார் - எ
ன்றுசொல்லுவர், புலவர்- புலவர். எ-று. (பொ-ரை) "நீங்கலொ
ப்பெல்லை யேதுப்பொருளே," என்னும் நான்குபொருள்களுள்
எல்லைப்பொருட்டாகிய ஐந்தாம்வேற்றுமையும் ஆறும்வேற்று
மையும் பெயரைக்கொண்டு முடியும் ஒழிந்த எழுவாய்முதலிய
வேற்றுமைகளெல்லாம் வினையைக்கொண்டுமுடியும் அவற்றுள்
நான்காம்வேற்றுமையும் ஏழாம்வேற்றுமையும் வினையினையே ய
ன்றி வினையொடுபொருந்தும் பெயரையுங்கொண்டுமுடியும் பெ
ரும்பாலுமென்று சொல்லுவர் புலவர். எ-று. ❁ நான்கேழ்பெ
யரும் புல்லுமென்றது இருமையும்புல்லுமென்றமையான் வி
னையொடு பொருந்தும் பெயரொன்றும். பெரும்பாலுமென்ற
மையானே, வினைகொளற்குரியன சிறுபான்மை தொழிற்பெயர்
கோடலும் வினையாலணையும்பெயர் கோடலும் அவற்றுள் எழு
வாய்வேற்றுமை வினைகொண்டுமுடிதலேயன்றிச் சிறுபான்மை
பெயரையும் வினாவையுங்கொண்டு முடிதலுங் கொள்க. [உ-று]
கருவூரின்கிழக்கு- சாத்தனதுகை- என எல்லையின்னுமதுவும்பெ
யர்கொண்டன.—சாத்தன்வந்தான் - சாத்தனல்லன் - குடத்தைவ
னைந்தான்- குடத்தையுடையான்- வாளால்வெட்டினான்- வாளால்வ
லியன்- சாத்தனுக்குக்கொடுத்தான் - சாத்தனுக்குநல்லன்- நோயி
னீங்கினான்- நோயிற்கொடியன்- அவையின்கண்ணிருந்தான் - அ
வையின்கட்பெரியன்- கொற்றாகொள்- கொற்றாவலியை - என அ
ல்லன வினைகொண்டன.—பிணிக்குமருந்து - மணியின்கண்ணொ
ளி - என நான்காம்வேற்றுமையும் ஏழாம்வேற்றுமையும் வினை
யேயன்றிப்பெயருங்கொண்டன. இப்பெயர்கள் எல்லையின்னும
துவுங்கொள்ளும் பெயர்கள்போலாது, பிணிக்குக்கொடுக்குமரு
ந்து- மணியின்கண்ணிருக்குமொளி-என வினைவேண்டிநிற்றலின்
வினையொடுபொருந்தும் பெயர்களாயின. இவ்வண்ணமாதலின் இவ
ற்றிற்கும் வினைப்பயனில்லையொன்றுமே சிறந்ததென்பதூஉம் இ
துகருதி யல்ல வினைகொளுமென முடித்தோதினொன்பதூஉம்
பெற்றாம். வினைகொளுமெனப் பொதுப்படக்கூறினமையிற் கா
ட்டாதொழிந்த வினைவிகற்பங்களெல்லாம் வருவித்து முடித்துக்
காண்க —சாத்தன்வருதல்- சாத்தன்வந்தவன் - குடத்தைவனைதல்-
குடத்தைவனைந்தவன்- எனச்சிறுபான்மை தொழிற்பெயரும் வி
னையாலணையும்பெயருங் கொண்டன. பிறவுமன்ன. இங்ஙனம் கா
ட்டாதொழிந்த உருபுகளோடு மிவ்வாறேயொட்டுக.—சாத்தனவ
ன்- சாத்தன்யாவன் - சாத்தன்யார் - எனப் பெயரோயாகிய எழு
வாய்வேற்றுமை சிறுபான்மை சுட்டுப்பெயரும் வினாப்பெயரும்
வினாவினைக்குறிப்புங் கொண்டது. இங்ஙனம் சாத்தனென்பான்

பிறனொருவனாற் சுட்டவும் வினவவும்பட்டு நிற்றன்மாத்திரையே யன்றி இவனித்தொழி லியற்றினனெனவாராமையின் இவ்வெழு வாய்வேற்றுமை வினைகொண்டுமுடிதலே சிறந்ததென்பார் ஏனை யுருபுகளோடு சேர்த்துப் பொதுப்பட வல்லவினைகொளுமென வலாயறுத்துஞ் சுட்டவும் வினவவும்பட்டுநிற்றலிற் பெயருஞ் வி னவுங்கொண்டுமுடிதலைப் பெரும்பாலுமென்பதனாற் றழுவவுங் கூறினாரென்க. (௬௨)

பெயரியல்

முற்றிற்று.

௨

இரண்டாவது

வினையியல்.

(௩௱௨௰.) செப்பவன்கருவி நிலஞ்செயல்காலஞ் - செய்பொ ருளாறுந் தருவதுவினையே. *

(எ-ன்) பெயர்வினையென இரண்டாகுமென நிறுத்தமுறை யானே வினைச்சொல்லிலக்கண முணர்த்துவான்றொடங்கி அவற் றுள் தெரிநிலைவினைச்சொல்லின் பொதுவிலக்கண முணர்-ற்று. வருஞ்சூத்திரத்தான் வினைக்குறிப்பென்றமையின் இது தெரிநி லையென்பது பெற்றாம். (ப-ரை.) செய்பவன்- கருத்தாவும், கரு வி- காரணமும், நிலம்- இடமும், செயல்- செயலும், காலம்- கால மும், செய்பொருள்- செயப்படுபொருளும் ஆகிய, ஆறும்-அறு வகைப்பொருளையும், தருவது- கொடுப்பது, வினை- தெரிநிலை வி னைச்சொல்லாம், எ-று. (பொ-ரை) கருத்தாவுங் கருவியும் இடமு ம் செயலும் காலமும் செயப்படுபொருளுமாகிய அறுவகைப் பொருளையுந் தருவது தெரிநிலை வினைச்சொல்லாம். எ-று. ❁ வி னையென்றது ஆகுபெயர். நடவாமுதலியவெல்லாந் தழுவுதற்கு ச் செய்யென்றார். செய்பவனென ஒருபான்மேல்வைத்தோதினு

ோனும்,—"ஒருமொழியொழிதன் னினங்கொளற் குரித்தே.,,—
என்பதனான் ஐம்பாலுங்கொள்க. செய்பவனென்றுங் கருவியெ
ன்றும் பொதுப்படக்கூறினமையின் இயற்றுநர்கருத்தா ஏவற்
கருத்தா என்னு மிரண்டனையும் முதற்காரணந் துணைக்காரண
மென்னு மிரண்டனையுங் கொள்க. செய்பவனென்பது - செய்ப
வனுகியபொருளென்னும் பயத்ததாய்நிற்றலின் ஆறுமென்னும்
அஃறிணைத்தொகைச்சொல்லோடு முடிந்தது. அன்றித் திணைவி
ரவி அஃறிணைமுடிபினவாயின வெனினு மமையும். [உ-ம்.] வனை
ந்தான்- என்புழிக் குலாலனாகிய இயற்றுதற்கருத்தாவும், மண்ணா
கிய முதற்காரணமும் தண்டசக்கரமுதலிய துணைக்காரணங்களு
ம் வனையுமிடமும் வனைதற்செயலும் இறந்தகாலமுங் குடமுதலி
யசெயப்படுபொருளுந் தோன்றுதல்காண்க.—அரசனாலயஞ்செ
ய்தான்-என்பது ஏவற்கருத்தா.—இஃதியற்றினான்றொழிற் கேவி
னானைக் கருத்தாவாக்கிக் கூறுதலின் ஏவற்கருத்தா வெனப்படும்:
அரசனாலயஞ் செய்வித்தான்- என்பது ஏவற்கருத்தாவென்பாரு
முளர். செய்தற்றொழிலைத் தச்சனியற்றினாற்போலச் செய்வித்த
ற்றொழிலை அரசனியற்றுதலின் இத்தொழிற்கு அரசனும் இயற்
றுதற்கருத்தாவேயாமென்க. "முற்றும்மையொரோவழி யெச்ச
முமாகும்,,—என்பதனான் ஆறுந்தருவது வினையென்பதற்கு இ
த்தொகையிற் சிலகுறைந்துவரவும் பெறுமெனப் பொருளுரைத்
துக்கொள்க.—அவை வருமாறு, கொடியாடிற்று - கொடிதுஞ்சு
ம்- என்புழி முன்னையது செயப்படுபொருளும், பின்னையதும்செ
யப்படுபொருளோடு கருவியுங்குறைந்துவந்தன.— கொடிதுஞ்சு
மென்பதற்குக் காற்றினதபாவத்தைக் கருவியாகக்கூறினு மமை
யும்.—இன்னும் ஆறுமென்னு முற்றும்மையை உயர்வுசிறப்பும்
மையாக்கி இழிந்தன சிலவுள அவையுமீவண்டுமேற் கொள்கவெ
னவும்பொருளுரைத்துக்கொள்க.—அவையாவையெனின் இன்ன
தற்கெனவும் இதுபயனெனவும் வருவனவாம் —குடத்தைத்தனக்
குவனைந்தான்- பிறர்க்குவனைந்தான் - என்னும் இன்னதற்கென்ப
தூஉம் அறன்முதலியபயன்கருதி வனைந்தானென்னும் இதுபய
னென்பதூஉம் ஏதுவின்பாற்பட்டுக் கருவியுளடங்கவும் பெறூஉ
மாதலின் இழிந்தனவாயின. இப்பொருளை—"முற்றும்மையொ
ரோவழி யெச்சமுமாகும்,,—என்பதன்பாற்படுத்து ஆறுந்தரு
வதுவினையேய எட்டுந்தருவதுவினையேயென வமையாதோவெனி
ன் இவ்விரண்டுமட்டன் எட்டாய்வருவதன்றி ஆறேவருவதோர்வினை
யின்மையினமையாதென்க.—முற்றுவினைகளுட் பகுதியாற் செ
யலும் விகுதியாற்கருத்தாவும் இடைநிலைமுதலியவற்றாற் காலமு
ம் பெயரெச்ச வினையெச்சங்களின் இம்மூன்றுமேய செயலுங்கால

முந் தோன்றின.—அங்ஙனமாதலின் முற்றுச்சொல்லான் மூன்றும் எச்சச்சொல்லான் இரண்டுமென்றுது ஆறுந்தருதலால் வினைச்சொல்லென்றதென்னையெனின், இவ்வாறுங்காரணமாகக் கூடுங்கூட்டத்து இவற்றுட்செயலென்று முதற்காரணத்தினின்றும் ஓர்வினையாகியகாரியத்தகுமாதலின், இவ்வாறுகாரணத்தலைதயுந்தருங்காரியமாகிய வினையின்பெருமையை ஒற்றுமைநயங்கருதி அதன் சொன்மே லேற்றப்பட்டது.—காரணத்தைக் காரியந்தருமெனப்படுதல்—"புகை தன்னுதியான வனல்காட்டு மென்றாற்போலும். இங்ஙனமாகிச்வ செய்பவன் முதலிய ஆறனுண் முற்றின்கண் மூன்றும் எச்சத்தின்கணிரண்டும் வெளிப்படையாயும் வினைக்குறிப்பாயுந் தோன்றுமென்பதாயிற்று. இவ்வாறுங்காரணமாகவே இவற்றுட் செயலென்றது காரியமாகிய வினையடியையென்றுணர்க.—"நாலமத்தொழில் கருத்தாவேனுடையயப் - பால்வகைதோறும் படுமொழிவேதே.," என ஆசிரியர் அவிநயனார் கூறியவாறும்.—"வினையெனப்படுவது வேற்றுமைகொள்ளாது - நினையுங்காலைக் காலமொடு தோன்றும்.," என ஆசிரியர் தொல்காப்பியனார் கூறியவாறுங் காண்க. (க)

(௩௨௧) பொருண்முதலாறினுந் தோற்றிமூன்றறனுள் - வினைமுதன்மாத்திரை விளக்கல்வினைக்குறிப்பே. *

(எ-ன்) குறிப்புவினைச்சொல்லினது பொதுவிலக்கணமுணர்த்து. (இ-ள்.) பொருண்முதலாறினும்- பொருளாதி யாறுங்காரணமாக, தோற்றி- அவற்றினிடத்தே பிறந்து, மூன்றறனுள்- முன் சொல்லப்பட்ட செய்பவன்முதலாகிய ஆறனுள், வினைமுதன் மாத்திரை- கருத்தாவொன்றையே, விளக்கல்- விளக்குதல், வினைக்குறிப்பு- வினைக்குறிப்புச்சொல்லி னிலக்கணமாம், எ-று. (பொ-ரை.) பொருளாதியாறும் அடியாக அவற்றின்கட்டோன்றி மேற் கருத்தாமுதலாகச்சொன்ன ஆறனுட் கருத்தாவொன்றையுமே விளக்குதல் வினைக்குறிப்புச்சொல்லினது இலக்கணமாம், எ-று *

மேலை அதிகாரத்துப்பருபதவுறுப்புக் கூறியவழித் தெரிநிலைவினைக்கு வினையடிவெளிவிளங்கிக் கிடந்தமைபோலக் குறிப்புவினையடி அங்ஙனம்வலைப்பட விளங்காமையின் ஈண்டுவிளக்கப் பொருண்முதலாறினுந்தோற்றியென்றும் தெரிநிலைவினைபோல இக்குறிப்புவினைக்கண்ணுஞ் செய்பவன்முதலியவாறுமுளவென்பார் மூன்றறனுமென்றும் அவற்றுட் செய்பவனை இசசொல்லினது விகுதிவிளக்கு மற்றுள்ளவற்று ளொன்றேனும்விளக்குதற்குரிய வுறுப்பு இதனகத்தின்றென்பார் வினைமுதன்மாத்திரையென்றும் இக்குறிப்புவினையாதலின் இதற்குக்கருத்தாவாக விகுதிப்பொரு

ளைக்கோடலுங்குறிப்பாமென்பார் தருதலென்றது விளக்கலென்றுங்கூறினார். [வ-று.] குழையினன்- குழையினள்- குழையினர்- குழையிற்று- குழையின- குழையினென்- குழையினெம்-குழையினை- குழையினீர்- (எ-ம்) அகத்தினன்- புறத்தினன்- (எ-ம்) ஆதிரையான்- ஓணத்தான் - (எ-ம்) குறுந்தாளன் - செங்கண்ணன் - (எ-ம்) கரியன்-நெடியன்-நல்லன்- உண்மையன்- உடையன்- (எ-ம்) கடுநடையன்- இன்சொல்லன்- (எ-ம்) "மதிபாய்சடைமுடித்து மாசுணப்பைம்பூட்டுச்-சதிபாய் குறுந்தாட்டுத் தான- நதிபாயிருகவுட்டுமுக்கட்டு நால்வாய்த்தென்னுள்ள- முருகவிட்டு நின்றவொளி" (எ-ம்) வரும். பிறவுமன்ன. இவை பொருளாதியாறன் ஒருபொருளை வழங்குதற்கு வரும் பெயராய்நில்லாது இவன்குழையையுடையனாயினான்- என ஆறாம்வேற்றுமையினது உடைமைப்பொருட்கண்ணும், அகத்தின்கண்ணிருந்தனன் - புறத்தின்கண்ணிருந்தனன் என ஏழாம்வேற்றுமையது நிலப்பொருட்கண்ணும், ஆதிரைநாளிற்பிறந்தான்- ஓணநாளிலுதித்தான்- என அவ்வேழாம்வேற்றுமையது காலப்பொருட் கண்ணும், குறுந்தாளையுடையான்- செங்கண்ணையுடையான்- என அவ்வாறாம்வேற்றுமையது உடைமைப்பொருட் கண்ணும், கருவண்ணமாயிருப்பன்- நெடுவடிவமாயிருப்பன் - நற்குணமாயிருப்பன் - உண்மைத்தன்மையன்- உடைப்பொருள்சிறந்தான் -எனப்பண்பின்கண்ணும், கடுநடைநடப்பான்- இன்சொல்லாகச்சொல்லுவான்- எனத்தொழிற்பண்பின்கண்ணும் வருதலின் வினைக்குறிப்புச்சொல்லாயின. இவை முன்புவினைக்குறிப்பாய்ப் பின்பு பொருள்களைவழங்குதற்குவரும்பெயராய்வரின் அவை குறிப்புவினையாலணையும்பெயராம் இவை தம்முள் வேற்றுமையென்க. இவற்றுட்குணமடியாகத்தோன்றிய வினைக்குறிப்புச்சொற்கள் குணவிகற்பம் பலவாதலிற் பலவிகற்பப்பட்டுவரும். அவையாவன, பொன்னன்னன் - புலிபோல்வன் - என ஒப்புணர்த்தியும், —"எப்பொருளு மல்லனிறைவன்."—"பொய்யர்நெஞ்சிற் புகுதலிலன்."—"எவ்வுயிர்க் கண்ணு மிறைவனுளன்." மெய்வலியன்- எனப்பண்புணர்த்தியும், ஆவுண்டு- என உண்மையுணர்த்தியும், அவைதாமிவையல்ல "மாற்றருந்துப்பின் மாற்றோர்பாசறையிலன்."—"மாற்றருந்துப்பின்மாற்றோர்பாசறையுளன்." சொல்வல்லன்-எனக்குறிப்புணர்த்தியும், குழையிலன்- அச்சிலன்- என உடைமைக்கு மறையாயும்வருவனவாம். ஒப்பாவது - வினைபயன்மெய்யுருவென்பனவற்றுளொன்றனையொன்றொத்தல். பண்பாவதொருபொருடோன்றுங் காலத்துடன்றோன்றி யதுகெடுந்துணையுநிற்பது. உண்மையாவதொருபொருட்குக் கேடுபிறந்தாலும் தனக்குக்கேடின்றித்,தான்

ஒன்றேயாப் பலவகைப்பட்டபொருடோறு நிற்பது. குறிப்பாவது பொருட்குப்பின்றோன்றிச் சிறிதுபொழுதுநிகழ்வது — இவையெல்லாம் தொல்காப்பியக்கடலித் றோன்றவிளங்கும் — இந்நூல்சுருங்கியநூலாதலின் இன்றியமையாதனவற்றைச் சிலவிடங்களில் விரித்தெழுதுகின்றனவுமுள அவையாராய்ந்தறிந்துகொள்க. குழையினன் - என்புழிக் குழையையுடையான் வினைமுதல்; இது விதுழியான் விளங்கிற்று — குடத்தின்கண் மண்போல இவ்வினையாகிய காரியத்தின்கண் முதற்காரணமாகிய செயலுண்டெனவும், காலமின்றேல் இதுவினையன்றாமாதலானு முக்காலங்களுள்ளொன்றன்பாற் சார்தற்குரிய இடைநிலையிதற்கு வேண்டாமையானும் முக்காலமுமுண்டெனவும், வினைமுதற்கோர் ஆதாரம்வேண்டுதலின் இடனுண்டெனவும், ஒன்றைவனைந்தான் - ஒன்றால்வனைந்தான் - என்றாற்போல இரண்டாவதற்கும் மூன்றாவதற்கும் இது பயனிலையாக, ஒன்றைக்குழையினன் - ஒன்றாற்குழையினன் - என இயையாமையின் இதன்கட் செயப்படுபொருளுங் கருவியுமில வெனவு முய்த்துணர்க — ஒன்றாற்குழையினன் - என ஓரோவழி இயையின் அங்ஙனங் கருவியுளதென்றுகொள்க. உடையனென்னுங்குறிப்புவினை, ஒன்றையுடையன் - ஒன்றினுடையன் - என வருதலின் இதன்கண்ணதுமுண்டென்க. இவ்வாறே தெரிநிலைவினைபோலக், குறிப்புவினை பிறவற்றுள்ளுஞ் செய்பவன்முதலிய ஆறும்வருதலுஞ் சிலகுன்றிவருதலு முய்த்துணர்க. வினை தெரிநிலைகுறிப்பென இருகூற்றதாமென இவ்விருசூத்திரத்தானுங் கூறினார். இவற்றுள் தெரிநிலையின்பாற்படுநிஞ் செய்யானென்றற்றொடக்கத்து எதிர்மறைக்கண்ணுங் குறிப்பின்பாற்படுமிலனென்றற்றொடக்கத்து எதிர்மறைக்கண்ணும் வினையில்லையாம். அங்ஙனமாகவுமிவற்றை வினையென்பதூஉம் இவை செய்பவன்முதலிய ஆறுந்தருமென்பதூஉ மென்னையெனின், இவற்றை வினையென்பது, முயற்கோடு - ஆகாயப்பூ - என்றாற்போல இன்மையை யுண்மைபோலவைத்துக் கூறுவதோர் நிலைமையே. இவை செய்பவன்முதலிய வாறுந்தருமென்பது, சேதமின்மை பனியின்மை காட்டல்போல் வினையின்மை செய்பவன்முதலியவற்றின் இன்மைகளைக்காட்டி நிற்றலையாம். (உ)

(௨௱௨௨) அவைதாம், — முற்றும்பெயர்வினை யெச்சமுமாகி-யொன்றற்குரியவும் பொதுவுமாகும். *

(எ-ன்) மேற் றெரிநிலைகுறிப்பெனத் தொகுத்துணர்த்திய வினைச்சொற்களை வகுத்துணர்-ற்று. (ப-ரை) அவைதாம் - முன்னிரண்டு சூத்திரங்களானுந் தெரிநிலையாயுங் குறிப்பாயும் வருமென்றவினைசசொற்கள், முற்றும் - முற்றுவினைச்சொற்களும், பெய

(லெச்சமும்) - பெயரெச்சவினைச்சொற்களும்; வினையெச்சமும் -
வினையெச்சவினைச்சொற்களும், ஆகி- ஆக, ஒன்றற்குரியவும் - தி
ணைபாலிடங்களுள் ஒன்றற்குச்சிறப்பாய் வருவனவும், பொதுவு
ம்- பலவற்றிற்கும்பொதுமையினிற்பனவும், ஆகும்- ஆகும், எ-று
(பொ-ரை) மேல் இரண்டுசூத்திரத்தானுங்கூறிய தெரிநிலையாயுங்
குறிப்பாயும்வரும் வினைச்சொற்கடாமுற்றுவினைச்சொற்களும்பெ
யரெச்சவினைச்சொற்களும் வினையெச்சவினைச்சொற்களுமாகித்
திணைபாலிடங்களின் ஒன்றற்குரியனவும் பொதுமையினிற்பனவு
மாகும் எ-று. இ திணைபாலிடங்களினென்பது இசையெச்சம்,
மூக்காலங்களின் ஒன்றற்குரியவும் பொதுவுமாமாறு பதவியலுட்
போந்தமையின் அஃதொழித்துத் திணைபாலிடங்களினென்றும்.
உதாரணந் தத்தஞ் சிறப்புசூத்திரங்களானுணர்க இனி— "ஒரு
மொழியொழிதன் னினங்கொளற் குரித்தே," என்பதனான் இங்
ஙனந் திணைபாலிடப்பொருது இவைநின்றி யொன்றற் குரியவு
ம்பொதுவுமாய் நிற்பனவன்றிப் பிறவாற்றான் ஒன்றற் குரியவும்
பொதுவுமாய் வருவனவுஞ்சிலவுளவெனக்கொள்க. அவையாவன,
பிரிவர் - ஆடுவர் - இவை தன்வினையொன்றற்கேயுரியன.— பிரிப்
பர்- ஊட்டுவர்- இவை பிறவினையொன்றற்கேயுரியன.—"தேற்று
மொழுக்கமொருவர்க்கண்டாயின்,"—"நட்பாட றேற்றாதவர்,"
(எ-ம்) அவனைத்தேற்றிக்கொடுத்தான் - அவனைத்தேற்றிப்பார்த்தா
ன்- (எ-ம்) இவைசொல்லொன்றே தன்வினையும் பிறவினையுமாயி
ன. "தொல்காப்பியமெனத்தன் பெயர்தோற்றி," இவன்பெருத்தா
ன்- இவைபோல்வனவுமது. உண்பான்-உண்ணான் இவைவிதிவினை
மறைவினை.—செய்யாய்- செய்யிர்- மகனெனல்- மக்கட்பதடியெ
னல் - அல்லும்பகலுமருச்சிக்க யாமந்தோறும்வல்லார் - வல்லார்
மாட்டாதார் - வல்லார்திறைகொள்வர்- வல்லார்திறைகொடுப்பர்-
அகல்விசும்பிலார்- அருளான்-வெருளான்- இவைசொல்லொன்றே
விதிவினையுமறைவினையுமாயின.— உண்டசாத்தன்- உண்டசோறு-
இவை செய்வினை செயப்பாட்டுவினை.— புலிகொன்றயானை- மீன்
விழுங்கினவன் - ஒன்னார்வணங்கிலன் - அவர்விருப்பிலவனிவன் -
அதிர்ந்துவந்தான்- "தவரடிபுனைந்த தலைமையோன்," இவைசொ
ல்லொன்றே செய்வினையுஞ் செயப்பாட்டுவினையுமாயின.— சாத்
தனடந்தான்- வண்டூர்ந்தது- இவைமுதல்வினை சினைவினை — வளம்
பொலிந்தது- பலைபொருதிற்று- அவன்பெருத்தான்- கருக்கனு
ருக்கினான் - இவைபோல்வனவெல்லாம் முதல்வினையுஞ் சினைவினையு
மாயின.—தேடியபொருள்- தேடியவந்தான்- ஓடியபாதி- ஓடிய
விழுந்தான் (எ-ம்) பாங்கரொடுகூடிய தலைவன் - தலைவியொடுகூ
டியவந்தான் (எ-ம்) இவை சொல்லொன்றேபெயரெச்சமாயினவெண
வறிக.—இவைபோல்வன பிறவுமன்ன.

(௩௱௨௩) பொதுவியல்பாறையுந் தோற்றிப்பொருட்பெயர்-
-முதலறுபெயரல தேற்பிலமுற்றே. *

(எ-ன்) மேற்கூறிய முற்றுமாறுணர் - ற்று. (ப-ரை) பொது வியல்பாறையும்- பலவகைவினைகளுக்கும் பொதுவிலக்கணமாகி யசெய்பவன்முதலாறையும், தோற்றி - தோன்றச்செய்து, பொரு ட்பெயர்முதல்- பொருட்பெயர்முதலாகிய, அறுபெயரலது- அ றுவகைப்பெயரல்லாத மற்றொன்றையும், ஏற்பில - ஏலாதன, மு ற்று-முற்றுவினைவினைக்குறிப்புகளாம், எ-று.(பொ-ரை) தெரிநிலை முற்றுங் குறிப்புமுற்றும் பெயரெச்சமும் பெயரெச்சக் குறிப் பும் வினையெச்சமும்வினையெச்சக்குறிப்புமாகிய அறுவகைவினை வினைக்குறிப்புக்கும் பொதுவிலக்கணமாகிய செய்பவன்முதலிய ஆறினையுந்தோற்றுவித்துப்பொருட்பெயர்முதலிய அறுவகைப் பெயரையும்பயனிலையாக ஏற்பனவாகியல்லதுஒன்றனையும் ஏலாத னமுற்றுவினைவினைக்குறிப்புக்களாம். எ-று. ஐம்பாலவாகிய வி னைமுதலைத்தரும்விகுதியுறுப்புக்குறைந்தகுறைச்சொல்லாகியஎச் சங்களைப்போலாது அவ்வுறுப்போடுகூடி நிறைந்துநிற்றலின்மு ற்றெனப்படுமென்பார் ஆறையுமென்றும் பெயரன்றி வினைச் சொன்முதலியவற்றுள் ஒன்றனையும் ஏலாதன முற்றெனவும் பெ யரன்றிப் பெயர்ப்பின்வேறொன்றனையும் ஏலாதனமுற்றெனவும் இருபொருடோன்றப் பெடாலதென்றுங் கூறினார். [வ-று.] செ ய்தானவன்- நல்லனவூன்- குளிர்ந்ததுநிலம்-வந்ததுகார்-குவிந்தது. கை- பரந்ததுபசப்பு- ஒழிந்ததுபிறப்பு- எனவரும்.—வினைத் தி ணைபாலிடங் காலங்கடோறு மொட்டுக. இவற்றுள் ஐம்பாலவாகிய வினைமுதலைத்தரும் விகுதி யுறுப்புக்குறையாது முற்றிநிற்றலும் பொருளாதியாறுபெயரையன்றி வினைமுதலியவற்றைப் பயனிலை யாக ஏலாமையும் பெயர்ப்பின்வேறொன்றையும் ஏலாமையுங்கா ண்க.—"மற்றுச்சொனோக்கா மரபினவனைத்தும் - முற்றிநிற்பது முற்றியன்மொழியே,, என்றார் ஆசிரியர் அகத்தியனாருமென்க.(

(௩௱௨௪) ஒருவன்முதலைந்தையும் படர்க்கையிடத்து- மொரு மைப்பன்மையைத் தன்மைமுன்னிலையினு - முக்காலத்தினு மு ரணமுறைமே - மூவைந்திருமூன் றுறுமுற்று - வினைப்பக மொன்றே மூவொன்பானும். *

(எ-ன்) மேற்கூறிய தெரிநிலை குறிப்பென்னும் இருவகைமு ற்றுட் டெரிநிலைமுற்றொன்றுமே இறப்பு எதிர்வு நிகழ்வு என் னுங்கால விகற்பங்களைப் பெறுமென்பதூஉம் அவற்றான் இத்து ணையாமென்பதூஉமுணர் - ற்று. (ப-ரை) ஒருவன்முதலைந்தையு ம்-ஆண்பான்முதலாகிய ஐம்பால்வினைமுற்றுக்களையும், படர்க்கை

யிடத்தும் படர்க்கையிடத்திலும், ஒருமை- ஒருமைவினைமுற்றையும், பன்மையை- பன்மைவினைமுற்றையும்; தன்மை - தன்மையிடத்திலும், முன்னிலையினும்- முன்னிலையிடத்திலும்வைத்து; முக்காலத்தினும்- முக்காலங்களாலும், முரண - மாற, முறையே- சொல்லப்பட்டமுறையே, மூவைந்து- படர்க்கைவினைமுற்றுக்கள் பதினைந்தும், இருமூன்று- தன்மைவினைமுற்றுக்களாறும், ஆறு-முன்னிலைவினைமுற்றுக்கள் ஆறும், ஆய்- ஆகி, முற்றுவினைப்பதமொன்றே- தெரிநிலைவினைமுற்றுப்பதமொன்றுமே, மூவொன்பானும்- இருபத்தேழாகும், எ-று (பொ-ள) ஒருவன் ஒருத்தி பலர் ஒன்று பல என்னும் ஐம்பாலவாகியவினைமுற்றுக்களைப் படர்க்கைக்கண்ணும் ஒருமைபன்மை என்னும் இருபாலவாகியவினைமுற்றுக்களைத்தன்மைக்கண்ணு முன்னிலைக்கண்ணும் வைத்து முக்காலங்களானுமாற முறையே படர்க்கை வினைமுற்றுப்பதினைந்தும் தன்மைவினைமுற்றாறும் முன்னிலை வினைமுற்றாறுமாகிய முற்றுவினைச்சொல் மொன்றுமே யிருபத்தேழாம் எ-று. ✽ ஈண்டொருவனென்றதுபெயரையன்று உயர்திணையாண்பால்வினையை யுணர்த்திநின்ற தோர்குறிப்புச்சொல் ஒருமைப்பன்மையென்புழியிடையே தோன்றியபகரஞ் சந்தவின்பப்பொருட்டு விரித்தல்விகாரமாய் வந்தது. ஒன்றேயென்னும் ஏகார முற்றுவினைப்பத முற்றுவினைக்குறிப்புப்பதமென்னும் இரண்டனுண் முற்றுவினைப்பதமொன்றுமே மூவொன்பானும் என்னும் பொருட்டு நிற்றலிற் பிரிநிலை. இங்ஙனங்கூறவே, இவற்குச்செல்வ முன்னுண்டு - இப்பொழுதுண்டு-பின்னுண்டு - என வினைக்குறிப்புப்பதம், முக்காலமும் ஏற்குமெனுங் காலங்காட்டும் இடைநிலைமுதலிய வேண்டாதுபொதுமையினிற்றலின் அதனை இவ்வாறு விரிக்கப்படாதென்பது பெற்றாம். (௫)

(௩௱௨௫) அன் ஆ னிறுமொழி யாண்பாற்படர்க்கை. ✽

(எ-ன்) மேற்கூறிப்போந்த இருவகைமுற்றுட் டிணைபாலிடங்களி னொன்றற்குரியனவுணர் - ற்று. (ப-ரை) அன் ஆனிறுமொழி - அன் ஆன் என்கிற இருவிகுதியையும் இறுதியிலுடையமொழிகள், ஆண்பாற்படர்க்கை - உயர்திணை யாண்பாற்படர்க்கைவினைமுற்றுங் குறிப்புமுற்றுமாம். எ-று. (பொ-ள) அன் ஆன் என்னும் இருவிகுதியும் இறுதியாகியமொழிகள் உயர்திணையாண்பாற்படர்க்கை வினைமுற்றும் வினைக்குறிப்பு முற்றுமாம். எ-று. ✽ ஆண்பெண்ணென்னும்விகற்பமஃறிணைப்பெயர்க்கண்ணன்றி அவ்வினைக்கண்ணின்மையின் ஆணென்றமையான் உயர்திணையென்பதூஉம், பாலென்றமையான் முற்றென்பதூஉம்;

மேலைச்சூத்திரத்து முற்றுவினைப்பதமொன்றேயென விதந்தாற்போல இதனுள் விதவாமையின் இருவகைமுற்றிற்கும் பொதுவாகக்கூறினாரென்பதூஉம் பெற்றாம். மேல்வருஞ் சூத்திரங்களுமன்ன. [வ-று.] நடந்தனன்- நடந்தான்- நடவாநின்றனன்- நடவாநின்றான்- நடப்பன்- நடப்பான்- நம்பி-என உயர்திணையாண்பாற்படர்க்கை இறந்தகாலவினைமுற்றும், நிகழ்காலவினைமுற்றும், எதிர்காலவினைமுற்றும், முறையே வந்தன — குழையினன் - குழையான் - நம்பி - என உயர்திணையாண்பாற்படர்க்கை வினைக்குறிப்புமுற்று வந்தன. (௬)

(௩௱௨௬) அள் ஆ ளிறுமொழி பெண்பாற்படர்க்கை. *

(இ-ள்) இதுவுமது (ப-ரை) அள் ஆளிறுமொழி - அள் ஆள் என்கிற இரண்டுவிகுதியையும் இறுதியிலுடையமொழிகள், பெண்பாற்படர்க்கை- உயர்திணைப்பெண்பாற்படர்க்கை வினைமுற்றுங் குறிப்புமுற்றுமாய், எ-று. (பொ-ரை) அள் ஆள் என்னும் இருவிகுதியும் இறுதியாகியமொழிகள் உயர்திணைப் பெண்பாற்படர்க்கைவினைமுற்றுங்குறிப்புமுற்றுமாம். எ-று. ❁ [வ-று.] நடந்தனள்- நடந்தாள்- நடவாநின்றனள்- நடவாநின்றாள்- நடப்பள்- நடப்பாள்- குழையினள்- குழையாள்- நங்கை - எனவரும். (௭)

(௩௱௨௭) அர் ஆர் பவ்வூ ரகரமாரீற்ற- பல்லோர்படர்க்கை மார் வினையொடுமுடிமே. *

(இ-ன்) இதுவுமது. (ப-ரை) அர் ஆர்பவ்வூரகரமாரீற்ற- அர் ஆர் ப மார் என்கிற நான்குவிகுதிகளையும் இறுதியிலுடையமொழிகள், பல்லோர்படர்க்கை - உயர்திணைப் பலர்பாற்படர்க்கை வினைமுற்றுங் குறிப்புமுற்றுமாம், மார்- இவற்றுள்ளே மாரீற்றுவினைமுற்று, வினையொடுமுடிம் - பொதுவிதியாற்பெயருடன்முடிவதன்றி வினையுடனு முடியும், எ-று. (பொ-ரை) அர் ஆர் ப மார் என்னும் நான்குவிகுதியினையும் இறுதியாகவுடையமொழிகள் உயர்திணைப்பன்மைப்படர்க்கைவினைமுற்றுங் குறிப்புமுற்றுமாம், இவற்றுள் மாரீற்று வினைமுற்றுப் பொதுவிதியாற் பெயருடன்முடிவதன்றி வினையுடனு முடியும். எ-று ❁ "மாமோதிர்வும் பாந்தஞ்செலவொடுவரவும்.,, எனப் பதவியலுட் கூறினமையின் இவ்விருவிகுதியுங்குறிப்புமுற்றின்கண் வாராவெனவும், மார் வினையுடனுமுடியுமென்றமையின் இதற்கேற்றிய தன்மேற் சிறப்புவிதிவகுத்தாரெனவும், வினையொடுமுடிமேயென்புழி இறந்ததுதழீஇய வெச்சவும்மையின்றெனக் கொள்ளினுமமையக்கூறினமையின் வினையொடுமுடிதல்போற் பெயரொடு முடிதல் பயின்றுவருவ தன்றெனவுங்கொள்க. [வ-று.] நடந்தனர்- நடந்தார்- நடக்கின்றனர்-நடக்கின்றார்-நடப்பர்- நடப்பார்-

குழையினர் - குழைபார் - அவர் - (எ-ம்) நடப்ப - எய்துப - செலுப - புல்லுப - அவர் - (எ-ம்) "பெரியவோதினுஞ் சிறியவுணராப் பீடின்றுபெருகிய திருவிற் - பாடின்மன்னரைப் பாடன்மா வெமமே" (எ-ம்) வரும்.—பாடன்மாவென்பது மாரீற்றெதிர்மன்ற வினைமுற்றாதலின் எதிர்கால வினையொன்றனையுமுணர்த்தப் பாடுவாரல்லவென்னும் பொருட்டாய்நின்று எமவென்னும் பெயர் கொண்டது. இனி வினையொடுமுடியுமாறு "ஆர்த்தார் கொண்மார்வந்தார்" "விழுக்கோட்பலவின் பழூஉப்பயன்கொண்மார் - குறவருன்றிய குரம்பையுதைஇ" எனவரும். இதனை வினைமுற்று வினையெச்சமாயிற்றென்று லென்னையெனின், வினைமுற்றினவழி அதற்கியைந்த பெயர்ப்பயனில்லவாராது இயையாத வினைவந்ததேல் அதற்கியைய வினைமுற்று வினையெச்சமாயிற்றெனப்படும். இம்மாரீற்று வினைமுற்றிற்குப் பெயர்போல வினையும் இயைந்துவருதலின் முற்றெச்சமாயினதன்று முற்றேயாமென்க.—பின்வரும் "செய்கவொருமையும் செய்குமென்பன்மையும்" என்னுமுற்றுக்களுமன்ன.—"காலமொடுகருதவரினுமாரை - மேலைக் கிளவியொடு வேறுபாடின்றே" — என்றார் ஆசிரியர் அகத்தியருமென்க. (அ)

(௩௱௨௰௮) துறுடுக்குற்றிய லுகரவீற்ற - வொன்றன்படர்க்கையுங் குறிப்பினைசும். *

(எ-ன்) இதுவுமது. (பரை) துறுடுக்குற்றியலுகரவீற்ற - துறுடு என்கிற இம்மூன்றுகுற்றியலுகரவிகுதிகளை இறுதியிலுடையமொழிகள், ஒன்றன்படர்க்கை - அஃறிணையொன்றன்பாற்படர்க்கைவினைமுற்றுங் குறிப்புமுற்றுமாம், டு - இவற்றுள் டுவ்விகுதி குறிப்பினைசும் - குறிப்பு வினைமுற்றிற் கல்லது தெரிநிலைவினைமுற்றிற்கு வருவதில்லை. எ-று (பொ-ரை) இம்மூன்றுகுற்றியலுகரவீற்று விகுதிகளையும் இறுதியாகவுடையமொழிகள் அஃறிணையொருப்படர்க்கை வினைமுற்றுங் குறிப்புமுற்றுமாம் இவற்றுள் டுவ் விகுதி குறிப்பின்கண்ணன்றித் தெரிநிலைக்கண்வாராது. எ-று. றுவ்விகுதி முக்காலவினைக்கண்ணும் பயின்றுவாராமையானும் துவ்விகுதி தன்முன்னின்ற வெழுத்துநோக்கி றுவ்விகுதியாய்த் திரிந்ததெனினு மமையுமாதலானும் டுவ்விகுதி குறிப்பொன்றற்கேவருதலானும் இதுவும் துவ்விகுதி திரிந்ததெனினு மமையுமாதலானும் துவ்விகுதியின் பின் கூறப்பட்டன. [வ-று.] நடந்தது - நடக்கின்றது - நடப்பது - வந்தன்று - கூயிற்று - (எ-ம்) அணித்து - சேய்த்து - அற்று - இற்று - எற்று - (எ-ம்) பொருட்டு - ஆதிரைநாட்டு - குண்டுகட்டு - அது - (எ-ம்) வரும். வந்தன்று - என்புழி அன்னென்பதுசாரியை.—கட்டினும் வினவினும் வந்த

வினைக்குறிப்புக்கள், "பொருண்முத லாறினுந் தோற்றி.,, என்று ஈற்றுளெப்பொருளவெனின், பொருளாதியாறனுள் யாதானு மொன்றனைச்சுட்டியும்வினவியும்வருதலின்அவ்வவப்பொருளவா மென்க.—குற்றியலுகரவீற்ற வென்றமையான், எற்று - என்றாற் போல, எது- யாது- என்பனவுங் காரணப்பெயராமன்றி வினைக் குறிப்புமாமென்பதூஉம் அங்ஙனமாகவே,—"ஒருமொழி யொழிதன் னினங்கொளற் குரித்தே.,, என்பதனான், அது- இது -என்றற்றொடக்கத்து முற்றுகரவீற்றவும், வினைக்குறிப்பாமென்பதூஉம் பெற்றாம். (௯)

(௩௱௨௯) அ ஆ வீற்ற பலவின்படர்க்கை - யாவேயெதிர் மறைக் கண்ணதாகும். *

(இ-ள்) இதுவுமது. (ப-ரை) அ ஆ வீற்ற - அ ஆ என்கிற விகுதிகளை யிறுதியிலுடையமொழிகள், பலவின்படர்க்கை- பலவின்பாற்படர்க்கை வினைமுற்றுங் குறிப்புமுற்றுமாம், ஆ - அவற்றுள் ஆகாரம், எதிர்மறைக்கண்ணதாகும் - எதிர்மறையினிடத்துவருமன்றி உடன்பாட்டினிடத்துவாராது, எ-று. (பொ-ரை.) இவ்விருவிகுதியினையும் இறுதியாகவுடையமொழிகள் அஃறிணைப்பன்மைப்படர்க்கை வினைமுற்றுங் குறிப்புமுற்றுமாம். இவற்றுள் ஆகாரம் எதிர்மறைவினைக்கண்ணதாமன்றி உடன்பாட்டுவினைக்கணவாராது. எ-று. ❁ ஆமெயெதிர்மறைக் கண்ணதாகும் என்றமையான் ஏனைவிகுதிகள் உடன்பாட்டினும் எதிர்மறையினும்வருமென்பது பெற்றாம். [வ-று.] நடந்தன- நடந்த- நடவாநின்றன - நடவாநின்ற - நடப்பன- நடப்ப- கரியன - கரிய - அவை - (எ-ம்) நடந்தில- நடவாநின்றில- நடவா- அவை- (எ-ம்) வரும். இல்லன - இல்ல - என்னும் எதிர்மறை வினைக்குறிப்பு முற்றின்கட்பகுதியே மறைப்பொருடந்துநிற்றலின் இதற்கெதிர் மறையாகாரம்வேண்டாமையின் ஏற்புழிக்கோடலான் இம்மறை விகுதி தெரிநிலைக்கே கொள்க. இங்ஙனங்காட்டிய அன்பெறு அகரவீற்றுப் பலவறிசொற்களுள் நடப்பவென்பதன் இறுதி நோக்கி, உயர்திணைப்பன்மைப்படர்க்கைக்கும் அஃறிணைப்பன் மைப்படர்க்கைக்கும் பொதுவினையென்று கொள்ளற்க.— இதன்கட் பகரம் எதிர்கால வினையிடைநிலையாதலின் இத்தொடக்கத்தனவெல்லாம் பலபொருள் ஒருசொல்லாமென்க. (௰)

(௩௱௩௰) தன்மைமுன்னிலை வியங்கோள்வேறில்லை - யுண்மைசெய்யென்ச்ச மிருதிணைப்பொதுவினை. *

(இ-ள்) திணைபாலிடங்கட்குப் பொதுவினை யுணர்த்துவான் றொடங்கி அவற்றுள் இருதிணைக்கும் பொதுவினையிவையென

வுணர்-ற்று. (ப-ரை) தன்மை- தன்மைவினை வினைக்குறிப்புமுற் றுக்களும், முன்னிலை-முன்னிலைவினை வினைக்குறிப்புமுற்றுக்களு ம், வியங்கோள் - வியங்கோள் வினைமுற்றுக்களும், வேறில்லையு ண்டு-வேறு இல்லை உண்டு என்கிறமூன்று வினைக்குறிப்புமுற் றுக்களும், ஈரெச்சம் - பெயரெச்சவினை வினைக்குறிப்புக்களும் வினையெச்சவினை வினைக்குறிப்புக்களும், இருதிணை - உயர்தி ணை அஃறிணை என்கிற இருதிணைக்கும், பொதுவினை- பொது வினைகளாம், எ-று. (பொ-ரை) தன்மைவினை வினைக்குறிப்புமு ற்றும் முன்னிலைவினை வினைக்குறிப்புமுற்றும் வியங்கோள்வினை முற்றும் வேறு இல்லை உண்டு என்னும் மூன்றுவினைக்குறிப்பு முற்றும் பெயரெச்சவினை வினைக்குறிப்பும் வினையெச்சவினை வினைக்குறிப்பும் இருதிணைக்கும் பொதுவினையாம். எ-று ※ தன்மைமுன்னிலையென்றமையான், அவை முற்றென்பதூஉம் பெ ற்றும். எச்சமெனப் பொதுப்படக்கூறினாரேனும், முற்றெச்ச ங்கள் முற்றேரொடொக்குமாதலின் அவையொழியக் கொள்க.— செய்யுமென்னுமுற்றும் இருதிணைப்பொதுவினையன்றோ அத னைக்கூறாதொழிந்த தென்னையெனின், முற்றெச்சமாயினாற்போ லச், செய்யுமென்னும்பெயரெச்சம் செய்யுமென்னுமுற்றான மையின் ஈரெச்ச மிருதிணைப் பொதுவினையென்றதனையானே அம்முற்றும் இருதிணைப்பொதுவினையென்பதூஉம் போதரு மென்க. செய்யுமெனெச்ச முற்றுமாறும், அம்முற்றிற்கு ஈண் டுப்போந்த இருதிணைப்பொதுமொழிய அஃறைம்பான்மூவி டங்களிற் பொதுமையினிற்குமாறு மேற்கூறுப. (௰௧)

(௩௱௩௧) குடுதுறுவென்னுங் குன்றியலுகரமோ- டல்லனென் னே னாகுமீற்ற விருதிணைமுக்கூற் றொருமைத்தன்மை. ※

(எ-ன்) நிறுத்தமுறையானே தன்மை ஒருமை வினைமுற்றுங் குறிப்புமுற்று மூணர்-ற்று. (ப-ரை) குடுதுறுவென்னுங் குன் றியலுகரமோடு - கு டு து று என்கிற குற்றியலுகரவிகுதிகளு ம், அல்லனென்னேன்- அல் அன் என் ஏன் என்கிற நான்குமெ ய்யீற்றுவிகுதிகளும், ஆகும்- ஆகிய, ஈற்ற - இவ்வெட்டுவிகுதிகளை யும் இறுதியிலேயுடையமொழிகள், இருதிணை- இருதிணையிடத்த னவாகிய, முக்கூற்று - ஒருவன் ஒருத்தி ஒன்றென்கிற மூன்று பால்களுக்கும் பொதுவாகிய, ஒருமைத்தன்மை - ஒருமைத்தன் மைவினைமுற்றுங் குறிப்பு முற்றுமாம், எ-று. (பொ-ரை) இவ் வெட்டுவிகுதிகளையும் இறுதியாகவுடையமொழிகள் இருதிணைக் கண்ணவாகிய ஒருவன் ஒருத்தி ஒன்றென்னு முக்கூற்றொரு மைத்தன்மை வினைமுற்றுங் குறிப்புமுற்றுமாம். எ-று. ※ குவ் விகுதியையுடன்கூறினமையின் அதன்பின்னின்ற மூன்றுங்காலங்

காட்டும் விகுதிகளென்பதூஉம், ஒருமையென்றமையின் இவை திணைப்பொதுவன்றிப் பாற்பொதுவாகாவென்பதூஉம்பெற்றாம். ஒருமை பன்மை என மேல்வருவனவு மன்ன. [வ-று.] உண்கு- கொண்டு - வந்து - வருது - சென்று - சேறு,- உண்பல்- உண்டனன்- உண்ணாநின்றனன்- உண்பன்- உண்டனென்- உண்ணாநின்றனென்- உண்குவென்- உண்டேன்- உண்ணாநின்றேன் - உண்பேன்- (எ-ம்) தாரினென்- தாரினேன்- யான்- (எ-ம்) வரும். காட்டாதொழிந்தன வந்துழிக்காண்க. தன்மைக்கண்ணும் அன்விகுதி கொள்ளாதொழியின், "எழுத்தசைசீர்- பந்தமடிதொடை பாவினங்கூறுவன்.,,என்றற்றொடக்கத்தன அமையாவென்க. (௰உ)

(௩௱௩௨) அம்மாமென்பன முன்னிலையாரையு - மெம்மேமோமிவை படர்க்கையாரையு - மும்மூர்கடதற விருபாலாரையுந் - தன்னொடுபடுக்குந் தன்மைப்பன்மை. *

(எ-ன்) தன்மைப்பன்மைவினைமுற்றுங் குறிப்புமுற்று முணர்-ற்று. (ப-ரை) அம்மாமென்பன- அம் ஆம் என்கிற இரண்டுவிகுதிகளையும் இறுதியிலுடையமொழிகள், முன்னிலையாரையும்- தன்னிலையினிற்கையன்றி முன்னிலையிடத்தாரையும், எம்மேமோமிவை - எம் ஏம் ஓம் இம்மூன்றுவிகுதிகளையும் இறுதியிலுடையமொழிகள், படர்க்கையாரையும்- தன்னிலையினிற்கையன்றிப் படர்க்கையிடத்தாரையும், உம்மூர்கடதற - கும் டும் தும் றும் என்கிற நான்குவிகுதிகளையும் இறுதியிலுடையமொழிகள், இருபாலாரையும் - தன்னிலையினிற்கையன்றி அவ்விரிடத்தார்களையும், தன்னொடுபடுக்குந்தன்மைப்பன்மை- தன்னுடன்கூட்டுகிற தன்மைப்பன்மை வினைமுற்றுங் குறிப்புமுற்றுமாம், எ-று. (பொ-ரை) தன்னிலையினிற்பதன்றி அம் ஆம் என்னும் இவ்விருவிகுதியினையும் இறுதியாகவுடையமொழிகள் முன்னிலையாரையும், எம் ஏம் ஓம் என்னும் இம்மூன்றுவிகுதியினையும் இறுதியாகவுடையமொழிகள் படர்க்கையாரையும், கும்-டும்-தும்-றும்- என்னும் இந்நான்குவிகுதியினையும் இறுதியாகவுடையமொழிகள் முன்னிலை படர்க்கை என்னு மீரிடத்தாரையுந் தன்னுடன்கூட்டும் உளப்பாட்டுத் தன்மைப்பன்மை வினைமுற்றுங் குறிப்புமுற்றுமாம். எ-று. ※ தன்னிலையினிற்பதன்றியென்னும் இறந்தது தழீஇய வெச்சவும்மைகள் என்னுமும்மைகளாயும் இருபாலாரையும் என்புழி இவற்றொடுமுற்றும்மையாயுநின்றன, [வ-று.] உண்டனம் -உண்ணாநின்றனம்- உண்பம்- உண்டாம்- உண்ணாநின்றாம்-உண்பாம்- தாரினம்- தாரினும்- யாம்- (எ-ம்) யானுநீயும்- (எ-ம்) உண்டனெம்- உண்ணாநின்றனெம்- உண்பெம்- உண்டேம் - உண்ணாநின்றேம்- உண்பேம்- உண்டோம்- உண்ணாநின்றோம்-உண்போம்-

தாரினெம் - தாரோம் - தாரினேம் - யாம்- (எ-ம்) யானுமவனும் -
(எ-ம்) உண்கும்- உண்டும்- வந்தும்- வருதும்-சென்றும்-சேறும்-
யாம் - (எ-ம்) யானுநீயுமவனும்- (எ-ம்) தனித்தன்மைப்பன்மை
யும் உளப்பாட்டுத் தன்மைப்பன்மையுமுறையே வந்தன—இன்
னும் அவ்வும்மைகளை ஐயவும்மைகளாக்கி அம்மாமெம்பனமுன்
னிலையாரையேனும் படர்க்கையாரையேனுந் தன்னொடுபடுக்கு
மெனவும் ஆக்கவும்மையாக்கி அம்மாமெம்பனமுன்னிலையாரையு
ம் படர்க்கையாரையுமொருங்கு தன்னொடுபடுக்குமெனவும்பொ
ருளுரைத்து, உண்டனம்- யானுமவனும் (எ-ம்) யானுநீயுமவனும்
(எ-ம்) அருகிவருதலைக்கண்டுகொள்க.— எனையெட்டுவிகுதியுமன்ன.
இவற்றை "ஓரிடம்பிறவிடந் தழுவலுமுளவே,, என்னும் இடவ
ழுவமைதியாகக் கோடலுமொன்று. — தன்மையொருமைக்கண்
அன்விகுதியும் பன்மைக்கண் ஓம்விகுதியும் டதியனபுகுதல் (௰௫)
(௩௱௩௫) செய்கெனொருமையுஞ் செய்குமென் பன்மையும்-
வினையொடுமுடியினும் விளம்பியமுற்றே. ❋
(எ-ன்) எய்தியதன்மேற் சிறப்புவிதியும் எய்தியதிகந்துபடா
மற்காத்தலு முணர்-ற்று: வினையொடுமுடியினு மென்றமையா
ன் பெயரொடுமுடியுமென்னும் விதிதாமேபோதருமாதலினெ
ய்தியதன்மேற் சிறப்புவிதியென்றும். (ப-ரை) செய்கென்-செய்
கு என்கிற, ஒருமையும் - தன்மையொருமைமுற்றும், செய்கு
மென்- செய்கும் என்கிற, பன்மையும்- தன்மைப்பன்மைமுற்று
ம் வினையொடுமுடியினும்- பெயருடனேயன்றி வினையுடனேமு
டியினும், விளம்பிய - முன்சொல்லப்பட்ட, முற்றே- முற்றுகக
ளேயாம். எ-று. (பொ-ரை) செய்கென்னுந் தன்மையொருமை
முற்றுஞ் செய்குமென்னுந் தன்மைப்பன்மைமுற்றும் பெயரு
டனேயன்றி வினையுடனேயுமுடியும் அங்ஙனமுடியினுமேற்கூ
றியமுற்றேயாம். எ-று. ❋ எச்சங்களைப்போலாது வினைமுதலை
த்தரும் விகுதியுறுப்போடுகூடி முற்றிநிற்றலின் முற்றெனப்ப
ட்டதன்றிப் பயனிலைகொண்டு முற்றலின்முற்றெனப்பட்டதன்
றென்பார் பெயரேயன்றி வினையொடுமுடியினும் விளம்பியமு
ற்றேயென்றார். [வ-று] உண்குவந்தேன்- உண்கும்வந்தேம்- எ
னவரும். இங்ஙனமாயின், உண்பேன்வந்தேன்-உண்பேம்வந்தேம்
-என இவ்வொருமைபன்மையும் வினையொடுமுடியுமென்றிலெ
ன்னையெனின்,—"எப்பொருளெச்சொலி னெவ்வாறுயர்ந்தோர்
-செப்பினரப்படிச் செப்புதன்மரபே,, என்பவாகலிற் செய்
கெனொருமையுஞ் செய்குமென்பன்மையும் பெயரொடும்வினை
யொடுமுடிதன் மரபாயினாற்போல அவைபெயருடனன்றிவினை
யொடுமுடிதன் மரபன்மையின் அங்ஙனங்கூறியதென்க. (௰௪)

(௩௱௩௪) முன்னிலைகூடிய படர்க்கையுமுன்னிலை. *

(எ-ன்) உரைப்பாட்டுப்பன்மை, முன்னிலைக்கண்ணு முளதென்பதுணர்-ற்று. (ப-ரை) முன்னிலை முன்னிலையோடு, கூடிய - சேர்ந்த, படர்க்கையும் - படர்க்கையும், முன்னிலை - முன்னிலையாம், எ-று. (பொ-ரை) தன்மையோடுகூடிய முன்னிலை படர்க்கைக டன்மையாதற்போல முன்னிலையோடுகூடிய படர்க்கையுமுன்னிலையாம், எ-று. ❁ விகுதிகளைவிதவாது கூறினமையின் முன்னிலைப்பன்மை விகுதிகளெல்லாம் படர்க்கையை உளப்படுத்து மென்பதூஉம் படர்க்கையென்றமையாற் றன்மையை உளப்படுத்தா வென்பதூஉம் பெற்றாம். [வ-று.] உண்டனிர்- உண்டீர்- உண்மின்- குழையினிர்- குழைமீர்- நீயுமவனும்- (எ-ம்) "ஒண்டேவி நோ.. ப்தின் சேவலுநீயுமாய்- வண்டு தம்பூங்கானல் வைகலுஞ் சென்றீரால்.,, (எ-ம்) வரும். இச்சூத்திரம் முன்னிலைப்பன்மை முற்றுக் கூறியவழிக்கூறாது ஒன்றினமுடித்த றன்னினமுடித்த லென்னுமுத்தியான் ஈண்டுக்கூறப்பட்டது. (௰௫)

(௩௱௩௫) ஐயாயிகர வீற்றமூன்று - மேவலின்வருஉ மெல்லாவீற்றவு - முப்பாலொருமை முன்னிலைமொழியே. *

(எ-ன்) முன்னிலையொருமைவினைமுற்றுங் குறிப்புமுற்று முணர்-ற்று. (ப-ரை) ஐயாயிகரவீற்றமூன்றும் - ஐ ஆய் இ எனகின்ற மூன்றுவிகுதிகளை இறுதியிலுடையமொழிகளும், ஏவலின்வருஉமெல்லாவீற்றவும்- விகுதிகுன்றுதும் குன்றியுநிற்பனவாகிய ஏவலிலேவருகிற. இருபத்துமூன்றீற்றுமொழிகளும், முப்பால் - ஒருவன் ஒருத்தி ஒன்று என்கிறமூன்றுபால்களுக்கும் பொதுவாகிய, ஒருமைமுன்னிலைமொழி - முன்னிலையொருமை முற்றுங்குறிப்புமுற்றுமாம், எ-று. (பொ-ரை) ஐ ஆய் இ என்னும் மூன்றீற்றுமொழிகளும் விகுதிகுன்றுதுங் குன்றியுநிற்பனவாகிய ஏவற்கண்வரும் இருபத்துமூன்றீற்றுமொழிகளும் ஒருவன் ஒருத்தி ஒன்று என்னும் மூன்றுகூற்றவாகிய முன்னிலை ஒருமைவினைமுற்றுங் குறிப்புமுற்றுமாம். எ-று. ❁ இகரவீற்றுமொழிகட்கு இகரம் எதிர்காலங்காட்டிவதின்றி இடைநிலைநின்று காலங்காட்டுமென்பதுதோன்ற ஐயாயென்னும்விகுதிகளோடு இகரவிகுதியையுடன்கூறினர். ஏவன்முற்றுத் தெரிநிலையொன்றற்கேயுரிமையின் உம்மைகொடுத்து விதந்தோதினர். [வ-று] உண்டனை- உண்ணாநின்றனை- உண்டை- உண்டாய்- உண்ணாநின்றாய்- உண்பாய்- உண்டி- உண்ணாநின்றி- சேறி - நடவாய் - வாராய்- கேளாய்- அஃகாய்- நட - வா- கேள்- அஃகு- (எ-ம்) வில்லினை-வில்லாய்- வில்லி- நீ- (எ-ம்) வரும்—இகரவீற்றுமொழிகள் எதிர்

காலவிடைநிலை யேற்குமேற்காண்க. —ஏவலெனப்பொதுப்படக் கூறினமையிற், செய்வி- செய்விப்பி - என்னும் ஏவன்மேல் ஏவல்களும், செய்பல்-செய்யேல்-என்றற்றொடக்கத்துஎதிர்மறையேவல்களும் இருபத்தமூன்றீற்றுளடங்கிக் கிடந்தமைகாண்க. பால்காட்டிநிற்றலின் ஏவலுமுற்றேயாமென்க. (௰௬)

(௩௱௩௬) முன்னிலைமுன்ன ரீயுமேயு - மந்நிலைமரபின்மெய் யூர்ந்துவருமே. *

(எ-ன்) ஏவன்முற்றிற் கெய்தியதன்மேற் சிறப்புவிதியுணர்-த்-று. (ப-ரை) முன்னிலைமுன்னர் - முன்னிலையேவன்முற்றென முன்சொல்லிப்பட்டவற்றிற்குமுன், ஈயும்- ஈகாரமும், ஏயும்-ஏகாரமும், அந்நிலைமரபின் - அவ்விடத்துநிற்றற் குரியமரபினையுடைய, மெய்- யாதானுமொருமெய்யை, ஊர்ந்து-ஏறி, வரும்- வரும், எ-று. (பொ-ரை) முன்னிலையேவன்முற்றென மேற்கூறியவற்றிற்குமுன்னேஈகாரமும்ஏகாரமும் ஆண்டுவந்துநிற்றற்குரியமரபினையுடையமெய் யாதானுமொன்றை யூர்ந்துவரும். எ-று ஈகார ஏகாரங்களை, "அன் ஆன் அள் ஆள்.,, எனவிகுதிகூறியவழியெடுத்தோதாமையானும் மேலைச்சூத்திரத்து ஐபாயிகாங்களோடு ஒருங்கோதாமையானும் இவைவிகுதியுருபல்லவென்பதூஉம் ஏவற்கண்வரும் எழுத்துப்பேறென்பதூஉம் அந்நிலைமரபின் மெய்யெனவிதந்தமையின்அஃதம்மொழியிறுதிமெய்யன்றென்பதூஉம் பெற்றாம் [வ-று.] "சென்றீபெருமநிற் றகைக்குநர்யாரே.,, (எ-ம்) "அட்டிலோலை தொட்டனை நின்மே.,, (எ-ம்) வரும் இவ்வெழுத்துப்பேறு, "நட வா மடி.,, என்னுஞ்சூத்திரத்தின் பிற்கூறாது ஈண்டுக்கூறினார் இவ்வாறுவரும்ஏவல்கள் பகுதிமாத்திரையன்றிநிற்றலின் இவை முன்னிலையொருமைவிகுதி யுருபேற்றுவினைமுற்றேஏவன்வினைமுற்றேவென்றையுறுவார்க்குஐயமறுத்தற்கு. இவற்றிற்கு விகுதியுருபின்பொருளின்மையின் முன்னிலையசையாமென்க (௰௭)

(௩௱௩௭) இர்ஈரீற்ற விரண்டுமிருதிணைப் - பன்மைமுன்னிலை மின்னவற்றேவல். *

(எ-ன்) முன்னிலைப்பன்மை வினைமுற்றுங் குறிப்புமுற்றுமுணர்-த்-று. (ப-ரை) இர்ஈரீற்றவிரண்டும்- இர் ஈர் என்கிற இரண்டுவிகுதிகளையும் இறுதியிலுடையமொழிகள், இருதிணை - இருதிணைக்கும்பொதுவாகிய, பன்மைமுன்னிலை- பன்மைமுன்னிலை வினைமுற்றுங் குறிப்புமுற்றுமாம், மின்-மின்விகுதியை யிறுதியிலுடையமொழிகள், அவற்றேவல்- முன்னிலைப்பன்மை யேவன்முற்றும், எ-று (பொ-ரை) இர் ஈர் என்னும் இருவிகுதியினையும் இறுதியாகவுடையமொழிகள் இருதிணைப்பன்மைமுன்னிலை வினை

முற்றுங் குறிப்புமுற்றுமாம், மின் என்னும் விகுதியை யிறுதியாகவுடையமொழிகள் இருதிணைப் பன்மைமுன்னிலை யேவன்முற்றாம். எ-று. ❁ [வ-று.] உண்டனிர் - உண்ணாநின்றனிர் - உண்குவிர் - உண்டீர் - உண்ணாநின்றீர் - உண்பீர் - உண்மின் - குழையினிர் - குழையீர் - நீர் (எ-ம்) வரும். மின்னவற்றேவலென்றமையான், உண்ணும் - தின்னும் - நீர் - என உம்மீற்றவாய்வரும்பன்மையேவல் புதியனவென்பதூஉம் அவை "புதியனபுகுதலும்வழுவல." என்பதனனமையு மென்பதூஉம் பெற்றாம். (௰௮)

(௩௱௩௰௮) கயவொடுரவ்வொற் றீற்றவியங்கோ - ளியலுமிடம் பா லெங்குமென்ப. *

(எ-ன்) வியங்கோண் முற்றுணர்-ற்று. (ப-ரை) கயவொடு- கய என்கின்றவிரண்டுயிர்மெய்யினையும், ரவ்வொற்று - ரகரமெய்யினையும், ஈற்ற- இறுதியிலுடையமொழிகள், வியங்கோள்- வியங்கோண்முற்றுக்களாம், (இடமெங்கும்) - மூன்றிடங்களிலும், பாலெங்கும்- ஐம்பால்களிலும், இயலும்- செல்லும், என்ப - என்று சொல்லுவர் புலவர். எ-று (பொ-ரை) கயவென்னும் இரண்டுயிர்மெய்யினையும் ரகரவொற்றினையும் இறுதியாகவுடையன வியங்கோண்முற்றாம் அவைமூவிடத்திலும் ஐம்பாலிலுஞ் செல்லுமென்று சொல்லுவர் புலவர். எ-று. ❁ ரவ்வொற்றென்றமையான் முன்னையவிரண்டும் உயிர்மெய்யென்பதூஉம், ஒடுவென்றமையான் ரகரவொற்றுக் ககரயகரவுயிர்மெய்கள்போற் றனித்தியலாது யகரத்தோடுவரப்பெறு மென்பதூஉம், என்பவென்றமையான் இம்மூன்றீற்றவுந் தொன்றுதொட்டுநெறியவென்பதூஉம் பெற்றாம் [வ-று] வாழ்க- வாழிய- வாழியர்- நிலீயர்-யான்- யாம்- நீ- நீர்- அவன்- அவள்- அவர்- அது- அவை- (எ-ம்) — "பெறுகதில்லம்மயானே."—"வெல்கவாழிநின் வென்றிவார் கழல்."—"செல்கதீயன சிறக்கநின் புகழே."—"மன்னியபெருமநீ நிலமிசையானே." (எ-ம்) வாழ்த்துதற்பொருண்மைக்கண்வந்தன.—நடக்க- வருக- உண்க- செல்க - என உயர்ந்தோனிழிந்தோனை இன்னதுசெய்கவென விதித்தற்பொருண்மைக்கண்வந்தன. "போற்றி யருளுகநின் னாதியாம் பாதமலர்."—"எங்கொங்கைநின்னன்பரல்லார்தோள்சேரற்க." (எ-ம்) "கடாவுகபாகநின் கால்வனெடுந்தேர்." (எ-ம்) வேண்டிக்கோடற் பொருண்மைக்கண்வந்தன. இங்ஙனங்கூறினர் "வருத்துனாயாதனும் வருத்தனர்கொளலே." என அல்லீற்றுவியங்கோளும் உடன்படுப்புணர்த்தமையான் எடுத்தோதாப் பிறவீற்றவா யிருதிணை ஐம்பான்மூவிடங்களினும் வாழ்த்துமுதலிய வேவற்பொருளவாய்ச் சென்றனவுளவேல் அவை "புதியனபுகுதலும்வழுவல" என்னும் வழுவ

மையியாய்வந்த வியங்கோளென்பதூஉம் பெற்றாம்—"பயனில் சொற் பாராட்டுவானை மகனெனல் - மக்கட்பதடியெனல்.,, என் புழிப் பதடியெனலென்பது வியங்கோள் - மகனெனலென்பது எதிர்மறையொருமையேவல். இவ்வாறுபிறவீற்றவாய்வருவனவாயின் அவை வியங்கோளாதல் ஆராய்ந்து கொள்க.—ஏவல்வியங்கோள் என்பன ஒருபொருட்கிளவியாயினும் இருதிணை ஐம்பான் மூவிடங்களினுஞ் செல்லு மேவலை வியங்கோளென்பது தொன்னெறிப்ரபாமென்க. (௰௯)

(௩௱௪௯) வேறில்லையுண்டைம் பான்மூவிடத்தன. *

(எ-ன்) இவ்வினைக் குறிப்புமுற்று மூன்றும்பாலிடங்கட்குப் பொதுவாமாறுணர் - ற்று, (ப-ரை) வேறில்லையுண்டு- வேறு இல்லை உண்டு என்கிறமூன்றுவினைக்குறிப்புமுற்றுக்களும், ஐம்பால் - ஐம்பாலுக்கும், மூவிடத்தன - மூவிடத்திற்குமுரியனவாம், எ-று (பொ-ரை) வேறு இல்லை உண்டு என்னும் மூன்றுவினைக்குறிப்புமுற்றும் ஐம்பாற்கு மூவிடத்திற்கு முரியனவாம். எ-று, ❁ உண்டென்பது அஃறிணையொருமைக்கேயன்றிப் பொதுவினையாதல் புதியனபுகுதலாமென்பாரிக்கூறினார். [வ-று.] வேறவன்- இல்லையவன்- உண்டவன்- அவள்-அவர்- அது- அவை- யான்- யாம்- நீ- நீர்- (எ-ம்) "விளிந்தாரின் வேறல்லர்மன்ற,,— "யாருமில்லைத் தானேகள்வன் - றானது பொய்ப்பின் யானெவன் செய்கோ.,,—"தினைத்தாளன்ன சிறுபசுங்கால- வொழுகுநீராரல் பார்க்குங்- குருகுமுண்டுதா மணந்த ஞான்றே.,,—"பெண்டிருமுண்டுகொல் பெண்டிருமுண்டுகொல் - கொண்டகொழுநனுறுகுறைதாங்குறூஉம் - பெண்டிருமுண்டுகொல் பெண்டிருமுண்டுகொல்.,,—"நாவுண்டுநீயுண்டு நாமத்தரித்தோதப்- பாவுண்டுநெஞ்சே பயமுண்டோ- பூவுண்டு-வண்டுறங்குஞ்சோலை மதிரைக்கதிரேயுலகை- யுண்டுறங்கு வாளொருவனுண்டு.,, (எ-ம்) வரும்—"பழியஞ்சிப்பாத்தூஉ ணுடைத்தாயின்வாழ்க்கை - வழியெஞ்ச லெஞ்ஞான்று மில்.,, என்பது செய்யுளாதலின் இல்லையென்ப தில்லெனக்கடைகுறைந்து நின்றது. *

இனி மொழித்தபொருளோ டொன்றவவ்வயின் மொழியாதனையுமுட்டின்றமுடித்தலென்பதனால் வேண்டும்- தகும்- படும் என்னுஞ்சொற்களும் ஐம்பான்மூவிடத்தனவாமெனவுங்கொள்க. [வ-று.] "ஓதல்வேண்டு மொளிமாழ்குஞ்செய்வினை - யாதுமென்னுமவர்.,, யான்போகல்வேண்டும் - நீயுரைத்தல் வேண்டும்—"வினைத்திதனவற்றி சினைமுதற்கிளவிக்கு- வினைப்படுதொகுதியி னும்மைவேண்டும்.,,—"இனைத்தென்றறிபொருளுலகினிலாப்பொருள்-வினைப்படுத்தொப்பி னும்மைவேண்டும்,,

—"இன்னெனவரூஉம் வேற்றுமையுருபிற் - கின்னென்சாரியை யின்மை வேண்டும்," —"வேறுவினைப் பல்பொரு டழுவியபொதுச்சொலும் - வேறவற்றெண்ணுமோர் பொதுவினைவேண்டும்.," — "நலம்வேண்டி னாணுடைமை வேண்டும்," (எ-ம்) இவரகலிக்காரியஞ்செய்யத்தகும் - இவ்வுழருந்தத்தகும் - இச்சோறுண்ணத்தகும் - இந்நீர்குடிக்கத்தகும் (எ-ம்) "முகத்தி னினிய நகாஅவகத்தின்னா - வஞ்சரை யஞ்சப்படும்.," "இளைய ரினமுறைய ரென்றிகழாநின்ற - வொளியோ டொழுகப்படும்," "கற்றறிந்தோரைத் - தலைநிலத்துவைக்கப்படும்.," "கீழ்களைச் - செய்தொழிலாற்காணப்படும்.," (எ-ம்) வரும். இம்மூன்று மொருபொருட்கிளவியாய்த் தொழிற்பெயராய்த் தேற்றப்பொருள்பட்டே நிற்குமென்க. இங்ஙனம்வருஞ் செய்யுட்கெல்லாம், நச்சினார்க்கினியர் சேனாவரையர் பரிமேலழகர் உரையாசிரியர் முதலாயினார் முற்றாயும் எச்சமாயும்பொருளுணாக்கின் வழுவாமென்றுகருதி வியங்கோட்பொருட்டென்றும் விதிப்பொருட்டென்றும் தகுதிப்பொருட்டென்றும் வேண்டுபவென்றும் தமக்குவேண்டியவாறேபொருளெழுதிச் சொற்குணம்வாளாம்பாயினர். அதுநிற்க. (௨௰)

(௫௱௬௰) செய்தசெய்கின்ற செய்யுமென்பாட்டிற் - காலமுஞ் செயலுந் தோன்றிப்பாலொடு - செய்வதாதி யறுபொருட்பெயரு - மெஞ்சநிற்பது பெயரெச்சம்மே. *

(எ-ன்) ஈரெச்சமென்றவற்றுட்பெயரெச்சமாமாறுணர் - ற்று.

(ப-ரை) செய்தசெய்கின்றசெய்யுமென் - செய்தவென்றும் செய்கின்றவென்றம் செய்யுமென்றுஞ்சொல்லப்படுகிற, பாட்டில் - மூவகைச்சொற்களிலே, காலமும் - முறையே இறப்பு நிகழ்வு எதிர்வு என்கிறமூன்றுகாலங்களும், செயலும் - தொழிலும், தோன்றி - தோன்றி, பாலொடு - பாலுடனே, செய்வதாதி - செய்பவன் கருவி நிலம் செயல் காலம் செயப்படுபொருள்என்கிற, அறுபொருட்பெயரும் - அறுவகைப்பொருட்பெயர்களும், எஞ்சநிற்பது - ஒழியநிற்பன, பெயரெச்சம் - பெயரெச்சவினை வினைக்குறிப்புக்களாம், எ-று. (பொ-ரை.) செய்த செய்கின்ற செய்யுமென்னும் மூவகைப்பட்டசொல்லின்கண்முறையேஇறப்புநிகழ்வு எதிர்வுஎன்னுமூன்றுகாலமுஞ்செயலுந்தோன்றிவினைமுற்றுதற்கு வேண்டும் பாலொன்றுந்தோன்றாது அப்பாலுமனே செய்பவன்கருவி நிலஞ்செயல்காலஞ்செய்பொருளென்னும் அறுவகைப்பொருட்பெயருமொழியநிற்பனபெயரெச்சவினைவினைக்குறிப்புக்களாம். எ-று. ❀ பாட்டென்னும்பலபொருளொருசொல் ஈண்டுச்சொல்லை யுணர்த்தி நின்றது. இவற்றுட் செய்யுமென்னு மொன்றும்

இறுதிநிலை காலங்காட்டியது. இவைவெளிப்படையி னுணர்த்து
வனகாலமுஞ் செயலுமென்பார்பாட்டென்றும் பெயரொச்சமெ
ன்றதுவினைமுற்றாத குறைச்சொல்லாய்த் திணைபாலிடங்கட்குப்
பொதுவாகியபெயரொஞ்சநின்றனவற்றையென்பார்பாலொடெ
ன்றுங்கூறினர். நிற்பதென்பது தொகுதியொருமை. ஏற்புழிக்
கோடலாற்றோன்றியென்பதன்காறுந்தெரிநிலையுடன்பாட்டிற்கு
ம் ஏனையதெரிநிலையுங் குறிப்புமாகிய உடன்பாடெதிர்மறையிர
ண்டற்குங்கொள்க.பதப்பொருளொழிந்தவுரைவினையெச்சத்திற்
குங்கொள்க[வ-று.]உண்ட-உண்ணாநின்ற-உண்ணும்-சாத்தன்-கல
ம்-இடம்-ஊண்-நாள்-சோறு(எ-ம்) வேலாண்முகத்தகளிறு மூவி
லையவேல்-உள்ளபொருள்(எ-ம்) உண்ணாதசோறு (எ-ம்) இல்லாத
பொருள்(எ-ம்)வரும். செய்வதாதியறுபொருளுங்காரணமாதலி
ன்இவ்வெச்சங்கள்காரியப்பொருட்டாய்நின்றன. வனைந்தகுடம்-
என்புழிக்குடங்காரியமாயும்நிமித்தமாயுநிற்றலின் இவ்வெச்சங்கா
ரணப்பொருட்டாயுங்காரியப்பொருட்டாயுநின்றது. பிறவுமன்
ன.அறுபொருட்பெயருமென்னுமும்மையை ஆறுந்தருவதுவி
னையேயென்னும் உம்மைபோலவைத்து அறுபொருட்பெயரிற்
சிலகுறைந்தும்இன்னதற்கிதுபயனென்னுமிருபொருட்பொரு
ம்பிறபெயருங்கூடியுமெஞ்சநிற்பதெனவும் பொருளுரைத்துக்
கொள்க.அவைவருமாறு,ஆடினகொடி-துஞ்சினகொடி- இவைகு
றைந்தெஞ்சநின்றன. களைகட்டபயிர்- களைகட்டகூலி- இவைஇன்
னதற்கெனவும் இதுபயனெனவும் இருபெயருமெஞ்சவந்தன.உ
ண்டவிளைப்பு(எ-ம்)“குண்டுசுனைபூத்தவண்டுபடுகண்ணி”(எ-ம்)
சூடிபோனவூர் (எ-ம்) பொன்பெரியநம்பி (எ-ம்) பிறபெயர்க
ளெஞ்சநின்றன. பிறவுமன்ன. உண்டவிளைப்பென்பது உண்டகா
ரணத்தான்வருங்காரியமாகிய விளைப்பாதலிற் செயப்படுபொரு
ள்கொண்டதெனின்மையாதோவெனின், சாத்தனுண்டசோறு- எ
ன்புழிச்சோற்றையுண்டசாத்தனெனச்சோறென்பதிரண்டாமுரு
பேற்றாற்போல விளைப்பென்பது அவ்வுருபேலாமையினதுசெ
யப்படுபொருளாகாதென்க.இவ்வெச்சங்காரணப்பொருட்டாயே
நின்றது.எனவேஇப்பெயரொச்சங்கள் காரணப்பொருட்டாயுங்கா
ரியப்பொருட்டாயும்இவ்விருதிறத்தவாயும்வருதல்காண்க.இப்பெ
யரொச்சம் அரசன்செய்ததேர்எனத்தலைமைபற்றியும் தச்சன்செ
ய்ததேர் என அஃதின்மைபற்றியும்வரும். இனி “காலங்கரந்தபெ
யரொச்சம்வினைத்தொகை”எனக்கூறுதலின் வினைத்தொகையினை
ப்பெயரொச்சவினையுளடக்கியிதுவேவிதியாகக்கொள்க. [வ-று]அ
டுகளிறு-கோடு-களம் போர்-நாள்-கந்து -எனவரும். “காலமும்
வினையுந் தோன்றிப்பாறோன்றாது. பெயர்கொள்ளுமது பெ

யமொச்சம்மே,,,என்றார் ஆசிரியர் அகத்தியனாருமென்க. (உ.க)

(௩௱௪௧.) செய்யுமெனெச்சவீற் றுயிர்மெய்சேறலுஞ் -
செய்யுளுளும்முந் தாகலுமுற்றே-லுயிருமுயிர்மெய்யு மேகலு
முளவே. *

(எ-ன்.) செய்யுமென்னெச்சத்திற் கெய்தியதன்மேற் சிறப்பு
விதியுணர்- ற்று. (ப-ரை) செய்யுமெனெச்ச- செய்யுமென்னும்
வாய்பாட்டுப் பெயரொச்சத்தினுடைய, ஈற்று- இறுதியிலுள்ள,உ
யிர்மெய்-உயிர்மெய்யானது,சேறலும் கெடுதலும், செய்யுளுள்-
செய்யுளிடத்து,உம் உம்விகுதியானது,உந்தாகலும் உந்தெனத்
திரிதலும்,முற்றேல்-அது முற்றாயின், உயிரும்; அதனிறுதியுயிரா
யினும்,உயிர்மெய்யும் உயிர்மெய்யாயினும்,ஏகலும்-கெடுதலும்,உ
ள-உளவாம்,எ-று (பொ-ரை) செய்யுமென்னுவாய்பாட்டுப்பெய
ரெச்சத்தினிறுதியுயிர்மெய்கெடுதலுஞ் செய்யுளகத் ததனிறுதியு
ம்மையுந்தெனத்திரிதலும் அதுமுற்றாயின் அதனிறுதிஉயிரேனு
முயிர்மெய்யேனுங்கெடுதலுமாவாம் எ-று. செய்யுளுளும்முந்
தாமெனவேயேனையவழக்கு செய்யுளிடத்துமாமென்பதூஉம்
முற்றேலெனவேசெய்யுமெனெச்சமுற்றுமாமென்பதூஉம் இற
ந்ததுதழீஇயெண்ணிநின்றவிழிவுசிறப்பும்மைகளானிவைபொரு
தலையல்ல வென்பதூஉம்பெற்றாம். முற்றுவிகுதியின்றியெச்சவி
குதியேமுற்றுவிகுதிப்பொருளாகியபால்காட்டி யொரோவழிநி
ற்றலி னெச்சமுற்றுமெனப்பட்டது,[வ-று] ஆம்பொருள் போ
ம்பொருள் எ-ம்- "ஆம்பொருள்களாகுமவை யார்க்குமழிப்புண்
ணுவாம்.,, போம்புழை வாம்புரவிவழுதி எனச்செய்யுமெனெச
வீற்றுயிர்மெய்கெட்டன. இவை மகரவொற்றுநிற்றலின் வினைத்
தொகையாகாவென்க. "நெல்லரியுமிருந்தொழுவர்-செஞ்ஞாயிற்
றுவெயின்முனையிற்றெண்கடற்றிரைமிசைப்பாயுந்து,, "நாகமேகா
ழிகூப்பெயர்க்குந்து,, இவைஉம்உந்தாயின. அஃதாம்- இவைபோ
ம், (எ-ம்) "சாரனாடவென்றோழியுங்கலும்மே,, "அம்பலூருமவ
னொடுமொழிமே,, (எ-ம்) இவைமுற்றாய்உயிருமுயிர்மெய்யுங்கெ
ட்டன. செய்யுமென்னு முற்றென்றேனுஞ் செய்யுமென்னு மெ
வன்முற்றென்றேனும் விதவாதுபொதுமையின் முற்றேலென்ற
மையின் "மாமறைமாக்கள் வருகுவங்கேண்மோ,, "முதுமறையந்
தணிர்முன்னியதுரைமோ,,,எனக்கேளும்உரையும் என்னுமேவன்
முற்றும் இவ்வாறுயிருமுயிர்மெய்யுங்கெட்டுவருதல்கொள்க. இ
வை இங்ஙனமாதலின், "சொற்சொறுமித்திதல்பெற்றி,,என்னுஞ்
சூத்திரத்தானே ஆடுவாமோ என்னுந்தன்மைப்பன்மை முற்று
"பொன்னூசலாடாமோ.,, எனவெதிர்காலவிடைநிலை கெட்டுவரு
தலும் பிறவுங்கொள்க. (உ௨)

(௩௱௪௨) தொழிலுங்காலமுந் தோன்றிப்பால்வினை-யொழிய நிற்பது வினையெச்சம்மே. *

(எ-ன்) வினையெச்சமாமாறுணர்-ற்று. (ப-ரை) தொழிலும்-செயலும், காலமும்-பொழுதும், தோன்றி விளங்கி, பால-பாலுடனே, வினை-வினையானது, ஒழிய-எஞ்ச, நிற்பது-நிற்பன, வினையெச்சம் வினையெச்சவினைவினைக்குறிப்புக்களாகும், எ-று. (பொ-ரை) பின்னர்ச்செய்துசெய்புமுதலியவாய்விதந்துகூறும் வாய்பாடுகளின்கட் டொழிலும் இறப்பு நிகழ்வு எதிர்வு என்னுமுக்காலங்களுமுறையேதோன்றிவினைமுற்றுதற்குவேண்டும்பாலொன்றுந்தோன்றாதுஅப்பாலுடனேவினையொழியநிற்பன வினையெச்சவினைவினைக்குறிப்புக்களாம். எ-று. ✲வினையெனப்பொதுப்படக்கூறினமையின் வினைவினைக்குறிப்பின்விகற்பங்களுநம் அவ்வினையாலணையும்பெயருந்தொழிற்பெயருங்கொள்க. [வ-று] அறமன்றி-அறமல்லாமல்-அருளின்றிசெய்தான்- செய்யான்- செய்த-செய்து செய்தவன்செய்தல்-இலன்-இல்லாத- இல்லாது இன்மை- இல்லாமை- எனவரும்-செய்தானென்னுந்தெரிநிலைவினைக்கட்செய்தலென்னுந்தெரிநிலைத்தொழிற்பெயர்போலஇல்லென்னுங்குறிப்புவினைக்கண் இன்மை இல்லாமை என்பனகுறிப்புத் தொழிற்பெயராய்நிற்றலின் அறமன்றியின்மை - "அறமன்றியில்லாமை,, நீயலாற்பிறிதுமற்றின்மைனமுடிந்துநின்றன. பிறவுமன்ன தெரிநிலைவினையெச்சங்கட்குதாரணம் வருஞ் சூத்திரங்களானுணர்க "காலமும்வினையுந் தோன்றிப்பாறோன்றாது - வினைகொள் ளும்மதுவினையெச்சம்மே,,, என்பது அகத்தியம். (௨௫)

(௩௱௪௩) செய்துசெய்பு செய்யாச்செய்யூச் - செய்தெனச்செயச்செயின் செய்யியசெய்யியர்- வான்பான்பாக்கின வினையெச்சம்பிற-வைந்தொன்றாறுமுக் காலமுமுறைதரும். *

(எ-ன்) மேற்றொழிலுங்காலமுந்தோன்றியென்றவினையெச்சவாய்பாடுகளிவையெனவகுத்துணர்-ற்று. (ப-ரை) செய்து—செய்யியர், செய்து என்பது முதல்செய்யியர் என்பதீறாகிய ஒன்பதுவாய்பாட்டால் வருவனவும், வான்பான்பாக்கு - இம்மூன்றுவிகுதிகளைக் கொண்டுவருவனவும், இன-இவைபோல்வனபிறவும், வினையெச்சம்-வினையெசசவினைகளாம், ஐந்து-முன்னையவைந்தும், ஒன்று-நடுநின்ற ஒன்றும், ஆறு-பின்னையவாறும், முக்காலமும்-இறந்தகாலமும் நிகழ்காலமும் எதிர்காலமும், முறை-முறையாக, தரும்-காட்டுவனவாம். எ-று. (பொ-ரை) செய்தென்பதுமுதலியவொன்பதுவாய்பாட்டான்வருவனவும்வான்பான்பாக்கென்னுமூன்றுவிகுதியவாய்வருவனவு மிவைபோல்வனபிறவும் வினையெசசவினைகளாம்இவற்றுண்முன்னையவைந்தும்இறந்தகாலமுஞ்செயவெ

ன்ப தொன்றுநிகழ்காலமுமொழிந்தவாறு மெதிர்காலமுங் காட்டு
வனவாம், எ-று. ❁ இவற்றுட்செய்தென்பது இடைநிலையானும்
ஏனைய இறுதிநிலையானுங்காலங்காட்டின, வான்பான்பாக்கென்ப
ன அவ்வெச்சவிகுதியவாகிய மொழிகளையுணர்த்திநின்றகுறிப்பு
ச்சொல். இன்னவென்றமையால் "அற்றாலளவறிந்துண்க,, "ஒலி
த்தக்கா லென்னாமுவரி,,—"காண்டலு மிதுவே சொல்லும்,, என
ச் செயினென்னும்வாய்பாடுபோல் எதிர்காலங்காட்டுவனவும்—
"கூறுமற்குறித் ததன்மேற்சொல்லுங் கடுங்கூளி,, — "கூறாமை
நோக்கிக் குறிப்பறிவான்,,—"ஈத லியையாக் கடை,, என எதிர்ம
றைவிகற்பங்களாய்வருவனவும் இத்தொடக்கத்துக் குறைச்சொல்
லாய் வினையெஞ்சநிற்பனவெல்லாங் கொள்க. "ஒலித்தக்கால்,, எ
ன்புழிக் ககரவொற்றிடையே மிக்கமையிற் காலென்பது பெய
ரெச்சங்கொண்டபெயரன்று வினையெச்சவிகுதியென்பதுபொ
ருந்தும். ஈதலியையாக்கடை என்புழிக்கடையென்பது எதிர்ம
றைப்பெயரெச்சங்கொண்ட இடப்பெயரென்று லென்னையெனி
ன், அதனகத் திடப்பொருளின்றி ஈதலியையாதாயினென்னும்
பொருடந்துநிற்றலின் வினையெச்சவிகுதியேயாமென்க. பிறவும்
ன்ன. பிறவென்றமையானே, செய்து என்னும்வாய்பாட்டெச்ச
ங்களும் இடைநிலையின்றி, ஆடிக்கொண்டான்- தழீஇக்கொண்டா
ன்- என இறுதிநிலைதன்னியல்பினின்றும் விகாரமாயும் புக்குநின்
றான் எனமுதனிலைவிகாரமாயுங்காலங்காட்டுவனவுளவெனவும் செ
யவென்னும்வாய்பாட்டெச்சம் எதிர்காலத்திற்குமுரித்தெனவும்
இவ்வெச்சங்கட்குவிதந்துகூறாதனவெல்லா மமைத்துக்கொள்க.()

(௩௱௪௪) அவற்றுள், முதலினான்கு மீற்றின்மூன்றும்- வினை
முதல்கொள்ளும் பிறவுமேற்கும் பிற. *

(எ-ன்) இவ்வெச்சங்கட்காவதோர் புறனடையுணர்- த்து. (ப-
ரை) அவற்றுள்- முன்சூத்திரத்துட்சொல்லிய வினையெச்சங்களு
ள், முதலில்- முதலினுள்ள, நான்கும்- செய்து செய்பு செய்யா
செய்யூ என்கிறநான்கும், ஈற்றில்- இறுதியிலுள்ள, மூன்றும்-வா
ன் பான் பாக்கு என்கிறவிகுதிகளையுடையமூன்றும், வினைமுத
ல் -செய்பவனை, கொள்ளும்- கொண்டுமுடியும், பிற- நடுவிலுள்ள
-செய்தென செய செயின் செய்யிய செய்யியர் என்கிற ஐந்
தும் இவைபோல்வனபிறவுமென்றதனால்வருஞ் செய்தான்முதலி
யவையும் வினையெச்சக்குறிப்புகளும் ஆகிய இவைகள், பிறவும்
-செய்பவனையன்றிமற்றவைகளையும், ஏற்கும்- கொண்டுமுடியும்,
எ-று. (பொ- ரை.) மேலைச்சூத்திரத்து முதற்கட்கூறிய செய்து
-செய்பு- செய்யா- செய்யூ- என்னுநான்கும்இறுதிக்கட்கூறியவா

ன்- பான்- பாக்கு- என்னுமூன்றும் வினைமுதலைக்கொண்டு முடி
யும் இடைநின்ற, செய்தென - செய- செயின்- செய்யிய- செய்
யியர்-என்னும்ஐந்தும்இன்னவென்றதனால்வருவனவும் வினையெ
ச்சக்குறிப்புக்களும் வினைமுதலையும் அஃதல்லாத பிறவற்றையுங்
கொண்டுமுடியும். எ-று. ※ இடையின் ஐந்துமென்றதுபிறவெ
ன்றார் இன்னவென்றதனான்வருவனவும்வினையெச்சக்குறிப்புக்க
ளுந் தழீஇக்கோடற்கென்க. [வ-று.] நடந்துவந்தான்-“வாளொ
டுகனையிருள் வந்துதோன்றினான்.,,—“எண்ணித்துணிக கருமம்,,
—“பரீஇயுயிர்செகுக்கும்,,—“ஐவரொடுசினைஇ நிலந்தலைக்கொ
ண்ட,, (எ-ம்) புலராப்பசிலை யிடையிடுபுதொடுத்த,,— “தெரி
புதெரிபுகுத்தினவேறு,, (எ-ம்) “கல்லாக்களிப்பர் தலையாயார்.,,
—“நிலங்கிளையாநாணி நின்றோணிலை.,, (எ-ம்) “படுமகன் கிடக்
கைகாணூஉ- வீன்றஞான்றினும் பெரிதுவந்தனளே,, “நிலம்பு
டையூ வெழுதரு வலம்படு குஞ்சரம்.,, (எ-ம்) “கொல்வான்கொ
டித்தானை கொண்டெழுந்தான்,, (எ-ம்) “அலைப்பான் பிறிதுயி
ரை யாக்கலுங் குற்றம்,, (எ-ம்) “புணர்தருசெல்வந்தருபாக்குச்
சென்றான்,,, (எ-ம்) முதலினான்கு மீற்றின்மூன்றும் வினைமுதல்
கொண்டன.—“காந்தளஞ் சிலம்பிற் சிறுகுடிபசித்தெனக் - கடு
ங்கண்யானைக் கோடுதொடுத் துண்ணும்,, (எ-ம்) கோவாவாரம்
வீழ்ந்தெனக் குளிர்கொண்டு - பேளநாறுந் தாழ்நீர்ப் பனிச்சு
னை.,, (எ-ம்) உண்ணவந்தான்-“கொள்ளக்குறைபடாக்கூழுடைவி
யனகர்.,,(எ-ம்) மழைபெய்யநெல்விளைந்தது-“மோப்பக்குழை
யு மனிச்ச முகந்திரிந்து- நோக்கக் குழையும் விருந்து,, (எ-ம்)
“தாம் வேண்டி னல்குவர் காதலர் யாம்வேண்டுங் கௌவையெ
டுக்குமிவ்வூர்.,, (எ-ம்) “காணியவாவாழிதோழி,,, (எ-ம்) “மா
ணிழை யரிவை, காணியவொருநாட் - பூணக மாகநின் புனைவினை
நெடுந்தேர்.,, (எ-ம்) “பசலையுண்ணியர்வேண்டும்.,,(எ-ம்) “கொ
ற்கைச்சோழர் கொங்கர்ப்பணியியர்- பழையன்வேல்வாய்த்தன,,
(எ-ம்) இடையினைந்தும் வினைமுதலும் பிறவுங்கொண்டன,— உ
ண்டாலுவக்கும்- உண்டாற்பசிதீரும்—“விண்ணின்றுபொய்ப்பி
ன்,,—“விருந்தின்றியுண்டபகல்,, எனஇன்னவென்றதனான்வருவ
னவும் வினையெச்சக்குறிப்பும் வினைமுதலும் பிறவுமேற்றல்கா
ண்க. நடந்துவந்தவன்-வருதல்- இடையிடுபுதொடுத்தவன்-தொ
டுத்தல்- (எ-ம்) “காந்தளஞ்சிலம்பிற் சிறுகுடிபசித்தெனக்- கடுங்
கண்யானைக்கோடுதொடுத்துண்டவன்.,, உண்டல்- “கோவாவாரம்
வீழ்ந்தெனக் குளிர்கொண்டு பேளநாறுவது,, நாறல்- உண்ணவ
ந்தவன்- வருதல்- மழைபெய்யநெல்விளைவது- விளைதல்- எனவி
னையாலணையும்பெயருந் தொழிற்பெயரும் வருவித்து,வினைமு

தலும் வினைமுதலோடு பிறவுமேற்றல்காண்க. பிறவுமென்ன. இச்
சூத்திரத்துள் வினைமுதல்கொள்ளும் பிறவுமேற்குமென்பதற்கு
வினைமுதல் வினைகொள்ளும் பிறவினைகொள்ளுமெனப் பொரு
ளுரைத்தாலென்னையெனின், அதுபொருளாயின் "வினைமுதல்
வினைகொளும் பிறவினைகொள்ளும்", எனக்கூறினும் யாப்பமை
யுமாதலின் இங்ஙனங்கூறவேண்டும் அவ்வாறு கூறாமையானும்
வினைகொண்டுமுடியுமென இதற்குக்கூறினொணின் முன்னர்க்கூ
றியபெயரெச்சத்திற்கும் பெயர்கொண்டுமுடியுமெனக் கூறவே
ண்டும் அவ்வாறுகூறாமையானும் பொதுவியலுள் "பெயர்வினை
யும்மை", என்னுஞ்சூத்திரத்தானேமுற்றுத்துகுலைறந்துநின்ற இப்
பெயரெச்ச வினையெச்சங்கண் முதலியவாக இவ் வதிகாரத்துள்,
விதந்தும் விதவாதும் பரந்துகிடந்தவெச்சங்களையெல்லாமெடு
த்து ஒன்பதும்- ஒன்றும்- எனத்தொகைதந்து தத்தமெச்சங்கொ
ள்ளுமெனக்கூறுதலானும் இங்ஙனம்வினைமுதற்பொருண்மையி
னையும் அஃதொழிந்த பிறபொருண்மையினையுங் கொள்ளுமெ
னக்கூறலே நூலாசிரியர்கருத்தென்க. அங்ஙனமாயின் இவ்விரு
வகையெச்சங்களும்• பெயரினையும்வினையினையுங் கொண்டுமுடிந்
துநிற்க உதாரணங்காட்டிய தென்னையெனின், பெயரெச்சம்
பெயரெஞ்சநிற்றலும் வினையெச்சம் வினையெஞ்சநிற்றலும் வி
னைமுதல்கோடலும் பிறகோடலுந் தோன்றுதற்பொருட்டன்றிப்
பெயரினையும்வினையினையுங்கொண்டுமுடிதறோன்றுதற்பொருட்
டன்றென்க. இவ்வினையெச்சங்கள், நடந்துவந்தான் - மழைபெ
ய்யநெல்விளைந்தது-எனக்காரணப்பொருட்டாயும், நெல்விளைய
மழைபெய்தது -- எனக் காரியப்பொருட்டாயும், உண்ண வந்
தான்- எனக்காரணகாரியமென்னும் இருபொருட்டாயும்—"கடி
க்கமல முகங்காட்டக் கருநெய்தல் கண்காட்டும்.", எனக் காரணகா
ரியமிரண்டுமின்றியும், உழுதுபயன்கொண்டான்வேந்தன்-எனத்
தலைமைபற்றியும், உழுதுபயன்கொண்டான்வறியன்- எனஅஃதி
ன்மைபற்றியும் வருதல்காண்க. (உ௫)

(௩௱௪௫) சினைவினைசினையொடு முதலொடுஞ்செறியும். *

(எ-ன்) மேல் வினைமுதல்கொள்ளுமென்றவற்றிற்கோர் புற
னடையுணர்-ற்று. (ப-ரை) சினைவினை - முதலினான்கு மீற்றின்
மூன்றுமென்ற வினையெச்சங்கள் சினைவினையாயின் அவை, சினை
யொடும் - முன்வினைமுதல்கொள்ளுமென்றவிதியினாலே சினையு
டனேயன்றி, முதலொடும் - முதலுடனும், செறியும்- முடியும்,
எ-று (பொ-ரை) முதலினான்கு மீற்றின்மூன்றுமென்றவினையெ
ச்சங்கள் சினைவினையாயின் அவை வினைமுதல்கொள்ளுமென்றவி
தியானே சினையொடுமுடிதலேயன்றி முதலுடனுமுடியும் அ

னைமுடியுமாயினுஞ்சினையொடுமுடிதற்கு ஒற்றுமையுண்மையி
ன்வினைமுதல்கொண்டதேயாம் எ-று. ❁ [வ-று.] காலிற்றுவீழ்ந்
தான். காலிறுபுவீழ்ந்தான் காலிறுவீழ்ந்தான்-காலிறாஉவீழ்ந்தா
ன் - (எ-ம்). கண்வருவான்கதிரவற்றொழுதார்- கண்டழைப்பான்க
திரவற்றொழுதார்-கண்வருபாக்குக்கதிரவற்றொழுதார் (எ-ம்) மா
டு காலிற்றுவீழ்ந்தது (எ-ம் வரும். பிறவுமன்ன. காலிற்றுவீழ்ந்
தான் - என்புழிவீழ்தற்கு வினைமுதலிமுதற்பொருளாம். அஃதி
ன்றிச்சினைப்பொருளாயின், கண்விழித்துப்பார்த்தான் - செல்வ
மிக்குயர்ந்தான்- கண்பெரியன்- நாடுபெரியன் - செல்வம்பெரி
யன்- என்றாற்போல "உயர்திணைதொடர்ந்த பொருண்முதலா
றும்,, என்னுஞ்சூத்திரத்தான் அமைவதாமென்க. பிறவுமன்ன.()

(௩௱௪௬) சொற்றிரியினும்பொருடிரியா வினைக்குறை. *

(இ-ள்) இதுவுமது. (ப-ரை) சொல் - முதலினான்கு மீற்றின்
மூன்றுமென்ற வினையெச்சவாய்பாடுகளாக, வினைக்குறை - பிற
வினையெச்சவாய்பாடுகள், திரியினும்- வேறுபடினும், பொருள்
- அவற்றின்பொருள்கள்- திரியா- வேறுபடாவாம். எ-று- (பொ-
-ரை) முதலினான்கு மீற்றின்மூன்றும் வினைமுதல்கொள்ளுமெ
ன்ற வினையெச்சவாய்பாடுகளாகப் பிறவினையெச்சவாய்பாடுக டி
ரியினும் அவற்றின்பொருடிரியா. எ-று. ❁ [வ-று] ஞாயிறுப
ட்டுவந்தான் - கோழிகூவிப் பொழுதுபுலர்ந்தது-"உரற்காலியா
னை யொடித்துண் டெஞ்சிய யாவிரிநீழற் றுஞ்சுஞ் செந்நாயேற்
றை.,, (எ-ம்) யான்கொள்வான் பொன்கொடுத்தார் - (எ-ம்) வ
ரும். பிறவுமன்ன. இவை செயவெனெச்சஞ்செய்து செய்வான்
எனத்திரிந்துநின்றும் அச்செயவெனெச்சமுடிபேற்றுநின்றன.
எனவே ஞாயிறுபட்டுவந்தான் என்பதற்கு ஞாயிறுபடவந்தா
ன் எனப்பொருளுரைக்கவேண்டுமென்பதாயிற்று. பிறவுமன்ன.
வினைக்குறையெனப் பொதுப்படக்கூறினமையான் வினையெச்
சங்களு மொன்றொன்றாய்த் திரிந்துவருவனபிறவு முளவேலவை
யுங்கொள்க. (௨௭)

(௩௱௪௭) ஆக்கவினைக்குறிப் பாக்கமின்றியலா. *

(இ-ள்) வினைக்குறிப்பிற்காவதோர் விதியுணர்- த்து. (ப-ரை)
ஆக்கம்- ஆக்கத்தால்வருகின்ற; வினைக்குறிப்பு - வினைக்குறிப்புச்
சொல்லுகள், ஆக்கம்- ஆக்கச்சொல்லுகள், இன்று - இல்லாமல்,
இயலா- வாராவாம். எ-று. (பொ-ரை) ஆக்கத்தால்வரும் வினைக்
குறிப்புச்சொற்கள் ஆக்கச்சொல்லின்றி வாரா. எ-று. ❁ வேற்று
மைப்புணர்ச்சிக்கு வேற்றுமையுருபுகள் விரிந்துந்தொக்கும் அ
தனுடைமையாய்நின்றாற்போல ஆக்கவினைக்குறிப்பிற்கு ஆக்கச்
சொல் விரிந்துந்தொக்கும் அதனுடைமையாய்நிற்றலின் ஆக்க

மின்றியலாவென்றார். [வ-று.] சாத்தனல்லனாயினான்- சாத்தனல்
லன்- கல்வியாற்பெரியனாயினான்- கல்வியாற்பெரியன்- கற்றுவல்
லராயினார்- கற்றுவல்லர்- "குருகிபடிந்துண்டகாகமுருவிழந்து
குக்கிற்புறத்தசிரல்வாயசெங்கண்ண,, என ஆக்கச்சொல்விரிந்து
ந்தொக்கும் வந்தன.— எனவே நல்லனென்பது இயற்கைவினை
க்குறிப்பாயின் விரிதறொகல்' என்றுமிரண்டனுள் ஒருவாற்றா
னும் ஆக்கம்வேண்டாது சாத்தனல்லனென்றே வருமென்பதா
யிற்று. இங்ஙனமாகவே வினைக்குறிப்பு ஆக்கவினைக்குறிப்பென்
றும் இயற்கைவினைக்குறிப்பென்றும் இருவகைப்படுமெனவும்
அவையிவ்வாறு நடக்குமெனவுங் கூறினாராயிற்று. வினையாயி
னும் ஆக்கத்தைநோக்கி இயற்கையெனப்பட்டது. இச்சூத்திர
த்திற்கு வினையெச்சங்கொண்டுமுடியும் ஆக்கவினைக்குறிப்பிற்கு
ஆக்கச்சொல் விரிந்தேவருமென்றுந் தொக்குவருவன செய்யுள்
விகாரமென்றும் பொருள்கூறுவாருமுளர். வினையெச்சங்கொ
ண்டுமுடியும் ஆக்கவினைக்குறிப்பென விதவாமையானும் ஆக்
கவினைக்குறிப்பென்றதுணையானே வினையெச்சங்கொண்டுமுடி
யும் வினைக்குறிப்பென்பதுதாமே போதருமெனிற் கல்வியாற்
பெரியன் எனப்பிறவழியும் ,ஆக்கவினைக்குறிப்பு வருதலானும்
அஃதியாண்டுவரினும் ஆக்கச்சொல்விரிந்தேனும் தொக்கேனு
ம்வேண்டியேநிற்றலானும், இவர்கற்றுவல்லர்- எனவழக்கின்கண்
ணும் ஆக்கச்சொற்றொக்குவருதலானும், "காரணமுதலா வாக்
கம்பெற்றும்,, என்னுஞ்சூத்திரம் மாறுகொளக்கூறலாய் முடியு
மாதலானும், அது பொருந்தாதென்க. (உ௮)

(கூ௱௪௮) பல்லோர்படர்க்கை முன்னிலைதன்மையிற் - செ
ல்லாதாகுஞ் செய்யுமென்முற்றே. *

(எ-ன்) செய்யுமென்னெச்சந் திணைபாலிடங்கட்குப் பொ
துவாமெனவிதித்தலின் அவ்வெச்சத்தானாகிய செய்யுமென்னு
முற்றும் அவ்வாறு பொதுவாமெனப் போந்தவற்றுட் சிலபா
லிடங்களிற்செல்லாது இம்முற்றெனவிலக்குதலினெய்தியதொ
ருமருங்குமறுத்தலுணர்-ற்று.(ப-ரை)செய்யுமென்முற்று-செய்
யுமென்னுமுற்றானது,பல்லோர்படர்க்கை (யில்.)- உயர்திணைப்
பன்மைப்படர்க்கையிலும்,முன்னிலை (யில்.)- முன்னிலையிலும்,
தன்மையில்- தன்மையிலும், செல்லாதாகும்- செல்லாது, எ-று.
(பொ-ரை), உயர்திணைப்பன்மைப்படர்க்கையினும் முன்னிலை
யினும் தன்மையினும் செல்லாது செய்யுமென்னுமெச்சத்தா
னாகுஞ் செய்யுமென்னுமுற்று. எ-று. ❀ "பல்லோரொழிந்த

படர்க்கைக் குரித்துச்- செய்யு மென்னத் தெரித்திடு முற்றே.,,
எனச் சூத்திரஞ்செய்யாது எய்தியதொருமருங்கு மறுத்தலே
ன்றப் பல்லோர்படர்க்கை முன்னிலைதன்மையிற் செல்லாதெ
ன்றும், வினைமுற்றுக்கள்போற் றன்னியல்பினில்லாது எச்சத்தா
ணுயது இம்முற்றென்பதுதோன்ற ஆகுஞ்செய்யுமென்முற்
றென்றுங்கூறினர். இப்பாலிடங்களை விலக்கவேயொழிந்தபடர்
க்கைநாற்பாலினுஞ் செல்லுமென்பது பெற்றாம். [வ-று] அவ
னுண்ணும் - அவளுண்ணும் - அதுவுண்ணும் - அவையுண்ணும்
எனவரும். (௨௯)

(௩௱௪௧) யாரென்வினாவினைக் குறிப்புயர்முப்பால். ✲

(எ-ன்) திணைப்பொதுவன்றிப் பாற்பொதுவினையாமாறுண
ர்-ற்று. (ப-ரை) வினா- வினாப்பொருளைத்தருகிற, யாரென்-யா
ரென்கிற, வினைக்குறிப்பு- வினைக்குறிப்புமுற்று, உயர்முப்பால்-
-உயர்திணைமுப்பால்களுக்கும் பொதுவினையாம். எ-று. (பொ-
-ரை) வினாப்பொருண்மையைத்தரும் யாரென்னும்வினைக்குறி
ப்புமுற்று உயர்திணைமுப்பாற்கும் பொதுவினையாம். எ-று. ✿
திணைப்பொதுமைக்கட்கூறிய பொதுவினை யென்பதனையீண்டு
ம் வருஞ்சூத்திரத்துந் தந்துரைத்துக்கொள்க. [வ-று] அவன்
யார்- அவள்யார்- அவர்யார்- எனவரும் —“ஊதைகூட் டுண்ணு
முகுபனி யாமத்தெங்- கோதைகூட் டுண்ணியர்தான் யார்மன் -
போதெல்லாந் - தாதொடு தாழுந்தார்க் கச்சி வளநாடன் - றூ
தொடு வாராத வண்டு.,, என அஃறிணைக்கண்வருதலும், “நாணு
ரொன் னுள்ள மார்.,, என யாரென்ப தாரெனமரீஇ வருதலும்,
புதியனபுகுதலாமென்க. (௩௰)

(௩௱௪௨) எவனென்வினாவினைக் குறிப்பிழியிருபால். ✲

(எ-ன்) இதுவுமது. (ப-ரை) வினா- வினாப்பொருளைத்தருகி
ற, எவனென்- எவனென்கிற, வினைக்குறிப்பு- வினைக்குறிப்புமு
ற்று, இழியிருபால் - அஃறிணையிருபாலுக்கும் பொதுவினையா
ம், எ-று. (பொ-ரை) வினாப்பொருண்மையைத்தரும் எவனெ
ன்னும் வினைக்குறிப்புமுற்று அஃறிணையிருபாற்கும் பொதுவி
னையாம். எ-று. [வ-று] அஃதெவன்- அவையெவன்-எனவரும்.
இஃதென்னெனவும் என்னையெனவுமரீஇ வருதல் புதியனபுகு
தலாம். உயர்முப்பாலென்றும் இழியிருபாலென்றும் விதந்த
மையின் யாரென்றும் எவனென்றும் நண்டுப்போந்த சொற்க
ள் பெயர்க்கும் வினைக்குறிப்பிற்கும் பொதுவாகிய- யாவரென்
னுஞ்சொல் யார் ஆர் என மரீஇயவுயர்திணைப் பன்மைச்சொ

லும் இவ்வாறுபெயர்க்கும் வினைக்குறிப்பிற்கும் பொதுவாகிய எவனென்னும் உயர்திணையாண்பாற்சொல்லுமல்ல வென்பதுபெற்றாம். (௫௧)

(௩௱௫௧) வினைமுற்றேவினை யெச்சமாகலுங்- குறிப்புமுற்றீரெச்ச மாகலுமுளவே. *

(எ-ன்) இருவகைமுற்றிற்க மாவதோர்புறனடையுணர்-ற்று. (ப-ரை) வினைமுற்றே- தெரிநிலைவினைமுற்றே, வினையெச்சமாகலும்- வினையெச்சமாகிவருதலும், குறிப்புமுற் (றே) - வினைக்குறிப்புமுற்றே, ஈரெச்சமாகலும் - வினையெச்சமாகியும் பெயரெச்சமாகியும்வருதலும், உள - உளவாம் எ று. (பொ-ரை) வினைமுற்றே வினையெச்சமாகிவருதலும் வினைக்குறிப்புமுற்றே வினையெச்சமாகியும் பெயரெச்சமாகிவருதலு முளவாம். எ-று. ❀ ஏகாரத்தைப் பின்னுங்கூட்டுக. குறைச்சொல்லாகாது பாலகாட்டிநிற்றலின் முற்றென்றும் வினையெச்சப் பயனிலையினையும் பெயரெச்சப்பயனிலையினையும் அவாவிநிற்றலி னெச்சமென்றும் இவைசிறுபான்மையவாகலின் ஆகலுமென்றுங் கூறினார்: [வ-று] "காணான்கழிந்தவைகலுமுண்டென்றொருநாள்,, "மோயினளுயிர்த்தகாலை,, "மகந்தனர்கொடுப்ப,, "விளிப்பதுபயிலுங் குறும்பர்துந்துபியொடு,, "எருவை நுண்டாது குடைவனவாடி,, (எ-ம்) "பெயர்த்தனென்முயங்கயான்,, "மக்களுளிரட்டையாய் மாறினம்பிறந்தியாம்,, (எ-ம்) "சேர்ந்தனை சென்மோ பூந்தார்மார்ப.,, "கருங்கோட்டின்னிய மியக்கினிர்கழிமின்,, (எ-ம்) மூவிடத்தைம்பாலினும்வினைமுற்று வினையெச்சமாயின.—"வரிபுனைவில்ல னொருகணைதெரிந்துகொண்டு.,,—"அளிதிலை பெருத மரியமுகத்தாள்- விளிதிலைகொள்ளாள்,,—"உச்சிக் கூப்பிய கையினர் தற்புகழ்ந்து.,,—"விழுமியது கழிவதாயினும்,, — "நிலமிசைப்புரளுங் கையவெய்துயிர்த்து,, (எ ம்) "துணையிமெனஞ்சினேன் றுயருழந்திலையேன்.,,—"நீர்வார் கண்ணேந்தொழு துநித்பழிச்சி.,, (எ-ம்) "நீர்வார்கண்ணை நீயிவணொழிய.,,—"வெவ்வேல்வலத்தினிர் பொருடரல்வேட்கையினுள்ளினிர்.,, (எ-ம்) மூவிடத்தைம்பாலினும் வினைக்குறிப்புமுற்று வினையெச்சக் குறிப்பாயின—"வெந்திறலினன்விறல்வழுதியொடு.,,—"அஞ்சாயலளாயிழைமுன்.,,—"கடற்றுறையர் கழல்வேந்தனா.,,—"பெருவரைமிசையது நெடுவெள்ளருவி.,, — "புன்றலைமை யசுரனிறந்தோரோ,, (எ-ம்) "பெருவேட்கையேனெற் பிரிந்து.,,—) "கண்புலாகாதல்ல மெய்முள்ளான்.,, (எ ம்) "உலங்கொடோளினை பொருதின்னைல்.,, "வினைவேட்கையிர்வீரர்வம்மின்.,, (எ-ம்)

மூவிடத்தைம்பாலினும் வினைக்குறிப்பு முற்றாய்ப் பெயரெச்ச
க்குறிப்பாயின.— இவற்றுள் வரும்பெயர்கண் முற்றுப்பயனி
லையாகாது பெயரெச்சப் பயனிலையாமாறுகாண்க.— இனிவினை
முற்றுக்கள் சொற்றிரியினும்பொருடிரியா வினையெச்சமாய்
வருமாறு, “விண்ணிற்றாவிபிட்டான் வந்துவீழ்ந்தன,,— “யா
யுமாரிபோற் பகழிசிந்தினா- ராயர்மத்தெறி தயிரினுயிரனார்,,—
“கானவரிரியவில்வாய்க் கடுங்கணைதொடுத்தலோடு- மானினமெ
யர்ந்ததாய ரார்த்தன ரணிந்த திண்டோ - டாலென்றுமுடங்கி
த்தென்று நிமிர்ந்தது சரம்பெய்மாரி- போனின்ற தென்பமற்
றைப்பொருவருஞ்சிலையினற்கே.,,“செய்யோன்செழும்பொற்ச
ரஞ்சென்றது சென்றதாவி.,,எனவரும் பிறவுமன்ன.,இனி என்
ணின்கணின்றஎதிரதுதழீஇயவெச்சவும்மையானேஉண்டான்சா
த்தனார்க்குப்போனான்- என்புழி உண்டசாத்தனார்க்குப்போனா
ன்- எனப் பொருள்படுதலின் வினைமுற்றுப் பெயரெச்சமாத
லுமுளவெனவும், வெறுத்தஞானி வீட்டையடைந்தான் - சாத்த
னுழுதுவந்தான்- என்புழி வெறுத்தான்ஞானி சாத்தனுழுதான்
எனப்பொருள்பட்டு எச்சமுற்றாதலுமுளவெனவும், “பெறுவ
துகொள்வாருங் கள்வருநேர்,, என்புழி நேர் நேர்வரென முத
னிலைத்தனிவினையும் வினைமுற்றாதலுளவெனவும், “வரிப்புனைப
ந்து.,,—“அறுவேறுவகையின்.,,— “செய்தக்கவல்ல செயக்கெ
டும்.,, — “மண்மாண்புனைபாவையற்று,, என்புழி வரிந்து
அற்று செய்ப மாட்சிமைப்பட என்றுபொருள்பட்டு முதனி
லைத்தனிவினைகள் வினையெச்சமாதலுளவெனவுங்கொள்க. (௯௨)

வினையியல்

முற்றுப்பெற்றது.

மூன்றாவது

பொதுவியல்.

௩௱௫௨. இருதிணை யாண்பெண்ணு ளொன்றனை யொழிக்கும்
பெயரும் வினையுங் குறிப்பினானே. *

(எ-ன்.) முன்வந்த பெயர்க்கும் வினைக்கும் பின்வரு மிடைக்கு முரிக்கும் பொதுவிலக்கணங்களைச் சிங்கநோக்காக இவ்வியலானுணர்த்துவானிடைநிறீஇக்கூறலின் இதுபெயர்க்கும், வினைக்கு முரியதோ ரிலக்கண முணர் - ற்று. (ப - ரை.) இருதிணை - இருதிணையினும் — பெயரும் - ஆண்பால் பெண்பால்களுக்குப் பொதுவாகிய பெயர்ச்சொற்களும் — வினையும் - அப்படிப்பட்டவினைச்சொற்களும் — ஆண்பெணுள் - அவ்வாண்பால்பெண்பால்களுள் — ஒன்றனை - ஒருபாலை — ஒழிக்கும் - நீக்கும் — குறிப்பினான் - குறிப்பினால். எ-று. (பொ-ரை.) உயர்திணை யாண்பால் பெண்பாலென்னு மிருபாற்கும்பொதுவானபெயர்ச்சொல்லும் வினைச்சொல்லும் அஃறிணையாண்பால் பெண்பாலென்னு மிருபாற்கும்பொதுவானபெயர்ச்சொல்லும் வினைச்சொல்லும் அவ்விருபாலுளொருபாலை யொழிக்குங் குறிப்பினான். எ-று. ❀ [வ-று.] ஆயிரமக்கள்தாவடிபோயினார் என்புழிமக்களென்னுமுயர்திணையிருபாற்கும் பொதுப்பெயரும் போயினாரென்னு முயர்திணையிருபாற்கும் பொதுவினையுந்தாவடியென்னுங்குறிப்பினாற் பெண்பாலையொழித்தன. பெருந்தேவிபொறையுயிர்த்தகட்டிற்கீழ்நால்வர்மக்களுளர் என்புழிமக்களென்னும் பொதுப்பெயரும் உளரென்னும்பொதுவினைக்குறிப்பும்பொறையுயிர்த்தவென்னுங்குறிப்பினானுயர்திணையாண்பாலை யொழித்தன. இப்பெற்றங்களுழவொழிந்தன என்புழிப் பெற்றங்களென்னு மஃறிணை யாண்பெணிருபாற்கும் பொதுப்பெயரும் ஒழிந்தனவென்னு மஃறிணையாண்பெணிருபாற்கும் பொதுவினையும் உழவென்னுங்குறிப்பினாற்பெண்பாலையொழித்தன. இப்பெற்றங்கள் பால்சொரிந்தன என்புழிப் பெற்றங்களென்னும் பொதுப்பெயருஞ்சொரிந்தனவென்னும் பொதுவினையுக் பாலென்னுங்குறிப்பினான் ஆண்பாலையொழித்தன. பிறவுமன்ன. (௧)

௩௱௫௫. பெயர்வினையிடத்து ளரய வீற்றய - லாவோவாகலுஞ் செய்யுளுளுரித்தே. *

(எ-ன்.) பெயர்க்கும்வினைக்குஞ்செய்யுட்கணுவதோரிலக்கண முணர்-ற்று. (ப-ரை.) பெயர்வினையிடத்து - பெயரிடத்தும்வினையிடத்தும் — ளரய வீற்று - ளகர ரகர யகர வீற்றிற்கு — அயல் - அயலினுள்ள — ஆ - இறுதிமுதல்ஆகாரம் — ஓவாகலு

ம்-ஓகாரமாதலும்---செய்யுளுள்-செய்யுளிடத்து—உரித்து-உரித்தாம். எ-று. (பொ-ளா.) பெயர்க்கண்ணும்வினைக்கண்ணும் னகாரலகார ரகார யகாரவீற்றயலின்றவிகுதிமுதலாகாரம் ஓகாரமாதலுஞ்செய்யுளிடத்துரித்தாம். எ-று. ※ [வ-று] "வில்லோன்காலனகழலே.,,- "தொடியோண் மெல்லடி மேல்வருஞ்சிலம்பே,,- நல்லோர் யார்கொ லளியர்தாமே.,, - "பெருஞ்சோற்று மிகுபதம் வரையாது கொடுத்தோய்.,,- எ-ம்- "படைத்தோன்மன்றவப் பண்பி லாளன்.,,- "நல்லோண்மன்ற கூப்பெயர்ந் தோளே.,,— "சென்றோ ரன்பிலர்தோழி.,,. "வந்தோய் மன்றதெண்கடற் சேர்ப்ப.,,-எ-ம்-பெயர்க்கண்ணும்வினைக்கண்ணும்வந்தது. வினையாலணையும் பெயர்க்கணன்றி வினைக்கண்ணுமொரோவழிஆ ஓவாதலின் அதனையுமுடன் கூறினர். உம்மையை யெதிர்மறையும்மையாக்கி வில்லோன் வில்லானெனவொன்றேயாதலும்ஆகாமையும் இன்னும்அவ்வும்மையானே செக்கான் வண்ணானென மற்றொன்றாகாமையும்அதனையாக்கவும்மையாக்கி "பழமுதிர்சோலை மலைகிழவோனே,,.என ஆகாரமேயன்றிஅகரமுமோகாரமாதலுங்கொள்க.

ஙாருச. உருபும்வினையு மெதிர்மறுத் துரைப்பினுந் - திரியாதத்தமீற் றுருபினென்ப. *

(எ-ன்.) வேற்றுமையுருபுகட்கும் வினைச்சொற்கட்குமாவதோரிலக்கண முணர்-ற்று. (ப-ளா.) உருபும் -எட்டுவேற்றுமையுருபுகளும்—வினையும் - மூவகைவினைச்சொற்களும்—எதிர்மறுத்து-எதிர்மறுத்தல்செய்து — உரைப்பினும் - சொல்லுமிடத்தும்—தத்தமீற்(றின்) தத்தமீற்றினின்றும்— உருபின் - அவ்வுருபினின்றும்—திரியா - வேறுபடா—என்ப-என்றுசொல்லுவர்புலவர். எ-று. (பொ-ளா.)எட்டுவேற்றுமையுருபுகளுமூவகைவினைச்சொற்களுமெதிர்மறுத்துச் சொல்லுமிடத்துந் தத்தமீற்றினின்றும் அவ்வவ்வுருபினின்றும் வேறுபடாவென்றுசொல்லுவர்புலவர்.— எ-று. ※ இன்னுருபையீற்றென்ப தன்கண்ணுங்கூட்டியெதிர்நிரனிறையாகப்பொருள்கொள்க. உருபின்கணெதிர் மறுத்தலவற்றின்பயனிலைகளையென்க. [வ-று.] சாத்தன்வாரான்-குடத்தை வனையான்- வாளாலெறியான்-புல்லர்க்குநல்கான்- நிலையினிழியான்- பொருளினதின்மை- தீயர்கட்சாரான்- சாத்தாசாயல்-எ-ம்-நடவான்- நடவாத- நடவாது-எ-ம்-வரும்- சொற்றொறுமிற்றிதன் பெற்றியென்னுஞ்சூத்திரத்தானேயுண்மைக்குமறையாகிய இன்மையென்னும்பெயர்க்கண்ணுமீறுதிரியாமைகாண்க. நடத்தல்-நடவாமை என்றற்றொடக்கத்தன வீறுதிரிந்தன வன்றோவெனின்வைதொழிற் பெயராதலிற்றிரிந்தனவென்க ஓடாக்குதிரை-ஆறுவறிவு என்றற்றொடக்கத்தன ஓடாத. ஆறுத என்பனவற்றைக்

குறைத்துவழங்கினவன்றி யீறுவேறுபட்டன வல்லவென்க. ஓர்வினைநிகழ்வழி அவ்வினைக்குக் கருத்தாவுஞ் செயப்படுபொருளுமுதலியவாகப்பெயர்ப் பொருளை வேற்றுமைசெய்து நின்றவுருபுகளவ்வினைநிகழாவழியும் அவ்வாறுநிற்றலானும்வினைவிகுதிகளும் அவ்வினைநிகழ்வழி முற்றின்கட்கருத்தாவையும் எச்சங்களிற்பெயரொழிலையும் வினையொழிலையுந் தந்துநின்றாற்போல வினைநிகழாவழியுநிற்றலானும்இங்ஙனங் கூறப்பட்டதென்க. , (ரு)

ருாருரு. உருபுபலவடுக்கினும் வினைவே றடுக்கினு - மொருதம்மெச்ச மீறுறமுடியும். *

(எ-ன்.) இதுவுமது. (ப-ரை.) உருபு- வேற்றுமையுருபுகள்—பலவடுக்கினும்- விரிந்துந் தொக்குந் தம்முள்விரவிப்பலவடுக்கிவரினும்வெவ்வேறு பலவடுக்கிவரினும்— வினை - மூவகைவினைச்சொற்களும்—வேறு(பல)வடுக்கினும்- வெவ்வேறுபலவடுக்கிவரினும்—ஒருதம்மெச்சம் - தத்தமெச்சமொன்று — ஈறு - இறுதியில்—உற - வர —முடியும் - அதனோடனைத்துமுடியும். எ-று. (பொ-ரை.) வேற்றுமையுருபுகள்விரிந்துந்தொக்குந்தம்முள்விரவிப்பலவடுக்கிவரினும்வெவ்வேறுபலவடுக்கிவரினு மூவகைவினைச்சொற்களுந் தம்முள்விரவியடுக்குந்தன்மையவன்றிவெவ்வேறுபலவடுக்கிவரினுந் தத்தமெச்சமிறுதியிலொன்றுவரவதனோடனைத்துமுடிவனவாம். எ-று. ❀ பலவென்பதனைவேறென்பதனோடுங்கூட்டுக. இவ்விருவகையடுக்கும்படைபடையென்றாற்போலவடுக்கியவல்லவென்பார்பலவடுக்கினுமென்றார். வினைவேறுபலவடுக்கினுமெனவிதந்தாற்போலவுருபிற்குவிதவாமையின் அவைவிரவியும் வெவ்வேறுபலவடுக்குமென்பதுபெற்றும். [வ-று.] சாத்தன்யானையது கோட்டை நுனிக்கட்பொருட்கு வாளாற்குறைத்தான்என்பனவுருபுகள்விரவிப்பலவடுக்கிக்குறைத்தானென்னுமொருவினைகொண்டன. இவற்றுளாற னுருபடுக்கன்று வினையதற்கெச்சமன்றுதலானுங்கோடென்னும்பெயர்கொண்டமையானுமென்க. சாத்தனென்னும்பெயர்வேற்றுமைகுறைத்தற்கு வினைமுதலைக்காட்டவந்தது. அன்றியடுக்கென்று கோடலுமொன்று. சாத்தனையுங் கொற்றனையுந் தேவனையும் பூதனையும்வாழ்த்தினான்-எ-ம்-சாத்தனுக்குங் கொற்றனுக்குந் தேவனுக்கும் பூதனுக்குந் தந்தை-எ-ம்-இரண்டாமுருபு நான்காமுருபும்வேறுபலவடுக்கிவாழ்த்தினானென்னு மொருவினையுந் தந்தையென்னு மொருபெயருமுறையேகொண்டன. வாள்கைக்கொண்டான்-அருளறமுடையான்-எ-ம்-உருபுதொக்கவ்வாறுவந்தன. உண்டான் தின்றானோடினான் பாடினான் சாத்தன்- "வருதிபெயர்திவருந்துதிதுஞ்சாய்-பொருதிபுலம்புதிநீயுங்-கருதுங்காற்-பண்டினையல்லையாற் பாழித்தோட்

கோதையைக்- கண்டனையோ வாழி கடல்.,,-எ-ம். "இளையண்மெ ல்லியன் மடந்தை.,,-"அரிய மேசய பெருங்கான் யாறே.,, -எ-ம். வினைமுற்றுங் குறிப்புமுற்றும் பெயரெச்சங்களோடு விரவாது வேறுபலவடுக்கிச்சாத்தன் நீ மடந்தை ஆறென்னுமொருபெய ர்முறையேகொண்டன.கற்ற கேட்ட பெரியோர்-எ-ம்-சிறியபெ ரியநிகர்மலர்க்கோதை- எ-ம்- பெயரெச்சவினையுங் குறிப்பும் வி னை வினைக்குறிப்பு முற்றோடு விரவாது வேறுபலவடுக்கிப் பெரி யோர்மலர்க்கோதையென்னு மொருபெயர்முறையே கொண்ட ன. கற்றுக்கேட்டறிந்தார்- எ-ம்- விருப்பின்றி வெறுப்பின்றி யி ருந்தார்-எ-ம்-வினையெச்சவினையுங் குறிப்பும் வினையோடுமுடியு மெனவிதந்தவினைமுற்றுக்களோடுவிரவாதுவேறுபலவடுக்கி யறி ந்தாரிருந்தாரென்னு மொருவினைமுறையே கொண்டன. பிறவு மன்ன."சொல்லருஞ் சூற்பசும் பாம்பின் றோற்றம்போல- மெ ல்லவே கருவிருந் தீன்று மேலலார்- செல்வமே போற்றலை நிறு வித்தேர்ந்தநூற்- கல்விசேர் மாந்தரி னிறைஞ்சிக் காய்த்தவே.,, என்னும் வினையெச்சங்கள் கருவிருந் தீன்றென்ப தன்றிக் கருவி ருந்துதலைநிறுவியென முடியாதாகலா னவற்றுள் ஒன்றற்கொன் றுமுடிபாய்த் தொடர்தலானும் "நாளன்றுபோகிப் புள்ளிடைத ட்பப்- பதனன்று புக்குத் திறனன்றுமொழியினும்- வறிது பெ யர்குநரல்லர்நெறிகொள.,, என்னும்வினையெச்சக்குறிப்புக்களா ங்காங்கு முடிதலானுமிவை யடுக்காகாவென்க. (௪)

௩௱௬௰. உருபுமுற்றீ ரெச்சங்கொள்ளும் - பெயர்வினை யி டைப்பிற வரலுமாமேற்பன. *

(எ-ன்.)இதுவுமது.(ப-ரை.) உருபு-வேற்றுமையுருபுகளும், மு ற்று- முற்றுக்களும், ஈரெச்சம் - பெயரெச்சவினையெச்சங்களும், கொள்ளும்- கொண்டுமுடியும், பெயர்வினையிடை- பெயர்க்கும் வினைக்குமிடையே, பிற- பிறசொற்கள், வரலுமாம்- வருதலுமா ம், ஏற்பன- அவ்விடத்திற்குப் பொருந்துவன. எ-று. (பொ-ரை) வேற்றுமை யுருபுகளு முற்றுக்களும் பெயரெச்சங்களும் வினை யெச்சங்களுங்கொண்டு முடியும்பெயர்க்கும்வினைக்குமிடையே பிறசொற்கள் வருதலுமா மாண்டைக்குப் பொருந்துவன. எ-று. *பிறவெனப்பன்மை கூறினாரேனும். "ஒருமொழி யொழிதன் னினங்கொளற்குரித்தே.,,என்பதனானொருசொல்வருதலுங்கொள் க.உம்மை உருபுமுற்றீரெச்சங்களுமவைகொள்ளும்பெயர்வினை யுமாத்திரையாய் நிற்றலேயன்றி யெனவிறந்ததுதழீஇ நின்றது. [வ-று.]சாத்தன்வயிறாரவுண்டான்-அறத்தையழகுபெருகச்செய் தான்-வாளான் மருவாராமாயவெட்டினான் [இதனுண்மாயவென் பதொன்றும்இ டைவந்தது.மருவாரையென்பதற்றன்று இவ்விரு

ண்டனுருபும் வாளாலென்னு மூன்றனுருபுமடுக்காய்நிற்றலின்.] -தேவர்க்குச்செல்வம் வேண்டிச் சிறப்பெடுத்தான் - மலையினின் றுருண்டுவீழ்ந்தான் - சாத்தனைதித்தடக்கையானை -ஊர்க்கணுயர்ந்த வெளிமாடம்,-சாத்தாவிரைந்தோடிவா-எ-ம்-வந்தானவ்வூருக்குப்போனசாத்தன்-வந்தவவ்வூர்ச்சாத்தன்- வந்துசாத்தனிற்றைநாளவனூர்க்குப்போயினான்-எ-ம்-வரும். குறிப்புவினைமுதலிய பிறவுமன்ன. "கருதலர்ச்சிதியகடுங்கொல் யானை.,,என்புழிச் சிதியவென்னும் பெயரெச்சத்திற்கும் அதுகொண்டயானையென்னும் பெயர்க்கும் இடையேகொல்லென்னும் வினைத்தொகைச்சொல் இடைப்பிறவரலாய் வந்ததன்று வினைத்தொகை காலங்காந்த பெயரெச்சமாதலாற் பெயரெச்சவினையிரண்டடுக்கி யானையென்னு மொருபெயர் கொண்டனவாமென்க. இவ்வாறேயடுக்காய் வந்தனவும் இடைப்பிறவந்தனவும்உய்த்துணர்ந்துகொள்க. இனி ஏற்பனவென்றமையான்"வல்லமெறிந்தநல்லிளங்கோசர்தந்தை-மல்லல் யானைப்பெருவழுதி.,,என்புழி வல்லமெறிதல் பெருவழுதிமேற்றே யெனின் நல்லிளங்கோசர் தந்தையென்பதனையிடைநிறுவினேலாதாம்வல்லமெறிதனல்லிளங்கோசர்மேற்றாகப்பொருள்படுமாதலினென்க. (௫)

௬௱௫௰எ. எச்சப்பெயர்வினை யெய்துமீற்றினும். ※

(எ-ன்) இதுவுமது. (ப-ரை.) எச்சம்- உருபுகளுமுற்றுகளும் பெயரெச்சங்களும் வினையெச்சங்களுங் கொண்டு முடியுமெச்சமாகிய, பெயர்வினை- பெயரும்வினையும், ஈற்றினும் - அவற்றினீற்றிலும், எய்தும்- வரும்-எ-று. (பொ-ரை.) உருபுகளுமுற்றுக்களும் பெயரெச்சங்களும்வினையெச்சங்களுங்கொண்டு முடியுமெச்சமாகியபெயரும்வினையும்அவற்றிற்றீற்றினும்வரும். எ-று.
※ ஈற்றினுமென்னு மும்மையான் முதலினும் வருதல்கொள்க. [வ-று] சாத்தன்வந்தான்-மரத்தைக்குறைத்தான் - சாத்தனால்வந்தான்-சாத்தற்குக்கொடுத்தான் - சாத்தனினீங்கினான்- சாத்தனதாடை-சாத்தன்கட்சென்றான் - சாத்தாவா- எ-ம்- வந்தான்சாத்தன்-வந்தசாத்தன்- வந்துபோயினான்- எ-ம்- இறுதிக்கண்வந்தன-வந்தான்சாத்தன்- குறைத்தான்மரத்தை-வந்தான்சாத்தனால்-கொடுத்தான்சாத்தற்கு நீங்கினான்சாத்தனின் - சென்றான்சாத்தன்கண்-வாசாத்தா- எ-ம்- சாத்தன்வந்தான்- போயினான்வந்து- எ-ம்- முதற்கண்வந்தன- எய்துமீற்றினென்றற்போல முதற்கண்வருதலை யெடுத்தோதாது உம்மையாற்றழீஇக்கொண்டார்ஆறனுருபினெச்சமும் எழனுருபினெச்சப் பெயரும் பெயரெச்சத்தினெச்சமும் ஏனையவரினு மிறுதிக்கண் வருமுமுதற்கண்வாராவென்பதுஉம்

தல்போற் சிறப்பினவல்ல வென்பதூஉந் தோன்றுதற்கென்க. எழுவாயுருப் வினைமுற்றுப்பயனிலையைஇறுதிக்கட்கொண்டதூஉம் வினைமுற்றுப் பெயர்ப்பயனிலையை முதற்கட்கொண்டதூஉம் சாத்தன்வந்தான்எனவரும். தம்முள்வேற்றுமை யாதோவெனின், கேட்போர்க்குச் சாத்தனிதுசெய்தானென வினையையுணர்த்துவதூஉம் இதுசெய்தான் சாத்தனென வினைமுதலை யுணர்த்துவதூஉமாமென்க. வந்தான்சாத்தனெனவருவனவுமன்ன. (௬)

௩௱௫௰௮. ஒருமொழியொழிதன் னினங்கொளற்குரித்தே. *

(எ-ன்) நால்வகைச்சொற்குமாவதோ ரிலக்கண முணர்-ற்று. மொழியெனப்பொதுப்படக்கூறினமையின் நால்வகைச்சொற்குமென்பது பெற்றாம். (ப-ரை.) ஒருமொழி- பெயர்வினையிடையுரிகளுள் ஒருசொல், ஒழி- ஒழிந்துநின்ற, தன்-தன்னுடைய, இனம்- இனங்களை, கொளற்கு- கொண்டுமுடிதற்கு, உரித்து- உரித்தாகும். எ-று. (பொ-ரை.) பெயர்வினையிடையுரி யென்னு நால்வகைச்சொற்களு ளொவ்வொன்றெஞ்சிநின்ற தன்றனினங்களைக் கொள்ளுதற்குரித்தாம். எ-று. ❀ [வ-று] சோற்றைநனியுண்டானென்றவழிக் கறியைநனிதின்றானென்றற்றொடக்கத்தனவும் பாக்கைநனிதின்றானென்றவழி வெற்றிலையை நனிதின்றான் சுண்ணம்பை நனிதின்றானென்பனவும் நஞ்சுண்டான்சாவானென்றவழி நஞ்சுண்டாள்சாவாள் நஞ்சுண்டது சாமென்பனவும்பார்ப்பான் கள்ளுண்ணானென்றவழிப் பார்ப்பனி கள்ளுண்ணா ளென்பனவுங் கூறாதேயமைந்துகிடத்தலின் இனங்களாயெஞ்சிநின்றன. இவற்றுட்சோற்றையென்னும் பெயர்ச்சொல்லும்உருபிடைச்சொல்லுங் கறியையென்னும் பெயர்ச்சொல்லையும்உருபிடைச்சொல்லையும் நனியுண்டானென்னுமுரிச்சொல்லும்வினைச்சொல்லும்நனிதின்றானென்னு முரிச்சொல்லையும் வினைச்சொல்லையுங் கொள்ளுதற்குரியவாய்நிற்றல்காண்க. பிறவுமன்ன (௭)

௩௱௫௰௯. பொதுப்பெயர்வினைகளின் பொதுமைநீக்கு -மேல்வருஞ்சிறப்புப் பெயர்வினைதாமே. *

(எ-ன்.) பெயர்வினைகட்காவதோரிலக்கணமுணர்-ற்று. (ப-ரை) பொது- திணைபாலிடங்காலங்களுக்குப்பொதுவாகிய, பெயர்வினைகளின்- பெயர்வினைகளுடைய, பொதுமை- பொதுத்தன்மையை, நீக்கும்- நீக்கியொன்றற்குரிமைசெய்யும், மேல்-மேமேல-வரும், வருகிற- சிறப்புப்பெயர்வினை - சிறப்பாகியபெயர்வினைகள், தாமே- தாமே எ-று. (பொ-ரை.) திணைபாலிடங் காலங்கட்குப் பொதுவாகியபெயர்வினைகளினுடையபொதுத்தன்மையினை நீக்கியொன்றற்குரிமைசெய்புமேல்வருஞ் சிறப்புப்பெயர்வினைகடாமே. எ-று. ❀ ஒன்றற்கிருமருங்கினையுமேலென்பவாகலிற்சி

றப்புப் பெயர்வினையாண்டுவரினுங்கொள்க.தாமேயென்னும்பி
ரிநிலையேகாரங்குறிப்பினானுற்றுணர்ந் திடர்ப்பட வேண்டாவெ
ன்னும்பொருடந்து நின்றது.[வ-று.]சாத்தனிவன்-சாத்தனிது-
எம்-சாத்தன்வந்தான்-சாத்தன்வந்தது-எம்-பெயர்த்திணைப்பொ
துமையினைச்சிறப்புப்பெயரும்வினையும்வந்துநீக்கின.ஒருவரொ
ன்னையர்- ஒருவரொன்றுயர்-எ-ம்-மரம்வளர்ந்தது -மரம்வளர்ந்த
ன-எ-ம்- பெயர்ப்பாற் பொதுமையினைச் சிறப்புப்பெயரும்வி
னையும்வந்துநீக்கின. அவரெல்லாமிருந்தார்- யாமெல்லாம்வருவா
ம்- நீவிரெல்லாம்போமின் எனப்பெயரிடப் பொதுமையினைச்
சிறப்புப்பெயரும் வினையும்வந்துநீக்கின. வாழ்க-அவன்-அவள்-
அவர்- அது- அவை- யான்- யாம்- நீ- நீர்- எ-ம்- உண்டுவந்தான்-
வந்தாள்- வந்தார்- வந்தது- வந்தன- வந்தேன்- வந்தேம் - வந்தா
ய்-வந்தீர்- வருகின்றான்- வருவான்-எ-ம்-வினைத்திணைபாலிடங்கா
லப் பொதுமையினைச் சிறப்புப்பெயரும் வினையும் வந்துநீக்கி
ன. பிறவுமன்ன. உண்டெனபதிறந்த காலவினை யெச்சமாயினு
முக்காலவினைகளையுங்கொண்டுமுடி.தற்குரிய பொதுமையினையு
டைத்தாதலினதனைமேல்வருஞ்சிறப்புவினை நீக்கின. (அ)

௩௬௭. பெயர்வினையும்மைசொற் பிரிப்பெனவொழியிசை
யெதிர்மறை யிசையெனுஞ் சொல்லொழி யொன்பதுங்- குறி
ப்புந் தத்த மெச்சங் கொள்ளும். *

(எ-ன்.) நால்வகைச்சொற்கு மாவதோரிலக்கண முணர்த்தும்
வழிச்சிலவற்றிற்கெய்தியதன்மேற் சிறப்புவிதியுஞ்சிலவற்றிற்கெ
ய்தாததெய்துவித்தலுமுணர் - ற்று. (ப - ரை) பெயர்ச் (சொல்
லொழிபு) - பெயரெச்சமும், வினைச் (சொல்லொழிபு) - வினை
யெச்சமும்,உம்மைச்(சொல்லொழிபு)-உம்மையெச்சமும்,சொ
ற்(சொல்லொழிபு)சொல்லெச்சமும்,பிரிப்புச்(சொல்லொழிபு)
பிரிநிலையெச்சமும், எனச் (சொல்லொழிபு) - என்வெச்சமும்,
ஒழியிசைச் (சொல்லொழிபு) - ஒழியிசையெச்சமும், எதிர்ம
றைச் (சொல்லொழிபு)- எதிர்மறையெச்சமும், இசைச் (சொல்
லொழிபு)-இசையெச்சமும்,என்னும்- என்கிற,சொல்லொழிபு-
சொல்லெச்சங்கள், ஒன்பதும்-ஒன்பதும், குறிப்(பொழி) பும்-
குறிப்பெச்சமும், தத்தம்-தம்முடையதம்முடைய,எச்சம்-எச்ச
ங்களை,கொள்ளும்-கொண்டுமுடியும். எ-று. (பொ-ரை)பெயரெ
ச்சமும் வினையெச்சமும் உம்மையெச்சமுஞ் சொல்லெச்சமும்
பிரிநிலையெச்சமு மெனவெச்சமு மொழியிசையெச்சமு மெதிர்
மறையெச்சமு மிசையெச்சமுமாகிய சொல்லெச்ச மொன்ப
துங் குறிப்பெச்சமொன்றுந் தத்தமெச்சங்களைக் கொள்ளும்—
எ-று. * சொல்லொழிபென்பதனை முற்கூறிய வொன்பதனோ

[illegible]

டும்அதனுளொழிபென்பதனைப் பிற்கூறிய குறிப்பினோடுங்கூட்டுக. குறிப்புச்சொல்லொழிபெனக்கூட்டியுரைத்தாலென்னையெனின் அதுபின்னர்க்கூறுதும். எனவேயெச்சங்கள் சொல்லெச்சங் குறிப்பெச்சமென விருவகையவென்பதூஉம்சொல்லெச்சமொன்பதெனத்தொகைகூறினார் வகையுளொன்றனையுஞ்சொல்லெச்சமென்றமையான் அவ்வகையுளொன்றாகிய சொல்லெச்சமென்பது சொல்விகற்பங்களின்றிச்சொல்லென்னுஞ் சொல்லெஞ்சி நிற்பதென்பதூஉம்பெற்றாம். "சொல்லெனெச்ச முன்னும்பின்னுஞ்-சொல்லளவல்லதெஞ்சுதலின்றே.,, என்றாராசிரியர் தொல்காப்பியனாரென்க. இவ்வாசிரியவசனத்திற்குஇப்பொருளன்றிவேறுபொருள்கூறுவாருமுளர். அதுநிற்க. [வ-று.] செய்தசாத்தன்-செய்கின்றசாத்தன்-செய்யுஞ்சாத்தன்-எ-ம்-நல்லசாத்தன்-எ-ம்-பெயரெச்சங்கடம்மெச்சமாகிய செய்பவனது பெயர்கொண்டன. எனைக்கருவிமுதலைந்தோடுமொட்டுக.* வினைத்தொகைகளும் பெயரெச்சமாயடங்குதலின் அவையுமுற்றெச்சங்களுமன்ன. செய்துவந்தான்-செய்துநல்லனாயினான்- செய்துநல்லன்- செய்துவருதல்-எ-ம்- விருந்தின்றியுண்டபகல்-எ-ம்- வினையெச்சங்கடம்மெச்சமாகிய வினைவினைக்குறிப்புந்தொழிற்பெயருங்கொண்டன. காட்டாதொழிந்தவினையெச்சங்களு முற்றெச்சங்களுமன்ன. இவ்வெச்சத்திற்குமுடிபாகிய வினைக்குறிப்பாக்கமோடுவருதலும்அதுதொகவருதலும்ஆக்கவினைக்குறிப்பென்னுஞ்சூத்திரத்துளமைத்துகிடந்தன. சாத்தனும்வந்தான் -என்னுமும்மையெச்சமுன்னர்க்கொற்றன்வந்தானெனத்தன்னெச்சங்கொண்டது. "பிடியென்னுங் காரணத்தின் மேன்முறைக்கண்மேனை - கடியென்றார்கற்றறிந்தார்.,, "இசையா வொருபொரு ளில்லென்றல் யார்க்கும்-வசையன்று,, என்பனசொல்லெச்சம். கடியென்று சொன்னார்-இல்லென்றுசொல்லுதல் எனச்சொல்லென்னுந் தம்மெச்சங்கொண்டன. இவைபெயரெச்சம் வினையெச்சமென்றாற்போலச்சொல்லென்னு மெச்சத்தையுடைய் விடைச்சொல்லைச்சொல்லெச்சமென்றலின் ஆகுபெயர். மேல்வருமெனவெனெச்சமொழிந்தனவுமன்ன. சாத்தனேகொண்டான்- சாத்தனோகொண்டான் என்பனபிரிநிலையெச்சம். இவைபிறர்கொண்டிலரெனத் தம்மெச்சங்கொண்டன. கோடற்றொழிலாற் சாத்தனினின்றும்பிரிக்கப்பட்டார் பிறராதலிற் பிரிநிலையென்க. கடலொல்லென வொலித்தது- நரம்புவிண்ணெனவிசைத்தது- தலையிடியென விடித்தது என்பனஎனவெச்சம். இவைதம்மெச்சமாகிய வினைகொண்டன. மிகவுமொலித்ததுமிகவுமிசைத்துமிகவுமிடித்தது'என்பனவிளக்கிற்குப்பொருளாமாதலின் இவ்வெனவெச்ச மிகுதிப்பொரு

* [illegible]
[illegible]

டருவதோ ரிடைச்சொல்லாமென்க. "தெய்வந்தொழாஅள் கொழுநற் றொழுதெழுவாள் - பெய்யெனப்பெய்யுமழை,, என்பதனுளெனவென்பது பெய்யெனச் சொல்லவென வினைப்பொருடருதலின் இடைச்சொல் லடியாகப்பிறந்தசெயவெனெச்சமாய் முன்னர்ப்போந்தவினையெச்சத்துளடங்குமென்க. கூரியதோர் வாண்மன்-வருந்திலலம்ம-கொளலோ கொண்டான் என்பனவொழியிசையெச்சம். இவைமுறையே கோடிற்று - வந்தாலின்னது செய்வல்-கொண்டுய்யப்போயினனல்லன் எனத்தம்மெச்சங்கொண்டன. வரலுமுரியன்-யானேசெய்தேன் என்பனவெதிர்மறையெச்சம். இவைமுறையானே வாராமைக்குமுரியன்-யான்செய்கிலன் எனத்தம்மெச்சங்கொண்டன. இதுகாறும் வினையியலினொழிபாகிய பெயரெச்சவினையெச்சமுடிபும் இடையியலினொழிபாகியவேனையறுவகையெச்சமுடிபுமெடுத்துவிதந்தார். இவ்வாறெடுத்துவிதத்தற்கு வரையறைப்படாதுவருஞ் சொல்லெச்சங்களையெல்லாந் தொகுத்திசையெச்சமென விறுதிக்கட்கூறினார். இசையென்பது சொல். இசையெச்சமெனப் பொதுப்படக்கூறினமையி னிவ்வெச்சமு மிதுகொள்வதும் பெயர்வினையிடையுரியென்னு நால்வகைச் சொல்லு ளொன்றும் பலவுந் தனித்துந் தொடர்ந்தும்வருமென்பதூஉம்பெற்றாம். அவற்றுட்சிலவிசையெச்சங்கள்வருமாறு. "இணரெரிதோய்வன்ன வின்னாசெயினும் - புணரின்வெகுளாமைநன்று,, என்புழிப்பிறவுயிர்க்கின்னாசெயினைவையிழையாது தமக்குவருதல்கருதித் தம்மாட்டன்பும் பிறவுயிர்கண்மாட்டருளு மின்னாசெய்தலான் மேன்மேல்வளரும் பிறப்பிறப்பினச்சமு நம்மாலின்னா செயப்பட்டாரை நாமடைந்திரத்தல் கூடினுங்கூடுமதனால் யார்மாட்டு மின்னாசெய்யக்கடவமல்லமென்னும்வருங்காலவுணர்ச்சியு மிலராயொருவர் தன்னாலாற்றல் கூடாதவின்னாதனவற்றைத்தன்கட்செய்தாராயினு மவர்தமக்கு வேண்டுவதோர்குறை முடித்தல்கருதி நாணுதன்னை யடைந்தாராயி னவர்செய்தவின்னாமைகருதி யவரை வெகுளாதவற்றை மறந்தவர்வேண்டுங்குறைமுடித்துமுன்செய்தவின்னாமையாலவர்கூசியொழுகுதறவிர்தற்குக்காரணமாகியமெய்ப்பாடுமுதலியன்றன்கட்டோன்றிப்பின்றிகழ வவர்க்கினியனாகியிருத்த றன்சால்புக்குநன்று என நால்வகைச்சொற்களுள் வேண்டுவனவெல்லாந் தந்தகலங்கூறவேண்டி நிற்பனவிசையெச்சமாமென்க. பிறவுமன்ன. இனிக்குறிப்பெச்சங்களாவனவொன்றொழிபொதுச்சொன் முதலியகுறிப்புச்சொற்களாங்குறிப்பானுணரப்படுவனமுறைப்பெயெஞ்சுநிற்றலின். அவை யவ்வெச்சங்கொள்ளுமாறு பெரு

ந்தேவிபொறையுயிர்த்தகட்டிற்கீழ் நால்வர்மக்களுளர் என்புழி மக்களென்னும் பொதுப்பெயர் பெண்மக்களெனப் பெண்ணென்னுஞ் சிறப்புப்பெயர்கொண்டது. "குறுத்தாட்பூதம்." என்புழித்தகரவல்லொற்றதற்கினமாகியமெல்லொற்றையும். "மணையிதழ்புணையும்" என்புழி மணையென்பது தாவென்னு முதலெழுத்தையுங்கொண்டன. வாய்பூசிவருதும் என்பதெச்சில்கழித்துவருதுமென்பதுகொண்டது. புளித்தின்றான் என்பது பழமாகிய புளியெனப் பழமென்பதுகொண்டது. பொற்றொடிஎன்பது பொற்றொடியையுடையாளென விரண்டாமுருபு மதன் பயனிலையுங்கொண்டது. நல்லனிவன் என்பது பெயர்ப்பொருள்கொள்ளாது வினைக்குறிப்புப்பொருளோடு நல்லனாயினானிவனென ஆக்கங்கொண்டது. "அறத்தாறிதுவென வெள்ளைக்கிளிபு." என்பது "அறத்தாறிதுவென வேண்டாசிவிகை - பொறுத்தானோ டூர்ந்தானிடை." என்பதுகொண்டது. "அலங்குளைப் புரவியைவரொடுசினைஇ என்பது தருமன் வீமனருச்சுனன்நகுலன்சகாதேவனென்பனகொண்டது. "பீலிபெய்சாகாடுமச்சிறுமப்பண்டஞ்- சாலமிகுத்துப்பெயின்." என்பதூஉம் உண்ணாநின்றான் கற்கறித்துழியட்டோன் முகநோக்கிநன் கட்டாயென்பதூஉம் மெலியராயினும் பலர்தொகின் வலியரையும்வெல்வரென்பதனையும் நன்கட்டாயல்லையென்பதனையுமுறையேகொண்டன. பிறவுமன்ன. இவையொன்றொழி பொதுச்சொன் முதலிய குறிப்பெச்சங்க டம்மெச்சங் கொண்டன. இதனைக் குறிப்புச் சொல்லெச்சமென்னாது குறிப்பெச்சமென்றார். சொல்லேயன்றிப்பொருண்மாத்திரையு மெழுத்து மெஞ்சவருவனவுமுளவாதலினென்க. இப்பத்தெச்சங்கட்கும் வேறுபொருள் கூறுவாருமுளர். அவையெல்லா மிசையெச்சமாயுங் குறிப்பெச்சமாயு மடங்குமாதலானும் பெயரெச்ச வினையெச்சமுதலியவற்றிற் காங்காங்கு முடிபுகூறாராயினா ரீண்டெச்சங்களையெல்லாந் தொகுத்துக்கூறும்வழிமுடிபுகூறாராயிற் குன்றக்கூறலென்னுங் குற்றமாமாதலானு மதுபொருந்தாதென்க. (௯)

௩௬௧. பெயரொடுபெயரும் வினையும்வேற்றுமை - முதலிய பொருளி னவற்றினுருபிடை-யொழியவிரண்டு முதலாத்தொடர்ந்தொரு-மொழிபோனடப்பன தொகைநிலைத்தொடர்சொல்.

(எ-ன்.) பெயர்க்கும் வினைக்குமாவதோர் விதியுணர் - ற்று.

(ப-ரை.) பெயரொடு- பெயர்ச்சொல்லோடு, பெயரும்-பெயர்ச்சொல்லும், (பெயரொடு) - பெயர்ச்சொல்லோடு, வினையும்-வினைச்சொல்லும், வேற்றுமைமுதலிய- பின்சொல்லப்படும் வேற்றுமைமுதலாகிய, பொருளின்- அறுவகைப் பொருட்புணர்ச்

சிக்கண், அவற்றின் - அவற்றினுடைய, உருபு - உருபுகள், இடை - நடுவிலே, ஒழிய - தொக்குநிற்ப, இரண்டுமுதலா - இரண்டுசொற்கள்முதலாக, தொடர்ந்து - பலசொற்கள்தொடர்ந்து, ஒருமொழிபோல் - ஒருசொற்போல, நடப்பன - நடப்பவை, தொகைநிலைத்தொடர்சொல் - தொகைநிலைத் தொடர்சொற்களாம். எ-று.—

(பொ-ரை.) பெயர்ச்சொல்லோடு பெயர்ச்சொல்லும் பெயர்ச்சொல்லோடு வினைச்சொல்லும் வேற்றுமைவினைபண்பெனப்பின்னர்வகுத்துக்கூறு மறுவகைப்பொருட் புணர்ச்சிக்கணவற்றினுருபுகளிடையேதொக்கு நிற்பவிரண்டுமுதலிய பலசொற்கடொடர்ந்தொருமொழிபோ னடப்பன யாவை யவைதொகைநிலைத்தொடர் சொற்களாம். எ-று. ❁ தொகை யென்னும் பலபொரு ளொருசொலீண்டுருபு மறைதலை யுணர்த்திநின்றது "ஐயுங் கண்ணு மல்லாப் பொருள்வயின் - மெய்யுருபு தொகாவிறுதி யான." என்பவாகலின் வினையொடு வினைதொகைநிலைத்தொடராகாமையின் அதனையொழித்தும் நிலத்தைக்கடந்தான் நிலங்கடந்தான் எனவுருபிடை விரியிற்பிளவுபட்டுந் தொக்கதேற் பிளவுபடாதுந் தொடருமாதலின் ஒருமொழி போலென்றுங் கூறினார். ஒருமொழிபோனடத்தலாவது கொல்யானைவந்தது - நிலங்கடந்தான்சாத்தன்என இரண்டுமுதலியபலசொற்றொடர்ந்தொருபெயராயும் வினையாயுநின்று தம்முடிபேற்றலெனப் பொருள்கூறின், அவ்வாறு தொகாநிலைத் தொடருங்கொன்றயானைவந்தது - நிலத்தைக்கடந்தான்சாத்தன் என நடக்குமாதலின் அது பொருந்தாதென்க. (௰)

௩௬௨. வேற்றுமை வினைபண் புவமையும்மை - யன்மொழி
யெனவத் தொகையா றாகும். *

(எ-ன்.) மேல்வேற்றுமை முதலியவென்றார்அவை யிவையென்பதுணர்-ற்று. (ப-ரை.) வேற்றுமைத்(தொகை) - வேற்றுமைத்தொகையும், வினைத்(தொகை) - வினைத்தொகையும், பண்புத்(தொகை) - பண்புத்தொகையும், உவமைத் (தொகை) - உவமைத்தொகையும், உம்மைத் (தொகை) - உம்மைத்தொகையும், அன்மொழித் (தொகை) - அன்மொழித்தொகையும், என - என்று, அத்தொகை - முன்னேசொல்லப்பட்ட தொகைநிலைத்தொடர்மொழிகள், ஆறாகும் - ஆறுவகைப்படும். எ-று. (பொ-ரை.) வேற்றுமைத்தொகையும்வினைத்தொகையும்பண்புத்தொகையும் உவமைத்தொகையும்உம்மைத்தொகையும் அன்மொழித்தொகையுமென மேற்கூறியதொகைநிலைத்தொடர்சொல்அறுவகைப்படும். எ-று. (௰௧)

௩௬௩. இரண்டுமுதலா விடையா றுருபும் - வெளிப்படலில்லது வேற்றுமைத்தொகையே. *

(எ-ன்.) நிறுத்தமுறையானே வேற்றுமைத் தொகையாமாறுணர்-ற்று. (ப-ரை.) இடை-எழுவாய்க்கும் விளிக்குமிடையேநிற்கிற, இரண்டு-இரண்டாவது, முதலாம்-முதலாயிருக்கின்ற, ஆறுருபும்-ஆறுவேற்றுமையுருபுகளும், வெளிப்படலில்லது - தொக்கதொடர்மொழிகள், வேற்றுமைத்தொகை-வேற்றுமைத்தொகைகளாம். எ-று. (பொ-ரை.) எழுவாய்க்கும் விளிக்குமிடையே நின்ற இரண்டாவது முதலியஆறு வேற்றுமையுருபுந் தொக்கதொடர்சொற்கள் வேற்றுமைத் தொகைகளாம். எ-று. ❁ வேற்றுமைப்பொருட் புணர்ச்சிக்கட்பெயரொடு பெயரும்வினையுங்கூடியகூட்டத்தை வேற்றுமைத்தொகையென்றதன்றென்பார் ஆறுருபும் வெளிப்படலில்லதென்றார். எனைத்தொகைகளுமன்ன. [வ-று.] நிலங்கடந்தான்- தலைவணங்கினான் - சாத்தன்மகன்- ஊர்நீங்கினான்- சாத்தன்கை- குன்றக்கூகை -யானைக்கோட்டுநுனிகுறைத்தான்- என ஆறுருபுமிடையே தொக்கவாறுகாண்க. இடையே தொக்கதனைத் தொகைநிலைத் தொடரென்றமையானே கடந்தானிலம்- இருந்தான்குன்றத்து- என இறுதிக்கட்டொக்குப்பிளவுபட்டுநின்றன தொகைநிலைத் தொடராகாவோ வெனின், நிலங்கடந்தான் - குன்றத்திருந்தான் - என்பனவற்றை ஒரோவழிமாறிக் கூறுதலிற் பிளவுபட்டுநின்றனவன்றி அவையும்இடைக்கட்டொக்க தொகைநிலைத் தொடரேயாமென்க. இனியாறுருபுமென்னு முற்றும்மையை யெச்சவும்மையாக்கிப் பொற்குடம் என ஒரோவழியுருபும் பொருளுமுடன்றொக்கதூஉம் வேற்றுமைத்தொகையெனக்கொள்க. அதுவிரிவுழிப்பொன்னாற்செய்த குடமெனவிரியும். பிறவுமன்ன. (௰௨)

௩௬௪. காலங்கரந்த பெயரெச்சம் வினைத்தொகை. ❋

(எ-ன்.) வினைத்தொகையாமாறுணர்-ற்று. (ப-ரை.) காலம்-காலம்பற்றிப் புடைபெயர்கிற வினையுருபுகள், கரந்த - தொக்க, பெயரெச்சம்- பெயரெச்சவினைகள், வினைத்தொகை-வினைத்தொகைகளாம். எ-று. (பொ-ரை.) காலம்பற்றிப் புடைபெயர் வினையுருபாகிய தம்மிறுதிகடொக்குநிற்பச் செய்வதாதி யறுபொருட்பெயராகிய தம்மெச்சங்கொண்ட பெயரெச்சங்கள்வினைத்தொகைகளாம். எ-று. ❁ காலமென்றதாகுபெயர். முதனிலைவினையுருபு தொகாதுநிற்பப் புடைபெயர்ச்சி வினையுருபுதொக்கனவற்றை வினைத்தொகை யெனப்படுமென்பார் காலங்கரந்தவென ஆகுபெயராற் கூறினார். புடைபெயர்ச்சிவினைகளைமுதனிலையொழிந்தவிறுதிகள் காலங்காட்டிநிற்றலின் அவ்வினைகட்கவையுருபாயின. [வ-று.] நெருநலடுகளிறு-இன்றடுகளிறு-நாளையடுகளிறு-வெல்களம்- தொழில்- பொழுது-கருத்து-எனவரும். இ

வைவிரிவுழி-நெருநலட்டகளிறு-இன்றடாநின்றகளிறு-நாளையடுங்களிறு-எனவிரியும். இவைமுறையே யிறந்தகால வினைத்தொகைநிகழ்காலவினைத்தொகை யெதிர்காலவினைத்தொகை யெனப்படும். இஃதொவ்வொருகாலத்தையேபற்றாது முக்காலமும்பற்றி நெருநலுமட்டகளிறு-இன்றுமடாநின்றகளிறு-நாளையுமடுங்களிறு-எனவிரியவரின் முக்காலவினைத்தொகையெனப்படும். இங்ஙனங்காலவிகற்பம்பற்றிப்புடைபெயர்வினைகருதாது-அரிவாள் ஆவுரிஞ்சுதறி-என்றாற்போல அடுகளிறென்பது இத்தொழிற்குரியதிஃதென்னும் பொருள்படவருமாயின் வினைத்தொகைக்குறிப்பெனப்படுமென்க. இவ்வாறேயேனை வினைத்தொகைகளையெல்லாமுய்த்துணர்ந்துகொள்க. இதற்குவருமொழி பெயராதலினித்தொகை நிலையாயேதொடரு மிரண்டிறந்தமொழிகளிலவென்க-அட்டதுகளிறு-அடாநின்றதுகளிறு-அடுவதுகளிறு-எனமூற்றுக்களிறுதிதொகுதலின் அடுகளிறெனவினைத்தொகையாயிற்றெனின், அடுகளிறிது-அடுகளிறுவந்தது-எனப்பின்னுமோர்பெயர்வினைகளையேற்றலின் அவையன்றெனவும் அடுவென்னுமுதனிலைவினையாகிய காரணத்தின்கண் முக்காலவினையாகிய காரியங்க டொக்குநிற்றலின் அடுகளிறென வினைத்தொகை யாயிற்றெனிற்காரணத்தின்கட் காரியந்தொக்குநிற்றற்குக்களிறென்னுமுடிக்குஞ்சொல்வேண்டாமையின் அஃதொருமொழியிலக்கணமன்றி இங்ஙனமதிகரித்த தொடர்மொழி யிலக்கணமன்மையின் அஃதன்றெனவும்விலக்கிப்பெயரொச்சத்திறுதிதொக்கது வினைத்தொகையென்றார். (௰௫)

௩௬௫. பண்பைவிளக்கு மொழிதொக்கனவு - மொருபொருட்கிருபெயர் வந்தவுங் குணத்தொகை.

(எ-ன்.) பண்புத்தொகையாமாறுணர்-ற்று. (ப-ரை.) பண்பை-குணத்தோடு குணிக்குண்டாகிய ஒற்றுமை நயத்தை, விளக்கும்-விளக்குகிற, மொழி - ஆகியவென்னும் பண்புருபு, தொக்கனவும்- தொக்குநின்றவையும், ஒருபொருட்கு- ஒருபொருளுக்கு, இருபெயர்- பொதுப்பெயருஞ் சிறப்புப்பெயருமாகிய இருபெயர்கள், வந்தவும்- வந்தவையும், குணத்தொகை - பண்புத்தொகைகளாம் எ-று. (பொ-ரை.) குணப்பெயரோடு குணிப்பெயர்புணருங்கால் அக்குணியோடு குணத்துக்குண்டாகியவொற்றுமைநயத்தை விளக்குதற்காண்டுவரும் ஆகியவென்னுமொழியாகிய பண்புருபுதொக்குநிற்பனவும் அப்பண்புருபுதொக்குநிற்பப்பொதுப்பெயருஞ் சிறப்புப்பெயருமா யொருபொருட்கிருபெயர்வந்தனவுமாகிய இவ்விரண்டும் பண்புத்தொகைகளாம்.

எ-று. ❋ குணத்தொகையென்றமையான் ஒருபொருட்கிருபெ யர்வந்தனவற்றின்கண்ணும் பண்புருபு தொகுமென்பதுபெற் ரும். [வ-று.] செந்தாமரை-கருங்குவளை-வட்டக்கடல்-சதுரப்ப லகை- ஒருபொருள்- இருபொருள்- தீங்கனி- துவர்க்காய்-எ-ம்- ஆயன்சாத்தன் - வேழக்கரும்பு- அகரமுதல-சகரக்கிளவி-எ-ம்- செந்நிறக்குவளை-கரும்புருவச்சிலை-எ-ம்-வரும். இவைவிரியுழிச் செம்மையாகிய தாமரை-ஆயனாகியசாத்தன்-செம்மையாகிய நி றமாகியகுவளை எனவிரியும். இவ்வாகியவென்னுமுருபின்கண் ஆ க்கவினையின்மையினிலக்கணையாற்செய்தவென்னும்வாய்பாட்டி ன்பாற்படுவதோர் வினையிடைச்சொல். ஆயனென்னும்பொது ப்பெயர் சாத்தனென்னுஞ்சிறப்புப்பெயரைவிசேடித்தும்வே ழமென்னுஞ் சிறப்புப்பெயர் கரும்பென்னும் பொதுப்பெய ரை விசேடித்தும்வந்தன. பிறவுமன்ன. முற்றெச்சமாகிய கால த்து முற்றுப்பொருளையொழித் தெச்சப்பொருளை புணர்த்தி நின்றாற்போல ஆயன்வேழமென்றற்றொடக்கத்து நிலைமொழிக ள்பண்பிச்சொல்லாயினும் அப்பண்பிகளையொழித்துப் பொது ப்பண்பினையுஞ் சிறப்புப்பண்பினையுமுணர்த்தி வருமொழிக்க டையாய்நிற்றலின் அவையும்பண்புத்தொகையாயின. ஆகியவெ ன்பதன்று பண்பைவிளக்குமொழியென்பது மைவிகுதியென் ருலென்னையெனின், ஓர்மொழிக்குஉறுப்பாகியவிகுதியைமொ ழியென்றல் கூடாமையானும் வட்டஞ் சதுரமுதலிய பண்பிற் கவ்விகுதியின்மையானும் வட்டக்கடலென்புழிமகரவீறுகெட்டு ப்புணர்ந்தாற்போல மையீறுகெட்டுப்புணர்ந்ததென்பது ஈறு போதலென்னுஞ் சூத்திரத்தாற் பெறுதலானுமஃதன்றென்க. செய்யதாமரையென்னுமெச்சவிறுதிதொக்கதித்தொகையென் பாருஞ் செய்யுதாமரையென்னு முற்றிறுதிதொக்க தித்தொ கையென்பாருமுளர். இவைஞ்மொழியன்மையானும் வட்டக்க டன்முதலிய பண்புத்தொகைக்கவ்வெச்சவிறுதிவிரித்தல்கூடா மையானுமவ்வெச்சவிறுதிதொக்கதேல்அதனைவினைத்தொகை க்குறிப்பென்றல்கூடுமன்றிப் பண்புத்தொகையென்றல் கூடா மையானுமுற்றிறுதிதொக்கதேற் பண்புத்தொகையென்றல்கூ டாமையேயன்றிச்செந்தாமரையிது செந்தாமரைவிரிந்ததென மேற்பெயர்வினையேற்றல் கூடாமையானும் அது பொருந்தா தென்க. இனிக் குணியோடு குணத்துக்குண்டாகியவேற்றுமை நயங்கருதாது ஒருபொருளைக்குணகுணியாகப்பிரித் தவ்வேற்று மைநயங்கருதிச் செம்மையையுடையதாமரையெனவிரிக்கின்இ ரண்டாம் வேற்றுமையுருபும் பொருளுமுடன்றொக்கதொகை யாமென்க. பிறவுமன்ன. (௩௪)

௩௬௬. உவம வுருபில துவமத் தொகையே. *

(எ - ன்.) உவமத்தொகையாமா றுணர்-ற்று. (ப-ரை.) உவம வுருபு - வினை பயன் மெய் யுரு என்பவற்றைப் பற்றிவருகிற உவமவுருபுகள், இலது- தொக்கதொடர்மொழிகள், உவமத்தொகை-உவமத்தொகைகளாம். எ-று. (பொ-ரை.) வினைபயன் மெய்யுருவென்பனபற்றிவரும் உவமவுருபுகடொக்க தொடர்சொற்க ளுவமத்தொகைகளாம். எ-று. ❁ [வ-று.] புலிக்கொற்றன்-மழைக்கை-துடியிடை-பொற்சுணங்கு-எ-ம்-குருவிகூப்பிட்டான் சக்கரஞ்சுற்றிவந்தான்- மரகதக்கிளிமொழி - இருண்மழைக்கை- எ-ம்-வரும். இவை விரியுழி புலியைப்போலுங் கொற்றன்-குருவியைப்போலுங் கூப்பிட்டான்-மரகதத்தைப்போலுங் கிளியைப்போலுமொழி எனவிரியும். இறுதிக்கட்காட்டிய இரண்டிறந்த தொடர் உவமைக்குவமையன்று முன்னதுருவுவமையும் பின்னது பயனுவமையு மாதலினென்க. இவையிரண்டாம்வேற்றுமை யுருபும்பொருளு முடன்றொக்கதொகையன்றோ வுவமைத்தொகையென்றதென்னையெனின், செயப்படுபொருள் கருதிக்கூறியவழியிரண்டாம் வேற்றுமையுருபும் பொருளு முடன்றொக்க தொகையாகவும் உவமப்பொருள்கருதிக்கூறியவழியதனையேயுவமத்தொகையாகவுங் கொள்ளப்படுமென்க. (௰௫)

௩௬௭. போலப்புரைய வொப்பவுறழ - மானக்கடுப்ப வியையவேய்ப்ப- நேரநிகர வன்னவின்ன - வென்பவும்பிறவு முவமத்துருபே. *

(எ-ன்.) உவமவுருபு இயற்சொன்மாத்திரையாய்நில்லாது திரிசொல்லாற்பலவாதலின் அவ்வ யிவையெனவுணர்-ற்று.(ப-ரை) போல- நிகர,இப்போலமுதலாகிய செயவெனெச்சம் பத்தும், அன்னவின்ன வென்பவும் - அன்ன இன்ன என்கிற பெயரெச்சக்குறிப்பிரண்டும், பிறவும்- இவைபோல்வன பிறவும், உவமத்துருபு- உவமவுருபுகளாம். எ-று. (பொ-ரை.) போலவென்பது முதலிய செயவெனெச்சம் பத்தும் அன்ன இன்ன வென்னும் பெயரெச்சக்குறிப்பிரண்டும் இவைபோல்வன பிறவுமுவமவுருபுகளாம். எ-று. ❁ இன்னவென்ப தருகியன்றிவாராமையிற்பிற்கூறினர். பிறவென்றமையானே போலப்புரையவென்றற்றொடக்கத்து வினையடியாகப் பிறத்தற்குரியனவினை யெச்சவிகற்பங்களும் பெயரெச்சவிகற்பங்களும் பொருவ எற்ப அனைய வென்றற்றொடக்கத்தனவுங்கொள்க. [வ-று.] குருவிபோலக் கூப்பிட்டான்- குருவிபுரையக்கூப்பிட்டான் - புலியன்னகொற்றன் எனப்பெயரொடுவினைபுணருங்கால் வினையெச்ச வுருபுகளனைத்தினையும் பெயரொடுபெயர்புணருங்காற் பெயரெச்சவுருபுகளனை

த்திணையும் விரித்துக்கொள்க. பெயரொடு பெயர்புணரினும் பு
லியைப்போலப்பாயுஞ் சாத்தன். மழையைப்போலக்கொடுக்கு
ங்கை துடியைப்போலச்சுருங்கிய இடை பொன்னைப்போல வி
ளங்கியசுணங்கு எனவினையெச்ச வுருபுவிரிந்தல்லது நால்வகை
யுவமையும் விளங்காமையின் அவ்வுருபை முன்னொடுத்துவித
ந்தாரென்க. (௰௬)

௩௭௬அ. எண்ணலெடுத்தன் முகத்தனீட்ட - லெனுநான்க
ளவையு ளும்மிலதத்தொகை. ✻

(எ-ன்.) உம்மைத்தொகையாமா றுணர்-ற்று. (ப-ரை.) எண்
ணல்- எண்ணலளவையும், எடுத்தல்-எடுத்தலளவையும், முகத்தல்-
முகத்தலளவையும், நீட்டல்-நீட்டலளவையும், எனும்-என்கிற, நா
ன்களவையுள்- நான்களவைப்பெயர்களுள், உம்மிலது - உம்மை
யாகிய உருபுதொக்குநிற்பவை, அத்தொகை- அவ்வும்மைத்தொ
கைகளாம். எ-று. (பொ-ரை.) எண்ணலள்வை எடுத்தலளவை மு
கத்தலள்வை நீட்டலள்வையென்னு நால்வகை யளவைகளாற்பொ
ருள்களை யளக்குங்காற்றொடரும் அவ்வளவைப்பெயர்களுள் உ
ம்மையாகிய வுருபுதொக்கு நிற்பன வும்மைத் தொகைகளாம். —
எ-று. ❊ எண்ணலளவையான் அளத்தலேயன்றி அவ்வளவையை
யெடுத்தன் முதலிய கருவியின்பாற் படுத்து அளத்தலின் அள
வைநான்கென்றதன்றி யெண்ணலளவையே யளவையாதலின் அ
தனை முற்கூறப்பட்டது. [வ-று] கபிலபரணர்- இராப்பகல்-பு
லிவிற்கெண்டை- அறுபத்துமூவர்- ஆயிரத்தைஞ்ஞூற்றைம்ப
த்தொன்றேகாலேயரைக்கா லரைமாகாணி முந்திரிகை-எ-ம்-கழ
ஞ்சேகால்- கழஞ்சரையே யரைமாவரைக்காணிமுந்திரிகை-எ-ம்
நாழியாழாக்கு- கலனே முக்குறுணி நாழியாழாக்கே முச்செவி
டு-எ-ம் - சாணரை-சாணரையேயரைக்கால்-எ-ம்-வரும்- இவைவி
ரியுழிக் கபிலனும் பரணனும் -இராவும் பகலும்-புலியும்வில்லு
ங்கெண்டையும்- அறுபதின்மரும் மூவரும்-எனவிரியும். பிறவு
மன்ன. இவற்றுள் அறுபதென்பது எண்ணலளவையாய்த்தொ
டராது எண்ணுறழ்ச்சியாய்த்தொடர்ந்தமையின் உம்மைத்தொ
கையன்று பண்புத்தொகையாமென்க. கபிலபரணரென்பது எ
ன்னும் பெயராகிய தென்னையெனிற் கபிலபரணரிருவருமுளர்
தாரெனத் தொகைபெறுதலி னென்க. இவைபோல்வனபிறவும
ன்ன. கபிலபரணர்ப் பரவினானெனவரும்வழிக் கபிலனையும்பர
ணனையும் பரவினானெனவேற்றுமையுருபும்உடன்விரியுமாலோ
வெனின் பரவினானென்னும் வருமொழிநோக்கி வேற்றுமைத்
தொகையாகவும் கபிலபரணரென்னும் நிலைமொழியிரண்டனை
யும்நோக்கி உம்மைத்தொகையாகவும் கொள்ளப்படுமென்க. இ

வ்வும்மையிடையினுமிறுதியினுமொருங்குதொகுமென்பார் அதிகரித்தமுறையானேயிடைக்கட்டொகும்வேற்றுமைத்தொகை முதலிய நான்கிற்கும்இடையேதொகுமென்ற பொதுவிதி மாற்றியிறுதிக்கட்டொகுமெனக்கூறும்அன்மொழித்தொகைக்கும் இடையே யித்தொகையை வைத்தாரென்க. எண்ணிடைச்சொற்கள்உம்மையேயன்றிப் பிறவுமுளவேனு மஃதியற்சொல்லாதலின்உம்மைத்தொகையெனப்பட்டது. , (யஎ)

௩௬௬. ஐந்தொகைமொழிமேற் பிறதொகலன்மொழி. *

(எ-ன்.) அன்மொழித் தொகையாமாறுணர்-ற்று. (ப-ரை.) ஐந்தொகைமொழிமேல் - வேற்றுமைத்தொகைமுதலிய ஐவகைத்தொகைநிலைத் தொடர்மொழிகளுக்கும் புறத்து, பிற-அவையல்லாத பிறமொழிகளாகிய வுருபுகள், தொகல்- தொக்குவருவன அன்மொழி-அன்மொழித்தொகைகளாம். எ-று. (பொ-ரை)வேற்றுமைத்தொகைமுதலியவைவகைத்தொகைநிலைத்தொடர்மொழிகட்கும்புறத்துஅவையல்லாதபிறமொழிகளாகியவுருபுகடொகுதல்அன்மொழித்தொகையாம். எ-று. ❋மேலென்றமையான் அவற்றினுருபிடை யொழியவென்ற பொதுவிதியை விலக்கினானென்பதும்பெற்றாம்.[வ-று.]பூங்குழல்-பொற்றொடி-கவியிலக்கணம்- பொற்றாலி-கிள்ளிகுடி- கீழ்வயிற்றுக்கழலை- எ-ம்- தாழ்குழல்- கருங்குழல்- துடியிடை- தகரஞாழல்-எ-ம்- தகரஞாழன்முலை-எ-ம்-வரும். இவைவிரியுழிப் பூவையுடைய குழலினை யுடையாள்-பொன்னாலாகிய தொடியினையுடையாள் கவிக்கிலக்கணஞ் சொன்னநூல் பொன்னினாகிய தாலியினையுடையாள் கிள்ளியது குடியிருக்குமூர் கீழ்வயிற்றின்கணெழுந்த கழலைபோல்வான்- எ-ம்-தாழ்ந்தகுழலினையுடையாள்-கருமையாகியகுழலினையுடையாள்- துடியன்ன இடையினையுடையாள்-தகரமுஞாழலும் விராய்ச்சமைந்தசாந்து எம்- தகரமுஞாழலும் விராய்ச் சமைந்தசாந்தையணிந்த முலையினையுடையாள்-எ-ம்-விரியும். இனியிரண்டிறந்தமொழிகளினாவலகத்தொகையும்விரவித்தொகுமாறு "திகழ்செவ்வான்மதித்திருமுகப்பூங்குழல்,,எனவரும். இவைவிரியுழித்திகழ்ந்த செம்மையாகிய வானத்தின்கண் மதிபோலுந்திருமுகத்தினையும் பூவையுடையகுழலினையுமுடையாள்எனவிரியும்.

௩௭௭. முன்மொழிபின்மொழி பன்மொழிபுறமொழி- யெனுநான்கிடத்துஞ் சிறக்குந்தொகைப்பொருள். *

(எ-ன்.) தொகைநிலைத் தொடர்சொற்களொன்றுபடத் தொடர்ந்தனவேனும்அப்பொருளொன்றுபடத்தொடராதுபிளவுபட்டோரிடத்துச் சிறந்தும் ஓரிடத்துச் சிறவாது நிற்குமெ

ன்பதுணர்-ற்று. (ப-ரை.) முன்மொழி - முன்சொல்லும், பின்மொழி-பின்சொல்லும், பன்மொழி-பலசொற்களும், புறமொழி-புறத்துவருகிறசொல்லும், எனுநான்கிடத்தும்- என்கிறநான்கிடத்திலொன்றிலே, தொகைப்பொருள்- தொகைநிலைத்தொடர்பொருள், சிறக்கும் - சிறந்துநிற்கும். எ-று (பொ-ரை.)தொகைநிலைத்தொடர்மொழிகளின் முன்மொழிக்கண்ணேனும் பின்மொழிக்கண்ணேனு மனைத்து மொழிக்கண்ணுமேனுமனைத்துமொழிக்கும் புறமொழிக்கண்ணேனுஞ்சிறந்துநிற்குந்தொகைநிலைத்தொடர்பொருள். எ-று. ❁ இவ்விடங்களிற் சிறக்குமெனவே யேனையிடங்களிற்சிறவாது நிற்குமென்பதுபெற்றாம். தன்னியல்பிறவாமற் பன்மொழியென்றார். [வ-று] குடம்வனைந்தான் - குழிசிவனைந்தான் - வேங்கைப்பூ - சண்பகப்பூ -முண்மரம்-முள்ளின்மரம் - விரிபூ -குவிபூ- செந்தாமரை - வெண்டாமரை-வேற்கண்- கயற்கண்- என்பனவற்றுட் குடமுதலிய முன்மொழிகள் இனம் விலக்கிநிற்றலின் அம்முன்மொழிக்கட் பொருள்சிறந்தும்வனைந்தான்முதலிய பின்மொழிக்கட்சிறப்பின்றியுநின்றன. நிலமுழுதான்-கண்ணிமை-நீர்க்குவளை-முட்டாட்டாமரை சுடுதீ- செஞ்ஞாயிறு- தாய்தலையன்பன் என்பனவற்றுள் நிலமுதலிய முன்மொழிகளினமு மினத்தை விலக்குதலுமின்றி வாராநின்றமையின் அம்முன்மொழிக்கட்பொருள்சிறப்பின்றியும் உழுதான்முதலியபின்மொழிக்கட்பொருள்சிறந்துநின்றன. உழுதானென்றதுணையானே நிலத்தையென்பதுந் தாமேபோதருமாதலிற் பின்மொழிக்கட் பொருள்சிறந்தனவாயின. ஏனையவுமன்ன. கபிலபரணர்-புலிவிற்கெண்டை-என்றற்றொடக்கத்தும்மைத்தொகைகளனைத்து மொழிக்கண்ணும் பொருள்சிறந்தன. பூங்குழல்-தாழ்குழல் என்றற் றொடக்கத் தன்மொழித் தொகைகள் அனைத்துமொழிக்கண்ணும்பொருள் சிறப்பின்றியனைத்துமொழிக்கும்புறமொழிக்கட் பொருள்சிறந்துநின்றன. தொகைநிலைத்தொடர்களுருபுதொகுதலிற்சொல்லாற் பிளவுபடாதும் பொருளாற் பிளவுபட்டு மிவ்வாறு வருமெனவேதொகாநிலைத்தொடர்களுருபுதொகாமையின் இவ்விருதிறத்தானும் பிளவுபட்டுப் புறமொழியொழிந்த மூன்றிடத்தும் இவ்வாறு பொருள்சிறந்துநிற்குமென்பதுதாமேபோதருமென்க. அவையுமிவ்வாறேகாண்க. அங்ஙனமாயிற்றொகைநிலை தொகாநிலையிரண்டற்குமிறுதிக்கணிவ்விலக்கணங்கூறாது ஈண்டுக்கூறியதென்னையெனிற்புறமொழிக்கட்பொருள்சிறத்தறொகாநிலைத்தொடர்க்கின்மையினென்க இனி முன்மொழி பின்மொழிகளுட் பொருள் சிறந்தனவற்றிற்கொருவர்க்கொருவர் மலைந்து பொருள்கூறுவாருமுளர். அம்ம

லைவு அவர்காட்டு முதாரணங்களுட்காண்க. (௰௬)

௩௱௭௧. வல்லொற்றுவரினே யிடத்தொகையாகு - மெல்லொற்றுவரினே பெயர்த்தொகையாகும். *

(எ-ன்.) இடத்தின்கட்டொக்கதொகையோ பெயரின்கட்டொக்கதொகையோவென்னையுறற்பாலனவற்றுட்,சிலவற்றைத்துணிதற்காவதோர்குறியுணர்-த்-று. (ப-ரை.) வல்லொற்று - வல்லொற்றானது, வரின்-இடையேவந்தால், இடத்தொகையாகும் • இடத்தின்கண்ணே தொக்கதொகையாகும், மெல்லொற்று-மெல்லொற்றானது,வரின்-இடையேவந்தால், பெயர்த்தொகையாகும்-பெயரின்கண்ணே தொக்கதொகையாகும். எ-று., (பொ-ரை.) வல்லொற்றிடையேவந்துழியிடத்தின்கட்டொக்கதொகையாம் மெல்லொற்றிடையேவந்துழிப் பெயரின்கட் டொக்கதொகையாம். எ-று. ❋ மெல்லொற்றருகி வருதலிற் பிற்கூறினார். [வ-று.] வடுகக்கண்ணன்- வடுகங்கண்ணன் - கன்னடக்கொற்றன் - கன்னடங்கொற்றன்- துளுவச்சாத்தன்- துளுவஞ்சாத்தன்-எனவரும் பிறவுமன்ன. இவைவிரியுழி வல்லொற்றுவரின் வடுகநாட்டிற் பிறந்தகண்ணனெனவும் மெல்லொற்றுவரின் வடுகனாகிய கண்ணனெனவும்விரியும். வடுகனென்பது தந்தைபெயராய் மெல்லொற்றுவரின் வடுகற்குமகனாகிய் கண்ணனெனவிரியும். ஏனையவுமன்ன. வல்லொற்றுவரின்மெல்லொற்றுவரினென்றமையான்இயல்பினும்விதியினுநின்ற வுயிரீற்று மொழிமுன் வல்லினமுதன்மொழி வந்துஇடத்தொகையும்பெயர்த்தொகையுமாயையுறநிற்கினிக்குறியாற்றுணியப்படுமென்பதூஉம் வடுகநாகன் வடுகவணிகன்வடுகவரசன் எனவரிற் சொல்லுவான் குறிப்பானன்றி யிவ்வாறு துணியப்படாவென்பதூஉந் தாமே போதருமென்க. (௨௰)

௩௱௭௨. உயர்திணை யும்மைத் தொகைபல ரீறே. *

(எ-ன்.)உம்மைத்தொகைக்காவதோர்விதியுணர்-த்-று. (ப-ரை) உயர்திணை-உயர்திணையொருமையில்வருகிற, உம்மைத்தொகை-உம்மைத்தொகைகளானவை, பலரீறே-ரவ்வொற்றுங்களுமாகிய பலர்பால் விகுதியை யுடையனவேயாம் எ-று. (பொ-ரை.)உயர்திணையொருமைப்பாலின்கண்வருமும்மைத்தொகைகள் ரவ்வீறுங்கள்ளீறுமாகிய பலரீற்றனவேயாம். எ-று. ❋ பலரீறேயென்றமையான் ஒருமைப்பாலென்பதுபெற்றாம். [வ-று] கபிலபரணர் - கல்லாடமாமூலர்-சேரசோழபாண்டியர் - தேவன்றேவிகள்-பார்ப்பான் பார்ப்பனிகள் - வில்லிவாளிகள் - எனவரும். இவ்வொருமைக ளித்திணையொன்னும் பொருள்பட நிற்றலிற் பலரீற்றவாயின. னகரவீற்றிடையேகெடுதல் சிலவிகாரமாமுயர்திணையென்பதனானு மிறுதிக்கட்கெடுதல்இதனுட்பலரீறேயெ

ன்பதனானுங்கொள்க. பலரீறேயென்னுந் தேற்றத்தானஃறிணை யாருமையும்மைத்தொகைகளும் பொதுவொருமை யும்மைத்தொகைகளுந் தத்தம்பன்மையீற்றனவேயாமென்னு நியதியவல்லவென்றாராயிற்று. அவைவருமாறு உண்மை யின்மைகள்-உண்மையின்மை - நன்மைதீமைகள் - நன்மைதீமை-இராப்பகல்கள் - இராப்பகல் - நிலநீர்தீகாற்று காயங்கள் - நிலநீர்தீகாற்று காயம்-ன-ம்-தந்தைதாயர் -தந்தைதாய்கள் - தந்தைதாய்-சாத்தன்சாத்தியர் - சாத்தன்சாத்திகள் - சாத்தன்சாத்தி-எம்- பன்மையீற்றானு மியல்பாயவொருமையீற்றானும் வந்தன. இயல்பாகியவொருமையீற்றான் வந்தனவேவு லும்மைத்தொகையன்றிக் கபிலன்பரணனிருவரும் வந்தாரென்றாற்போலச் செவ்வெண்ணும் பிறவெனில், பலமொழிகளையுந்திரட்டி யொருபிண்டமாகக்கூறியவழி யும்மைத்தொகையாகவும் பிளவுபடக்கூறியவழிச் செவ்வெண்ணாகவுங் கொள்ளப்படுமென்க. (உக)

ஙாஎகூ. தொக்குழி மயங்குந விரண்டு முதலேழெல்லைப் பொருளின் மயங்குமென்ப. *

(எ-ன்.) தொகைநிலைத் தொடர்சொற்களுருபுதொக்கு நின்றமையிற் சிலபொருளான் மயங்குமாறுணர்-ற்று. (ப-ரை.) தொக்குழி வேற்றுமையுருபுமுதலாகிய வுருபுகள் தொக்குநின்றவழி மயங்குந-பொருள்களினுலே மயங்குந் தன்மையனவாகிய தொடர்மொழிகள், இரண்டுமுதல்-இரண்டுமுதலும், எழெல்லை-எழீறுமாகிய,பொருளின் - பொருள்களால், மயங்கும்- மயங்கும்,என்ப-என்றுசொல்லுவர்புலவர். எ-று. (பொ-ரை.) வேற்றுமையுருபுமுதலிய வுருபுகடொக்குநின்ற வழிப்பொருள்களான் மயங்குமியல்பினவாகிய தொடர்சொற்களிரண்டு முதலேழீறாகிய பொருள்களான் மயங்குமென்று சொல்லுவர்புலவர். எ-று. ❋ தொக்குழியென்வே தொகாவிடத்து மயங்காவென்பதூஉம்மயங்குவன மயங்குமெனவே மயங்குமியல்பில்லனமயங்காவென்பதூஉம் பொருளெனப்பொதுப்படக்கூறினமையிற் றொகைநிலைப்பொருளானுந் தொகாநிலைப்பொருளானுந் தொகைநிலைத் தொடர்சொன் மயங்குமென்பதூஉம்பெற்றாம். [வ-று.] தெய்வவணக்கம்-தாழ்குழல்-என்பன தெய்வத்தைவணங்கும் வணக்கம்-தெய்வத்துக்கு வணக்கம்- தாழ்ந்தகுழல்- தாழ்ந்தகுழலினையுடையாள்என இருபொருளான் மயங்கிய் வொருதொடர்த் தொகைச்சொல். தற்சேர்ந்தார்-கடிப்பகை என்பன தன்னைச்சேர்ந்தார்-தன்னொடுசேர்ந்தார்-தன்கட்சேர்ந்தார்-கடிக்குப்பகை-கடியினதுபகை-கடியாகியபகைஎன மூன்றுபொருளான்மயங்கிய வொருதொடர்த்தொகைச்சொல். சொல்லிலக்கணம் என்பது

சொல்லினதிலக்கணம்- சொற்கிலக்கணம் - சொல்லின்கணிலக்கணம்-சொல்லிலக்கணஞ்சொன்னநூல்-என நான்குபொருளான்மயங்கிய வொருதொடர்த்தொகைச்சொல். பொன்மணி என்பது பொன்னானாகியமணி-பொன்னாகியமணி - பொன்னின்கண்மணி-பொன்னொடுசேர்ந்தமணி - பொன்னுமணியும் எனஐந்து பொருளான்மயங்கிய வொருதொடர்த்தொகைச்சொல். மரவேலி என்பது மரத்தைக்காக்கும்வேலி-மரத்துக்குவேலி-மரத்தினதுவேலி-மரத்தின்புறத்துவேலி-மரத்தானாகியவேலி-மரமாகிய வேலி-என ஆறுபொருளான்மயங்கிய வொருதொடர்த்தொகைச்சொல். சொற்பொருள் என்பது சொல்லானறியப்படும்பொருள்- சொல்லினதுபொருள்-சொற்குப்பொருள்-சொல்லின்கட்பொருள்-சொல்லும்பொருளும்-சொல்லாகியபொருள் -சொல்லானதுபொருள்-என ஏழுபொருளான்மயங்கிய வொருதொடர்த்தொகைச்சொல். சொல்லானதுபொருளென்றதுதொகாநிலைப்பொருளாகிய வெழுவாய். சொல்லா னறியப்படும்பொருள் சொல்லினறியப்படும்பொருளென மூன்றுவதனோடைந்தாவதும் விரிப்பாருமுளர். அவை யிரண்டற்கும் ஒருபொருளொன்றேயாதலின் அது வேற்றுப்பொருளான் மயங்கிய தன்றென்க. "வாளைமீனுள்ள றலைப்படல்,, என்பது வாளைமீனையுள்ளறலைப் படல் -வாளைமீனுள்ளலைத்தலைப்படல் எனவிரண்டாவதும் எழுவாயுமாகிய விருபொருளான்மயங்கிய பலதொடர்த் தொகைச்சொல். புலிகொல்யானை-குரங்கெறிவிளங்காய் என்பன புலியைக்கொன்றயானை - புலியானதுகொன்றயானை - புலியாற்கொல்லப்பட்டயானை- குரங்கையெறிந்தவிளங்காய் - குரங்கானதெறிந்தவிளங்காய் -குரங்காலெறியப்பட்டவிளங்காய் எனவிரண்டாவதுமெழுவாயு மூன்றாவதுமாகிய மூன்றுபொருளான் மயங்கிய பலதொடர்த்தொகைச்சொல். பிறவுமன்ன. இவ்வாறுசெம்பொருள்கொள்ளாதுவலிந்து பொருள் கொள்ளப்புகின் எழெல்லையென்னும் வரையறையில் நில்லாது பலவாமாதலினது தொன்னெறியன்றென்பாரென்பவென்றார். இனி அலர்முல்லையென்னும்வினைத்தொகைமுதலியன மயங்காதனவாம். அலரையுடையமுல்லையெனமயங்குமாலோவெனின், அலரென்பது வினைத்தொகைக்கண் வினையாயும் வேற்றுமைத்தொகைக்கட் பெயராயுஞ் சொல்வேறுபட்டமையினது பொருளான்மயங்கியதன்றென்க.

கூஎச, முற்றீரொச்ச மெழுவாய் விளிப்பொரு - ளாறுருபி *
டையுரி யடுக்கிவை தொகாநிலை.

(எ-ன்.) நால்வகைச்சொற்குமாவதோர் விதியுணர் - ற்று. —

(ப-ரை.) முற்று - வினைமுற்றும், ஈரெச்சம் - பெயரெச்சமும் வினையெச்சமும், எழுவாய்- எழுவாயும், விளி- விளியும்ஆகிய, பொருள்-ஐவகைப் பொருள்களின்மேலபெயர்வினைகள் புணருகிற புணர்ச்சியும், ஆறுருபு- வேற்றுமைப்பொருள்களில் அவற்றினுருபுகளாகிய இரண்டாவதுமுதலாகிய வாறுருபுகளும் விரிந்துநிற்கப் பெயர்வினைகள் புணருகிற புணர்ச்சியும், இடை- இடைச்சொற்புணர்ச்சியும், உரி- உரிச்சொற்புணர்ச்சியும், அடுக்கு-அடுக்குப் புணர்ச்சியுமாகிய, இவை- இவ்வொன்பதும், தொகாநிலை- தொகாநிலைத்தொடர்மொழிகளாம்- எ-று. (பொ-ரை.) முற்றும்பெயரெச்சமும் வினையெச்சமும் எழுவாயும் விளியுமாகிய ஐவகைப்பொருளின்கட் பெயர்வினைகள்புணரும் புணர்ச்சியும் வேற்றுமைப்பொருளின்கண் அவற்றினுருபாகியவிரண்டாவதுமுதலியவாறுமிடையே விரிந்துநிற்பப் பெயர்வினைகள் புணரும்புணர்ச்சியும் ஏனையிடைச்சொற்புணர்ச்சியும்உரிச்சொற்புணர்ச்சியுமொருசொல்லடுக்கிவரும் புணர்ச்சியுமாகிய வொன்பதுந் தொகாநிலைத்தொடராம். எ-று. ※ தொகாநிலையென்றமையாற் காலங்கரவாதபெயரெச்சமீண்டுக்கொள்க. [வ-று.] உண்டான் சாத்தன்- குழையன்கொற்றன்- உண்ட சாத்தன் - நல்லசாத்தன்- உண்டுவந்தான்- உழுதன்றியுண்ணான் - சாத்தன்வந்தான் - கொற்றகொள்-குடத்தைவனைந்தான்- வாளாலெறிந்தான்-இரப்போர்க்கீந்தான்- மலையினிழிந்தான்- சாத்தனதுகை - மணியின்கணொளி- அதுகொன்றோழிகாமநோயே - நனிபேதையே நயனில்கூற்றம்- பாம்புபாம்புஎனமுறையேகாண்க. வேற்றுமைத்தொகையும் வினைத்தொகையும் விரிந்தவழி வேற்றுமைத் தொகாநிலையும் பெயரெச்சத்தொகாநிலையுமாமென்றார். ஏனை நான்கு தொகையும்விரிந்தவழித் தொகாநிலையொன்பதனுளவையாம்பிறவெனின், பண்புத்தொகையும்உவமைத்தொகையும்உம்மைத்தொகையும்விரிந்தவழி யிடைச்சொற்புணர்ச்சியும் அன்மொழித்தொகைவிரிந்தவழிவேற்றுமைத்தொகாநிலை முதனிலைத்தனவுமாமென்க.

ஙாஎ௫. திணையேபாலிடம் பொழுது வினாவிறை - மரபாமேழு மயங்கினும் வழுவே. ※

(எ-ன்.) வழுவறிந்தல்ல தவற்றைக்களைதல் கூடாமையினவ்வியிவையெனவுணர்-ற்று. (ப-ரை.) திணை- இருதிணையும், பால்- ஐம்பாலும், இடம்- மூவிடமும், பொழுது- முக்காலமும், வினா- வினாவும், இறை- விடையும், மரபு- பலவகைமரபுகளும், ஆம்- ஆகிய, எழும் - எழும், மயங்கின் - தன்றன்வழிமயங்கின், வழூவாம்- வழுவாம். எ-று. (பொ-ரை.) திணைமுதலாக மரபீறாகவருமேழுந் தத்தநெறிமயங்கின்வழுவாம். எ-று. ※ திணைமுதலிய்வ

னைத் துமரபாமாயினும்இங்ஙனம்விதவாதொழிந்தனவற்றைமர பெனக்கொள்க வென்பார்அதனையிறுதிக்கட் கூறினார். [வ-று.] அவன்வந்தது-என்பதுதிணைவழூ. அவன்வந்தாள்என்பதுபால்வழூ. யான்வந்தான் என்பதிடவழூ. நாளைவந்தான் என்பது.கால வழூ. கறக்கின்றவெருமை பாலோசினையோ -, ஒருவிரல்காட்டிச் சிறிதோபெரிதோ என்பன விஞவழூ. கடம்பூர்க்குவழி யாதெனினிடம்பூணியென் ருவின்கன்றன்று. கருவூர்க்குவழியாதெனிற் பருநூல்பன்னிருதொடிஎன்பனவிடைவழூ. யானைமேய்ப்பானை யிடையன்ஆடுமேய்ப்பானைப் பாகன் யானைச்சாணி எருமையிலத்தி என்பனமரபுவழூ இவ்வாறேயிவ்வெழுவகைவழூவிகற்பங்களெல்லா முணர்ந்து கொள்க. (உ௬)

௫௱௭௬. ஐயந் திணைபா லவ்வப் பொதுவினு - மெய்தெரி பொருண்மே லன்மையும்விளம்புப. ❋

(எ-ன்.) திணையொடு விஞவிடையும் பாலொடுவிஞவிடையும் வழூவாது காத்தலுணர்-ற்று. (ப-ரை.) திணை- (யையம்) திணையையத்தையும், பா (லையம்) பாலையத்தையும், அவ்வப்பொதுவினும்-அதனதன்பொதுச்சொல்லாலும், மெய்தெரிபொருண்மேல் - துணிந்தபொருண்மேல், அன்மையும்-அல்லாததன்மையை வைத்தும், விளம்புப - சொல்லுவர்புலவர். எ-று. (பொ-ரை.) திணையையத்தினை அவற்றின்பொதுச்சொல்லானும் பாலையத்தினை அவற்றின்பொதுச்சொல்லானுந் துணிந்தபொருண்மேலல்லாத தன்மையினை வைத்துங்கூறுவர்புலவர். எ-று. ❋ [வ-று.] குற்றியோமகனோவெனத் திணையையந்தோன்றியவழிக்குற்றியோமகனோவங்ஙனந் தோன்றுநின்றது தோன்றுநின்றானெனச்சிறப்புச் சொல்லாற்கூறிற்றிணைவழூவும்விஞவழூவுமாம் அவையொழித்துக்குற்றியோமகனோ வங்ஙனந்தோன்றுநின்ற வுரு எனப்பொதுச்சொல்லாற்கூறுக. உரு என்பதுபொதுச்சொல்லாய் வழாநிலையாயதென்னையெனிற் குற்றிக்குமகனுக்குமுருப்பொதுப்பட்டின்றமையினென்க. ஆண்மகனோ-பெண்மகளோவென வுயர் திணைப்பாலையந்தோன்றியவழி யாண்மகனோ பெண்மகளோ வங்ஙனந்தோன்றுநின்றான் தோன்றுநின்றாள் எனச்சிறப்புச்சொல்லாற்கூறிற் பால்வழூவும் விஞவழூவுமாம் அவையொழித்து ஆண்மகனோ பெண்மகளோ வங்ஙனந் தோன்று நின்றார் எனப் பொதுச்சொல்லாற்கூறுக. தோன்றுநின்றாரென்பது பொதுச் சொல்லாய்வழாநிலையாயதென்னையெனின் ஆண்பெண்ணிரண்டல்லது பலர்பாலென வேறொன்றின்றி யவ்விருபாற்கும் பொதுமையினிற்றலினென்க. ஒன்றோபலவோவென வஃறிணைப்பாலையந்தோன்றியவழியொன்றோபலவோவிச்செய்புக்கதுபுக்கன

வெனச்சிறப்புச்சொல்லாற்கூறிற் பால்வழுவும் வினாவழுவுமாம்
அவையொழித்து ஒன்றோபலவோ விச்செய்புக்கபெற்றம் என
ப்பொதுச்சொல்லாற்கூறுக. இனிமெய்தெரிந்தபொருள்குற்றி
யெனின் மகனன்று. எ-ம்- மகனெனிற் குற்றியல்லன்- எ-ம்- ஆ
ண்மகனெனிற் பெண்மகளல்லன்- எ-ம்- பெண்மகளெனி னாண்
மகனல்லள்- எ-ம்- கூறுக. மகனன்று குற்றியெனக் கூறிற் குற்றி
யோமகனோவென்னவினாவினார்க்கு மகனன்றெனினமையும், குற்
றியென மேல்வைத்துக் கூறல்வேண்டாகூறலாம். மகனன்றென்
பதனை மகனினன்றெனவைந்தாம் வேற்றுமைப் புணர்ச்சியென்
பாருமுளர். அதுபோல்வருநீயல்லையென்பதும் அங்ஙனம்விரித்
தல்கூடாமையினல்வழிப்புணர்ச்சியுளெடுத்துவிதந்தயதினான்கி
ன்புறத்ததாயடங்குமென்க. ஏனைமூன்றுகாட்டுமன்ன. மெய்தெ
ரியாப்பொருண்மே லல்லாத தன்மையினைவைத்து மகனல்லன்
குற்றியெனிற் குற்றியென்னும் பயனிலைக்கெழுவாய்தந்துமகன
ல்லனவ்வுருக் குற்றியெனக் கூறல்வேண்டும், அங்ஙனங் கூறவே
சொற்பல்குதலென்னும் விடைவழுவாம். அவ்வழுவாராது மெய்
தெரிபொருண்மே லன்மையும் விளம்புப வென்றார். (உரு)

௩௭௭. உயர்திணை தொடர்ந்த பொருண்முத லாறு - மத
னொடுசார்த்தி னத்திணை முடிபின. *

(எ-ன்.) திணைவழுவமைப்புணர்- ற்று. (ப-ரை.) உயர்திணை-
உயர்திணையை, தொடர்ந்த-பற்றிய, பொருண்முதலாறும்-பொ
ருளாதியாறும், அதனொடு- அவ்வுயர்திணையோடு, சார்த்தின்-சே
ர்த்துமுடிக்கின், அத்திணைமுடிபின-அவ்வுயர்திணைமுடிபினவா
ம். எ-று. (பொ-ரை.) உயர்திணையைத் தொடர்ந்த வஃறிணைப்
பொருளாதியவாறு முயர்திணையோடு சார்த்திமுடிப்பினுயர்தி
ணைமுடிபினவாம். எ-று. ※ தொடர்தலாவதஃறிணைப்பொருளா
தியாறுமுயர்திணைக்குக்கிழமைப்பொருள்களாய்நிற்றல். சார்த்த
லாவதுயர்திணை யெழுவாயின் பயனிலையோ டஃறிணையெழுவா
யினையுமுடன்முடித்தல். உயர்திணை தொடர்ந்த பொருண்முத
லாறென்றமையிற் பொருளென்பதுயர்திணைப்பொரு ளன்றெ
ன்பதாம். [வ-று.] நம்பிபொன்பெரியன் - நாடுபெரியன் - வா
ளுள்பெரியன்-, மூக்குக்கூரியன்- குடிமைநல்லன் - நடைகடிய
ன் எனவரும். சொற்றொறு மிற்றிதன் பெற்றியென்பதனானே
கிணறுநீருற்று- மாடுகோடுகூரிது எனவஃறிணையோடு சார்த்
தினஃறிணை முடிபினவாதலுங்கொள்க. சார்த்தினெனவே சார்த்
தாவிடின் வழாநிலையாய்ப்பொன்பெரிதுமூக்குக்கூரிதுஎனத்த
ம்முடிபுகொள்ளுமென்க. பொன்னென்னுமஃறிணை யெழுவாய்
நம்பியென்னுமுயர்திணை யெழுவாயினது பயனிலையாகிய பெ

ரியனென்று முயர்திணைவினைக்குறிப்பைக்கொண்டுமுடிதலின் வழுவாய்த் தொடர்புண்மைகருதிச் சார்த்தி முடித்தலினமைதியாயிற்றென்க. பொன்னினதுபெருமையையுடையனெனவாறுமுருபுவிரித்து வழாநிலையென்றாலென்னையெனின், வேற்றுமைப்புணர்ச்சிக்குரிய வெழுத்துச் சந்தியின்மையின் அதுபொருந்தாதென்க. பிறவுமன்ன. (௨௬)

௩௭௮. திணைபால்பொருள்பல விரவினசிறப்பினு • மிகவினுமிழிபினு மொருமுடிபினவே. *

(எ-ன்.) திணைபான்மரபு வழுவமைப்புணர்-ற்று. (ப-ரை.) திணை-திணைகளும், பால்-பால்களும், விரவின - கலந்துநின்றனவாகிய, பொருள்பல-வேறுவினைப் பல்பொருள்களும், சிறப்பினும் சிறப்பினாலும், மிகவினும்-மிகுதியினாலும், இழிபினும்-இழிவினாலும், ஒருமுடிபின-ஒருமுடிபினவாகும். எ-று. (பொ-ரை) திணையும்பாலும் வேறுவினைப் பலபொருள்களும் விரவிநின்றவழியவை பலவுமொருமுடிபினவாஞ்சிறப்பினானும் மிகுதியினானும் இழிபினானும். எ-று. ✲[வ-று] "அங்கண்விசும்பினகனிலாப்பாரிக்குந்- திங்களுஞ்சான்றோருமொப்பர்மற்- றிங்கண்- மறுவாற்றுஞ்சான்றோரஃதாற்றார்தெருமந்து-தேய்வரொருமாசுறின்.,, -எ-ம்- "பழியஞ்சான்வாழும் பசுவுமழிவினுத்- கொண்டவருந்தவம்விட்டானுங்-கொண்டிருந்- தில்லஞ்சிவாழுமெருதுமிவர்மூவர்-நெல்லுண்டநெஞ்சிற்கோர்நோய்.,,-எ-ம்-இவைதிணைவிரவிச்சிறப்பினானுயர்திணைமுடிபேற்றன. இழிந்தோனையெண்ணியபின் அதனுட்சிறப் பென்னையெனின், பசு விட்டான் எருது என்னுமூன்றனுள் விட்டானென்பது உயர்திணையாண்சிறப்பு. பசு எருது என்பனவுயர்திணைப்பொருளேனும் அஃறிணையாக வுருவகப்படுத்தினமையின் இங்ஙனமமைக்கப்பட்டன. "தன்பான் மனையா ளயலான்றலைக் கண்டுபின்னு- மின்பால்படிசித்திவர்கின்றகைப்பேடிபோலா- நன்பாற்பசுவே துறந்தார்பெண்டிர்பாலர்பார்ப்பா -ரென்பாரையோம்பே னெனின்யானவனாகவென்றான்.,, - எ-ம் • "பார்ப்பார்தவரே சுமந்தார்பிணிபட்டார் - மூத்தார்குழவியெனுமிவர்கட் - காற்றவழிவிலங்கினாரேபிறப்பிடைப் - போற்றியெனப்படுவார்.,, -எ-ம் - இவைதிணைவிரவிமிகுதியினானுயர்திணைமுடிபேற்றன "நசைதரவந்தோர் நசைபிறக்கொழிய -வசைபட வாழ்ந்தோர் பலர்கொல் - புரையினற்பனுவனாலல்வேதத் தருஞ்சீர்த்திப் பெருங்கண்ணுறை நெய்ம்மலியாகுதிபொங்கப்- பன்மாண்வீயாச் சிறப்பின் வேள்விமுற்றியூபநட்ட வியன்களம்பலகொல் யாபலகொல்லோ பெரும.,,-

எனவிவைசிறப்பினான் அஃறிணைமுடிபேற்றன. "எச்சிலார்தீண்டார் பசுப்பார்ப்பார்தீத்தெய்வ-முச்சந்தலையோடிவையென்ப யாவருந்-திட்பத்தாற்றீண்டாப்பொருள்.,, என விவைமிகுதியினால்அஃறிணைமுடிபேற்றன. "வடுகரரிவாளர்வான்கருநாடர்-சுடுகாடுபேயெருமை யென்றிவையாறுங்-குறுகாரறிவுடையார்.,, -எ-ம் "மூர்க்கனுமுதலையுங்கொண்டதுவிடா.,,-எ-ம்-இவை யிழிபினான்அஃறிணைமுடிபேற்றன. பன்மையொருமுடிபின வென்னாதுஒருமுடிபினவென வாளாகூறினமையின் "தானுந் தேரும் பாகனும்வந்தென்னலனுண்டான்.,, எனத்திணைவிரவிச் சிறப்பினான் ஆண்பான்முடிபேற்றலும் "தொல்லைநால்வகைத் தோழருந்துணைமணி நெடுந்தேர்-மல்லற் றம்பியு மாமனு மதுவிரிகமழ்தார்ச்-செல்வன்றாதையுஞ் செழுநகரொடுவளநாடும் வல்லை தொக்கது வளங்கெழு கோயிலுளொருங்கே.,, எனத்திணைவிரவிச்சிறப்பினான் ஒருமைமுடிபேற்றலுங்கொள்க. "நானுமென்சிந்தையு நாயகனுக் கெவ்விடத்தோந் - தானுந்தன் றையலுந் தாழ்சடையோனுண்டிலனேல்.,, என ஆண்பாலும் பெண்பாலும் விரவிச் சிறப்பினான் ஒருமுடிபேற்றன. சொற்றொறுமிற்றிதன் பெற்றியென்பதனானே விரவாதெண்ணித் தோழனுந்தானும்வந்தான் - தோழியுந்தானும்வந்தாள் எனமுடிதலுங்கொள்க. கறியுஞ்சோறுமுண்டான்- மாலையுமுடியுங்கவித்தான்-குஞ்சமுங்குடையுங்கவித்தான்- சாந்தமுமுலையுந் தழுவினான்- என வேறுவினைப்பல்பொருள்விரவிச்சிறப்பினான் ஒருமுடிபேற்றன. பிறவுமன்ன. இங்ஙனம் இறுதிக்கட்கூறிய மரபுவழுவமைதி வேறுவினைப் பல்பொருடழுவிய பொதுச்சொலுமென்னுஞ் சூத்திரத்தோடு மாறுகொளக்கூறலாம் பிறவெனின், சிறப்புமுதலியகருதாதொத்த நிலைமையி னெண்ணியவழி முடியுமரபு அங்ஙனங்கூறுதலின் அதுமாறுகொளக்கூறலன்றென்க. "பாணன்பறையன்கடம்பன்றுடியனென்- றந்நான்கல்லது குடியுமில்லை.,, என உயர்திணையெண்ணி யஃறிணை முடிபின்வா"வழு யாண்டமைக்கப்படுமெனிற் குடியென்பதனைப் பாணன்முதனான்கோடுங்கூட்டியுரைக்கப்படுதலின் வழாநிலையாமென்க. இனிப்பால்விரவியொருமுடிபேற்பனவற்றிற்கு ஒருவன்கொல்லோ பலர்கொல்லோ விச்செய்புக்கார் என வுதாரணங்காட்டின், ஐயந்திணைபாலவ்வப்பொதுவினு மென்பதனான் வந்தனவன்றி யீண்டைக் காகாமையானும் இங்ஙனங்காட்டிய விலக்கியங்கட் கிலக்கண மின்மையானு மதுகாட்டன் றென்க. (௨௭)

௩௭௧. உவப்பினு முயர்வினுஞ் சிறப்பினுஞ் செறலினு-மிழிப்பினும்பாறிணை யிழுக்கினு மியல்பே. ✻

(எ-ன்.) திணைபால் வழுவமைப் புணர்-ற்று. (ப-ரை.) பால்-
பாலும், திணை-திணையும், உவப்பினும்- மகிழ்ச்சியினாலும், உய
ர்வினும்-மேன்மையினாலும், சிறப்பினும்-சிறப்பினாலும், செற
லினும்-கோபத்தினாலும், இழிப்பினும்- பழிப்பினாலும், இழுக்
கினும்-வழுவிவரினும், இயலபு - இயல்பாம். எ-று. (பொ-ரை.)
உவப்புமுதலிய வைந்தினும் பாலுந்திணையும் வழுவிவரினுமிய
ல்பாம். எ-று. ❁ பாலைமுற்கூறின ரவ்வழுவமைதி பயின்று வ
ருதலின். இழுக்கினுமென்னு மும்மை யுவப்பு முதலியவற்றி னி
ழுக்கியேவருமென்னு நியதியல்லவென்னும் பொருட்டுநின்
றது [வ-று.] தன்புதல்வனை யென்னம்மைவந்தாளென்பது உவ
ப்பினாண்பால் பெண்பாலாயிற்று. ஒருவனை அவர்வந்தாரென்ப
து உயர்வினொருமைப்பால்பலர்பாலாயிற்று. "தாதாய்மூவேழு
லகுக்குந்தாயே.,, என்பது சிறப்பினான் ஆண்பால் பெண்பாலா
யிற்று. "எனைத்துணைபராயினு மென்னாந் தினைத்துணையுந் - தே
ரான்பிறனில்புகல்.,, என்பது செறலிற்பலர்பாலொருமைப்பா
லாயிற்று. பெண்வழிச் செல்வானை நோக்கியிவன் பெண்ணென்
பதுஇழிவினாண்பால பெண்பாலாயிற்று. ஓராவினை யென்னம்
மைவந்தாள் என்பதுஉவப்பினஃறிணையுயர்திணையாயிற்று. "செ
ந்தார்ப்பசுங்கிளியார் சென்றார்தமேகோ ரின்னுரை-தந்தாரோற் றந்
தாரொன்னின் னுயிர்.,, என்பது உயர்வினஃறிணையுயர்திணையாயி
ற்று. "தம்பொருளென்பதம் மக்கள்.,, என்பது சிறப்பி னுயர்
திணையஃறிணையாயிற்று. "எவவுஞ்செய்கலான் றான்றேரா னவ்வு
யிர்- போஒமளவுமோர்நோய்.,, என்பது செறலி னுயர்திணை
யஃறிணையாயிற்று. நாமரனுடைமையென்பது இழிப்பி னுயர்தி
ணையஃறிணையாயிற்று. பிறவுமன்ன. சொற்றொறும்பிற்றிதன்பெற்
றியென்பதனானே புதல்வனை அப்பன்வந்தானென்றும் புதல்வி
யை அம்மைவந்தாளென்றும்வரு மரபுவழுவமைதிகளுங்கொள்
க. இவ்வழுவமைதி யுருவக வுவமைகளின் வழுவியமைவன வொ
ழியக்கொள்க. (உஅ)

சூ உ௯. ஒருமையிற் பன்மையும் பன்மையி னொருமையு-
மோரிடம் பிறவிடந் தழுவலுமுளவே. ❁

(எ-ன்.) முற்கூறிய வுவப்புமுதலிய காரணத்தானன்றி யமை
ந்தபால் வழுவமைப்பும் அவ்வாறமைந்த இடவழுவமைப்பு மு
ணர்-ற்று. (ப-ரை.) ஒருமையின்- ஒருமைப்பாலில், பன்மையும்-
பன்மைப்பாற்சொல்லையும், பன்மையின்- பன்மைப்பாலில், ஒ
ருமையும்- ஒருமைப்பாற்சொல்லையும், ஓரிடம்-ஓரிடத்தில், பிற
விடம்-பிறவிடச்சொல்லையும், தழுவலும்-தழுவிக்கூறுதல்களும்,
உள-உளவாம். எ-று. (பொ-ரை., ஒருமைப்பாலின்கட் பன்மை

ச்சொல்லைத் தழுவிக்கூறுதலும் பன்மைப் பாலின்கண் ஒருமைச்சொல்லைத் தழுவிக்கூறுதலு மோரிடத்தின்கட் பிறவிடச்சொல்லைத்தழுவிக்கூறுதலுமுளவாம். எ-று. ❁ [வ-று.] வெயிலெல்லாமறைத்தது மேகம்- இக்குளத்துநீரெல்லாங்கொண்டு டுத்தானிவன்-எ-ம்- இரண்டுகண்ணுஞ் சிவந்தது- "இருநாக்கிவனுண்கணுள்ளது,, -எ-ம்- அஃறிணைக்கணொருமையிற்பன்மையும் பன்மையினொருமையும்வந்தன. "அஃதை தந்தை யண்ணல்யானையடுபோர்ச்செழியர்.,,-எ-ம்- "புலையனெறிந்தபூசற்றண்ணுமையேவவிளையர் தாய்வயிறுகரிப்ப,,-எ-ம்- உயர்திணையொருமையிற்பன்மையும்பன்மையினொருமையும்வந்தன. "சாத்தன்றாயிவைசெய்வலோ.,,-"கல்வியனென்னும் வல்லான்சிறுஅபொலவேணல்லதுய்வாயாகுதல் ,, -என்பது தன்மையின்கட் படர்க்கைவந்தது. "திண்பொரு ளெய்தலாகுந் தெவ்வரைச் செருக்கலாகு- நண்பொடு பெண்டிர் மக்கள் யாவையு நண்ணலாகு - மெய்ண்பொருளாவதையா வுடன்பிறப்பாக்கலாகா -லெம்பியையீங்குப் பெற்றே னென்னெனக் கரியதென்றான்.,, என்பது முன்னிலைக்கட்படர்க்கை வந்தது. நீயோவவனோ யாரிதுசெய்தார் - யானோவவனோ யாரிதுசெய்தார்- நீயோயானோயாரிதுசெய்தார்-நீயோவவனோயானோயாரிதுசெய்தார்- எனவிரவியோரிடத்தின்கட்பிறவிடம்வருதலுங்கொள்க. பிறவுமன்ன. ஒருபாற்பொருளைமற்றொருபாற்சொல்லானும்ஓரிடப்பொருளைமற்றோரிடச்சொல்லானுங்கூறுதலின் வழுவா யவைசான்றோர்க்கொப்பமுடிந்தமையினமைதியாயின.— "ஒருவீ ரொருவீ ரொப்பினிர் கழிமின்.,, யானெம்மூர் புகுவன் என்பன வொருமையிற் பன்மைவந்தவழுவமைதியெனின், ஒருவீரொருவீ ரொப்பினைகழிவைவெனின்வழாநிலையாகவேண்டும் அங்ஙனமாகாமையி னொருவனொன்பதுயரிருபாற்றாயென்னுஞ் சூத்திரத்து "ஒருமொழியொழிதன்னினங்கொளற்குரித்தே யென்பதனான் அமைந்த வழாநிலையாம். யானெம்மூர்புகுவனென்புழித்தன்கிளையினைத்தன்னொடுபடுத் தெம்மூரென்றதலின் வழாநிலையாம் இத்தொடக்கத்து வழாநிலைகளை யிவ்வழுவமைதியாக வுதாரணங்கூறுவார் கூற்றையெல்லாமாய்த்துணர்ந்துகளைக. (உகூ)

௩௮௧. தரல்வரல் கொடைசெலல் சாரும்படர்க்கை- யெழுவாயிரண்டு மெஞ்சிய வேற்கும்; *

(எ-ன்.) இடம்வழுவற்கவெனக்காத்தலுணர்-ற்று.—(ப - ரை.) தரல் வரல் கொடை செலல்- தரல் என்பதுமுதலிய இந்நான்கு சொற்களையும், படர்க்கை- படர்க்கையானது, சாரும் - அடையும், எழுவாயிரண்டும்- இவற்றுள் முதலிற்சொல்லப்பட்ட தரல்வ

ரல் என்கிறவிரண்டுசொற்களையும், எஞ்சிய- ஒழிந்ததன்மை மு
ன்னிலைகள், எற்கும்- எற்றுவரும். எ-று. (பொ-ள.) இந்நால்வ
கைச்சொற்களையும் படர்க்கைசாரும் இவற்றுண்முதற்க ணின்ற
தரல்வரலென்னு மிருவகைச் சொற்களையுந் தன்மை மூன்னிலைக
ளேற்கும். எ-று. ❁ தரல் வரல் கொடை செலலென்பன அப்ப
குதிகளை யுணர்த்திநின்றன. [வ-று.] அவனுக்குத்தந்தான்- அவ
ன்பால்வந்தான் - அவனுக்குக்கொடுத்தான் - அவன்பாற்சென்று
ன்-எ-ம் - எனக்குத்தந்தான் - என்பால்வந்தான் - எ-ம்- நினக்கு
த்தந்தான் -நின்பால்வந்தான்-எ-ம்-வரும். இப்பகுதியிற்பிறந்த
எனை வினை விகற்பங்களோடுந், தொழிற்பெயரோடும் இவ்வாறே
யொட்டுக. இவைபடர்க்கை யிவைதன்மை முன்னிலை யென்னுது
சாருமேற்கு மென்றமையான் இடவிகுதிகள் போலிவையிடப்ப
குதிகளாகாது அவ்விடங்கட்கியைந்தமரபினவாமென்பதூஉம் த
ரல்வரலென்னும்இரண்டனையுந் தன்மைமுன்னிலைக்குங்கூட்டின
மையிற் படர்க்கைக்கே சிறந்தன கொடைசெலவென்னு மிரண்
டுமென்பதூஉம் எனைத்தரலும் வரலுமத்துணைச் சிறப்பினவல்
லவென்பதூஉம் இந்நெறிமயங்கி எனக்குக்கொடுத்தான் -என்பா
ற்சென்றான்-நினக்குக்கொடுத்தான் -நின்பாற்சென்றான்-எனவரி
ன் முன்னர்க்கூறிய இடவழு வமைதியின்பாற் படுமென்பதூஉ
ம்பெற்றாம்: படர்க்கைக்குப் பின்னைய விரண்டுஞ்சிறந்து முன்
னையவிரண்டு மத்துணைச் சிறப்பின்றியும் வருதல்காட்டிய வுதார
ணங்களுட்காண்க- (கூ௰)

௬௱அஉ. இறப்பெதிர்வு நிகழ்வெனக் காலமூன்றே. ❋

(எ-ன்·) முன்னர் வழுவுணர்த்துஞ் சூத்திரத்துண் முதற்கணி
ன்ற திணைபாலிடங்களின்பெயருமுறையுந் தொகையும்பெயரிய
லுட்போந்தமையின்அவற்றை யொழித்துஇறுதிக்கணின்ற கால
முதனுன்கினையுமுணர்த்தினல்ல தவற்றின்வழுவும்வழா நிலையும்வ
ழுவமைதியுந் தோன்றுமையின் அவற்றுட் காலத்தின்பெயருமு
றையுந் தொகையுமுணர்-த்று. (ப-ள.) இறப்பு - இறந்தகாலமு
ம், எதிர்வு-எதிர்காலமும், நிகழ்வு-நிகழ்காலமும், என-என்று,கா
லம்-காலமானது, மூன்று-மூன்றும். எ-று. பிறிதோரிலக்கணங்
கூறிய முகத்தான் முன்னர் விளங்கிக்கிடந்த காலவிகற்பங்களையீ
ண்டுத் தொகுத்துணர்த்தினமையினிது முடிந்தது முடித்தலெ
ன்னு முத்திக்கினம். (பொ-ள.) முன்னர்க்கூறிய காலமிறந்தகா
லமுமெதிர்காலமு நிகழ்காலமுமென மூன்றும். எ-று. ❁ யாதொ
ருபொருளுந் தோன்றுமளவிற் றேன்றி வளருமளவில் வளர்ந்து
முதிருமளவின்முதிர்ந்து அழியுமளவினழியுமன்றியுயிர்கள் வே

ண்டியவாருகாமையி னவற்றையவ்வளவி னவ்வா றியற்றுவது கா லமெனவுமதனுலியலும் பொருள்களின் ருெழிலிறந்தது மெதி ர்வது நிகழ்வதுமாதலி னவ்வாறியற்றுங் காலமு மூன்றுகூற்றதா மெனவு மூய்த்துணர்தலி னிங்ஙனமுணராது காலமின்றெனவுநி கழ்காலமொன்றுமே யெனவு மிறந்தகால மெதிர்கால மிரண்டு மேயெனவுங் கூறுவார் கூற்றைவிலக்கிக் காலமூன்றேயென்ருர். இதன் றிறமின்னும்விரித்துரைப்பிற்பெருகும். நிகழ்காலம் போ லவெள்ளிடைப்பொருளன்றி யிறந்தகால மெதிர்கால மிரண்டுமெ றைபொருளாய் நிற்றலி னிறப்பு நிகழ்வென்னுதிறப்பெதிர்வெ ன்ருர். (ஙக)

ஙா அரு. முக்காலத்தினு மொத்தியல் பொருளைச்-செப்புவர் நிகழுங் காலத்தானே. *

(எ-ன்.) காலவழுவமைப்புணர்-ற்று.(ப-ரை.) முக்காலத்தினும் மூன்றுகாலங்களினும்,ஒத்து-தமதுதொழிலிடையருதொத்து,இ யல்-நிகழுகின்ற, பொருளை-பொருள்களை, நிகழுங்காலத்தான்-நி கழ்காலத்திஞல்,செப்புவர்-சொல்லுவர்புலவர்.எ-று. (பொ-ரை) தந்தொழிலிடையருது முக்காலத்தினு மொருதன்மையவாயிய லும்பொருள்களை நிகழ்காலத்தாற்கூறுவர்புலவர்.எ-று.※[வ-று] அவனியைத்தாங்கியரசரிருக்கின்ருர்- நினக்குத்துணை யானிருக்கி ன்றேன்-எனக்குத்துணை நீயிருக்கின்ருய் -தெய்வமிருக்கிறது - நி லங்கிடக்கிறது-மலைநிற்கிறது-யாறொழுகுகிறது-எனவரும். இத ற்குச்செய்யுமென்னு முற்றை யுதாரணங் காட்டுவாருமுளர். அ துபல்லோர் படர்க்கைமுன்னிலை தன்மையாகவருமுக்காலத்தினு மொத்தியல்பொருட்கியையாமையானும்அவ்வழக்கின்மையானு மதுபொருந்தாதென்க. யாறொழுகும்-தீச்சுடும் எனவழங்குமா லோவெனின தொழுகுந் தன்மையையுடையது சுடுந்தன்மையை யுடையது என்னும்பொருட்டாய் நிற்றலின் "இயற்கைப் பொ ருளையிற்றெனக்கிளத்தல்.,,என்னுஞ் சூத்திரத்தின்பாற்படுமென் க.யாறொழுகுவது தீச்சுடுவதென்பதுமது. (ஙஉ)

ஙா அச. வினாவினுமிகவினுந் தெளிவினு மியல்பினும்,-பிற ழவும் பெறூஉமுக்காலமுமேற்புழி. *

(எ-ன்.) இதுவுமது. (ப-ரை.) வினாவினும்-வினாவினாலும், மிகவினும்-மிகுதியினாலும், தெளிவினும்-தெளிவினாலும், இய ல்பினும்-இம்மூன்றுகாரணங்களுமின்றி இயல்பினாலும், முக்கா லமும்-மூன்றுகாலங்களும்,பிறழவும்பெறூஉம் - ஒன்றுமற்றொ ன்ருகச்சொல்லப்படவும்பெறும்,ஏற்புழி-ஏற்குமிடத்து.எ-று. (பொ-ரை)வினாவு மிகுதி தெளிவென்னு மூன்றுகாரணத்தினானு மிக்காரணமின்றியுமுக்காலங்களையு மொன்றை யொன்ருகக்கூற

ப்படுமேற்குமிடத்து, எ-று. ※ காரணமின்றியென்பாரியல்பினுமென்றும்பிறந்த லொருதலை யன்றென்பார்பிறழவுமென்றும்வினைவுமுதலிய நான்கினுந் தனித்தனி முக்காலங்களுமுறையேபிறழாவென்டாரோற் புழியென்றுங்கூறினார். [வ-று.] சேரனுவேவாநிற்பவஞ்சுண்டுபோதற் பொருட்டாக இருந்தோனொருவனைப் புறத்துநின்றானொருவ னிருவரும் போகவேண்டுங் குறையுடைமையினின்னுமுண்டிலையோ வென்றானுண்டேனுண்டேனென்னும் உண்ணாநின்றானுமுண்டே னுண்டேனென்னும். இவைவினாவினெதிர்காலமுநிகழ்காலமு மிறந்தகாலமாயின. அக்காட்டிற்புகிற்கூறைகோட்பட்டான்-கள்வானினையிற்கையறுப்புண்டான் இதுமிகுதியினெதிர்கால மிறந்தகாலமாயிற்று. கூறைகோட்படுதலும் கையறுப்புண்ணுதலுந் தவறினுந்தவறுமாதலினிது மிகுதியாயிற்று. அறஞ்செயிற்சுவர்க்கம்புக்கான்-எறும்பு முட்டைகொண்டுதிட்டையேறின்மழைபெய்தது இது தெளிவினெதிர்கால மிறந்தகாலமாயிற்று. உரையளவையானுங் காட்சியளவையானு மிவற்றிற் கிவைகாரணமாகத் தெளிந்தமையினிது தெளிவாயிற்று. யாம்பண்டு விளையாடுவதிக்கா - யாம்பண்டுவிளையாடுகிறதிக்கா-இதுகாரணமின்றி யியல்பினானிறந்த காலமெதிர்காலமு நிகழ்காலமுமாயிற்று. பிறவுமன்ன. இவ்வுதாரணங்களுட்சிலவற்றை மாறிக்காட்டுவாருமுளர். அவை பொருந்தாமை அப்பொருள்களானுணர்க. உழுதுவருக-உண்டுவருக என்புழி உழுது உண்டென்பனவற்றையு மியல்பி னெதிர்கால மிறந்தகாலமாய் மயங்கினவென்பாருமுளர். வருதலைநோக்குங்கா லவையிறந்தகாலமேயாதலின் வழாநிலையாமென்க. (ருரு)

ருாஅ௬. அறிவறியாமை யையுறல்கொளல்கொடை - யேவ
றரும்வினா வாறு மிழுக்கார்- *

(எ-ன்.) வினாவின்பெயரு முறையுந் தொகையுமுணர் -ற்று. (ப-ரை.) அறிவு- அறிதலும், அறியாமை- அறியாமையும், ஐயுறல்- சந்தேகித்தலும், கொளல்-கொள்ளுதலும், கொடை-கொடுத்தலும், ஏவல்-ஏவுதலும், தரும்-தருதலால்வருகிற, வினா-வினாக்கள் ஆறும்-ஆறனையும், இழுக்கார்- களையாதுகொள்வர்புலவர். எ-று. (பொ-ரை) அறிவுமுதலியன தருதலானவரும் வினாவாறனையுங் களையாதுகொள்வர்புலவர். எ-று. ※ [வ-று] ஆசிரியனிச்சூத்திரத்திற்குப்பொருள்யாதென்பதறிவினா. மாணாக்கனவ்வாறுகூறுவதறியாவினா. குற்றியோமகனோவென்பதையவினா. பொன்னுளவோ மணியுளவோவென்பனகொளல்வினா. சாத்தற்காடையில்லையோ வென்பது கொடைவினா. சாத்தாவுண்டாயோ வென்பதேவல்வினா. இவற்றுளறிவுமறியாமையு மிவ்விரண்டும்விரவிய வையமும

ன்றிவினாவைத்தருவதொன்றின்மையி னவற்றைமுற்கூறியேனை
யவுமவற்றின்க ணடங்குமேனுங்கோளல் கொடையேவலென்னு
ம்பொருள் விசேடத்தான்வேறுவிதந்து பிற்கூறிமூன்றாகற்பால
னவற்றைப்பாறாகக்கூறுதல்தொன்று தொடுநெறியென்பாராறுமி
ழுக்காவொன்றுங் கூறினார். "அறியான்வினாவ லறிவொப்புக்காண்
டலையமறுத்த லவனறிவு தான்கோடன் - மெய்யவற்குக் காட்ட
லோடைவகை வினாவே.,, என்னு மொருசாரர்சிரியர் கூற்றினுள்
ளும் பின்னையவிரண்டு முன்னைய மூன்றனு ளடங்கு மென்பது
தோன்றவவற்றை முற்கூறுதல்•காண்க. (௫௪)

௩௱௮௰௬. சுட்டுமறைநேரேவல்வினாத- லுற்ற துரைத்த லுறுவ
துகூற- லினமொழியெனுமெண் ணிறையுளிறுதி - நிலவியவைந்
துமப்பொருண்மையினேர்ப. *

(எ-ன்.) இறையின் பெயரு முறையுந்தொகையும் வழுவமை
தியுமுணர்-ற்று. (ப-ரை.) சுட்டு-சுட்டும், மறை- எதிர்மறுத்தலு
ம், நேர்-உடன்படலும், ஏவல்-ஏவுதலும், வினாதல்- எதிர்வினாவுத
லும்,உற்ற துரைத்தல்-உற்றதைச்சொல்லுதலும், உறுவதுகூறல்-
உறுவதைச் சொல்லுதலும், இனமொழி- இனத்தைச்சொல்லுத
லும், எனும் - என்கிற, எண்ணிறையுள் - இவ்வெட்டு விடைகளு
ள், இறுதி - ஈற்றில், நிலவிய-விளங்கிய, ஐந்தும் - ஐந்தும், அப்
பொருண்மையின்- அவ்விடைப்பொருளைத்தருதலினாலே, நேர்
ப- விடைகளாகவேதழுவிக் கொள்ளுவர்புலவர். எ-று.(பொ-ரை)
இவ்விறையெட்டனுண் முன்னையமூன்றுஞ் செவ்வனிறையாம்பி
ன்னையவைந்து மிறைப்பொருள் பயத்தலி னிறையாகத்தழீஇக்
கொள்வர்புலவர் எ-று. ❋ எனவேயிறையாவதுசெவ்வனிறையும்
இறைபயப்பதுமென விருகூற்றதாமெனக [வ-று.]வஞ்சிக்குவ
ழியாதென்றவழியிதுவென்றும் மாவீழ் நொச்சியென்பதற்குப்
பொருள்யாதென்றவழி வண்டுவீழ்ந்துதேனுண்ணு நொச்சிப்பூ
வென்றுங்கருதிக்கூறுந் தொடக்கத்தன வெல்லாஞ் சுட்டு.சாத்தா
விது செய்வாயோ வென்றவழிச் செய்யேனென்பதுமறை. செ
ய்வேனென்பது நேர். நீசெய்யென்பதேவல். செய்வேனோவென்
பது வினாதல். இவ்வோகாரவிடைச்சொற் கெதிர்மறை முதலிய
பொருள் விலக்கி ஆற்றலான் வினாப்பொருளே கொள்க. உடம்பு
நொந்தது நோவாநின்றது என்ப துற்றதுரைத்தல், நோவாநி
ன்றதென்பது நிகழ்காலமாயினு நோவெழுந்த காலங்கருதி யுற்
றதுரைத்தலாயிற்று. உடம்புநோமென்ப துறுவதுகூறல். மற்
றையது செய்வேனென்ப தினமொழி. இறைபயப்பனவற்றுள்
வினாவெதிர் வினாதலொன்று நேர்தற்பொருளையு மேனைய நான்
குமறைப்பொருளையும் பயத்தல்காண்க. இறை பயப்பனவற்

றை நிலவியவென விசேடித்தமையி னிலவாதனவுஞ் சிலவுளவெனப்பொரு ளுணாத்துச் செய்வேனோவென வெதிர்மறையோகாரமாயும் யானோசெய்வேனெனச் சிறப்போகாரமாயு நின்றுசெய்யேபினென் னு மிறைப்பொருள் பயந்துவருதலும் பிறவுங் கங்கையாடிப் போந்தேனொருகூறை யீகவெனவினுவில் வழியிறை நிகழ்தலுங்கொள்க. (௫௯)

௩௱௮௭- வினாவினுஞ் செப்பினும் விரவா சினைமுதல், *

(எ-ன்) வினாவுஞ்செப்பு முதல்சினையொற்றுமை கருதிவழுவக்கூறின் அமையாதெனக்காத்தலுணர்-ற்று.(ப-ரை) வினாவினும்-வினாவுதற்கண்ணும், செப்பினும்-விடைகொடுத்தற்கண்ணும், சினை-சினையும், முதல்-முதலும். விரவா-ஒற்றுமை கருதிமயங்கச் சொல்லப்படாவாம்.எ-று.(பொ-ரை) வினாவுதற்கண்ணுஞ் செப்புதற்கண்ணுஞ் சினைமுதல்களொற்றுமைகருதிமயங்கக்கூறப்படா. எ. று. ❈ [வ-று.] கண்பிறழ்ந்ததோ கயல்பிறழ்ந்ததோ-சாத்தனல்லனோ கொற்றனல்லனோ - எ-ம்- இவ்வாறு வினாவினார்க்குக்கண்பிறழ்ந்தது- கயல்பிறழ்ந்தது-சாத்தனல்லன்-கொற்றனல்லன்-எ-ம்-வரும். பிறவுமன்ன.எனவே கண்பிறழ்ந்ததோவெனச்சினையைவினவுவானதனையொழித்து அதனையுடையாளைக்கருதியிவள்பிறழ்ந்தாளோ கயல்பிறழ்ந்ததோவெனவினவுதலும்இவள் பிறழ்ந்தாளெனச் செப்புதலும் இவ்வாறு முதலைவினவுவானுஞ் செப்புவானு மதனையொழித்துச் சினையை வினவுதலுஞ் செப்புதலும் வழுவாமென்பதாயிற்று. இங்ஙனமாயிற் குயிலோ கிளவியெனவினவுவான் குயிலிசையைக் குயிலோவென்று வினவுதல் வழுவாம் பிறவெனி னவ்வாறுகூறுவான்குயிலைக்கருதாது அதனிசையையே கருதிக்கூறுதலானுங் குயிலிசையோ கிளவியென இசையென்னுஞ்சொல் லெஞ்சிநிற்றலானும் இத்தொடக்கத்தனவழுவாகாவென்க. (௬௰)

௩௱௮௮. எப்பொருளெச்சொலி னெவ்வா றுயர்ந்தோர்-செப்பின ரப்படிச் செப்புதன்மரபே. *

(எ-ன்) மரபாமாறுணர்-ற்று.(ப-ரை) எப்பொருள்-யாதொருபொருளை, எச்சொலின்-யாதொருசொல்லால், எவ்வாறு-யாதொருவழியால், உயர்ந்தோர் -அறிவுடையோர்கள், செப்பினர்-சொன்னார்களோ, அப்படி- அப்பொருளை அச்சொல்லால் அவ்வழியால், செப்புதல்-சொல்லுதல்,மரபு-மரபாம்.எ-று. (பொ-ரை) யாதொருபொருளை யாதொருசொல்லால் யாதொரு நெறியால் அறிவுடையோர் சொன்னார்களோ அப்பொருளை யச்சொல்லால் அந்நெறியாற்சொல்லுதன்மரபாம்.எ-று. ❈ எவ்வாறென்றதொ

ருபொருளைப்பல்சொல்லானும் பலபொருளை யொருசொல்லா
னுங்கூறுதன்முதலியவற்றையென்க அவற்றுட் சிலவருமாறு கு
திரைக்குட்டி-யானைக்குட்டி-எ-ம்-யானைக்கன்று-பசுவின்கன்று-
மான்கன்று-எ-ம்-வரும். பிறவுமன்ன. இவ்வாறன்றிப் பசுவின்கு
ட்டி குதிரைக்கன்று எனக்கூறின் வழுவாமாதலிற்சான்றோர்வழக்
கினுள்ளுஞ் செய்யுளுள்ளும்பயின்றுவருமரபறிந்துகொள்க-()

ருாஅகூ. வேறுவினைப் பல்பொருடழுவிய பொதுச்சொலு
ம்-வேறவற் றெண்ணுமோர் பொதுவினை வேண்டும். *

(எ-ன்.) மரபுவழுவற்கவென்பதுணர்-ற்று. (ப-ரை.) வேறுவி
னை-வெவ்வேறுவினைகளுக்குரிய, பல்பொருள் - பலபொருள்க
ளையும், தழுவிய - ஒருசேரத்தழுவிய, பொதுச்சொலும் - ஒரு
பொதுச்சொல்லும், வேறவற்று - அவற்றின் சிறப்புச் சொற்க
ளாக, எண்ணும்-எண்ணிநிற்கிறபலசொற்களும், ஓர்பொதுவினை
-எல்லாவற்றிற்கு முரியதோர்பொதுவினையை, வேண்டும்-கொ
ண்டுமுடியும்.எ-று.(பொ-ரை)வெவ்வேறுவினைகட்குரியபலபொ
ருள்களையு மொருங்குதழுவி நிற்குமோர் பொதுச்சொல்லும்அ
வற்றின்சிறப்புச்சொற்களாயெண்ணிநிற்கும் பலசொல்லு மொ
ன்றற்குரிய சிறப்புவினை வேண்டாதெல்லாவற்றிற்குமுரியதோர்
பொதுவினைவேண்டுவனவாம். எ-று ❁ [வ-று.] அடிசிலென்ப
துஉண்பன தின்பன நக்குவன பருகுவனவற்றிற்கெல்லாம்பொ
துச்சொல்லாகலா னதனையயின்றார் மிசைந்தாரென்க. அணியெ
ன்பது கவிப்பன கட்டுவன இடுவன தொடுவனவற்றிற்கெல்லாம்
பொதுச்சொல்லாதலி னதனை யணிந்தார் தாங்கினாரென்க. இய
மென்பது கொட்டுவன ஊதுவனவற்றிற்கெல்லாம்பொதுச்சொ
ல்லாதலி னதனையியம்பினார் படுத்தாரென்க. படையென்ப தெ
ய்வன எறிவன வெட்டுவன குத்துவனவற்றிற் கெல்லாம் பொது
ச்சொல்லாதலி னதனைவழங்கினார் தொட்டாரென்க. இனியெண்
ணியவழியுஞ் சிலநாட்சோறும் சிலநாளிடியும் சிலநாட்பாலும்சி
லநாணீரும் சிலநாட்சருகுமயின்றார் மிசைந்தாரென்க. கறியுஞ்
சோறு முண்டானென வெண்ணிக் கறியொடுவிராயசோற்றை யு
ண்டானென்னும்பொருட்டாய்ச் சிறப்பினொருமுடிபேற்பனவ
ற்றிற்கும் இவற்றிற்கும் வேற்றுமையுணர்க. குழையுநெடுநாணு
மணிந்தார்-பறையுங்குழலுமியம்பினார்-வாளும்வேலும் வழங்கி
னாரென்க. பிறவுமன்ன. (ருஅ)

ருாகூய. வினைசார்பினமிட மேவிவிளங்காப்-பலபொருளொ
ருசொற்பணிப்பர் சிறப்பெடுத்தே. *

(எ-ன்) இதுவுமது. (ப-ரை) வினை-வினையும், சார்பு-சார்பும்,
இனம்-இனமும், இடம்-இடமும், மேவி-பொருந்தி, விளங்கா-வி

ளங்காத,பலபொருளொருசொல்-பலபொருளொருசொல்லை, சிறப்பெடுத்து-சிறப்புச்சொல்லோடு கூட்டி, பணிப்பர் - சொல்லுவர்புலவர். எ-று. (பொ-ரை.) குறித்தபொருளை விளக்கும் வினையினையுஞ் சார்புமினமு மிடமுமுதலியபெயரினையும்பலபொருளொரு சொற்பொருந்திவிளங்கிக்கிடந்ததேலதனைவாளா கூறி யவ்வினை பெயர்களைப் பொருந்தாமையால் விளங்காது கிடந்த தனைச் சிறப்போடு கூட்டிக் கூறுவர்புலவர். எ-று. ❁ பாக்கு வெற்றிலை தின்றானென்றாற் சுண்ணாம்புங் கர்ப்பூரமுமுடன்றின்றானென்பது தழீஇக் கோடல்போற் சார்பின மிடமெனச் சிறந்தன வெடுத்தோதியேனைய,பெயர்களையுந்தழீஇக்கோடலின்முதலியவென்றாம். அன்றியினைத்தென்றதிபொருளெனக் கூறுதலுமொன்று. மேவியென்னும் வினையெச்சம் விளங்காவென்பதன்கண் முதனிலையோடு முடிந்தது. [வ-று.] மாவென்பது மாமரத்திற்கும் வண்டிற்கும் ஒருசார் விலங்கிற்குந் திருவிற்கும் பொதுவான பலபொருளொருசொல். இப்பொருள்களுள் மா பூத்தது காய்த்தது என்ற துணையானே மரமென்பது வினையான்விளங்கிற்று.— மாவீழ்தொச்சி மணிக்குர லூழ்த்தது என்ற துணையானே வண்டென்பது சார்பான் விளங்கிற்று. சேனையானைதேர்மாச்சதுரங்கம் என்றதுணையானே குதிரையென்பதினத்தான் விளங்கிற்று. சொற்றொறு மிற்றிதன்பெற்றியென்பதனானே இதனுட்சேனையென்பதுயானை முதலிய மூன்றுறுப்பினையுமொழித்துக் காலாண்மேற்சேறலும்இவ்விதியின்பாற் படுத்துக. மாமறுத்தமலர்மார்பு என்றதுணையானே திருவென்பதிடத்தான் விளங்கிற்று. இவைவாளா கூறப்பட்டன. இனி மாவேறினான் மா யாது என்ற வழிக்குறித்தபொருள்விளங்காமையின் விளங்குதற் பொருட்டுப்பாய்மாவேறினான்மாமரத்தின்கணேறினான்பாய்மா யாதுமாமரம்யாதுஎனச்சிறப்போடுகூட்டிக்கூறுக.பிறவுமன்ன

ருாகூக. எழுத்தியல் திரியாப்பொருடிரி புணர்மொழி-யிசைத் திரி பாற்றெளி வெய்துமென்ப. *

(எ-ன்.) இதுவுமது, (ப-ரை)எழுத்து-எழுத்தினது, இயல்-தன்மை, திரியா-வேறுபடாமல், பொருடிரி - பொருள்வேறு பட்டுநிற்கிற,புணர்மொழி-தொடர்மொழிகள்,இசைத்திரிபால்-குறிக்கப்பட்ட சொற்களினிறுதியும் முதலுந்தோன்ற இசையறுத்துச்சொல்லுகிற வேறுபாட்டால், தெளிவெய்தும்-துணிவுண்டாகும், என்ப,என்றுசொல்லுவர் புலவர்.எ-று.(பொ-ரை) எழுத்தினதியல்பு வேறுபடாது பொருள் வேறுபட்டுச்சொல்லும் பொருளுமையுறநிற்குந் தொடர்மொழிக ளங்ஙனங் குறித்துக் கூறுஞ் சொற்களினிறுதியுமுதலுந்தோன்ற இசையறுத்துக்கூறும்வேறு

பாட்டாற்றுணியப்படுமென்றுசொல்லுவர்புலவர். எ-று. ❁ என
வே அவ்வாறிசையறுத்துக்கூறுதன்மரபென்பதாயிற்று. [வ-று]
செம்பொன்பதின்றொடி - நாகன்றேவன் போத்து - தாமரைக்க
ணியார்-குன்றேருமா- குறும்பரம்பு - ஆற்றுக்கணா-செம்பருத்
தி-என்றற் றொடக்கத்தனவற்றை யவ்வாறிசையறுத் துச்சரித்து
க்காண்க. (௪௰)

நூ௩௯௨. ஒருபொருண் மேற்பலபெயர்வரி னிறுதி-யொருவி
னைகொடுப்ப தனியுமொரோவழி. *

(எ-ன்) மரபுவழுவற்கவெனக்காத்தலுமதன்வழு வமைப்பு மு
ணர்-ற்று. (ப-ரை). ஒருபொருண்மேல் - ஒருபொருளின்மேலே,
பலபெயர் - பலபெயர்கள், வரின்-வருமாயின், இறுதி-இறுதியி
ல், ஒருவினை-ஒருமுடிக்குஞ்சொல்லை, கொடுப்ப- பொருளொன்
றேயென்பதுதோன்றக்கொடுத்துக்கூறுவர், ஒரோவழி-ஒருபொ
ருளாகுதலை தவறாதவிடத்தே, தனியும்- பெயர்தோறும், கொடு
ப்ப-கொடுத்துக்கூறுவர். எ-று. (பொ-ரை.) ஒருபொருண்மேற்
பலபெயர் வருமாயிற் பொருளொன்றேயென்பதுதோன்ற வி
றுதிக்கணொருவினைகொடுத்துக் கூறுவர் ஒருபொருளாதறவறாத
வழிப்பெயர் தோறுங்கொடுத்துங்கூறுவர் புலவர், எ-று-❁ ஒரு
பொருட்கொருமுடிபென்பாரொருவினைகொடுப்பவென்றுரான்
றியொருபெயர்கொடுத்தலை யொழித்தாரல்லரென்க. [வ-று.] ஆ
சிரியன்பேரூர்கிழான் சாத்தன்வந்தான் -எ-ம்- பாண்டியன் ப
ல்யாகசாலைமுதுகுடுமிப்பெருவழுதியிவன்-எ-ம்- "குயிலைச்சில
ம்படிக் கொம்பினைத் தில்லையெங் கூத்தப்பிரான் - கயிலைச்சிலம்
பிற் பைம்பூப்புனங் காக்குங் கருங்கட்செவ்வாய்-மயிலைச் சிலம்ப
கண்டியான்போய்வருவன் வண்பூங்கொடிகள்- பயிலச்சிலம்பெதி
ர் கூய்ப்பண்ணை நண்ணும் பளிக்கறைக்கே.,, எ-ம்- "பொருப்ப
ர்க்கியாமொன்று மாட்டேம் புகலப் புகலெல்லாக்காம் - விருப்பர்க்
கியாவர்க்குமேலர்க்குமேல்வருமூவெரித்த-நெருப்பர்க்கு நீடம்ப
லவருக்கன்பர் குலநிலத்துக்-கருப்பற்று விட்டெனக் கொய்தற்ற
தின்திக்கடிப்புனமே.,, எ-ம்-இவையிறுதிக்க ணொருவினையும்பெ
யருங்கொடுக்கப்பட்டன. இனிப்பெயர் தோறுங்கொடுக்குமாறு
"மின்றோய்வரைகொன்ற வேலோன்புகுதுக - வின்றேன்கமழ்தா
ரியக்கன்புகுதுக-வென்றோன்புகுதுக வேலோன்புகுதுக-வென்
றே நகரமெதிர் கொண்டதுவே.,, எனவரும். பிறவுமன்ன (௪௧)

நூ௩௯௩. திணைநிலஞ்சாதி குடியேயுடைமை - குணந்தொழில்
கல்விசிறப்பாம் பெயரோ -டியற்பெய ரேற்றிடிற் பின்வரல்சிற
ப்பே. *

(எ-ன்.) இதுவுமது. (ப-ரை) திணை-ஐந்திணையும், நிலம்-தேச

மும், சாதி-குலமும், குடி-குடியும், உடைமை-உடைமையும், குணம்-குணமும், தொழில்-தொழிலும், கல்வி-வித்தையும், ஆகிய விவற்றைப் பற்றிவருகிற, சிறப்பாம்பெயரோடு-சிறப்புப்பெயரோடு, இயற்பெயர்-இயற்பெயரை, ஏற்றிடின்-ஒருபொருள்ஒ ந சேரவேற்குமாயின், பின்வரல்-அவ்வியற்பெயர் பின்வருதல், சிறப்பு-சிறந்தமரபாம். எ-று (பொ-ரை) திணைமுதல ககல்வியீறாக விதந்தன முதலிய பற்றிவருஞ் சிறப்புப் பெயருடனே யியற்பெயரை யொருபொருளொருங் கேற்குமாயின் அவ் வியற்பெயர்பின்வருதல் சிறந்தமரபாம். எ-று ※ ஏற்றற்குவினைமுதலொரு பொருளென்பது மேலைச்சூத்திரத்தாற் பெற்றாம். சிறப்பேயென்றமையான் முன்வருமென்பதூஉம் அதுவழுவமைதியென்பதூஉம்பெற்றாம். [வ-று] குன்றவன்கொற்றன்- அறிவாளனழகன்-பார்ப்பான் பாராயணன்-ஊர்கிழ ரேணைச்- பொன்னன்பொறையன்-கரியன்கம்பன்-நாடகிநம்பி- ஆசிரியனமித்தனெனவரும், இவையியற் பெயர் பின்வந்தன. இனிக்கொற்றன் குன்றவன்-அழகனரிவாளன் எனமுறையேயியற்பெயர்முன்னும்வருதல்காண்க. இன்னு மியற்பெயர்முன்னும்வருங்கால்வெண்கொற்றப்படைத்தலைவன்-வெள்ளேறக்காவிதி என விறுதிவிகாரமாய்வருதலுங்காண்க. பிறவுமன்ன. (சஉ)

ஙாகூச படர்க்கைமுப்பெயரோ டணையிற் சுட்டுப்-பெயர்பின்வரும்வினை யெனிற்பெயர்க்கெங்கு-மருவும்வழக்கிடைச் செய்யுட்கேற்புழி. *

(எ-ன்) இதுவுமது. (ப-ரை) படர்க்கை-படர்க்கையிடத்தையுடைய, முப்பெயரோடு-உயர்திணைப்பெயர் அஃறிணைப் பெயர் விரவுப்பெயர் என்கிற மூவகைப்பெயர்களோடு, சுட்டுப்பெயர்-சுட்டுப்பெயர், அணையின்-சேரின், பின்வரும்-அச்சுட்டுப்பெயர் பின்வரும், வினையெனின்-அவ்விடத்தேவினையாகிய முடிக்குஞ் சொல்வருமாயின், பெயர்க்கு-அம்முடிக்குஞ் சொல்லில்லையாயின் அப்பெயர்க்கு, எங்கும்-பின்னுமுன்னும், மருவும்-வரும், வழக்கிடை-இம்மரபு வழக்கத்திடத்திலாம், செய்யுட்கு-செய்யுளிடத்தே, ஏற்புழி-நியதியின்றிவேண்டியவாறேவரப்பெறும்-எ-று. (பொ-ரை.) படர்க்கையிடத்தவாகிய வுயர்திணைப்பெயர் அஃறிணைப்பெயர் விரவுப்பெயரென்னு மூவகைப்பெயரோடு சுட்டுப்பெயர் சாரின் அச்சுட்டுப்பெயரம்மூவகைப்பெயர்க்கும்பின்வரும் அவ்வழிவினை நிகழ்வழியெனின் வினைநிகழ்ச்சியின்றேல் அப்பெயர்க்குப் பின்னுமுன்னும்வரும் இம்மரபு வழக்கின் கண்ணே வாம் செய்யுட்கண்ணே யெனினியதியின்றி வேண்டியவாறேவர

ப்பெறும். எ-று. ❁ [வ-று.] நம்பிவந்தானவற்குச் சோறிடுக-எருதுவந்த ததற்குப் புல்லிடுக-சாத்தன்றெய்வமவற்குப்பலியிடுக-சாத்தன்வந்த் ததற்குப் புல்லிடுக- என வினைநிகழ்வழிச் சுட்டுப்பெயர்பின்வந்தன. வந்தானம்பியவற்குச் சோறிடுக எனவுமுறையேயொட்டுக. இவற்றுட்சாத்தன் றெய்வமென்புழி வினையின்றிப்பெயர்வந்த தாலோவெனின், படர்க்கைமுப்பெயருந்தனித்து நில்லாதுபெயர் வினைகளைக்கொண்டு முடிதலும் பெயர்வினைகட்குப் பயனில்லையாயும் புடைபெயரும் புடைபெயர்ச்சியை வினையென்று மப்புடைபெயர்ச்சியுள்வழிச்சுட்டுப் பெயர்வரிற் பின்வருமென்றுங் கூறினாரன்றி யிவ்வினையை வினையென்றாரல்லரென்க. மைந்தன்பிறந்தானதனாற் றந்தையுவக்கும் என்புழியது வென்னுஞ் சுட்டு மைந்தனை யணைந்ததில்லை யாலோவெனின், அவன்றற்கிழமையாகிய பிறத்தலை யணைதலி னவனை யணைந்ததேயாமென்க. அன்றிச்சொற்றொறு மிற்றிதன் பெற்றியென்னுஞ் சூத்திரத்தான் அமைத்தலுமொன்று. நம்பியவன்-அவனம்பி எனப்பெயர்க்குப் பின்னு முன்னுஞ் சுட்டுப் பெயர்வந்தன. ஏனைப் பெயர்களோடுமொட்டுக. பெயர்க்குப் பின்னுமுன்னுஞ் சுட்டுப் பெயர்வருதன் மரபாமன்றே யிதனை வழுவற்கவெனக் காத்தலெவ்வழுவாமை கருதியெனின், சுட்டுப்பெயர் பின்வரும் வினையெனிலெனக் கூறினமையின் வினையில்வழிச் சுட்டுப்பெயர்படர்க்கை முப்பெயர்க்கும் பின்வருமோ முன்வருமோ இருமருங்கும்வருமோ வாராதொழியுமோ யாங்ஙன மாங்கொலென்னுமையமறுத்தற்குக் கூறினாரன்றி யிதுவழுவற்கவெனக்காத்தாரல்லர். அக்கருத்துச் சுட்டுப்பெயர்பின்வரும்வினையெனி லென்றதற்கே கொள்க. அதனையவ்வாறுகாத்த லெவ்வழுவாராமை கருதியெனின். நம்பிவந்தானவற்குச் சோறிடுகவென்பானவற்குச் சோறிடுக நம்பிவந்தா னென்றேனும்அவன்வந்தானம்பிக்குச்சோறிடுகவென்றேனுஞ் சுட்டுப்பெயரை முன்வைத்துக்கூறினஃதொருபொருண்மே லிருபெயர்வந்த தாகாது நம்பிவே றவன்வேறாய்முடியு மவ்வழுவாராமை கருதியென்க. இனிச்செய்யுட்கேற்புழி வருமாறு "அவனணங்கு நோய்செய்தா னாயிழாய்வேலன் - விறன்மிகுதார்ச் சேந்தன்பேர்வாழ்த்தி-முகனமர்ந்- தன்னையலர்கடப்பந் தாரணியி னென்னைகொல்-பின்னையதன்கண் விளைவு." எனவரும். செய்யுட்கண்பின்வருதல் வழுவற்கவெனக்காத்தலுமிப்பாட்டின்கண் முன்வருதல் வழுவமைதியுமாமென்க, பிறவுமன்ன.()

௩௯௫. அசைநிலைபொருணிலை யிசைநிறைக்கொருசொல்-விரண்டு மூன்றுநான் கெல்லைமுறை யடுக்கும். *

(எ-ன்) இதுவுமது. (ப-ரை.) அசைநிலை - அசை நிலைக்கும்,

பொருணிலை-விளாவுவெகுளியுவகை யச்சமவலமுதலாகிய பொ
ருணிலைக்கும், இசைநிறைக்கு-இசைநிறைக்கும், ஒருசொல் - ஒ
ருமொழி,இரண்டு-இரண்டும், மூன்று-மூன்றும், நான்கு- நான்
குமாகிய, எல்லை-அளவும், முறை-முறையாக, அடுக்கும்- அடுக்கு
ம். எ-று (பொ-ளை) அசைநிலைக்கும் விளாவு வெகுளியுவகையச்
ச்ச மவல முதலிய பொருணிலைக்கு மிசைநிறைக்கு மொருசொ
ல்லிரண்டு மூன்று நான்களவுமுறையே யடுக்கும். எ- று. ❊ எ
னவேயசைநிலைக்கிரண்டும் பொருணிலைக்கிரண்டுமூன்றும் இசை
நிறைக்கிரண்டு மூன்றுநான்கு மடுக்குமென்பதாயிற்று. [வ-று]
ஒக்குமொக்கும்-அன்றேயன்றே என்பனவசைநிலை. உண்டேனு
ண்டேன்-போபோபோ என்பனவிளாவு.எய்யெய்-எறியெறியெ
றி என்பனவெகுளி. வருகவருக- பொலிகபொலிகபொலிக என்
பனவுவகை. பாம்புபாம்பு-தீத்தீத்தீ என்பனஅச்சம் - உய்யேனு
ய்யேன்- வாழேன் வாழேன்வாழேன் என்பனஅவலம். இவைமுத
லியபொருணிலை. "ஏவயம்பன்மொழிந்தனளாயே.,,-"நல்குமே
நல்குமே நல்குமே நாமகள்.,,-"பாடுகோ பாடுகோ பாடுகோ பா
டுகோ.,,என்பனஇசைநிறை. பிறவுமன்ன. ஒருசொல்லைப் பலகாற்
கூறுதல்வழுவாயினு மிவ்விடத்தாமென்றல் வழுவமைதியு மிதற்
கிவ்வெல்லையிறவாதென்றல் வழுவற்கவெனக்காத்தலுமாமென்க

ருாகூக. இரட்டைக்கிளவி யிரட்டிற்பிரிந்திசையா. ❊

(எ-ன்) மரபுவழுவற்க வெனக்காத்தலுணர்-ற்று. (ப-ளை)இர
ட்டைக்கிளவி-இரட்டைச்சொற்கள், இரட்டின் - அவ்விரட்டிப்பி
ன்,பிரிந்து-நீங்கி,இசையா-தனித்துஒலியாவாம்.எ-று (பொ-ளை)
இரட்டைச்சொற்களவ்விரட்டிப்பிற்பிரிந்துதனித்தொலியா எ-று
❊ எனவேவலிந்து பிரித்துக்கூறிற்பொருள்படாதென்பதூஉம்
இரட்டித்துக் கூறுதலேமரபென்பதூஉ மாயிற்று. [வ-று] "ச
லசலமும்மதம்பொழிய.,,-"கலகலகூந்தணையல்லால் ,,-"குறுகு
றுநடந்துஞ் சிறுகைநீட்டியும்.,,-வற்றிபவோலைகலகலக்கும் ,,—
"துடிதுடித்துத்துள்ளிவரும்.,,எனவரும். துடிதுடித்தென்புழி
ப்பின்னையது பிரிந்திசைக்குமேனு முன்னையது பிரிந்திசையா
மையினிரட்டைச்சொல்லேயாமென்க. பிறவுமன்ன. (சறு)

ருாகூஎ. ஒருபொருட்பல்பெயர்பிரிவிலவரையார். ❊

(எ-ன்) இதுவுமது.(ப-ளை) ஒருபொருள்-ஒருபொருளின்மே
ல், பல்பெயர் -பலபெயர்சொல்லும்போது, பிரிவில-அப்பொ
ருளினின்றும் பிரிதலில்லாதனவற்றை, வரையார்- நீக்காதுகொள்
வார் புலவர். எ-று. (பொ-ளை) ஒருபொருண்மேற்பல பெயர்கூ
றுங்கால்அப்பொருளினின்றும் பிரிதலிலலாதனவற்றை நீக்காது
கூறுவர்புலவர்.எ-று. ❊ எனவேபிரிவுள்ளனவற்றைக்கூறுரொன்ப

தாயிற்று. [வ-று] ஆசிரியன்பேரூர்கிழான்சாத்தன்வந்தான்-பாண்டியன் பல்யாகசாலை முதுகுடுமிப்பெருவழுதிவந்தான் என்பனபிரிவிலவாய்ப் பலபெயருமொருபொருண்மேற்சென்றுகேட்போர்க்குக்கூறுவோன் கருதியபொருள் விளக்கிநின்றன. "வையைக்கிழவன் வயங்குதார்மாணகலந்-தையலாய்நீயின்று நல்கினை நல்காயேற் - கூடலார் கோவோடு நீயும் படுதியே-நாடறியக் கவ்வை யொருங்கு.,, எ-ம். "கொய்தளிர்த் தண்டலைக் கூத்தப்பெருஞ்சேந்தன்-வைகலுமேறும் வயக்களிறே - கைதொழுவல்- காலேகவண்ணனைக்கண்ணுரக்காணவெஞ்- சாலேகஞ்சாரநட ,, எ-ம் சுட்டின் பொருளவாய் வரும்பெயரொடு தொக்கவொருபொருட்பலபெயர்களுமன்ன. பிரிவென்றதற் கிவ்வாறு பொருள்கூறுது கொய்தளிர்த்தண்டலை யென்னும் பாட்டினுட் காலேகவண்ணஞ் சேந்தனுக்கும் பிறர்க்கு முண்டாதலைப் பிரிவென்று கருதியிதுவழுவென்பாருமுளர். காலேகவண்ணம் பொதுவியல் பன்றிச் சேந்தனிற் பிரிந்ததன்றுதலானுஞ் சேந்தனைக்களிற்றின்மேற்செய்மைக்கண் வரக்கண்டாளவனைக் கண்ணுரக்காணவேண்டும் பெருவேட்கைதந்ததவனதுகாலேகவண்ணமென்பாளவ்வாறுகூறவேண்டு மாதலானுமிது சான்றோரிலக்கியமாதலானுமது பொருளன்றென்க. இனிப்பிரிவுளதாய்வழுவியதியாதோவெனின், "பகைபியல்பாயிலி படைக்லகமறவன்.,, எனவரிற் பகையியல்பாயிலியைப் படைக்கைமறவனென்றல் கூடாமையிற் பிரிந்துவழுவாமென்க. பிறவுமன்ன. (௬௭)

௩௱௯௮. ஒருபொருட்பன்மொழி சிறப்பினின் வழா. *

(எ-ன்) மரபுவழுவமைப்புணர்-ற்று. (ப-ரை) ஒருபொருள்-ஒருபொருளைக்குறித்து வருகிற, பன்மொழி-பலசொற்கள், சிறப்பினின்-சிறந்துநிற்கையால், வழா-அவைவழுவென்றுநீக்கப்படாவாம். எ-று. (பொ-ரை) ஒருபொருளைக் குறித்துவரும் பலசொற்களவ்வாறு வருதற்கோர் காரணமின்றேனுஞ் சிறந்து நிற்றலினவை வழுவென்று நீக்கப்படா. எ-று. ☼ சிறந்துநிற்றல் செவிக்குச் சொல்லின் பந்தோன்றநிற்றல். சிறப்பினினென்றமையாற் காரணமின்றிவந்தன வென்பதுபெற்றும். [வ-று]. "மீமிசைஞாயிறுகடற்பாய்ந்தாங்கு.,,-"புனிற்றிளங்கன்று,,-"நாகிளங்கமுகு,, "அடுபசியுழந்த நின்னிரும்பேரொக்கல்.,,-"உயர்ந்தோங்கு பெருவரை,,-"குழிந்தாழ்ந்த கண்ணவாய்த்தோன்றி,, எனவரும் பிறவுமன்ன. இனிச்சிறப்பினினென்றதற்கப்பொருளைச் சிறப்பித்தலினெனப்பொருள்கூறுவாருமுளர். அச்சொற்கப்பொருளிலையாமையானுமக்காரணத்தான்வந்தனவேலீண்டொருபொருட்பன்மொழியாய் வரும்பெயர்களொருபொருட் பலபெயருளட

ங்குமாதலானு மீமிசையென்றான் மேலென்றேபொருளன்றி வி
சேடித்ததோர்சிறப்பின்மையானும் உண்டேலஃதிஃதெனவிதந்
து கூறுவாராதலானு மதுபொருளன்றெனக (௬௭)

நூ. ௬௮. இனைத்தென் றறிபொரு ளுலகினிலாப்பொருள்-வி
னைப்படுத் துரைப்பி னும்மைவேண்டும். *

(எ-ன்) மரபுவழுவற்கவெனக் காத்தலுணர்-ற்று. (ப-ரை.) இ
னைத்தென்று -இவ்வளவினதென்று, அறிபொருள்- அளவறியப்
படுகிறபொருளும், உலகினிலாப்பொருள் - எக்காலத்தும் எவ்வி
டத்தும் இல்லாதபொருளும், வினைப்படுத்துரைப்பின் - வினைப்
படுத்துச்சொல்லும்போது, உம்மை- முற்றும்மையை, வேண்டு
ம்-வேண்டிநிற்கும். எ-று. (பொ-ரை.) இத்துணைத்தென்று வரை
யறையுணரப்படும்பொருளும் எக்காலத்தும் எவ்விடத்தும் இல்
லாதபொருளும் அவற்றை வினைப்படுத்துக்கூறுங்கால் முற்றும்
மைவேண்டிநிற்கும். எ-று. ❁ பொருளெனவேறுவிதந்தமையி
னுலகென்றதொழிந்தகால மனைத்தினையும் இடமனைத்தினையுமெ
ன்பதூஉம் இனைத்தென்றறி பொருளென்றமையானும் உலகெ
னக்காலமனைத்தினையு மிடமனைத்தினையுங் கூறுதலானும் உம்மை
யென்றது முற்றும்மையை யென்பதூஉம்பெற்றாம். [வ - று.]
தமிழ்நாட்டுமூவேந்தரும்வந்தார் - உலகமூன்றினையு மொருங்கு
ணர்ந்தான்- நின்கண்வைத்தபொரு ணூற்றினையுமவ்விருவருக்கு
ங்கொடு-இறைவற்குக்கண் மூன்றுமுச்சுடர்- இறைவற்குடைம்பா
ர்வை யிரண்டுந்தோல் - என இனைத்தென் றறிபொருள் வினைப்
படுத்துரைப்பின் உம்மைவேண்டிநின்றன இவற்றுள் முச்சுட
ர்தோலென்பனபெய ராமேலாவெனி னீண்டுவினையென்றதூஉஞ்
சுட்டுப்பெயர்பின்வரும் வினையெனிலென்றதுபோலும். பவள
க்கோட்டு நீலயானையென்றுமில்லை- முயற்கோட்டாகாயப்பூவென்
றுமில்லை-மண்ணிற்படமென்றுமில்லை - நூலிற்கடமென்றுமில்
லை-ஒளிமுன்னிருளென்றுமில்லை- என வுலகினில்லாதபொருள்வி
னைப்படுத்துரைப்பினும்மைவேண்டிநின்றன. எவ்விடத்து மில்
லையெனவுமொட்டுக. உம்மை வருமென்னு தும்மைவேண்டு மெ
ன்றமையா னஃதிசையெச்சமாய்நிற்க அதனை வேண்டுவனவாய்
"வன்பறழ்க்குமரி யிருதோடோழர்பற்ற,,- "எருமைநாற்கானீ
ர்க்கீழவ்வே,,-எ-ம்- மண்ணிற்படமில்லை- நூலிற்கடமில்லை- ஒளி
முன்னிருளில்லை-எ-ம்- வரும். இவ்வில்பொருளின்கட் காலப்பெ
யரிடப்பெயர்களு மூடனெஞ்சிநின்றன. இவ்வாறுவருதல் கரு
தாது செய்யுள்விகாரமாக வும்மைதொக்கதென்பாருமுளர். உல
கினில்லாப்பொருள் உள்பொருள்போற்காலத்தோடுபட்ட தன்

றென்பதுதோன்ற வென்றுமில்லையென்னாது காலத்தோடு பட்டதுபோலவைத்துப் பவளக்கோட்டுநீலயானை பண்டுமில்லையெனவெச்சவும்மைதந்து உதாரணங்காட்டுவார். அதுயானைகுடத்தினுமில்லை குழிசியினுமில்லையென்றதுபோலுமெனக. இப்படுமொழிதலானுலகின்கணில்லையில்பொருள்வினைப்படுத்துமைப்பினெச்சவும்மைவேண்டுமெனவும் பொருளுணாத்துக் கொள்க.— அவைவருமாறு- செல்வமுநில்லாது- செல்வமும்பொய் -எனவரும். செல்வநில்லாது- செல்வம்பொய்-என வெச்சவும்மைகொடாது வாளாகூறி னிளமை யாக்கை முதலியன நிலைபெறுமெனவுமெய்ப்பொருளெனவும் பொருள்படுமென்க. உம்மை வேண்டுமென்றதனாற் செல்வநில்லாது செல்வம்பொய்எனவும்மையெஞ்சிநிற்றலுங்கொள்க. (௪௮)

௪௱. செயப்படுபொருளைச் செய்ததுபோலத் -தொழிற்படக்கிளத்தலும் வழக்கினு ளுரித்தே. *

(எ - ன்.) மரபுவழுவமைப்புணர் -ற்று. (ப-ரை.) செயப்படுபொருளை-செயப்படுபொருளை, செய்ததுபோல- வினைமுதலைப்போலவைத்து, தொழிற்பட- அதன்மேல் அவ்வினைமுதல் வினையேற்றி, கிளத்தலும்-சொல்லுதலும்,வழக்கினுள்- வழக்கினிடத்து, உரித்து-உரித்தாம். எ - று. (பொ-ரை.) செயப்படுபொருளைக் கருத்தாவைப்போலவைத் தன்மேல் வினைமுதல்வினையேற்றிக்கூறுதலும் வழக்கின்கணுரித்தாம்.எ-று. ※ [வ-று.] இம்மாடி யான்கொண்டது- இச்சோறியான்கொடுத்தது - இவ்வெழுத்தியானெழுதியது எனவரும். உம்மையாற் கருமத்தைக் கருத்தாவாக இவ்வாறுகூறுதலேயன்றிக் கருவி நிலஞ் செயல் காலங்களைக்கருத்தாவாகக்கூறுதலும் அமையுமென்பது பெற்றும். அவைவருமாறு இவ்வெழுத்தாணி யானெழுதியது- இவ்வீடியானிருந்தது- இத்தொழி லியான்செய்தது- இந்நாளியான்பிறந்தது எனவரும். இனி இல்லமெழுகிற்று- எழுத்தாணியெழுதிற்று-என வுதாரணங்காட்டுவாருமுளர். இல்லமெழுகிற்றென்பதோர் வழக்கின்மையானும் நடத்த நடந்ததேரினைப்போல வொருவனெழுதவெழுதியதெழுத்தாணியாதலி னதுதன்றொழிலேயன்றி யொருவன்றொழிலன்றுதலானு மவைகாட்டாகாவென்க. (௪௯)

௪௱௧. பொருண்முதலாறு மடைசேர் மொழியின- முள்ளவு மில்லவு மாமிரு வழக்கினும். *

(எ-ன்.) மரபுவழுவற்கவெணக்காத்தலு மரபுவழுவமைப்புமுணர்-ற்று. (ப-ரை.) பொருண்முதல்-பொருளாதி, ஆறும்-ஆறுமி ய,அடைசேர்- அடைகளடுத்துவருகிற, மொழி-மொழிகள், இனமுள்ளவும்-இனமுள்ளவையேயாமன்றி,இல்லவுமாம்- இனமில்லா

தலைவயுமாம், இருவழக்கினும் - உலகவழக்கினுள்ளுஞ் செய்யுள்
வழக்கினுள்ளும். எ-று (பொ-ளா) பொருளாதியாறாகிய அடை
களடுத்து வருமொழிக ளினமுள்ளனவேயாமன்றி யினமில்லன
வுமா முலக-ழக்கினுள்ளுஞ் செய்யுள்வழக்கினுள்ளும். எ-று. ❁
உள்ளவுமென்னு முயர்வு சிறப்பும்மையு மில்லவுமென்னு மிழி
வு சிறப்பும்மையு மெண்ணினின்றன. [வ-று.] நெய்க்குடம் - கு
ளநெல்- கார்த்திகைவிளக்கு-பூமரம் - செந்தாமரை- குறுங்கூவி-
எ-ம்- உப்பளம்- ஊர்மன்று- நாளரும்பு- இலைமரம்- செம்போ
த்து-தோய்தயிர்-எ-ம்- வழக்கின்க ணினமுள்ளனவு மில்லனவும்
வந்தன. "பொருட்பெண்டிர் பொய்ம்மை முயக்கம்.,, -"கான்
யாற் றடைகரை,,-"மூந்நாட்பிறையின் முனியாது வளர்ந்தது,,
"கலவமாமயிலெருத்திற் கடிமலரவிழ்ந்தனகாயா.,, - "சிறுகோ
ட்டுப் பெரும்பழந்தூங்கியாங்கிவள்,,-"ஆடியாம்பெணப்புடை
யகன்றவல்குன்மேல்,, -எ-ம்- "பொற்கோட்டிமயமும்பொதிய
மும்போன்றே,, - "வடவேங்கடந்தென்குமரி,, - "வேனிற்கோ
ங்கின் பூம்பொகுட்டன்ன,, — "சிறகர்வண்டு செவ்வழிபாட.,,-
"செஞ்ஞாயிற்று நிலவுவேண்டினும்வெண்டிங்களுள் வெயில்வே
ண்டினும்,, - "முழங்குகடலோதமூழ்கிப்போக,,-எ-ம்- செய்யு
ட்கணினமுள்ளனவு மில்லனவும் வந்தன. இனமுள்ளனவற்றை
வாளாகூறிற் குறித்தபொருடோன்றாமையின் அடைகொடுத்து
விதந்துகூறுகவெனவும் இனமில்லனவற்றிற் கடைகொடுத்துக்
கூறுதன் மிகையாமாயினும் அமையுமெனவும் பொருள் போந்
தமையின் முன்னையது வழூவற்கவெனக் காத்தலும் பின்னையது
வழூவமைப்புமாமென்க. ஆசிரியர்தொல்காப்பியனார் "இனச்சு
ட்டில்லாப் பண்புகொள் பெயர்க்கொடை - வழக்காறல்ல செய்
யுளாறே.,, என்றமையிற் பொருண்முதலாறுமடையென்றுமிரு
வழக்கினுமென்று மிவ்வமைதியும் பயின்று வருமென்பது தோ
ன்ற வுள்ளவு மில்லவுமாமென இனமுள்ளனவற்றோ டொருங்கெ
ண்ணியுங் கூறினாரென்க. (௫௰)

௫௰௨. அடைமொழி யினமல் லதுந்தரு மாண்டுறின். ❁

(எ-ன்.) மரபுவழூவற்கவெனக் காத்தலுணர்-ற்று. பொருந்து
வன கொள்கவென்பா ராண்டுறி னென்றமையான். (ப-ரை.) அ
டைமொழி - முன்சொல்லப்பட்ட அடைசேர்மொழி, இனமல்
லதும்-இனத்தைத்தருவதன்றி இனமல்லாததையும், தரும் -கொ
டுக்கும், ஆண்டு - அவ்விடத்திற்கு, உறின் - பொருந்துமாயின்.
எ-று. (பொ-ளா.) மேற்கூறிய அடைசேர்மொழி யினத்தைத் த
ருதலேயன்றி யதனோ டினமல் லதனையுந் தரும் அவ்விடத்திற்கு
ப்பொருந்துமாயின். எ-று. ❁ [வ-று.] பாவஞ்செய்தா னரகம்

புகுமென்ற துணையானே புண்ணியஞ்செய்தான் சுவர்க்கம்புகுமென இனத்தைத் தருதலேயன்றி அவ னிதுசெய்யின் இதுவருமென்னு மறிவிலியென்னு மினமல்லதனையுந் தந்தது. மேலைச்சேரிச்சேவ லலைத்ததென்ற துணையானே கீழைச்சேரிச்சேவ லலைப்புண்டதென இனத்தைத்தருதலேயன்றி யச்சேவலுடையார்க்கு வெற்றியாயிற்றென்னு மினமல்லதனையுந்தந்தது. இனியிரட்டுறமொழிதலா னினமல்லதுந் தருமென்பதற் கினத்தைத்தருதலையொழித்தினமல்லதனையுந்தருமெனவும் பொருளுரைத்துக்கொள்க அவைவருமாறு- சுமந்தான் வீழ்ந்தானென்றாற்சுமவாதான் வீழ்ந்தா னல்லனென்னுங்கருத்துச் சொல்லுவார்க்கின்றாதலின் அவ்வினத்தையொழித்துச் சுமையும் வீழ்ந்ததென்னு மினமல்லதனையுந்தந்தது. காலையெழுந்து கருமத்திற் செல்வான் கோழிகூவிற்றென்றாலேனைப் புட்கள்கூவுகிலவென்னுங்கருத் தவற்கின்றாதலின் அவ்வினத்தை யொழித்துப் பொழுதுபுலர்ந்ததென்னு மினமல்லதனைத்தந்தது. பெய்முகி லனையா னென்றாற் கைம்மாறுகருதாத பெருங்கொடையாள னென்னும் இனமல்லதனையினமிலதாகிய அடைமொழிதந்தது. இவ்வடைகொடாதுமுகிலனையானென வாளாகூறினுமிக்கொடைப்பொருடருமாலோவெனின், அவ்வாறுகூறின் முகில்வண்ண னெனவும் பொருள்படுமாதலின் அதனையொழித்துக் கொடைப்பொருட் குரிமைசெய்த தவ்வடையேயாமென்க. பிறவுமன்ன. ஆண்டுறி னென்றமையான் இவ்வாறுபொருந்துவனகொள்க. (௫௪)

௪௱௪. அடைசினை முதன்முறை யடைதலு மீரடை - முதலோ டாதலும் வழக்கியலீரடை - சினையொடு செறிதலு மயங்கலுஞ் செய்யுட்கே. *

(எ-ன்.) மரபுவழுவற்கவெனக்காத்தலு மரபுவழுவமைப்புமுணர்-ற்று. (ப-ள்.) அடை- ஓரடையும், சினை- ஒருசினையும், முதல்- ஒருமுதலும், முறையடைதலும்- ஒன்றையொன்றுவிசேடித்துவருதலும், ஈரடை- இரண்டடை, முதலோடாதலும்- முதலைவிசேடித்துவருதலும், வழக்கியல்- வழக்குநடையாம், ஈரடை- இரண்டடை, சினையொடுசெறிதலும்- சினையை விசேடித்துவருதலும், மயங்கலும்- இவ்வரம்புகடந்துவருதலும், செய்யுட்கு- செய்யுணடையாகும். எ-று. (பொ-ள்.) மேற்கூறிய வடை முதல் சினைகளையடுத்துவருங்கா லோரடையு மொருசினையு மொருமுதலுமொன்றை யொன்றுவிசேடித்துவருதலு மிரண்டடை முதலை விசேடித்து வருதலும் வழக்கு நடையாம் இரண்டடை சினையை விசேடித்துவருதலு மிவ்வரம்பிறந்துவருதலுஞ் செய்யுணடையாம். எ-று. ❁ ஈரடை முதலோ டாதலு மென்றமையான்

முறையென்ற தொன்றை யொன்று விசேடித்துவருவ தென்ப துஉம் அங்ஙனம்வரவேயடைபலசினைபலவாராதொவ்வொன்று வருமென்பதுஉம் பெற்றும். [வ-று] வேற்கைமுருகன்- நிலப் பூநெரிஞ்சில்- கார்த்திகைப்பூக்கொடி- பழக்குலைவாழை - செங் காஞறை- முழங்குதிரைக்கடல்- எ-ம்- மனைச்சிறுகிணறு - சிறுகரு ருங்காக்கை-எ-ம்- வழக்கின்கண்வந்தன. "சிறுபைந்தூவியிற்செ யிரறச் செய்த.,, -"கருநெடுங் கண்டருங் காமநோயே.,,- எ-ம்- "பெருந்தோட்சிறுமருங்குற்பேரமர்க்கட் பேதை.,,-எ-ம்-செய் யுட்கண்வந்தன. பிறவுமன்ன. இவற்றுளடைசினை முதன்முறைய டைதலொன்றும் வழுவற்கவெனக் கூறத்தலுமேனைய மூன்றுமவ் வாறு நில்லாமையின் வழுவமைதியுமாமென்க. "கவிசெந்தாழை க் குவிபுறத்திருந்த - செவிசெஞ்சேவலும் பொருவலும்வெரு வா வாய்வன்காக்கையுங் கூகையுங்கூடி.,, எனவருவன கொம்புகூ ர்மாடு மடல்விரிதாழை என்றாற்போல வருதலினுயர்திணைதொ டர்ந்தபொருண்முதலாறுமென் னுஞ்சூத்திரத்துளஃறிணையொ டு சார்த்தி னஃறிணை முடிபினவா மெனவமைத்த தன்பாற் படு மென்க. (௯௨)

௩௱௪. இயற்கைப்பொருளை யிற்றெனக்கிளத்தல். *

(எ-ன்) மரபுவழுவமைப் புணர்- ற்று. (ப- ரை.) இயற்கைப் பொருளை - இயற்கைப்பொருள் செயற்கைப்பொருள் என்கிற இருவகைப் பொருள்களுள் இயற்கைப்பொருளை, இற்றென- இ த்தன்மைத்தென்று, கிளத்தல் - சொல்லுக. எ-று. (பொ-ரை.) இயற்கைப்பொருள் செயற்கைப் பொருளென இருவகைப்படு ம்பொருள்களு ளியற்கைப் பொருளை யித்தன்மைத்தென்று கூ றுக. எ-று. ❊ இயற்கையென்பதவிகாரம். செயற்கை யென்ப துவிகாரம். [வ-று.] மெய்யுள்ளது-பொய்யில்லது- நிலம்வலிது- நீர்தண்ணிது-தீவெய்து -மயிர்கரியது- பயிர்பசியது - எனவரு ம். நிலநீர்முதலிய பூதங்கண்மாலையின் விகாரமென்பதைநோக் கிற் செயற்கைப்பொருளாயினும் பூதத்தின் விகாரங்களை நோக் கினியற்கைப் பொருளாமென்க. இயற்கைப்பொருளை யிற்றென் னும் வினைக்குறிப்பாகிய செயற்படுத்துக் கூறுதலி னிதுவழுவ மைதியாயிற்று. இதுகருதாதிவ்வாறுகூறுதன் மரபென்பாருமு ளர். அதுநிற்க. வளியுளருந் தன்மைத்து - உயிருணருந் தன்மை த்து என்னுது வளியுளரும்- உயிருணரும்- எனவுமுதாரணங்கா ட்டுவர். வளியின்கண்ணுமுயிரின்கண்ணு முளர்தலு முணர்தலு மாகிய செய்யனிகழ்ந்ததுணையானே யவற்றிற்கவை செயற்கையா மன்றி யியற்கையாகாமையானு மவ்வாறு கூறுதற்கோர்விதியின்

மையானு மவைபொருந்தாவென்க. (௫௩)

௪௱௫. காரணமுதலா வாக்கம்பெற்றுங் - காரணமின்றி யாக்கம்பெற்று - மாக்கமின்றிக் காரணமடுத்து - மிருமையுமின்றியு மியலுஞ்செயும்பொருள். *

(எ-ன்.) மரபுவழூவற்கவெனக்காத்தலு மரபுவழூவமைப்புமுணர்-ற்று. (ப-ரை.) செயும்பொருள்- செயற்கைப்பொருள், காரணம்- காரணச்சொல், முதலா- முதல்வர, ஆக்கம்- ஆக்கச்சொல், பெற்றும்- பின்வரப்பெற்றும், காரணம்- காரணச்சொல், இன்றி-தொக்குநிற்க, ஆக்கம்-ஆக்கச்சொல், பெற்றும்-வரப்பெற்றும், ஆக்கம்-ஆக்கச்சொல், இன்றி- தொக்குநிற்க, காரணம்-காரணச்சொல், அடுத்தும்-வரப்பெற்றும், இருமையும்-அவ்விரண்டும், இன்றியும்-தொக்குநிற்கவும், இயலும்-நடக்கும். எ-று. (பொ-ரை) முதற்றுணை நிமித்தங்களாற் செய்யும் பொருளாகிய செயற்கைப் பொருளைக் கூறுங்காற் காரணச்சொன்முன்வர ஆக்கச்சொற் பின்வரப்பெற்றுங் காரணச்சொற்றொக்குநிற்ப ஆக்கச் சொல்வரப்பெற்றும்ஆக்கச்சொற்றொக்குநிற்பக் காரணச்சொல் வரப்பெற்றுமிவ்விருவகைச்சொல்லுந்தொக்குநிற்கவுநடக்கும். எ-று. ※ காரணச்சொல்லுமாக்கச்சொல்லும்யாண்டுவரினுமந்நிலைக்களத்துத்தந்து பொருளுணாக்கப் படுதலிற்காரணமுதலா வென்றார். [வ-று.] கடுவுங் கைபிழிபெண்ணெயும் பெற்றமையான் மயிர்நல்லவாயின - எருப்பெய்திளங்களைகட்டு நீர்கால்யாத் தமையாற் பயிர்நல்லவாயின- எ-ம்- மயிர்நல்லவாயின - பயிர்நல்லவாயின-எ-ம்-கடுவுங்கைபிழிபெண்ணெயும் பெற்றமையான்மயிர்நல்ல-எருப்பெய்திளங்களை கட்டு நீர்கால்யாத்தமையாற்பயிர்நல்ல- எ-ம்- மயிர்நல்ல- பயிர்நல்ல- எ-ம்-வரும். "பல்லார்தோ டோய்ந்து வருதலாற்பூய்புன-னல்வயலூரநின்றார்புலால்- புல்லெருக்க- மாகின்மணிப்பூணெம்மைந்தன் மலைந்தமையாற் - காதற்றாய்நாறுமெமக்கு.,, எனப்பரத்தையிற் பிரிந்ததலைவனைப்புலந்துமவன்செய்த தீங்கினைத் தன்னினியமுகத்தாற் றணிக்கும் புதல்வனையுவந்து மொன்றொன்றாகாதனவற்றை யாயினபோற்கூறும்வழியாக்கச் சொற்றொக வருதலும் அதன்பாற்படுத்துக. பிறவுமன்ன. காரணமுதலா ஆக்கம்பெறுதலொன்றும் வழூவற்கவெனக்காத்தல் மேனையமூன்றும்வழூவமைதியுமாமென்க. (௫௪)

௪௱௬. தம்பாலில்ல தில்லெனினினனா - யுள்ளதுகூறி மாற்றியுமுள்ளது- சுட்டியுமுரைப்பர் சொற்சுருங்குதற்கே. *

(எ-ன்.) மரபுவழூவற்கவெனக்காத்தலுணர்-ற்று. (ப-ரை) தம்பால்- தம்மிடத்து, இல்லது-இல்லாதபொருளை, இல்லெனின்-இல்லையெனின், இனனாய்- வினவப்பட்டதற்கு இனமாய், உள்ளது

இருக்கின்றபொருளை, கூறி-சொல்லி, மாற்றியும்-அச்சொல்லைக்கொண்டு அதனை இல்லையென்றும், உள்ளது- இருக்கிறபொருளாயின், சுட்டியும்-இவ்வளவுண்டென்றும், உரைப்பர்-சொல்லுவர், சொற்சுருங்குதற்கு- வினாவும் விடையுமாகிய சொற்கள் சுருங்குதற்பொருட்டு. எ-று. (பொ-ரை.) ஒருவன்வினவியது தம்பக்கலில்லையாயின் அதனை யில்லையென்னலுறி னவன் வினவியதற் கினமாய்த் தம்பக்க லுள்ளதனைக்கூறி யக்கூற்றானே யதனை யில்லையென்றும் உள்ளதாயி னித்துணை யுண்டென்றுங் கூறுவர்புலவர் வினவுதலுஞ் செப்புதலுமாகிய சொற்கள் சுருங்குதற் பொருட்டு. எ-று. ❋ குன்றக்கூறன் முதலிய குற்றங்களைக்கிச் சுருங்கச் சொல்லன் முதலிய வழகோடுகூறுதல் வழக்கிற்கும் வேண்டுமென்பார் சொற்சுருங்குதற்கேயென்றார். [வ-று.] பயறுண்டோவணிகீரோயென்றார்க் கஃதின்றென்பார் உழுந்துண்டு உழுந்துந் துவரையுமுண்டென்க. இவ்வினமொழிகள் பயறில்லையென்னுமிறைபயந்து நிற்றலி னினனுயுள்ளதுகூறி மாற்றியுமென்றார். அஃதுண்டென்பா ரித்துணையுண்டென்க. நூறுவிற்கும் பட்டாடையுண்டோவென்றார்க் கஃதின்றென்பா ரைம்பதுவிற்குங்கோசிகமுண்டென்க. அஃதுண்டென்பா ரெண்பது விற்பதுண்டென்க. பிறவுமன்ன. இவ்வாறன்றி யுழுந்தல்லதில்லை யித்துணைப்பயறுளவென வுதாரணங்காட்டுவாருமுளர். அவைசொற்சுருங்குதற்கேயென்பதனோடு மாறுபட்டு மிகைபடக் கூறலென்னுங் குற்றமாமென்க. (௫௫)

௪௱௭. ஈதாகொடுவெனுமூன்றுமுறையே- யிழிந்தோனொப்போன் மிக்கோனிரப்புரை. ❋

(எ-ன்.) இதுவுமது. (ப-ரை.) ஈதாகொடுவெனும்- ஈதாகொடு என்கிற, மூன்றும்- மூன்றுசொற்களும், முறையே-முறையாக, இழிந்தோன்- இழிந்தவனும், ஒப்போன்- ஒப்பவனும், மிக்கோன்-உயர்ந்தவனும், இரப்புரை-இரத்தற்குவருகிறசொற்களாகும். எ-று. (பொ-ரை.) ஈயென்பதிழிந்தோன் உயர்ந்தோன் மாட்டிரக்குஞ்சொல்லாம் தாவென்ப தொப்போ னொப்போன்மாட்டிரக்குஞ்சொல்லாம் கொடுவென்பது உயர்ந்தோன் இழிந்தோன் மாட்டிரக்குஞ்சொல்லாம். எ-று. ❋ [வ-று] தந்தையீ-தோழா தா-மைந்தகொடு- எனவரும். பிறவழிவரு மொப்புயர்வு தாழ்வினும் இவ்வாறேயொட்டுக. வழங்கு வீசு நல்கு என்றற் றொடக்கத்திரப்புரைகள்போலா தீவோர்க்கு மேற்போர்க்கு மொப்புயர்வுதாழ்வுகளை யீதாகொடுவென்ற அதனையானே யுணர்த்தி நிற்றலினிவற்றை யினைத்தென் றறிபொருளாகக் கூறினார். அருள் அளியென்னுமிரப்புரைகளீவோர்க் குயர்வுமேற்போர்க் கிழிவுமுண

ரித்தின வாலோவெனின், அவை கருணைக்குரிய சொற்குறிப்பினு னிரத்தற்பொருளையுணர்த்திநின்றனவன்றி யிரப்புரை யல்லவென்க. இம்மரபு மயங்கிவருவனவுளவேற் புதியனபுகுதலும்வழுவலவென் றதன்பாற்படுத்துக. (௫௬)

௪௱௮. முன்னத்தி னுணருங் கிளவியு முளவே. *

(எ-ன்.) மரபுவழுவமைப்புணர்-ற்று. (ப-ரை.) முன்னத்தின்- குறிப்பினால், உணரும்- பொருளறியப்படுகிற, கிளவியும்-சொற்களும், உள- சிலஉளவாம். எ-று: (பொ-ரை.) வெளிப்படையானன்றிக் குறிப்பாற் பொருளுணரப்படுஞ் சொற்களுஞ் சிலவுளவாம். எ-று. ※ அவையாவன வொன்றொழி பொதுச் சொன்முதற்சொல்லுவான் குறிப்பிற்கவிதந்தனமுதலியவுமாம். செவியெல்லாஞ்சாலச் செம்பொனணியுஞ் செல்வத்தினவென்பார் செஞ்செவியவென்றும் குற்றமற்றமரபினவென்பார் வெள்ளொக் கலவென்றும் பெருவாழ்க்கையினவென்பார் குழைகொண்டுகோழியெறியு மவர்வாழ்க்கை யென்றுங் கூறுஞ்சொல்லுவான் குறிப்பொன்றுமேயுதாரணங் காட்டுவாருமுளர். அங்ஙனமாயினேனைய குறிப்பிற் பொருடரு மொழியல்லவாமென்க. கேட்போரிடர்ப்படாஅது வெளிப்படையிற் கூறுதன் மரபாதலி னிதுவழுவமைதியாயிற்று. (௫௭)

௪௱௯. கேட்குந போலவுங் கிளக்குந போலவு - மியங்குந போலவு மியற்றுந போலவு - மஃறிணை மருங்கினு மறையப்படுமே. *

(எ-ன்.) இதுவுமது (ப-ரை.) கேட்குநபோலவும் - கேளாதவைகளைக்கேட்பவைகள்போலவும், கிளக்குநபோலவும் - சொல்லாதவைகளைச்சொல்பவைகள்போலவும், இயங்குநபோலவும்- நடவாதவைகளை நடப்பவைகள் போலவும், இயற்றுநபோலவும்- செய்யாதவைகளைச் செய்பவைகள் போலவும், அஃறிணைமருங்கினும்-அஃறிணையிடத்தும், அறையப்படும்- சொல்லப்படும். எ-று (பொ-ரை.) கேளாதனவற்றைக் கேட்குவனபோலவுஞ் சொல்லாதனவற்றைச் சொல்லுவனபோலவு நடவாதனவற்றை நடப்பனபோலவுமித்தொழில்களல்லனபிறசெய்யாதனவற்றைச்செய்வனபோலவு மஃறிணையிடத்துஞ் சொல்லப்படும். எ-று. ※ முன்னையபோலவிதுவாகிறுதிக்கணியற்றுந வெனப் பொதுப்படக் கூறினமையி னித்தொழில்களல்லன பிறவென்னுஞ் சொல்லெஞ்சிநின்றன. [வ-று] "நன்னீரைவாழி யனிச்சமே,, -"இரவெலாநின்றுயாலீர்ங்கதிர்த்திங்காள்,,-எ-ம்-"பகைமையுங்கேண்மையுங்கண்ணுரைக்கும்,,-மாய்தலும்பிறத்தலும்வளர்ந்தவிங்கலுந்-தேய்தலுமுடைமையைத்திங்கள்செப்புமால்,,-எ-ம்-இவ்வழியிக்வூர்க்கு

ப்போம்- இவ்வரசனுணையெங்குஞ்செல்லும்-எ-ம்-"தன்னெஞ்ச
றிவதுபொய்யபற்கபொய்த்தபின்- றன்னெஞ்சேதன்னைச்சுடும்.,,
-"வண்சிறைப்பவளச்செவ்வாய்ப் பெடையன மடமைகூர்ந்து-
தண்கய நீருட்கண்ட தன்னிழல் பிறிதென் றெண்ணிக்-கண்டனன்
கள்வமற்றுன் காதலிதன்னை நீர்க்கீழ்ப்- பண்டையமல்லம்வேண்
டாபடுக்கவென் றூடிற்றன்றே.,, -"கருவிரற்செம்முக வெண்ப
ற்சூன்மந்தி- பருவிரலாற்பைஞ்சுனைநீர் தூவிப்- பெருவரைமே
ற்- றேன்றேவர்க்கியுமலைநாடவாரலோ- வான்றேவர்கொட்கும்வ
ழி.,,-எ-ம்- முறையேகாண்க.அஃறிணைமருங்கினுமென்றவும்மை
யானுயர்திணை மருங்கினு மிவ்வாறு சொல்லப்படுதல் புலம்பன்
முதலியவற்றுட்காண்க. (௫௮)

சாய. உருவகவுவமையிற் றிணைசினைமுதல்கள் - பிறழ்தலு
ம்பிறவும் பேணினர்கொளலே. *

(எ-ன்.) இதுவுமது. (ப-ரை) உருவகவுவமையில்- உருவகத்தி
லுமுவமையிலும், திணை-இருதிணைகளும், சினை-சினைகளும், மு
தல்கள்- முதல்களும், பிறழ்தலும்- தம்முள்ளேமயங்குதலும்,பி
றவும்-இவ்வியலுட்சொல்லாதொழிந்தவையும், பேணினர்கொள
ல்-பாதுகாத்துக்கொள்க.எ-று. (பொ-ரை) உருவகத்தின்கண்ணு
முவமைக்கண்ணு மிருதிணை தம்முண் மயங்குதலுஞ் சினைமுத
றம்முண் மயங்குதலும் இவ்வியலுட் சொல்லா தொழிந்தனவும்
போற்றிக்கொள்க. எ-று. ❋ [வ-று] "மன்னர்மடங்கன் மறைய
வர்சொன்மாலை- யன்னநடையினர்க் காரமுதந்- துன்னும் - பரி
சிலர்க்குவானம் பனிமலர்ப்பூம்பைந்தா- ரரிசினவேற்றானையெ
ங்கோ.,, என்பன வுயர்திணை யஃறிணையோடு மயங்கின."தாழிரு
ந்தடக்கையு மருப்புந் தம்பியாத்- தோழர்தன் றுள்களாச் சொரி
யுமும்மத- மாழ்கடற்சுற்றமா வழன் றுசீவக - வேழுயர்போதக
மினத்தொடேற்றதே.,, என்பன வுயர்திணையஃறிணையோடு முத
ல்சினையோடுமயங்கின. முகமதியென்பது சினைமுதலோடு மயங்
கிற்று. "அகழ்கிடங்கெந்துகிலார்ந்தபாப்புரி-புகழ்தருமேகலைசூ
யில்பூண்முலை- திகழ்மணிக்கோபுரந் திங்கள்வாண்முகஞ்- சிகழி
கைநெடுங்கொடி செல்விக்கென்பவே ,, இஃதஃறிணையுயர்திணை
யோடுமயங்கிற்று. இவையுருவகம். "கொங்கலர் கோதைக் குமரி
மடநல்லாண்- மங்கலங்கூறமலிவெய்திக்- கங்கையாள்-பூம்புனலா
கந்தழீஇயினான்போரடுதோள்-வேம்பார்தெரியலெம்வேந்து.,,
"இலமென்றசைஇ யிருப்பனைக்காணி- னிலமென்னு நல்லாண
கும்.,,-"வருந்தியீன்றாண் மறந்தொழிந்தாள் வளர்த்தாள் சொற்
கேட்டில் கடிந்தாண்-மருந்தின்காறுங்கூழையை முனிவார்தின்

னையெனமுனிவார்-பொருந்திற்றென்று விதுவென்றாய் பொன்று மளித்தியுயிரொன்றாய் - திருந்துசோலைக் கருங்குயிலே சிலம்பவிருந்துகூவுதியால்.,, என்றறற்றொடக்கத்தனவுமன்ன. "மல்லன்மலைபனைய மாதவனாவைதுரைக்கும்.,, என்ப துயர்திணையோடஃறிணைமயங்கிற்று. "கல்விசேர் மாந்தரி னிறைஞ்சிக் காய்த்தவே.,, என்பதஃறிணையோ டுயர்திணைமயங்கிற்று. கயற்கண் என்பது சினை முதலோடுமயங்கிற்று. தளிர்மேனியென்பது முதல் சினையோடுமயங்கிற்று. பிறவுமன்ன. "தருமன்றன்னளி யாற்றனதீகையால் -வருணன்கூற்றுயிர் மாற்றலின்வாமனே - யருணமயாலழ கிற்கணையைந் துடைத்- திருமகன்திரு மாநிலமன்னனே,, 'இந்திரகுமரன்போல விறைமகனிருந்துகாண்க.,, என்றற்றொடக்கத்தனவாய் மயங்காதுவருதன் மரபாமாதலி னிதுவழுவமைதியாயிற்று. இனிப்பிறவுமென்றதனா லுருவக வுவமைக்கண் இவன்பாரதி இவன்பாரதிபனையானெனப்பான் மயங்கக்கூறுதலும் கயலினது பிறழ்ச்சிபோலுங் கண்ணினது பிறழ்ச்சி யென்பார் கயற்கண்ணென்று சொல்லின்முடிவின் அப்பொருண் முடியாதெஞ்சக்கூறுதலும் பிறவற்றுள்ளும் இவ்வாறெஞ்சக்கூறுதலுஞ் செங்கோல் கொடுங்கோல் வீரக்கழல் சினவேல் எனவொருபொருட்டன்மையை மற்றொரு பொருண்மேல்வைத்துக் கூறுதலும் ஈந்தானென்பா ரருளினானென வொருவினையை மற்றொருவினையாற்கூறுதலுங் "அடிவண்ண மல்லாலலங்குதார்க்கோதை-முடிவண்ணங்கண்டறியாவேந்து.,,-"துஞ்சாக்கண்ணவடபுலத்தரசே,, என வுயர்திணை யஃறிணையாகக்கூறுதலு மிவைபோல்வன பிறவும் வழுவமைதியாகக்கொள்க. (௫௯)

௪௱௰௧. யாற்றுநீர்மொழிமாற்று நிரனிறைவிற்பூண்- டாப்பிசையளைமறி பாப்புக்கொண்டுகூட்-டடிமறிமாற்றெனப்பொருள்கோ ளெட்டே. ✱

(எ-ன்.) நால்வகைச்சொற்களானுஞ் செய்யுஞ் செய்யுட்கொள்ளும்பொருள்கோளின்பெயருந்தொகையுமுணர்-ற்று.(ப-ரை) யாற்றுநீர்- யாற்றுநீர்ப்பொருள்கோளும், மொழிமாற்று-மொழிமாற்றுப்பொருள்கோளும், நிரனிறை- நிரனிறைப்பொருள்கோளும், விற்பூண்- விற்பூட்டுப்பொருள்கோளும், தாப்பிசை- தாப்பிசைப்பொருள்கோளும், அளைமறிபாப்பு- அளைமறிபாப்புப்பொருள்கோளும், கொண்டுகூட்டு- கொண்டுகூட்டுப் பொருள்கோளும், அடிமறிமாற்று- அடிமறிமாற்றுப் பொருள்கோளும், என-என்று, பொருள்கோள் -பொருள்கோள், எட்டு- எட்டாம்.எ-று. (பொ-ரை.)யாற்றுநீர்ப்பொருள்கோளும்மொழிமாற்றுப்பொருள்கோளும் நிரனிறைப்பொருள்கோளும் விற்பூட்டு

ப்பொருள்கோளுந்தாப்பிசைப்பொருள்கோளும்அளைமறிபாப்
புப்பொருள்கோளுங் கொண்டுகூட்டுப்பொருள்கோளும்அடிம
றிமாற்றுப்பொருள்கோளுமெனப்பொருள்கோளெட்டாம்.எ,று
❁ இவற்றுட் டாப்பிசை யென்பதற் கூசல்போ லிடைநின் றிரு
மருங்குஞ் செல்லுஞ் சொல்லென்பது பொருள். தாம்பென்ப
தூசல். அஃதனைமறி பாம்பென்பதுபாப்பெனநின்றாற்போல
வலிந்துநின்றது. ஏனையவுங்காரணக்குறியாதல்காண்க. (௩௱௰௧)

௩௱௰௨. மற்றையவம்நோக்கா தடிதொறும் வான்பொருளற்றற்
றொழுகுமஃ தியாற்றுப்புனலே. ❋

(எ-ன்.) நிறுத்தமுறையானே யாற்றுநீர்ப்பொருள்கோளாமா
றுணர் - ற்று. (ப-ரை.) மற்றையநோக்காது - மொழிமாற்றுமு
தலியவைபோலப் பிறழ்ந்துசெல்லவேண்டாமல், அடிதொறும்
அடிதோறும், அற்றற்றொழுகுமஃது - யாற்றுநீரொழுக்குப்போ
லநெறிப்பட்டு அற்றற் றொழுகுவதாகிய, வான்பொருள் - சிறந்த
பொருள்கோள், யாற்றுப்புனல் - யாற்றுநீர்ப்பொருள்கோளாம்
எ-று. (பொ-ரை.) மொழிமாற்றுமுதலியபோற் பிறழ்ந்து செ
லவேண்டாது யாற்றுப்புன லொழுக்குப்போ னெறிபட் டடி
தோறும் வான்பொரு ளற்றற் றொழுகுமப்பொருள்கோள்யாற்
றுநீர்ப்பொருள்கோளாம். எ-று. ❁ இடையறு தொழுகும்யாற்
றுநீரொழுக் குவமையாதலின் அடிதொறும் வான்பொரு ளற்ற
ற்றொழுகுதலாவது மொழிமாற்றுமுதலியபோற் பிறழ்ந்து செ
ல்லுஞ் செலவற்றுங்காங் கமைந்தொழுகுதலாமன்றி யடிதோறு
ம்பொருண்முடிதலன்றுமென்க. அங்ஙனமாயி னுங்காங்கெனப்
பொதுப்படக்கூறு தடிதொறுமென்ற தென்னையெனி னவ்வா
றேகூறுவாரோ ரிலச்சினைமேல்வைத்துக் கூறினாரென்க. [உ-று]
"சொல்லருஞ்சூற்பசும்பாம்பின் றோற்றம்போன் - மெல்லவேகரு
விருந்தீன் றுமேலலார் - செல்வமேபோற்றலை நிறுவித்தேர்ந்தநூற்
கல்விசேர்மாந்தரி னிறைஞ்சிக்காய்த்தவே.,, எனவரும், இப்பா
ட்டினுட் சொல்லென்னுமெழுவாயினை முதலெடுத் ததன் றொ
ழிலாகிய வினையெச்சங்க ளொன்றனை யொன்று கொள்ள இடை
யேமுறைநிறீஇக் காய்த்தவென்னும் பயனிலையை யிறுதிக்கட்ட
ந்து முடித்தமையினிப்பொரு ளொழுகுதல்யாற்றுநீரொழுக்கு
ப்போறல்காண்க. இதற்கிவ்வா றன்றி யேனையடிகளை நோக்கா த
டிதோறும் பொருண்முடிந்துவருவதுயாற்றுநீர்ப்பொருள்கோ
ளெனப் பொருளுரைத்து "அலைப்பான் பிறிதுயிரை யாக்கலுங்
குற்றம் - விலைப்பாலிற் கொண்டூன் மிசைதலுங்குற்றஞ் - சொலற்
பாலவல்லாதசொல்லுதலுங்குற்றங் - கொலைப்பாலுங்குற்றமேயா
ம்,, என வுதாரணங்காட்டுவாருமுளர். யாற்றுநீரொழுக்குக்கிடைய

றுதலின்மையானும் அற்றதேலதனையொழுக்கென்றல்கூடாமையானு மஃதுவமையன்றாம். ஒவ்வோரடிவொழுகுதற்குவமையாயிற்றெனிற் பாட்டுமுழுவது மிடையறு தொழுகிப்பயின்றுவரும்பொருள்கோண் மொழிமாற்றுமுதலியவற்றுள் அடங்காமையிற்குன்றக்கூறலாம் இங்ஙனமாதலின துபொருளன்றாம். அவர்காட்டியவுதாரணம்அடிமறிமாற்றின்பாற்படுமென்க. அப்பொருள்கோளின் விகற்பம்அச்சூத்திரத்துட் டோன்றக்கூறுதும். இதனைவான்பொருளென்று ரிது நெறிப்பட்டு வருதலானும் பயின்றுவருதலானு மொழிமாற்றுமுதலியவந்த செய்யுட்கண்ணும் விராய்வருதலானுமென்க. (௩௧)

௪௱௰௫. ஏற்றபொருளுக் கியையுமொழிகளை- மாற்றியோரடியுள் வழங்கன்மொழிமாற்றே. *

(எ-ன்.) மொழிமாற்றுப் பொருள் கோளாமா றுணர் - த்று. (ப-ரை.) ஏற்றபொருளுக்கு - ஏற்றவிரண்டுபயனிலைகளுக்கு, இயையுமொழிகளை- பொருந்துமொழிகளை, மாற்றி-ஏலாதபயனிலைகளுக்குத்தனித்தனிக்கூட்டி, ஓரடியுள்-ஓரடியுள்ளே, வழங்கல் சொல்லுவது, மொழிமாற்று- மொழிமாற்றுப்பொருள்கோளாம். எ-று. (பொ-ரை.) இரண்டுமொழியு மவைகொள்ளு மிரண்டு பயனிலையுமாய் வரக்கூறுவா ரந்நான்கனு ளேற்றபயனிலைகட்கியையு மொழிகளைத் தனித்தனிக்கூட்டிக்கூறாதேலாதபயனிலைக்கியையாதமொழிகளைத் தனித்தனிக்கூட்டியோ ரடியுள்ளேகூறும்பொருள்கோண் மொழிமாற்றுப் பொருள்கோளாம். எ-று. ※ ஒன்றற்கொன்று பொருந்தியதென்பா ரேற்றபொருளுக்கியையு மொழியென்றார். மொழிமாற்றென்பது தனக்குள்ளதைக்கொடுத்துப் பிறர்க்குள்ளதை வாங்கும் பண்டமாற்றுப்போறலின் இரண்டுமொழியு மவைகொள்ளு மிரண்டுபயனிலையும் வந்தல்லது மொழிமாற்றுதல் கூடாமையி னத்தொகைதந்துகூறினும்.— [வ-று.] "சுரையாழவம்மி மிதப்பவரையனைய-யானைக்குநீத்து முயற்குநிலையென்ப - கானகநாடன்சுனை.,, எனவரும். இதனுள் ஆழவென்னும் பயனிலைக்கியைந்த வம்மியென்னுமொழியினை மிதப்பவென்னும் பயனிலைக்கும் மிதப்பவென்னும் பயனிலைக்கியைந்த சுரையென்னுமொழியினை யாழவென்னும் பயனிலைக்குமாக மாற்றிக் கூறியவாறும் நீத்தென்னும் பயனிலைக்கியைந்த முயலென்னுமொழியினை நிலையென்னுப்பயனிலைக்கும் நிலையென்னும்பயனிலைக்கியைந்த யானையென்னுமொழியினை நீத்தென்னும் பயனிலைக்குமாக மாற்றிக் கூறியவாறுங்காண்க- "ஆலத்துமேல குவளைகுளத்துள- வாலின்னெடியகுரங்கு.,, என ஈரடிமுதலியவற்றுட்கூறிற் செய்யுட்கண்ணவாய் மொழிமாற்றென்பது

தோன்றாமையின் அஃதிலக்கணமன்றெனவிலக்கி யண்மைக்கட் கூறுவதே மொழிமாற் றென்பாரோ ரடியுளென்றார். ஆலத்து மேல வென்பதோரடியுள் வாராமையிற் கொண்டுகூட்டென்பா ருமுளர். அது மொழிமாற்றிற்குங் கொண்டுகூட்டிற்கும் வேற்று மையுணரார் கூற்றாமென்க. அவரிச் சூத்திரத்திற்கு மொழிமாற் றெடுபொருந்தாது கொண்டுகூட்டொடு பொருந்தப்பொருள் கூறிச் சுரையாழவென்னு முதாரணங்காட்டுவர். (௯௨)

௪௱௰௬. பெயரும் வினையு மாஞ் சொல்லையும் பொருளையும்- வேறுநிரனிறீஇ முறையினு மெதிரினு-நேரும்பொருள்கோ ணிரனிறை நெறியே. *

(எ-ன்.) நிரனிறைப் பொருள்கோளாமாறுணர்-ற்று. (ப-ரை) பெயரும்வினையுமாஞ்சொல்லையும்-பெயரும்வினையுமாகியசொற்களையும், பொருளையும்- அவைகொள்ளும்பெயரும்வினையுமாகிய பயனிலைகளையும், வேறு-வேறாக, நிரனிறீஇ-வரிசையாகநிறுத்தி, முறையினும்-முறையாகவேனும், எதிரினும்-எதிராகவேனும், நேரும்-இதற்கிது பயனிலையென்பது படக்கூறும், பொருள்கோள்-பொருள்கோள், நெறி-நெறிப்பட்ட, நிரனிறை - நிரனிறைப்பொருள்கோளாம். எ-று. (பொ-ரை.) பெயரும்வினையுமாகிய சொற்களையு மவைகொள்ளும் பெயரும் வினையுமாகிய பயனிலைகளையும் வேறுவேறுநிரையாக நிறுத்தி முறையாயேனுமெதிராயேனு மிதற்கிது பயனிலையென்பதுபடக்கூறும்பொருள்கோ ணெறிப்பட்ட நிரனிறைப் பொருள்கோளாம்.—எ-று. ❊

[வ-று.] "கொடிகுவளைகொட்டை நுசுப்புண்கண்மேனி-மதிபவளமுத்தமுகம் வாய்முறுவல் - பிடிபிணை மஞ்ஞை நடைநோக்குச்சாயல்- வடிவினளேவஞ்சிமகள்." இதுபெயர்ச்சொற்களும் பெயர்ப்பயனிலைகளுமாய்நின்றமுறைநிரனிறை. "காதுசேர்தாழ்குழையாய் கன்னித்துறைச்சேர்ப்ப - போதுசேர் தார்மார்ப போர்ச்செழிய- நீதியான்- மண்ணயிர்தமங்கையர்தோண் மாற்றாரையேற்றார்க்கு - நண்ணியவாயபொருள்." இதுவினைப்பயனிலைகளும் பெயர்ச்சொற்களுமாய்நின்றமுறைநிரனிறை. "களிறுங்கந்தும்போல நளிகடற்கூம்புங் கலனுந்தோன்றுந்-தோன்றன்மறந்தோர் துறைகெழுநாட்டே." இதுபெயர்ச்சொற்களும் பெயர்ப்பயனிலைகளுமாய்நின்ற வெதிர்நிரனிறை. "ஆடவர்க ளெவ்வா றகன்றொழிவார் வெஃகாவும்- பாடகமுமூரகமும்பஞ் சரமா-நீடியமா- னின்றானிருந்தான் கிடந்தானிதுவன்றோ-மன் றார்மதிற்கச்சிமாண்பு." இதுபெயர்ச்சொற்களும்வினைப்பயனிலைகளுமாய்நின்றவெதிர்நிரனிறை. பிறவுமன்ன. மேலைச்சூத்திர

த்துண் மொழியென்றும் இச்சூத்திரத்துட் சொல்லென்றுங் கூறிய நிறுத்தசொல்லு மதுகொள்ளும் பயனிலையெனினும் பொருளெனினு மொக்குங் குறித்துவரு கிளவியுமன்றி யல்வழிவேற்றுமையுருபுகளும் பிறசொற்களுமுடன்வருமாலோவெனின், சாத்தன்வந்தானென்றால் அவனுடையணி முதலியனவுமுடன்வருதல்கூறாதேயமைதல்போலுமென்க. சொற்றொறுமிற்றிதன்பெற்றியென்பதனானே "காமவிதிகண்முகமென்மருங்குற்செய்யவாய்த்தோமிறுகடினிசொல்லமிர்தந்-தேமலர்க்-காந்தள்குரும்பைகனகமடவாள்கை- யேந்திளங்கொங்கை யெழில்.,, எனவரும் எழுத்துநிரனிறையும் "வெண்பர்முதலாக வேதியராதியா -மண்பால்வகுத்தவருண்மா-மொண்பா- வினங்கட்குமிவ்வாறேயென்றுணாப்பர்தொன்னூன்-மனந்திட்பக்கற்றோர்மகிழ்ந்து ,, எனத்தொகுத்துக்கூறு நிரனிறை முதலியவுங்கொள்க. "அம்ம் பவள்வரிநெடுங்கண் ணுய்வஞ்சிக்- கொம்ம் பவள்கொ டிமருங்குல்கோங்கினரும்ம் பவண்முலை யொக்குமேயொக்குங்- கரும்ம்பவள்வாயிற்சொல்.,,என்னும்யாற்றுநீர்ப் பொருள்கோளைமயக்கநிரனிறையென்பாருமுளர். இதுசொல்லையும் பொருளையுந் தனித்தனி நிறீஇக்கூறியதன்றி நிரனிறையாகநிறீஇக்கூறாமையி னிரனிறையன்றென்பார் நெறியேயென்றார். (௩௩)

௪௱௰௫. எழுவாயிறுதி நிலைமொழிதம்முட்- பொருளோக்குடையது பூட்டுவில்லாகும். *

(எ-ன்.) பூட்டுவிற் பொருள்கோளாமாறுணர்-ற்று. (ப-ரை.) எழுவாய்- செய்யுள்முதலிலும், இறுதி-இறுதியிலும், நிலை-இருக்கின்ற,மொழி-மொழிகள், தம்முள் - தமக்குள், பொருளோக்குடையது-பொருளைநோக்குதலுடைய பொருள்கோள், பூட்டுவில்லாகும்-பூட்டுவிற்பொருள்கோளாம். எ-று. (பொ-ரை.) செய்யுட்கண்முதலினு மீற்றினுநிற்கு மொழிகட்டம்முட் பொருணோக்கமுடையபொருள்கோள் பூட்டுவிற் பொருள்கோளாம். எ-று. ❀ செய்யுட்கெல்லா முதலினு மீற்றினு மென்னுமையி னதனகத் தெங்ஙன மிவ்வாறுவரினுமாமென்க. [வ-று.] "திறந்திடுமினீயவை பிற்காண்டுமாத - ரிறந்துபடிற்பெரிதாமேத- முறந்தையர்கோன்-றண்ணாரமார்பிற் றமிழ்நர்பெருமானைக்-கண்ணாரக்காணக்கதவு.,, எனவரும். பிறவுமன்ன. (௩௪)

௪௱௰௬. இடைநிலைமொழியே யேனையீரிடத்து-நடந்துபொருளை நண்ணுதாப்பிசை. *

(எ-ன்.) தாப்பிசைப்பொருள்கோளாமாறுணர்-ற்று.(ப-ரை) இடைநிலைமொழி- நடுவிலுள்ளமொழி, ஏனையீரிடத்தும்-ஒழிந்தமுதலினுமீற்றிலும், நடந்து-சென்று, பொருளை- பொருளை,

நன்னுதல்-கூடும்பொருள்கோள், தாப்பிசை-தாப்பிசைப்பொருள்கோளாம். எ-று (பொ-ரை.) இடைநிற்குமொழியொழிந்த முதலினு மீற்றினுஞ் சென்று பொருளைக்கூடும் பொருள்கோடாப்பிசைப்பொருள்கோளாம். எ-று. ❁ [வ-று.] "உண்ணாமை யுள்ள துயிர்நிலை யூனுண்ண - வண்ணாத்தல்செய்யாதளறு" என வரும். (சூ௫)

௬௱௰௭. செய்யு ளிறுதி மொழியிடை முதலினு - மெய்திய பொருள்கோ ளளைமறிபாப்பே. ❋

(எ-ன்.) அளைமறி பாப்புப் பொருள்கோ ளாமாறுணர்-ற்று (ப-ரை.) செய்யுள்- செய்யுளில், இறுதிமொழி - இறுதியிலுள்ள சொல், இடைமுதலினும்-இடையிலும்முதலிலும், எய்தியபொருள்கோள்-சென்றபொருள்கோள், அளைமறிபாப்பு - அளைமறிபாப்புப்பொருள்கோளாம். எ-று.(பொ-ரை.) செய்யுட்கணீற்றினின்றசொல்லிடையினு முதலினுஞ் சென்றபொருள்கோள் அளைமறிபாப்புப்பொருள்கோளாம் எ-று. ❁ [வ-று.] "தாழ்ந்தவுணர்வினராய்த் தாளுடைந்து தண்டூன்றித் தளர்வார்தாமுஞ் - சூழ்ந்தவினையாக்கை சுடவிளிந்து நாற்கதியிற் சுழல்வார்தாமு - மூழ்ந்தபிணிநலியமுன் செய்தவினையென்றேமுனிவார்தாமும் - வாழ்ந்தபொழுதினேவானெய்து நெறிமுன்னிமுயலாதாரே." என வரும். இருமருங்கினையு மிறுதியென வமையுமாதலின் வாழ்ந்த பொழுதினே வானெய்து நெறிமுன்னி முயலாதாரோ வென்னுஞ்சொற்களை யம்மருங்குவைத்துச் செய்யுளாக்கினு மிப்பொருள்கோளாமென்க. (சா௭)

௬௱௰௮. யாப்படிபலவினுங் கோப்புடைமொழிகளை - யேற்புழியிசைப்பது கொண்டுகூட்டே. ❋

(எ-ன்.) கொண்டுகூட்டுப்பொருள்கோ ளாமாறுணர்-ற்று.— (ப-ரை) யாப்படி, செய்யுளடிகள், பலவினும் - பலவற்றினும், கோப்புடை-கோக்கப்படுதலையுடைய, மொழிகளை-சொற்களை, ஏற்புழி-எடுத்தபொருளுக்கேற்றவிடத்து, இசைப்பது-கூட்டும் பொருள்கோள், கொண்டுகூட்டு - கொண்டுகூட்டுப்பொருள்கோளாம். எ-று. (பொ-ரை.) செய்யுளடிபலவினு மியல்பாகிய யாற்றுநீர்ப்பொருளுக்கேலாது கோத்துக்கிடந்த மொழிகளை யெடுத்தப்பொருளுக் கேற்றவிடத்துக் கூட்டும் பொருள்கோள்கொண்டு கூட்டுப்பொருள்கோளாம். எ-று. ❁ இயல்பாகிய யாற்றுநீர்ப்பொருள்கோளிற் பிறழ்ந்து வருவனவற்றை மொழிமாற்று முதலியவாகப் பகுத்தமையி னப்பொருளுக் கேற்றவிடத்தென்றும். [வ-று.] "தெங்கங்காய்போலத் திரண்டுருண்ட பைங்கூந்தல்-வெண்கோழிமுட்டை யுடைத்தன்னமாமேனி-யஞ்சனத்த

ன்னபசலைதணிவாமே-வங்கத்துச்சென்றோர்வரின்.,, எனவரும். இதனுள் வங்கத்துச்சென்றோர்வரி னஞ்சனத்தன்ன பைங்கூந்தலையுடையான் மாமேனிமேற் றெங்கங்காய்போலத் திரண்டிருண்ட கோழிவெண்முட்டையுடைத்தன்னபசலைதணிவாமேனக்கொண்டுகூட்டுக. உருவகவுவமையிற் றிணைசினைமுதல்களென்பதனைமுதல்சினையெனமுறைநிறீஇப்பொருள்கொள்வதுமது. (௩௭)

௪௱௰௩. எற்புழியெடுத்துடன் கூட்டுறுமடியவும்- யாப்பீறிடைமுத லாக்கினும் பொருளிசை - மாட்சியுமாறா வடியவுமடிமறி. *

(எ-ன்.) அடிமறிமாற்றுப்பொருள்கோ ளாமாறுணர்-ற்று.—(ப-ரை.) எற்புழி- பொருளுக்கேற்குமிடத்து, எடுத்து-எடுத்து, உடன்கூட்டுறும்- நீங்காதுகூட்டுகிற, அடியவும்- அடியையுடையவையும், யாப்பீறிடைமுதல்-(யாதானுமோரடியை) அச்செய்யுளின் இறுதிநடுமுதல்களில் யாதானுமோரிடத்து, ஆக்கினும்-எடுத்துக்கூட்டினும், பொருளிசைமாட்சியும் - பொருளோடிசைமாட்சியும் பொருண்மாட்சியும், மாறா-வேறுபடாத, அடியவும்-அடியையுடையவையும், அடிமறி- அடிமறிமாற்றுப்பொருள்கோளாம். எ-று. (பொ-ரை.) பொருளுக்கேற்குமிடத்தெடுத்து நீங்காதுகூட்டு மடியினையுடையவும் யாதானுமோரடியையெடுத் தச்செய்யுட்கண் முதலிடையீறுகளின்யாதானுமோரிடத்துக்கூட்டினும் பொருளோ டோசைமாட்சியு மோசையொழியப் பொருண்மாட்சியும்வேறுபடாதவடியினையுடையவுமாகியபொருள்கோ ளடிமறிமாற்றுப்பொருள்கோளாம். எ-று. ※ மாட்சி நெறிப்பட்டொழுகல். எற்புழியெடுத்துக்கூட்டுத லிருவகையடிமறிமாற்றிற்கும் பொருந்துமாயினு மவ்வடிகண் மாற்றுதற் கமைந்து நீங்கு மிவ்வடிக ணீங்கா வென்பாருடனென் றும் ஓசையொழியப் பொருண்மாட்சிமாத்திரையு மாறாவடியவுமென்பார் பொருளிசைமாட்சியுமெனவுமைதந்துங்கூறினார். [வ-று] “நடுக்குற்றுத்தற்சேர்ந்தார் துன்பந்துடையார் -கொடுத்துத்தான் றுய்ப்பினு மீண்டுங்காலீண்டு - மிடுக்குற்றுப்பற்றினு நில்லாது செல்வம்- விடுக்கும்வினையுலந்தக்கால்.,, என்பதனுட் கொடுத்துத்தான் றுய்ப்பினு மீண்டுங்காலீண்டும் விடுக்கும் வினையுலந்தக்கா லிடுக்குற்றுப்பற்றினு நில்லாதுசெல்வ மஃதறியார் நடுக்குற்றுத்தற்சேர்ந்தார் துன்பந்துடையாரென வடிகளை யேற்புழியெடுத்துக்கூட்டுக. “மாறாக்காதலர் மலைமறந்தனரே-யாறாக்கட்பனிவரலானாவே- வேறாமென்றோள்வளை நெகிழும்மே - கூறாப் தோழியான்வாழுமாறே.,, என்பதனுள்யாதானுமோரடியையெடுத் தியாதானு மோரிடத்துக்கூட்டியுச்சரித்துப்பொருளுமோ

சையும் வேறுபடாமைகாண்க. "அலைப்பான் பிறிதுயிரை யாக்க லுங்குற்றம்- விலைப்பாலிற்கொண்டூன் மிசைதலுங்குற்றஞ்-சொலற்பாலவல்லாத சொல்லுதலுங்குற்றங் - கொலைப்பாலுங் குற்றமேயாம்.,, என்பதனு ளீற்றடியொழிந்த மூன்றடியுள்ளுமியாதானு மொன்றையெடுத் தியாதானுமோரிடத்துக்கூட்டி யுச்சரித்துப் பொருளுமோசையும்வேறுபடாமையு மீற்றடியையெடுத்தியாதானு மோரிடத்துக்கூட்டி யுச்சரித் தோசைவேறுபட்டுப்பொருள்வேறுபடாமையுங்காண்க. செய்யுளடி பலவினையுந் தொகுத்துக்கூறாது மூன்றுமொன்றுமாகப் பிரித்ததென்னையெனின் எண்வகைப்பட்ட பொருள்கோளு மவற்றின் விகற்பங்களுமாய பொருள்கோள்களு ளொன்றொருசெய்யுண் முழுவதூஉ மமைந்துகிடக்கவேண்டுமென்னும் யாப்புறவின்றி யொன்றும் பலவு மமைந்துகிடத்தலினென்க அவ்வாறமைந்துகிடத்தலவ்வப்பொருள்கோட்குக்காட்டிய செய்யுட்கண்ணும் பிறசெய்யுட்கண்ணுங் கண்டுகொள்க அடிமறித்தலன்றி மாற்றுதலேற்புழியெடுத்துடன்கூட்டுறுமடியவு மென்றதற்கின்றாம் அங்ஙனமாகவதனையுமடி மறிமாற்றென்ற தென்னையெனின், மறித்தற்குரியகொண்டுகூட்டோடும்,மறித்தற்குமாற்றுதற்குமுரிய வடிமறிமாற்றோடும்,சார அதனை முதற்கட்கூறி யடியாகமறித்தலுடைமையினடிமறிமாற் றின்பாற்படுத்துச் சிலவுறுப்புக்குறைந்தாரையு மக்களென்றாற் போல வதற்குமடிமறிமாற்றெனப் பெயர்தந்து கூறினாரென்க. செய்யுட்குரியபொருள்கோளை யீண்டுக்கூறியதென்னையெனின் செய்யுட்குத் தொடரொன்னுங் காரணக்குறி போந்தது மொழி தொடர்ந்ததாலன்றே யங்ஙனமாதலி னிதுவுந்தொடர்மொழியி லக்கணமேயாமென்க. (சூ அ)

மூன்றாவது-பொதுவியல்

முற்றிற்று.

நான்காவது.

இடையியல்.

௪௱௨௰. வேற்றுமைவினைசா ரியையொப்புருபுக - டத்தம்
பொருள விசைநிறையசைநிலை-குறிப்பெனெண் பகுதியிற்றனி
த்தியலின்றிப் - பெயரினும் வினையினும் பின்முன் னோரிடத்-
தொன்றும்பலவும்வந் தொன்றுவ திடைச்சொல். *

(எ-னி.) இடைட்புரியடுத்து நான்குமாமெனநிறுத்த முறையானே யிடைச்சொல்லிலக்கண மிவ்வியலானுணர்த்துவான் றொடங்கியவையித்துணைய விவ்வியல்பினவென வவற்றின் பொதுவிலக்கணமுணர்-ற்று. (ப-ரை.) வேற்றுமை (யுருபுகள்) - ஐம்முதலிய வேற்றுமையுருபுகளும், வினை (யுருபுகள்)- விகுதிமுதலியவினையுருபுகளும், சாரியை (யுருபுகள்) - அன் ஆன் முதலியசாரியையுருபுகளும், ஒப் புருபுகள் - போலப் புரைய முதலிய உவமையுருபுகளும், தத்தம்பொருள - தத்தமக்குரியபொருளையுணர்த்திவருபவையும், இசைநிறை-செய்யுளிசை நிறைத்துவருபவையும், அசைநிலை - அசைத்தலைபொருளாகநிற்பவையும், குறிப்பு -இவைபோலாது குறிப்பினால்வருபவையும், என்- என்கிற, எண் பகுதியின் - எட்டுவகையினையுடையனவாய், தனித்தியலின்றி- தனித்துநடத்தலில்லாமல், பெயரினும் - பெயரினுள்ளும், வினையினும்-வினையினுள்ளும், பின்முன் - அவற்றின்பின்னுமுன்னுமாகிய, ஓரிடத்து- ஆறனுளோரிடத்து, ஒன்றும்-ஒன்றாயினும், பலவும்-பலவாயினும்-வந்து-வந்து, ஒன்றுவது-ஒன்றுபட்டுநடக்குந்தன்மையது, இடைச்சொல் - இடைச்சொல்லாகும். எ-று.

(பொ-ரை.) எழுவாயுருபுமுதலிய வெட்டுவேற்றுமையுருபுகளுட் பெயரும் பெயராது விகாரமுமாகிய வெழுவாயும் விளியுமொழித்தொழிந்த ஐம்முதலிய வாறுருபுகளும் பகுதி விகுதியிடைநிலையென்னுந் தெரிநிலையுங் குறிப்புமாகிய வினை யுருபுகளுண் முதனிலைத் தனிவினைப்பெயரும் பொருளாதியறுவகைப்பெயருமாகிய பகுதியொழித்தொழிந்த விகுதிமுதலிய வினையுருபுகளும் அன்ஆன்முதலிய சாரியையுருபுகளும்போலப் புரையமுதலிய வுவமவுருபுகளும் பிறவாறு தத்தமக்குரிய பொருளையுணர்த்திவருவனவும் வேறுபொருளின்றிச் செய்யுளிசை நிறைத்தலே பொருளாகவருவனவும் அசைத்தலேபொருளாகநிற்பனவும்வெளிப்படையின்வரு மிவைபோலாது குறிப்பின் வருவனவுமென்னுமெட்டுவகையினையுடையவாய்த் தனித்துநடத்தலின்றிப் பெயரினகத்தும் வினையினகத்து மவற்றின்புறமாகிய பின்னு முன்னு மிவ்விடங்களாறனு ளோரிடத் தொன்றேனும் பலவேனும்வந்தப்பெயர்வினைகட்கு அகத்துறுப்பாயும்புறத் துறுப்பாயுமொ

ன்றுபட்டுநடக்குந்தன்மைய திடைச்சொல்லாம். எ-று. ※ தெரி
நிலைவினையிடைநிலைபோல வேனையிடைநிலை சாரியைகட்கு வே
றுபொருளின்றேனும் பெயர்வினைகட்கின்றி யமையாது வருத
லே பெரும்பாலவாதலி னவற்றின்பொருளே பொருளென்பது
கருதி யிசைநிறை யசைநிலைகளைச்சாரவையாது முதற்கண்வைத்
தாரென்க. பெயரினும் வினையினு மென்றவும்மையைப் பின்மு
ன்னென்பனவற்றோடுங்கூட்டுக. இச்சொற்கள் முதற்கூறியபெய
ர்ச்சொல் வினைச்சொற்களுமாகாது அவற்றின்வேறுமாகா திடைநி
கரனவாய்நிற்றலி னிடைச்சொல்லெனக் காரணக்குறி பெற்றன
இதுபாலைத்திணை நடுவுநிலைத்திணையெனப் பெயர்பெற்றதுபோ
லுமென்க. அற்றேற்பாலைத்திணை நடுவுநிலைத்திணை யென்றுயவா
றென்னையெனில், ஆசிரியர் தொல்காப்பியர். "நடுவுநிலைத்திணை
யேநண்பகல்வேனிலொடு - முடிவுநிலைமருங்கின் முன்னியநெறி
த்தே" எனக்கூறியவழி யங்ஙனநடுவுநிலைத்திணையென்னுஞ்சொல்
லே யதன்காரண மினிதுவிளக்கிநிற்றலானது நடுவுநிற்றல்காரண
த்தாற்பெற்ற பெயரென்பதுபெற்றாம். இன்னு மவ்வாசிரியரே
னை நாற்றிணையமுறையானேகூறி யிறுதிக்கணோதுதலா னிஃதவ
ற்றின்வேறென்பது விளங்குதலானும் எஞ்சநின்றதுபாலையெயர்
கலானும் "நடுவணைந்திணை நடுவணதொழியப் - படுதிரைவையம்
பாத்தியபண்பே" என நிலம்பகுத்தோதுங்கா னடுவணதெனக்
குறியிட்டமையானு மங்ஙனம்பகுக்கப்படுநிலங்களுமாகா தவற்
றின்வேறுமாகாது தனக்குரியநிலம்நடுநிகர்த்ததாய் நிற்றல்பற்றி
நடுவுநிலைத்திணையெனக்குறியீடுபெற்றதெனக்கொள்க. இன்னமி
தன்றிறம்விரிக்கிற்பெருகும். அது நிற்க. இனியிடைநிகரனவாய்நி
ற்றலி னிடைச்சொல்லெனக் காரணக்குறி போந்ததூஉ மன்றித்
தனித்துநடத்தலின்றிப் பெயர்வினைகளிடமாகநடத்தலி னிடை
ச்சொல்லெனக் காரணக்குறி போந்ததெனினு மமையும். அது
முதனூலின்வழியாக நடக்குநூலை யங்ஙனங்கூறாது வழிநூலெ
ன்றாற்போலப் பெயர்வினைகளிடமாக நடக்குஞ்சொல்லை யங்ங
னங்கூறா திடைச்சொல்லெனப்பட்டது. அங்ஙனமாயி னிடமெ
னவியற்சொல்லாற்கூறா திடையெனத் திரிசொல்லாற்கூறிய தெ
ன்னையெனின் இயற்சொல்லாற்கூறி னிடப்பொருளையுணர்த்துஞ்
சொல்லெனப் பொருள்படுமாதலி னதனோடிதற்கு வேற்றுமை
தோன்றற்கென்க. — எண்வகையுட் டோன்று தொழிந்தனவருஞ்
சூத்திரங்களானுணர்க. — [வ - று.] நம்பியை - நம்பியால் - நம்
பிக்கு என்புழிப்பெயரின் புறத்துறுப்பாய் ஐயுருபுமுதலியவி
டைச்சொல் லொன்றுவந்தன. தச்சன் - தச்சிச்சி - முடியினன் எ
ன்புழிப்பெயரினகத்துறுப்பாய் விகுதி யிடைநிலை சாரியையி

டைச்சொற்கள் பலவந்தன. வினைக்குறிப்பி னகத்துறுப்பாய்ப் பலவருவனவுமன்ன. நடந்தான்-நடந்தனன் - என்புழித்தெரிநிலை வினையி னகத்துறுப்பாய் விகுதியிடைநிலை சாரியை யிடைச்சொற்கள் பலவந்தன. அவன்-எவன்-ஏமேஎன்-ஏனையோன்-எ-ம்-போல-புரைய-எ-ம்-சாத்தனென்பான்-சாத்தனாயினான்-எ-ம்- இடைச்சொல்லடியாகப் பிறந்தபெயராயும் வினையாயும் வினையிலக்கணையாயும் நிற்றலினிவற்றின் பகுதி விகுதி முதலியவு மன்ன. அதுமன்-அதுமற்றம்ம-எ-ம்- கொன்னூர்-"ஒல்வுவ மனூறந் வின்றி.,, -எ-ம்-பெயரின் புறத்துறுப்பாய்ப் பின்னுமுன்னுமொன்றும்பலவும் வந்தன. வருகதில்-வருகதில்லம்ம-எ-ம்- ஓஒதந்தார்-"எஎயம்யன்மொழிந்தனளாயே,, - எ-ம்-தெரிநிலைவினையின் புறத்துறுப்பாய்ப் பின்னுமுன்னுமொன்றும் பலவும்வந்தன. பிறவுமன்ன. இவற்றுட்சிலவொரோவழிவிகாரப்பட்டுமன் கொன் எனற்பாலன மன்னை கொன்னை யெனவருவனவுமுள, அவையெல்லாம் புதியனபுகுதலும் வழுவலவென்பதன்பாற் படுத்துக.(௧)

௪௱௨௧. தெரிநிலைதேற்ற மையமுற்றெண்சிறப்-பெதிர்மறை யெச்சம் வினாவிழைவொழியிசை- பிரிப்புக்கழிவாக்க மின்னன விடைப்பொருள். ※

(எ-ன்.)மேற்றத்தம்பொருளவென்றாரப்பொருளாவனவிவை யென்பதுணர்-ற்று. (ப-ரா.) தெரிநிலை - தெரிநிலையும், தேற்றம்-தெளிவும், ஐயம்-சந்தேகமும், முற்று -முற்றும், எண் - எண்ணும், சிறப்பு-சிறப்பும், எதிர்மறை-எதிர்மறையும், எச்சம்-எச்சமும்,வினா-வினாவும், விழைவு-விருப்பமும், ஒழியிசை-ஒழிந்தசொல்லும், பிரிப்பு-பிரிநிலையும், கழிவு-கழிவும், ஆக்கம்- ஆக்கமும், இன்னன-இவைபோல்வனபிறவும், இடை- தத்தம்பொருளவென்ற விடைச்சொற்களுடைய, பொருள் - பொருள்களாம் எ-று. (பொ-ரா.) தெரிநிலைமுதலாக விதந்த பதினான்கு மிவை போல்வனபிறவும்மேற்றத்தம்பொருளவென்றவிடைச்சொற்பொருள்களாம். எ-று. ※ இன்னனவென்றதனாற் சிலவருமாறு -அக்கொற்றன்- எக்கொற்றன்- என்பன சுட்டுப் பொருளும் வினாப்பொருளுந்தந்தன. நக்கீரர்-நப்பாலத்தனார் என்புழிநகரவிடைச்சொற் சிறப்புப்பொருடந்தது. "அஆ விழந்தானென் றெண்ணப்படும்.,,- "ஆஅ வளிய வலவன்றன் பார்ப்பினோடு.,, - "அந்தோவிசயைப்பட்டனள்.,, - "அரக்காம்ப னாறும்வா யம்மருங்குற்கன்னோ-பரற்கானமாற்றினகொல்லோ.,, என்புழி அஆ ஆ அந்தோ அன்னோவென்னு மிடைச்சொற்க ளிரங்குதற்பொருடந்தன. இவற்றிற்கதிசயப்பொருளுமுள. "அற்றோ றறியாமை கண்டற்றால்.,, - "செறிதொறிது செல்வத்தியற்கையே.,, என்புழித்

தோறு தோறுவென்னு மிடைச்சொற்க ளிடப்பன்மைப் பொருட்டந்தன. இனிச்செய்வான்- இனிஎம்மெல்லை என்புழியினியென்னு மிடைச்சொற் காலப்பொருளுமிடப்பொருளுமுறையே தந்தது. பிறவுமிவ்வாறு தனித்துநடக்கும் பெயர்வினையாகாது வருவனவெல்லாங்கொள்க. (௨)

௪௱௨௨. பிரிநிலைவினாவெண் ணீற்றசைதேற்ற - மிசைநிறை
யெனவா றேகாரம்மே. *

(எ-ன்.) வேற்றுமை யுருபுமுதலிய நான்குமேலே சொல்லப்பட்டமையி னவற்றை யொழித்தேனையவற்றை யுணர்த்துவான்றொடங்கி யவற்றுள் ஏகார இடைச்சொல் லிலக்கண முணர்-த்து. (ப-ள்.) பிரிநிலை-பிரிநிலையும், வினா-வினாவும், எண்-எண்ணும், ஈற்றசை-ஈற்றிலசைத்தலும், தேற்றம்-தெளிவும், இசைநிறை-இசைநிறைத்தலும், என-என்று, ஆறு-ஆறுபொருளைத்தரும், ஏகாரம்-ஏகாரவிடைச்சொல். எ-று. (பொ-ரை.) தெரிநிலை முதலியபதினொன்று மவைபோல்வன பிறவுமாகிய பொருள்களுள்ளுமிசைநிறைத்த லசைத்தல் குறிப்பென்னு மூன்று பொருள்களுள்ளும் பிரிநிலை முதலிய ஆறுபொருளையுந்தரும் ஏகார இடைச்சொல். எ-று. ❁ [வ-று.] அவனேகொண்டான் என்பதோர்குழுவினின்று மொருவனைப்பிரித்துநிற்றலிற் பிரிநிலை. இவ்வேகாரம் அவனோகொண்டானென்னும்பொருள்படவினாவிநிற்பின் வினா. நிலனே நீரே தீயே வளியே என்பது நிலனு நீருந் தீயும் வளியுமென்னும்பொருள்பட வெண்ணிநிற்றலினெண். "கடல்போற் றோன்றல் காடிறந்தோரே" என்பது சொல்லிறுதிக்க ணசைத்தற்பொருட்டருதலி னீற்றசை. இவ்வேகார வசைநிலை முதற்கண் வாராதென்பாரீற்றசையென்றார். அவனேகொண்டான் என்பது துணிதற்பொருட்டரிற்றேற்றம். இத்தேற்றப்பொருள் பிரிநிலைக்கண்ணேயுளதாதலின் இப்பொருளை வேறெடுத்துக்கூறுதலே னையபோற் சிறப்புடைத் தன்றென்பாரிதனைப் பொருட் சிறப்பில்லாவீற்றசைக்கு மிசைநிறைக்கு மிடையேகூறினார். "எஏயிவளொருத்திபேடியோவென்றார்." என்பதிசைநிறைத்தற்பொருட்டருதலினிசைநிறை. அவனே கொண்டான் என்பதோவழியவன்கொள்கிலனென வெதிர்மறைப்பொருட்டரினதுசெம்பொருளன்றி வலிந்துகொளப்படுதலிற் புதியனபுகுதலும் வழுவலவென்பதன்பாற்படுத்துக. (௩)

௪௱௨௩. ஒழியிசை வினாச்சிறப் பெதிர்மறை தெரிநிலை - கழி
வசைநிலைபிரிப் பெனவெட் டோவே. *

(எ-ன்.) ஓகாரவிடைச்சொல் லிலக்கண முணர்-த்து. (ப-ரை.)

ஒழியிசை-ஒழியிசையும், வினா-வினாவும், சிறப்பு-சிறப்பும், எதிர்மறை- எதிர்மறையும், தெரிநிலை-தெரிநிலையும், கழிவு-கழிவும், அசைநிலை-அசைநிலையும், பிரிப்பு-பிரிநிலையும், என-என்று, எட்டு-எட்டுப்பொருளைத்தரும், ஓ - ஓகார இடைச்சொல். எ-று.—(பொ-ரை.) ஒழியிசைமுதலிய வெட்டுப்பொருளையுந்தருமோகாரவிடைச்சொல். எ-று. ※ [வ-று] கொளலோகொண்டான் என்பது கொண்டுபோயினானல்லனென்றற்றொடக்கத்தொழிந்தசொற்களைத் தருதலினொழியிசை. குற்றியோ மகனோ என்பதுவினா. சிறப்புயர்வுசிறப்பிழிவுசிறப்பென விருவகைத்து ஓஒபெரியன் என்பதுயர்வுசிறப்பு. ஓஒகொடியன் என்பதிழிவுசிறப்பு. அவனோகொண்டான் என்பது கொண்டிலனென்னும் பொருடந்தவழி யெதிர்மறை. அலியைநோக்கி யாணோவதுவுமன்று பெண்ணோவதுவுமன்றென்பது அத்தன்மை யின்மைதெரிந்தவழிநிற்றலிற் றெரிநிலை. உறுதியுணராது கெட்டாரை ஓஒதமக்கோருறுதி யுணராரோவென்பது கழிவிரக்கப்பொருடருதலிற்கழிவு. "காணியவம்மினோ கங்குலதுநிலையே" என்பதசைநிலை. அவனோகொண்டான் என்பது பலருணின்று மொருவனைப்பிரித்தலைமகருதியவழிப் பிரிநிலை. இப்பொருளெதிர்மறைக்கண்ணே யுளதாதலின் அசைநிலையின்பின்வைத்தார். (௪)

௪௨௪. வினைபெயர் குறிப்பிசை யெண்பண் பாறினு-மெனவெனு மொழிவரு மென்று மற்றே. ※

(எ-ன்.) எனவெனவு மென்றெனவும்வருமிடைச்சொல்லிலக்கணமுணர்-ற்று. (ப-ரை.) வினை-வினையும், பெயர்-பெயரும், குறிப்பு-குறிப்பும், இசை- இசையும், எண்-எண்ணும், பண்பு-பண்புமாகிய, ஆறினும்-ஆறுபொருளினும், எனவெனுமொழி எனவென்னுமிடைச்சொல், வரும்-சேர்ந்துவரும், என்றும் -என்றென்னுமிடைச்சொல்லும், அற்று-அப்படியே ஆறுபொருளினும்வரும் எ-று. (பொ-ரை.) வினைப்பொருண் முதலிய வாறுபொருளினு மெனவென்னு மிடைச்சொல்வரும் என்றென்னுமிடைச்சொல்லு மவ்வாறுவரும். எ-று. ※ [வ-று.] கொள்ளெனக்கொண்டான் - மைந்தன்பிறந்தானெனத் தந்தையுவந்தான்- என்பதுவினை. ஊரெனப்படுவதுறையூர்-"அழுக்காறெனவொருபாவி" என்பதுபெயர். விண்ணெனவிசைத்தது- "பொள்ளெனவாங்கே புறம்வேரார்." என்பது குறிப்பு. ஒல்லெனவொலித்தது.-"நிலையருங்குட்டத்துத் துடுமெனப் பாய்ந்தது." என்பதிசை. நிலனென நீரெனத் தீயென வளியெனவரும் பூதநான்குமுருவம் என்பதெண். வெள்ளெனவிளர்த்தது - மெல்லெனநடந்தது என்பது பண்பு. இங்ஙன மெனவும் பொருட்குக் காட்

டிய பெயர்கடனித் தமிழில்லாதென்னி யளவைப் பண்புப்பொருணுணர்த்தலி னப்பொருண் முதற்க ணிறீஇய பெயர்ப்பொருளன்றென்க. என்றென்பதனையுங் கொள்ளென்று கொண்டானென முறையே யிவையுமாறொட்டுக. சுட்டுப்பெயர் வினாப்பெயர்கட்குத் தமக்கெனவோர் பொருளின்றிச் சுட்டவும் வினவவும் படும் பொருளாதி யாறுபெயர்ப்பொருளே பொருளாக வருதல்போல இவ்விரண்டிடைச் சொற்குந் தமக்கெனவோர் பொருளின்றி வினைமுதலியவா யிங்ஙனம் விதந்தவற்றின் பொருளே பொருளாகவருமென்பார் ஆறுபொருளையுந்தருமென்றது ஆறினும்வருமென்றார். (௫)

௪௱௨௫. எதிர்மறை சிறப்பைய மெச்சமுற்றளவை - தெரிநிலையாக்கமோ டும்மை யெட்டே. *

(எ-ன்.) உம்மையிடைச்சொல்லிலக்கணமுணர்-ற்று. (ப-ரை.) எதிர்மறை-எதிர்மறையும், சிறப்பு-சிறப்பும், ஐயம்-ஐயமும், எச்சம்-எச்சமும், முற்று-முற்றும், அளவை-அளவையும், தெரிநிலை-தெரிநிலையும், ஆக்கம்-ஆக்கமுமாகிய, எட்டு-எட்டுப்பொருளைத் தரும், உம்மை-உம்மையிடைச்சொல். எ-று. (பொ-ரை.) எதிர்மறைமுதலிய வெட்டுப்பொருளையுந்தரு மும்மையிடைச்சொல். எ-று. ❀ [வ-று.] கொற்றன் வருதற்குமுரியன் என்பதெதிர்மறை. குறவருமருளுங்குன்று - இவ்வூர்ப்பூசையும் புலாதின்றது என்பதுயர்வுசிறப்பு. பார்ப்பானுங் கள்ளுண்டான்-புலையனும் விரும்பாப்புன்புலால்யாக்கை என்பதிழிவுசிறப்பு. பூசையும்புலாதின்றதென்பதனை யிழிவுசிறப் பென்பாருமுளர். அங்ஙனமாயி னொருபொருளின துயர்வைச்சிறப்பித்த லிழிவைச்சிறப்பித்தலெனப் பொருள்படா துயர்ந்த பொருளான் மற்றொன்றைச் சிறப்பித்த லிழிந்தபொருளான் மற்றொன்றைச் சிறப்பித்தலெனப்பொருள்படும். அவ்வாறு பொருள்படினேகாரப்பொருளாய்வரு முயர்வுசிறப்பிற்கு மிழிவுசிறப்பிற்கு மாகாமையின் அது பொருந்தாதென்க. இனி யிவ்வும்மைப் பொருளைக் குன்ற முதலியவற்றிற் கொள்ளாது குறவர் முதலியவற்றிற்கொண்டு பூசையு மென்பதனை யிழிவு சிறப் பும்மையெனக் கோடலுமொன்று. இங்ஙன மிழிவுசிறப்பென்பதற் கிழிவினுட் சிறந்த விழிவெனப்பொருள்கூறுக. உயர்வுசிறப்புமஃது. பூசைக்குப் புலாதின்னுதலிழிபுந் தின்னாமை சிறப்புமாகப் பொருள் கொளிற் குறவர்க்கு மருளுதல் சிறப்பாகவேண்டுமாதலி னது பொருந்தாதென்க. பத்தாயினுமெட்டாயினுங்கொடுஎன்பதையம். சாத்தனும்வந்தான் என்பது கொற்றன்வந்ததன்றியெனப் பொருள்படி னிறந்ததுதழீஇய வெச்சவும்மை. கொற்றனும் வருவானெனப்

பொருள்படி னெதிர துதழீஇய வெச்சவும்மை. தமிழ்நாட்டுமூ வேந்தரும்வந்தார்- எல்லாரும்வந்தார் என்பது முற்றும்மை. சாத்தனுங் கொற்றனுந் தேவனும்பூதனும்வந்தார் என்பதெண்ணும்மை. ஆணுமன்று பெண்ணுமன்று என்பது தெரிநிலையும்மை தெரிநிலையோகாரம்போற் பொருளுணர்த்துக்கொள்க. நெடியனுமாயினன்-பாலுமாயிற்று என்புழி அவனே வலியனுமாயினன் அதுவேமருந்துமாயிற்று எனப்பொருள்படு மாக்கவும்மை.

௪௨௬. முற்றும்மை யொரோவழி யெச்சமு மாகும். *

(எ-ன்.) முற்றும்மைக் கெய்தியதன்மேற் சிறப்புவிதியுணர்-ற்று. (ப-ரை.) முற்றும்மை - முற்றும்மையானது, ஒரோவழி-ஒரோவிடத்தே, எச்சமுமாகும்- எச்சவும்மையு மாகும். எ - று.— (பொ-ரை.) முற்றும்மையொரோவிடங்களி னெச்சவும்மையுமாம். எ-று. ❁ [வ-று.] ஆறுந்தருவதுவினையே என்புழி யைந்துந் தருவதுவினையே யென்றும் எல்லாரு மிதுசெய்யார் என்புழிச் சிலரிது செய்வாரென்றும் முற்றும்மைப் பொருளு மெச்சவும்மைப்பொருளு மொருங்குதருதல்காண்க. இங்ஙனந் தருதலின் எச்சமுமென விறந்ததுதழீஇய வெச்சவும்மையாற்கூறினார்.(எ)

௪௨௭. செவ்வெ ணீற்றதா மெச்சவும்மை. *

(எ-ன்.) எச்சவும்மைக்காவதோர்விதியுணர்-ற்று. (ப-ரை) எச்சவும்மை- எச்சவும்மையானது, செவ்வெண் - செவ்வெண்ணின்மேல் வருமாயின், ஈற்றதாம்-ஈற்றின்மேல்வரும். எ - று. (பொ-ரை.) எச்சவும்மை செவ்வெண்ணின்கண் வருமாயினீற்றின்கண்வரும்.எ-று ❁ [வ-று.] செய்பவன் கருவி நிலஞ் செயல் காலஞ் செய்பொருளுந் தருந்திறத்ததுவினையே என்புழி யிவற்றுட் சிலவுந்தருந் திறத்ததுவினையேயெனவும் கல்வி செல்வ மொழுக்கங் குடிப்பிறப்பும் பெறுவாருமுளர். என்புழி யிவற்றுட்-சிலபெறுவாருமுளரெனவும் பொருள்படுதல்காண்க. (அ)

௪௨௮. பெயர்ச்செவ் வெண்ணே யென்றா வெனாவெண்-ணான்குந் தொகைபெறு மும்மையென் றெனவோ - டிந்நான் கெண்ணுமஃ தின்றியு மியலும். *

(எ-ன்.) முன்னெடுத்துவிதந்தும்விதவாதும்வருஞ்சிலவெண்ணிடைச்சொற்கட்காவதோ ரிலக்கணமுணர்-ற்று.(ப-ரை.)பெயர்ச்செவ்வெண்-பெயர்களிடத்தே யெண்ணிடைச்சொல்தொக்கு வருகிற செவ்வெண்ணும், ஏ(யெண்) - ஏகாரவெண்ணும், என்றா (வெண்)-என்றாவெண்ணும், எனாவெண்-எனாவெண்ணுமாகிய, நான்கும்- நான்கெண்களும், தொகை-தொகையை, பெறும்-பெற்று நடக்கும், உம்மை(யெண்) - உம்மையெண்ணும், என்(றெண்) என்றெண்ணும், என(வெண்)-எனவெண்ணும், ஓ (டெண்) -ஓ

டெண்ணும் ஆகிய, இந்நான்கெண்ணும்-இந்தநான்கெண்களும், அஃதின்றியும்- தொகைபெறாமலும், இயலும்- நடக்கும் எ-று.

(பொ-ள.) பெயர்களினிடையே யெண்ணிடைச்சொற்றொக்கு நிற்பவரும் செவ்வெண்ணும் பெயரோடு தொகாதுவரும் ஏகாரவெண்ணும் என்றவெண்ணும் எனவெண்ணுமாகிய நான்குந் தொகைபெற்று நடக்கும் உம்மையெண்ணும் என்றெண்ணும் எனவெண்ணும் ஒடுவெண்ணுமாகிய விந்நான்கெண்ணுந் தொகைபெற்றும் பெறாது நடக்கும். எ-று. ※ பெயரெண்ணென்றது செவ்வெண்ணென்றதனாலஃதெண்ணிடைச்சொற்றொக்க தொகைநிலையென்பதூஉம் அங்ஙனமாதலி னதனையும் ஏகார முதலியவெண்ணிடைச்சொற்களோ டுடன்கூறப்பட்ட தென்பதூஉம் பெற்றாம். [வ-று.] சாத்தன் கொற்றன் தேவன் பூத னால்வரும் வந்தார்- சாத்தனே கொற்றனே தேவனே பூதனே நால்வரும் வந்தார் - சாத்தனென்று கொற்றனென்று தேவனென்று பூதனென்று நால்வரும்வந்தார்-சாத்தனெனக் கொற்றனெனத்தேவனெனப் பூதனென நால்வரும்வந்தார்- இவைதொகைபெற்றேவந்தன. பெயர்ச்செவ்வெண்டொகை பெறுதற் கிச்சூத்திரத்தைக்காட்டினுமமையும். இவைவழக்கிடத்தொரோவழித்தொகைபெறாதுவரினிசையெச்சமாகவும் செய்யுட்கட் டொகைபெறாதுவரிற்றொகுக்கும் வழித்தொகுத்தலாயமையினவ்விகாரமாகவுமன்றேலிசையெச்சமாகவுங்கொள்க. சாத்தனுங் கொற்றனுந் தேவனும் பூதனு நால்வரும்வந்தார்- சாத்தனென்று கொற்றனென்று தேவனென்று பூதனென்று நால்வருளர். சாத்தனெனக்கொற்றனெனத் தேவனெனப் பூதனென நால்வருளர்- சாத்தனோடு கொற்றனோடு தேவனோடு பூதனோடு நால்வரிவன்மைந்தர் - எ-ம்- சாத்தனுங் கொற்றனுந் தேவனும் பூதனும்வந்தார்- நிலனென்று நீரென்று தீயென்று காற்றென் றளவறுகாயமென்றாகியவுலகம் - நிலனென நீரெனத் தீயெனக் காற்றென வளவறுகாயமெனவாகியவுலகம்-நிலனோடு நீரோடு தீயோடு காற்றோடளவறுகாயமோடாகியபூதம்-எ-ம்-இவைதொகைபெற்றும் பெறாதும்வந்தன. (௧)

சூ௪௨௧. என்று மெனவு மொடுவு மொரோவழி - நின்றும்பி
ரிந்தெண் பொருடொறு நேரும். ※

(எ-ன்.) எண்ணிடைச்சொல்லுட் சிலவற்றிற் கெய்தியதன்மேற்சிறப்புவிதியுணர்-ற்று. (ப-ள.)என்றும்-என்றென்பதும், எனவும்-எனவென்பதும், ஒடுவும்-ஒடுவென்பதும், ஒரோவழிநின்றும்-பொருளோடுநிற்றலேயன்றி ஒரிடத்திலே நின்றும், பிரிந்து-பிரிந்து, எண்- எண்ணப்படுகின்ற, பொருடொறும் - பொருள்,

தோறும், நேரும்-பொருந்தும். எ-று. (பொ-ரை) இம்மூன்றெண்ணுமெண்ணும்பொருளோடு நிற்றலையன்றி யோரிடத்துநின்றும் பிரிந்தெண்ணும்பொருடோறும்பொருந்தும். எ-று. ❊ [வ-று.] "வினைபகையென்றிரண்டி னெச்சநினையுங்காற் - றீயெச்சம்போலத் தெறும்.,,-"பகைபாவ மச்சம் பழியெனநான்கு-மிகவாவா மில்லிறப்பான்கண்.,,-"பொருள் கருவி காலம் வினையிடனோடைந்தி-மிருடீரவெண்ணிச்செயல்.,, எனவரும். எண்ணும் பொருடோறுந் தனித்தனி நிற்றலினுமோரோவழிநின்று பிரிதலிம்மூன்றெண்ணிற்கு மமைந்து கிடந்தனவாதலி னீண்டுக்கூறப்பட்டன. எனவே யேனை யெண்கட் கெண்ணும் பொருடோறுநிற்குநிலையேசிறந்தனவென்பதூஉ மோரோவழி நின்று பிரிதல் வலிந்து கொளற்பாலன வென்பதூஉ மவை யீண்டமையாதுதீபகமென்னு மணியிலக்கணத்தின்பாற் படுமென்பதூஉம் பெற்றாம். (௰)

௪௱௩௰. வினையொடு வரினுமெண் ணினைய வேற்பன. ❋

(எ-ன்.) மேற்பெயரோடுவந்த வெண்ணிடைச்சொற்கள்வினையோடும் வருமாறுணர்-ற்று. (ப-ரை.) எண்- எண்ணிடைச்சொற்கள், வினையொடுவரினும்- வினையோடுவந்தாலும், இனைய-பெயரோடுவரும்போது சொல்லப்பட்ட இவ்விலக்கணங்களையெல்லாம், ஏற்பன-ஏற்கும். எ-று. (பொ-ரை.) எண்ணிடைச்சொற்கள் வினையோடுவரினும்பெயரோடுவந்தாற்போலுமேற்பன. எ-று ❊ ஏற்பனவெனவே வினையோடேலா வெண்வருதலுந்தொகைபெறுதலுமில்லையென்க. [வ-று.] "மண்டிலமழுங்க மலைநிறங்கிளர- வண்டினமலர்பரந் தூதமிசையே-கண்டற்கானங் குருகினமொலிப்ப.,, என்பதுசெவ்வெண். கற்றுங்கேட்டுங்கற்பனைகடந்தான் என்ப தும்மையெண். உண்ணவென் றுடுக்கவென்று பூசவென்று முடிக்கவென்று வந்தான் என்பதென்றெண். உண்ணவென வுடுக்கவெனப் பூசவென முடிக்கவெனவந்தான் என்பதெனவெண். உண்ண வுடுக்கப் பூசமுடிக்கவென் றுவந்தான்-உண்ண வுடுக்கப்பூசமுடிக்கவெனவந்தான். -"தன்னிழிபெருகநாடோறும்வாழ்கவென் - றன்னுமிவ்வேட்கை யொழிந்தனரிலமோ,,என்பனவென்றுமெனவுமொரோவழிநின் றும்பிரிந்தன. பிறவற்றுள்ளு மேற்பனவந்தவழிக்காண்க. சாத்தன்வந்தான் கொற்றன்வந்தானிருவரும்வந்தமையாற் கலியாணம்பொலிந்தது என வினைச்செவ்வெண்தொகைபெற்றதென்பாருமுளர். தொகைச்சொற்பெயராதலின் அது உவகைப்பெயர்களோடு பொருந்தி யிருபெயரொட்டாமன்றி வினையொடுபொருந்தாமையானு மிங்ஙன மிருவரொன்னுந்தொகை சாத்தன்கொற்றனாகிய விருவரெனப்பெயர்த்தொ

கையாதலானு மதுபொருந்தாதென்க. (௰௧)

௪௱௩௰௧. விழைவே கால மொழியிசை தில்லே. *

(எ-ன்.) தில்லென்னுமிடைச்சொல் லிலக்கணமுணர் - ற்று.- (ப-ரை.) விழைவு-ஆசையும், காலம்-காலமும், ஒழியிசை-ஒழிந்தசொல்லும் ஆகிய மூன்றுபொருளையுந்தரும், தில் - தில்லென்னுமிடைச்சொல். எ-று. (பொ-ரை.) இம்மூன்று பொருளையுந் தருந் தில்லென்னுமிடைச்சொல் எ-று. ❁ [வ-று.] "வார்ந்திலங்குவை யெயிற்றுச் சின்மொழி- யரிவையைப்பெறுகதில்லம் மயானே.,, என்பதுபெறுதல்வேட்கையையுணர்த்தலின்விழைவு. "பெற்றாங்கறிகதில் லம்மவிவ்வூரே.,, என்பது பெற்றகாலத்தறிகவெனக் காலத்தைதயுணர்த்தலிற்காலம். "வருகதில் லம்மவெஞ் சேரிசேர.,, என்பது வந்தாலொன்றுசெய்வலென்னுஞ்சொல்லொழிந்துநிற்றலி னொழியிசை. (௰௨)

௪௱௩௰௨. மன்னே யசைநிலை யொழியிசை யாக்கங் - கழிவுமிகுதி நிலைபே றாகும். *

(எ-ன்.) மன்னென்னு மிடைச்சொல் லிலக்கணமுணர்-ற்று. (ப-ரை.) மன்-மன்னென்னுமிடைச்சொல், அசைநிலை- அசைத்துநிற்றற்பொருளிலும், ஒழியிசை-ஒழிந்தசொற்பொருளிலும், ஆக்கம்-ஆக்கப்பொருளிலும், கழிவு-கழிதற்பொருளிலும், மிகுதி - மிகுதிப்பொருளிலும், நிலைபேறு- நிலைபெறுதற்பொருளிலும்,ஆகும்-வரும். எ-று. (பொ-ரை.) இவ்வாறு பொருளையுந்தருமன்னென்னுமிடைச்சொல்.எ-று. ❁ [வ-று.] "அதுமற்கொண்கன்றேரே.,,.என்பதசைநிலை. "கூரியதோர்வாண்மன்.,, என்புழியதனாற் கருந்தாதறத்துணித்ததென்னுஞ்சொல்லொழியனின்றமையி னொழியிசை. நெடியன்மன் என்புழியவனே வலியனுமாயினனெனப் பொருடருதலினாக்கம். "சிறியகட்பெறினே யெமக்கீயுமன்னே.,, என்புழி யிப்பொழு தவனிறத்தலி னெமக்கீதல்கழிந்ததெனப்பொருடருதலிற்கழிதல். "எந்தையெமக்கருளுமன்.,, என்புழி மிகுதியு மருளுமெனப் பொருடருதலின் மிகுதி. "மன்னாவுலகத்து மன்னியது புரிமே,, என்புழி யிவ்விடைச்சொல்லடியாகப்பிறந்த வினையுண் மன்னென்பது நிலையினையுணர்த்தினமையி னிலைபேறு. (௰௩)

௪௱௩௰௩. வினைமாற் றசைநிலை பிறிதெனு மற்றே. *

(எ-ன்.) மற்றென்னுமிடைச்சொல்லிலக்கணமுணர் - ற்று.— (ப-ரை.) மற்று-மற்றென்னுமிடைச்சொல், வினைமாற்று -வினைமாற்றுப்பொருளையும், அசைநிலை- அசைத்துநிற்றற் பொருளையும்,பிறிதெனும்-பிறிதுபொருளையுந்தரும். எ-று. (பொ-ரை.) இம்மூன்றுபொருளையுந்தரு மற்றென்னு மிடைச்சொல்.எ-று.

❋ [வ-று.] "மற்றறிவாநல்வினை யாமிளையமென்றது.,, என்பது விரைந்தறிவாமென்னும் வினையையொழித்து விரையாதறிவாமென்னும் வினையைத்தந்து நின்றமையின் வினைமாற்று. "மற்றடிகள் கண்டருளிச்செய்யமலரடிக்கீழ்.,, என்பதசைநிலை. "ஊழிற்பெருவலி யாவுளமற்றொன்று- சூழினுந்தான்முந்துறும்.,, என்பதூழல்ல தொன்றென்னும் பொருடந்தமையிற் பிறிது.()

௪௨௮. மற்றைய தென்பது சுட்டிய தற்கினம். ❋

(எ-ன்.) மேலதற்கோர் புறனடை யுணர்-ற்று. (ப-ரை) மற்றையதென்பது- மற்றையதென்னும் பொருளாகிய வினைமாற்றும் பிறிதும், சுட்டியதற்கு- குறிக்கப்பட்டதற்கு, இனம்-இனமாகிய வினைமாற்றும் பிறிதுமாம். எ-று. (பொ - ரை.) மேற்கூறியமற்றென்னுமிடைச்சொற் பொருண் மூன்றனுண் மற்றையதென்னும் பொருளாகியவினைமாற்றும் பிறிதும் அங்ஙனங்கருதியதற்கினமாகிய வினைமாற்று மினமாகிய பிறிதுமாமன்றி வேறுவினைமாற்றும் வேறுபிறிதுமல்லவாம். எ-று. ❋ மேற்காட்டிய வுதாரணத்து ணல்வினையை விரைந்தறிவாமெனக்கருதியதற்குவிரையார்தறிவாமெனவும் ஊழொன்றெனக்கருதி யதற்கூழல்ல தொன்றெனவு மினம்வந்தவாறு காண்க. வேறுபிறிதாவ தென்னையெனின், இரண்டுமணியுளவழியொன்று கண்டான் மற்றொன்று காணவேண்டுமென்றானுகில் மற்றொன்றென்ப ததற்கினமாகியதோர் மணியெனப் பொருள்கொள்ளா தாடையணியெனப் பொருள் கோடலென்க. வினைமாற்று மிவ்வாறேகாண்க. மேலைச்சூத்திரத்துள் வினைமாற்றெனவும் பிறிதெனவும் பொதுப்படக் கூறினமையி னிச்சூத்திரத்தாற் புறனடைகொடுத்துக்காத்தாரென்க. இச்சூத்திரத்திற் கிவ்வாறன்றி மற்றைய தென்பதனை யோரிடைச்சொல்லாகவைத்து அச்சொ லங்ஙனங் கருதியபொருட் கினமாகியபொருளைத்தருமெனப் பொருள்கூறுவாருமுளர். மற்றைய தென்ப திடைச்சொலடியாகப் பிறந்தபெயரும் வினைக்குறிப்புமாமாதலானும் விகுதியோடு கூறின்றோனும் பகுதிப்பட்ட மற்றையென்னு மைகார வீற்றிடைச்சொற் கிப்பொருள் கூறினுறொனின் மன் மன்னை கொன் கொன்னையென நின்றாற்போல மற்று மற்றையென இறுதிவிகாரமாய் நின்றதன்றி யிதற்கெனவேறுபொருளின்மையானும் அதனோடிதற்குவேற்றுமை யிஃதினத்தையேதருதலெனப் பொருள்கொளின் மற்றென்ப தினத்தையு மினமல்லதையுந் தருமெனப் பொருள்படு மாதலானும் எல்லாவற்றானு மினமாயுள்ளதே வினைமாற்றும்பிறிதுமாய் வருமன்றியினமல்லதொருவாற்றானும் வாராமையானு மது பொருந்தாதென்க. (௰௫)

௪௱௨௰௫. கொல்லே யைய மசைநிலைக் கூற்றே. *

(எ-ன்.) கொல்லென்னு மிடைச்சொல்லிலக்கண முணர்-ற்று. (ப-ரை.) கொல்-கொல்லென்னு மிடைச்சொல்லானது, ஐயம்-ஐயப்பொருளினும், அசைநிலை-அசைநிலைப்பொருளினும்வருகிற, கூற்று-இடைச்சொல்லாம். எ-று. (பொ-ரை.) கொல்லென்பதிவ் விரண்டுபொருளையுந் தருஞ்சொல்லாம். எ-று. ❊ [வ-று] இவ் வுருக் குற்றிகொல் மகன்கொல் என்பது குற்றியோ மகனோவெ ன்னும்பொருள்பட வருதலின் ஐயம். "பிரிவெண்ணிப்பொருள்வ யிற்சென் றநங்காதலர்வருவர்கொல்வயங்கிழாய்" என்பதசைநிலை.

௪௱௨௰௬. ஒடுவுந்தெய்யவு மிசைநிறை மொழியே. *

(எ-ன்.) ஒடுவெனவுந் தெய்யவெனவும்வரு மிடைச்சொல் லிலக்கணமுணர்-ற்று. (ப-ரை.) ஒடுவுந்தெய்யவும்-ஒடுதெய்ய என் கிறவிரண்டும், இசைநிறை-இசைநிறைத்தற் பொருளைத்தருகிற, மொழி-சொற்களாம். எ-று. (பொ-ரை) இவ்விரண்டு மிசைநிறை த்தற்பொருளைத்தருஞ்சொற்களாம். எ-று. ❊ [வ-று.] "முதை ப்புனங்கொன்ற வார்கலியுழவர்-விதைக்குறுவட்டிற் போதொடு பொதுள." எ-ம்-"சொல்லேன்றெய்ய நின்னொடும்பெயர்த்தே." எ-ம்-வரும். (௰௭)

௪௱௨௰௭. அந்திலாங் கசைநிலை யிடப்பொரு ளவ்வே. *

(எ-ன்.) அந்திலெனவு மாங்கெனவும் வரு மிடைச்சொல் லில க்கணமுணர்-ற்று. (ப-ரை.) அந்தில்-அந்திலென்பதும், ஆங்கு-ஆங்கென்பதும், அசைநிலை- அசைநிலைப் பொருளையும், இடப் பொருள-இடப்பொருளையுந்தருவனவாம். எ-று. (பொ-ரை.) இவ்விரண்டிடைச்சொல்லு மசைநிலைப் பொருளவாயு மிடப்பொ ருளவாயும்வரும். எ-று. ❊ [வ-று.] "அந்திற் கழலினன் கச்சின ன்." என்பதசைநிலை. "வருமே-சேயிழை யந்திற் கொழுநற் கா ணிய." என்பதவ்விடத்தென்னும் பொருடருதலினிடம். "ஆங் கத்திறனல்ல யாங்கழற." என்பதசைநிலை. இதனுளாங்கென்னு ம சைநிலை யாங்கவென விறுதிவிகாரமாய் நின்றது. "ஆங்காங்காயி னுமாக." என்பதிடம். (௰௮)

௪௱௨௰௮. அம்ம வுரையசை கேண்மினென் றாகும். *

(எ-ன்.) அம்மவென்னு மிடைச்சொல்லிலக்கணமுணர்-ற்று. (ப-ரை.) அம்ம-அம்மவென்பது, உரையசை-உரையசைப்பொ ருளைத்தருவதும், கேண்மினென்று-ஒன்றுசொல்லுவேன் கேண் மினென்கிற ஏவற்பொருளைத்தருவதும், ஆகும்-ஆகும். எ-று. (பொ-ரை.) அம்மவென்பதுரையசைப் பொருளதாயும் ஒன்று சொல்வன் கேண்மினென்னு மேவற்பொருளதாயும்வரும். எ-று.

※ [வ-று.] "அதுமற்றம்ம,, என்பதுமாயசை. இதுசெய்யுட்க ண்வரினு மச்செய்யுளின்பொருட்டன்றித் தானடைந்த சொல் லின்பொருட்டுவருதலி னுமாயசையாயிற்று. "அம்மவாழிதோ ழி,என்டமதொன்றுசொல்வன்கேளென் னுமேவற்பொருடந்தது

௪௱௩௫. மாவென் கிளவி வியங்கோ ளசைச்சொல். *

(என்.) மாவென்னு மிடைச்சொல் லிலக்கண முணர்-ற்று.— (ப-ரை.) மாவென்கிளவி-மாவென்னுஞ்சொல், வியங்கோள்-விய ங்கோளிடத்துவருகிற, அசைச்சொல்-அசைச்சொல்லாகும்.எ-று (பொ-ரை.) மாவென்னுஞ்சொல் வியங்கோளின்கண்வருமசைச் சொல்லாம். எ-று ※ [வ-று] "மாயக்கடவுட்குயர்கமாவலனே,, "உப்பின்று-புற்கை யுண்கமா கொற்கை யோனே,,எனவரும். ()

௪௱௩௬. மியாயிக மோமதி யத்தையித்தை - வாழிய மாளவீ யாழமுன் னிலையசை. *

(எ-ன்) மியாமுதலியவிடைச்சொற்களி னிலக்கணமுணர்-ற்று. (ப-ரை.) மியா-யாழ,மியா இக மோ மதி அத்தை இத்தை வாழி ய மாள ஈ யாழ என்கிற பத்திடைச்சொற்களும், முன்னிலை-மு ன்னிலையிடத்துவருகிற, அசை - அசைச் சொற்களாம். எ-று.— (பொ-ரை.) இங்ஙனங்கூறிய பத்திடைச் சொற்களு முன்னிலைக் கண்வரு மசைநிலைகளாம். எ-று ※ [வ-று.] "சிலையன் செழுந் தழையன் சென்மியாவென்று - மலையகலான் வாடிவரும்.,,எ-ம்- "தண்டுறையூர காணிகமெனவே.,,எ-ம்-"காமஞ்செப்பாதுகண் டதுமொழிமோ.,, எ-ம்-"சென்மதிபெரும.,,-எ-ம்-"மெல்லிய ற்குருமக ளுள்ளிச்செல்வத்தை.,,- எ - ம் - "வேய்நரல் விடரகநீ யொன்றுபாடித்தை,,-எ-ம்- "காணியவாவா ழியமலைச் சாரல்.,, எ-ம்- "சிறிதுதவிர்ந்தீகமாளநின் பரிசில ருய்ம்மார் ,, -எ-ம்- "சென்றீ பெருமநிற் றகைக்குநர்யாரோ.,,-எ-ம்- "நீயே - செய் வினைமருங்கிற் செலவயர்ந்தியாழ.,,-எ-ம்-முறையேகாண்க. ()

௪௱௩௭. யாகா பிறபிறக் கரோபோ மாதிகுஞ் -சின்குரையோ ரும்போலு மிருந்திட் - டன்றாந் தாந்தான் கின்றுநின் றசை மொழி. *

(எ-ன்.) யாமுதலிய விடைச்சொற்களி னிலக்கணமுணர்-ற்று. (ப-ரை.) யா-நின்று- யா கா பிற பிறக்கு அரோ போ மாது இ கும் சின் குரை ஒரும் போலும் இருந்து இட்டு அன்று ஆம் தா ம் தான் கின்று நின்று என்கிற இருபதிடைச்சொற்களும், அசை மொழி- எல்லாவிடங்களிலும்வருகிற அசைச்சொற்களாம் எ-று (பொ-ரை.) இவ்விருப திடைச்சொல்லு முன்னையபோலா தெல் லாவிடத்தினு மெல்லாச் சொல்லினும்வரு மசைச்சொல்லாம்— எ-று. ※ விதவாமையினெல்லாவிடத்தினுமெல்லாச்சொல்லினு

ம்வருமென்பதுபெற்றும். [வ-று] "வாழ்கநின்கழலடி மைந்த வென்னவே - தோழியர் சுவாகதம் போத்விங்கிதென்.,, - எ-ம்- "அறநிழலெனக்கொண்டாய் நின்குடையக் குடைப் - புறநிழற் பட்டாளோ விவளிவட்காண்டிகா.,,-எ-ம்- "மேயுநிரைமுன்னர்க் கோலூன்றி நின்றுயோ -ராயனையல்லபிற ,,-எ-ம்- "பிறக்கிதனுட்செல்லான்பெருந்தவம்பட்டான்,,எ-ம்- "நோதகவிருங்குயிலாலுமரோ,,-எ-ம்- "எரியின்னன்ன செந்தலையன்றில்-பிரியின்வாழாதென்போ,,எ-ம்- "விளிந்தன்றுமாதோதெளிந்தவெங்கண்ணே,, எ-ம்- "காண்டிகு மல்லமோ கொண்க.,,-எ-ம்- "ஈங்காகியவா லென்றிசின்.,,-எ-ம்- "அதுபெறலருங்குரைத்தே.,,-எ-ம்- "அஞ்சுவதோருமறனே,,-எ-ம்- "வடுவென்றகண்ணாய்வருந்தினைபோலும்,, எ-ம்- "ஓராற்று லென்கண்ணிமைபொருந்த வந்திலையே -கூரார்வேன் மாறனென்கைப்பற்ற - வோரா-நனவென்றெழுந்திருந்தேனல்வினையொன் றில்லேன் - கனவுமிழந் தொழிந்த வாறு.,,- எ-ம்- "நெஞ்சம்பிளந்திட்டு ,,-எ-ம்- "தேவாதிதேவ னவன்சேவடிசேர்துமன்றே.,,-எ-ம்- "பணியுமா மென்றும் பெருமை சிறுமை-யணியுமாந்தன்னைவியந்து,,- எ-ம்- நீர்தாம்-எ-ம் - நீதான்- எ-ம்- "யன்பிறனளியன் வாழ்வானசைப்பட் டிருக்கின்றேன்,, [என்புழி யாசைப்பட்டேனென்பது பொருளாதலிற் கின்றென்பது நிகழ்காலவிடைநிலையன்று.] எ-ம்- "அழலடைந்தமன்றத் தாந்தையராய்நின்றார் - நிழலடைந்தே நின்னையென்றேத்த.,,- எ-ம்-முறையேகாண்க. பிறவுமன்ன. (௨௨)

இடையியல்

முற்றுப்பெற்றது.

பெயரெச்சமும் வினையெச்சமும் - பின்னன்றும் இடை
சொல்லையும் பின்னன்றும் [illegible]
[illegible]

வடிமன்- } [illegible]
வ[illegible] } [illegible]
[illegible] } [illegible]-35-ம் [illegible]

ஐந்தாவது

உரியியல்.

௩௱௪௨. பல்வகைப் பண்பும் பகர்பெயராகி - யொருகுணம் பலகுணந்தழுவிப் பெயர்வினை - யொருவாசெய்யுட் குரியனவுரிச்சொல்.

(எ-ன்.) திருத்தமுறையானே யுரிச்சொல்லிலக்கண மிவ்வியலானுணர்த்துவான் றொடங்கியவாற்றின் பொதுவிலக்கணமுணர்-ற்று. (ப-ரை.) பல்வகை-இசையும் குறிப்பும் பண்பும் ஆகிய பலவேறு வகைப்பட்ட, பண்பும்-பண்புகளையும், பகர்பெயராகி-உணர்த்துகிறபெயராகி, ஒருகுணம் - ஒருகுணத்தையும், பலகுணம்-பலகுணங்களையும், தழுவி-உணர்த்துவனவாய், பெயர்வினை - பெயர்வினைகளைவிட்டு, ஒருவா - நீங்காவாய், செய்யுட்கு-செய்யுளுக்கு, உரியன-உரியவையாய்ப் பொருளுக்குரிமைபூண்டுநிற்பவை, உரிச்சொல் - உரிச்சொற்களாம். எ-று. (பொ-ரை.) பண்புகள்குணப்பண்புந் தொழிற்பண்புமாகிய விரண்டனுளடங்குமாயினு மிசைகுறிப்பு பண்பெனப் பலவேறுவகைப்படுதலின் பலவேறுவகைப்பட்ட பண்புகளையுமுணர்த்தும்பெயராகியங்ஙனமுணர்த்துழி யொருசொல் லொருகுணத்தை யுணர்த்துவனவும் பலகுணத்தை யுணர்த்துவனவுமா யேனைப்பெயர்வினைகளைவிட்டுநீங்காவாய்ச் செய்யுட்குரியனவாய்ப் பொருட்குரிமைபூண்டுவருவன வுரிச்சொல்லாம். எ-று. ❋ இவ்வாறு வருதன்மைற்காட்டுமுதாரணங்களுட் காண்க. இவையும் பண்புப்பெயராயினுமேனைப் பெயர்வினைகளைவிட்டு நீங்காமையின் வேறோதப்பட்டன வென்பதூஉம் செய்யுட்குரியனவாய்ப் பொருட்குரிமைபூண்டனவாதலி னிவற்றிற்குரிச்சொல்லென்னுக் காரணக்குறி போந்ததென்பதூஉ மிவற்றி லிலக்கணங் கூறியமுகத்தா னுணர்த்தியவாறுகாண்க. இசை-ஓசை-குறிப்பு-மனத்தாற் குறித்துணரப்படுவது. பண்பு-பொறியா லுணரப்படுங்குணம். இவற்றை யடக்கிநின்ற குணமுந் தொழிலும் பொருளெனவும் படுமாத லினிவற்றையுணர்த்து முரிச்சொல்லும் பெயர்ச்சொல்லெனப்படுமாதலிற் பல்வகைப்பண்பும்பகர்பெயராகியென்றார். (௧)

௩௱௪௩. உயிருயிரல்லதாம் பொருட்குணம்பண்பே. ❋

(எ-ன்.) மேற்பண்பென்றாரஃதிஃதெனவுணர்-ற்று. (ப-ரை.) உயிர்-உயிராகியபொருளும், உயிரல்லது-உயிரல்லாதபொருளும், ஆம் - ஆகிய, பொருள்-பொருள்களினுடைய, குணம்-குணங்கள், பண்பு-பண்புகளாகும். எ-று. (பொ-ரை.) உயிராகியபொ

ருளு முயிரல்லாதபொருளுமென விருவகையுளடங்கு முலகத்து
ப்பொருள்களின் குணங்கள்பண்பாம். எ-று. ※ கடவுட்பொரு
ளை யொழித்தாரதற்கோர் குணமின்மையானு முண்டேற்சுட்டப்
பட் டேலகப்பொருளா மாதலானுமென்க. . . (௨)

௩௱௪௪. மெய்ந்நாமூக்குநாட்டஞ்செவிகளி னொன்றுமுதலாக்
கீழ்க்கொண்டுமே லுணர்தலி - னோரறிவாதியா வுயிரைந்தாகும்.

(எ - ன்.) மேலுயிராகிய பொருளென்றா ரவையிவையெனத்
தொகுத்துணர்-ற்று. (ப-ரை.) மெய்-மெய்யும், நா-நாவும், மூ
க்கு - நாசியும், நாட்டம்-கண்ணும், செவிகளின்-காதும் ஆகியஐ
ம்பொறிகளாலும், ஒன்று முதலா- மெய்யாற்பரிசத்தையுணருமு
ணர்ச்சியொன்றுமுதலாக, கீழ்க்கொண்டு - கீழ்ப்போனவுணர்ச்
சியுங்கொண்டு, மேல்-இரதம் கந்தம் உருவம் சத்தம் எனமேல்வ
ரும்புலன்களை, உணர்தலின் - ஒன்றொன்றாகவுணர்தலின், ஓரறி
வாதியா-ஓரறிவுயிர்முதலாக, ஐந்தாகும்-ஐந்துவகையாகும், உயி
ர்-அவ்வுயிர். எ-று. (பொ-ரை.) இங்ஙன மெய்முதலாகக் கூறிய
ஐம்பொறிகளானும் பரிசம் இரதம் கந்தம் உருவம்சத்தமென்னு
ம்ஐம்புலனையுமுணருங்கால் மெய்யாற்பரிசத்தை யுணருமுணர்
ச்சியொன்று முதலாகக் கீழ்ப்போன வுணர்ச்சியுங்கொண்டு மே
ல்வரும்புலன்களை யொன்றொடொன்றாக வுணர்தலினோரறிவுயி
ர்முதலாகவைந்தாமவ்வுயிர். எ-று. (௩)

௩௱௪௫. புன்மர முதலவுற் றறியுமோ ரறிவுயிர். ※

(எ-ன்.) மேற்கூறியவுயி ரைந்தனு ளோரறிவுயி ரிவையென
வுணர்-ற்று. (ப-ரை.) புல்-புல்லும், மரம்-மரமும், முதல-முதலி
யவை, உற்றறியும்-மெய்யாற்பரிசித்துப் பரிசத்தையறிகிற, ஓரறி
வுயிர்-ஓரறிவுயிர்களாம். எ-று (பொ-ரை) புல்லு மரமுமுதலியன
மெய்யாற் பரிசித்துப்பரிசத்தையறியுமோரறிவுயிர்களாம். எ-று

௩௱௪௬. முரணந் தாதிநா வறிவொ டீ ரறிவுயிர். ※

(எ-ன்.) ஈரறிவுயிரிவையெனவுணர்-ற்று. (ப-ரை.) முரண் - இ
ப்பியும், நந்து-சங்கும், ஆதி-முதலியவை, நாவறிவொடு - கீழ்ப்
போன மெய்யறிவேயன்றி நாவா லிரதத்தையும் அறிகிற, ஈரறி
வுயிர்-ஈரறிவுயிர்களாம். எ-று. (பொ-ரை.) இப்பியுஞ் சங்குமுத
லியன கீழ்ப்போன மெய்யறிவேயன்றி நாவா லிரதத்தை யறியு
மறிவோடீரறிவுயிர்களாம். எ-று. (௫)

௩௱௪௭. சிதலெறும் பாதிமூக் கறிவின்மூ வறிவுயிர். ※

(எ-ன்.) மூவறிவுயி ரிவையென வுணர்-ற்று. (ப-ரை) சிதல்-க
றையானும், எறும்பு-எறும்பும், ஆதி-முதலியவை, மூக்கறிவின்-
கீழ்ப்போன இரண்டறிவுகளேயன்றி மூக்காற் கந்தத்தையும் அ

றிகிற அறிவோடு, மூவறிவுயிர்-மூவறிவுயிர்களாம். எ-று. (பொ-ரை.) கறையானும் எறும்புமுதலியன கீழ்ப்போன இரண்டறிவுகளையன்றி மூக்காற்கந்தத்தை யறியுமறிவினோடு மூவறிவுயிர்களாம். எ-று. ❁ மேலொடுவைவீண்டும்வருவித்துக்கொள்க.)

௪௱௪௰௮. தும்பிவண் டாதிகண் ணறிவினோ லறிவுயிர். *

(எ-ன்.) நாலறிவுயிரிவையெனவுணர்-ற்று. (ப-ரை.) தும்பி-தும்பியும், வண்டு-வண்டும், ஆதி-முதலியவை, கண்ணறிவின் -கீழ்ப்போன மூன்றறிவுகளையன்றிக் கண்ணால் உருவத்தையும் அறிகிறவறிவோடு, நாலறிவுயிர்-நாலறிவுயிர்களாம். எ-று. (பொ-ரை.) தும்பியும் வண்டுமுதலியன கீழ்ப்போன மூன்றறிவையன்றிக்கண்ணாலுருவத்தையறியுமறிவினோடு நாலறிவுயிர்களாம். எ-று. (எ)

௪௱௪௰௯. வானவர் மக்க ணரகர் விலங்குபுள் - ளாதிசெவியறி வோ டையறி வுயிரே. *

(எ-ன்) ஐயறிவுயிரிவையெனவுணர்-ற்று. (ப-ரை.) வானவர்-தேவரும், மக்கள்-மனிதரும், நரகர்-நரகரும், விலங்கு-மிருகங்களும், புள்-பறவைகளும், ஆதி-முதலியவை, செவியறிவொடு-கீழ்ப்போன நாலறிவுகளையன்றிச் செவியாற் சத்தத்தையும் அறிகிறவறிவோடு, ஐயறிவுயிர் - ஐயறிவுயிர்களாம் எ-று. (பொ-ரை.) வானவரு மக்களு நரகரும் விலங்கும் புள்ளு முதலியன கீழ்ப்போன நாலறிவையன்றிச் செவியாற்சத்தத்தை யறியு மறிவினோடையறிவுயிர்களாம். எ-று ❁ சித்துப்பொருள்சடப்பொருளெனப்பொருளிரண்டாம் பொருளெனக்கூறியவாறும் சித்தாகிய வுயிரறிவுசடமாகியவுடலொடுகூடியவழியன்றி நிகழாமையானுமற்றிகழ்ச்சிகண்டல்ல துயிருண்டென்பதூஉம் அதற்கோரறிவுண்டென்பதூஉந் தோன்றாமையானு முயிரைப்பிரித்தோதாதுடலொடுகூட்டிப் புன்மர முதலவென முறையே கூறியவாறும் அவ்வுயிரறிவுடலொடுகூடி நிகழ்வழி யைம்பொறியானுமைந்தாய்நிகழ்தலினையறிவெனக்கூறியவாறும் இவ்வைம்பொறியு மெல்லாவுடற்கண்ணு மொருங்குநில்லா திங்ஙனங்கூறியமுறையேநின்றமின்வநிகழ்தலி னுயிர்கள் பலவாயினு மறியும்வகையா னுயிரைந்தெனக் கூறியவாறுங்காண்க. ஆசிரியர் தொல்காப்பியர் "மக்கடாமே யாறறிவுயிரே.,, எனக்கூறியிருக்க மக்கண்முதலியோரையையறிவுயிரெனக்கூறன் யாறுகொளக்கூறலாம் பிறவெனின் மக்கண்முதலியோர்மனவறிவோடாறறிவுயி ரென்பது நோக்கியன்றேமுன்னர் "மக்கடேவர் நரகருயர்திணை.,, எனக்கூறிப்போந்ததூஉமாதலின் இங்ஙனமைம்புலன் மாத்திரையே யுணருமறிவுடைய மக்கண்முதலியோரை விலங்கு முதலியவற்றோடொக்கவைந்தறிவுயிரெனக்கூறினாரென வுய்த்துணர்ந்துகொள்க. (அ)

௩௱௯௰. உணர்விய லாமுயி ரொன்று மொழித்த - வுடன்முத லனைத்து முயிரல் பொருளே. *

(எ-ன்) உயிரல்பொருளாவன விவையெனவுணர்-ற்று. (ப-ரை) உணர்வியலாம்- அறிவுமயமாகிய, உயிரொன்றுமொழித்த- உயிரொன்றுமேயன்றி, உடன்முதல்-உடம்புமுதலாகிய, அனைத்தும்- உலகத்துப்பொருள்களெல்லாம், உயிரல்பொருள் - உயிரல்லாத பொருள்களாம். எ-று. (பொ-ரை.) அறிவுமயமா முயிரொன்றுமேயன்றி யவ்வுடம்புமுதலிய வுலகத்துப் பொருள்களெல்லாமுயிரல்லாதபொருள்களாம். எ-று. ❁ முன்ன ருயிர்மாத்திரையே கூறுவாருடம்பொடு கூட்டிக்கூறினரன்றி யுடம்பையு முளப்படுத்தியுயிர்ப்பொருளென்று ரல்லரென்பதிதனானுணர்க. (௯)

௩௱௯௰௧ ஒற்றுமை நயத்தி னொன்றெனத் தோன்றினும்- வேற்றுமை நயத்தின் வேறே யுடலுயிர். *

(எ-ன்.) மேலதற்கோர்புறனடையுணர் - ற்று. (ப-ரை.) ஒற்றுமைநயத்தின்- எவ்வுயிர் எவ்வுடம்பை யெடுத்ததோ அவ்வுடம்பின்மயமாய் நிற்கிற ஒற்றுமை நயங்கருதியவழி, ஒன்றென -ஒன்றுபோல, தோன்றினும்-தோன்றுமாயினும், வேற்றுமைநயத்தின்-உயிர்சித்தாயும் உடம்புசடமாயும் நிற்கிற வேற்றுமைநயமாகியவுண்மைகருதியவழி, உடலுயிர்-அவ்வுடலும்உயிரும், வேறு- வேறாம். எ-று. (பொ-ரை) பசுவுடம்பெடுத் தழித்தன்கன்றினுக்கிரங்கி நன்கிழைத்தவுயி ரவ்வுடம்பு நீங்கிப் புலியுடம்பெடுத்து யிரங்கா தக்கன்றினுக்கே தீங்கிழைக்கு மாதலி னெவ்வுயிரெவ்வுடம்பெடுத்ததோ வவ்வுடம்பின் மயமாய்நிற்கு மொற்றுமைநயங்கருதியவழியொன்றுபோற் றோன்றுமாயினு முயிர்சித்தாயுமுடம்புசடமாயுநிற்கும் வேற்றுமைநயமாகிய வுண்மைகருதியவழி யவ்விரண்டுந் தம்முள் வேறுமாதலி னுயிரோடு கூடிநின்றகாலத்து மவ்வுடம்பின் யுயிரல்பொருளென்றும். எ-று. (௰)

௩௱௯௰௨. அறிவருளாசை யச்சமான- நிறைபொறையோர்ப்புக்கடைப்பிடிமைய - னினைவுவெறுப்புவப் பிரக்கநாண்வெகுளி- துணிவழுக் காறன் பெளிமை யெய்த்த - றுன்பமின்ப மிளமைமூப்பிகல- வென்றி பொச்சாப் பூக்கமறமத - மறவியினையவுடல்கொ ளுயிர்க்குணம். *

(எ-ன்.) உயிரின் குணமென்று ரவையிவையெனவுணர் - ற்று. (ப-ரை) அறி-மறவி-அறிவு அருள் ஆசை அச்சம் மானம் நிறை பொறை ஓர்ப்பு கடைப்பிடி மையல் நினைவு வெறுப்பு உவப்பு இரக்கம் நாண் வெகுளி துணிவு அழுக்காறு அன்பு எளிமை எய்த்தல் துன்பம் இன்பம் இளமை மூப்பு இகல் வென்றி பொச்சாப்பு ஊக்கம் மறம் மதம் மறவி என்கிற முப்பத்திரண்டும்,

இனைய- இவைபோல்வனபிறவும், உடல்கொள்-உடம்போடுகூடி ய, உயிர்க்குணம் - உயிர்களினுடைய குணங்களாம். எ - று.— (பொ-ரை.) அறிவுமுதலிய முப்பத்திரண்டுமிவைபோல்வனபி றவுமுடம்போடுகூடிய வுயிர்க்குணங்களாம். எ-று. உடலோடு கூடாவழியுயிர்க்குணங்க டோன்றாவென்பாருடலங்கொளுயிர்க் குணமென்றார். பின்வருவதுமது. (௰௧)

௪௱௫௫ துய்த்த றுஞ்ச றொழுத லணித - லுய்த்த லாதி யுட லுயிர்த் தொழிற்குணம். *

(எ-ன்.) உயிரின்றொழிற்குணமுணர்-த்து. (ப-ரை) துய்-துய் த்தல்- துய்த்தல் துஞ்சல் தொழுதல் அணிதல் உய்த்தல் என்கிற ஐந்தும், ஆதி-இவைபோல்வனபிறவும், உடலுயிர்- உடம்போடு கூடியவுயிர்களுடைய,தொழிற்குணம்-தொழிற்குணங்களாம்.— எ-று. (பொ-ரை.) ஐம்புலனையு நுகர்தன்முதலிய விவ்வைந்தும் இவைபோல்வன பிறவு முடம்போடுகூடிய வுயிரின் றொழிற்குண ங்களாம். எ-று- (௰௨)

௪௱௫௬. பல்வகை வடிவிரு நாற்றமை வண்ண -மறுசுவையூ றெட் டுயிரல் பொருட்குணம். *

(எ-ன்.) உயிரல்லாதபொருள்களின்குணமுணர்-த்து (ப-ரை) பல்வகைவடிவு- வட்டம் இருகோணம் முக்கோணம் சதுரம் இ வைமுதலாகிய பலவகைவடிவுகளும், இருநாற்றம்- நற்கந்தம் து ர்க்கந்தம் என்கிற இருநாற்றங்களும், ஐவண்ணம்-வெண்மைசெ ம்மை கருமை பொன்மை பசுமை என்கிற ஐந்து வண்ணங்களு ம்,அறுசுவை-கைப்பு புளிப்பு துவர்ப்பு உவர்ப்பு கார்ப்பு இனி ப்பு என்கிற அறுசுவைகளும், ஊறெட்டு - வெம்மை தண்மை மென்மை வன்மை நொய்மை சீர்மை இழுமெனல் சருச்ச ரை என்கிற எட்டூறுகளும், உயிரல்பொருள்-உயிரல்லாதபொரு ள்களினுடைய, குணம்-குணங்களாம். எ-று. (பொ-ரை. வட்டமி ருகோண முக்கோணஞ் சதுரமுதலிய பலவகைவடிவு நற்கந்தந் துர்க்கந்தமென்னு மிருநாற்றமும் வெண்மைசெம்மைகருமை பொன்மை பசுமையென்னு மைந்துவண்ணமும் கைப்பு புளி ப்பு துவர்ப்பு உவர்ப்பு கார்ப்பு இனிப்பென்னு மாறிரதமும், வெம்மை தண்மை மென்மை வன்மை நொய்மை சீர்மையிழு மெனல் சருச்சரையென்னு மெட்டூறு முயிரல்லாத பொருள்க ளின் குணங்களாம். எ-று. (௰௩)

௪௱௫௭. தோன்றன் மறைதல்வளர்தல்சுருங்க -னீங்கலடைத னடுங்கலிசைத்த-லீதலின்னன விருபொருட்டொழிற்குணம். *

(எ-ன்.) உயிரல்பொருட்கேயுரியதொழிற்குணமருகிக்கிடத்த லினதனையொழித் தவ்விருபொருட்கும் பொதுவான தொழிற்

குணமுணர்-ற்று. (ப-ரை.) தோன்றல்-லீதல்,தோன்றல் மறைதல் வளர்தல் சுருங்கல் நீங்கல் அடைதல் நடுங்கல் இசைத்தல் ஈதல் என்கிற வொன்பதும், இன்னன - இவைபோல்வன பிறவும், இருபொருள்- உயிர்ப்பொருளும் உயிரல்பொருளும் ஆகிய இரண்டற்கும் பொதுவாகிய, தொழிற்குணம் -தொழிற்குணங்களாம். எ-று. (பொ-ரை.) தோன்றன் முதலிய வொன்பது மிவைபோல்வனபிறவு முயிர்ப்பொரு ளுயிரல்பொருளென் னுமிரண்டற்கும்பொதுவான தொழிற்குணங்களாம். எ-று. ❁ [வ-று.] உயிர் தோன்றிமறைந்தது- உடறோன்றிமறைந்தது- நெருப்புத்தோன்றிமறைந்தது-என இத்தொடக்கத்தன வெல்லா மிருபொருட்கும்பொதுவாகிய தொழிற்குணமாதல்காண்க. (௰௪)

சாருகூ. சாலவுறுதவ நனிகூர் கழிமிகல். *

(எ-ன்) பல்வகைப்பண்பென்று ரவையிவையென விதுகாறுமுணர்த்தியப்பண்புகளுளொருகுணம்பலகுணந்தழுவிவருமென் னுமுரிச்சொற்க ளிவையென வுணர்த்துவான்றொடங்கி யவற்றுளொருகுணந்தழுவிய வுரிச்சொல்லுட்சிலவுணர்-ற்று.(ப-ரை) சால-கழி,சாலவென்பதுமுதலாகிய இவ்வாறுரிச்சொற்களும்,மிகல்-மிகுதியாகிய ஒருகுணத்தையுணர்த்துகிற உரிச்சொற்களாம் எ-று. (பொ-ரை.) சாலவென்பதுமுதற் கழியென்ப தீறாகக்கூறிய ஆறுரிச்சொல்லு மிகுதியாகிய வொருகுணத்தை யுணர்த்துஞ்சொற்களாம். எ-று. ❁ [வ-று.] "பருவந்து சாலப் பலகொலைசென்றெண்ணி.,,-"உறுவளிதூக்கு முயர்சினைமாவின்.,,-"தவச்சேய்நாட்டா ராயினும்.,,-"நனிபேதையேநட லில்கூற்றம்.,,-"பொறைநில்லாநோய்கூரப் புல்லென்றிசினே.,,-"காமங்கழிகண்ணோட்டம்.,, என முறையேகாண்க. இவற்றுட் சாலவென்பதுசாலென் னுமுரிப்பெய டியாகப்பிறந்த வினையெச்சக் குறிப்பு. சாலப்பலவாமென ஆமென்னும் வினைப்பயனில தொக்குநின்றது. இப்பண்படிகளைநோக்கிப் பல்வகைப் பண்பும் பகர்பெயராகி யென்றார். சாலெனப் பண்படியாகச் சூத்திரஞ்செய்யர்துசாலவென வினையெச்சக்குறிப்பாகச்சூத்திரஞ்செய்தலவ்வுரிப்பெயடியாக வினைவிகற்பங்களெல்லாம்பிறக்குமென்பது,தோன்றவுடம்படுபுணர்த்தலாமென்க. அவையெல்லாம் வந்தவழிக்காண்க.

சாருஎ. கடியென் கிளவி காப்பே கூர்மை - விரையே விளக்கமச்சஞ் சிறப்பே - விரைவே மிகுதி புதுமை யார்த்தல் -வரைவே மன்றல் கரிப்பி னாகும். *

(எ-ன்.) பலகுணந்தழுவிய வுரிச்சொல்லுளொன்றுணர்-ற்று. (ப-ரை.) கடியென்கிளவி- கடியென்னுமுரிச்சொல், காப்பு-காவ

லும், கூர்மை-கூர்மையும், விரை-வாசனையும், விளக்கம்- விளக்கமும், அச்சம்-அச்சமும், சிறப்பு-சிறப்பும், விரைவு-விரைவும், மிகுதி-மிகுதியும், புதுமை-புதுமையும், ஆர்த்தல்-ஒலித்தலும், வரைவு-நீக்கலும், மன்றல்-மணமும், கரிப்பின்-கரிப்பும் ஆகியபதின்மூன்றுகுணங்களிலும், ஆகும்-வரும். எ-று. (பொ-ரை) கடியென்னுமுரிச்சொல் காப்புமுதலிய பதின்மூன்றுகுணத்தையுமுணர்த்தும். எ-று. ❁ [வ-று.] "ஒண்சுடர் நல்லிருங்கடி நீலி." என்பது காப்பு. "கடிநுனைப்பகழி."-எ-து-கூர்மை. "கடிமாலைசூடி."-எ-து-நாற்றம். "கண்ணாடியன்ன கடிமார்பன்." - எ-து-விளக்கம். "கடியரமகளிர்க்கே கைவிளக்காகி" - எ-து-அச்சம். "கடிமாமிசைப்பூத்துக் கம்புளோடன்னமார்க்கும்."-எ-து-சிறப்பு. "எம்மம்பு கடிவிடுது நும்மரண்சேர்மின்."-எ-து-விரைவு. "கடியுண்கடவுட் கிட்ட செழுங்குரல்."-எ-து-மிகுதி. இது புதிதுண்கடவுளென்றுமாம். "கடிமுரசு"-எ-து-ஆர்த்தல். "கடித்துக்கரும்பினைக்கண்டகர் நூறி."-எ-து-வரைவு. "கடிவினைமுடுகிணி"-எ-து-மன்றல். "கடிமிளகுதின்றகல்லாமந்தி"-எ-து-கரிப்பு.

௩௱௬௮. மாற்ற நுவற்சிசெப் புரைகரை நொடியிசை - கூற்றுப்புகறன்மொழி கிளவிவிளம்பறை - பாட்டுப் பகர்ச்சி யியம்பல்சொல்லே. ❋

(எ-ன்.) இதுவுமொருகுணந்தழுவியவுரிச்சொல்லுட் சிலவுணர்-ற்று. (ப-ரை.) மாற்ற-பல், மாற்றமுதலாகிய பதினாறும், சொல்-சொல்லென்னு மொருகுணத்தை யுணர்த்துகிற வுரிச்சொற்களாம். எ-று. [சாலவுறுதவ வென்பதனைச் சாரவையா நீண்டுக்கூறினர் இசைவயொலிப்பண்பை யுணர்த்தி யேனைப்பெயர்வினைகளை பொருவாதுநடத்தலினத்துணைச்சிறப்பினவன்றியொரோவழியொருவியுநடக்குமென்பது தோன்றற்கென்க.] (பொ-ரை.) மாற்றமுதலியம்பலீறாகக்கூறியபதினாறுஞ்சொல்லென்னுமோர்குணத்தையுணர்த்துமுரிச்சொற்களாம். எ-று. ❁ [வ-று] "கோவலர்வாய்மாற்றமுணர்ந்து."-"இருபிறப்பாளர் பொழுதறிந்து நுவல."-"தெருண்டாரவைசெப்பலுற்றேன்." - "உரைப்பாருரைப்பவையெல்லாம்."-"அறங்கரைநாவி னான்மறைமுற்றிய."-"அஞ்செற்பெரும்பணைத்தோளாயிழையாடா னொடியும்."-"நசையுநர்க்கடையாநன்பெருவாயி-லிசையெனப்புக்கு."-"உற்றது நாங்கள் கூறவுணர்ந்தனை."-"புகன்றவன்றியும் பூமிகவருமே" "காமஞ்செப்பாது கண்டது மொழிமோ."-"கிளக்கும்பாணகேளினி" "மெய்ம்மூவாறென விளம்பினர்புலவர்."-"அறிவனடிதொழுதறைகுவனெண்ணே"-"ஒருவன்செய்ந்நன்றிகொன்றோர்க்-குய்தியில்லெனவறம்பாடின்றே" - "வார்த்தை பகர்குற்றே

ன்,,-"இடிபோல வீயம்பினனே.,,எனமுறையேகாண்க. (௰௭)

௪௫௯. முழக்கிரட்டொலிகலி யிசைதுவைபிளிறிரை- யிரக்கழுங்கியம்ப லிமிழ்குளிறதிர்குரை-கனைசிலைசும்மை கவ்வைகம்பலை-யரவமார்ப்போ டின்னனவோசை. ❀

(எ-ன்.) இதுவுமது. (ப-ரை.) முழக்கு-போடு, முழக்குமுதலாகிய-இருபத்திரண்டும், இன்னன - இவைபோல்வனபிறவும், ஓசை-ஓசையென்னுமொருபொருளையுணர்த்து முரிச்சொற்களாம். எ-று. (பொ-ரை.) முழக்குமுதலிய விருபத்திரண்டுமிவைபோல்வன பிறவுமோசையென்னு மொருகுணத்தை யுணர்த்து முரிச்சொற்களாம். எ-று. ❀ [வ-று.] "முழங்கு முந்நீர் முழுவதும்வளைஇ,,- "குடிஞையிரட்டுங் கோடுயர்நெடுவரை.,, "ஒல்லென வொலிக்குமொலிபுனலூரற்கு.,,-"கலிகெழுமூதூர்,, "புறையிசையருவி.,,-"தோறுவைத்தல்.,,-"பிளிறுவார்முரசம்,, "இரைக்குமஞ்சிறைப் பறவைகள்,,-"இரங்குமுரசினம்,,-"இரும்பிழிமாரி யழுங்கினமூதூர்.,,-"காலைமுரசமதியம்ப.,,-"இமிழ்கடல்வளைஇய வீண்டகன்கிடக்கை.,,-"குளிறுமுரசங் குணில்பாய.,,-"களிறுகளித்ததிருங்கார்.,,-"குரைபுனற்கன்னி.,,-"கனைகடற்சேர்ப்ப.,,-"சிலைத்தார் முரசங்கறங்க.,,-"தள்ளாதசும்மைமிகுதக்கண நாடுநண்ணி.,,-"கவ்வைநீர்வேலி,,-"வினைகம்பலைமனைச்சிலம்பவும்.,,-"அறைகட லரவத்தானை.,,-"ஆர்த்தபல்லியக்குழாம்,,எனமுறையேகாண்க. (௰௮)

௪௬௰. இன்னதின் னுழி யின்னணமியலு - மென்றிசைநூலுட் குணகுணிப்பெயர்கள் - சொல்லாம்பரத்தலிற் பிங்கலமுதலா-நல்லோருரிச்சொலி னயந்தனர்கொளலே. ❀

(எ-ன்.) இவ்வியலுக்கோர்புறனடையுணர்-ற்று. (ப-ரை.)இன்னது - பெயர்வினையிடையுரிகளில் இன்னசொல், இன்னுழி - தன்மைமுன்னிலைபடர்க்கைகளிலும் வழக்குச்செய்யுள்களிலுமிவ்விடத்தே, இன்னணம் - இவ்விலக்கணமுள்ளதாய், இயலுமென்று-நடக்குமென்று, இசை-சொல்லக்கடவதாகிய, நூலுள் - இந்நூலுள், குணகுணிப்பெயர்கள் - குணப்பெயர்களையும் குணிப்பெயர்களையும், சொல்லாம்-வேண்டியமட்டுஞ்சொல்வதன்றி விரித்துச்சொல்லக்கடவமல்லம், பரத்தலின் - விரிக்கின்மற்றென்றுவிரித்தலென்னுங் குற்றம்வருமாதலின், நல்லோர்- அவற்றைக்கண்டறியவேண்டியநல்லோர், பிங்கலமுதலா-பிங்கலந்தை திவாகரமுதலிய நூல்களில், உரிச்சொலில்- உரிச்சொற்றொகுதியுள், நயந்தனர்கொளல்-விரும்பிக்கொள்க. எ-று. (பொ-ரை.) பெயர்வினை யிடையுரியென்னு நால்வகைச்சொல்லு ளின்னசொற்றன்மைமுன்னிலைபடர்க்கையென்னு மூன்றிடத்துள்ளும் வழக்குஞ்

செய்யுளென்று மிரண்டிடத்துள்ளு மிவ்விடத்திவ்விலக்கணத்த தாய் நடக்குமென்று சொல்லக்கடவதாகிய இந்நூலு ளவ்விலக்கணங்காட்டுதற்கு வேண்டியமாத்திரையே கூறுவதன்றி யுரிச்சொல்லாகிய குணப்பெயரையு மேனைக்குணிப்பெயரையு நிகண்டினுட் கூறினாற்போல விரித்துக்கூறக் கடவதன்று; விரிக்கின் மற்றொன்று விரித்தலென்னுங் குற்றம்வருமாதலின் அவற்றினைக்கண்டறியவேண்டினா ரிவ்விலக்கண மறிதற்கு முன்னமே யெனைப்புலவராற்கூறப்பட்ட பிங்கலந்தை திவாகரஞ் சூடாமணி முதலிய நூல்களுள் வருக்கு முரிச்சொற் றொகுதியுள் விரும்பிக்கொள்க. எ-று.— ※ இவ்விலக்கண மறிதற்கு முன்னமே நிகண்டறிகவென்றும் அறியுமுறையதுவாதலான். இவ்வியலுட் சாலவென்பது முதல் ஆர்ப்பென்பதீறாக நாற்பத்தைந் துரிச்சொல்லெடுத்துச், சுருங்கச் சொல்லுதல் சொல்லிய லுணர்த்து நூலுட்சொற்றொகுதிகளைவிரிக்கின் மற்றொன்று விரித்தலாமெனவுணரார் குன்றக்கூறலாமென்பராதலி னது பரிகரித்தற்கு இச்சூத்திரத்தாற் புறனடைகூறினார். இங்ஙனங்கூறவே பெயரியலுட் பெயர்த்தொகுதியினையும் வினையியலுள் வினைத்தொகுதியினையும் இடையியலுள் இடைத்தொகுதியினையும்விரியா தவ்விலக்கணங்காட்டுதற்கு வேண்டியமாத்திரையே கூறுதற்கு மிதுவேபுறனடையாமென்க. பெயரியலென்பது பெயரிலக்கணம். பெயர்த்தொகுதியென்பது பெயர்க்கூட்டம். ஏனையவுமன்ன. கூட்டமெனினு நிகண்டெனினுமொக்கும். இலக்கணங்கூறு நூலுள் நிகண்டினையுமுடன்கூறுதலினை வேறோர்நூலாகக் கூறுதல் தமிழுள்ளேயன்றி யாரியமுதலியவற்றுள்ளுங்காண்க. (௰௬)

௪௱௬௰௧. சொற்றொறு மிற்றிதன் பெற்றியென் றனைத்து-முற்ற
மொழிகுறின் முடிவிலவாதலிற் - சொற்றவற் றியலான் மற்றைய
பிறவுந்-தெற்றெனவுணர்க தெள்ளியோர்திறனே. *

(எ-ன்.) இவ்வதிகாரத்திற் கோர்புறனடையுணர்-ற்று.(ப-ரை.) சொற்றொறும் - சொற்றோறும், இற்று - இத்தன்மைத்து, இதன் பெற்றியென்று-இதனிலக்கணமென்று, அனைத்தும்- முழுதும், முற்ற-நிறைவுற, மொழிகுறின்-சொல்லப்புகுந்தால், முடிவில-முடிவிலவாம், ஆதலின்-ஆதலால், சொற்றவற்று - எடுத்துச்சொல்லப்பட்ட சொற்களுடைய, இயலான் - இலக்கணங்களைக்கொண்டு, மற்றையபிறவும்-சொல்லப்படாதவற்றி னிலக்கணங்களையும், தெற்றெனவுணர்தல், ஒப்புமைகருதி இதுவு மதுவெனஉணர்தல், தெள்ளியோர் - நூலோதித்தெளிதற்குரியமாணாக்கரது, திறன்-கடனாம். எ-று. (பொ-ரை.) சொற்றொறுமித்தன்மைத்தித விலக்கணமென் றமுற்றமொழியப்புகின்வரம்பிலவாமாதலின்

டுத்துக் கூறியசொற்களி னிலக்கணங்களைக்கொண்டு சொல்லாத னவற்றி னிலக்கணங்களையு மொப்புமைகருதி யிதுவுமதுவென முற்றவிளங்க வுணர்தனூலோதித் தெளிதற்குரிய மாணாக்கர்திற னும். எ-று. ❊ இவற்றிற்குதாரணமுன்னரோ வந்துழி வந்துழிக் காட்டினுமாங்காங்குணர்க. (௨௰)

௩௱௯௨. பழையனகழிதலும் புதியனபுகுதலும் வழுவலகா ல வகையினானே. *

(எ-ன்.) இந்நூலிற் கோர்புறனடையுணர்-ற்று. (ப-ரை.) பழையனகழிதலும்- முற்காலத்துள்ள விலக்கணங்களுட்சிலபிற்கா லத்திறத்தலும், புதியனபுகுதலும்- முற்காலத்தில்லனசில பிற்கா லத்திலக்கணமாதலும், வழுவல-குற்றமல்லவாம், காலவகையினா ன்-காலவேற்றுமையதுவாகலால். எ-று. (பொ-ரை.) முற்காலத் துள்ளவிலக்கணங்களுட்சில பிற்காலத்திறத்தலு முற்காலத்தில்ல னசிலபிற்காலத் திலக்கணமாய்வருதலுங் குற்றமல்லவாங் கால வேற்றுமையதுவாகலான். எ-று. ❊ இவற்றிற்கு முதாரண மு ன்னர்வந்துழிவந்துழிக் காட்டினுமாங்காங்குணர்க. (௨௧)

உரியியல் முற்றிற்று.

சொல்லதிகாரம் முற்றுப்பெற்றது.

இருதிணையைம்பால் மூவிட நான்மொழியைம்பா லறுதொகையே....*
ழுருவழுவெட்டுரு பொன்பான்றொகை நிலை யாய்ந்தவெச்ச ....*
மொருபதுகோளெட்டு முப்பொழுதீரிட மோரியல்பாய்....*
வருமொழிமூன்று முணர்ச்சொல்வண்மைவருந்திருவே .....*

நன்னூல்விருத்தியுரை

முற்றிற்று.